
# 1977 அவ்யக்த முரளி



**<u>பொருளடக்கம் - 47</u>**

**05.01.1977 தியாகி மற்றும் தபஸ்வி குழந்தைகள் எப்பொழுதும் தேர்ச்சி அடைகிறார்கள்!**

**07.01.1977 விஷ்வ கல்யாணகாரியாக (உலகிற்கு நன்மை செய்பவராக) எப்படி ஆவது?**

**10.01.1977 எப்படி இலட்சியமோ அப்படி இலட்சணம்!**

**11.01.1977 சுயத்தின் மாற்றம் தான் உலக மாற்றத்திற்கான ஆதாரம்!**

**12.01.1977 சங்கமயுகத்தில் குழந்தையிலிருந்து அதிபதி ஆகக்கூடியவர்களின் மூன்று காலங்களின் சாட்சாத்காரம்!**

**16.01.1977 திருப்தியான ஆத்மா தான் அனேக ஆத்மாக்களின் இஷ்ட (தேவதை) ஆக முடியும்!**

**18.01.1977 18 ஜனவரியின் விசேஷ மகத்துவம்!**

**23.01.1977 நுண்ணிய நிலை தான் மஹான் நிலை ஆகும்!**

**26.01.1977 உள்நோக்குப்பார்வை மூலமாக சூட்சும சக்திகளின் லீலைகளின் அனுபவம்!**

**28.01.1977 பிராமணர்களின் தர்மம் மற்றும் கர்மம்!**

**29.01.1977 மதுபனின் மகிமை -மதுபன் நிவாசிகளுடன்!**

**31.01.1977 பக்தர்களுக்கு அனைத்து பிராப்திகளை செய்விப்பதற்கான ஆதாரம் -ஆசை என்றால் என்னவென்று அறியாத நிலை!**

**02.02.1977 எப்பொழுதும் அலங்கார சொரூபத்தில் நிலைத்திருப்பவர் தான், தன் மூலமாக தந்தையின் சாட்சாத்காரம் செய்விக்க முடியும்!**

**05.02.1977 மகான் நிலையின் ஆதாரம்!**

**06.02.1977 ரியலைசேஷன் (உணருதல்) மூலமாக லிபரேஷன் (விடுதலை)!**

**14.04.1977 உயர்ந்த அதிர்ஷ்டத்தின் வரைபடம்!**

**16.04.1977 பிராமண ஜென்மத்தின் தெய்விகத் தன்மை மற்றும் ஆன்மீகத் தன்மை கேட்பது மற்றும் உள்ளடக்குவது!**

18.04.1977 டீச்சர்களுடன் பாப்தாதாவின் சந்திப்பு: தகுதியான ஆசிரியரின் ஒவ்வொரு காரியம் என்ற விதை பலன் அளிப்பதாக இருக்கும், பயனற்றதாக இருக்காது!

23.04.1977 தந்தை மூலமாக பிராப்தியாகியிருக்கும் பொக்கிஷங்களை அதிகரிப்பதற்கான ஆதாரம் -பெரும் வள்ளல் மகாதானி ஆவது!

26.04.1977 சுதந்திரம் பிராமணர்களின் பிறப்புரிமை ஆகும்!

28.04.1977 நிரந்தர சுமங்கலியின் அடையாளங்கள்!
30.04.1977 உயர்ந்த அதிகார நிலையின் ஆதாரம் -இணைந்த ரூபத்தின் நினைவு!

03.05.1977 கர்மங்களின் மிக ஆழமான விளைவுகள்!

05.05.1977 வரதானி, மகாதானி மற்றும் தானி ஆத்மாக்களின் லட்சணம்! (வரமளிக்கும் வள்ளல், பெரும் வள்ளல் மற்றும் வள்ளல் ஆத்மாக்களின் லட்சணம்)

09.05.1977 சம்பூர்ண தூய்மை தான் விசேஷ வாழ்க்கைப் பங்கை செய்பவர்களின் அலங்காரம் ஆகும்!

**11.05.1977 சம்பன்ன சொரூபத்தின் அடையாளம் நற்சிந்தனை மற்றும் நற்சிந்தனையாளர்!**

**14.05.1977 சுவமானம் (சுயமரியாதை) மற்றும் ஃபர்மான் (கட்டளை)!**

**16.05.1977 மாயாவின் தாக்குதலை எதிர்கொள்வதற்காக இரண்டு சக்திகள் அவசியம் தேவை!**

**19.05.1977 ஆத்ம ஞானம் மற்றும் பரமாத்ம ஞானத்தில் உள்ள வேற்றுமை!**

**21.05.1977 சங்கமயுக பிராமண வாழ்க்கையின் முக்கியமான குணம் மற்றும் காரியம்!**

**24.05.1977 தந்தையின் நேரடிக் குழந்தைகள் தான் இரட்டை பூஜைக்கு உரியவர்களாக ஆகிறார்கள்!**

**27.05.1977 அமிர்தவேளையில் உடலால் செய்யும் காரியங்களையும் மற்றும் மனதின் சக்திசாலி நிலையையும் செட்டிங் செய்யுங்கள் (முன்பாக தயார் செய்யுங்கள்)!**

**28.05.1977 பாப்தாதாவின் நிரந்தர இதய சிம்மாசனதாரி, சமமான குழந்தைகளின் லட்சணம்!**

**29.05.1977 முயற்சி (புருஷார்த்தம்) செய்யும் வேகத்தில் தடை ஏற்படுவதற்கான காரணம் மற்றும் அதற்கான நிவாரணம்!**

**31.05.1977 உலக நன்மை செய்வதற்கான சுலபமான வழி -உயர்ந்த எண்ணங்களின் ஒருமுகப்பட்ட நிலை!**

**02.06.1977 அனைத்து ஆத்மாக்களின் ஆதாரமானவர், நன்மை செய்பவர் மற்றும் மூதாதையர் -பிராமணரிலிருந்து தேவதைகளே!**

**05.06.1977 ஆன்மீக வாழ்க்கையின் கடமையே விகாரியை நிர்விகாரி ஆக்குவது ஆகும்!**

**07.06.1977 சங்கமயுகத்திற்கு (உயர்ந்த யுகத்திற்கு) விஷேச வரதானம் -முன்னேறும் கலை அனைவருக்கும் நன்மை பயப்பது!**

**10.06.1977 மந்திரம் மற்றும் இயந்திரத்தை நிரந்தரமாக உபயோகிப்பதினால் வேற்றுமை நீங்கி விடும்!**

**12.06.1977 தாமரை மலருக்குச் சமமான நிலை தான் பிராமண வாழ்க்கையின் உயர்ந்த ஆசனம் ஆகும்!**

**14.06.1977 பாரதம் மற்றும் வெளிநாட்டைச் சுற்றி வலம் வந்த செய்தி!**

**16.06.1977 ஒரே படிப்பின் மூலம் வரிசைக்கிரமமான பூஜைக்குரிய பதவி அடைவதற்கான ஆழமான இரகசியம்!**

**18.06.1977 யோகாவின் சக்திசாலியான நிலை எப்படி உருவாகும்?**

**20.06.1977 நிரந்தர சகஜயோகி ஆவதற்கான சாதனம் மகாதானி ஆவதாகும்!**

**22.06.1977 நட்சத்திரங்களின் உலகத்தின் இரகசியம்!**

**25.06.1977 தூய்மையின் சம்பூர்ண நிலை!**

**28.06.1977 வேஸ்ட் (விணானவை) செய்யாதீர்கள் மற்றும் வெயிட் (எடையை) குறையுங்கள்!.**

**30.06.1977 ஒவ்வொரு பிராமண ஆத்மாவிற்காகவும் பாப்தாதாவின் உயர்ந்த விருப்பங்கள்!**

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!**

# 05.01.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தியாகி மற்றும் தபஸ்வி குழந்தைகள் எப்பொழுதும் தேர்ச்சி அடைகிறார்கள்!

இன்று கண்களில் நிரம்பியிருக்கும் குழந்தைகளை கண்களால் சந்தித்துக் கொண்டிருக்கிறோம், அந்த மாதிரி குழந்தைகளின் பார்வையில் பாப்தாதா மற்றும் பிராமணர்கள் தான் இருக்கிறார்கள், மேலும் இது தான் அவர்களுடைய படைப்பாகும். அவர்கள் வேறு எதையும் பார்த்தும் பார்க்க மாட்டார்கள். ஏனென்றால், தந்தையின் அன்பில் எப்பொழுதும் ஐக்கியமாகி இருக்கிறார்கள். எப்பொழுதும் தந்தையின் குணங்கள் அதாவது ஞானம், சுகம், ஆனந்தத்தின் கடலில் மூழ்கியிருக்கிறார்கள். அந்த மாதிரி குழந்தைகளைப் பார்த்துப் பார்த்து பாப்தாதாவும் மகிழ்ச்சியடைகிறார். உடலால் எவ்வளவு தான் தூரமாக இருந்தாலும், ஆனால் அந்த மாதிரி குழந்தைகளுக்கு தந்தையிடம் நெருக்கத்திலும் நெருக்கமான ஸ்தானம் நிரந்தரமாக நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. அது எந்த ஸ்தானம் என்று தெரிந்திருக்கிறீர்களா?

எது மிகப் பிரியமான பொருளாக இருக்குமோ அது மிக அருகாமையின் ஸ்தானத்தில் இருக்கும். அந்த ஸ்தானமானது ஒன்று கண் மற்றும் இன்னொன்று இதயம் ஆகும். அப்படியானால் இதயத்தில் நிரம்பியிருப்பவர்கள் உயர்ந்தவர்களா அல்லது கண்களில் நிரம்பியிருப்பவர்கள் உயர்ந்தவர்களா? இருவரிலும் நம்பர் ஒன் யார்? இருவர்களின் மகத்துவமும் ஒன்றா அல்லது வேறு வேறா? இருவர்களின் மகத்துவம் ஒன்று, தான் மேலும் யார் இதயத்தில் இருப்பாரோ அவர் கண்களிலும் இருப்பார் என்று உங்களில் யார் நினைக்கிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். இருவரின் மகத்துவம் வேறு வேறு, கண்களில் நிரம்புபவர்கள் வேறு, இதயத்தில் நிரம்புபவர்கள் வேறு என்று உங்களில் யார் நினைக்கிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். ஒன்றாக இருந்த போதிலும் தனித்தனியான மகத்துவம் இருக்கிறது.

எனவே இரண்டுமே சரி தான்! எப்பொழுது இத்தனை தியாகி மற்றும் தபஸ்வி குழந்தைகள் தன்னுடைய அனேக தர்மங்கள் மற்றும் தன்னுடைய தேகத்தின் தர்மத்தின் காரியத்தின் ஒவ்வொரு பழக்கத்தையும் தியாகம் செய்து பாப்தாதாவின் நினைவின் தபஸ்யாவிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள், அந்த மாதிரி தியாகி மற்றும் தபஸ்வி குழந்தைகளை எப்படி ஃபெயில் ஆக்க முடியும், எனவே எப்பொழுதுமே பாஸ் ஆனவர்கள் தான். வெளிநாட்டினர் அனைவரும் சுருக்கமாகப் படிக்கிறார்கள், ஏனென்றால் பிஸியாக இருக்கிறார்கள். பாப்தாதா ஒரே ஒரு வார்த்தையை நினைவூட்டினார், அது எந்த வார்த்தை? அந்த ஒரே ஒரு வார்த்தை தான் பாஸ் ஆக வேண்டும், பாஸ் (உடன்) இருக்க வேண்டும். மேலும் என்னென்ன நடந்து விட்டதோ அது பாஸ் (கடந்த காலமாக) ஆகிவிட்டது - அப்படி ஒரு வார்த்தைக்கு மூன்று அர்த்தங்கள் இருக்கிறது. இது தான் குறுக்கு வழி ஆகிவிடும், மேலும் பாஸ் வித் ஆனர் (கௌரவமாக தேர்ச்சி பெறுபவர்) ஆகிவிடுவீர்கள் ஆனால் இந்த அர்த்தத்தில் நிலைத்திருப்பதற்காக எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக உள்ளடக்கும் சக்தி மற்றும் தந்தைக்குச் சமமாக ஆக்கும் சக்தி இரண்டையும் நிரப்புவதற்கான அவசியம் இருக்கிறது. ஏனென்றால் தந்தைக்குச் சமமாக ஆக்குவதற்காக எப்பொழுது சேவையின் மேடையில் வருகிறீர்களோ அப்பொழுது அனேக விதமான விஷயங்களை உள்ளடக்க வேண்டியதாக இருக்கிறது. அந்த விஷயங்களை உள்ளடக்கும் சக்தியின் ஆதாரத்தினால் மாஸ்டர் கடல் ஆகிவிடுகிறீர்கள். மேலும் மற்றவர்களையும் தந்தைக்குச் சமமாக ஆக்க முடியும். உள்ளடக்குவது என்றால் எண்ண ரூபத்தில் கூட எந்தவொரு ஸ்தூலமான விஷயங்கள் மற்றும் உணர்வின் அம்ச ரூபம் கூட இருக்கக்கூடாது. தீமை பயக்கும் வார்த்தைகளை நன்மை பயக்கும் பாவனையில், தீமை பயக்கும் வார்த்தையாக இல்லவே இல்லை என்பது போல் மாறிவிட வேண்டும். அந்த மாதிரியான நிலையைத் தான் உலகிற்கு நன்மை செய்யும் நிலை என்று கூறுவது. யாருடைய ஏதாவது அவகுணத்தைப் பார்த்தும் அந்த அவகுணத்தை ஒரு நொடியில் குணத்தில் மாற்றி விட வேண்டும். நஷ்டத்தை லாபத்தில் மாற்றி விட வேண்டும். நிந்தனையை புகழ்ச்சியில் மாற்றி விட வேண்டும். அந்த மாதிரி பார்வை மற்றும் நினைவில் இருப்பவர் தான் உலகிற்கு நன்மை செய்பவர் என்று கூறப்படுவது. உலகிற்கு நன்மை செய்பவராக மட்டுமின்றி தனக்கு நன்மை செய்பவராகவும் ஆகிவிட வேண்டும். அந்த

மாதிரியான நிலையை தந்தைக்குச் சமமான நிலை என்று கூறப்படுகிறது.

நல்லது. விதேஷியா. (வெளி தேசத்தினராக) இருந்தவர்களிலிருந்து சுவதேஷியாக (சுயதேசத்தினராக ஆனவர்கள் : பாப்தாதாவோ வெளி தேசத்தினராக பார்க்காமல் சுயதேசத்தினராகத் தான் பார்க்கிறார். சுவதேஷி குழந்தைகளின் அன்பின் நினைவுச் சின்னத்தின் உடனடி பலன் விசேஷமாக பாப்தாதாவை சந்திக்க வேண்டும். விதேஷியாக இருந்து சுவதேஷியான குழந்தைகளின் அமிர்தவேளையின் ஆன்மீக உரையாடல் மிகவும் ரமணீகரமானதாக இருக்கும். அந்த நேரம் விசேஷமாக இரண்டு ரூபங்கள் இருக்கின்றன - ஒன்று அதிகார ரூபத்தில் சந்திக்கிறார்கள் மற்றும் பேசுகிறார்கள், மற்றும் இன்னொன்று முறையீடுகளின் மற்றும் துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்களின் ரூபத்தில் பேசுகிறார்கள். பாப்தாதாவிற்கு இதைக் கேட்டு மகிழ்ச்சி வருகிறது ஆனால் விதேஷியிலிருந்து சுவதேஷியான ஆத்மாக்களில் பெரும்பான்மையான ஆத்மாக்கள் கொஞ்சத்தில் திருப்தி அடைபவர்கள் அல்ல. பெரும்பான்மையோர் விசேஷமாக பணயம் வைக்கிறார்கள். இராம், சீதையுமாக ஆகுபவர்களும் இல்லை, லட்சுமி, நாராயணன் ஆக விரும்புகிறார்கள். எனவே உயர்ந்த லட்சியம் வைக்கும் காரணத்தினால் குழந்தைகளுக்கு பாப்தாதாவும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். நீங்கள் எப்பொழுதும் இதே உயர்ந்த லட்சியம் மற்றும் லட்சணத்தில் இருக்க வேண்டும். பாப்தாதாவின் எதிரில் இருக்கிறீர்கள், தூரத்தில் இருக்கவில்லை. யார் இதய சிம்மாசனதாரியோ அவர் எப்பொழுதுமே அருகில் இருக்கிறார். இன்று அனைத்து சிந்தனை நிறைந்த குழந்தைகளையும் சந்திப்பதற்கான ஒரே எண்ணம் தான் இருந்தது. அந்த மாதிரி தூங்கிக் கொண்டிருக்கும் போதும் நினைவில் இருக்க வேண்டும். பாப்தாதாவோ நாலாபுறங்களின் விதேஷி குழந்தைகளை நேரெதில் பார்த்து நினைவைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். நல்லது.

உயர்ந்த லட்சியம் வைக்கக்கூடிய, மிகவும் குஷியோடு தந்தையுடன் ஒப்பந்தம் செய்யக்கூடிய, தந்தை மற்றும் சேவையில் எப்பொழுதும் மூழ்கியிருக்கக்கூடிய, கடைசியில் வந்தும் வேகமாகச் செல்லும் அன்பான, சகயோகி ஆத்மாக்களுக்கு, தந்தையையும் தனக்குச் சமமாக வியக்த ரூபம் ஆக்கக்கூடிய, சென்ற கல்பத்திலும் சந்தித்தவர்களுக்கு,

பிரகாசமாக இருக்கும் நட்சத்திரங்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 07.01.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# விஷ்வ கல்யாணகாரியாக (உலகிற்கு நன்மை செய்பவராக) எப்படி ஆவது?

அனைவரும் சப்தத்திலிருந்து விலகி தன்னுடைய அமைதி சொரூப நிலையில் நிலைத்திருக்கும் அனுபவத்தை வெகுநேரம் செய்ய முடியுமா? சப்தத்தில் வருவதற்கான அனுபவத்தை அதிகம் செய்ய முடியுமா அல்லது சப்தத்திலிருந்து விலகியிருப்பதற்கான அனுபவத்தை அதிக நேரம் செய்ய முடியுமா? எந்தளவு கடைசி நிலை மற்றும் கர்மாதீத் நிலை அருகில் வந்து கொண்டே இருக்குமோ அந்த அளவு சப்தத்திலிருந்து விலகி, அமைதி சொரூபத்தின் நிலை மிக பிரியமானதாக அனுபவம் ஆகும். இந்த நிலையில் எப்பொழுதும் அதீந்திரிய சுகத்தின் அனுபவம் ஏற்படும். இதே அதீந்திரிய சுகம் நிறைந்த நிலை மூலமாக அனேக ஆத்மாக்களை சுலபமாகவே ஆவாஹனம் (அழைத்தல்) செய்ய முடியும். இந்த சக்திசாலியான நிலையை விஷ்வ கல்யாணகாரி (உலகிற்கு நன்மை செய்யும்) நிலை என்று கூறுவது. எப்படி இன்றைய அறிவியல் சாதனங்கள் மூலமாக அனைத்து பொருட்களும் அருகாமையில் அனுபவம் ஆகிறது, தூர இடங்களில் எழும் ஓசையை தொலைபேசியின் சாதனம் மூலமாக அருகில் கேட்க முடிகிறது, தொலைக்காட்சி மூலமாக தூரத்து நிகழ்ச்சிகள் அருகில் தென்படுகிறது, அதே போலவே அமைதியின் நிலை மூலமாக எவ்வளவு தூரத்தில் இருக்கும் ஆத்மாவிற்கும் செய்தியை சென்றடையச் செய்ய முடியுமா? அவர்கள் நேரெதிரில் யாரோ செய்தி கொடுத்தார் என்று அந்த மாதிரி அனுபவம் செய்வார்கள். தூரத்தில் அமர்ந்திருந்த போதிலும் உயர்ந்த ஆத்மாக்கள் உங்களுடைய தரிசனம் மற்றும் பிரபுவின் சரித்திரங்களின் காட்சி நேரெதிரில் பார்ப்பது போல் அனுபவம் செய்வார்கள். எண்ணத்தின் மூலமாகத் தென்படும், அதாவது சப்தத்திலிருந்து விலகி எண்ணத்தின் சித்தியின் பங்கைச் செய்வார்கள் ஆனால் இந்த சித்தி அடைவதற்கான விதி, அதிகத்திலும் அதிகம் தன்னுடைய அமைதி சொரூபத்தில் நிலைத்திருக்க வேண்டும். எனவே அமைதி தான் தங்கம் என்று

கூறப்படுகிறது. இதைத் தான் பொற்கால நிலை அதாவது சத்யுக நிலை என்று கூறுவது. இந்த நிலையில் நிலைத்திருப்பதினால் "குறைந்த செலவு, அதிக பலன்" அடைபவராக ஆவார்கள். நேரம் என்ற பொக்கிஷம், சக்தி என்ற பொக்கிஷம் மற்றும் ஸ்தூல பொக்கிஷங்களில் குறைந்த செலவில், அதிக பலன் அடைபவராக ஆகிவிடுவார். இதற்காக ஒரு வார்த்தையை நினைவில் வையுங்கள். அது எந்த வார்த்தை? சமநிலை. ஒவ்வொரு காரியத்தில், ஒவ்வொரு எண்ணத்தில் மற்றும் வார்த்தையில், உறவு மற்றும் தொடர்பில் சமநிலை இருக்கட்டும். அப்பொழுது சொல், செயல், எண்ணம், உறவு மற்றும் தொடர்பு சாதாரணத்திற்குப் பதிலாக ஆன்மீகமாகத் தென்படும் அதாவது அதிசயம் நிறைந்ததாகத் தென்படும். ஒவ்வொருவரின் வாயிலிருந்து மனதிலிருந்து இதுவோ அதிசயம் என்ற வார்த்தை தான் வெளியாகும். நேரத்திற்குத் தகுந்தாற்போல் தன்னுடைய முயற்சியின் வேகம் மற்றும் உலக சேவையின் வேகம் அதிகமாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் உலகிற்கு நன்மை செய்பவராக ஆக முடியும்.

உலகத்திலுள்ள ஆத்மாக்கள் அதிகமாக தந்தையின் மற்றும் இஷ்ட தேவதைகள் உங்களுடைய பிரத்யக்ஷதாவின் ஆவாஹனத்தை அதிகமாக செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் இஷ்ட தேவதைகள் அவர்களை குறைவாக ஆவாஹனம் செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்கான காரணம் என்ன? தன்னுடைய எல்லைக்குட்பட்ட சுபாவம், சம்ஸ்காரத்தின் நினைவில் அதிக நேரத்தை ஈடுபடுத்தி விடுகிறார்கள். எப்படி அஞ்ஞான ஆத்மாக்களுக்கு ஞானம் கேட்பதற்கான நேரம் இல்லை. அதே போல் அதிகமான பிராமணர்களுக்கும் இந்த சக்திசாலியான நிலையில் நிலைத்திருப்பதற்கான நேரம் இல்லை. எனவே ஜுவாலா சொரூபம் ஆவதற்கான அவசியம் இருக்கிறது.

பாப்தாதா ஒவ்வொருவரின் குடும்பத்தைப் பார்த்து எவ்வளவு மிக அதிகமாக பிஸியாகி விட்டார்கள் என்று பார்த்து புன்முறுவலிட்டுக் கொண்டே இருக்கிறார். மிக அதிகமாக பிஸியாக இருக்கிறீர்கள் தான் இல்லையா? உண்மையான நிலையில் எப்பொழுதுமே ஒரு வேலையும் இன்றி ஃப்ரீயாக இருப்பீர்கள். வெற்றியும் இருக்கும், மேலும் ஃப்ரீயாகவும் இருப்பீர்கள்.

# 1977 அவ்யக்த முரளி

எப்படி அறிவியலின் சாதனம் பூமியில் அமர்ந்து கொண்டு ஆகாயத்தில் சென்றிருக்கும் இயந்திரங்களை கட்டுப்படுத்த முடிகிறது, எப்படி விரும்புகிறார்களோ, எங்கு விரும்புகிறார்களோ அங்கே திருப்ப முடியும். அதே போல் அமைதியின் சக்தி சொரூபம் இந்த சாகார உலகத்தில் உயர்ந்த எண்ணத்தின் ஆதாரத்தினால் என்ன சேவை விரும்புகிறார்களோ, எந்த ஆத்மாவின் சேவை செய்ய விரும்புகிறார்களோ அதை செய்ய முடியாதா? ஆனால் அவரவர்களின் குடும்பத்திலிருந்து விலகி அதாவது விலகியவராக இருங்கள்.

அனைத்து கஜானாக்கள், என்னென்ன கூறினோமோ அவற்றை தனக்காக இன்றி உலக நன்மை காரியத்திற்காக உபயோகப்படுத்துங்கள். இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா? சப்தம் மூலம் சேவை, ஸ்தூல சாதனங்கள் மூலமான சேவை மற்றும் சப்தத்திலிருந்து விலகிய சூட்சும சாதனம் எண்ணத்தின் உயர்ந்த நிலை மற்றும் எண்ணத்தின் சக்தி மூலமாக சேவையின் சமநிலையை பிரத்யக்ஷ ரூபத்தில் காண்பியுங்கள். அப்பொழுது தான் வினாச முரசு ஒலிக்கும். புரிந்ததா? திட்டங்களை அதிகமாக உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள், பாப்தாதாவும் திட்டத்தைக் கூறுகிறார். சமநிலை சரியாக இல்லாத காரணத்தினால் அதிகமாக உழைக்க வேண்டியதாக இருக்கிறது. முக்கியமான காரியத்திற்குப் பிறகு ஓய்வும் எடுக்கிறீர்கள் தான் இல்லையா? கடைசி திட்டத்தில் களைப்பற்ற நிலையின் அனுபவம் செய்வீர்கள். நல்லது.

அந்த மாதிரி அனைத்து சக்திகளையும் உலக நன்மைக்காரியத்திற்காக ஈடுபடுத்தக்கூடிய, எண்ணத்தின் சித்தி சொரூபமானவர்களுக்கு, தன்னுடைய குடும்பத்திலிருந்து சுதந்திரமானவர்களுக்கு, எப்பொழுதும் அமைதி மற்றும் சக்தி சொரூபத்தில் நிலைத்திருக்கக்கூடிய, அனைத்து உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**டீச்சர்களுடன் தனிப்பட்ட சந்திப்பு:** டீச்சர்கள் என்றால் சேவாதாரி. சேவையில் வெற்றிக்கான முக்கிய சாதனம் தியாகம் மற்றும் தபஸ்யா. இரண்டிலிருந்து ஏதாவது ஒன்றின் குறை இருந்தால் கூட சேவையின் வெற்றியிலும் இந்தளவு சதவிகிதம் குறைவடைந்து விடும். தியாகம்

என்றால் மனதில் எழும் எண்ணத்திலிருந்தும் தியாகம், சூழ்நிலை காரணமாக அல்லது மரியாதையின் காரணமாக நிர்பந்தத்தில் வெளிப்படையாக தியாகமும் செய்து விடுவார்கள் என்றாலும் எண்ணத்தினால் தியாகம் செய்யவில்லை. தியாகம் என்றால் நிர்பந்தமின்றி ஞான சொரூபத்தினால் எண்ணத்திலிருந்தும் தியாகம். அந்த மாதிரி தியாகி மற்றும் தபஸ்வி என்றால் எப்பொழுதும் தந்தையின் அன்பில் ஐக்கியமாகி அன்புக்கடலில் மூழ்கியிருக்கக்கூடிய ஞானம், ஆனந்தம், சுகம், அமைதியின் கடலில் மூழ்கியிருப்பவரைத் தான் தபஸ்வி என்று கூறுவோம். அந்த மாதிரி தியாகம், தபஸ்யா உள்ளவர் தான் சேவாதாரி என்று கூறப்படுகிறார். அந்த மாதிரி சேவாதாரி தான் நீங்கள் இல்லையா? தியாகம் தான் பாக்கியம் ஆகும். தியாகம் இன்றி பாக்கியம் உருவாக முடியாது. இதைத் தான் டீச்சர் என்று கூறுவது. அப்படி பெயர் மற்றும் காரியம் இரண்டும் டீச்சரினுடையதாக இருக்கிறதா? வெறும் பெயர் மட்டும் டீச்சரினுடையது அல்ல. டீச்சர் என்றால் பதவியில்லை, ஆனால் சேவாதாரி. டீச்சர்கள் என்றால் அனைவர்களுக்கும் பதவியை கொடுப்பவரேயன்றி பதவி வகிப்பவர் என்று புரிந்து அதில் தன்னை பெயருக்கு ஆசிரியர் என்று புரிந்து கொள்பவர் அல்ல. எப்படி கொடுப்பது என்றால் கொடுப்பதல்ல, ஆனால் பெறுவது என்று கூறப்படுகிறது. அதே போலவே டீச்சர் தன்னுடைய பதவியை தியாகம் செய்கிறார் என்றால் இதுவே பாக்கியத்தை பெறுவதாகும். நல்லது.

**வரதானம்: சாரதி (ஓட்டுநர்) ஆகி விலகிய மற்றும் அன்பான நிலையின் அனுபவம் செய்விக்கக்கூடிய நம்பர் ஒன் சித்தி சொரூபமானவர் ஆகுக!**

சாரதி என்றால் ஆத்ம அபிமானி. இந்த விதி மூலம் பிரம்மாபாபா நம்பர் ஒன்னின் சித்தியை அடைந்தார். எப்படி தந்தை உடலை அடிமைப்படுத்தி பிரவேசம் செய்கிறார், சாரதி ஆகிறார், உடலின் அடிமையாக ஆவதில்லை. எனவே விலகிய மற்றும் அன்பானவராக இருக்கிறார். அதே போலவே பிராமண ஆத்மாக்கள் நீங்களும் தந்தைக்குச் சமமான சாரதியின் நிலையில் இருங்கள். எனவே போகும்போதும் வரும்போதும் நான் சாரதி அதாவது உடலை இயக்குபவன் விலகிய மற்றும் அன்பான நிலையில் நிலைத்திருக்கிறேனா என்ற இதை சோதனை செய்யுங்கள். இதன் மூலமாகத் தான் நம்பர் ஒன் சித்தி சொரூபம் ஆகிவிடுவீர்கள்.

**சுலோகன்: தந்தையின் கட்டளைப்படி நடப்பவராக இருந்தீர்கள் என்றால் குப்தமான (மறைவாக) ஆசீர்வாதங்கள் தேவையான நேரத்தில் உதவி செய்து கொண்டே இருக்கும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 10.01.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எப்படி இலட்சியமோ அப்படி இலட்சணம்!

இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் நெற்றி மற்றும் கண்கள் மூலமாக ஒரு விசேஷ விஷயத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இதுவரை இலட்சியம் மற்றும் இலட்சணத்தில் எவ்வளவு அருகாமை இருக்கிறது? இலட்சியத்திற்கு ஏற்றபடி நடைமுறை ரூபத்தில் இலட்சணம் எவ்வளவு தென் படுகிறது? அனைவரின் இலட்சியமோ மிக உயர்ந்ததாக இருக்கிறது ஆனால் இலட்சணத்தை தாரணை செய்வதில் மூன்று விதமான முயற்சியாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் யாவர்? ஒருவகையினர் கேட்பதற்கு மிகவும் பிடிக்கும், நன்றாக இருக்கிறது. செய்ய வேண்டும் ஆனால் கேட்கத் தெரியும், செய்யத் தெரியாது.

இரண்டாமவர்கள் -நினைக்கிறார்கள், புரிந்தும் கொள்கிறார்கள், செய்யவும் செய்கிறார்கள் ஆனால் சக்தி ரூபம் இல்லாத காரணத்தினால் இரண்டு விதமாக செய்கிறார்கள். இந்த நேரம் பிராமணன் மிக வேகமாக முயற்சி செய்பவர் மற்றும் அடுத்த நேரம் தைரியமில்லாதவர். இதற்கான காரணம் என்ன? ஐந்து விகாரங்கள் மற்றும் இயற்கையின் தத்துவம், இரண்டிலிருந்து ஏதாவது ஒன்றின் வசமாகிவிடுகிறார்கள் எனவே இலட்சியம் மற்றும் இலட்சணத்தில் இடைவெளி ஏற்பட்டு விடுகிறது. இச்சை இருக்கிறது ஆனால் இச்சை என்றால் என்னவென்று தெரியாத நிலை அடைவதற்கான சக்தி இல்லை. இந்தக் காரணத்தினால் தன்னுடைய இலட்சியத்தின் இச்சை வரை சென்றடைய முடிவதில்லை.

மூன்றாமவர்கள் -கேட்பது, நினைப்பது மற்றும் செய்வது மூன்றையும் சமமாக்கி நடந்து கொள்பவர்கள். அந்த மாதிரி ஆத்மாக்களின் இலட்சியம் மற்றும் இலட்சணம் 99-சதவிகிதம் சமமாகத் தென்படுகிறது. அந்த மாதிரி மூன்று விதமான முயற்சியாளர்களைப் பார்த்துக் கொண்டிருந்தோம்.

## 1977 அவ்யக்த முரளி

தற்சமயம் ஒவ்வொரு பிராமண ஆத்மாவில் எண்ணம் மற்றும் சொல்லின் இலட்சியத்தின் உரைகல்லில் இலட்சியத்திற்கு ஏற்றபடி எண்ணம் மற்றும் சொல் இருக்கிறதா என்று சோதனை செய்ய வேண்டும். இலட்சியம் ஃபரிஷ்தாவிலிருந்து தேவதை ஆவதாகும். எப்படி லௌகீக குடும்பம், தொழிலுக்கு ஏற்றபடி தன்னுடைய எண்ணம், சொல் மற்றும் செயலை சோதிக்கிறார்கள், அதே போல் பிராமண ஆத்மாக்கள் தன்னுடைய உயர்ந்ததிலும் உயர்ந்த பரிவாரம் மற்றும் தொழிலை எதிரில் வைத்து நடந்து கொள்கிறார்களா? தற்சமயத்து மர்ஜீவா (உடலில் இருந்து கொண்டே இறந்து மறுபிறவி எடுத்த) பிராமண ஜென்மம் இயல்பாகவே நினைவில் இருக்கிறதா? அல்லது கடந்த காலத்து சூத்திரதன்மையின் இலட்சணம் இயற்கையான ரூபத்தில் தன்னுடைய நடவடிக்கையில் வந்து விடுகிறதா? எப்படி ஜென்மம் இருக்கிறதோ அப்படி செய்யும் காரியமும் இருக்கும். உயர்ந்த ஜென்மத்தின் காரியமும் இயல்பாகவே உயர்ந்ததாக இருக்க வேண்டும். ஒருவேளை கடுமையாக முயற்சி செய்ய வேண்டியதாக இருக்கிறது என்றால் பிராமண ஜென்மத்தின் நினைவு குறைவாக இருக்கிறது. உண்மையில் உயர்ந்த காரியம், உயர்ந்த இலட்சியம், உயர்ந்த ஜென்மத்தின் பிறப்புரிமை ஆகும். எப்படி லௌகீக ஜென்மத்தில் ஸ்தூல செல்வம் பிறப்புரிமையாக இருக்கிறது. அதே போல் பிராமண ஜென்மத்தில் தெய்வீக குணம் என்ற செல்வம், ஈஸ்வரிய சுகம், சக்தி பிறப்புரிமையாக இருக்கிறது. பிறப்புரிமையின் போதை இயல்பான ரூபத்தில் இருக்கவே இருக்கும். கடுமையாக முயற்சி செய்வதற்கான அவசியமே இல்லை. ஒருவேளை கடுமையாக உழைக்க வேண்டியது இருக்கிறது என்றால் கண்டிப்பாக சம்மந்தம் மற்றும் தொடர்பில் ஏதோ ஒரு குறை இருக்கிறது. பிறப்புரிமையின் போதை இருக்கிறதா? என்று தன்னைத் தானே கேளுங்கள். இந்த போதையில் இருப்பதினாலேயே இலட்சியம் மற்றும் இலட்சணம் சமமாகிவிடும். இதற்கான கடின உழைப்பிலிருந்து விடுபடுவதற்கான சகஜ யுக்தி எது? தன்னை என்னவாக இருக்கிறேன். எப்படி இருக்கிறேன், எந்த உயர்ந்த தந்தை மற்றும் எந்த பரிவாரத்தினுடையவன் அந்த மாதிரி தெரிந்திருக்கிறீர்கள் ஆனால் அனைத்து நேரமும் ஏற்றுக் கொள்வதில்லை. தன்னுடைய அதிர்ஷ்டத்தின் ஓவியத்தைப் பார்ப்பதில்லை. ஒருவேளை எப்பொழுதும் தன்னுடைய அதிர்ஷ்டத்தின் ஓவியத்தைப் பார்த்துக் கொண்டே இருக்கிறீர்கள் என்றால் எப்படி சாகார உடலைப் பார்த்துக் கொண்டே இயற்கையாக உடலின் நினைவு சொரூபத்தில் இருக்கிறீர்கள், அதே

போல் இயற்கையாகவே அதிர்ஷ்டத்தின் ஓவியத்தின் நினைவில் இருப்பீர்கள். போகும் பொழுதும், வரும்பொழுதும் ஆஹ! பாபா | மற்றும் ஆஹா! என்னுடைய அதிர்ஷ்டத்தின் ஓவியம். இந்த இடைவிடாது ஜபிப்பது அதாவது மனதிலிருந்து இந்த ஓசை எழுந்து கொண்டே இருக்கட்டும். பக்தர்கள் முடிவற்ற ஓசையைக் கேட்பதற்கான முயற்சி செய்கிறார்கள். இது உங்களுடைய நிலையின் மகிமையாகத் தான் பக்தியில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. நீங்கள் குஷியில் எப்பொழுதும் நடனமாடும் ஓவியம், அதைத்தான் இராஜ் லீலாவின் ஓவியம் என்று கூறுகிறார்கள் ஒவ்வொரு கோபி மற்றும் கோபரும் எப்பொழுதும் கோபி வல்லபருடன் நடனம் ஆடிக் கொண்டிருப் பதாகக் காண்பிக்கிறார்கள். இது நீங்கள் குஷியில் ஆடுவதற்கான நினைவுச் சின்ன ஓவியமாகும். உங்களின் நடைமுறை சரித்திரத்தின் சித்திரம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த மாதிரி நடைமுறை சரித்திரம் உள்ள சித்திரத்தை எப்பொழுதும் பார்க்கத் தென்படுகிறதா? இது என்னுடைய ஓவியமே தான் என்று அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? இதைத் தான் அதிர்ஷ்டத்தின் ஓவியம் என்று கூறுவது. தினசரி தன்னுடைய அதிர்ஷ்டத்தின் ஓவியத்தைப் பார்த்துக் கொண்டே ஒவ்வொரு காரியத்தையும் செய்தீர்கள் என்றால் கடின உழைப்பிலிருந்து விடுபட்டு பிறப்புரிமையின் குஷியை அனுபவம் செய்வீர்கள்.

இப்பொழுது கடுமையான முயற்சிக்கான நேரம் இல்லை, இப்பொழுதோ என்ன தெரிய வேண்டுமோ அதைத் தெரிந்தாகி விட்டது என்ற நினைவு சொரூபமாக ஆகுங்கள். என்ன அடைய வேண்டுமோ அதை அடைந்தாகி விட்டது என்று அனுபவம் செய்கிறீர்களா? பாப்தாதாவோ ஒவ்வொரு வரின் அதிர்ஷ்டத்தின் ஓவியத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். அதே போல் நான் ஆகப்போகிறேன். பாப்தாதாவிற்கு விசேஷமாக ஒரு விஷயத்தில் ஆச்சரியம் ஏற்படுகிறது. மாஸ்டர் சர்வ சக்திவான், மேலும் உயர்ந்த அதிர்ஷ்டம் நிறைந்தவர். எப்படி சிங்கம் எறும்பைக் கண்டு பயந்து விடுமோ. அப்படி சின்ன சின்ன விஷயங்களில் குழப்பம் அடைந்து விடுகிறார்கள். ஒருவேளை சிங்கம், நான் எப்படி இந்த எறும்பைக் கொல்லுவேன், என்ன செய்வது என்று கூறியது என்றால் என்ன நினைப்பார்கள்? இது சம்பவமான விஷயமா? அல்லது அசம்பவமாக இருக்குமா? அப்படி மாஸ்டர் சர்வ சக்திவான் சிறிய குழப்பத்தில் குழப்பம் அடைந்து விடுகிறார் என்றால் தந்தைக்கு இதுவும் நடக்கலாம் என்று

இருக்குமா அல்லது ஆச்சரியமான விஷயமாக இருக்குமா? எனவே இப்பொழுது சிறு சிறு விஷயங்களில் பயப்படுவதற்கான நேரம் இல்லை. இப்பொழுதோ அனைத்து குழப்பம் அடைந்திருக்கும் ஆத்மாக்களை விடுவிப்பதற்கான நேரம் ஆகும். புரிந்ததா. இந்தக் குழந்தைத்தனமான விஷயங்கள், மாஸ்டர் படைப்பவரை பொருத்தளவில் குழந்தைத்தனமான விஷயங்கள் நன்றாகவே இல்லை. எனவே எப்பொழுதும் ஊக்கம் உற்சாகத்தின் நடனத்தில் ஆடிக்கொண்டே இருங்கள் என்று கூறினோம். ஆஹா! என்னுடைய பாக்கியம், ஆஹா என்னுடைய பாக்கியத்தை உருவாக்குபவர் என்று இந்த சூட்சுமமான மனதின் ஓசையை கேட்டுக் கொண்டே இருங்கள். நடனம் ஆடுவதின் கூடவே இசை என்பதும் தேவையாக இருக்கிறது தான் இல்லையா? அப்படி இந்த முடிவில்லாத மனதின் ஓசையைக் கேட்டுக்கொண்டே இருங்கள் மற்றும் குஷியில் ஆடிக் கொண்டே இருங்கள்.

அந்த மாதிரி எப்பொழுதும் பிறப்புரிமையின் போதையில் இருக்கக்கூடிய, எப்பொழுதும் ஈஸ்வரிய மகிழ்ச்சியில் இருக்கக்கூடிய, கடின உழைப்பிலிருந்து விடுபடக்கூடிய, இலட்சியம் மற்றும் இலட்சணத்தை சமமாக ஆக்கக்கூடிய, அனைத்து குழப்பங்களிலிருந்தும் விடுவிக்கக்கூடிய, அந்த மாதிரி உயர்ந்த அதிர்ஷ்டம் நிறைந்த பல கோடி மடங்கு பாக்கியசாலி குழந்தைகளுக்கு அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 11.01.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சுயத்தின் மாற்றம் தான் உலக மாற்றத்திற்கான ஆதாரம்!

பாப்தாதா தன்னுடைய பூந்தோட்டத்தை பார்க்கவும் செய்கிறார், எப்பொழுதும் பார்த்துக் கொண்டேயும் இருக்கிறார். அமிர்தவேளையில் தொடங்கி பூந்தோட்டத்தைப் பார்க்கிறார், இன்று கூட ஒவ்வொன்றும் எந்த விதமான, எவ்வளவு நறுமணமிக்க மற்றும் எவ்வளவு அழகான வண்ணம் நிறைந்த பூக்களாக இருக்கின்றன என்று பாப்தாதா பூந்தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். மொட்டாக இருக்கிறார்களா அல்லது மொட்டிலிருந்து மலராக ஆகியிருக்கிறார்களா? ஒவ்வொன்றின் விசேஷம் என்னவாக இருக்கிறது மற்றும் தேவை என்னவாக இருக்கிறது என்று பார்த்துக் கொண்டிருந்தார். மணம் நிறைந்தவர்களாக ஆகியிருக்கிறார்கள் தான் ஆனால் அந்த நறுமணம் அழியாததாக மற்றும் தொலைதூரம் வரை பரவக்கூடியதா? ஒருவிதமான மலர் இருக்கிறது அதனுடைய நறுமணம் எதிரில் வந்தால் தான் மணம் வீசும், தூரத்தில் அது வருவதில்லை, அப்படி இங்கேயும் நறுமணமிக்கவர்களாகவோ ஆகியிருக்கிறார்கள், ஆனால் எப்பொழுது தந்தையின் எதிரில் மற்றும் சேவைக்கு பொறுப்பான ஆத்மாக்களின் எதிரில் வருகிறார்கள் என்றால் நறுமணம் இருக்கிறது, ஆனால் சேவையின்றி சாதாரண காரியம் செய்து கொண்டே மற்றும் உடல் நிர்வாகத்தைச் செய்து கொண்டிருக்கும் போது அந்த நறுமணம் வருவதில்லை. சில சில மலர் தூரத்திலிருந்தே கவர்ச்சி செய்கிறது. வண்ணம், ரூபத்தின் ஆதாரத்தில் கவர்ச்சி செய்கிறதேயன்றி நறுமணத்தின் ஆதாரத்தில் இல்லை. வண்ணம், ரூபம், நறுமணம் ஆகிய அனைத்தும் நிரம்பியதாக இருப்பது அந்த மாதிரி மிகக் குறைந்த பொறுக்கி எடுக்கப் பட்ட மலர்களைப் பார்த்தோம். வண்ணம், ரூபம் என்றால் சென்சிபல் (ஞானம் நிறைந்தவர்கள்) மற்றும் நறுமணம் நிறைந்தவர்கள் என்றால் எஸன்ஸ்ஃபுல் (சாறு நிறைந்தவர்கள்) எஸன்ஸ்ஃபுல் குறைவானவர்கள் இருந்தார்கள். ஞானத்தின் ஆதாரத்தில் சேவாதாரிகளாகவோ ஆகிவிட்டார்கள் ஆனால் ஆன்மீக சேவாதாரி

ஆவது, அது குறைவாக இருக்கிறது. காரணம் என்ன? எப்படி தந்தை நிராகாரமானவர், சாகார ரூபத்தில் தன்னுடைய பங்கை செய்து கொண்டிருக்கிறார். "நிராகாரமானவர், சாகாரமானவர் ஆகியிருக்கிறேன்" இந்த இரண்டு நினைவுகளும் சேர்ந்தே இருப்பதில்லை அல்லது ஒன்றோ நிராகாரமாகி விடுகிறார்கள் அல்லது சாகாரமாகிவிடுகிறார்கள். எப்பொழுதுமே "நிராகாரமானவரிலிருந்து சாகாரமானவர் ஆகியிருக்கிறேன்" என்ற இந்த மந்திரம் எப்பொழுதும் நினைவிருக்கட்டும். இந்த சாகார உலகம், சாகார உடல் மேடை ஆகும். மேடை மற்றும் நடிகர்கள் இருவரும் வேறு வேறாக இருப்பார்கள். நடிகர்கள் தன்னை ஒருபொழுதும் மேடை என்று நினைப்பதில்லை. மேடை ஆதாரமாகும். நடிகர்கள் ஆதாரமூர்த்திகள், எஜமானர்கள். இந்த உடலை மேடை என்று நினைப்பதினால் தன்னை நடிகன் என்று இயல்பாகவே அனுபவம் செய்வார்கள். விலகியிருப்பவராக ஆக்குவது தெரியவில்லை. அப்படியானால் காரணமாக என்ன ஆனது? தன்னை நான் வெளி தேசத்தைச் சேர்ந்தவன் என்று புரிந்து எப்பொழுதும் நடந்து கொள்ளுங்கள். மாற்றான் தேசத்தில் மற்றும் பழைய உடலில் உலக நன்மைக்கான பங்கைச் செய்வதற்காக வந்திருக்கிறேன். முதல் பாடம் பலஹீனமாக இருக்கும் காரணத்தினால் ஞானம் நிறைந்தவர்களாக ஆகியிருந்தும் சாரம் குறைவாக இருக்கிறது. ரூபம், வண்ணம் இருக்கிறது ஆனால் நறுமணம் அழியாததாகவும் மற்றும் நாலாபுறங்களிலும் பரவுவதாகவும் இல்லை. எனவே இப்பொழுது பாப்தாதாவிற்கு மீண்டும் முதல் பாடத்தைக் கற்பிக்க வேண்டியதாக இருக்கிறது. ஒரு நொடியில் தன்னுடைய மாற்றத்தை சுலபமாகச் செய்வீர்களா? தன்னுடைய மாற்றத்திற்கு எவ்வளவு நேரம் எடுக்கிறது என்று முதலில் தன்னைத் தானே கேளுங்கள். எந்தவொரு சம்ஸ்காரம், சுபாவம், வார்த்தை மற்றும் தொடர்பு யதார்த்தமானதாக இல்லாமல் வீணானதாக இருக்கிறது என்றால் வீணானதை மாற்றி உயர்ந்ததாக ஆக்குவதில் எவ்வளவு நேரம் எடுக்கிறது. சூட்சும எண்ணங்களை, சம்ஸ்காரத்தை என்ன நினைத்தீர்களோ அதைச் செய்தீர்கள், அதாவது சோதனை செய்தீர்கள் மற்றும் மாற்றம் செய்தீர்கள் அப்படி மிக வேகமாக இயங்கும் இயந்திரம் இருக்கிறதா?

தற்சமயம் அந்த மாதிரி தன்னை மாற்றும் இயந்திரம் மிக வேகமாக இயங்கக்கூடியதாக வேண்டியதிருக்கிறது, அப்பொழுது தான் உலக

மாற்றத்தின் இயந்திரம் வேகமாக இயங்கும். இப்பொழுது ஸ்தாபனைக்காக பொறுப்பாளராக ஆகியிருக்கும் ஆத்மாக்களில் நினைப்பதற்கும் மற்றும் செய்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது. ஏனென்றால் பழைய பக்தியின் சம்ஸ்காரம் அவ்வப்பொழுது வெளிப்பட்டு விடுகிறது. பக்தியிலும் நினைப்பது மற்றும் சொல்வது மிக அதிகம் இருக்கும். "இதைச் செய்வோம், இதைச் செய்வோம்" இப்படிக் கூறுவது மிக அதிமாக இருக்கும், ஆனால் செய்வது மிகக் குறைவாக இருக்கும். பலி ஆகிவிடுவேன் என்று கூறுவார்கள், ஆனால் ஒன்றும் செய்வதில்லை. "உன்னுடையது என்று கூறுகிறார்கள், ஆனால் என்னுடையது என்று ஏற்று நடந்து கொள்வார்கள். அந்த மாதிரி இங்கேயும் அதிகம் நினைக்கிறார்கள், ஆன்மீக உரையாடலின் நேரத்தில் அதிகமான உறுதிமொழி கொடுக்கிறார்கள். "இன்றிலிருந்து மாறிக் காண்பிப்பேன். இன்று இதை விட்டு விட்டுச் செல்கிறேன். இன்று இந்த எண்ணத்தை வைக்கிறேன்" என்று ஆனால் சொல்வது மற்றும் செய்வதில் வித்தியாசம் இருக்கும். அதே மாதிரி விநாஷத்திற்கு பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்கள் நினைக்கிறார்கள், ஆனால் செய்ய முடிவதில்லை. எனவே இப்பொழுது தந்தைக்குச் சமமாக ஆவதற்கு முன்பு இந்த ஒரு விஷயத்தில் சமமாக ஆகுங்கள் அதாவது தன்னை மாற்றும் இயந்திரத்தை வேகப்படுத்துங்கள். இந்த வித்தியாசத்தை அகற்றுவதற்கான மந்திரம் அல்லது இயந்திரம் "நிராகாரமாக இருந்தவன், சாகாரத்தில் வந்து என்னுடைய பங்கை செய்பவன்" என்று ஏற்கனவே கூறினோம். இந்த மந்திரத்தினால் நினைப்பது மற்றும் செய்வதிலிருக்கும் வித்தியாசத்தை அகற்றுங்கள். இது தான் தேவையாக இருக்கிறது. புரிந்ததா? இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?

தன்னுடைய மாற்றத்தினால் உலக மாற்றம் ஏற்படும். உலக மாற்றத்தின் தேதியை நினைக்காதீர்கள். தன்னுடைய மாற்றத்தின் நேரத்தை நிச்சயம் செய்யுங்கள். தன்னை நிறைந்தவர் ஆக்கினீர்கள் என்றால் உலகத்தின் காரியம் நிச்சயம் நிறைவேறி விடும். உலக மாற்றத்திற்கான கடிகாரம் நீங்கள் ஆவீர்கள். எல்லைக்கப்பாற்பட்ட இரவு முடிவதற்கு இன்னும் எவ்வளவு நேரம் இருக்கிறது என்று உங்கள் மேலேயே பாருங்கள். சம்பூர்ணத்தின் சூரியன் உதயமாவது என்றால் இரவு, இருள்

முடிவடைவது. நீங்கள் தந்தையிடம் கேட்கிறீர்கள் மற்றும் தந்தை உங்களிடம் கேட்கலாமா? ஆதாரமானவர்கள் நீங்கள் ஆவீர்கள். நல்லது.

ஒரு நொடியில் மாற்றம் செய்யக்கூடிய, நினைப்பது மற்றும் செய்வதை சமமாக ஆக்கக்கூடிய, நிரந்தரமாக "நிராகாரத்திலிருந்து சாகாரத்தில் வந்தேன்" என்ற மந்திரத்தை நினைவு சொரூபத்தில் கொண்டு வரக்கூடிய, சம்பன்னம் ஆகி உலகில் மாஸ்டர் ஞான சூரியனுக்குச் சமமாக இருளை அகற்றக்கூடிய, எப்பொழுதும் விலகியிருப்பதோடு, எப்பொழுதும் தந்தையின் அன்பிற்குரியவராக இருக்கும் அந்த மாதிரி விசேஷ ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தீதியுடன்**: விநாஷத்தின் தேதி எது என்று தெரியுமா? எப்பொழுது விநாஷம் ஏற்படும்? விரைவில் விநாஷத்தை விரும்புகிறீர்களா அல்லது ஆம் மற்றும் வேண்டாம் என்ற விருப்பத்திலிருந்தும் விலகியிருக்கிறீர்களா? விநாஷத்திற்குப் பதிலாக ஸ்தாபன காரியத்தை நிறைவேற்றுவதில் அனைத்து பிராமணர்களும் ஒரே திட எண்ணத்தில் நிலைத்து விட்டார்கள் என்றால் மாற்றம் ஏற்பட்டே விடும். எப்படி விநாஷத்தின் தேதியில் அனைவரும் ஒரே கருத்துள்ளவர்களாக ஆகிவிட்டார்கள் இல்லையா? அதே போல் எந்தவொரு நிறைவேற்றக்கூடிய விசேஷ விஷயத்தின் லட்சியத்தை வைத்துக் கொண்டே பிறகு தேதியை நிர்ணயம் செய்தீர்கள் என்றால், நடந்தே தான் தீரும். அப்பொழுது நிறைவேறிவிடும். இப்பொழுது கூட்டான ரூபத்தில் மாற வேண்டும் என்ற ஒரே திட எண்ணத்தைச் செய்வதில்லை. சிலர் செய்கிறார்கள் மற்றும் சிலர் செய்வதில்லை. எனவே சூழ்நிலை சக்தி நிறைந்ததாக ஆவதில்லை. சிறுபான்மையராக இருக்கும் காரணத்தினால் யார் செய்கிறாரோ அது சூழ்நிலையில் வெளிப்படையான ரூபத்தில் தென்படுவதில்லை. எனவே இப்பொழுது அந்த மாதிரி நிகழ்ச்சியை தயாரியுங்கள். அதில் அந்த மாதிரி விசேஷ குரூப்பின் விசேஷ காரியமாக இருக்க வேண்டும் -உறுதியான எண்ணத்தோடு செய்தே காண்பிக்க வேண்டும். எப்படி தொடக்கத்தில் முயற்சி செய்வதின் உற்சாகத்தை அதிகரிப்பதற்காக குழுக்களை உருவாக்கினோம். மேலும் முயற்சியின் பந்தயம் செய்தீர்கள், ஒருவர் இன்னொருவருக்கு சகயோகம் கொடுத்துக் கொண்டே உற்சாகத்தை

அதிகப்படுத்தினீர்கள் அந்த மாதிரி இப்பொழுது தீவிரமாக முயற்சி செய்பவர்களின் குழு உருவாகட்டும். என்ன கூறுவீர்களோ அதைத் தான் செய்வோம், செய்து காண்பிப்போம் என்ற இந்த சவாலை ஏற்றுக் கொள்ள வேண்டும். எப்படி தொடக்கத்தில் தந்தையிடம் தூய்மையாக இருப்பதற்கான உறுதிமொழி கொடுத்தீர்கள். இறப்போம், அழிவோம், சகித்துக் கொள்வோம், அடி வாங்குவோம், வீட்டை விட்டு வந்து விடுவோம் ஆனால் தூய்மையாக இருப்போம் என்ற உறுதிமொழியில் மிக உறுதியாக இருப்போம். அந்த மாதிரி சிங்கங்களின் குழு ஸ்தாபனை காரியத்தில் பொறுப்பாளராகி காண்பித்தார்கள். எதையும் யோசிக்கவில்லை, எதையும் பார்க்கவில்லை, செய்து காண்பித்தார்கள். அதே போலவே இப்பொழுது அந்த மாதிரி குரூப் தேவையாக இருக்கிறது. என்ன லட்சியம் வைத்திருக்கிறோமோ அந்த லட்சியத்தை அடைவதற்காக சகித்துக் கொள்வோம். தியாகம் செய்வோம், நல்லது தீயதை கேட்டுக் கொள்வோம், சோதனைகளைக் கடந்து செல்வோம், ஆனால் லட்சியத்தை அடைந்தே தீருவோம். அந்த மாதிரியான குரூப் எடுத்துக்காட்டாக ஆக வேண்டும். அப்பொழுது தான் அவர்களை மற்றவர்கள் பின்பற்றி நடப்பார்கள். எது தொடக்கத்தில் நடந்ததோ அதுவே இறுதியிலும் நடக்க வேண்டும். யார் களத்தில் வரக்கூடியவர்களோ, யார் இகழ்ச்சி-புகழ்ச்சி, மரியாதை-அவமரியாதை அனைத்தையும் கடந்து செல்பவர்களோ அந்த மாதிரி குரூப் வேண்டும். எந்தவொரு விஷயத்திலும் கேட்பது மற்றும் சகித்துக் கொள்வது என்பதை எந்த விதத்திலும் செய்யது தான் வேண்டும். எவ்வளவு தான் நன்றாகச் செய்தாலும் ஆனால் நல்லவர்களுக்கு அதிகமாக கேட்க வேண்டியது இருக்கிறது. சகித்துக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அந்த மாதிரி சகித்துக் கொள்ளும் சக்தி உள்ள குரூப் வேண்டும். எப்படி தொடக்கத்தில் தூய்மையின் விரதம் எடுத்த குரூப் களத்தில் வந்தது என்றால் ஸ்தாபனை ஆனது. அதே போல் இப்பொழுது இந்த குரூப் களத்திற்கு வந்தது என்றால் அப்பொழுது முடிவு ஏற்படும். அந்த மாதிரியான குரூப் பார்க்கத் தென்படுகிறதா? எப்படி அந்த பாராளுமன்றத்தைக் கூட்டுகிறார்கள் இல்லையா - அப்படி இது சம்பன்னம் ஆவதற்கான பாராளுமன்றமாக இருக்கட்டும். புது உலகம், புது வாழ்க்கை உருவாக்குவதின் சட்டத்தை உருவாக்கும் சட்டசபையாக இருக்கட்டும். எந்த குரூப் உருவாக்குகிறது என்று இப்பொழுது பார்க்கலாம். வெளி நாட்டினரும் இந்த மாதிரியான குரூப்பை

உருவாக்குங்கள். உண்மையான பிராமணன் ஆகிக் காண்பிக்க வேண்டும். மதுபன்னில் என்னவாகி இங்கிருந்து சென்று கொண்டிருக்கிறீர்கள்? எங்கிருந்து வந்தீர்களோ அங்கு சென்றடைந்த உடனேயே இவரோ அவதாரம். அவதரித்திருக்கிறார் என்று அனைவரும் நினைக்க வேண்டும். எப்படி ஒரு அவதாரம் உலகத்தில் புரட்சியை கொண்டு வர முடியும் என்றால் இவ்வளவு அனைத்து அவதாரங்கள் எப்பொழுது இறங்குவீர்களோ அப்போது அந்த அளவு பெரிய புரட்சி ஏற்பட்டு விடும். உலகில் புரட்சியைக் கொண்டு வரக்கூடிய அவதாரம் ஆவீர்கள் நீங்கள். அந்த மாதிரி புரிந்து கொண்டு காரியம் செய்ய வேண்டும். நல்லது.

அந்த மாதிரி குரூப்பை எந்த குரூப் என்று கூறுவோம். பாப்தாதா இந்த குரூப்பை செய்தி கொடுப்பவர் குரூப்பின் ரூபத்தில் பார்க்கிறார். ஒவ்வொருவரும் அனேக ஆத்மாக்களுக்கு தந்தையின் செய்தி கொடுப்பவர்கள். அந்த மாதிரி தன்னை நினைக்கிறீர்களா? இப்பொழுது எந்த தோட்டக்காரர், எந்த மலரைக் கொண்டு வருகிறார் மேலும் எவ்வளவு பெரிய பூச்செண்டை தயார் செய்கிறார் என்று பார்க்கலாம். எப்பொழுதுமே தோட்டக்காரர் தன்னுடைய எஜமானனுக்கு மிகவும் அன்போடு பூச்செண்டை தயாரித்து அளிப்பார். அப்படி தந்தையும் பார்ப்பார். சாரம் நிறைந்தவராக இருக்க வேண்டும் என்று கூறினோம். ஆன்மீகத்தின் சாரம் இருக்க வேண்டும். தன்னை தோட்டக்காரர் என்று நினைக்கிறீர்களா? இத்தனை பேர் தயாராகி விட்டார்கள் என்றால் உலகிற்கு நன்மை ஏற்பட்டு விடும். தந்தைக்கு இந்த நம்பிக்கை தான் இருக்கிறது.

அனைத்து பாண்டவர்கள் சென்ற கல்பத்தில் நடந்தது போல் தன்னுடைய உயர்ந்த நிலையை பிராப்தி செய்து தேக அபிமானத்திலிருந்து முழுமையாக உருகி விட்டார்களா? எப்படி பாண்டவர்கள் மலை உச்சியில் சென்று உருகிவிட்டார்கள் அதாவது அழிந்து விட்டார்கள் என்று காண்பிக்கிறார்கள் அந்த மாதிரி தேக அபிமானத்தின் நிலையிலிருந்து அழிந்து விட்டீர்களா? இப்பொழுது முழுமையான பாண்டவருக்கு சமமாக மர்ஜீவா (உடலில் இருந்து கொண்டே இறந்து மறுபிறவி எடுத்தவர்) ஆகவில்லை. மர்ஜீவா என்றால் தேக உணர்விலிருந்து இறப்பது. அப்படி மர்ஜீவாவாக ஆகியிருக்கிறீர்களா? இறப்பது என்றால் இறப்பது அல்லது

# 1977 அவ்யக்த முரளி

இப்பொழுது இறந்து கொண்டிருக்கிறீர்களா? அந்த மாதிரியும் நடக்குமா என்ன? ஒரு இடத்தில் இருந்து இறப்பது, இன்னொரு இடத்தில் வாழ்வது ஆகும். இது அனைத்திலும் இருக்கிறது தான் இல்லையா? இங்கேயும் தேக அபிமானத்திலிருந்து இறப்பது மற்றும் ஆத்ம அபிமானியில் வாழ்வது. இதில் எவ்வளவு காலம் வேண்டும். குறைந்தது ஆறு மாதங்களோ ஆகிவிட்டது தான் இல்லையா. உயர்ந்த நிலையை அடைவதில் பாண்டவர்கள் பிரசித்தியானவர்கள். எனவே பாண்டவர்களின் உடலை உயரமானதாகக் காண்பிக்கிறார்கள். உண்மையில் உடல் அல்ல, ஆனால் ஆத்மாவின் நிலை இவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறது. தீவிர முயற்சி செய்வதற்கான சகஜ சாதனம் திட எண்ணம். ஆத்ம அபிமானி ஆவதற்காகவும், நான் உடல் அல்ல, நான் ஆத்மா ஆவேன். என்ற திட எண்ணம் வைக்க வேண்டும். எண்ணத்தில் உறுதித்தன்மை இல்லை என்றால் எந்தவொரு விஷயத்திலும் வெற்றி இல்லை. எந்தவொரு விஷயத்திலும் எப்பொழுது திட எண்ணம் வைக்கிறீர்களோ அப்பொழுது தான் வெற்றி ஏற்படும். திட எண்ணம் உள்ளவர்கள் தான் மாயாவை வென்றவர்களாக ஆகிறார்கள். நீங்கள் மாயாவிடம் தோல்வி அடைபவர்கள் இல்லையே எப்பொழுது மாயாவை பகுத்தறிவ தில்லையோ அப்பொழுது தான் ஏமாற்றம் அடைகிறீர்கள், பகுத்தறிபவர் ஒருபொழுதும் ஏமாற்றம் அடைய மாட்டார். நீங்கள் அதிர்ஷ்டசாலிகள். பிராப்திக்கு முன்பாகவே ஆஸ்தி பெறுவதற்கான அதிகாரம் பிராப்தியாகி இருக்கிறது. எப்பொழுது குஷிகளின் கடல் தந்தையின் குழந்தை ஆகியிருக்கிறீர்கள் என்றால் எவ்வளவு குஷி இருக்க வேண்டும். உங்களுடைய குஷி மறைந்து போகும் அளவிற்கு அப்படி என்ன அபிராப்தியாக இருக்கிறது. எங்கு பிராப்தி இருக்கிறதோ அங்கு குஷி இருக்கிறது. அற்பகாலத்து பிராப்தி அடைபவர்கள் கூட குஷி அடைகிறார்கள். சதா காலத்தின் பிராப்தி அடைபவர்களோ எப்பொழுதும் குஷியாக இருக்க வேண்டும். சில நேரம் மட்டுமே குஷியாக இருக்கிறீர்கள் என்றால் உங்களுக்கும் அவர்களுக்கும் என்ன வித்தியாசம்? ஞானி என்றால் எப்பொழுதும் குஷியாக இருப்பவர். அஞ்ஞானி என்றால் சில நேரம் குஷியாக இருப்பவர். எனவே எப்பொழுதும் குஷியாக இருப்பதற்கான திட எண்ணத்தை வைத்து இங்கிருந்து செல்லுங்கள்.

**டீச்சர்களுடன்: அனைத்து டீச்சர்களும் எப்படி தந்தை உலகிற்கு ஆசிரியராக இருக்கிறார் அப்படி தன்னையும் உலகிற்கு பொறுப்பிலிருக்கும் ஆசிரியை என்று நினைக்கிறீர்களா?** அல்லது எல்லைக்குட்பட்ட ஆசிரியை என்று நினைக்கிறீர்களா? டீச்சர்களுக்காக முயற்சி செய்வதற்கான விசேஷ சுலோகனாக என்ன இருக்கிறது? ஒவ்வொரு நொடியும் எண்ணம், சொல் மற்றும் செயல் மூன்றின் மூலமாக சேர்த்தே சேவை செய்வீர்கள் அதாவது ஒவ்வொரு நொடியும் மற்றும் ஒவ்வொரு நொடியில் மூன்று ரூபங்களில் சேவை இருக்க வேண்டும். எப்பொழுது டீச்சர்கள் இந்த சுலோகனை நிரந்தரமாக நடைமுறையில் கொண்டு வருவீர்களோ அப்பொழுது தான் உலக நன்மை செய்ய முடியும். இவ்வளவு பெரிய உலகத்திற்கு நன்மை செய்வதற்காக ஒரே நேரத்தில் எப்பொழுது மூன்று ரூபங்களிலும் சேவை இருக்குமோ அப்பொழுது இந்த சேவையின் காரியம் முடிவடைய முடியும். வாய்மொழி மூலமாக மற்றும் மனம் மூலமாக சேவை செய்வது தனித்தனியான நேரத்தில் இருக்க வேண்டாம். ஒரே நேரத்தில் மூன்று ரூபங்களினால் சேவை செய்பவர் தான் உலகிற்கு நன்மை செய்பவர் ஆக முடியும். எனவே ஒவ்வொரு நேரமும் மூன்று ரூபங்களிலும் சேவை இருக்கிறதா என்று சோதனை செய்யுங்கள். தந்தையுடன் மூன்று சம்மந்தங்கள் இருக்கின்றன. தந்தை, ஆசிரியர் மற்றும் சத்குருவின் சொரூபத்தில் சேவை செய்கிறார் என்றால் பொறுப்பிலிருக்கும் டீச்சர்களுக்கு ஒரே நேரத்தில் மூன்று ரூபங்களினால் சேவை செய்ய வேண்டும். அப்பொழுது மாஸ்டர் திரிமூர்த்தி ஆகிவிடுவீர்கள். புரிந்ததா. எவ்வளவிற்கு எவ்வளவு டீச்சர்கள் சக்தி நிரம்பியவர்களாக ஆவார்களோ அந்த அளவே அனைத்து ஆத்மாக்களுக்காக பொறுப்பாளர் ஆக முடியும். பொறுப்பாளராக ஆகுபவர்கள் மேல் மிகுந்த பொறுப்பிருக்கிறது. பொறுப்பாளர் ஆகுபவர்களுக்கு ஒரு நொடியில் ஒன்றிற்கு பல மடங்கு உருவாகவும் செய்கிறது, பிராப்திக்கான வாய்ப்பும் இருக்கிறது, மேலும் பிறகு ஒருவேளை பொறுப்பாளராக இருப்பவர் ஏதாவது அந்த மாதிரியான காரியம் செய்து அதைப் பார்த்து மற்ற அனைவரும் பாதிக்கப்படுகிறார்கள் என்றால் அதன் பலமடங்கு எதிமறையான பிராப்தியும் இருக்கும். எண்ணம் மூலம் உள்உணர்வு உருவாகும் மற்றும் உள்உணர்வினால் சூழ்நிலை உருவாகும். எனவே சூழ்நிலை அசுத்தமாக ஆகும் அளவிற்கு அந்த மாதிரி எந்த எண்ணம், உள்உணர்வும் இருக்க வேண்டாம். உங்கள் மூலமாக வரும் வார்த்தையைக் கேட்டு யாரும்

பாதிக்கப்படுபவது மாதிரி எந்த வார்த்தையும் இருக்கக்கூடாது. ஏனென்றால் அனைவரின் கவனம் பொறுப்பிலிருக்கும் ஆசிரியர் மேல் இருக்கும். எனவே டீச்சர்களுக்கு இரட்டை கவனம் வைக்க வேண்டும். அனைவரும் அது போலவே இரட்டை கவனம் வைத்து நடந்து கொள்கிறீர்கள் தான் இல்லையா? முதலில் யோசியுங்கள், பிறகு செய்யுங்கள். முதலில் செய்வது பின்பு யோசிப்பது என்று அப்படி இருக்க வேண்டாம். அப்பொழுது நேரம் மற்றும் சக்தி வீணாகச் சென்று விடும்.

டீச்சர்களுக்கோ விசேஷமாக குஷி இருக்க வேண்டும். ஏனென்றால் டீச்சர்களுக்கு ஒரு தந்தை மற்றும் சேவையில் இருப்பதற்கான லிஃப்ட் இருக்கிறது மற்றும் வேறு எந்த சூழ்நிலையும் இல்லை. எனவே இந்த லிஃப்டின் லாபத்தை எடுக்க வேண்டும் இல்லையா. எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்தவர்களாக இருக்கிறீர்கள் இல்லையா? யார் எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்தவராக இருக்கிறார்? யார் எங்கேயும் கவரப்படவில்லையோ, ஒருவேளை எந்த பக்கமாவது அது உடலானாலும், ஆத்மாக் களானாலும், ஆத்மாக்களின் குணங்களின் பக்கம் கவரப்படுகிறீர்கள் என்றாலும் மகிழ்ச்சி நிறைந்திருக்க முடியாது. ஒரு தந்தையைத் தவிர மற்ற அனைத்து கவர்ச்சிகளிலிருந்து விலகிய நிலையில் இருக்கும் ஆத்மாக்கள் தான் எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்து வாழ முடியும், நல்லது.

**வரதானம்: அழியாத மாங்கல்யம் மற்றும் பாக்கியத்தின் திலகமிட்டவரிலிருந்து எதிர்காலத்து இராஜ திலகமிட்டவராக ஆகுக!**

சங்கமயுகத்தில் தேவர்களுக்கெல்லாம் தேவரின் மாங்கல்யம் மேலும் பரமாத்மா மற்றும் ஈஸ்வரிய குழந்தையின் பாக்கியத்தின் திலகம் பிராப்தி ஆகிறது, ஒருவேளை இந்த மாங்கல்யம் மற்றும் பாக்கியத்தின் திலகம் அழியாததாக இருக்கிறது, மாயா இந்த திலகத்தை அழிக்கவில்லை என்றால் இங்கே உள்ள மாங்கல்யம் மற்றும் பாக்கியத்தின் திலகமிட்டவரிலிருந்து எதிர்காலத்து இராஜ திலகமிட்டவராக ஆகிறார். ஒவ்வொரு ஜென்மத்தின் இராஜதிலகத்தின் உற்சவம் நடக்கிறது. இராஜாவுடன் சேர்த்து இராயல் குடும்பத்தினருக்கும் திலகமிடும் நாள் கொண்டாடப்படுகிறது.

**சுலோகன்: எப்பொழுதும் ஒருவரது அன்பிலேயே மூழ்கியிருந்தீர்கள் என்றால் இந்த அன்பு கடின உழைப்பை முடிவடையச் செய்து விடும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 12.01.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# குழந்தையிலிருந்து அதிபதி ஆகக்கூடியவர்களின் மூன்று காலங்களின் சாட்சாத்காரம்!

இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் மூன்று காலங்களையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். கடந்த காலத்தில் தொடக்க காலத்து பக்தர்களா அல்லது மத்திய காலத்து பக்தர்களா? பக்தி காலம் முடிவடைந்து விட்டதா என்ன? பக்தியின் பலன் ஞானக்கடல் மற்றும் ஞானத்தின் பிராப்தியை அடைந்து கொண்டே ஞான சொரூப ஆத்மாவாக ஆகிவிட்டார்களா அல்லது ஆகிக் கொண்டிருக்கிறார்களா? பக்தியின் சம்ஸ்காரமாகிய அடிமைத்தனம் அதாவது யாருடைய அடிமையாக இருப்பது, கேட்பது, அழைப்பது, தன்னை எப்பொழுதும் நிரம்பிய நிலையிலிருந்து தூரமாக இருப்பதாக நினைப்பது ஆகிய இந்த விதமான சம்ஸ்காரம் இதுவரையிலும் அம்ச மாத்திரத்திலும் இருக்கிறதா அல்லது வம்ச ரூபத்திலும் இருக்கிறதா? தற்சமயம் தந்தைக்குச் சமமான குணம், காரியம் மற்றும் சேவையில் எவ்வளவு நிரம்பியவர்களாக ஆகியிருக்கிறார்கள்? தற்சமயத்தின் ஆதாரத்தினால் எதிர்காலத்து பிராப்தியை எவ்வளவு உயர்ந்ததாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி ஒவ்வொருவரின் மூன்று காலங்களையும் பார்த்துக் கொண்டே "குழந்தையிலிருந்து அதிபதியாக" ஆகக்கூடியவர்களைப் பார்த்துக் கொண்டே மகிமையும் பாடுகிறார், ஆனால் கூடவே எப்பொழுதாவது ஆச்சரியமும் ஏற்படுகிறது. இதுவரை பக்தியின் சம்ஸ்காரம் அம்ச ரூபத்திலும் கூட இருந்து விடவில்லையே என்று தன்னைத் தானே கேளுங்கள் மற்றும்

தன்னைத் தானே பாருங்கள். ஒருவேளை அம்ச மாத்திரத்திலும் கூட ஏதாவது சுபாவம், சம்ஸ்காரத்தின் அடிமைத்தனம் இருக்கிறது, பெயர், புகழ், மரியாதையைக் கேட்பவராக இருக்கிறார், என்ன மற்றும் எப்படி

என்ற கேள்வியில் கதறுபவராக இருக்கிறார். அழைப்பவராக இருக்கிறார். பக்தர்களுக்குச் சமமாக உள்ளே ஒன்று வெளியில் இன்னொன்று என்று அந்த மாதிரி ஏமாற்றம் கொடுக்கக்கூடிய கொக்குக்குச் சமமான பக்தர்களின் சம்ஸ்காரம் இருக்கிறதென்றால், எங்கு பக்தியின் அம்சம் இருக்கிறதென்றால் அங்கு ஞான சொரூப ஆத்மாவாக ஆகவே முடியாது. ஏனென்றால் பக்தி இரவு மற்றும் ஞானம் பகல். இரவு மற்றும் பகல் சேர்ந்தே இருக்க முடியாது.

ஞான சொரூப ஆத்மா, எப்பொழுதும் பக்தியின் பலன் சொரூபமாக ஞானக்கடல் மற்றும் ஞானத்தில் நிரம்பியவராக இருக்கிறார், ஆசை என்றால் என்னவென்று தெரியாத நிலை, அனைத்து பிராப்தி சொரூபம். அந்த மாதிரி ஞான சொரூப ஆத்மாவின் ஓவியத்தை புத்தி மூலமாக வரைய முடியுமா? எப்படி உங்களுடைய எதிர்கால ஸ்ரீகிருஷ்ணரின் படத்தை பிறந்ததிலிருந்தே கிரீடம் அணிந்த வராக காண்பிக்கிறார்கள், வாயில் தங்க ஸ்பூன் அதாவது பிறந்ததிலிருந்தே அனைத்து பிராப்தி சொரூப மானவராகக் காண்பிக்கிறார்கள். ஹெல்த் (ஆரோக்கியம்), வெல்த் (செல்வம்), ஹேப்பினஸ் (குஷி) அப்படி அனைத்திலும் நிரம்பிய சொரூபம். இயற்கையும் தாசியாக இருக்கிறது. எதிர்காலத்தில் பிராப்தியாகக்கூடிய இந்த விஷயங்களின் அனுபவம் இப்பொழுது சங்கமயுகத்திலும் இருக்க வேண்டும் அல்லது இது எதிர்காலத்தின் மகிமையாக மட்டும் இருக்கிறதா? சம்ஸ்காரத்தை இங்கிருந்து எடுத்துச் செல்வதா அல்லது அங்கே உருவாகுமா? மூன்று காலத்தையும் தெரிந்த நிலை இப்பொழுது இருக்கிறதா அல்லது எதிர்காலத்திலா? நேரெதிரில் தந்தை மற்றும் ஆஸ்தியின் பிராப்தி இப்பொழுது இருக்கிறதா அல்லது எதிர்காலத்திலா? உயர்ந்த நிலை இப்பொழுதா அல்லது எதிர்காலத்திலா? உயர்ந்த நிலை இப்பொழுது தான் இல்லையா?

சங்கமயுகத்தினுடைய இறுதி சம்பூர்ண நிலையின் படத்தைத் தான் எதிர்கால படத்தில் காண்பிக்கிறார்கள். எதிர்காலத்தின் கூடவே முதலில் அனைத்து பிராப்தியின் அனுபவம் சங்கமயுக பிராமணர்களினுடையது. இறுதி நிலையில் கிரீடம், ஆசனம், திலகம் இட்டவராக, அனைத்து அதிகாரம் நிறைந்தவராக ஆவீர்கள், மாயாவை வென்றவர் மற்றும் இயற்கையை வென்றவராக ஆவீர்கள். எப்பொழுதும் சாட்சி நிலை என்ற ஆசனத்தில் அமர்ந்திருப்பவர், பாப்தாதாவின் இதயம் என்ற

# 1977 அவ்யக்த முரளி

சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவர், உலக நன்மை செய்யும் பொறுப்பின் கிரீடம் அணிந்தவர், ஆத்ம சொரூபத்தின் நினைவின் திலகமிட்டிருப்பவர், தந்தை மூலமாக கிடைத்திருக்கும் ஆன்மீகச் செல்வம் - ஞானம், குணம் மற்றும் சக்திகளில் நிரம்பியவராக ஆக வேண்டும். ஒரு கிரீடம் இல்லை. இரட்டை கிரீடதாரியாக ஆகிறீர்கள். எப்படி இரட்டை ஆசனம், ஒன்று இதய சிம்மாசனம், மற்றொன்று சாட்சி நிலையின் ஆசனம். அதே போல் பொறுப்பு என்றால் சேவைக்கான கிரீடம் மற்றும் கூடவே சம்பூர்ண தூய்மையின் ஒளிக்கிரீடமும் இருக்கிறது. அப்படி இரட்டை கிரீடம், இரட்டை ஆசனம் மற்றும் அனைத்து பிராப்தி சொரூப தங்க ஸ்பூன் என்ன, ஆனால் வைரத்திற்குச் சமமானவர் ஆகிவிடுகிறீர்கள். வைரத்தின் எதிரிலோ தங்கம் ஒன்றுமே இல்லை, வாழ்க்கையே வைரம் ஆகிவிடுகிறது. ஞானத்தின் மற்றும் குணங்களின் நகைகளால் அலங்கரிக்கப்பட்டவராக ஆகிவிடுகிறீர்கள். எதிர்காலத்தின் அலங்காரம் இந்த சங்கமயுகத்தின் அலங்காரத்தின் எதிரில் ஒரு பெரிய விஷயமாகவே அனுபவம் ஆகாது. அங்கோ தாசிகள் அலங்கரிப்பார்கள். மேலும் இங்கோ சுயம் ஞான வள்ளல் தந்தை அலங்கரிக்கிறார். அங்கு தங்கம் மற்றும் வைரத்தின் ஊஞ்சலில் ஆடுவீர்கள், மேலும் இங்கு பாப்தாதாவின் மடியில் ஆடுகிறீர்கள், அதீந்திரிய சுகம் என்ற ஊஞ்சலில் ஆடுகிறீர்கள். அப்படியானால் உயர்ந்த ஓவியமாக எது ஆனது? தற்சமயத்தினுடையதா அல்லது எதிர்காலத்தினுடையதா? எப்பொழுதுமே தன்னுடைய அந்த மாதிரி உயர்ந்த ஓவியத்தை எதிரில் வையுங்கள், இதைத் தான் ஞான சொரூப ஆத்மாவின் ஓவியம் என்று கூறுவது.

அப்படி பாப்தாதா அனைவரின் மூன்று காலங்களையும், ஒவ்வொருவரின் நடைமுறை ஓவியம் எவ்வளவு தயாராகி இருக்கிறது என்று பார்த்துக் கொண்டிருந்தார். அனைவரின் ஓவியம் தயாராகி விட்டதா? எப்பொழுது ஓவியம் தயாராகி விடுமோ அப்பொழுது தான் தரிசனம் செய்வதற்காக திறக்கப்படும். அப்படி சைத்தன்ய ஓவியம் தயாராக வேண்டும். அப்பொழுது நேரம் என்ற திரைச்சீலை திறக்கப்படும். எப்பொழுதும் சம்பூர்ண மூர்த்தியைத் தான் தரிசனம் செய்யப்படும். உடைந்த மூர்த்தியை தரிசணம் செய்வதில்லை. எந்தவிதமான குறை என்றால் உடைந்த மூர்த்தி என்பதாகும். தரிசனம் செய்விப்பதற்கு தகுதியானவராக ஆகியிருக்கிறீர்களா? தன்னைப் பற்றி யோசிக்கிறீர்களா அல்லது நேரத்தைப் பற்றி யோசிக்கிறீர்களா? தனக்குப் பின்னால் நேரமோ

நிழலாகும். தன்னையும் மறந்து விடுகிறீர்கள். எனவே மாஸ்டர் திரிகாலதரிசியாகி தன்னுடைய மூன்று காலங்களையும் தெரிந்து கொண்டு, தன்னை சம்பன்னமான வராக அதாவது தரிசனத்திற்குத் தகுதியான மூர்த்தியாக ஆக்குங்கள். புரிந்ததா.
நேரத்தை எண்ணிக்கொண்டிருக்காதீர்கள். தந்தையின் குணங்கள் மற்றும் தன்னுடைய குணங்களை எண்ணுங்கள். நினைவு நாளையோ கொண்டாடிக் கொண்டே இருக்கிறீர்கள் ஆனால் இப்பொழுது நினைவு சொரூப நாளைக் கொண்டாடுங்கள். இதே நினைவு நாளின் நினைவுச் சின்னமாக சாந்தி ஸ்தம்பம், தூய்மை ஸ்தம்பம், சக்தி ஸ்தம்பம் உருவாக்கியிருக்கிறீர்கள். அதுபோலவே தன்னை அனைத்து விஷயங்களின் ஸ்தம்பமாக யாரும் அசைக்க முடியாதபடி ஆக்குங்கள், தந்தையின் அன்பின் பாடலை மட்டும் பாடாதீர்கள், ஆனால் அனைவரும் உங்களுடைய பாடலைப் பாடும் அளவிற்கு தந்தைக்குச் சமமான அவ்யக்த நிலை சொரூபமாக ஆகுங்கள். பாடலையோ நன்றாகப் பாடுங்கள், ஆனால் யாருடைய பாடலைப் பாடுகிறீர்களோ அவரே உங்களுடைய பாடலைப் பாடும் அளவிற்கு உங்களை அந்த மாதிரி ஆக்குங்கள்.

இந்த நினைவு நாளன்று தந்தை அன்பின் நடைமுறை ரூபத்தைப் பார்க்க விரும்புகிறார். அன்பின் அடையாளம் தியாகம் ஆகும். தந்தை குழந்தைகளிடமிருந்து என்ன தியாகம் விரும்புகிறார் என்று அனைவரும் தெரிந்தும் இருக்கிறீர்கள். நடைமுறை சொரூபத்தில் தன்னுடைய பலஹீனங்களின் தியாகம். இந்த தியாகத்தின் பாடலை தந்தை மேல் உள்ள அன்பில் தியாகம் செய்தேன் என்று மனதால் பாடுங்கள். அன்பிற்காக தியாகம் செய்வது ஒன்றும் கடினமில்லை மற்றும் அசம்பவ விஷயமும் சம்பவமாக மற்றும் சுலபமாக அனுபவம் ஆகும். இப்பொழுதைய நினைவு நாளை சக்தி நாளின் ரூபத்தில் கொண்டாடுங்கள். நினைவு சொரூபத்திலிருந்து சக்தி சொரூபம். புரிந்ததா? அந்த நாளில் யார் யார் என்னென்ன தியாகம் மற்றும் எவ்வளவு சதவிகிதம் மற்றும் எந்த ரூபத்தில் செய்தார் என்று தந்தை விசேஷமாக பார்ப்பார். கட்டாயத்திலா அல்லது அன்பில் செய்தாரா, நியமப்படி செய்யாதீர்கள். நியமம் இருக்கிறது எனவே செய்தோம் அந்த மாதிரி கட்டாயத்தில் செய்யாதீர்கள். உள்ளப்பூர்வமான அன்போடு செய்வது தான் ஏற்றுக் கொள்ளப்படும். ஒருவேளை ஏற்றுக்

கொள்ளப்படவில்லை என்றால் வீணானது. எனவே கொக்கு போன்று பக்தனாக ஆகி, தனக்கு ஏமாற்றம் கொடுக்காதீர்கள் என்று கூறினோம். சத்திய தந்தையிடம் சத்தியம் தான் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மற்ற அனைத்தும் பாவக்கணக்கில் சேமிப்பாகிறதே அன்றி தந்தையின் கணக்கில் சேமிப்பாவது இல்லை. பாவக்கணக்கை முடித்து விட்டு தந்தையின் கணக்கில் நிரப்புங்கள். ஒவ்வொரு அடியிலும் பலகோடி மடங்கு வருமானம் செய்து பலகோடி மடங்கு அதிபதியாக ஆகுங்கள். நல்லது.

அந்த மாதிரி சமிக்ஞையால் புரிந்து கொள்ளக்கூடிய, நேரத்தை பற்றியன்றி தன்னைப் பற்றி யோசிக்கக்கூடிய தந்தை மேல் உள்ள அன்பில் ஒரு நொடியின் உறுதியான எண்ணத்தில் தியாகம் செய்யக்கூடிய, இரட்டை கிரீடம், இரட்டை ஆசனதாரி, ஞான சொரூப ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: ஏக்விரதா-வின் (ஒருவரைத் தவிர வேறு யாரும் இல்லை) இரகசியத்தைத் தெரிந்து வரமளிக்கும் வள்ளலை திருப்தி படுத்தக்கூடிய அனைத்து சித்தி சொரூபமானவர் ஆகுக!**

வரமளிக்கும் வள்ளல் தந்தையிடம் குறைவில்லா வரதானம் இருக்கிறது. யார் எவ்வளவு பெற விரும்புகிறாரோ அவரைப் பொறுத்தவரை திறந்த களஞ்சியமாக இருக்கிறது. அந்த மாதிரி திறந்த களஞ்சியத்தின் மூலம் அனேக குழந்தைகள் சம்பன்னம் ஆகிறார்கள். மேலும் சிலர் சக்திக்கு ஏற்றபடி சம்பன்னம் ஆகிறார்கள். அனைத்தையும் விட அதிகமாக பையை நிரப்பிக் கொடுப்பது போலாநாத் வரமளிக்கும் வள்ளலின் ரூபம் தான். அவரை திருப்திபடுத்துவதற்கான விதியை மட்டும் தெரிந்து கொண்டீர்கள் என்றால் அனைத்து சித்திகளும் பிராப்தி ஆகிவிடும். வரமளிக்கும் வள்ளலுக்கு ஏக்விரதா என்ற வார்த்தை மிகவும் பிடித்திருக்கிறது. கனவிலும் நினைவிலும் கூட இன்னொருவர் இருக்க வேண்டாம். எனக்கு இருப்பதோ ஒருவரைத் தவிர வேறு யாரும் இல்லை என்பது உள்உணர்வில் இருக்கட்டும். யார் இந்த இரகசியத்தைத் தெரிந்திருக்கிறாரோ அவருடைய பை வரதானங்களினால் நிரம்பியிருக்கும்.

**சுலோகன்: மனம் மற்றும் வாய்மொழி இரண்டின் மூலமாக சேவைகளைச் சேர்த்தே செய்தீர்கள் என்றால் இரட்டைப் பலன் பிராப்தி ஆகிக் கொண்டேயிருக்கும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 16.01.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# திருப்தியான ஆத்மா தான் அனேக ஆத்மாக்களின் இஷ்ட (தேவதை) ஆக முடியும்!

வரமளிக்கும் வள்ளல் தந்தை மூலமாக அனைத்து வரதானங்களைப் பெற்றுக் கொண்டே தந்தைக்குச் சமமாக வரமளிப்பவராக ஆகியிருக்கிறீர்களா? ஒன்று ஞான இரத்தினங்களின் மகாதானம், இரண்டாவது பலஹீனமான ஆத்மாக்களுக்காக தன்னுடைய சுத்த எண்ணம் மற்றும் நல்ல பாவனை மூலமாக சர்வ சக்திவானிடமிருந்து கிடைக்கப்பெற்ற சக்திகளின் வரமளிப்பது. ஞான செல்வத்தை தானம் செய்வதினால் ஆத்மா சுயமும் ஞான சொரூபம் ஆகிவிடுகிறது ஆனால் பலஹீனமான ஆத்மாக்களாக யார் இருக்கிறார்களோ அவர்கள் ஞானத்தை தாரணை செய்ய முடியாது, ஞான சொரூப ஆத்மாவாக ஆக முடியாது, தன்னுடைய முயற்சி மூலமாக உயர்ந்த பிராப்தியை உருவாக்க முடியாது - அந்த மாதிரி அன்பு, சகயோகம், நெருக்கம், பாவனையில் இருக்கக்கூடிய வரமளிக்கும் ஆத்மாக்கள் உங்கள் மூலமாக வரதானத்தின் ரூபத்தில் ஏதாவது விசேஷ சக்தியை பிராப்தி செய்து மிகக்குறைந்த பிராப்தியிலும் தன்னை பாக்கியசாலியாக அனுபவம் செய்வார்கள். அவர்களைத் தான் பிரஜை பதவியை அடையும் ஆத்மாக்கள் என்று கூறுவோம். அந்த மாதிரி ஆத்மாக்கள் நேரடியாக யோகா மூலமாக அல்லது தன்னுடைய அனைத்து தாரணைகள் மூலமாக, பாப்தாதா மூலம் அனைத்து சக்திகளை பிராப்தி செய்ய முடிவதில்லை ஆனால் பிராப்தி செய்திருக்கும் ஆத்மாக்கள் மூலமாக ஆத்மாக்களின் சகயோகத்தினால் ஏதாவது வரதானத்தை பிராப்தி செய்து விடுகிறது. சக்திகளை விசேஷமாக 'வரமளிப்பவரே' என்று கூறி அழைக்கிறார்கள். அப்படி இப்பொழுது கடைசி நேரத்தில் மகாதானியை விட அதிகமாக வரமளிக்கும் வள்ளல் ரூபத்தில் சேவை இருக்கும். தன்னுடைய கடைசி நிலை சக்திசாலியாக இருக்கும் காரணத்தினால், சம்பன்னமாக

இருக்கும் காரணத்தினால் அந்த மாதிரி பிரஜை ஆத்மாக்கள் குறைந்த நேரத்தில் குறைந்த பிராப்தியிலும் மிகவும் குஷியடைந்து விடுவார்கள். தன்னுடைய திருப்தியான நிலை இருக்கும் காரணத்தினால் அந்த ஆத்மாக்களும் விரைவில் திருப்தியாகி விடுவார்கள். மேலும் குஷியடைந்து அடிக்கடி மகான் ஆத்மாக்களை மகிமை பாடுவார்கள். "அதிசயம் தான்" என்ற இந்த ஓசை தான் நாலாபுறங்களில் இருந்து அனேக ஆத்மாக்களின் வாயிலிருந்து வெளியாகும். தந்தைக்கு நன்றி மற்றும் பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களுக்கு நன்றி, இதுவே பாடல் ரூபத்தில் நாலாபுறங்களிலும் ஒலிக்கும். பிராப்தியின் ஆதாரத்தில் ஒவ்வொரு ஆத்மாவும் உள்ளப் பூர்வமாக மகிமையின் மலர்களை மழையாய் பொழிவார்கள். இப்பொழுது அந்த மாதிரி வரம் அளிப்பவராக ஆவதற்காக விசேஷமாக ஒரு விஷயத்தின் கவனம் வைக்க வேண்டும். எப்பொழுதும் தன் மேலும் மற்றும் மற்றவர்கள் மேலும் திருப்தியாக இருக்க வேண்டும். திருப்தியான ஆத்மா தான் அனேக ஆத்மாக்களின் இஷ்டமாக (தேவதையாக) ஆக முடியும் மற்றும் அஷ்ட தேவதை ஆக முடியும். அனைத்தையும் விட மிகப் பெரிய குணம் என்று கூறினாலும் அல்லது தானம் என்று கூறினாலும் அல்லது விசேஷம் என்று கூறினாலும் அல்லது உயர்ந்தது என்று கூறினாலும் சரி அது திருப்தி மட்டும் தான். திருப்தியான ஆத்மா தான் பிரபுவிற்கு பிரியமானவராகவும், மக்களுக்கு பிரியமானவராகவும் மற்றும் தனக்கே பிரியமானவராகவும் இருப்பார். இந்த மூன்று விஷயங்கள் மூலம் திருப்தியான ஆத்மாவை பகுத்தறிந்து கொள்ளலாம். அந்த மாதிரி திருப்தியான ஆத்மா தான் வரமளிக்கும் வள்ளல் ரூபத்தில் பிரசித்தி ஆகும். எனவே நான் எவ்வளவு திருப்தியான ஆத்மாவிலிருந்து வரமளிக்கும் ஆத்மாவாக ஆகியிருக்கிறேன் என்று தன்னை சோதனை செய்யுங்கள். புரிந்ததா. நல்லது.

அந்த மாதிரி விஷ்வ கல்யாணகாரி (உலகிற்கு நன்மை செய்பவர்), மகா வரதானி (பெருங்கொடை வள்ளல்), ஒரு நொடியில் எண்ணம் மூலமாக அனுபவம் செய்விக்கக்கூடிய, அனைத்து சக்திகளின் பிரசாதத்தை துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு கொடுத்து பிரசன்னமாக ஆக்கக்கூடிய, அந்த மாதிரி சாட்சாத்காரம் செய்விக்கும், தரிசனத்திற்கு உரிய, சம்பன்னம் மற்றும் சமமான மூர்த்திக்கு, அனைவரின் உயர்ந்த

பாவனை, உயர்ந்த விருப்பங்களை நிறைவேற்றக்கூடிய ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 18.01.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# 18 ஜனவரியின் விசேஷ மகத்துவம்!

அனைவரும் நினைவு சொரூபம் அதாவது சக்தி நிறைந்த சொரூபத்தின் நிலையில் நிலைத்திருக்கிறீர்களா? இன்றைய நாள் விசேஷ ரூபத்தில் நினைவு சொரூபமாக ஆவதற்கான நாளாகும். பாப்தாதாவின் அன்பில் மூழ்கியிருந்து அதாவது தந்ரிக்குச் சமமாக ஆகக்கூடிய, அன்பின் அடையாளமாவது சமநிலை. அப்படி இன்று நாள் முழுவதும் நினைவு சொரூபம் அதாவது தன்னை தந்தைக்குச் சமமாக அனுபவம் செய்தீர்களா? பாப்தாதா மேல் இருக்கும் அன்பின் பிரதிபலனாக "தந்தைக்குச் சமமாக ஆகுக" என்ற வரதானத்தை அனுபவம் செய்தீர்களா? இன்றைய விசேஷ நாள் இயல்பாகவே மற்றும் சுலபமாக மற்றும் குறைந்த நேரத்திலேயே தந்தைக்குச் சமமான நிலையை அனுபவம் செய்வதற்கான நாளாகும். எப்படி அனைத்து யுகங்களிலும் சங்கமயுகம் சகஜ பிராப்திக்கான யுகம் என்று மகிமை செய்யப்படுகிறது, அதே போல் பிராமணர்களுக்காக சங்கமயுகத்திலும் கூட இந்த நாள் விசேஷமாக அனைத்து சக்திகளின் வரதானத்தை பிராப்தி செய்வதற்கான "தந்தைக்குச் சமமான" நிலையின் அனுபவம் செய்வதற்காக டிராமாவில் அடங்கியிருக்கிறது. விசேஷ நாளின் விசேஷ மகத்துவத்தைத் தெரிந்து மகான் ரூபத்தில் கொண்டாடினீர்களா? அமிர்தவேளையிலிருந்து பாப்தாதா விசேஷ அனுபவங்களின் பொன்னான வாய்ப்பின் லாட்டரியை திறந்திருக்கிறார். அந்த மாதிரி லாட்டரியை பெறுவதற்கான அதிகாரத்தை அனுபவம் செய்தீர்களா? அன்பு நிறைந்த, யோகம் நிறைந்த, சர்வ சக்தி நிறைந்த, அனைத்து விதமான இயற்கை மற்றும் மாயாவின் கவர்ச்சியிலிருந்து விடுபட்ட நிலையில் இருந்தீர்களா? இன்று பாப்தாதா குழந்தைகளின் முயற்சியின் ரிசல்ட்டைப் பார்த்தார். ரிசல்ட்டில் என்ன பார்த்தார் என்று தெரிந்திருக்கிறீர்களா?

அதிக குழந்தைகளை பாப்தாதாவின் தலையின் கிரீடத்தின் ரூபத்தில் பார்த்தோம், சில குழந்தைகளை கழுத்தின் மாலையின் ரூபத்தில்

பார்த்தோம். மேலும் சில குழந்கைளை புஜங்களின் அலங்காரத்தின் ரூபத்தில் பார்த்தோம். இப்பொழுது ஒவ்வொருவரும் "என்னுடைய ஸ்தானம் எங்கிருக்கிறது?" என்று தன்னிடம் கேளுங்கள். (எங்கு பாபா அமர வைப்பாரோ). பாபா அமர வைத்தாலும் ஆனால் நீங்கள் தான் அமர வேண்டும் இல்லையா. தந்தையின் கட்டளை மிகப் பெரியது. அதைத் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா. வெளிதேசத்தினராக இருப்பவர் சுயதேசத்தினராக எதில் இருப்பீர்கள்? அனைத்து வெளிதேசத்தினரும் கிரீடத்தில் வருவார்கள் என்றால் சுயதேசத்தினர் எங்கு செல்வார்கள்? கிரீடத்திலோ மிகக்குறைந்தவர்கள் தான் இருப்பார்கள். பெரும்பான்மையோர் கழுத்தின் மற்றும் புஜங்களின் அலங்காரமாக இருக்கிறார்கள். கிரீடதாரி என்றால் தந்தையின் கிரீடத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் இரத்தினம் அவருக்கு விசேஷ பூஜை நடக்கிறது. அவருடைய அடையாளமானது அவர் எப்பொழுதும் தந்தையில் நிரம்பியிருக்கும் மற்றும் சமமானவராக இருப்பார். அவருடைய ஒவ்வொரு வார்த்தை மற்றும் செயல் மூலம் எப்பொழுதும் மற்றும் இயல்பாக தந்தை பிரத்யக்ஷமாவார். அவருடைய நடத்தை மற்றும் முகத்தைப் பார்த்து அதிசயம் தான் தந்தை இவரை அந்த மாதிரி தகுதியானவராக ஆக்கியிருக்கிறார் என்று ஒவ்வொருவரின் வாயிலிருந்து இதே வார்த்தை தான் வெளியாகும். அவருடைய குணத்தைப் பார்த்து நிரந்தரமாக பாப்தாதாவின் குணத்தை அனைவரும் மகிமை செய்வார்கள். அவருடைய பார்வை அனைவரின் உள்உணர்வை மாற்றம் செய்யும். அந்த மாதிரி நிலை உள்ளவர்கள் தலையின் கிரீடம் என்று மகிமை பாடபப்படுகிறார்கள்.

கழுத்தின் அலங்காரம் என்றால் இரண்டாம் நம்பர். எப்பொழுதும் தன்னுடைய கழுத்தின் ஓசை மூலம் அதாவது வாய்மொழி மூலமாக தந்தையை பிரத்யக்ஷம் செய்வதின் முயற்சியில் இருக்கிறார்கள். எப்பொழுதும் பாப்தாதாவை தன் எதிரில் வைக்கிறார்கள் ஆனால் நிரம்பியிருப்பவர்களாக இருப்பதில்லை. சமமாக ஆவதின் பாவனை மற்றும் உயர்ந்த விருப்பங்கள் வைக்கிறார்கள் ஆனால் ஒவ்வொரு விதமான மாயாவின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் இருக்கிறார்கள். அந்த மாதிரியான நிலை உள்ளவர்கள் கழுத்தின் அலங்காரமாக உள்ளார்கள்.

மூன்றாவது தரத்தினரையோ சுலபமாகவே புரிந்து கொண்டிருப்பீர்கள். புஜங்களின் அடையாளம் சகயோகத்தினுடையது. இவர்கள் ஏதாவது விதமான மனதால், வார்த்தைகளால் மற்றும் காரியத்தினால் உடல், மனம் மற்றும் பொருளால் தந்தையின் காரியத்தில் சகயோகியாக இருக்கிறார்கள், ஆனால் எப்பொழுதும் யோகியாக இருப்பதில்லை. அந்த மாதிரியும் அனேக குழந்தைகள் இருக்கிறார்கள். பாப்தாதா ரிவைஸ் கோர்ஸ் (மீண்டும் நடக்கும் பாடம்) உடன் சேர்த்து ரியலைசேஷன் கோர்ஸையும் (உணரும் பாடத்தையும்) கொடுத்திருக்கிறார். இப்பொழுது வேறென்ன இருக்கிறது? வேறு ஏதாவது குறை இருக்கிறதா என்ன?

பற்றுதலை வென்று நினைவு சொரூபமானவர்களாக ஆகிவிட்டீர்களா அல்லது இப்பொழுது தான் ஆக வேண்டுமா? கடைசி விநாஷம் வரட்டும் என்று நின்று கொண்டிருக்கிறீர்களா என்ன? காத்திருக்கவோ இல்லையே. விநாஷத்திற்காக காத்திருப்பது என்றால் தன்னுடைய மரணத்தின் தேதியை நினைவு வைப்பது, தன்னுடைய மரணத்தை ஆவஹானம் செய்து கொண்டிருக்கிறீர்களா? விநாஷம் ஏன் ஏற்படவில்லை என்று எவ்வளவு எண்ணத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். எப்பொழுது ஆகும்? எப்படி ஆகும்? சங்கமயுகம் மங்களகரமான யுகமாக இருக்கிறதா அல்லது சத்யுகமா? பின்பு விநாஷம் ஏன் ஏற்படவில்லை. என்று ஏன் பயப்படுகிறீர்கள்? ஒருவேளை நீங்களே இந்தக் கேள்வியினால் பிரசன்னமாக இருக்கிறீர்கள் என்றால் மற்றவர்களையும் பிரசன்னமாக ஆக்கமுடியும். நீங்களே கேள்வியில் இருக்கிறீர்கள் என்றால் மற்றவர்களும் கேட்பார்கள். எனவே பயப்படாதீர்கள். யாராவது ஏன் விநாஷம் ஏற்படவில்லை என்று கேட்டால் உங்களுடைய காரணத்தினால் தான் ஏற்படவில்லை என்று அவர்களுக்கு இன்னும் கூறுங்கள். தந்தையுடன் சேர்த்து நாம் அனைவரும் விஷ்வ கல்யாணகாரி. உலகத்தின் நன்மையில் உங்களை மாதிரி மற்ற ஆத்மாக்களின் நன்மையும் தங்கியிருந்து விட்டது. எனவே இப்பொழுதும் வாய்ப்பு இருக்கிறது. என்ன நடக்கிறது என்றால் எப்பொழுது யாராவது கேள்வி கேட்டார்கள் என்றால் நீங்கள் "ஏன், என்ன" என்ற கேள்வியில் நீங்களே குழப்பம் அடைந்து விடுகிறீர்கள். ஆம் என்று கூறத்தான் செய்தோம், எழுதப்பட்டும் இருக்கிறது. நடந்திருக்க வேண்டும் தான். எனவே உங்களுக்கு மற்றவர்களை திருப்திப்படுத்த முடிவதில்லை. நன்மை செய்யும் தந்தையின் இந்த வார்த்தையிலும் நன்மை

அடங்கியிருக்கிறது என்று அனைவருக்கும் கூறுங்கள். அதை நாங்கள் தெரிந்திருக்கிறோம், வரும் நாட்களில் நீங்களும் தெரிந்து கொள்வீர்கள். பயப்படாதீர்கள். "என்ன கூறுவார்கள், எப்படி கூறுவார்கள்' என்று அப்படி யோசித்து ஒதுங்கி விடாதீர்கள். யாருக்கு கூறினீர்களோ அவர்களைக் கண்டு பயந்து ஒதுங்கிவிடாதீர்கள். என்ன செய்வீர்கள்? ஒருவேளை தவறான பிரச்சாரம் செய்தார்கள் என்றால் அந்த தவறான வார்த்தைகள் அனேகர்களை நல்லவராக ஆக்கிவிடும். பிரத்யக்ஷதாவின் சாதனமாக ஆகிவிடும். குழந்தைகளும் கேட்டுக் கொண்டே தான் இருக்கிறார்கள் என்றால் மக்களும் கேட்கிறார்கள் என்றால் அது என்ன பெரிய விஷயம். "இதைச் செய்யலாமா அல்லது செய்ய வேண்டாமா" என்று நினைக்கிறார்கள். குடும்பத்தை எப்படி நடத்துவது, விவகாரங்களை எப்படி செட் செய்வது, குழந்தைகளின் திருமணம் செய்யலாமா அல்லது வேண்டாமா, வீடு கட்டலாமா அல்லது வேண்டாமா? உண்மையில் இந்தக் கேள்விக்கும், விநாஷ தேதிக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை, ஒருவேளை சொத்து இருக்கிறது மேலும் கட்டுவதற்கான எண்ணம் இருக்கிறது என்றால் தனக்காக உபயோகப்படுத்தும் பாவனை இருக்கிறது என்று நிரூபணம் ஆகிறது. ஒருவேளை ஈஸ்வரிய சேவையில் ஈடுபடுத்தத் தான் வேண்டும் என்றால் வீடு கட்டுவது அல்லது அப்படியே சொத்தை வைத்துக் கொள்வது இதற்கான கேள்வியே எழாது ஆனால் தேவை இருக்கிறது, மேலும் வழிகாட்டுதலின் படி கட்டவும் செய்கிறார்கள் என்றால் அதைக் கட்டியது வீணாகச் செல்லாது ஆனால் சேமிப்பாகிவிடும். எனவே விநாஷத்தின் காரணமாக பயப்படுவதற்கான விஷயமே இல்லை. ஏனென்றால் ஸ்ரீமத்படி நடப்பது என்றால் காப்பீடு செய்வது. அவருக்கு அதற்கான பலன் கிடைத்தே விடும். மற்றபடி இருப்பது திருமணம் செய்விப்பதற்கான மற்றும் செய்து கொள்வதற்கான கேள்வியாகும். இதற்காகவோ எதுவரை தன்னை மற்றும் மற்ற ஆத்மாக்களை காப்பாற்ற முடியுமோ அதுவரை காப்பாற்றுங்கள் என்பது தான் முதலிலிருந்தே இருக்கும் டைரக்ஷன் ஆகும். ஒருவேளை விநாஷம் ஆகவில்லை என்றால் விநாஷத்தின் காரணமாகத் தான் தூய்மையாக இருந்தீர்களா என்ன? தூய்மையோ பிராமண ஜென்மத்தின் சுவதர்மம் ஆகும். தூய்மையாக இருப்பதின் எண்ணம் பிராமண ஜென்மத்தின் இலட்சியம் மற்றும் இலட்சணம் ஆகும். யாருடைய உண்மையான இலட்சணமே தூய்மையாக இருக்கிறது என்றால் அதற்கும் விநாஷத்தின் தேதிக்கும் எந்த தொடர்பும் இல்லை. இதுவும் தன்னுடைய பலஹீனத்தை

மறைப்பதற்கான சாக்கு போக்கு ஆகும். ஏனென்றால் பிராமணர்கள் சாக்கு போக்கு கூற அதிகம் தெரிந்திருக்கிறார்கள். நல்லது. மற்றவர்களுக்கு திருமணம் செய்விக்கும் விஷயத்தில் எவ்வளவு அவரைக் காப்பாற்ற முடியுமோ அவ்வளவு காட்பாற்றுங்கள். நீங்களே பலஹீனமானவராகி அவருக்கு உற்சாகம் ஊட்டாதீர்கள். இப்பொழுதோ செய்யத் தான் வேண்டும் என்ற எண்ணத்தைக் கூட மனதில் வைக்காதீர்கள். பத்து வருடங்கள் முன்பு கூட யாரைக் காப்பாற்ற முடியவில்லை என்றால் அவருக்கு என்ன செய்வீர்கள். பார்வையாளராகி எண்ணத்திலும் வார்த்தையிலும் கூட காப்பாற்றுவதற்கு முயற்சி செய்தீர்கள், அதே போல இப்பொழுதும் இதே விதமாக திடமாக இருங்கள். மற்றபடி யாருக்கு விழவே தான் வேண்டும் என்றால் அவரை என்ன தான் செய்ய முடியும். விநாஷத்தின் காரணமாக நீங்கள் குழப்பத்தில் வராதீர்கள். உங்களுடைய குழப்பம், அஞ்ஞானிகளையும் குழப்பத்தில் கொண்டு வரும். நீங்கள் ஆடாமல் இருங்கள். பயமின்றி உடனடியாக பதில் கூறுங்கள். பின்பு அவர்கள், அவர்களாகவே வாயடைத்துப் போய் விடுவார்கள். ஒன்றும் பேச முடியாது. நீங்கள் நிச்சயபுத்தியோடு எண்ண அளவில் கூட சந்தேகபுத்தி உடையவராக ஆகாதீர்கள். இராயல் ரூபத்தின் சந்தேகமானது "அந்த மாதிரி நடக்கத்தான் வேண்டும்", ஆனால் பாபா ஏன் அப்படி கூறினார் என்று தெரியவில்லை. முன்பாகவே பாப்தாதா கூறிவிடுகிறார், நீங்கள் எதிரில் எப்படி செல்வீர்கள். இந்த இராயல் ரூபத்தின் சந்தேகம் உலகத்தினரையும் சந்தேகபுத்தி உடையவராக ஆவதற்கு காரணமாக ஆகிவிடும். "ஆம்" கூறினார் தான், "இப்பொழுதும் கூறுவார்" இதே நிச்சயம் மற்றும் போதையில் இருந்தீர்கள் என்றால் உங்களுடைய நிச்சயத்திற்கு நன்றி என்று நமஸ்காரம் செய்ய வருவார்கள். புரிந்ததா. பயப்படாதீர்கள். ஜெயிலில் செல்வதற்கு பயப்படுகிறீர்களா என்ன? பயப்படாதீர்கள். எதிர்கொள்வதற்கான சக்தி இல்லை. என்னென்ன கூறினாரோ அதில் நன்மை இருந்தது. இப்பொழுதும் இருக்கிறது என்ற இதைத் தான் கூறுங்கள். இப்பொழுதும் கூறுகி றாம் ஒருவேளை அவருக்கு ஈஸ்வரிய போதை மற்றும் இரமணீகரத்துடன் கூறினீர்கள் என்றால் அவர்கள் இன்னும் சிரிப்பார்கள் ஆனால் முதலில் நீங்கள் உறுதியானவர் ஆகுங்கள். புரிந்ததா.

இன்று அனைவரின் எண்ணம் வந்து சேர்ந்தது. 18-ம் தேதியன்று என்ன கூறுவார் என்று அனைவரினுடைய எதிர்பார்த்தலும் இருந்தது.

# 1977 அவ்யக்த முரளி

இப்பொழுது கேட்டீர்களா? பாப்தாதா உடன் இருக்கிறார். யாரும் எதுவும் செய்ய முடியாது, கூற முடியாது, எரிந்து கொண்டிருக்கும் அடுப்பிலும் பூனைக் குட்டிகள் பாதுகாப்பாக இருந்தன, இதுவோ ஒன்றும் இல்லை. முடியைக் கூட தொட முடியாது. சாதாரணமானவர் துணையாக இல்லை. சர்வ சக்திவானின் துணை இருக்கிறது. எனவே நிச்சயபுத்தி உடையவர் வெற்றி அடைகிறார்.

தேதியைக் கூறுவதற்கான அவசியமே இல்லை. ஒருபொழுதும் இறுதி விநாஷத்திற்கான தேதியை நிர்ணயம் செய்ய முடியாது. ஒருவேளை தேதி நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் அனைத்து பதவிகளும் நிர்ணயம் செய்யப்பட்டு விடும், பின்போ கௌரவமாகத் தேர்ச்சி பெறுபவர்களின் நீளமான வரிசையாகிவிடும். எனவே தேதியைப் பற்றி கவலையின்றி இருங்கள். எப்பொழுதும் அனைவரும் கவலையில்லாதவராக ஆகிவிடுவீர்களோ பின்பு தேதி வந்தே விடும். எப்பொழுது அனைவரும் இந்த எண்ணத்திலிருந்து முற்றிலும் எண்ணமற்றவர்களாக ஆகிவிடுவீர்களோ அதே தேதி தான் விநாஷத்திற்கானதாக இருக்கும், நல்லது.

அந்த மாதிரி ஆடாத அசையாத, துண்டுபடாத, எப்பொழுதும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் உயர்ந்த நிலையில் ஆடாமல், அனைத்து குணங்கள் மற்றும் அனைத்து சக்திகளின் தூண் சொரூப ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: தன்னுடைய ஆதி, அனாதி சொரூபத்தின் நினைவு மூலமாக அனைத்து பந்தனங்களை முடிக்கக் கூடிய பந்தனத்திலிருந்து விடுபட்ட சுதந்திரமானவர் ஆகுக!**

ஆத்மாவின் ஆதி அனாதி சொரூபம் சுதந்திரம் ஆகும். எஜமானன் ஆவீர்கள். இதுவோ பிற்காலத்தில் சார்ந்தவர்களாக இருப்பது ஆனது. எனவே தன்னுடைய ஆதி மற்றும் அனாதி சொரூபத்தை நினைவில் வைத்து பந்தனத்திலிருந்து விடுபட்டவர் ஆகுக. மனதின் பந்தனமும் இருக்க வேண்டாம். ஒருவேளை மனதின் பந்தனமும் இருக்கிறது என்றால் அந்த பந்தனம் மற்ற பந்தனங்களைக் கொண்டு வரும். பந்தனத்திலிருந்து விடுபட்டவர் என்றால் இராஜா, சுயராஜ்ய அதிகாரி.

அந்த மாதிரி பந்தனத்திலிருந்து விடுபட்ட சுதந்திர ஆத்மாக்கள் தான் பாஸ் வித் ஆனர் ஆவார்கள். அதாவது முதல் டிவிஷனில் வருவார்கள்.

**சுலோகன்: மாஸ்டர் துக்கத்தை நீக்குபவராகி, துக்கங்களையும் ஆன்மீக சுகத்தில் மாற்றம் செய்வது தான் உண்மையான சேவை ஆகும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 23.01.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நுண்ணிய நிலை தான் மஹான் நிலை ஆகும்!

இந்திரபிரஸ்தின் இந்திரசபை என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இந்திரன் என்றால் எப்பொழுதும் ஞான மழை பொழிபவர், முட்கள் நிறைந்த காட்டில் பசுமையை கொண்டு வருபவர். அந்த மாதிரியான இந்திர சபை இதைத் தான் பரிகளின் (தேவதூதர்கள்) சபை அதாவது எப்பொழுதும் பறக்கக்கூடியவர்களின் சபை என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. பரிகளின் இறக்கை மிகவும் பிரசித்தியானது. இந்திரபிரஸ்தில் பரிகளைத் தவிர வேறு யாரும் வசிக்கமுடியாது. யார் தன்னை ஆத்மா என்று புரிந்து கொள்ளாமல் உடல் என்று நினைக்கிறார்களோ அவர்கள் தான் மனிதர்கள். அப்படி தேக அபிமானம் உள்ளவர் இந்திரபிரஸ்தில் வசிக்க முடியாது. இந்திரபிரஸ்தின் வசிப்பவர்களுக்கு தேக அபிமானத்தில் இருக்கும் மனிதர்களின் துர்நாற்றம் உடனே அனுபவம் ஆகி விடும். அந்த மாதிரி இந்திரபிரஸ்தின் வாசியாக மனிதர்களின் துர்நாற்றம் அதாவது தேகத்தின் துர்நாற்றத்திலிருந்தும் தூரமாக இருப்பவராக, தன்னை இந்திரசபையின் பரிகள் என்று நினைக்கிறீர்களா? ஞானம் மற்றும் யோகாவின் இறக்கைகள் உறுதியாக இருக்கின்றனவா? ஒருவேளை இறக்கை உறுதியாக இல்லை என்றால் பறக்க விரும்பினாலும் கூட அடிக்கடி கீழே வந்து விடுவார்கள். தேக அபிமானம் மற்றும் தேகத்தின் பழைய உலகம், பழைய சம்மந்தங்களிலிருந்து எப்பொழுதும் மேலே பறந்து கொண்டே இருக்கிறீர்களா அதாவது இதைவிட்டு விலகிய உயர்ந்த நிலையில் நிலைத்திருக்கிறீர்களா? கொஞ்சமாவது தேக அபிமானம் அதாவது மனிதத்தன்மையின் துர்நாற்றம் இல்லையே? தேக அபிமானம் உள்ளவர் இந்திரபிரஸ்த வாசியாக ஆக முடியாது. தேக அபிமானம் மிகவும் மோசமான துர்நாற்றம் என்று அப்படி அனுபவம் ஆகிறதா? எப்படி துர்நாற்றத்திலிருந்து விலகி விடுவார்கள் மற்றும் அதை அகற்றுவதற்காக ஏதாவது வழியைப் பயன்படுத்துவார்கள். அதே போல் தேக அபிமானத்தை அகற்றுவதற்கான சாதனத்தை

உபயோகிக்கிறீர்களா? இது சாதாரண சபை இல்லை, இது தெய்வீக சபை, பரிஷ்தாக்களின் சபை ஆகும். தன்னை பரிஷ்தா என்று அனுபவம் செய்கிறீர்களா? ஒரு நொடியில் இந்த உடலின் உலகத்திலிருந்து விலகி தன்னுடைய உண்மையான நிலையில் நிலைத்திருக்க முடியுமா? இந்த டிரில் செய்யத் தெரியுமா? எப்பொழுது விரும்புகிறீர்களோ, எங்கே விரும்புகிறீர்களோ, எவ்வளவு நேரம் விரும்புகிறீர்களோ அந்த மாதிரியான நிலை இருக்க முடியுமா?

இன்று அமிர்தவேளையில் பாப்தாதா குழந்தைகளின் டிரில்லைப் பார்த்துக் கொண்டிருந்தார். அதில் என்ன பார்த்தார்? டிரில் செய்வதற்காக நேரத்தின் விசில் ஊதியவுடன் வருபவர்கள் வரிசைக்கிரமமாக வந்து கொண்டிருந்தார்கள். வந்து சேருபவர்கள் அதிகமாக இருந்தார்கள் ஆனால் மூன்று விதமான குழந்தைகளைப் பார்த்தோம். ஒன்று - நேரத்தை கழிப்பவர்கள், இரண்டாவது நியமத்தைக் கடைபிடிப்பவர், மூன்றாவது அன்பைப் பெறுபவர்கள் மற்றும் கொடுப்பவர்கள். ஒவ்வொருவர்களின் தோற்றம் அவரவர்களுடையதாக இருந்தது. புத்தியை மேலே கொண்டு செல்பவர்கள் தந்தைக்குச் சமமானவராகி, தந்தையுடன் சந்திப்பவர்கள் குறைவாக இருந்தார்கள். ஆன்மீக டிரில் செய்பவர்கள் டிரில் செய்ய விரும்பினார்கள் ஆனால் செய்ய முடியாமல் இருந்தார்கள். காரணம் என்னவாக இருக்கும்? எப்படி இன்றைய நாட்களில் உடல் பயிற்சி செய்வதற்கும் கூட மெல்லியவராக இருக்கும் நிலை தேவையாக இருக்கிறது. பருமனாக இருக்கக்கூடாது. பருமனாக இருப்பதும் சுமையாக இருக்கும். அதே போல் ஆன்மீக டிரில்லிலும் கூட அப்படி விதவிதமான சுமை உள்ளவர்கள் அதாவது பருமனான புத்தி உள்ளவர்கள் பலவிதமானவர்கள் இருந்தார்கள். எப்படி பருமனான உடல் கூட வகை வகையாக இருக்கும். அதே போல் ஆத்மாக்களின் சுமை நிறைந்த தோற்றமும் வகை வகையாக இருந்தது. ஒருவேளை ஆன்மீக கேமிரா மூலமாக ஃபோட்டோ எடுத்தோம் அல்லது கண்ணாடி மாளிகையில் இந்த வித விதமான தோற்றத்தைப் பார்த்தீர்கள் என்றால் மிகுந்த சிரிப்பு வரும். எப்படி உங்களுடைய உலகத்தில் வகை வகையான போஸ்கள் அடங்கிய மிகவும் நகைச்சுவை நிறைந்த காட்சிகளாக நாடகத்தில் காண்பிக்கிறார்கள். அதே போல் அங்கேயும் அதிகமாக சிரிப்பார்கள் இல்லையா? சிரிப்பூட்டும் காட்சிகளைப் பார்ப்பீர்களா? அந்த மாதிரியும் அதிகமானவர்கள் இருந்தார்கள். பருமனான நிலை

காரணமாக தன்னை வளைக்க விரும்பினாலும் வளைக்க முடியாமல் இருந்தார்கள். மேலே செல்வதற்குப் பதிலாக அடிக்கடி கீழே வந்து விடுவார்கள். விதை ரூப நிலையை அனுபவம் செய்வதற்கு பதிலாக விஸ்தாரம் என்ற மரத்தின் அதாவது அனேக எண்ணங்களின் மரத்தில் குழப்பம் அடைந்து விடுகிறார்கள்.

பருமனான புத்தி உள்ளவர்களின் போஸைக் கூறிக் கொண்டிருக்கிறோம். ஆன்மீக உரையாடல் செய்ய அமருகிறார்கள் ஆனால் ஆன்மீக உரையாடலுக்குப் பதிலாக தன்னுடைய மற்றும் பிற ஆத்மாக்களின் புகார்களின் முழு ஃபைலையும் (கோப்பையும் திறந்து அமர்ந்து விடுகிறார்கள். முன்னேறும் கலையின் அனுபவம் செய்வதற்காக அமருகிறார்கள் ஆனால் பாப்தாதாவிற்கு சாக்குபோக்கின் கலைகளை அதிகமாகக் காண்பிக்கிறார்கள். பாப்தாதாவின் எதிரில் சுமையை இறக்கி வைக்க வருகிறார்கள் ஆனால் சுமையை இறக்குவதற்குப் பதிலாக தந்தையின் ஸ்ரீமத்படி நடக்காத காரணத்தினால் அனேக விதமான அலட்சியம் செய்யும் நிலையின் சுமையை தன் மேல் ஏற்றிக் கொண்டே இருக்கிறார்கள். அந்த மாதிரி அனேக விதமான சுமையுள்ள, மிகவும் சுமையான ஆத்மாக்களின் காட்சிகளைப் பார்த்தோம்.

நியமத்தைக் கடைப்பிடிக்கும் ஆத்மாக்களின் காட்சியும் மிகவும் சிரிப்பிற்குரியதாக இருக்கிறது. அது என்ன என்று தெரியுமா? தந்தையின் எதிரில் மகிமை செய்வதற்குப் பதிலாக, தந்தை மூலமாக அனைத்து சக்திகளைப் பிராப்தி செய்வதற்குப் பதிலாக தூக்கத்தின் போதையின் பிராப்தி அதிகமாக கவருகிறது. பாதி போதையும் இருக்கிறது. நேரத்தின் முடிவுக்கான காத்திருத்தல் இருக்கிறது. தந்தையோடு முழு ஈடுபாட்டிற்குப் பதிலாக அரைத் தூக்கத்தின் போதையின் ஈடுபாடு அதிகமாக இருக்கிறது. இவை அனைத்தின் காரணம் என்ன? ஆத்மாவின் சுமையான நிலை அதாவது பருமன். எப்படி இன்றைய நாட்களில் டாக்டர்கள் பருமனைக் குறைக்கச் சொல்கிறார்கள். எடையைக் குறைக்கச் செய்கிறார்கள். மெல்லியவர்களாக ஆக்குகிறார்கள், அதே போல பிராமணர்களுக்கும் ஆத்மா மேல் என்ன எடை மற்றும் சுமை இருக்கிறதோ அதாவது பருமனான புத்தி இருக்கிறதோ, அந்த சுமையை அகற்றி நுண்ணிய புத்தியாக ஆக்குங்கள்.

தற்சமயம் இந்த விசேஷ பரிவர்த்தனை தான் வேண்டும். அப்பொழுது தான் இந்திரபிரஸ்தின் பரிகளாக ஆவீர்கள்.

பருமனைக் குறைப்பதற்கான உயர்ந்த சாதனம் எது? உணவு விஷயத்தில் பத்தியம் மற்றும் உடற்பயிற்சி. பத்தியத்திலும் கூட அளவு நிர்ணயம் செய்யப்படுகிறது. அதே போல் இங்கேயும் புத்தி மூலமாக அடிக்கடி அசரீரி நிலையின் பயிற்சி செய்யுங்கள். மேலும் புத்திக்கான உணவு எண்ணமாகும். அதில் பத்தியம் வையுங்கள். எந்த நேரம் எந்த எண்ணம் என்ற உணவை சுவீகாரம் செய்ய வேண்டுமோ அந்த நேரம் அதையே சுவீகாரம் செய்யுங்கள். வீணான எண்ணம் என்ற அதிகப்படியான உணவு இருக்க வேண்டாம். அப்படி வீணான எண்ணங்களின் உணவின் பத்தியம் இருக்கட்டும். பத்தியத்தைக் கடைபிடிப்பதற்காக சுயக்கட்டுப்பாடு வேண்டும். இல்லையென்றால் பத்தியத்தை முழுமையான ரூபத்தில் கடைப்பிடிக்க முடியாது. சுயக்கட்டுப்பாடு என்றால் எந்த நேரம் எப்படி விரும்புகிறீர்களோ அங்கே புத்தி ஈடுபட வேண்டும். அப்பொழுது தான் நுண்ணிய புத்தி உடையவராக ஆவீர்கள். நுண்ணியம் தான் மகான் நிலையாகும். எப்படி உடலைப் பொறுத்தவரை மெல்லியதாக இருப்பது தான் பெர்சனாலிட்டி, அதே போல் புத்தியின் நுண்ணியத் தன்மை மற்றும் ஆத்மாவின் மெல்லிய அதாவது லேசான நிலை பிராமண வாழ்க்கையின் பெர்சனாலிட்டி ஆகும். அப்படியானால் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? அனேக விதமான பருமனை அகற்றுங்கள். பருமனின் விஸ்தாரத்தைப் பின்பு கூறுவோம். சுமையின் அனேக விதங்களின் விஸ்தாரத்தையும் பின்பு கூறுவோம். அப்படி இன்றைய பயிற்சிக்கான செய்தியாக என்ன இருந்தது? சுமையின் பருமன். இதை அகற்றுவதற்காகவே லட்சியம் வைத்து தன்னை பரிஷ்தா அதாவது மெல்லிய / லேசானவராக ஆக்குங்கள். நல்லது.

அந்த மாதிரி இந்திரபிரஸ்தத்தின் பரிகளுக்கு, நொடியில் இந்த உலகை விட்டு விலகி பரலோக வாசியாக ஆகக்கூடிய, எப்பொழுதும் தந்தைக்குச் சமமானவராகி தந்தையோடு சந்திப்பை செய்யக்கூடிய நுண்ணிய புத்தி உடைய அதாவது மகான் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்டிகளுடன்**: இந்த நேரம் மேலே, அடுத்த நேரம் கீழே என்று இந்த அளவு எக்ஸசைஸ் செய்வதற்கான பயிற்சி இருக்கிறதா? யாருக்கு

பயிற்சி இருப்பதில்லையோ அவர்களுக்கு கடினமாகத் தான் செய்ய முடியும். ஆன்மீக எக்ஸசைஸ் செய்வதற்கான அனுபவிகளாக இருக்கிறீர்களா? ஒருநொடியில் விதை ரூப நிலையில் நிலைத்து விடுங்கள் என்று இப்பொழுது டைரக்ஷன் கிடைக்கிறது. எப்படி, டைரக்ஷன் கொடுத்தவுடன் ஒரு நொடியில் செய்கிறார்கள் இல்லையா, அதே போலவே உயர்ந்ததிலும் உயர்ந்த நிலையில் நிலைத்து விடுங்கள் என்று டைரக்ஷன் கிடைத்தால் நிலைத்திருக்க முடியுமா அல்லது நேரம் எடுக்குமா? ஒருவேளை ஆசிரியர் கையை உயரே தூக்குங்கள் என்று கூறுகிறார். மேலும் கையை உயரே தூக்கவில்லை என்றால் ஆசிரியர் என்ன கூறுவார்? வரிசையிலிருந்து வெளியே வந்து விடு என்று தான் கூறுவார். வரிசையிலிருந்து வெளியேற்றி விடுவார்கள் தான் இல்லையா? அப்படி இங்கேயும் வெளியேற்ற வேண்டியதில்லை ஆனால் தானாகவே தீவிர முயற்சியாளரின் வரிசையிலிருந்து வெளி வந்து விடுகிறார்கள். முயற்சி செய்பவர்களின் வரிசையில் வந்து விடுவார்கள். ஒருவேளை மேடையில் நல்ல உடற்பயிற்சியைக் காண்பிக்க வேண்டும் என்றால் திறமை நிறைந்த குரூப்பாக எது இருக்குமோ அது தான் மேடையில் வரும் இல்லையா? இதற்காக ஃபர்ஸ்ட் ப்ரைஸ் (முதல் பரிசு வெற்றி அடையக்கூடிய குரூப் தேவையாக இருக்கிறது. அப்படி ஃபர்ஸ்ட் (முதல்) என்றால் ஃபாஸ்ட் (வேகமாக முயற்சியாளர். ஒருவேளை ஃபாஸ்ட் முயற்சியாளர் இல்லையென்றால் ஃபர்ஸ்ட் இல்லை. இரண்டாம் குரூப்பாக ஆகிவிட்டது. யார் பருமனாக இருப்பாரோ அவரால் வேகமாகச் செல்ல முடியாது. எந்த விதமான சுமையோ பருமனோ இருக்க வேண்டாம். நிரந்தர யோகா செய்ய முடியவில்லை என்றால் இதற்கான அர்த்தம் சுமை, பருமன் இருக்கிறது என்பதாகும். சுமை கீழே கொண்டு வந்து விடும். கீழே கொண்டு வருவதே சுமை இருக்கிறது என்று நிரூபிக்கிறது. தேக உணர்வு கீழே கொண்டு வருகிறது. எப்படி தந்தை உயர்ந்ததிலும் உயர்ந்தவர் அவருடைய நிவாச ஸ்தானமும் உயர்ந்ததிலும் உயர்ந்தது. அவருடைய காரியம் மற்றும் குணம் உயர்ந்ததிலும் உயர்ந்தது என்றால் உங்கள் அனைவரின் வசிக்குமிடம், குணம் மற்றும் காரியம் உயர்ந்ததிலும் உயர்ந்தது தான் இல்லையா? தந்தைக்குச் சமமானவர்கள் தான் இல்லையா? உயர்ந்த நிவாச ஸ்தானத்தைச் சேர்ந்தவர். உயர்ந்த குணம் மற்றும் காரியம் செய்பவர் கீழே எப்படி வர முடியும்? வரக்கூடாது ஆனால் வந்து விடுகிறார்கள். அப்படியானால் அவரை முதலாவது முயற்சியாளர் என்று கூறுவோமா அல்லது இரண்டாவதா? இலட்சியமோ

# 1977 அவ்யக்த முரளி

ஃபர்ஸ்ட் கிளாசிற்கானது ஆனால இலட்சணம் இரண்டாவதினுடையது அப்படியானால் இது எப்படி முடியும்? அமர வேண்டும் ஃபர்ஸ்ட் கிளாசில் ஆனால் டிக்கெட் கியிருக்கிறார் செகண்ட் கிளாசிற்கு, பிறகு ப்படி ஃபர்ஸ்ட் கிளாசில் அமர முடியும்?

மாதர்களும், கன்னிகைகளுமோ விசேஷமான அதிர்ஷ்டசாலிகள், ஏனென்றால் இவர்கள் மிகவும் ஏழையானவர்கள். தந்தையையோ ஏழைப் பங்காளன் என்று மகிமை செய்யப்பட்டிருக்கிறது. செல்வந்தர்களுக்கானவர் இல்லை. அப்படி ஏழை விரைவில் பதவியை அடைய முடியும். செல்வந்தர் அடைய முடியாது. அதிர்ஷ்டம் நிறைந்தவர் ஏழை தான். அப்படி குமாரிகளும், மாதர்களும் அதிர்ஷ்டசாலிகள். இவர்கள் சங்கமயுகத்தில் குமாரியாகவும், மாதாவாகவும் ஆகியிருக்கிறார்கள். சரித்திரத்திலும் கோபி வல்லபருடன், கோபிகைகளைத் தான் மகிமை செய்யப்பட்டிருக்கிறது, கோபர்களுக்கு குறைவாகவே இருக்கிறது. அப்படி கோபி (பெண்) உடலில் இருக்கிறீர்கள் என்றால் அதிர்ஷ்டசாலிகள் தான். சங்கமயுகத்தில் "முதலில் பெண்கள்" என்பது தந்தையின் கோஷமாகும். சுயம் பிரம்மாபாபாவும் மாதர்களிடம் சமர்ப்பணம் செய்தார். பிரம்மாபாபாவிற்கும் மாதா குரு என்று கூறியிருந்தோம் இல்லையா? அப்படி இந்த அளவு அதிர்ஷ்டம் நிறைந்தவர் நீங்கள். இந்த அளவு தன்னுடைய அதிர்ஷ்டத்தைத் தெரிந்திருக்கிறீர்களா மற்றும் ஏற்று நடந்து கொண்டிருக்கிறீர்களா? ஒன்று தெரிந்து கொள்வது, இன்னொன்று ஏற்றுக் கொள்வது மற்றும் நடப்பது. மாதர்களின் பதவியும் குறைந்தது அல்ல. நீங்கள் அந்த மாதிரியான மாதர்கள், யாருக்கு சிவபாபாவுடன் பங்கிருக்கிறது. இந்த அளவு போதை இருக்கிறதா? இந்த அளவு குஷி இருக்கிறதா? இந்த நிலையில் இருந்தீர்கள் என்றால் குஷியில் பறந்து கொண்டே இருப்பீர்கள். பரிகள் எப்பொழுதும் பறந்து கொண்டே இருப்பார்கள். அப்படி நீங்களும் அந்த மாதிரி சங்கமயுகத்தின் பரிகள், யார் தந்தையுடன் அவ்யக்த வதனம் மற்றும் மூல வதனத்தில் பறந்து கொண்டே இருக்கிறீர்கள். பறப்பது என்றால் தியானத்தில் செல்வது அல்ல, ஆனால் புத்தி என்ற விமானத்தினால் எப்பொழுதும் பறந்து கொண்டே இருங்கள். புத்தி என்ற விமானம் மிகப் பெரியது. புத்தி மூலமாக எப்பொழுது விரும்புகிறீர்களோ, எங்கே செல்ல விரும்புகிறீர்களோ அங்கு சென்றடைந்து விடுங்கள். பருமனான புத்தியால் செல்ல முடியாது

ஆனால் நுட்பமான புத்தி மூலமாகச் செல்ல முடியும். அப்படியானால் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? முற்றிலும் இந்த உலகத்தின் பற்றுதலிலிருந்து விலகிய நிலையில் இருக்க வேண்டும். அதே மாதிரியான முயற்சி தான் இருக்கிறது இல்லையா? இந்த உலகத்தில் என்ன தான் இருக்கிறது? சாரமற்ற உலகத்தில் நமக்கு என்ன வேலை இருக்கிறது. அப்படியானால் பின்பு ஏன் செல்கிறீர்கள்? எங்கு நமக்கு ஒரு வேலையும் இல்லையோ அங்கு செல்வது இருக்குமா என்ன? எனவே இப்பொழுது புத்தி மூலமாக செல்வதை முடிவு கட்டுங்கள். எப்பொழுது பிராப்தி எதுவும் இல்லை, எந்த லாபமும் இல்லை என்றால் ஏன் புத்தி செல்கிறது? நேரம் வீணாகும் இல்லையா? பிறகு திருப்பி வர வேண்டியதாக இருக்கும். திருப்பி வருவதிலும் நேரம் மற்றும் சக்தி வீணாகும். ஏன் வீணாக்குகிறீர்கள்? இப்பொழுதோ 21 ஜென்மங்களுக்காக மிகக்குறைந்த நேரத்தில் சேமிக்க வேண்டும். அப்படியானால் கிடைத்திருக்கும் இந்த கொஞ்ச நேரத்தையும் வீணாக்க வேண்டுமா என்ன? ஒரு விநாடி வீணாக்குவது என்றால் ஒரு ஜென்மத்தின் பிராப்தியை வீணாக்குவது. இந்த அளவு மகத்துவம் சங்கமயுக நேரத்திற்கு இருக்கிறது. நல்லது, எப்பொழுதும் குஷியிலோ இருக்கிறீர்கள் தான் இல்லையா? எப்பொழுதாவது அழுவதோ இல்லையே. ஒன்று கண்களால் நீர் வடிப்பது மற்றும் இன்னொன்று மனதால் நீர் வடிப்பது, அப்படி மனதின் நீரும் வரக்கூடாது. மனதில் துக்க உணர்வுகள் வருவது என்றால் மனதில் நீர் வடிப்பது ஆகும். இரண்டு விதமான நீரையும் வடிக்கக்கூடாது. அழுவதிலிருந்து விடுபட வேண்டும். இப்பொழுது யார் அழுகிறார்களோ அவர்கள் இழக்கிறார்கள், யார் சிரிக்கிறார்களோ அவர்கள் அடைகிறார்கள். எனவே ஒருபொழுதும் தவறாகக் கூட துக்கமான உலகத்தைப் பார்க்கக்கூடாது. அனுபவிகள் எப்பொழுதாவது ஏமாற்றம் அடைவார்களா என்ன? ஏமாற்றம் அடைந்து விட்டார்கள் என்றால், பின்பு ஏமாற்றம் அடைவாரா? பிறகு துக்கமான உலகத்தில் ஏன் செல்கிறீர்கள்? ஒரு தடவை குழியில் விழுந்தவர், இன்னொரு தடவை விழுவாரா என்ன? இந்தக் குழியோ முற்றிலும் கொடூரமான நரகம் ஆகும். இதில் விழுவதற்கான எண்ணமோ கனவில் கூட வரக்கூடாது. அப்படி மாதர்கள் பல கோடி மடங்கு பாக்கியம் நிறைந்தவர்கள். தந்தையோ அதே உயர்ந்த பார்வையில் பார்க்கிறார். சௌபாக்கியசாலியாக அல்ல. பலகோடி மடங்கு பாக்கியசாலியாக பார்க்கிறார். சௌபாக்கியசாலி ஆவதோ சாதாரண விஷயம் ஆகும்

ஆனால் பல கோடி மடங்கு பாக்கியசாலி ஆக வேண்டும். எப்பொழுதும் குஷியாக இருங்கள். தந்தையின் பொக்கிஷங்களை நினைவு செய்து கொண்டே எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் நிறைந்திருங்கள். இந்தளவு பொக்கிஷம் முழுக்கல்பத்தில் எந்த ஜென்மத்திலும் கிடைக்காது. அப்படியானால் எவ்வளவு குஷியில் பறக்க வேண்டும். பரிகள் கீழே வருவதில்லை. மேலே பறந்து கொண்டேயிருக்கும். எப்பொழுதும் ஒருவரின் அன்பிலேயே மூழ்கியிருப்பவர்கள் தான் இல்லைய லயா? ஒரு தந்தையைத் தவிர வேறு எந்தவொரு ஈடுபாடும் கிடையாது. ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை, தவறுதலாகக்கூட இன்னொரு பக்கம் புத்தி செல்லக்கூடாது. அனைத்து தொடர்புகளைத் துண்டித்து ஒருவருடன் தொடர்பை இணைத்துக் கொள்ள வேண்டும் என்பது தந்தையின் டைரக்ஷன் ஆகும். எப்பொழுதும் மனதிலிருந்து "ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை" என்ற ஆலாபனை தான் வெளியாகிக் கொண்டிருக்க வேண்டும். இதைத் தான் இடைவிடாது ஜெபிப்பது என்று கூறுவது. ஒருவர் இன்னொருவரை விட முன்னுக்குச் செல்ல வேண்டும். யாரைப் பார்த்தாலும் அவர் நம்பர் ஒன் என்று தென்பட வேண்டும். அனைவரும் நம்பர் ஒன் ஆக வேண்டும் என்பது தான் அனைத்து குழந்தைகளுக்காக தந்தையின் விருப்பம் ஆகும். நம்பர் ஒன் என்றால் எப்பொழுதும் வெற்றி அடைபவர். வெற்றி இரத்தினங்கள் தோல்வி அடைபவர்களாக இல்லாமல், தோற்கடிப்பவர்களாக இருப்பார்கள். சக்தி என்றால் பாவத்தை வென்றவர். நல்லது.

**வரதானம்: பகுத்தறியும் மற்றும் நிர்ணயம் செய்யும் சக்தி மூலமாக சேவையில் வெற்றியடைக் கூடிய வெற்றி மூர்த்தி ஆகுக!**

யார் பகுத்தறியும் சக்தி மூலமாக தந்தையை, தன்னைத் தானே, நேரத்தை, பிராமண பரிவாரத்தை மற்றும் தன்னுடைய உயர்ந்த காரியத்தை அறிந்து பின்பு என்ன ஆக வேண்டும், மேலும் என்ன செய்ய வேண்டும் என்று நிர்ணயம் செய்கிறார்களோ அவர்கள் தான் சேவை செய்கிறார்கள், காரியம் மற்றும் உறவு நெருக்கத்தில் வந்து எப்பொழுதும் வெற்றியை அடைகிறார்கள். எண்ணம், சொல், செயல் மூலமாக அனைத்து விதமான சேவையில் வெற்றிமூர்த்தி ஆவதற்கான ஆதாரம் பகுத்தறியும் மற்றும் நிர்ணயம் செய்யும் சக்தி ஆகும்.

**சுலோகன்: ஞானம், யோகத்தின் லைட், மைட் மூலம் சம்பன்னம் ஆனீர்கள் என்றால் எந்தவொரு சூழ்நிலையையும் ஒரு நொடியில் கடந்து விடுவீர்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 26.01.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உள்நோக்குப் பார்வை மூலமாக சூட்சும சக்திகளின் லீலைகளின் அனுபவம்!

தன்னுடைய உண்மையான அமைதியின் சக்தியை மிக நன்றாகத் தெரிந்து கொண்டீர்களா? எப்படி வாய்மொழி சக்தியின், காரிய சக்தியின் விளைவுகள் பிரத்யக்ஷமாகத் தென்படுகிறதோ, அதே போல் அனைவரிடமிருந்து சக்திசாலியான அமைதியின் சக்தியின் வெளிப்பாட்டை பார்த்திருக்கிறீர்களா, அனுபவம் செய்திருக்கிறீர்களா? எப்படி வார்த்தைகள் மூலம் எந்த ஒரு ஆத்மாவையும் பரிவர்த்தனை செய்ய முடியும். அதே போல் அமைதியின் சக்தியின் மூலமாக அதாவது மனதின் சக்தி மூலமாக எந்தவொரு ஆத்மாவின் உள்உணர்வு, பார்வையை மாற்றியதற்கான அனுபவம் இருக்கிறதா? வார்த்தைகள் மூலமாகவோ எதிரில் யார் இருப்பாரோ அவரைத் தான் பரிவர்த்தனை செய்ய முடியும், ஆனால் மனசக்தி மூலமாக மற்றும் அமைதியின் சக்தி மூலமாக ஸ்தூலமாக எவ்வளவு தான் தூரமாக இருக்கும் ஆத்மாவானாலும், அவருக்கு எதிரிலேயே இருப்பதன் அனுபவத்தை செய்விக்க முடியும். எப்படி அறிவியல் இயந்திரங்கள் மூலமாக தூரத்தின் காட்சிகளை எதிரிலேயே அனுபவம் செய்கிறீர்களோ, அதே போல் அமைதியின் சக்தியின் மூலமாகவும் தூரம் அகன்று எதிரிலிருப்பதான அனுபவத்தை நீங்களும் செய்வீர்கள் மற்றும் பிற ஆத்மாக்களும் செய்வார்கள், இதைத் தான் யோக பலம் என்று கூறுவது ஆனால் எப்படி அறிவியலின் சாதனத்தின் இயந்திரமோ எப்பொழுது கனெக்ஷன் மெயின் ஸ்டேஷனோடு இருக்குமோ அப்பொழுது தான் வேலை செய்யும், அதே போல் அமைதியின் சக்தி மூலமாக எப்பொழுது பாப்தாதாவுடன் நிரந்தர தெளிவான கனெக்ஷன் இருக்குமோ அப்பொழுது தான் அனுபவம் செய்ய முடியும். அங்கு கனெக்ஷன் மட்டும் இருக்கிறது, ஆனால் இங்கு கனெக்ஷன் அதாவது அரிலேஷன் (உறவு) அனைத்தும் தெளிவாக அனுபவம் ஆகும். அப்பொழுது தான் மனசக்தியின் பிரத்யக்ஷ வெளிப்பாட்டைப் பார்க்க முடியும்.

# 1977 அவ்யக்த முரளி

இதுவரையிலும் மனசக்தி மூலமாக ஆத்மாக்களை அழைத்து மாற்றம் செய்வதற்கான இந்த சூட்சும சேவையை மிகக் குறைவாகச் செய்கிறீர்கள். எப்பொழுது ஆத்மீக சக்தியுள்ள, செமிப்யூர் (அரைகுறை தூய்மையான) ஆத்மாக்கள் தங்களுடைய சாதனா மூலமாக ஆத்மாக்களை ஆவாஹனம் செய்ய முடிகிறது, அற்ப காலத்து சாதனங்கள் மூலமாக தூரத்தில் அமர்ந்திருக்கும் ஆத்மாக்களுக்கு அதிசயத்தை காண்பித்து தன் பக்கம் கவர்ந்திழுக்க முடிகிறது என்றால் பரமாத்ம சக்தி, அதாவது அனைத்தையும் விட உயர்ந்த சக்தி என்ன தான் செய்ய முடியாது? இதற்காக விசேஷமாக ஏகாக்ரதா (ஒருமுகப்பட்டநிலை) தேவையாக இருக்கிறது. எண்ணங்களிலும் ஏகாக்ரதா, மனநிலையிலும் ஏகாக்ரதா. ஏகாக்ரதாவின் ஆதாரம் உள்நோக்குப் பார்வையுடைய நிலை. உள்நோக்குப் பார்வை இருப்பதினால் உள்ளுக்குள்ளேயே மிக அதிக விசித்திர அனுபவம் செய்வீர்கள். எப்படி தெய்வீகப் பார்வையில் சூட்சும வதனம், சூட்சும படைப்பு அதாவது சூட்சும உலகத்தின் அனேக விசித்திர லீலைகளைப் பார்க்கிறீர்கள், அதே போல் அந்தர்முக்தா மூலமாக சூட்சும சக்திகளின் லீலைகளை அனுபவம் செய்வீர்கள். ஆத்மாக்களை வரவழைப்பது, ஆத்மாக்களுடன் ஆன்மீக உரையாடல் செய்வது, ஆத்மாக்களின் சம்ஸ்காரம், சுபாவத்தை மாற்றம் செய்வது, ஆத்மாக்களின் தந்தையோடு கனெக்ஷனை இணைப்பது அந்த மாதிரி ஆன்மீக லீலையின் அனுபவம் செய்ய முடியுமா? பிராப்தியில்லாத ஆத்மாக்களுக்கு, அமைதியற்ற துக்கமான நோயுற்ற ஆத்மாக்களுக்கு தூரத்தில் அமர்ந்து கொண்டே அமைதி, சக்தி, நோயற்ற நிலைக்கான வரதானத்தைக் கொடுக்க முடியுமா? எப்படி சக்திகளின் ஜடச்சிலைகளின் வரதானம் கொடுப்பதற்கான ஸ்தூல ரூபங்களாக கைகளைக் காண்பித்திருக்கிறார்கள், கைகளையும் ஒருமுகப்பட்ட நிலையில் காண்பிக்கிறார்கள். வரதானம் கொடுப்பது போன்று கைகளைக் காண்பிக்கிறார்கள். பார்வை மற்றும் எண்ணத்தின் ஒருமுகப்பாட்டைத் தான் அப்படி காண்பிக்கிறார்கள், அந்த மாதிரி சைத்தன்ய ரூபத்தில் ஒருமுகப்பாட்டு சக்தியை அதிகரித்தீர்கள் என்றால் ஆத்மாக்களுக்கு, உலகத்தில் ஆன்மீக சேவை நடக்கும். ஆன்மீக உலகம் மூலவதனம் அல்ல ஆனால் ஆத்மா, ஆத்மாவை வரவழைத்து ஆன்மீக சேவை செய்ய வேண்டும். இந்த ஆன்மீக லீலையின் அனுபவம் செய்யுங்கள். இந்த ஆன்மீக சேவையை அதிக வேகத்தில் செய்ய முடியும். வாய்மொழி மற்றும் காரியத்தின் சேவையில் என்னுடையது - உன்னுடையது என்ற

மோதல் ஏற்படுகிறது. பெயர், புகழ், மரியாதைக்கான மோதல் ஏற்படுகிறது. சுபாவம், சம்ஸ்காரங்களின் மோதல் ஏற்படுகிறது. நேரம் மற்றும் பணத்தின் செலவு ஆகிறது. இதே விதமாக என்னென்ன தடைகள் ஏற்படுகிறதோ அந்த அனைத்து தடைகளும் முடிவடைந்து விடும். ஆன்மீக சேவை செய்வதற்கான ஒரு சம்ஸ்காரம் வாகிவிடும். இதே சம்ஸ்காரத்திலு நிலைத்திருப்பீர்கள். இந்த வருடம் இந்த சக்திசாலியான சேவையையும் தொடங்குங்கள். எந்தெந்த ஆத்மாக்கள் வாய்மொழி மூலமாக மற்றும் நடைமுறை வாழ்க்கையின் பிரபாவம் மூலமாக நெருக்கத்தில் வந்திருக்கிறார்கள் மற்றும் நெருக்கத்தில் வருபவர்களாக இருக்கிறார்கள், அந்த ஆத்மாக்களுக்கு ஆன்மீக சக்தியின் அனுபவம் செய்வியுங்கள். கடின உழைப்பின் அனுபவம், மகான் நிலையின் அனுபவம் செய்வித்திருக்கிறீர்கள். இப்பொழுது கடின உழைப்பு மற்றும் மகான் நிலையின் கூடவே ஆன்மீக நிலையின் அனுபவத்தையும் செய்வியுங்கள். மூன்று விஷயங்களின் அனுபவம் இருக்கட்டும்.

இந்த சிவராத்திரியில் அந்த மாதிரி ஸ்தூலமான மற்றும் சூட்சுமமான நிலையை உருவாக்குங்கள் அதன் மூலம் வரக்கூடிய ஆத்மாக்களுக்கு உங்களுடைய சொரூபத்தின் மூலம் ஆத்மா மற்றும் ஆன்மீகத்தின் அனுபவம் ஆகட்டும். வார்த்தைகள் மூலமாக வார்த்தைகளிலிருந்து விலகிச் செல்வதற்கான அனுபவம் ஆகட்டும். அந்த மாதிரி நெருக்கத்தில் வரும் ஆத்மாக்களுக்கு விசேஷ நிகழ்ச்சியை வையுங்கள். சொற்பொழிவு மட்டும் நிகழ்த்த வேண்டும் என்றில்லாமல் அனுபவமும் செய்விக்க வேண்டும் என்ற லட்சியத்தை வையுங்கள். சின்னச்சின்ன குழுவாக உருவாக்கினாலும் சரி, ஆனால் ஆன்மீகம் மற்றும் ஆத்மீக தந்தையின் உறவு மற்றும் அனுபவத்தில் அருகில் கொண்டு வாருங்கள். கொஞ்சம் புதுமையாகச் செய்யுங்கள். ஸ்தானம் மற்றும் ஸ்திதி (நிலை) இரண்டின் மூலமாக தூரத்திலிருந்தே ஆன்மீகத்தின் ஈர்ப்பு இருக்கட்டும். பொதுவாக செய்தி கொடுப்பதின் விஷயம் வேறாகும். அதைச் செய்ய வேண்டும். நன்றாகச் செய்யுங்கள் ஆனால் இதையும் அவசியம் செய்யுங்கள். இதற்காக பொறுப்பாளராக ஆகியிருக்கும் ஆத்மாக்களுக்கு அதாவது சேவைக்குத் தகுதியான ஆத்மாக்களுக்கு விசேஷமாக அந்த நாள் ஒருமுகப்பட்ட நிலையின், உள்நோக்குமுகத்தின் விரதத்தை வைக்க வேண்டியதாக இருக்கும். இந்த விரதத்தினால் உள்உணர்வுகளை பரிவர்த்தனை (மாற்றம்) செய்வீர்கள். எப்படி பக்தர்கள் ஸ்தூல

உணவிற்கான விரதம் வைக்கிறார்கள் என்றால். சேவைக்குத் தகுதியான ஞானம் நிறைந்த ஆத்மாக்களுக்கு வீணான எண்ணம், வீணான வார்த்தை மற்றும் வீணான செயலின் குழப்பத்திலிருந்து விடுபட்டு ஒருமுனைப்பட்ட அதாவது ஆன்மீக நிலையில் இருப்பதற்கான விரதத்தைக் கடைபிடிக்க வேண்டியதாக இருக்கும். அப்பொழுது தான் ஆத்மாக்களுக்கு ஞான சூரியனின் அதிசயத்தைக் காண்பிக்க முடியும். ஏதாவது ஆன்மீகத் திட்டத்தை உருவாக்குங்கள். எப்படி பக்தியில் அகர்பத்தியின் நறுமணம் தூரத்திலிருந்தே கவர்ந்திழுக்கிறது. அதே போல் ஒருமுகப்பட்ட நிலையின் சக்தி தூரத்திலிருந்தே கவர்ந்திழுக்கும். இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா? தொடர்பில் இருப்பவர்களை சம்மந்தத்தில் கொண்டு வாருங்கள். அனுபவங்கள் மூலமாக அந்த விசேஷ ஆத்மாக்களை செய்தியை பரப்புவதற்கான பொறுப்பாளர் ஆக்குங்கள். நல்லது.

அந்த மாதிரி ஆன்மீகத்தில் ஒருமுகப்பட்ட நிலையை அனுபவம் செய்விக்கக்கூடிய, ஒவ்வொரு எண்ணம் மற்றும் ஒவ்வொரு விநாடி ஆன்மீக சேவையில் ஈடுபட்டிருக்கக்கூடிய, ஆத்மாக்களுக்கு அனுபவங்கள் மூலமாக ஆறுதல் கொடுக்கக்கூடிய அந்த மாதிரி ஆன்மீக சேவாதாரிகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தீதிஜியுடன்**: சாகார ரூபத்தில் ஒருமுனைப்டாட்டின் சக்தியின் ஏதாவது பிரத்யக்ஷ நிரூபணத்தைப் பார்த்திருக்கிறீர்களா? தூரத்தில் அமர்ந்திருக்கும் குழந்தைகள் நடைமுறையில் இன்று விசேஷ ரூபத்தில் பாப்தாதா என்னை நினைவு செய்தார் மற்றும் விசேஷ ரூபத்தில் எனக்கு சக்தியின் பிராப்தியின் அனுபவம் செய்விக்கிறார் என்று அனுபவம் செய்தார்கள். எண்ணம் மற்றும் விஷயங்கள் இரண்டு பக்கங்களிலும் இணைந்திருந்தது. அந்த மாதிரி நடைமுறை அனுபவத்தை பார்த்திருக்கிறீர்கள் இல்லையா. எப்படி தொலைபேசி மூலமாக ஏதாவது செய்தி கிடைக்க வேண்டும் என்று இருக்கிறது என்றால் மணி ஒலிக்கிறது. அதே போல் தந்தையின் செய்தி அல்லது எண்ணத்தின் டைரக்ஷன் குழந்தைகளுக்கு எப்பொழுது சென்றடைகிறது என்றால் உள்ளுக்குள்ளேயே ஆத்மாவில் திடீரென்று குஷியின் உணர்வலைகளில் புல்லரித்துப்போய் விடுகிறது ஆனால் எப்படி மணி ஒலிக்கும் போது

யாராவது கேட்காமல் இருந்து விட்டால் செய்தியைப் பெற முடியாது. அதே போல் குழந்தைகளுக்கு அவசியம் அனுபவம் ஆகிறது, ஆனால் அலட்சியத்தில் தவறவிட்டு விடுகிறார்கள். ஒருமுனைப்பாட்டின் சக்தியின் லீலையைப் பிடிக்க முடிவதில்லை ஆனால் அவசியம் அனுபவம் ஆகிறது. அப்படி ஆத்மாக்களுக்கும், ஆத்மாக்களின் அனுபவம் ஆகிறது, ஆனால் எப்படி தொலைபேசி கம்பிகளில் பிரச்சனை வந்து விடுகிறது, தொலைபேசி கம்பங்களில் பிரச்சனை வந்து விடுகிறது என்றால் செய்தியைக் கேட்க முடியாது. அங்கு சுற்றுப்புறச் சூழல் மற்றும் வாயுமண்டலத்தின் பிரபாவம் இருக்கிறது. இங்கு உள்உணர்வின் பிரபாவம் இருக்கிறது. உள்உணர்வு சஞ்சலமாக இருப்பதினால் செய்தியை புத்தியால் பிடிக்க முடிவதில்லை. எனவே இந்த வருடத்தில் ஒருமுகமான உறுதியான எண்ணம் வைக்கும் மற்றும் விசித்திர அனுபவம் செய்ய முடியும் குழு தயாராக வேண்டும். இது தான் கடலின் ஆழத்தில் சென்று அனுபவத்தின் முத்துக்கள், வைரங்களை எடுப்பது மற்றும் அது ஞானக்கடலின் அலைகளில் மிதப்பதற்கான அனுபவம் செய்வது. அலைகளில் இருக்கிறீர்கள் இதையோ அனுபவம் செய்திருக்கிறீர்கள். இப்பொழுது உள்ளே ஆழத்தில் செல்ல. வேண்டும். விலைமதிப்பற்ற பொக்கிஷங்கள் ஆழத்தில் கிடைக்கும். இந்த விஷயத்தை உறுதி செய்வதினால் மற்ற அனைத்து விஷயங்களிலிருந்தும் இயல்பாகவே ஒதுங்கி விடுவீர்கள். இதைத் தான் சுயசிந்தனை, சுயதர்ஷணம் மற்றும் சக்திசாலியான சேவை என்று கூறப்படுவது. இது லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவுசின் நிலை ஆகும். பின்பு திருஷ்டியின் தானம் கொடுக்க வேண்டியதாக இருக்கும். பார்வையாலேயே நன்மை செய்யும் நிலை இதுவாகும். ஒருமுனைப்பாட்டின் சக்தி மிகுந்த விசித்திர வண்ணங்களைக் காண்பிக்க முடியும். அந்த சித்தர்கள் கூட ஒருமுனைப்பாட்டின் மூலமாகத் தான் சித்தியை பிராப்தி செய்கிறார்கள். தன்னுடைய வைத்தியத்தையும் ஒருமுகப்படுத்தும் சக்தி மூலமாகச் செய்ய முடியும். அனேக நோயாளிகளை நோயற்றவர்களாக ஆக்க முடியும், மிகுந்த விசித்திர அனுபவத்தை இதன் மூலம் செய்ய முடியும். யாராவது சென்று கொண்டிருக்கும் ஒரு பொருளை நிறுத்தினார் என்றால் இதுவும் மன ஒரு நிலையின் சித்தி ஆகும். நில் என்று சொன்னவுடன் நின்று விட வேண்டும். அப்பொழுது தான் வரதானி ரூபத்தில் வெற்றி முழக்கம் ஒலிக்கும். இப்பொழுது பாராட்டுக்களின் முழக்கம் ஒலிக்கிறது. நன்றாகச்

சொற்பொழிவு ஆற்றினார். மிகுந்த உழைப்பு செய்திருந்தார், இவருடைய வாழ்க்கை மிகவும் நல்லது என்று பாராட்டுக்களின் முழக்கம் ஒலிக்கிறது. பின்பு வெற்றி முழக்கம் ஒலிக்கும். அப்படி இந்த வருடத்தில் அடைய வேண்டிய நோக்கத்தை புரிந்து கொண்டீர்கள் இல்லையா. இரட்டை சேவை தேவையாக இருக்கிறது. அமிர்தவேளையில் இந்த விசேஷ சேவையைச் செய்ய முடியும். பின்பு பக்தர்களின் குரலையும் கேட்க முடியும். யாரோ நேரெதிரில் அழைப்பது போல் நினைப்பீர்கள். இந்த சக்தியை அதிகரிக்க வேண்டும். எவ்வளவு நேரம் கிடைக்கிறதோ, இரண்டு நிமிடம், ஐந்து நிமிடம் கிடைத்தாலும் இந்த ஒருமுகநிலையின் சக்தியில் சென்று விடுங்கள். அப்படி கொஞ்சம் கொஞ்சமாகச் செய்தும் அதிகம் சேர்ந்து விடும். அப்பொழுது தான் சக்திகள் மூலமாக சர்வ சக்திவானின் பிரத்யக்ஷம் ஆகும். சக்திகளின் சம்பூர்ண நிலை குருடர்களின் எதிரில் கண்ணாடியின் காரியம் செய்யும். சம்பூர்ண நிலையின் ஆண்டு என்றால் இந்த சம்பூர்ண நிலையை அடைவதாகும். நல்லது.

✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲

# 28.01.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிராமணர்களின் தர்மம் மற்றும் கர்மம்!

தன்னை பிரம்மா வாய்வழி ஞானம் கேட்டு பிறந்த பிராமணன் என்று நினைக்கிறீர்கள் தான் இல்லையா? பிராமணர்களின் தர்மம் மற்றும் கர்மம் என்ன என்று, தெரிந்திருக்கிறீர்களா? தர்மம் என்றால் முக்கிய தாரணை ஆகும். அது சம்பூர்ண தூய்மை ஆகும். சம்பூர்ண தூய்மையின் விளக்கத்தைத் தெரிந்திருக்கிறீர்களா? எண்ணம் மற்றும் கனவிலும் கூட தூய்மையின்மையின் அம்சம் மாத்திரம் கூட இல்லாமல் இருப்பது, அந்த மாதிரி உயர்ந்த தாரணை செய்பவர் தான் உண்மையான பிராமணன் என்று கூறப்படுகிறார். இந்த தாரணையின் மகிமையாகத் தான் "உயிரே சென்றாலும் தர்மத்தை விடக் கூடாது' என்ற வர்ணனை இருக்கிறது. அந்த மாதிரி தைரியம் உள்ள, அந்த மாதிரி திட நிச்சயம் செய்பவராக தன்னை நினைக்கிறீர்களா? எந்த விதமான சூழ்நிலையிலும் தன்னுடைய தர்மம் அதாவது தாரணைக்காக எதையாவது தியாகம் செய்ய வேண்டியதிருக்கிறது, சகித்துக் கொள்ள வேண்டியதிருக்கிறது, எதிர்கொள்ள வேண்டியதிருக்கிறது, துணிச்சல் வைக்க வேண்டியதிருக்கிறது என்றால் மிகவும் குஷியோடு செய்வீர்களா? பின்னடைய மாட்டீர்களே? பயப்பட மாட்டீர்களே?

தியாகத்தை தியாகம் என்று நினைக்காமல் பாக்கியம் என்று அனுபவம் செய்வதைத் தான் உண்மையான தியாகம் என்று கூறுவது. ஒருவேளை எண்ணத்தில் வார்த்தையிலும் நான் இந்த தியாகம் செய்தேன் என்ற இந்த பாவனையான வார்த்தைகள் வெளியாகிறது என்றால் அதற்கான பாக்கியம் உருவாவதில்லை. எப்படி பக்தி மார்க்கத்தில் எப்பொழுது பலி கொடுக்கிறார்களோ அப்பொழுது பலி கொடுக்கப்படும். மிருகம் கொஞ்சம் கத்துகிறது அல்லது கதறுகிறது என்றால் கூட அதை மகாபிரசாதம் என்று ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது, அதன் பிறகு அதை பலியாக கருதமாட்டார்கள். இதுவும் தற்போதைய நிகழ்வின் ஞாபகார்த்தமாக நடந்து கொண்டிருக்கிறது. ஒருவேளை தியாகம்

செய்வதுடன் நான் தியாகம் செய்தேன், என்ற எண்ணம் எழுகிறது, பெயர், புகழ், மரியாதை வந்தது என்றால் அது தியாகம் இல்லை, அதை பாக்கியம் என்று கூற மாட்டோம். அந்த மாதிரி தாரணை செய்பவரைத் தான் உண்மையான பிராமணன் என்று கூறுவது.

பிராமணர்கள் மூலமாக யக்ஞத்தைப் படைக்கிறீர்கள். இந்த மகாயக்ஞத்தில் பழைய உலகின் ஆகுதி விழுந்த பிறகு யக்ஞம் முடிவடைய வேண்டும். எனவே பழைய உலகம் ஆகுதியாக விழுவதற்கு முன்பு பொறுப்பாளர் ஆகியிருக்கும் பிராமணர்கள் தன்னுடைய பழைய வீணான எண்ணம் மற்றும் தீய எண்ணம் அதைத் தான் எண்ணங்களின் படைப்பு என்று கூறப்படுகிறது, இந்த பழைய எண்ணங்களின் படைப்பை பழைய சுபாவம், சம்ஸ்காரம் என்ற படைப்பை மகா யக்ஞத்தில் சுவாஹா செய்திருக்கிறீர்களா? ஒருவேளை தன்னுடைய எல்லைக்குட்பட்ட படைப்பை சுவாஹா செய்யவில்லை தன்னிடமிருக்கும் ஒவ்வொன்றையும் ஆகுதியாகப் போடவில்லை என்றால் எல்லைக்கப்பாற்பட்ட பழைய உலகத்தின் ஆகுதி எப்படி விழும். யக்ஞத்தின் முடிவிற்கான ஆதாரம் ஒவ்வொரு பிராமணனும் பொறுப்பாளராக இருக்கிறார். எனவே தானம் செய்யும் நற்காரியத்தை முதலில் தனது வீட்டில் ஆரம்பிக்க வேண்டும் என்பது இருக்க வேண்டும். எனவே ஆகுதி போட்டிருக்கிறேனா என்று தனது மனதிற்குள் சோதனை செய்யுங்கள். சம்பூர்ண இறுதி ஆகுதி என்னவென்று தெரியுமா? எப்படி ஆத்ம ஞானி ஆத்மா, பரமாத்மாவுடன் ஒன்றரக் கலந்து விடுவது தான் ஆத்மாவின் சம்பூர்ண நிலை என்று நம்புகிறார்கள். இந்த இறுதி ஆகுதியின் சொரூபம் நான், எனது என்பது முடிந்து விட வேண்டும். பாபா, பாபா என்று தான் இருக்க வேண்டும். வார்த்தைகள் வாய் மூலம் மற்றும் மனதிலிருந்து வெளியாக வேண்டும் அதாவது தந்தையில் நிரம்பி விட வேண்டும். இதைத் தான் கலந்து விடுவது அதாவது சமமாகி விடுவது என்பதாகும். இதையே தான் இறுதி ஆகுதி என்று கூறுவது. எண்ணம், கனவிலும் கூட தேக உணர்வின் நான், என்னுடையது என்பது இருக்க வேண்டாம். அனாதி, ஆத்மீக சொரூபத்தின் நினைவிருக்கட்டும். பாபா-பாபா என்று முடிவில்லாத ஓசை இருக்கட்டும். ஆதி பிராமண சொரூபத்தில் தர்மம் மற்றும் கர்மத்தில் தாரணை இருக்க வேண்டும். இவரைத் தான் உண்மையான பிராமணன் என்று கூறுவது.

அந்த மாதிரி உண்மையான பிராமணர்கள் தான் யக்ஞத்தின் முடிவிற்கு பொறுப்பாளர் ஆகிறார்கள். யக்ஞத்தை படைப்பவர்களாகவோ ஆகி இருக்கிறீர்கள், இப்பொழுது முடிவிற்கும் பொறுப்பாளர் ஆகுங்கள், அதாவது தன்னுடைய இறுதி ஆகுதியைப் போடுங்கள். அப்படி எல்லைக்கப்பாற்பட்ட பழைய உலகின் ஆகுதியும் விழுந்தே விடும். இப்பொழுது என்ன செய்ய வேண்டுமென்று புரிந்ததா. சம்பூர்ணம் ஆவதற்காக இது தான் சகஜ சாதனம் ஆகும். சம்பூர்ண ஆகுதி கொடுக்க வேண்டும். இதைத் தான் சம்பூர்ண சுவாஹா என்று கூறுவது. அப்படியானால் சுவாஹா ஆகிவிட்டதா அல்லது இனி தான் ஆக வேண்டுமா? இறுதி ஆகுதி இறுதி நேரத்தில் தான் போட வேண்டுமா என்ன? எப்பொழுது நீங்களே போடுவீர்களோ அப்பொழுது தான் மற்றவர்களைப் போட வைக்க முடியும். செய்வோம் என்று அப்படி நினைக்காமல் இப்பொழுது செய்தே தான் ஆக வேண்டும். எப்படிக் கேட்பதற்காக சாதகப்பறவை மாதிரி இருக்கிறீர்கள், அவரை சந்திப்பதற்காக நம்முடைய வாய்ப்பு முதலில் வர வேண்டும் என்று திட்டங்களைப் போடுகிறீர்கள். எனவே யார் இந்த மாதிரி யோசிக்கிறார்களோ அவர்கள் அழிப்பதற்காகவும் முதல் வாய்ப்பை எடுத்துக் கொள்ளுங்கள். செய்வதில் முதல் வாய்ப்பை எடுத்துக் கொள்ளுங்கள். நல்லது.

அந்த மாதிரி சம்பூர்ண சுவாஹா ஆகக்கூடிய, சம்பூர்ண ஆகுதி போடக்கூடிய, தன்னுடைய மாற்றம் மூலமாக உலக மாற்றத்திற்கான பொறுப்பாளர் ஆகக்கூடிய, உண்மையான பிராமணர்களுக்கு, தந்தைக்குச் சமமான சம்பூர்ண பிராமணர்களுக்கு மிக உயர்ந்த தர்மம் மற்றும் கர்மத்தில் நிலைத்திருக்கக்கூடிய பிராமணர்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 29.01.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மதுபனின் மகிமை -மதுபன் நிவாசிகளுடன்!

அனைவரும் எப்பொழுதும் குஷியாக இருக்கிறீர்கள் தான் இல்லையா? யார் மூன்று காலங்களின் இரகசியத்தைத் தெரிந்து கொண்டார் என்றால் திருப்தியாகி விட்டார்கள் தான் இல்லையா? எப்பொழுதாவது யாராவது கோடப்படுகிறார் (நாராஜ்) என்றால் நாடகத்தின் இரகசியத்தை (ராஜை) மறந்து விடுகிறார். யார் எப்பொழுதும் நாடகத்தின் இரகசியத்தை மற்றும் மூன்று காலங்களையும் தெரிந்திருக்கிறார் என்றால் அவர் திருப்தியாக (ராஜியாக) இருப்பார் தான் இல்லையா? கோபப்படுவதற்கான காரணம் இரகசியத்தை தெரியாதது. மூன்று காலங்களின் ஞானம் தெரிந்தவராக ஆகுபவரைத்தான் திரிகாலதரிசி என்று கூறுவது அவர் எப்பொழுதும் திருப்தியாக மற்றும் குஷியாக இருக்கிறார்.

மதுபன் நிவாசி என்றால் எப்பொழுதும் குஷி மற்றும் திருப்தியாக இருப்பவர். மற்றவர்களுடன் கோடப்படுவது என்றால் தன்னை இரகசியம் தெரிந்த நிலையிலிருந்து கீழே கொண்டு வருவது, இருக்கையை விட்டு கீழே வருகிறீர்கள் என்றால் அப்பொழுது கோபப்படுகிறீர்கள். திரிகாலதரிசி என்றால் ஞானம் நிறைந்ததின் நிலை ஒரு இருக்கை ஆகும். மிக உயர்ந்ததாகும். எப்பொழுது இந்த இருக்கையை விட்டு விட்டு கீழே வருகிறீர்களோ அப்பொழுது கோடப்படுகிறீர்கள். எப்படி ஸ்தானமோ அப்படி ஸ்திதி (நிலை) இருக்க வேண்டும்.

மதுபனை சொர்க்கபூமி என்று கூறுகிறீர்கள் இல்லையா. மதுபன் சொர்க்கத்தின் மாடல் என்று ஏற்றுக் கொள்கிறீர்கள் என்றால் சொர்க்கத்தில் மாயா வருகிறதா என்ன? மாயா என்றால் என்ன என்ற அறியாத நிலை இருக்க வேண்டும். சொர்க்கத்தில் மாயாவின் ஞானம் இருப்பதில்லை. இந்த பூமியை சாதாரணம் என்று நினைப்பதினால் மாயா வருகிறது. மதுபன் வரதான பூமியை சாதாரண ஸ்தானம் என்று

நினைக்காதீர்கள், மதுபனின் நினைவு கூட சக்தியைக் கொண்டு வருகிறது. மதுபனில் இருப்பவர்கள் ஃபரிஷ்தாக்களாக இருக்க வேண்டும். மதுபனின் மகிமை என்றால் மதுபன் நிவாசிகளின் மகிமை. மதுபனின் சுவர்களின் மகிமையோ இல்லை தான் இல்லையா? மதுபன் நிவாசிகளை முழு உலகமும் எந்தப் பார்வையில் பார்க்கிறது, உலகம் இன்று வரையிலும் நினைவு ரூபத்தில் எவ்வளவு உயர்ந்த பார்வையில் பார்க்கிறது. பக்தர்களும் மதுபன் நிவாசிகளின் மகிமை பாடுகிறார்கள். பிராமண பரிவாரமும் உயர்ந்த பார்வையோடு பார்க்கிறது. ஒருவேளை உங்களுடைய பார்வையும் இவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறது என்றால் ஃபரிஷ்தாவாகவே ஆகியே விட்டீர்கள் இல்லையா?

மதுபன் நிவாசிகள் யக்ஞ நிவாசிகள் என்றும் கூறப்படுகிறார்கள். யக்ஞத்தில் இருப்பவர்களுக்கு தன்னுடைய ஆகுதி போட வேண்டும். அப்பொழுது மற்றவர்களும் பின்பற்றி நடப்பார்கள். நினைவார்த்தமாக ரூபமாக வளர்க்கப்படும் (வெளியுலக) யாகத்திலும் எப்பொழுது மந்திரத்தை உச்சரிக்கிறார்களோ அப்பொழுது தான் போடும் ஆகுதியும் பயனுள்ளதாக ஆகிறது. இங்கேயும் எப்பொழுதும் மன்மனாபவ என்ற மந்திரம் நினைவில் இருக்கிறது என்றால் ஆகுதி பயனடைகிறது. மதுபன் நிவாசிகளோ நிரந்தர மந்திரத்தில் நிலைத்திருப்பவர்கள். மந்திரத்தை கூறுபவர்கள் மட்டும் அல்லாமல் மந்திர சொரூபமானவர்கள். இப்பொழுது தந்தை ரியலைசேஷன் (உணரும்) பாடம் கொடுத்திருக்கிறார் என்றால் தன்னை உணர்ந்து மாற்றம் செய்திருக்கிறீர்களா?

அனைவரும் நன்றாக இருக்கிறீர்களா? யாராவது நன்றாக இருக்கிறேன் என்று கூறினால் உங்கள் வாயில் குலோப் ஜாமுன் என்று தந்தை கூறுகிறார். சொல்வதால் கூட நன்றாக ஆகிவிடுவார்கள். குறையை அடிக்கடி யோசிப்பதினால் குறையாகவே இருந்து விடுகிறது. குறையைப் பார்த்து அழித்துக் கொண்டே இருங்கள். சோதனை செய்வதின் கூடவே மாற்றமும் செய்யுங்கள். ஏதாவது அதிசயம் செய்து காண்பிக்க வேண்டும் இல்லையா? இவ்வளவு காலத்தில் எவ்வளவு துணை கிடைத்ததோ, இதில் ஏதாவது அதிசயம் செய்தீர்களா? அதிசயம் என்று சொல்லும் அளவிற்கு ஏதாவது அந்த மாதிரி காரியம் செய்தீர்களா அல்லது செய்திருந்தும் மறந்து விட்டீர்களா? தன்னை எப்பொழுதும் குணம் நிறைந்தவராகப் பார்த்து உயர்ந்த நிலையில் நிலைத்திருந்து கொண்டே இருங்கள். கீழே

வராதீர்கள். யார் ராஜ குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளாக இருப்பார்களோ அவர்கள் ஒருபொழுதும் தரையில், மண்ணில் கால்களை வைக்க மாட்டார்கள். இங்கே தேக உணர்வின் மண் இருக்கிறது. இதில் கீழே வராதீர்கள். இந்த மண்ணிலிருந்து எப்பொழுதும் தூரமாக இருங்கள். எண்ணத்தில் கூட தேக உணர்வில் வந்தீர்கள் என்றால் மண்ணில் கால் வைத்தீர்கள் என்பதாகும். வார்த்தைகள் செயலில் வந்தீர்கள் என்றால் மண்ணை அருந்தி விட்டீர்கள் என்பதாகும். இராஜ குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் ஒருபொழுதும் மண்ணை அருந்துவதில்லை. உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் உயர்ந்த நிலையில் உள்ள குழந்தைகள் நாம் என்று எப்பொழுதும் நினைவிருக்கிறது என்றால் பார்வை கீழே வராது. பழையவற்றையோ கனவிலிருந்தும் அழித்து விட வேண்டும். யார் யோகம் நிறைந்த ஆத்மா, ஞானம் நிறைந்த ஆத்மாவாக இருப்பாரோ அவருடைய கனவு கூட புது உலகம், புது வாழ்க்கையினுடையதாக இருக்கும். எப்பொழுது கனவும் மாறிவிட்டது என்றால் எண்ணத்தின் விஷயமே இல்லை. மதுபன் நிவாசிகளின் கனவு கூட உயர்ந்ததாக இருக்கிறது. பாப்தாதாவும் அதே பார்வையில் பார்க்கிறார். மதுபன் நிவாசி என்ற பெயருக்கு மகிமை இருக்கிறது என்றால் கடைசி நேரம் வரையிலும் கூட நாம்தாரி (பிருந்தாவனம், மதுபன்னைச் சேர்ந்தவர்கள்) பெயரினால் மட்டும் தன்னுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள், பெயருக்கு இந்தளவு மகிமை இருக்கிறது என்றால் மதுபன் நிவாசிகளின் பெயரே மகான் ஆகும். எப்பொழுது பெயருக்கு இவ்வளவு மகிமை இருக்கிறது என்றால் சுயம் தன்னுடைய சொரூபத்திற்கு எவ்வளவு இருக்கும். நல்லது. அனைவரும் திருப்தியாக இருக்கவே இருக்கிறீர்கள். நல்லது.

**வரதானம்: நிரந்தர யோகி மற்றும் தூய்மையானவர் ஆகி அனைத்து விகாரங்களுக்கு விடை கொடுக்கக்கூடிய சக்தி சொரூப, பூஜ்ய சொரூபம் ஆகுக !**

தந்தை மூலமாக அனைத்து குழந்தைகளுக்கு முக்கியமாக இரண்டு வரதானங்கள் பிராப்தி ஆகின்றன ஒன்று எப்பொழுதும் யோகி ஆகுக, இன்னொன்று தூய்மை ஆகுக. யார் இந்த வரதானத்தை வாழ்க்கையில் எப்பொழுதும் அனுபவம் செய்கிறார்களோ அவர்கள் இரண்டு, நான்கு மணி நேரங்களின் யோகியாக இல்லாமல் நிரந்தர யோகியாக

இருக்கிறார்கள். தூய்மையானவர்களாகவும் எப்பொழுதாவது இல்லாமல், எப்பொழுதும் தூய்மையானவராக மற்றும் அனைத்து விகாரங்களுக்கும் விடை கொடுப்பவராக இருக்கிறார்கள். சில நேரம் கோபம் அல்லது பற்றுதல் வந்து விட்டது என்று அப்படி வேண்டாம். எந்தவொரு விகாரமும் நினைவு சொரூபம் ஆக விடுவதில்லை. அந்த மாதிரி யோகி தான் சக்தி சொரூபமானவர், மேலும் எப்பொழுதும் தூய்மையாக இருக்கும் பூஜ்ய சொரூபமானவர்.

**சுலோகன்: எப்பொழுதும் ஞான சூரியனின் எதிரில் இருந்தீர்கள் என்றால் பாக்கியம் என்ற நிழல் உங்களுடன் இருக்கிறது!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

## 31.01.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பக்தர்களுக்கு அனைத்து பிராப்திகளை செய்விப்பதற்கான ஆதாரம் -ஆசை என்றால் என்னவென்று அறியாத நிலை!

தன்னை மிக உயர்ந்த அதிகாரம் உள்ளவர் என்று நினைக்கிறீர்களா? தன்னுடைய தூய்மையின் பெர்சனாலிட்டியை (தனித்தன்மையை) தெரிந்திருக்கிறீர்களா? தன்னுடைய அழியாத செல்வத்தை தந்தை மூலமாக பிராப்தி செய்து நிரம்பியவராக அனுபவம் செய்கிறீர்களா? இந்த பழைய உலகத்தில் அற்ப காலத்தின் எல்லைக்குட்பட்ட படிப்பு மற்றும் எல்லைக்குட்பட்ட பதவியை அதிகாரம் என்று நினைக்கிறார்கள். அவர்களின் எதிரில் உங்கள் அனைவரின் அனைத்து சக்திகள் நிறைந்த அதிகாரம் எல்லைக்கப்பாற்பட்டது மற்றும் அழியாதது. அந்த மாதிரி அதிகாரத்தில் எப்பொழுதும் இருந்து கொண்டே ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறீர்களா? பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் எல்லைக்கப்பாற்பட்ட அதிபதியாக ஆக்குகிறார். எல்லைக்கப்பாற்பட்ட அதிபதி நிலையில் எல்லைக்கப்பாற்பட்ட குஷி இருக்கிறது. தன்னுடைய குஷியின் பொக்கிஷத்தைத் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? தந்தை குழந்தைகளின் பாக்கிய ரேகையைப் பார்த்து உயர்ந்த பாக்கியத்தை உருவாக்குபவர்கள் கோடியிலும் சிலர், அந்த சிலரிலும் சில ஆத்மாக்கள் தான் என்று மகிழ்ச்சி அடைகிறார்.

தந்தை குழந்தைகளைப் பார்த்து அதிக மகிழ்ச்சி அடைகிறாரா? அல்லது குழந்தைகள் தன்னுடைய பாக்கியத்தைப் பார்த்து அதிக மகிழ்ச்சி அடைகிறார்களா? யார் அதிக மகிழ்ச்சி அடைகிறார்கள்? நீங்கள் அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்கள் உங்களுடைய ஒவ்வொரு காரியமும் சரித்திரத்தின் ரூபத்தில் மகிமை செய்யப்படுகின்றன. இன்று

வரையிலும் சரித்திரத்தின் பூஜை நடந்து கொண்டிருக்கிறது. இன்று வரையிலும் பக்தர்கள் தரிசனத்திற்குரிய மூர்த்திகள் உங்களுடைய ஒரு விநாடியின் தரிசனம் செய்வதற்காக துடித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி பக்தர்களின் துடிப்பை அனுபவம் செய்கிறீர்களா? பக்தர்களை மகிழ்விப்பதற்காக இதயத்தில் இரக்கம் மற்றும் நன்மை ஏற்பட வேண்டும் என்ற சுபபாவனை உருவாகிறதா? பக்தர்களை மகிழ்ச்சி அடையச் செய்வதற்கான சாதனம் என்ன என்று அதைத் தெரிந்திருக்கிறீர்களா? பக்தர்களுக்கு தேவதைகள் உங்கள் மூலமாக என்ன பிராப்தி ஆவதின் இச்சை இருக்கிறது என்று அதைத் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? பக்தர்களுக்கு அனைத்து பிராப்திகளையும் செய்வதற்கான ஆதாரம் பக்தர்களின் பாவனை ஆகும். பக்தர்களுக்கு அனைத்து பிராப்திகளையும் செய்விப்பதற்கான ஆதாரம் ஆசை என்றால் என்னவென்று அறியாத நிலை ஆகும். எப்பொழுது நீங்களே ஆசையென்றால் என்னவென்று அறியாத நிலை உள்ளவர்களாக ஆகிவிடுகிறீர்களோ, அப்பொழுது தான் மற்ற ஆத்மாக்களின் அனைத்து இச்சைகளையும் நிறைவேற்ற முடியும். "ஆசை என்றால் என்னவென்று அறியாத நிலை" என்றால் சம்பூர்ண சக்திசாலியான விதை ரூப நிலை. எதுவரை மாஸ்டர் விதை ரூபம் ஆவதில்லையோ, விதையின்றி இலைகளுக்கு எந்த பிராப்தியும் ஆக முடியாது. அனேக பக்த ஆத்மாக்கள் என்ற இலைகள் எவை காய்ந்து விட்டனவோ, வாடிப்போய் விட்டனவோ, அவர்களுக்கு மீண்டும் தன்னுடைய விதை ரூப நிலை மூலமாக சக்திகளின் தானம் கொடுங்கள். எப்படி ஜடச்சிலைகளின் தரிசனத்திற்காக பக்தர்களின் வரிசை உருவாகிவிடுகிறது. அதே போல் உங்களுக்கு சைத்தன்யத்திலும் தன்னுடைய பக்தர்களின் வரிசை அனுபவம் ஆகிறதா? இதுவரையிலும் கூட பக்தர்களின் கூக்குரலின் பாடலைக் கேட்பது பிடித்திருக்கிறதா என்ன? பாப்தாதா எப்பொழுது உலகை வலம் வருகிறார் என்றால் பக்தர்களின் அலைதல், கூக்குரல் இடுதலைப் பார்த்து மற்றும் கேட்டு மிகுந்த இரக்கம் வருகிறது. பாப்தாதாவே சாட்சாத்காரம் செய்வித்து விடட்டும் மற்றும் பக்தர்களின் இச்சையை நிறைவேற்றி விடட்டும் என்று நீங்கள் கூறலாம். அந்த மாதிரி யோசிக்கிறீர்களா? ஆனால் நாடகத்தில் பெயர் குழந்தைகளுக்கு, காரியம் தந்தையினுடையது. எனவே குழந்தைகளுக்கு கருவியாக ஆகவே வேண்டியதாக இருக்கிறது. உலகின் அதிபதிகளாக குழந்தைகள் ஆவார்களா அல்லது தந்தை

ஆவாரா? உங்களுடைய பிரஜைகள் உருவாவார்களா அல்லது தந்தையின் பிரஜைகள் உருவாவார்களா? அப்படி யார் பூஜைக்குரியவர் ஆகிறாரோ அவருக்கு பிரஜைகள் உருவாகிறார்கள், அவர்களுக்கே பின்பு பிற்காலத்தில் பக்தர்கள் ஆகிறார்கள். எனவே தன்னுடைய பிரஜைகளுக்கு அல்லது தன்னுடைய பக்தர்களுக்கு இப்பொழுதும் பொறுப்பாளர் ஆகி சக்தியின் வரதானம் கொடுங்கள். மற்றும் எப்படி தந்தை குழந்தைகளின் எதிரில் பிரத்யக்ஷம் ஆகியிருக்கிறாரோ, அதே போல் இஷ்ட தேவதைகள் நீங்களும் இப்பொழுது உங்களுடைய பக்தர்களின் எதிரில் பிரத்யக்ஷம் ஆகிவிடுங்கள். தேவதை மற்றும் தேவி என்றால் கொடுப்பவர் அப்படியானால் கொடுப்பவரின் குழந்தைகளாகிய நீங்கள் கொடுப்பவர்களாக ஆகுங்கள். தன்னுடைய ஒளியின் கிரீடம் தென்படுகிறதா? ரத்தினங்கள் பதித்த கிரீடம் அந்த ஒளியின் கிரீடத்தின் எதிரில் ஒன்றும் பெரிய விஷயமாக தென்படாது. எவ்வளவுக்கு எவ்வளவு எண்ணம், சொல் மற்றும் செயலில் தூய்மையை தாரணை செய்வீர்களோ அந்த அளவு இந்த ஒளியின் கிரீடம் தெளிவாகிக் கொண்டே இருக்கும். பாப்தாதாவும் அனைத்து குழந்தைகளின் வரிசைக்கிரமமான கிரீடத்தைப் பார்க்கிறார். எப்படி எதிர்காலத்தில் இராஜ்யத்தின் கிரீடமும் வரிசைக்கிரமமாக இருக்குமோ, அதே போல் இங்கேயும் வரிசைக்கிரமம் இருக்கிறது. அப்படியானால் தன்னுடைய வரிசை எண்ணை தெரிந்திருக்கிறீர்களா? சின்ன கிரீடமாக இருக்கிறதா அல்லது பெரிய கிரீடமாக இருக்கிறதா? அனைவரிடமும் கிரீடமோ இருக்கிறது. எப்பொழுதிலிருந்து தந்தையின் குழந்தையாக ஆனீர்கள், தூய்மையின் உறுதிமொழியை எடுத்தீர்கள் என்றால் அதன் பலனாக கிரீடம் பிராப்தி ஆகியே விடுகிறது. அனைத்து சக்திகளின் அதிகாரம் நிறைந்தவரின் குழந்தை ஆவதினால் அதாவது ஆன்மீக ஜென்மம் ஏற்பட்ட உடனேயே கிரீடம், ஆசனம், திலகம் பிறப்புரிமையின் ரூபத்தில் பிராப்தி ஆகிறது என்று கூறியிருந்தோம். அப்படி தன்னுடைய பிரகாசித்துக் கொண்டிருக்கும் பாக்கியத்தின் நட்சத்திரத்தைப் பார்க்கிறீர்களா? ஒருவேளை எப்பொழுதும் தன்னுடைய பாக்கியம் மற்றும் பாக்கியத்தை உருவாக்குபவரின் குணமகிமையைப் பாடிக் கொண்டே இருந்தீர்கள் என்றால் எப்பொழுதும் குணம் நிரம்பியவராக ஆகியே விடுவீர்கள். தன்னுடைய பலஹீனங்களின் வர்ணனையைப் பாடாதீர்கள், பாக்கியத்தின் மகிமையைப் பாடிக் கொண்டே இருங்கள். கேள்வியிலிருந்து விலகிச் சென்று மகிழ்ச்சி நிறைந்த எண்ணம்

உடையவராக ஆகுங்கள். எதுவரை தனக்காக எப்படிச் செய்வது? என்ன செய்வது என்று ஏதாவது கேள்வி இருக்கிறது என்றால் அதுவரை மற்றவர்களை மகிழ்ச்சி நிறைந்தவர்களாக ஆக்க முடியாது. புரிந்ததா? இப்பொழுது தன்னைப் பற்றி யோசிக்காதீர்கள், பக்தர்களைப் பற்றி அதிகமாக யோசியுங்கள். இப்பொழுது பெறுவதைப் பற்றி யோசிக்காதீர்கள், ஆனால் கொடுப்பதைப் பற்றி யோசியுங்கள். எந்தவொரு ஆசையையும் தனக்காக வைத்துக் கொள்ளாதீர்கள் ஆனால் மற்ற ஆத்மாக்களின் ஆசையை நிறைவேற்றுவதைப் பற்றி யோசித்தீர்கள் என்றால் இயல்பாகவே நீங்கள் சம்பன்னம் ஆகிவிடுவீர்கள். நல்லது.

அந்த மாதிரி சாட்சாத் தந்தைக்குச் சமமாக எப்பொழுதும் சாட்சாத்காரமூர்த்தியாக இருப்பவர்களுக்கு, அனைத்து ஆத்மாக்களின் விருப்பங்களை நிறைவேற்றக்கூடிய, எப்பொழுதும் மிக உயர்ந்த அதிகாரத்தின் நிலையில் நிலைத்திருந்து, தூய்மையின் பெர்சனாலிட்டியில் இருக்கக்கூடிய எப்பொழுதும் தன்னுடைய பாக்கியத்தை மகிமை செய்யக்கூடிய, வள்ளலுக்குச் சமமாக எப்பொழுதும் கொடுக்கக்கூடிய பெரும்வள்ளலான குழந்தைகளுக்கு, அனைத்து வரதானங்களினால் நிரம்பிய வரதானி, அந்த மாதிரி மகான் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: அமைதியின்மை மற்றும் குழப்பங்களின் நடுவில் அமைதிக் குண்டத்தின் அனுபவம் செய்விக்கக்கூடிய அமைதி சொரூபமானவர் ஆகுக!**

ஏதாவது இடத்தில் குழப்பம் இருக்கிறது என்றால் அந்த சண்டையின் நேரத்தில் அமைதியின் சக்தியின் அதிசயத்தை காண்பியுங்கள். இங்கேயோ அமைதியின் குண்டம் இருக்கிறது என்று அனைவரின் புத்தியில் வரட்டும். அமைதியின் குண்டமாகி அமைதியின் சக்தியைப் பரப்புங்கள். அமைதி சொரூபமாகி அமைதிக் குண்டத்தின் அனுபவத்தை செய்வியுங்கள். அந்த நேரம் வாய்மொழியின் சேவை செய்ய முடியாது ஆனால் மனசக்தி மூலமாக அமைதிக் குண்டத்தின் பிரத்யக்ஷம் செய்ய முடியும். இங்கிருந்து அமைதி கிடைக்கும் என்று அனைவருக்கும்

வைப்ரேஷன் வர வேண்டும். எனவே அந்த மாதிரி வாயுமண்டலத்தை உருவாக்குங்கள்.

**சுலோகன்: தன்னுடைய மற்றும் அனைவரின் கவலைகளை அகற்றுவது தான் நற்சிந்தனையாளர் ஆவது ஆகும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 02.02.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எப்பொழுதும் அலங்கார சொரூபத்தில் நிலைத்திருப்பவர் தான், தன் மூலமாக தந்தையின் சாட்சாத்காரம் செய்விக்க முடியும்!

பாப்தாதா அன்பான குழந்தைகளின் ஆன்மீக அன்பு நிரம்பிய சபையில் வந்திருக்கிறார். அந்த மாதிரி ஆன்மீக அன்பின் சபை கல்பத்தில் இப்பொழுது சங்கம யுகத்தில் மட்டும் தான் இருக்கிறது. மேலும் வேறு எந்த யுகத்திலும் ஆத்மாக்களின் தந்தை மற்றும் குழந்தைகளின் அன்பின் சபை இருக்கவே முடியாது. இந்த சபையில் தன்னை பல கோடி மடங்கு பாக்கியம் நிறைந்தவர் என்று நினைக்கிறீர்களா? அந்த மாதிரி உயர்ந்த பாக்கியம் இருக்கிறது. அதை சர்வ சக்திவான் தந்தை குழந்தைகளின் இந்த பாக்கியத்தை வர்ணனை செய்கிறார். அந்த மாதிரியான பாக்கியசாலி குழந்தைகளை சுயம் தந்தை பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். அந்த மாதிரியான பாக்கியம் என்னவாக இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். பாக்கியத்தை நினைத்தவுடனேயே தந்தையை நினைப்பதற்கான (மாலையின்) மணியாக ஆக முடியும். இந்த அளவு உயர்ந்த பாக்கியம் இருக்கிறது. இந்தக் கலியுகத்தின் கடைசியிலும் அதை நினைவு செய்யும் பக்தர்கள் தன்னை பாக்கியசாலி என்று நினைக்கிறார்கள். அந்த மாதிரி உயர்ந்த பாக்கியத்தின் அனுபவத்தின் அஞ்சலிக்காகக் கூட அனைவரும் துடிக்கிறார்கள். அந்த மாதிரியான பாக்கியசாலிகள் நீங்கள். உங்களுடைய பெயர் சொன்னாலேயே தன்னுடைய வாழ்க்கை வெற்றியடைந்தது என்று நினைக்கிறார்கள். அப்படியானால் இது எவ்வளவு பெரிய பாக்கியம் என்று யோசித்துப் பாருங்கள். எப்பொழுதும் தன்னை இந்த அளவு பாக்கியசாலி ஆத்மா என்று நினைக்கிறீர்களா? அனைத்தையும் விட உயர்ந்தது பிராமண குலம் ஆகும், அந்த மாதிரி பிராமண குலத்திற்கும் நீங்கள் தீபம் ஆவீர்கள்.

குலவிளக்கு என்றால் எப்பொழுதும் தன்னுடைய நினைவின் ஜோதி மூலமாக பிராமண குலத்தின் பெயரை பிரகாசம் அடையச் செய்து கொண்டே இருப்பதாகும். அந்த மாதிரி தன்னை குலவிளக்கு என்று நினைக்கிறீர்களா? எப்பொழுதும் நினைவின் ஜோதி எரிந்து கொண்டிருக்கிறதா? அணைந்து விடுவதில்லையே? அகண்ட ஜோதி என்றால் ஒருபொழுதும் அணைவதில்லை என்பதாகும். உங்களுடைய ஜட சிலைகளின் எதிரிலும் கூட அகண்ட ஜோதியை எரிய விடுகிறார்கள். சைத்தன்ய அகண்ட ஜோதியின் நினைவுச்சின்னம் தான் இது என்றால் சைத்தன்ய விளக்கு அணைய முடியுமா? அணைந்திருக்கும் விளக்கு பார்க்க நன்றாக இருக்குமா? எனவே எப்பொழுது நினைவின் ஜோதி அணைந்து விடுகிறது என்றால், அது எப்படி இருக்கும் என்று உங்களை நீங்களே சோதனை செய்யுங்கள். அது அகண்ட ஜோதியாக ஆனதா? ஜோதியின் அடையாளம், எப்பொழுதும் நினைவு சொரூபம் மற்றும் சக்தி சொரூபமாக இருப்பது. நினைவு மற்றும் சக்திக்கு சம்மந்தம் இருக்கிறது. ஒருவேளை நான் பாபாவின் குழந்தை என்ற நினைவோ இருக்கிறது, ஆனால் சக்தி இல்லை என்று யாராவது கூறுகிறார் என்றால், அப்படி இருக்கவே முடியாது. ஏனென்றால் நினைவே நான் மாஸ்டர் சர்வ சக்திவான் என்று இருக்கிறது. மாஸ்டர் சர்வ சக்திவான் என்றால் சக்தி சொரூபம். பின்பு அது ஏன் இல்லாமல் ஆகி விடுகிறது? என்ன காரணம்? ஒரு வார்த்தையின் தவறை செய்கிறீர்கள். அது எந்த தவறு? தந்தை கூறுகிறார் உடலில் இருப்பவரிலிருந்து அலங்கரிக்கப்பட்டவராக ஆகுங்கள் ஆனால் என்னவாகி விடுகிறீர்கள்? அலங்கரிக்கப்பட்டவருக்குப் பதிலாக தேக அகங்காரம் உடையவராக ஆகி விடுகிறீர்கள். புத்தியின் அகங்காரம் உள்ளவராக. பெயர் மற்றும் புகழின் அகங்காரம் உடையவராக ஆகி விடுகிறீர்கள். எப்பொழுதும் எதிரில் அலங்கார சொரூபத்தின் சின்னம் இருந்த போதிலும் தன்னுடைய அலங்காரங்களை தாரணை செய்ய முடிவதில்லை. எப்படி எல்லைக்குட்பட்ட இராஜகுமார் மற்றும் இராஜகுமாரிகள் கூட எப்பொழுதும் அலங்கரிக்கப்பட்டு இராஜ கம்பீரத்தில் இருக்கிறார்கள். அதே போலவே பிராமண குலத்தின் உயர்ந்த ஆத்மாக்கள் எப்பொழுதும் அலங்காரங்களினால் அலங்கரிக்கப்பட்டவராக இருக்க வேண்டும். இந்த அலங்காரம் பிராமண வாழ்க்கையின் அலங்காரமேயன்றி தேவதை வாழ்க்கையினுடையது அல்ல. எனவே தனது அலங்காரங்களின் ஒப்பனையை எப்பொழுதும் நிலைத்திருக்க வையுங்கள் ஆனால் என்ன

செய்கிறீர்கள்? ஒரு அலங்காரத்தைப் பிடிக்கிறீர்கள் என்றால் இன்னொரு அலங்காரத்தை விட்டு விடுகிறீர்கள். சிலர் மூன்றைப் பிடிக்க முடியும் என்றால், சிலர் நான்கைப் பிடிக்க முடியும். பாப்தாதாவும் குழந்தைகளின் விளையாட்டைப் பார்த்துக் கொண்டே இருக்கிறார். புஜம் என்றால் சக்தி, அந்த சக்தியின் ஆதாரத்தில் தான் அலங்காரம் உள்ளவராக ஆக முடியும். அந்த சக்திகள் என்ற புஜங்கள் ஆடிக் கொண்டே இருக்கின்றன. புஜங்கள் ஆடிக் கொண்டே இருக்கின்றன என்றால், நிரந்தரமாக அலங்காரம் உள்ளவராக எப்படி ஆக முடியும்? எனவே அலங்காரம் உள்ளவராக ஆவதற்காக எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் ஆக முடிவதில்லை. எனவே எந்தவொரு வார்த்தையை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். எந்த விதமான "அகங்காரமும்" உள்ளவராக இன்றி "அலங்காரம்" உள்ளவராக ஆக வேண்டும். எப்பொழுதும் அலங்காரம் நிறைந்த சொரூபத்தில் நிலைத்திருக்காத காரணத்தினால் தன்னுடைய மற்றும் தந்தையின் சாட்சாத்காரத்தை செய்ய முடியாது. எனவே தன்னுடைய சக்தி என்ற புஜங்களை உறுதியானதாக ஆக்குங்கள். இல்லையென்றால், அலங்காரங்களை தாரணை செய்ய முடியாது. அலங்காரங்கள் என்னவென்று தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? தெரிந்தும் இருக்கிறீர்கள் மேலும் வர்ணனையும் செய்கிறீர்கள். இருந்தும் தாரணை செய்ய முடிவதில்லை. ஏன்? பாப்தாதா குழந்தைகளின் பலஹீனங்களின் லீலையை அதிகமாகப் பார்க்கிறார். எப்படி பிரபுவின் லீலை அளவில்லாதது என்றால் குழந்தைகளின் லீலையும் அளவில்லாதது. தினசரி ஏதாவது புதிய தோற்றம் இருக்கிறது. மாயாவின் புதிய தோற்றத்தின் பாதிப்பில் வந்து விடுகிறார்கள். சுயதர்ஷண சக்கரத்திற்குப் பதிலாக வீணான தர்ஷணத்தின் சக்கரம் சுற்றி விடுகிறது. துவாபர யுகத்திலிருந்து வீணான கதைகள் என்னென்ன மிகவும் ருசியோடு கேட்பதற்கு மற்றும் சொல்வதற்கான பழக்கம் இருக்கிறதோ அந்த சம்ஸ்காரம் இப்பொழுது அம்ச ரூபத்தில் வந்து விடுகிறது. எனவே தாமரை மலருக்குச் சமமாக அதாவது தாமரை மலரின் அலங்காரம் உள்ளவராக ஆக முடிவதில்லை. தாமரைக்குப் பதிலாக பலஹீனமானவராக ஆகி விடுகிறார்கள். மாயாவை வென்றவராக ஆவதற்காக மற்றவர்களிடம் கூறுகிறார்கள், ஆனால் சுயம் மாயாவை வென்றவரா அல்லது இல்லையா என்று இதை யோசிப்பதே இல்லை. எனவே அலங்காரம் உள்ளவராக ஆக முடிவதில்லை. தேக அகங்காரம் உள்ளவராக ஆகாமல் அலங்காரம் உள்ளவராக ஆகுங்கள்.

அப்படி நிரந்தர அலங்காரம் உள்ளவர்களுக்கு, அகங்காரம் அற்றவர்களுக்கு, நிராகார நிலையில் நிலைத்திருப்பவர்களுக்கு, எப்பொழுதும் வெற்றி அடைபவர்களுக்கு, எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும் தீபங்களுக்கு, உலகிற்கு வெளிச்சத்தைக் கொடுக்கும் தீபங்களுக்கு மற்றும் பாப்தாதாவின் கண்களின் தீபங்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தீதி அவர்களுடன்:** புது உலகை உருவாக்குபவர்களுக்கு தன்னுடைய வாழ்க்கையை புதியதாக ஆக்குவதின் வேகம் எப்படி இருக்கிறது? முதலில் தன்னுடைய வாழ்க்கையில் புதுமையைக் கொண்டு வந்தீர்கள் என்றால் தான் உலகிலும் புதுமை வரும். அப்படி எவ்வளவு தன்னுடைய வாழ்க்கை என்ற கட்டிடத்தை அழகானதாக மற்றும் முழுமையானதாக ஆக்குவீர்களோ அந்த அளவே புது உலகத்திலும் அழகான மற்றும் முழுமையான இராஜ்ய பாக்கியம் கிடைக்கும். நீங்கள் செய்யும் காரியம் மூலமாக தன்னுடைய அதிர்ஷ்ட ரேகையை போட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அது எல்லைக்குட்பட்ட கைகளின் ரேகைகள் மற்றும் இது எல்லைக்கப்பாற்பட்ட கர்மங்களின் ரேகைகள். எந்த அளவு கர்மம் அதாவது செய்யும் காரியம் உயர்ந்ததாக மற்றும் தெளிவாக அப்படி கர்மங்களின் ரேகைகள் மூலமாக தன்னுடைய எதிர்காலத்தை அவர்களே பார்க்க முடியும். யமுனையின் கரையில் யார் வசிக்க முடியும்? யார் நிரந்தரமாக பழைய உலகத்திலிருந்து விலகி விட்டாரோ மற்றும் தந்தையை துணைவனாக ஆக்கியிருக்கிறாரோ அவர் தான் யமுனை நதிக்கரையில் உடன் மாளிகையில் வசிப்பவராக ஆவார். ஸ்ரீகிருஷ்ணருடன் படிப்பவர்களாக யார் இருப்பார்கள்? படிக்கும் மற்றும் படிப்பிக்கும் உடன் இருப்பவர்களும் இருப்பார்கள் இல்லையா? யாருக்கு எப்பொழுதும் படிப்பை படிப்பிப்பதில் மற்றும் படிப்பதில் விசேஷ பங்கு இருக்கிறதோ அவர் தான் அங்கும் விசேஷமாக படிப்பில் துணைவராக ஆவார். நடனமாடுபவர்களாக யார் இருப்பார்கள்? யார் சங்கமயுகத்தில் தந்தையுடன் அவருக்கு சமமான சம்ஸ்காரத்தில் ஒத்துப்போகும் நடனம் செய்வாரோ அவர் தான். அப்படி இங்கு யார் தந்தைக்குச் சமமான சம்ஸ்காரத்தின் நடனத்தில் இணைந்து கொடுக்கிறாரோ அவர் தான் அங்கும் நடனமாடுவார். இராஜ குடும்பத்தில் யார் வருவார்? யார் எப்பொழுதும் தன்னுடைய தூய்மையின் இராயல் நிலையில்

இருக்கிறாரோ, எங்கும் எல்லைக்குட்பட்ட கவர்ச்சியில் கண்கள் மூழ்குவதில்லையோ, எப்பொழுதும் அலங்காரங்களினால் அலங்கரிக்கப்பட்டவராக இருப்பாரோ. எப்பொழுதும் அலங்கரிக்கப்பட்ட மூர்த்தியாக, அந்த மாதிரி இராயல் தன்மை உள்ளவர் தான் இராஜ குடும்பத்தில் வருவார். வாரிசாக யார் ஆவார்கள்? வாரிசு என்றால் அதிகாரி (முழு உரிமை) அப்படி யார் இங்கு எப்பொழுதும் அதிகாரி நிலையில் இருக்கிறார்கள், ஒருபொழுதும் மாயாவின் அடிமை ஆவதில்லை, அதிகாரி நிலையின் நல்ல போதையில் இருக்கிறார்கள், அந்த மாதிரி அதிகாரி நிலையில் உள்ளவர்கள் தான் அங்கேயும் அதிகாரி ஆவார்கள். இப்பொழுது ஒவ்வொருவருக்கும் இதில் நான் யார் என்று பார்க்க வேண்டியதாக இருக்கும். இது விடுகதை ஆகும். சிலருக்கு முழு வாழ்க்கையில் உடன் இருப்பதற்கான பங்கும் இருக்கிறது, உடன் படிப்பதற்கான, உடன் நடனமாடுவதற்கான, உடன் மாளிகையில் இருப்பதற்கான, இராஜ குடும்பத்திலும் உடன் இருப்பார்கள். சில ஆத்மாக்களுக்கு அனைத்து அதிகாரமும் இருக்கிறது. இது தான் புது உலகின் வரைபடம். நல்லது.

**டீச்சர்களுடன்**: டீச்சர்களைப் பார்த்து பாப்தாதாவிற்கு விசேஷ குஷி ஏற்படுகிறது, ஏனென்று தெரிந்திருக்கிறீர்களா? தனக்குச் சமமான ஆசிரியர்கள் இல்லையா? எப்படி தந்தை உலகின் ஆசிரியர், சேவகன். அதே போல் டீச்சரும், ஆசிரியர் மற்றும் சேவகர்கள். அப்படி சமமானவர்களைப் பார்த்து குஷி ஏற்படுகிறது. ஆசிரியரின் நிலையிலேயோ சமமானவர்கள். சேவையைத் தவிர வேறு எந்த விஷயங்களும் கவர வேண்டாம். இரவு, பகலாக சேவையில் முழுமையாக ஈடுபட்டுக் கொண்டிருங்கள். ஒருவேளை சேவையில் இருந்து விடுபட்டு இருந்தீர்கள் என்றால், பின்பு மற்ற விஷயங்கள் வந்து விடும். காலியான வீட்டில் தான் தேள், பூரான் ஆகியவை வரும். காலி வீடாக இருக்கிறீர்களா? அல்லது பழைய வீடாக இருக்கிறீர்களா? இங்கேயும் அந்த மாதிரி ஆகிறது. புத்தி ஒன்று காலியாக இருக்கிறது அல்லது பழைய சம்ஸ்காரங்களுடையதாக இருக்கிறது என்றால் வீணான எண்ணங்கள் என்ற தேள், பூரான் பிறந்து விடுகின்றன.

(1) டீச்சர் என்றால் ஒருபொழுதும் ஓய்வாக இருப்பவராக இல்லாமல் எப்பொழுதும் சுறுசுறுப்பாக (பிஸியாக) இருப்பவர். எண்ணம், சொல் மற்றும் செயலிலிருந்து சுதந்திரமாக இருப்பவர் அல்ல.

(2) டீச்சரின் அர்த்தமே தந்தைக்குச் சமமானவர் மற்றும் தந்தையின் அருகில் உள்ள வெற்றி மாலையின் மணி என்பதாகும். வெற்றி மாலையின் மணி ஆக வேண்டும் என்பது தானே டீச்சரின் இலட்சியம்.
(3) டீச்சர் என்றால் சில நேரம் வெற்றி, சில நேரம் தோல்வியில் வருபவராக இல்லாமல் எப்பொழுதும் வெற்றி அடைபவர்.
(4) டீச்சர் என்றால் எப்பொழுதும் திலகமிட்டவர். எப்பொழுதும் சௌபாக்கியவதி, சுமங்கலி. திலகம் சுமங்கல்யத்தின் அடையாளம் இல்லையா? அப்படி எப்பொழுதும் சுமங்கலி என்றால் தந்தையை நிரந்தர துணைவனாக ஆக்குபவர். சுமங்கலி என்றால் திலகம் அணிந்திருப்பவர்.

டீச்சரின் இருப்பிடம் இதய சிம்மாசனம். இருப்பிடத்தை விட்டீர்கள் இன்னொருவர் எடுத்து விடுவார். டீச்சரின் ஆசனம் தந்தையின் இதய சிம்மாசனம். ஆசனத்தை விட்டு விட்டீர்கள் என்றால் தியாகம், தபஸ்யா எல்லாமே முடிந்தது. எனவே இந்த ஆசனத்தை ஒருபொழுதும் விடக்கூடாது. இடத்தை பிடிப்பவர்களோ மிக அதிகமாக இருக்கிறார்கள். அனைவருக்கும் நான் டீச்சரை விட முன்னுக்குச் செல்ல வேண்டும் என்ற இதே ஊக்கம், உற்சாகம் இருக்கிறது. டீச்சர் பின்பு அவர்களையும் விட எப்பொழுது முன்னுக்குச் செல்கிறாரோ அப்பொழுது தான் இதய சிம்மாசனதாரியாக ஆவார். டீச்சருக்கு மிகச் சிறிய உலகம் தான் இல்லையா? டீச்சரின் உலகம் ஒரு தந்தை தான். தாய், தந்தை, உறவினர். நண்பன்... அப்படி உலகத்தில் என்ன இருக்கிறது? அனைத்து சம்மந்தங்கள் மற்றும் சாதனங்கள் இருக்கின்றன. இங்கு அனைத்து சம்மந்தங்களின் பிராப்தி தந்தையிடமிருந்து இருக்கிறது. மிகச் சிறிய உலகம் தான் ஆனால் சம்பன்னமானது மற்றும் சக்திசாலியானது. இந்த சின்னஞ்சிறு உலகத்தில் பிராப்தியில்லாத பொருள் ஒன்றும் இல்லை. சர்வ சம்மந்தம் தந்தையிடம் இருக்கிறது. தந்தையின் சம்மந்தம் இருக்கிறது என்றால் தாயின் சம்மந்தம் இல்லை, தாயின் சம்மந்தம் இருக்கிறது என்றால் மற்ற உறவுகள் இல்லை என்று அப்படி கிடையாது. ஒருவேளை ஒரு சம்மந்தத்தின் பிராப்தியாவது தந்தையிடமிருந்து இல்லையென்றால் புத்தி அவசியம் வேறு பக்கம் செல்லும். தந்தையிடமிருந்து அனைத்து சம்மந்தங்களின் அனுபவம் இருக்க வேண்டும். இல்லையென்றால் வேறு சம்மந்தம் தன் பக்கம் இழுத்து விடும். முழு உலகமுமே ஒரு தந்தை ஆகி விட்டார் என்றால் அனைத்து ரூபங்களும் ஆகி விட்டது இல்லையா? இவரைத் தான் நம்பர் ஒன் டீச்சர்,

குறையில்லாத டீச்சர், தகுதியான டீச்சர், பெயர் பெற்ற டீச்சர் என்று கூறுவது. தந்தையோ எப்பொழுதும் உயர்ந்த பார்வையிலேயே பார்க்கிறார். ஒருவேளை தந்தை குறையைப் பார்த்தார் என்றால் நிரந்தரமாக அந்தக் குறைக்கு கீழ்க்கோடிடப்பட்டு விடுகிறது. தந்தை பாக்கியத்தை உருவாக்குபவர் தான் இல்லையா, எனவே தந்தை எப்பொழுதும் உயர்ந்த பார்வையில் பார்க்கிறார். உயர்ந்த நிலையின் எதிரில் பலஹீனம் தானாகவே மனதை உறுத்தும். உயர்ந்த விஷயங்கள் கேட்பதினால் பலஹீனம் தெள்ளத் தெளிவாகி விடும். எனவே தந்தை எப்பொழுதும் உயர்ந்த நிலையின் வர்ணனை செய்கிறார். அதன் மூலம் பலஹீனம் இயல்பாகவே தென்பட வேண்டும். ஒருவேளை பலஹீனத்தைப் பார்த்தோம் என்றால் மிக நீளமான வேத சாஸ்திரங்களின் கதைகளாகி விடும்.

**வரதானம்: சேவையின் பாவனை மூலமாக அழியாத பழத்தை பெறக்கூடிய எப்பொழுதும் என்றால் மாயாவின் நோயிலிருந்து விடுபட்டவர் ஆகுக!**

எந்தக் குழந்தைகள் சங்கமயுகத்தில் பிரபு பழம், அழியாத பழம், அனைத்து உறவுகளின் அன்பின் சாறு நிறைந்த பழத்தை அருந்துகிறார்களோ அவர்கள் எப்பொழுதும் மாயாவின் வியாதியிலிருந்து விடுபட்டிருக்கிறார்கள். மற்ற பழமோ சத்யுகத்திலும் கிடைக்கும் மற்றும் கலியுகத்திலும் கிடைக்கும் ஆனால் சேவையின் பாவனைக்கான பிரத்யக்ஷ பழம், பிரபு பழத்தை ஒருவேளை இப்பொழுது அருந்தவில்லை என்றால் முழு கல்பத்திலும் அருந்தது முடியாது. இந்தப் பழம் ஈஸ்வரிய மந்திரத்தின் பழமாகும். அதை அருந்துவதினால் இரும்பிலிருந்து தங்கம் என்ன வைரமாகவே ஆகி விடுகிறீர்கள். இந்தப் பழம் அனைத்து தடைகளையும் அகற்றக் கூடிய அமர பழமாகும்.

**சுலோகன்: அபகாரிகளுக்கும் உபகாரம் செய்பவர், நிந்தனை செய்பவரையும் நண்பன் என்று புரிந்து கொள்பவர் தான் தந்தைக்குச் சமமானவர்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 05.02.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மகான் நிலையின் ஆதாரம்!

குழந்தைகள் எதன் ஆதாரத்தில் இந்த அளவு மகான் ஆகிறார்கள், அப்படி என்ன என்ன மகிமை இருக்கிறதோ அந்த மகிமையை தந்தை பார்த்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் அனைவரும் உங்களுடைய மூன்று ரூபங்களின் மகிமையை தெரிந்திருக்கிறீர்களா? ஒன்று -அனாதி சொரூபத்தின் மகிமை. இரண்டாவது -தற்சமய பிராமண வாழ்க்கையின் மகிமை. மூன்றாவது -எதிர்கால ஆதி சொரூபத்தின் மகிமை.

ஆதி சொரூபத்தின் மகிமையையோ இன்று வரை, நீங்கள் சர்வ குண சம்பன்னமானவர்கள், 16-கலைகள் நிரம்பியவர்கள், சம்பூர்ண நிர்விகாரி, மரியாதா புருஷோத்தமர்கள் மற்றும் முழுமையான அஹிம்சை வாதிகள் என்று பக்தர்கள் பாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த மகிமை இறுதி ஃபரிஷ்தா சொரூபத்தினுடையது அதாவது எதிர்கால ஆதி சொரூபத்தினுடையது. எப்படி பிரம்மா தான் ஸ்ரீகிருஷ்ணர் ஆகிறார் என்று கூறுகிறோம். அப்படி நீங்களும் இறுதி ஃபரிஷ்தா நிலையிலிருந்து தேவதை ஆவீர்கள், அப்படி இது ஆதி சொரூபத்தின் மகிமை.

அனாதி சொரூபத்தின் மகிமை எது தந்தையின் மகிமையாக இருக்கிறதோ அது மாஸ்டர் சொரூபத்தில் உங்களுடைய அனாதி சொரூபத்தின் மகிமையாக இருக்கிறது. எப்படி மாஸ்டர் சர்வ சக்திவான், மாஸ்டர் ஞானம் நிறைந்தவர், மாஸ்டர் ஆனந்தம் நிறைந்தவர், மாஸ்டர் அமைதி நிறைந்தவர் ஆகியவை.

**தற்சமயம் உயர்ந்த பிராமண சொரூபத்தின் மகிமையாக என்ன இருக்கிறது?** பிராமணர்களின் வாழ்க்கைக்கு முக்கியமாக நான்கு ஆதாரங்கள் இருக்கிறது. படிப்பவர் மற்றும் படிப்பிப்பவர்களை பிராமணன் என்று கூறவே படுகிறது. பிராமண வாழ்க்கை என்றால் இறை மாணவ வாழ்க்கை. படிப்பின் முக்கியமான நான்கு பாடங்கள்

இருக்கின்றன. அவைகள் தான் பிராமண வாழ்க்கையின் நான்கு ஆதாரங்கள். மேலும் இதே ஆதாரத்தினால் பிராமண சொரூபத்தின் மகிமை இருக்கிறது. மேலும் அது 1) பரமாத்ம ஞானி, 2) சகஜ இராஜயோகி, 3) தெய்வீக குணமுடையவர். 4) உலக சேவாதாரி. இது தான் தற்சமயத்து பிராமண வாழ்க்கையின் மகிமை ஆகும். தன்னுடைய மூன்று சொரூபங்களின் மகிமையைத் தெரிந்து கொண்டு தன்னுடைய மகான் நிலையைப் பாருங்கள். மேலும் எந்தெந்த லட்சணத்தை நடைமுறை வாழ்க்கையில் நிரந்தரமான ரூபத்தில் கடைபிடித்திருக்கிறேன் என்று சோதனை செய்யுங்கள். பரமாத்மா ஞானியில் இவர் பரமாத்மா ஞானி என்று வெளிப்படையாகத் தெரிகிற மாதிரி அப்படி என்ன விசேஷ லட்சணம் இருக்கிறது. முக்கியமான லட்சணம் எது? ஒவ்வொரு பாடத்தின் லட்சணம் வேறு வேறாக இருக்கும். பரமாத்மா ஞானி என்றால் ஞானம் நிறைந்தவர், ஞானம் நிறைந்தவர் என்றால் பரமாத்மா ஞானி என்பதாகும். ஞானத்தின் விசேஷ பிராப்தி என்ன? ஞானத்தின் பலன் என்ன? ஞானத்தின் பலன் என்றால் பரமாத்மா ஞானியின் முக்கிய லட்சணம் -ஒவ்வொரு எண்ணத்தில், வார்த்தையில், காரியத்தில், தொடர்பில் முக்தி மற்றும் ஜீவன் முக்தியின் நிலை இருக்கும், இதைத் தான் பற்றற்ற மற்றும் அன்பான நிலை என்று கூறுவது. அந்த நிலை தான் ஜீவன் முக்தியின் நிலை ஆகும். காரியங்கள் செய்து கொண்டும் பந்தனங்களிலிருந்து விடுபட்ட நிலை. அதாவது பரமாத்மா ஞானியின் விசேஷ லட்சணம் என்னவென்றால், அனைத்திலிருந்தும் விடுபட்ட மற்றும் ஜீவன்முக்தி நிலை. ஞானம் என்றால் அறிவு/விவேகம், விவேகம் நிறைந்தவர் எப்பொழுதும் தன்னை பந்தனத்திலிருந்து விடுபட்டவராக, அனைத்து கவர்ச்சிகளிலிருந்தும் விடுபடச் செய்வதின் விவேகத்தை வைத்துக் கொள்கிறார். அப்படி பரமாத்மா ஞானியின் விசேஷ லட்சணம் முக்தி மற்றும் ஜீவன்முக்தி என்பதாகும்.

**இதே விதமாக சகஜ இராஜயோகியின் லட்சணமாக என்ன இருக்கும்?** யோகி என்றால் யோகயுக்த் (யோகம் நிறைந்தவர்) அதாவது யுக்தியுக்த் (யுக்தி நிறைந்தவர்) அவர் எண்ணம் மற்றும் காரியத்தின் சமநிலையின் சித்தி சொரூபமானவராக இருப்பார். நல்லது.

தெய்வீக குணம் நிறைந்தவரின் முக்கிய லட்சணமாக என்ன இருக்கும்? திருப்தியாக இருப்பது மற்றும் அனைவரையும் திருப்திப் படுத்துவது

அவருக்கு அனைவரின் திருப்தியின் ஆசீர்வாதம் கிடைக்கும் அதாவது இறை பல்கலைக்கழகத்தின் சான்றிதழ் கிடைக்கும்.

**உலக சேவாதாரியின் விசேஷ லட்சணமாக என்ன இருக்கும்?** உலக சேவாதாரி என்றால் பணிவானவர் மற்றும் களைப்படையாதவர். எப்பொழுதும் பிரகாசமாக எரியும் ஜோதியாக இருப்பார். எரியும் ஜோதி என்றால் தூக்கத்தை வென்றவர் என்பது மட்டுமல்ல, ஆனால் அனைத்து தடைகளையும் வென்றவர். அவரைத் தான் பிரகாசமாக எரியும் ஜோதி என்று கூறுவது. நினைவு இருப்பது கூட விழித்திருப்பதாகும். எனவே இப்பொழுது இந்த அனைத்து லட்சணங்களை எதிரில் வைத்து இறை பல்கலைக்கழகத்தில் முழுமையான பட்டத்தைப் பெற்றிருக்கிறேனா என்று பாருங்கள். நான்கு பாடங்களின் ஆதாரத்தில் என்னென்ன மகிமை கூறியிருக்கிறோமோ அது தான் பிராமண வாழ்க்கையின் பட்டம் ஆகும். அப்படியானால் இந்தப் பட்டத்தை பெற்றிருக்கிறீர்களா? இது தற்சமயத்தின் பட்டம் ஆகும். ஃபரிஷ்தா சொரூபத்தின் பட்டமோ வேறு ஆகும் ஆனால் இப்பொழுதோ ஒவ்வொருவரும் தன்னை ஞானி, யோகி, சேவாதாரி என்று கூறுகிறீர்கள் இல்லையா? அப்படி தன்னை என்னவென்று கூறுகிறீர்களோ, நினைக்கிறீர்களோ மேலும் அனைவரும் சாஸ்திர ஞானிகள், நாங்கள் பரமாத்மா ஞானிகள், அவர்கள் அனைவரும் ஹடயோகிகள் நாங்கள் சகஜ இராஜயோகிகள் என்று சவால் விடுகிறீர்கள். தெய்வீக குணம் நிறைந்தவர் என்றால் தாமரை மலருக்குச் சமமான வாழ்க்கை உள்ளவர்கள். நாம் உலகத்திற்கு நன்மை செய்பவர் என்றால் சேவாதாரிகள்! எனவே என்ன சவால் விடுகிறீர்களோ அது தான் லட்சணத்தில் தென்பட வேண்டும். இது கடினமா என்ன? இதுவோ பிராமணர்களின் இயற்கையான தர்மம் மற்றும் கர்மம் ஆகும். எது ஜென்மத்தின், ஜாதியின் தர்மம் மற்றும் கர்மமாக இருக்கிறதோ அது கடினமாக இருக்காது. தற்சமயத்து மகிமையை உண்மையான, நிரந்தர தர்மம் மற்றும் காரியமாக ஆக்குங்கள். புரிந்ததா? நல்லது.

அந்த மாதிரி லட்சியம் மற்றும் லட்சணத்தை சமமாக ஆக்கக்கூடிய, மூன்று சொரூபங்களின் மகிமையினால் மகான் ஆகக்கூடிய, எப்பொழுதும் விடுபட்ட, ஜீவன்முக்த், யுக்தியுக்த், எப்பொழுதும் திருப்தியாக, எப்பொழுதும் களைப்பற்ற, பணிவான, எப்பொழுதும் எரிந்து

கொண்டிருக்கும் ஜோதியான உயர்ந்த பிராமணர்களுக்கு ஆதி தந்தை மற்றும் அனாதி தந்தையின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: பிராமண வாழ்க்கையின் விசேஷத்தைத் தெரிந்து அதைக் காரியத்தில் ஈடுபடுத்தக்கூடிய அனைத்து விசேஷங்கள் நிரம்பியவர் ஆகுக!**

நாடகத்தின் நியமப்படி சங்கமயுகத்தில் ஒவ்வொரு பிராமண ஆத்மாவிற்கும் விசேஷம் கிடைத்திருக்கிறது. மாலையின் கடைசி மணியாக இருந்தாலும் அதிலேயும் விசேஷம் இருக்கிறது என்றால், பிராமண ஜென்மத்தின் பாக்கியத்தின் விசேஷத்தைத் தெரிந்து கொள்ளுங்கள் மற்றும் அதைக் காரியத்தில் ஈடுபடுத்துங்கள். ஒரு விசேஷத்தை காரியத்தில் ஈடுபடுத்தினீர்கள் என்றால், இன்னும் விசேஷங்கள் தானாகவே வந்து விடும். ஒன்றின் எதிரில் பூஜ்யம் போட்டு போட்டு அனைத்து விசேஷங்கள் நிரம்பியவர் ஆகி விடுவீர்கள்.

**சுலோகன்: மன்மனாபவ என்ற மந்திரத்தின் நினைவு எப்பொழுதும் இருக்கிறது என்றால் மனம் அலைபாய்வது நின்று விடும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 06.02.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ரியலைசேஷன் (உணருதல்) மூலமாக லிபரேஷன் (விடுதலை)!

இன்று பாப்தாதா ஒவ்வொரு இறை மாணவனின் ரிசல்ட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். பாடம் படித்தீர்கள், நடந்த பாடத்தை மீண்டும் படித்தீர்கள், ரியலைசேஷன் (உணரும்) பாடத்தையும் படித்து விட்டீர்கள். அதனுடைய ரிசல்ட்டாக என்ன இருக்கிறது? ஒவ்வொருவரும் தன்னுடைய படிப்பின் அனுசாரம் எந்த நிலையை அடைய முடியும் என்று உணர்ந்திருக்கிறீர்களா? இராஜ பதவியின் சம்ஸ்காரம் அல்லது பிரஜை பதவிக்கான சம்ஸ்காரம் இந்த இரண்டிலிருந்து ஆத்மாவாகிய என்னுள் எந்த சம்ஸ்காரம் நிரம்பியிருக்கிறது என்று இதை தெரிந்திருக்கிறீர்களா? இராஜபதவியின் சம்ஸ்காரம் என்றால் உயர்ந்த பதவிக்கான சம்ஸ்காரமாக என்ன தென்படும்? அதிகாரி மற்றும் சத்காரி (மரியாதை கொடுப்பவர் மற்றும் மரியாதைக்குரியவர்), நிராகாரி மற்றும் நிரகங்காரி இந்த விசேஷ தாரணைகள் இராஜ பதவிக்கான விசேஷ ஆசனமாகும். இந்த ஆசனம் தான் சிம்மாசனத்தை பிராப்தி செய்விக்கிறது. நான்கு விஷயங்களின் சமநிலை இருக்கட்டும். அந்த மாதிரியான ஆசனம் உறுதியாக இருக்கிறதா அல்லது ஆடிக் கொண்டிருக்கிறதா? பாப்தாதா இன்று ரிசல்ட்டை கேட்டுக் கொண்டிருக்கிறார். ரியலைசேஷன் பாடத்திற்கான வீட்டுப்பாடம் கொடுத்திருந்தோம். அதனுடைய ரிசல்ட் என்ன ஆனது? நீங்கள் அனைவருமோ கடைசி பரீட்சைக்காக தயாராக இருந்தீர்கள், இன்று தன்னுடைய ரிசல்ட்டாக என்ன பார்த்தீர்கள்? தன்னுடைய நிலையாக என்ன அனுபவம் செய்தீர்கள்? தந்தைக்குச் சமமாக, தந்தையுடனே செல்பவராக ஆகியிருக்கிறீர்களா? ஒருவேளை சமமாக இல்லை என்றால் உடன் செல்வதற்குப் பதிலாக வேறு வழியில் நிற்க வேண்டியதாக இருக்கும். வேறு வழியாக ஏன் செல்ல வேண்டும் என்றால், கணக்கை முடிக்காமல் இருந்திருப்பீர்கள். ரிஃபைன் இல்லை என்றால் ஃபைன் (அபராதம்) கட்ட வேண்டியதாக இருக்கும். எனவே உடன் செல்ல முடியாது. என்ன உறுதிமொழி செய்திருந்தீர்கள்? உடன்

செல்வோம் என்றா அல்லது நின்று செல்வோம் என்றா? தந்தையிடம் நீங்கள் பழைய குழந்தைகளை ஏன் சந்திப்பதில்லை என்று கேட்கிறார்கள். தந்தையும் ரிஃபைன் ஆகிவிட்டீர்களா என்று ரிசல்ட்டை கேட்கிறார். இப்பொழுதும் ஏதாவது பாடம் படிப்பதற்கான அவசியம் இருக்கிறதா? ரியலைசேஷனிற்குப் பிறகு வேறு என்ன மிச்சம் இருக்கிறது. கடைசி ரிசல்ட்டின் சொரூபமாவது ரியலைசேஷனிற்குப் பிறகு லிபரேஷன் அதாவது அனைத்திலிருந்தும் விடுபட்ட நிலை.

இன்று பாப்தாதா தந்தை மற்றும் குழந்தைகளிடையே இருக்கும் இடைவெளியைப் பார்த்துக் கொண்டிருந்தார். தந்தை என்ன கூறுகிறார் மற்றும் குழந்தைகள் என்ன செய்கிறார்கள்? ரிசல்ட்டாக என்ன பார்த்திருந்திருப்பார்? மகிழ்ச்சி அளிக்கும் ரிசல்ட்டாக இருக்கும் இல்லையா. சொல்லலாமா அல்லது புரிந்து கொண்டீர்களா? புரிந்து கொண்டபோதிலும் செய்து கொண்டே இருக்கிறார்கள் என்றால் என்னவென்று கூறுவது. பெரும்பான்மையோர் சாதாரண முயற்சி செய்பவர்களாக இருக்கிறார்கள். இதற்கான முக்கிய காரணம் என்ன? பிரபுவிற்குப் பிரியமானவர் ஆகுங்கள். உலகிற்குப் பிரியமானவர் ஆகுங்கள் என்று தந்தை கூறுகிறார் ஆனால் என்ன செய்கிறார்கள்? ஓய்வு விரும்பிகளாக ஆகிவிடுகிறார்கள். ஆகிவிடும். யார் செய்திருக்கிறார்கள், அனைவரும் அப்படித் தான், மற்றவர்களைவிட நாம் சரியாக இருக்கிறோம் என்று அந்த மாதிரி அனேக விதமான இறங்கும் கலைக்கான டன்லப் தலையணைகளைப் போட்டு ஓய்வு விரும்பியாக ஆகிவிடுகிறார்கள். தொடர்பை இணைத்துக் கொள்ளுங்கள், குணங்கள் மற்றும் சக்திகளின் வரதானத்தைப் பெறுங்கள் மற்றும் கொடுங்கள் என்று தந்தை கூறுகிறார் ஆனால் அனேக குழந்தைகள் தொடர்பின் மகத்துவத்தைத் தெரிந்திருக்கவில்லை. கனெக்ஷன் (தொடர்பை) ஏற்படுத்துவது தெரிவதில்லை, ஆனால் கரெக்ஷன் (சரி) செய்வது மிகவும் தெரிந்திருக்கிறார்கள். மற்றவர்களை கரெக்ஷன் செய்பவர்கள் கனெக்ஷனின் அனுபவம் செய்ய முடியாது. எப்பொழுதும் நினைவின் சாதனையில் (பயிற்சியில்) இருங்கள் என்று தந்தை கூறுகிறார் ஆனால் சாதனையின் இடத்தில் அற்ப காலத்து சாதனங்களில் அதிகமாக பிஸியாக இருக்கிறார்கள். சாதனங்களின் ஆதாரத்தில் சாதனையை ஆக்கிவிடுகிறார்கள். சாதனம் அதிகமாக கவருகிறது. அந்த மாதிரியான பயிற்சியாளர்களின் சாதனை வெற்றி அடைவதில்லை. ஜீவன்

முக்திக்குப் பதிலாக பந்தனம் நிறைந்தவர்களாக ஆகிவிடுகிறார்கள். புரிந்ததா. தந்தை என்ன கூறுகிறார் மற்றும் குழந்தைகள் என்ன செய்கிறார்கள் என்ற ரிசல்ட்டைக் கேட்டீர்களா?

பாப்தாதா உயர்ந்த ஆத்மாக்களை எப்பொழுதும் உயர்ந்த பார்வையில் பார்க்கிறார். உயர்ந்த அதிர்ஷ்ட ரேகைகளைப் பார்க்கிறார். இந்த ஆத்மாக்கள் தான் உலகிற்கு எதிரே பிரகாசமாக இருக்கும் நட்சத்திரங்கள். உலகம் உங்களுடைய கல்பத்திற்கு முந்தைய சம்பன்ன சொரூபம், பூஜ்ய சொரூபத்தை நினைத்து வர்ணனை செய்து கொண்டிருக்கிறது. எனவே தன்னுடைய சம்பன்ன சொரூபத்தை நடைமுறையில் வெளிப்படுத்துங்கள். கடந்த கால பலஹீனங்கள் மேல் முற்றுப்புள்ளி வையுங்கள். அப்பொழுது தான் சம்பன்ன சொரூபத்தின் சாட்சாத்காரம் ஏற்படும். அனைத்து பழைய சம்ஸ்காரம் மற்றும் சுபாவத்தை உறுதியான எண்ணம் என்ற ஆஹூதி மூலம் அழித்து விடுங்கள். மற்றவர்களின் பலஹீனத்தை நகல் செய்யாதீர்கள். அவகுணத்தைத் தாரணை செய்யும் புத்தியை அழியுங்கள், தெய்வீக் குணங்களை தாரணை செய்யும் சதோபிரதான புத்தியை தாரணை செய்யுங்கள். அதிகாரி மற்றும் சத்காரி இரண்டின் சரியான சமநிலையை வையுங்கள். மற்றவர்களின் பலஹீனத்தை விஸ்தாரத்தில் கொண்டு வராதீர்கள் மற்றும் தன்னுடைய பலஹீனத்தை மறைக்காதீர்கள். வெற்றியில் தன்னையும், வெற்றியில்லாததில் மற்றவர்களையும் காரணம் சொல்லாதீர்கள். மதிப்பு மற்றும் மரியாதையின் தியாகம், சாதனங்களின் தியாகம் இது தான் மகான் தியாகம் ஆகும். சாகார பாபாவிற்கு சமமாக அற்ப காலத்து மகிமையின் தியாகியாக ஆகுங்கள். அப்பொழுது தான் உயர்ந்த பாக்கியவான் ஆக முடியும். இந்த அனைத்து விஷயங்களிலிருந்தும் நீங்கள் விடுபட வேண்டும் என்று சிவபாபா விரும்புகிறார். இந்த கடைசி பலம் கொடுக்கும் பாடத்திற்காக நேரம் கிடைத்திருக்கிறது.

அந்த மாதிரி உலக அதிகாரி, மரியாதை கொடுத்து உலகத்தின் மூலமாக மரியாதைக்குரியவராக ஆகக்கூடிய, பணிவு மூலமாக மற்றவர்கள் நினைப்பதற்குத் தகுதியானவர்கள் ஆகக்கூடிய, கடந்ததை முடிக்கக்கூடிய, அனைத்து குணங்களில் சம்பன்னமானவர் ஆகக்கூடிய, எப்பொழுதும் சமநிலை மற்றும் துணையில் இருக்கக்கூடிய உயர்ந்த

பாக்கியசாலி ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**டீச்சர்களுக்காக**: என்னென்ன கேட்டீர்களோ அந்த அனைத்தின் சாரத்தை தன்னுடைய வாழ்க்கையில் கொண்டு வருகிறீர்கள் தான் இல்லையா? ஏனென்றால் டீச்சரின் அர்த்தமே இரகசியம் நிறைந்து மற்றும் சாரம் நிறைந்து நடந்து கொள்பவர்.

**டீச்சரின் விசேஷமாவது:**

1) விஸ்தாரத்தை ஒரு நொடியில் சாரத்தில் கொண்டு வர வேண்டும். எப்படி எஸன்சின் (சாறின்) ஒரு துளி மட்டும் போடப்படும் ஆனால் அது மிகுந்த காரியம் செய்து விடுகிறது. அப்படியே டீச்சர்கள் என்றால் சாரம் நிறைந்தவர்கள், வீணானதின் விஸ்தாரத்தை ஒரு நொடியில் சார ரூபத்தில் செய்பவர்கள் மற்றும் மற்றவர்களையும் செய்விப்பவர்கள்.

2) டீச்சர்களும் பவர் ஹவுஸாக இருக்கும் தந்தைக்குச் சமமாக சப் ஸ்டேஷன் (துணை நிலையம்) ஆவார்கள். எப்படி பவர் ஹவுஸில் எங்காவது ஃப்யூஸ் போய்விடக்கூடாது என்று எப்பொழுதும் கவனம் மற்றும் சோதனை இருக்கிறது. அதே போல் டீச்சர்களும் என்ன சோதனை செய்ய வேண்டும்? ஒருபொழுதும் எந்தச் சூழ்நிலையிலும் குழப்பம் அடையக்கூடாது. எப்படி பவர் ஹவுஸின் சிறிய குறைபாடு முழு ஏரியாவின் மின்சாரத்தை அசைத்து விடுகிறது. அதே போலவே டீச்சரின் குழப்பத்தினால் சூழ்நிலையில் பிரபாவம் ஏற்பட்டு விடுகிறது மற்றும் சூழ்நிலையின் பிரபாவம் வகுப்பிற்கு வருபவர்கள் மீதும் ஏற்படுகிறது. எனவே டீச்சர்கள் அனேக ஆத்மாக்களை முன்னேற்றம் செய்வதற்கும் மற்றும் ஆட, அசைய வைப்பதற்கும் பொறுப்பாளர் என்று புரிந்து கொள்ள வேண்டும்.

3) டீச்சர்கள் களைப்பற்றவர்கள் தான் இல்லையா? மிகச்சிறிய விஷயத்தில் களைப்படைபவர்கள் இல்லையே? முயற்சி செய்வதில் தன் மேல் தானே களைப்படைவதும் இருக்கும். ஏதாவது விதமான சம்ஸ்காரம் அல்லது சுபாவத்தை மாற்றம் செய்வதில் மனமுடைந்து போவது அல்லது அலட்சியத்தன்மை வருவதும் களைப்படைவது ஆகும். இதுவோ நடந்து கொண்டு தான் இருக்கிறது. இந்த மாதிரி நடக்கத் தானே செய்யும் என்று நினைப்பது அலட்சியம் ஆகும். மிகவும் கடினம், எவ்வளவு தான் செய்ய முடியும்? என்பது மனமுடைந்து போவதாகும். அப்படி முயற்சி செய்வதில்

அலட்சியமாக இருப்பதாகும். மனமுடைந்து போவதும் களைப்படைவதாகும்.

4) யாரிடம் சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் சக்தி இருக்கிறதோ அவர் எப்பொழுதும் ஊக்கம் உற்சாகத்தில் இருப்பார். குழப்பம் அடைய மாட்டார்.

5) டீச்சர்களே தந்தைக்குச் சமமான சேவாதாரி! அப்படியானால் சமமாக இருப்பவர்கள் தான் இல்லையா. சமநிலையில் இருப்பதிலும் குஷி ஏற்படும். டீச்சர்கள் நான் தந்தைக்குச் சமமான மாஸ்டர் ஆசிரியர், தந்தைக்குச் சமமாக பொறுப்பாளர் ஆகியிருக்கிறேன் என்ற இந்த குஷியில் எப்பொழுதும் இருக்கிறார்கள். தந்தைக்குச் சமமாக அனேக ஆத்மாக்களுக்கு நன்மை செய்யும் பொறுப்பும் இருக்கிறது என்றால் தந்தைக்குச் சமமாக ஆகியிருக்கிறீர்களா? இந்த குஷி மிகவும் முன்னேறிச் செல்ல வைக்க முடியும். டீச்சர்களைப் பார்த்து பாப்தாதாவும் குஷி அடைகிறார். சமமாக இருப்பவர்களை நட்பு குழு என்று கூறுவார்கள். ஆக நண்பர்களின் குழுவாக ஆகிவிட்டதில்லையா

6) டீச்சர்களுக்கு எப்பொழுதும் புதுத் திட்டத்தை உருவாக்க வேண்டும் திட்டமிடும் புத்தியாக இருக்க வேண்டும். மேலும் மிகச் சுலபமாக திட்டமிடும் புத்தி உடையவராக ஆகவும் முடியும். எப்படி? அமிர்தவேளையில் தெளிவான புத்தி இருக்கிறது என்றால் பாப்தாதா மூலமாக திட்டம் புத்தியில் டச் ஆகும். அப்படி திட்டமிடும் புத்தி உள்ளவராக ஆகிக் கொண்டே இருப்பீர்கள். சாகாரமாக ஏதாவது ஆதாரத்தை எடுத்துக் கொள்கிறீர்கள். அதனால் தான் பிளானிங் புத்தி உடையவராக ஆக முடிவதில்லை. இல்லையென்றால் டீச்சர்களின் உறவு நட்புடையதானதாக ஆன காரணத்தினால் நெருக்கமானது. அப்படி மிக அதிக சகயோகத்தைப் பெற முடியும். தந்தை பார்க்கின்றபோது சாகார ஆதாரத்தை உருவாக்கி வைத்திருக்கிறார்கள் என்றால், தந்தை ஏன் உதவி செய்ய வேண்டும்?

7) டீச்சர்களின் விசேஷமாக என்ன இருக்கிறது? டீச்சர்கள் கண்டுபிடிக்கும், படைக்கும், திட்டமிடும் புத்தியுள்ளவர்களாக இருக்கிறார்கள். அனேக ஆத்மாக்களுக்கு ஊக்கம் உற்சாகம் கொடுப்பவர்கள். இப்பொழுது இந்த அனைத்து விசேஷங்களை வெளிப்படுத்தினீர்கள் என்றால் எல்லைக்குட்பட்ட விஷயங்கள் உள்ளடங்கிப் போய் விடும். புரிந்ததா?

8) டீச்சர்களின் விசேஷம் அனுபவம் நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். பேசுபவர்களாக மட்டுமின்றி அனுபவம் நிறைந்தவர்களாகவும் இருக்கிறார்கள். பேசுவது கூட அனுபவத்தின் ஆதாரத்தில் இருக்கிறது.

இத்தனை அனைத்து விசேஷங்கள் நிரம்பிய பார்வையோடு பாப்தாதா பார்க்கிறார். அப்படியானால் எவ்வளவு மஹானாக ஆகிவிட்டீர்கள். மஹான் நிலையை விருந்தினர் என்று புரிந்து நடத்துவிக்க வேண்டும். மஹான் நிலையை தன்னுடைய சொத்து என்று புரிந்து கொண்டு விடாதீர்கள். நிலையை தந்தையினுடையது என்று புரிந்து கொள்ளாது, தன்னுடையது என்று நினைத்துக் கொண்டால் மஹான் நஷ்டமாகும். தந்தை மூலமாக கிடைத்திருக்கும் மஹான் நிலை என்றால் தந்தையை நடுவே மறந்து விடாதீர்கள். நல்லது.

**பார்ட்டிகளுடன் -தனிப்பட்ட சந்திப்பு: சதா குஷியாய் இருப்பதற்கான சாதனம்! அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பிய ஆத்மாவின் அடையாளம் என்னவாக இருக்கும்?** யார் பொக்கிஷங்களினால் நிரம்பியவராக இருப்பாரோ அவர் எப்பொழுதும் அதீந்திரிய சுகத்தில் மூழ்கியிருப்பார். அவருக்கு தந்தை மற்றும் சேவையைத் தவிர வேறு எதுவும் நினைவிருக்காது. அவர் எல்லைக்குட்பட்ட குடும்பத்தைக் கவனித்துக் கொண்டே ஈஸ்வரிய சேவைக்காக தன்னை டிரஸ்டி என்று புரிந்து கொண்டு குடும்பத்தின் காரியங்களைச் செய்வார். அவருடைய ஒவ்வொரு காரியமும் ஸ்ரீமத்படி இருக்கும், அதில் கொஞ்சம் கூட மனம் சொல்லும் வழியோ அல்லது மற்றவர்கள் சொல்லும் வழியோ கலந்திருக்காது. ஸ்ரீமத்தில் ஒருவேளை கொஞ்சமாவது தனது மனம் சொல்லும் வழி அல்லது மற்றவர்கள் சொல்லும் வழி கலந்திருக்கிறது என்றால் அதனுடைய விளைவு என்னவாகத் தென்படும்? ஒருவேளை ஸ்ரீமத்தில் மனம் சொல்லும் வழி அல்லது மற்றவர்கள் சொல்லும் வழி கலந்திருக்கிறது என்றால், எப்படி சுத்தமான பொருளில் ஏதாவது அசுத்தமான பொருள் கலந்து விட்டது என்றால், ஏதாவது நஷ்டம் ஏற்பட்டு விடுகிறது. அதே போல் இங்கேயும் ஸ்ரீமத்தில் மனம் சொல்லும் வழி அல்லது மற்றவர்கள் சொல்லும் வழி கலந்து விடுகிறது என்றால், சேவை மூலமாக என்ன பிராப்தி ஆக வேண்டுமோ அது ஆவதில்லை. குஷி, வெற்றி, சக்தியின் அனுபவமும் இருக்காது. ஸ்ரீமத்படி நடப்பதினால் அதன் விளைவாக வெற்றி இருக்கும். அதாவது அனைத்து பிராப்திகளும் இருக்கும். சில சில நேரங்களில் கடுமையாக உழைக்கிறீர்கள் ஆனால் வெற்றி குறைவாக கிடைக்கிறது, அனுபவமும் குறைவாக இருக்கிறது என்று இந்த அனுபவத்தையும் செய்திருந்திருப்பீர்கள். மேலும் சில நேரம் உழைப்பு குறைவாக, முயற்சி

குறைவாக இருந்த போதிலும் பிராப்தி அதிகமாக இருக்கிறது. இதற்கான காரணம் ஒன்று யதார்த்தமானது மற்றும் இன்னொன்று கலப்படமானது என்பதாகும். எனவே இந்த சூட்சும சோதனை செய்ய வேண்டும். ஏனென்றால் மனம் சொல்லும் வழி மிக சூட்சுமமானது. மாயா மனம் சொல்லும் வழியை ஈஸ்வரிய வழியில் ராயல் ரூபத்தில் கலந்து விடுகிறது. நீங்கள் இது ஈஸ்வரிய வழி என்று நினைப்பீர்கள் ஆனால் அது மனம் சொல்லும் வழியாக இருக்கும். இதற்காக பகுத்தறியும் மற்றும் நிர்ணயம் செய்யும் சக்தி தேவையாக இருக்கிறது. ஒருவேளை இந்த இரண்டு சக்திகளும் சக்திசாலியாக இருக்கிறது என்றால் ஏமாற்றம் அடையமாட்டீர்கள். யாரிடம் அழும் பழக்கம் இருக்கிறதோ அந்தக் குழந்தைகள் தானாகவே தந்தையிடமிருந்து விலகி விடுகிறார்கள். மனதில் துக்கத்தின் உணர்வுகள் வருவது கூட அழுவதாகும். அழுபவர்களை தந்தையின் பிராப்தியை அடைபவர்கள் என்று சொல்ல முடியாது. எப்பொழுது தந்தையிடமிருந்து சம்மந்தம் வஞ்சிக்கப்பட்டு விடுகிறதோ அப்பொழுது துக்கத்தின் உணர்வுகள் வருகிறது. அப்படி அழுவது என்றால் தந்தையிடமிருந்து உறவை முறித்துக் கொள்வது. தந்தையிடமிருந்து தன்னுடைய முகத்தைத் திருப்பிக் கொள்வது என்பதாகும். யாராவது அழுகிறார் என்றால் யாரிடமும் முகத்தைக் காண்பிக்க மாட்டார், அவசியம் முகத்தை மறைப்பார், இதை நீங்களும் பார்த்திருந்திருப்பீர்கள். எப்படி ஸ்தூலமாக அழுவதினால் இயல்பாகவே முகம் மறைக்கப்பட்டு விடுகிறது என்றால், மனதினால் அழுவதினால் கூட இயல்பாகவே தந்தையிடமிருந்து முகத்தை திருப்பிக் கொள்கிறார்கள். ஒருபொழுதும் துக்கத்தின் உணர்வுகள் எண்ணத்தில் கூட வரக்கூடாது. சுகவள்ளலின் குழந்தைகளாக இருந்து கொண்டு பின்பு அவர்களிடம் துக்கத்தின் உணர்வுகள் இருக்கிறது என்றால் அது அழகல்ல. மூட் ஆஃப் ஆவது (மனநிலை கெடுவது) கூட மனதால் அழுவதாகும். அப்படி மூட் ஆஃப் ஆகிறீர்களா? எப்பொழுதாவது ஏதாவது சேவையின் வாய்ப்பு குறைவாக கிடைக்கிறது என்றால் மூட் ஆஃப் ஆகிறீர்களா? தன்னை களைப்பற்றவராகவும் மற்றும் சோம்பல் இல்லாதவராகவும் நினைக்கிறீர்களா? சோம்பல் என்றால் தூங்குவது மட்டும் அல்ல. களைப்பற்றவர் என்பதின் அர்த்தமே யாரிடம் சோம்பல் இல்லையோ அவர் தான். அப்படி எப்பொழுதும் களைப்பற்றவராகி இருப்பது என்றால், எப்பொழுதும் தந்தையின் எதிரில் இருப்பது என்றால் எப்பொழுதும் குஷியாக இருப்பார்கள். மிக வேகமுள்ளவர்கள் எந்தவொரு

பிரச்சனையிலும் நிற்க மாட்டார்கள். பிரச்சனை நிறுத்துவதற்கு முயற்சி செய்யும் ஆனால் அவர் அதைத் தாண்டிச் சென்று விடுவார். பிரச்சனைகளை சிந்தித்து நேரத்தை வீணாக்க மாட்டார். மிக வேகமுள்ளவர் என்றால் பாபா என்ன சொன்னாரோ அதைச் செய்தார். இவர் ஏதோ ஆன்மீகமான நபர் என்று தூரத்திலிருந்தே அனுபவம் ஆகும். சக்தி மற்றும் குஷியை பிராப்தி செய்வதற்கான ஆதாரம் உயர்ந்த காரியம் ஆகும். எப்பொழுது காரியம் மற்றும் யோகா இரண்டும் சேர்ந்தே இருக்கிறதோ அப்பொழுது தான் உயர்ந்த காரியம் இருக்கும். காரியம் செய்யும் போதும் யோகியாக இருக்கிறேனா என்று எப்பொழுதும் சோதனை செய்யுங்கள். காரியம் செய்யும் போது யோகா மறப்பதில்லையே? எப்படி ஆத்மா மற்றும் உடல் சேர்ந்தே இருக்கிறது, பிரிந்து விட்டால் பிணமாகிவிடுவார். அதே போல் ஒருவேளை காரியத்தின் கூடவே யோகா இல்லையென்றால் அந்தக் காரியம் பிரயோஜனம் இல்லாததாக ஆகிவிடுகிறது. பந்தனம் ஏற்படுத்தும் ஆத்மாவும் முயற்சி செய்வதில் சகயோகி ஆவார். பந்தனம் மூலமாக இன்னும் அதிகமாக விருப்பம் அதிகரிக்கிறது என்றால், பந்தனம், பந்தனமில்லாமல் அது சகயோகமாக ஆகிறது இல்லையா? ஒருவேளை சகயோகத்தின் பார்வையோடு பார்த்தீர்கள் என்றால் மகிழ்ச்சி வரும். பந்தனத்தை பந்தனத்தின் பார்வையோடு பார்த்தீர்கள் என்றால் பலஹீனமானவர் ஆகிவிடுவீர்கள்.

**வரதானம்: பிராமண வாழ்க்கையின் விசேஷத்தைத் தெரிந்து அதைக் காரியத்தில் ஈடுபடுத்தக்கூடிய அனைத்து விசேஷங்கள் நிரம்பியவர் ஆகுக!**

நாடகத்தின் நியமப்படி சங்கமயுகத்தில் ஒவ்வொரு பிராமண ஆத்மாவிற்கும் ஏதாவது விசேஷம் கிடைத்திருக்கிறது. மாலையின் கடைசி மணியாக இருந்தாலும் அதிலேயும் விசேஷம் இருக்கிறது என்றால், பிராமண ஜென்மத்தின் பாக்கியத்தின் விசேஷத்தைத் தெரிந்து கொள்ளுங்கள் மற்றும் அதைக் காரியத்தில் ஈடுபடுத்துங்கள். ஒரு விசேஷத்தை காரியத்தில் ஈடுபடுத்தினீர்கள் என்றால், இன்னும் விசேஷங்கள் தானாகவே வந்து விடும். ஒன்றின் எதிரில் பூஜ்யம் போட்டு போட்டு அனைத்து விசேஷங்கள் நிரம்பியவர் ஆகிவிடுவீர்கள்.

**சுலோகன்: மன்மனாபவ என்ற மந்திரத்தின் நினைவு எப்பொழுதும் இருக்கிறது என்றால் மனம் அலைபாய்வது நின்று விடும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 14.04.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உயர்ந்த அதிர்ஷ்டத்தின் வரைபடம்!

இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் அதிர்ஷ்டத்தின் வரைபடத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொருவரும் சக்திகேற்றபடி அவரவர்களின் வரைபடத்தைத் தயார் செய்திருக்கிறார்கள். வரைபடத்தினுள் ஆன்மீக நிலையின் விசேஷம் இருக்க வேண்டும். ஆன்மீகத்தன்மை நிரம்பிய வரைபடம் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் ஆன்மீக தந்தையின் வழியைக் கூறிவிடுகிறது. எப்படி லௌகீகத்தில் மிக அழகாக உருவாக்கப்பட்ட வரைபடம், இதை வரைந்தவர் யார் என்று தன்னுடைய படைப்பாளரின் நினைவூட்டுகிறது. தே போலவே ஆன்மீக வரைபடம் அதாவது உயர்ந்த அதிர்ஷ்டம் நிறைந்த வரைபடத்தை உருவாக்குபவர்கள் தந்தையின் பக்கம் இயல்பாகவே ஈர்ப்பார்கள். உங்களுடைய பாக்கியம், பாக்கியத்தை உருவாக்கும் பகவானின் நினைவை இயல்பாகவே கொண்டு வருகிறது. அந்த மாதிரி உயர்ந்த அதிர்ஷ்டத்தின் வரைபடத்தை வரைந்திருக்கிறீர்களா? ஆன்மீக அதிர்ஷ்டம் என்றால் நடைமுறையில் அனைத்துக் காரியங்கள் செய்து கொண்டே லைட் ஹவு ஆக இருப்பது. லைட் ஹவுஸின் வேலையே ஒவ்வொருவருக்கும் சரியான வழி காண்பிப்பது. அப்படியானால் இத்தனை லைட் ஹவுஸ்கள் என்ன அதிசயக் காரியம் செய்யலாம்? அந்த மாதிரி ஆகியிருக்கிறீர்களா அல்லது இதுவரையிலும் திட்டத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்களா? இந்த தடவை ரிசல்ட்டைப் பார்ப்பதற்காக பாப்தாதா வந்திருக்கிறார். எப்பொழுது பரீட்சையின் நாளாக இருக்குமோ அந்த நேரம் படிப்பு படிப்பிக்கப்படுவதில்லை, ஆனால் ஏற்கனவே படித்ததற்குத்தான் பரீட்சை இருக்கும். அப்படி பாப்தாதாவும் எண்ணம் மூலமாக, வாய்மொழி மூலமாக, காரியம் மூலமாக படிப்பை மிகவும் படிப்பித்திருக்கிறார். இப்பொழுது அதற்கான ரிசல்ட்டைப் பார்ப்போம். ஒவ்வொருவரும் தன்னுடைய ரிசல்ட்டின் மேல் திருப்தியாக இருக்கிறீர்களா? சோதனை செய்தீர்களா? நேரத்திற்குத் தகுந்தாற்போல் அல்லது தந்தையின் படிப்பிற்கு ஏற்றார் போல் உலகின்

எதிரில் தன்னை வெளிப்படையாக நிரூபித்திருக்கிறீர்களா? எந்தவொரு விஷயத்தையும் தெளிவுபடுத்துவதற்காக அனேக விதமான நிரூபணங்கள் கொடுக்கப்படுகின்றன ஆனால் அனைத்து நிரூபணங்களிலும் உயர்ந்த நிரூபணம் பிரத்யக்ஷமான நிரூபணம். அப்படியானால் அந்த மாதிரி ஆகியிருக்கிறீர்களா? யார் பார்த்தாலும் இவர்களுக்கு படிப்பிப்பவர் மற்றும் உருவாக்குபவர் சர்வ சக்திவான் தந்தை என்று அனுபவம் செய்ய வேண்டும். பிரத்யக்ஷ நிரூபணம் தான் தந்தையை பிரத்யக்ஷம் செய்வதற்கான சகஜ மற்றும் உயர்ந்த சாதனம் ஆகும். இந்த சாதனத்தைக் கடைபிடித்திருக்கிறீர்களா? பிரத்யக்ஷதா வருடத்தைக் கொண்டாடினீர்கள் ஆனால் தன்னை பிரத்யக்ஷ நிரூபணம் கொடுப்பவராக ஆக்கியிருக்கிறீர்களா? சுலபமா அல்லது கடினமா? ஏனென்றால் பிரத்யக்ஷ நிரூபணம் என்றால் என்னவாக இருக்கிறீர்கள், யாருடையவராக இருக்கிறீர்கள் என்ற அந்த நினைவில் இருப்பது. அது கடினமாக இருக்குமா? தன்னைத் தானே நினைவு செய்வது யாருக்காவது கடினமாக இருக்குமா? தற்காலிகமாக பங்கைச் செய்யும் நேரத்தில் தன்னுடைய தற்காலிகத்தின் பங்கின் நினைவை வைப்பது கடினமாக இருக்கும். எப்படி ஏதாவது ஒரு பெண், ஆண் வேடமிட்டு நடிக்கிறார் என்றால் நடித்துக் கொண்டிருக்கும்போதே பெண்ணின் ரூபம் சில நேரம் நினைவில் வந்து விடும் ஆனால் உண்மையான சொரூபத்தை ஒருபொழுதும் மறப்பதில்லை. அப்படி நீங்கள் என்னவாக இருக்கிறீர்கள். யாருடையவராக இருக்கிறீர்கள் மற்றும் எங்கே உள்ளவர்களாக இருக்கிறீர்கள் என்ற அந்த அனாதி உண்மையான சொரூபம், அனாதி தந்தை, அனாதி ஸ்தானம் ஆகியவற்றின் நினைவு சகஜமாக இருக்கிறதா அல்லது கடினமா? பிரத்யக்ஷ நிரூபணம் என்றால் அனாதி ரூபத்தில் நிலைத்திருப்பது. இருந்தும் மறந்து விடுகிறீர்கள். உண்மையிலேயே மறப்பது கடினமாக இருக்க வேண்டும். ஏனென்றால் மறந்து எந்த சொரூபத்தை நினைவில் கொண்டு வருகிறீர்களோ அது அனாதி சொரூபமில்லை, மத்திய காலத்தின் சொரூபம் ஆகும். மத்திய காலம் என்றால் துவாபரயுகத்தின் நேரம், அப்படி மத்திய காலத்தின் சொரூபம் கஷ்டப்பட்டு தான் நினைவு வருகிறது என்ற இது யதார்த்தம் அல்ல. யதார்த்தமற்றது.

பாப்தாதா ரிசல்ட்டைப் பெறுவதற்காக வந்திருக்கிறார், முக்கியமாக பழையவர்கள் யார் விசேஷமாக புகார்கள் மூலமாக

வரவழைத்திருக்கிறார்களோ. பழையவர்கள் வரவழைக்கப்படுவது என்றால், ரிசல்ட்டை கொடுப்பதற்காக தயாராக இருப்பது என்பதாகும். ஏனென்றால், பாப்தாதா முன்பாகவே கூறிவிட்டிருந்தார். புதியவர்களுக்கு தந்தை வருவது என்றால், தன்னைத் தானே உடலில் வாழ்ந்து கொண்டே இறந்தவராக ஆக்கும் துணிச்சல் வைப்பது ! ஏனென்றால் தந்தை வருவது என்றால் திருப்பி அழைத்துச் செல்வது மற்றும் பழைய உலகத்தை மாற்றம் செய்வது. அது போலவே நீங்கள் தந்தையை அழைப்பது என்றால் ரிசல்ட்டைக் கொடுப்பதற்காக தயாராக இருப்பது என்பதாகும். அப்படியானால் பரீட்சைக்காக தயாராக இருக்கிறீர்கள் தான் இல்லையா? உலகத்தை மாற்றம் செய்வதின் குழப்பத்தைப் பார்த்துக் கொண்டே ஸ்திரமாக இருக்கிறீர்களா? தன்னை குழப்பத்தில் கொண்டு வருபவர்களை இவர்கள் ஒரு காரணமானார்கள் என்று நினைக்கிறீர்களா அல்லது இதுவரையிலும் உங்களுடைய குழப்பத்திலேயே இருக்கிறீர்களா? உங்களை அசைப்பதற்கான பரீட்சையை பாப்தாதா எடுக்கலாமா? ஆடாமல் இருப்பீர்களா அல்லது ஆடிப்போய்விடுவீர்களா? தயாராக இருக்கிறீர்களா அல்லது எப்பொழுதும் தயாராக இருக்கிறீர்களா, ரிசல்ட் என்ன இருக்கிறது. தன்னுடைய சம்ஸ்காரங்களின் பரீட்சை, தன்னுடைய வீணான எண்ணங்களின் பரீட்சை அல்லது ஏதாவது சக்தியின் குறைவிற்கான காரணத்தின் பரீட்சை, அனைவரோடும் சம்ஸ்காரம் ஒத்துப்போகச் செய்வதின் பரீட்சை என்று இந்த சின்ன சின்ன எல்லைக்குட்பட்ட பரீட்சையிலும் இன்று வரை குழப்பத்தில் வருகிறீர்களா அல்லது அசையாமல் இருக்கிறீர்களா? பாப்தாதாவின் பரீட்சை என்றால் அனாதி தத்துவங்களின் மூலமான பரீட்சை, முழு உலகத்தின் குழப்பங்கள் மூலமான பரீட்சை, முழு உலகத்தின் சூழ்நிலைகள் மூலமான பரீட்சை, எல்லைக்கப்பாற்பட்ட உலகத்தின் கீழான நிலையின் அசுத்த வாயுமண்டலத்தின் மூலமான பரீட்சை அந்த மாதிரி எல்லைக்கப்பாற்பட்ட பரீட்சை எழுத தயாராக இருக்கிறீர்களா? முதலாவது தன் மூலமாக தனக்கான ப்ரீட்சை, சின்ன பிராமண உலகம் மூலமான அல்லது பிராமணர்களின் சம்ஸ்காரங்கள் மூலமாக வருகின்ற பரீட்சை, இது பிஞ்சான பரீட்சையா அல்லது பழுத்த பரீட்சையா? எப்படி 6 மாதங்கள் மற்றும் பன்னிரெண்டு மாதங்களின் பரீட்சை இருக்கிறது இல்லையா அப்படி எல்லைக்குட்பட்ட பரீட்சை எழுதி பாஸாகி விட்டீர்களா? இப்பொழுது எல்லைக்கப்பாற்பட்ட பரீட்சை தொடங்கலாமா? இப்படி எந்த விதமான பாடத்திலும் பாஸ் மார்க்

பெறுவதற்குத் தகுதியானவர் ஆகியிருக்கிறேனா அல்லது பாஸ் வித் ஆனர் ஆனேனா (கௌரவமான தேர்ச்சி) என்று தன்னைத் தானே சோதனை செய்யுங்கள். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? மிகவும் பயப்படுகிறீர்கள். யாரைக் கண்டு பயப்படுகிறீர்கள். சின்ன சின்ன மாயாவை நீர்க்குமிழிகளைக் கண்டா? அது இப்பொழுதிருக்கும். அடுத்த நேரம் இருக்காது சின்னக் குழந்தைகள் கூட நீர்க்குமிழிகளைக் கண்டு பயப்படுவதில்லை. பயப்படமாட்டார்கள் விளையாடுவார்கள் இல்லையா? மாஸ்டர் சர்வ சக்திவான் நீர்க்குமிழிகளோடு விளையாடுபவரேயன்றி பயப்படுபவர் அல்ல. நல்லது. பின்பு மேலே சொல்வோம். நல்லது.

அந்த மாதிரி அனைத்து காரியங்கள் செய்து கொண்டே லைட் ஹவுஸாக இருப்பவர்களுக்கு தன்னுடைய அதிர்ஷ்டத்தின் வரைபடம் மூலமாக அதிர்ஷ்டத்தை உருவாக்குபவர்களுக்கு, தந்தையை ஒவ்வொரு நேரமும் பிரத்யக்ஷம் செய்பவர்களுக்கு, அனைத்து சூழ்நிலைகளின் பரீட்சையில் எவரெடியாக இருப்பவர்களுக்கு, எப்பொழுதும் பிரத்யக்ஷ நிரூபணம் கொடுப்பவராகி மற்றவர்களுக்கு பிரேரணை கொடுக்கக்கூடிய அந்த மாதிரி எப்பொழுதும் மகாவீராக இருக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**டீச்சர்களுடன் தனிப்பட்ட சந்திப்பு:** டீச்சர்கள் என்றால் ஃபரிஷ்தா, டீச்சரின் வேலை வழிகாட்டியாகி யாத்திரீகர்களை உயர்ந்த இலக்கிற்கு அழைத்துச் செல்வதாகும். உயர்ந்த இலக்கிற்கு யாரால் அழைத்துச் செல்ல முடியும்? யார் அவரே ஃபரிஷ்தா அதாவது டபுள் லைட்டாக இருப்பாரோ அவரால் தான் முடியும். லேசானவர் தான் உயரே செல்ல முடியும். சுமை கீழே கொண்டு வந்து விடும். டீச்சரின் வேலை உயர்ந்த இலக்கிற்கு அழைத்துச் செல்வது. அப்படியானால் சுயம் நீங்கள் என்ன செய்வீர்கள்? லேசானவராக, ஃபரிஷ்தாவாக ஆவீர்கள் இல்லையா? ஒருவேளை ஃபரிஷ்தாவாக இல்லையென்றால் நீங்களும் கீழே இருப்பீர்கள், மற்றவர்களையும் கீழே கொண்டு வருவீர்கள். ன்னை ஃபரிஷ்தா என்று அனுபவம் செய்கிறீர்களா? உடலின் சுமையும் இல்லாமல் முற்றிலும் லேசான நிலை, மண் சுமையானதாக இருக்கும் இல்லையா? தேக உணர்வும் மண் தான். எப்பொழுது இதன் உணர்வு இருக்கிறது என்றால் சுமையாக இருப்பீர்கள். இதிலிருந்து விலகிய

# 1977 அவ்யக்த முரளி

லேசான நிலை என்றால் ஃபரிஷ்தாவாக ஆவீர்கள், அப்படி தேக உணர்விலிருந்தும் லேசான நிலை. தேக உணர்விலிருந்து விலகி விட்டீர்கள் என்றால் மற்ற அனைத்து விஷயங்களிலிருந்தும் இயல்பாகவே விலகி விடுவீர்கள். ஃபரிஷ்தா என்றால் தந்தையுடன் அனைத்து ரிஷ்தாக்களும் அதாவது உறவுகளும் இருக்க வேண்டும். தன்னுடைய உடல் கூடவும் ரிஷ்தா இருக்கக்கூடாது. தந்தையால் கொடுக்கப்பட்ட உடலையும் தந்தைக்குக் கொடுத்தாகிவிட்டது. தன்னுடைய பொருளை மற்றவர்களுக்குக் கொடுத்து விட்டோம் என்றால் நம்முடைய உறவு முடிவடைந்தது. அனைத்து கணக்கு வழக்கும் தந்தையோடு மட்டும் தான், வேறு யாருடனும் வேண்டாம். உன்னோடு தான் அமர்வேன், உன்னோடு தான் பேசுவேன் அப்படியானால் கொடுக்கல், வாங்கல் அனைத்து கணக்கும் தந்தையோடு ஆனது இல்லையா? எப்பொழுது ஒரு தந்தையோடு அனைத்து கணக்குகளும் ஆகிவிட்டது என்றால் மற்ற அனைத்து கணக்குகளும் முடிவடைந்து விட்டன இல்லையா? யாருடைய அனைத்து கணக்குகளும் தந்தையோடு இருக்கிறதோ அதாவது அனைத்து உறவுகளும் தந்தையோடு இருக்கிறதோ அவரே டீச்சர் ஆவார். தந்தையின் குழந்தையாக ஆகிவிட்டீர்கள் என்றால், பழைய கணக்கு அனைத்தும் முடிவடைந்து விட்டது. இதைத் தான் முழுப் பிச்சைக்காரன் அதாவது ஒன்றும் இல்லாதவர் என்று கூறுவது. பிச்சைக்காரனுக்கு எந்த பேங்கிலும் பணம் இருப்பதில்லை. கணக்கு இருப்பதில்லை, ஒரு தொடர்பும் இருப்பதில்லை. நபர்களுடனும் எந்த சாதனங்களுடனும் இல்லை. அனைத்து கணக்குகளும் முடிவடைந்தது.. பழைய கர்மங்களின் கணக்கிலும் எந்தவொரு பேங்க் இருப்பும் இருக்கக் கூடாது. அந்த மாதிரி சோதனை செய்ய வேண்டும். அந்த மாதிரி பல சம்பவங்கள் நடக்கின்றன, இறந்த பிறகு தெரியாமல் ஏதாவது பழைய கணக்கு தங்கி விடுகிறது என்றால் குடும்பத்தில் அவருடைய சந்ததிகளுக்கு தொந்தரவு கொடுக்கிறது. எனவே அனைத்து கணக்குகளும் முடிந்து விட்டனவா என்று சோதனை செய்கிறீர்களா? சுபாவம், சம்ஸ்காரம், தொடர்பு அனைத்து விஷயங்களும் அனைத்து உறவுகளும் முடிவடைந்தன என்றால் பின்பு காலியாகி விடுவீர்கள் இல்லையா? எப்பொழுது இந்த அளவு லேசானவர்கள் ஆவீர்களோ அப்பொழுது தான் வழிகாட்டி ஆகி, மற்றவர்களை உயரே தூக்கி விட முடியும். அப்படி டீச்சர்கள் என்ன செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா? டீச்சர் ஆவது சுலபமா அல்லது

கடினமா? டீச்சர் ஆவதும் தந்தைக்கு சமமாக ஆவது என்றால், யார் டீச்சரின் ஆசனத்தை அடைகிறார்களோ அவர்கள் தந்தைக்குச் சமமாக ஆகிறார்கள். டீச்சர் ஆகிறார்கள் என்றால் பொறுப்பு என்ற எண்ணத்தை எடுத்து கொள்கிறார்கள். எனவே தந்தையும் அந்த அளவு அவர்களுக்கு உதவி செய்கிறார். யார் எவ்வளவு பொறுப்பை எடுப்பாரோ, அந்த அளவே தந்தை சகயோகம் கொடுப்பதற்கு பொறுப்பாகிறார். எப்பொழுது தந்தையே பொறுப்பை எடுத்துக் கொள்கிறார் என்றால், கடினமானதா அல்லது சகஜமா? எப்பொழுது தந்தைக்குப் பொறுப்பைக் கொடுத்தாகி விட்டது என்றால் அவர் எடுக்கக்கூடாது. எதன் பொறுப்பாளர் ஆகிறார்களோ அதன் பொறுப்பு தன்னுடையது என்று நினைக்கிறார்கள் என்றால் கடினமாகி விடுகிறது. பொறுப்புடையவர் தந்தை தானேயன்றி நீங்கள் அல்ல. தானே தன் மேல் சுமையை வைத்து விடவில்லையே? அனேகருக்கு சுமையை தூக்குவதற்கான பழக்கம் இருக்கிறது. எவ்வளவு தான் கூறினாலும் தூக்கி விடுவார்கள். இது நடந்து விடக்கூடாது, அந்த மாதிரி ஆகிவிடக்கூடாது. . இது வீணானதின் சுமையாகும், தந்தை மேல் போட்டு விடுங்கள். தந்தையின் குழந்தையாகி தந்தை மேல் பொறுப்பை கொடுத்து விடுவதினால் வெற்றியும் அதிகம், முன்னேற்றமும் அதிகம். மேலும் சுலபமாக நடந்து விடும். டீச்சர்களோ பாப்தாதாவிற்கு பிரியமானவர்கள், ஏன்? இருந்தும் தைரியத்தையோ வைத்தார்கள் இல்லையா? பாப்தாதா தைரியத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார் ஆனால் தைரியம் இல்லாதவர்களைப் பார்த்து ஆச்சரியமும் அடைகிறார். டீச்சர்களுக்கு ஏன் மற்றும் என்ன என்ற கேள்விகளில் செல்லக்கூடாது. இல்லையென்றால், உங்களுடைய க்யூ-வும் அந்த மாதிரி ஆகிவிடும். டீச்சர் என்றால் முற்றுப்புள்ளியின் நிலையில் நிலைத்திருப்பது. கேள்விக்குறி உடையவர் பிரஜையில் வந்து விடுவார்கள். முற்றுப்புள்ளி என்றால் இராஜா. கேள்வி உள்ளவர்களுக்கு ஒருபொழுதும் அதீந்திரிய சுகம் இருக்க முடியாது. எனவே டீச்சர்களின் விசேஷ தாரணை முற்றுப்புள்ளியின் நிலை. டீச்சர்கள் என்றால், நிகழ்ச்சிகளின்படி மட்டும் நடப்பவர்களாக அன்றி கண்டுபிடிக்கும் புத்தி உள்ளவர்கள். புதியதைக் கண்டுபிடிப்பவர்கள். அப்படி சுலபமாகவும் மற்றும் அதிகத்திலும் அதிகமானவர்களுக்கு செய்தி சென்றடையும் அளவிற்கு புதியதை ஏதாவது கண்டுபிடித்திருக்கிறீர்களா? டீச்சர்கள் ஒவ்வொருவரும் இந்தக் கண்டுபிடிப்பு செய்ய வேண்டும். நல்லது.

# 1977 அவ்யக்த முரளி

**வரதானம்: தன்னுடைய காரியம் மற்றும் நிலை மூலமாக பிரம்மாபாபாவைத் தெளிவாகக் காண்பிக்கக்கூடிய மாஸ்டர் பிரம்மா ஆகுக!**

எப்படி "முதலில் நீங்கள்" என்ற சம்ஸ்காரம் பிரம்மாபாபாவிற்கு இயற்கையாகவே இருந்தது. எந்த இடத்திலும் முதலில் குழந்தைகள், ஒவ்வொரு விஷயத்திலும் குழந்தைகளை தன்னை விட முன்னுக்கு வைத்தார் ஆனால் வெறும் வாயளவில் சொல்வது என்றில்லாமல் நற்சிந்தனையின் பாவனையோடு வைத்தார். யாராவது செய்தாலும் தந்தையின் சேவைதான். நான் செய்தாலும் தந்தையின் சேவைதான். நான் முன்னேறிச் செல்ல வேண்டும் என்று அப்படி இருந்ததில்லை. மற்றவர்களை முன்னேற வைத்து தான் முன்னேற வேண்டும். எப்பொழுது இந்த பாவனை ஒவ்வொருவரிலும் வருமோ அப்பொழுது மாஸ்டர் பிரம்மா என்று கூறுவோம். பிறகு நாங்கள் பிரம்மாபாபாவைப் பார்க்கவில்லை என்று யாரும் கூற மாட்டார்கள். உங்களுடைய காரியம், உங்களுடைய நிலை பிரம்மாபாபாவைத் தெளிவாக காண்பிக்க வேண்டும்.

**சுலோகன்: ஒருமுனைப்பாட்டின் திட எண்ணத்தினால் கடலின் ஆழத்தில் சென்று விட்டீர்கள் என்றால் அனுபவத்தின் வைரங்கள், முத்துக்கள் கிடைக்கும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 16.04.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிராமண ஜென்மத்தின் தெய்விகத் தன்மை மற்றும் ஆன்மீகத் தன்மை கேட்பது மற்றும் உள்ளடக்குவது!

கேட்பது சகஜமாக இருக்கிறது. கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்று ஆர்வம் இருக்கிறது. இந்த இச்சை எப்பொழுதும் இருக்கிறது. அதே போலவே உள்ளடக்குவதும் இந்த அளவு சகஜமாக அனுபவம் ஆகிறதா? உள்ளடக்குவதினால் தந்தைக்குச் சமமாக ஆக வேண்டும் என்ற இந்த இச்சை எப்பொழுதும் இருக்கிறதா? உள்ளடக்குவதின் சொரூபம் தந்தைக்குச் சமமாக ஆவது. அப்படியானால் இதுவரையிலும் முதல் நிலையில் இருக்கிறீர்களா, இரண்டாம் நிலையில் இருக்கிறீர்களா அல்லது கடைசி நிலை வரையிலும் இருக்கிறீர்களா? கேட்பது மற்றும் அந்த மாதிரி ஆவது கடைசி நிலை ஆகும். கேட்டுக் கொண்டிருக்கிறோம், ஆகியே விடுவோம். ஆகத் தான் வேண்டும். சென்ற கல்பத்திலும் ஆனோம், இப்பொழுதும் அவசியம் ஆவோம் என்ற இந்த வார்த்தைகள் கடைசி நிலையில் முடிவடைந்து விடும். ஒவ்வொரு வார்த்தையும், எப்படி எப்படி கேட்டுக் கொண்டே இருக்கிறோமோ அதே போல் ஆகிக் கொண்டே இருக்கிறோம். கடைசி நிலையில் இருப்பவர்களின் லட்சியம் மற்றும் வார்த்தைகள் சொரூபம் மூலமாக தெளிவாகத் தென்படும். எப்படி முதல் பாடமாகிய ஆத்மா பாடத்தை கேட்கிறீர்கள் மற்றும் கூறுகிறீர்கள். கடைசி நிலையில் உள்ள ஆத்மாக்கள் வார்த்தையை மட்டும் கேட்க மாட்டார்கள். கூற மாட்டார்கள் ஆனால் கூடவே சொரூபத்தில் நிலைத்திருப்பார்கள். இதைத் தான் தந்தைக்குச் சமமாக ஆவது என்று கூறுவது. தன்னுடைய அல்லது தந்தையின் சொரூபம், குணம் மற்றும் காரியத்தை சொல்ல மட்டும் மாட்டார்கள் ஆனால் ஒவ்வொரு குணம் மற்றும் காரியத்தை தன்னுடைய சொரூபம் மூலமாக அனுபவம் செய்விப்பார்கள். எப்படி தந்தை கூறுபவர் மட்டுமாக இல்லாமல் அனுபவம் நிறைந்தவராக இருக்கிறார், அதே போல் தந்தையை பின்பற்றி நடக்க வேண்டும். எப்படி

## 1977 அவ்யக்த முரளி

சாகார பாபாவை பார்த்திருக்கிறீர்கள், சொல்வதின் கூடவே காரியத்தில், சொரூபத்தில் செய்து காண்பித்தார். கேட்பது, சொல்வது மற்றும் சொரூபமாகிக் காண்பிப்பது இந்த மூன்றுமே சேர்ந்தே இருந்தது. அந்த மாதிரி கேட்பது, சொல்வது மற்றும் காண்பிப்பது சேர்ந்தே இருக்கிறதா? இதுவரை எவ்வளவு கேட்டிருக்கிறீர்களோ அந்த அளவே நிரப்பியிருக்கிறீர்களா? உலகின் எதிரில் செய்து காண்பித்திருக்கிறீர்களா? பெரிய இடைவெளி இருக்கிறதா அல்லது கொஞ்சம் இடைவெளி இருக்கிறதா? ரிசல்ட்டாக என்ன இருக்கிறது? கேட்பது மற்றும் சொல்வதோ பொதுவான விஷயம் பிராமணர்களின் ஆன்மீகத் தன்மை எவ்வளவு தென்படுகிறது. எப்படி "என்னுடைய ஜென்மம் மற்றும் காரியம் உலகியல் மனிதர்கள் மாதிரி இல்லை, ஆனால் தெய்வீகமானது மற்றும் ஆன்மீகமானது' என்று தந்தையின் மகாவாக்கியம் இருக்கிறது. பாப்தாதாவுடன் சேர்த்து பிராமணர்கள் உங்களுடைய ஜென்மமும் சாதாரணம் இல்லை, தெய்வீகமானது மற்றும் ஆன்மீகமானது. எப்படி ஜென்மமோ, எப்படி தெய்வீக பெயரோ அப்படியே தெய்வீக ஆன்மீக காரியமாகும்.

எப்படி ஒவ்வொரு லௌகீக குடும்பத்தின் மரியாதைக் கோடுகளும் இருக்கின்றன. அதே போல் பிராமண குலத்தின் மரியாதை கோட்டிற்குள்ளே இருக்கிறார்கள். மரியாதைகளின் கோடு எண்ணத்தில் கூட எந்தவொரு கவர்ச்சியின் வசமாகி தவறானதை செய்வதில்லை அதாவது கோட்டிற்கு வெளியே செல்வதில்லை. சூத்திரத்தன்மையின் சுபாவம் அல்லது சம்ஸ்காரத்தின் நினைவு வருவது என்றால் தீண்டத்தகாதவர் ஆவது அதாவது பிராமண பரிவாரத்திலிருந்து தானே தன்னை விலக்கி ஓரமாக வைத்துக் கொள்வது. எனவே முழு நாளில் தந்தையின் ஆதாரம் எவ்வளவு நேரம் இருந்தது. மேலும் தன்னைத் தானே எவ்வளவு நேரம் விலக்கி வைத்துக் கொண்டோம் என்ற இதை சோதனை செய்யுங்கள். விலகியிருப்பவர்கள் தந்தையின் ஆதாரத்தின் அனுபவம், தந்தையுடன் இருப்பதின் அனுபவம், தந்தை அடிக்கடி மூலமாக பிராப்தி ஆகியிருக்கும் அனைத்து பொக்கிஷங்களின் அனுபவத்தை விரும்பினாலும் செய்ய முடியாது. கடலின் கரையில் இருக்கிறார்கள். பார்த்துக் கொண்டே மட்டும் இருந்து விடுகிறார்கள், அடைய முடியாது. அடைய வேண்டும் என்ற இந்த இச்சை உருவாகியிருக்கிறது ஆனால் அடைந்து விட்டோம் என்ற இந்த அனுபவம் செய்ய முடிவதில்லை.

தெரிந்து கொள்ள விரும்பும் நிலையிலேயே இருந்து விடுகிறார்கள். அதிகாரிகளாக ஆக முடிவதில்லை. எனவே முழு நாளின் தெரிய விரும்பும் நிலை எவ்வளவு நேரம் இருந்தது மற்றும் அதிகாரியின் நிலை எவ்வளவு நேரம் இருந்தது. உங்களிடமும் யாராவது புதியவர்கள் வந்தார்கள் என்றால் அவரை முதலில் தெரிய விரும்புபவர்களாக ஆக்குகிறீர்கள். நீங்களும் புதியவர்களை ஒரு பக்கமாக வைக்கிறீர்கள். சபையில் அல்லது தினசரி வகுப்பில் வர விடுவதில்லை. இப்பொழுது அனுபவம் ஆனது, நிச்சயம் ஏற்பட்டது மற்றும் ஏற்றுக் கொண்டேன், தெரிந்து கொண்டேன் என்று அவர் எப்பொழுது கூறுகிறாரோ அப்பொழுது சபையில் வருவதற்கு அனுமதி கொடுக்கிறீர்கள். எனவே எப்பொழுது தெரிய விரும்பும் நிலை இருக்கிறது என்றால் தந்தையின் ஆதரவு மற்றும் குலத்தின் ஆதரவு அதாவது சபையின் ஆதரவு இயல்பாகவே நெருக்கத்திற்கு பதிலாக தன்னை தூரமானவர் என்று அனுபவமோ செய்யவில்லையே? ஆதாரத்திற்கு பதிலாக இயல்பாகவே புத்தி மூலமாக ஒருபக்கமாக ஆகிவிடவில்லையே? குழந்தைக்கு பதிலாக கேட்கும் பக்தனாக ஆகிவிடவில்லையே? சக்தி கொடுங்கள், உதவி செய்யுங்கள், மாயாவை விரட்டுங்கள், வழி கொடுங்கள், மாயாவிடமிருந்து விடுவியுங்கள் என்ற இவை பிராமணத்தன்மையின் சம்ஸ்காரம் இல்லை. பிராமணன் ஒருபொழுதும் அழைப்பதேயில்லை. பிராமணர்களை சுயம் தந்தை விதவிதமான உயர்ந்த பட்டங்களினால் அழைக்கிறார். தனக்கு எத்தனை பட்டங்கள் இருக்கின்றன என்று தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா, பிராமணன் என்றால் அழைப்பது முடிந்து, பிராமணன் என்றால் தலையின் கிரீடம். பழைய சம்ஸ்கார வசமாகி விடுகிறார்கள், சுபாவ வசமாகி விடுகிறார்கள் என்ற இது பற்றுதலின் கிரீடம் அணிந்த நிலை. அந்த மாதிரி பற்றுதலின் கிரீடம் அணிந்தவர்கள் தந்தையின் தலையின் கிரீடமாக ஆக முடியாது. உலக ராஜ்யத்தின் கிரீடமணிந்தவராகவும் ஆக முடியாது. தந்தையின் தலையின் கிரீடமாக ஆகுபவர்கள் கனவில் கூட பற்றுதலின் கிரீடமணிந்தவராக ஆக முடியாது. புரிந்ததா. உணருங்கள். இப்பொழுது சுய உணருதல் பாடம் நடந்து கொண்டிருக்கிறது தான் இல்லையா. நல்லது.

எப்பொழுதும் தன்னுடைய பிராமண குலத்தின் மரியாதைக் கோட்டிற்குள் இருக்கக்கூடிய, மரியாதா புருஷோத்தமன், கேட்கும் கூறும் மற்றும்

சமமாகக்கூடிய, இப்பொழுதே சொரூபம் மூலம் காண்பிக்கக்கூடிய, எப்பொழுதும் தலையின் கிரீடமாக இருக்கும், எப்பொழுதும் தந்தையின் அனைத்து பிராப்திகளின் ஆதாரத்தில் இருக்கக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தீதி அவர்களுடன்:** செல்வது மற்றும் வருவது என்று கூறலாமா? செல்வது மற்றும் வருவது என்று எப்பொழுது துணையை விட்டுச் சென்று விடுகிறார்களோ அப்பொழுது கூறுவோம். எங்கிருந்தாவது செல்வது என்றால் கொஞ்சம் விட்டுச் செல்வது ஆனால் இங்கு செல்வது மற்றும் வருவது என்ற வார்த்தையைக் கூற முடியுமா? இங்கோ இங்கிருக்கிறோம் என்றாலும் உடன் இருக்கிறீர்கள். அங்கே இருக்கிறோம் என்றாலும் உடன் இருக்கிறீர்கள். யார் ஸ்தானத்திலும் மற்றும் ஸ்திதியிலும் கூட எப்பொழுதும் உடன் இருக்கிறாரோ அவருக்காக செல்வது என்று சொல்ல மாட்டோம். எப்படி மதுபன்னில் கூட ஒரு அறையிலிருந்து இன்னொரு அறைக்குச் செல்கிறீர்கள் என்றால் நாங்கள் விடை பெற்று சென்று கொண்டிருக்கிறோம் என்று சொல்ல மாட்டீர்கள். இயற்கையாக போவதும் வருவதும் நடந்து கொண்டிருக்கிறது. ஏனென்றால் உடன் இருக்கிறீர்கள் இல்லையா? இதுவும் கூட ஒரு அறையிலிருந்து இன்னொரு அறையில் சுற்றி வருகிறீர்கள். அனைவருமே மதுபன்வாசிகள் தான் எனவே விடைபெறுகிறோம் என்ற வார்த்தையைக் கூறுவதில்லை. எப்பொழுதும் சேவைக்கான பாராட்டுக்கள் கொடுக்கிறோம். எப்பொழுதும் உடன் இருந்து கொண்டே எப்பொழுதும் உடன் சென்று கொண்டே அங்கம் அங்கமாக சேர்ந்திருக்கிறோம். அந்த மாதிரி அனுபவம் இருக்கிறது தான் இல்லையா? மகாரதி என்றால் தந்தைக்குச் சமமானவர். மகாரதிகளின் ஒவ்வொரு அடியில் பலகோடி மடங்கின் வருமானமோ பொதுவான விஷயம் ஆனால் ஒவ்வொரு அடியில் அனேக ஆத்மாக்களை பலகோடி மடங்கு அதிபதியாக ஆக்கும் வரதானம் நிரம்பியிருக்கிறது. மகாரதிகள் நாங்கள் செல்கிறோம் என்று கூறுவார்கள் ஆனால் செல்கிறோம் அல்ல உடன் செல்கிறோம். மகாரதிகளின் சேவை கண்கள் மூலமாக, தந்தை மூலமாக கிடைத்திருக்கும் வரதானத்தை அனேகர்களுக்கு பிராப்தி செய்விப்பது ஆகும். அதாவது தன் மூலமாக தந்தையை பிரத்யக்ஷம் செய்வதாகும். உங்களைப் பார்த்துக் கொண்டே தந்தையின் நினைவு இயல்பாக வந்து விட வேண்டும். ஒவ்வொருவரின் மனதிலிருந்து இவரை இந்த மாதிரி

உருவாக்கியவரின் அதிசயம் தான் என்று வெளியாக வேண்டும். அப்படி தந்தை பிரத்யக்ஷம் ஆகிவிடுவார். தந்தை உங்கள் மூலமாக பிரத்யக்ஷமாகத் தென்படுவார். மேலும் நீங்கள் குப்தமாகி விடுவீர்கள். இப்பொழுது நீங்கள் பிரத் மாக க்கிறீர்கள். ந்தை குப்தமாக இருக்கிறார். பிறகு ஒவ்வொருவரும் இதயத்திலிருந்து தந்தையின் பிரத்யக்ஷதாவின் மகிமை செய்து கொண்டிருப்பதை நீங்கள் கேட்பீர்கள். நீங்கள் தென்பட மாட்டீர்கள் ஆனால் எங்கு பார்த்தாலும் தந்தை தென்படுவார். இதன் காரணமாக எங்கு பார்த்தாலும் அங்கு தந்தையே தந்தை தான். இந்த சம்ஸ்காரம் கடைசியில் நிரம்பி விடும், இதை பின்பு பக்தியில் எங்கு பார்த்தாலும் நீயே நீ தான் என்று கூறி அழைக்கிறார்கள். கடைசியில் உங்கள் அனைவரின் முகம் கண்ணாடியின் காரியம் செய்யும். எப்படி இன்றைய நாட்களில் கோவில்களில் அந்த மாதிரியான கண்ணாடிகளை வைக்கிறார்கள் அதில் ஒரே முகம் அனேக ரூபங்களில் தென்படும். அதே போல் உங்கள் அனைவரின் முகம் நாலாபுறங்களில் தந்தையை பிரத்யக்ஷமாக காண்பிப் பதற்கு கருவியாகி விடும். பின்பு பக்தர்கள் எங்கு பார்த்தாலும் நீயே நீ தான் என்று கூறுவார்கள். முழுக் கல்பத்தின் சம்ஸ்காரத்தையோ இங்கு தான் நிரப்புகிறார்கள். அப்படி பக்தர்கள் இதே சம்ஸ்காரத்திலிருந்து முக்தியை பிராப்தி செய்வார்கள். எனவே துவாபரயுகத்தின் ஆத்மாக்களில் அல்லது முக்தி அடைவதின் சம்ஸ்காரம் அல்லது நீயே நீ தான் என்பதின் சம்ஸ்காரம் அதிகமாக வெளிப்படும் என்றால் தன்னுடைய மற்றும் தந்தையின் பக்தர்களும் இப்பொழுது தான் நிச்சயிக்கப்படுகிறார்கள். ராஜ்யமும் இப்பொழுது தான் உருவாகிறது என்றால் பக்தர்களும் இப்பொழுது உருவாகிறார்கள். அப்படியானால் பக்தர்களை எழுப்புவதற்காக செல்கிறீர்களா அல்லது குழந்தைகளை சந்திப்பதற்காக செல்கிறீர்களா? எனவே இந்த தடவை எத்தனை என்னுடைய பக்தர்கள் உருவானார்கள் மேலும் தந்தையின் குழந்தைகள் எத்தனை உருவானார்கள் என்று சோதனை செய்ய வேண்டும். இருவர்களுக்கும் விசேஷ பங்கு இருக்கிறது. பக்தர்களுக்கும் அரைகல்பத்திற்கான பங்கு இருக்கிறது மற்றும் குழந்தைகளுக்கும் அரைக் கல்பத்திற்கான அதிகாரம் இருக்கிறது. பக்தர்களும் இப்பொழுது தென்படுவார்களா அல்லது கடைசியிலா? யார் நௌதா (ஒன்பது மடங்கு) பக்தி செய்பவர்களோ, பக்த மாலையின் நம்பர் ஒன் மணியாக இருப்பார்களோ அவர்களும் இங்கேயே பிரத்யக்ஷம் ஆக வேண்டும். வெற்றி மாலையும் மேலும் பக்த மாலையும் இங்கேயே தான் உருவாகும்.

ஏனென்றால் சம்ஸ்காரம் நிரப்புவதற்கான நேரம் சங்கமயுகம் தான், பக்தர்கள் கடைசியில் ஹே பகவான் எங்களுக்கும் கொஞ்சம் கொடுத்து விடுங்கள் என்று அழைத்துக் கொண்டே இருந்து விடுவார்கள். இந்த சம்ஸ்காரத்தையும் இங்கிருந்து நிரப்புவார்கள் மேலும் குழந்தைகள் துணையின் அனுபவம் செய்வார்கள். நல்லது.

**வரதானம்: தேக அபிமானத்தின் தியாகம் மூலமாக எப்பொழுதும் சுவமானத்தில் (சுயமரியாதையில்) நிலைத்திருக்கக்கூடிய மரியாதைக்குரியவர் ஆகுக!**

எந்தக் குழந்தைகள் இந்த ஒரு ஜென்மத்தில் தேக அபிமானத்தை தியாகம் செய்து சுயமரியாதையில் நிலைத்திருக்கிறார்களோ அவர்களுக்கு இந்த தியாகத்தின் பலனாக பாக்கியத்தை உருவாக்கும் தந்தை மூலமாக முழுக் கல்பத்திலும் மரியாதைக்குரியவராக ஆகும் பாக்கியம் கிடைத்து விடுகிறது. கல்பம் பிரஜை மூலமாக மரியாதை கிடைக்கிறது, அரைக் கல்பம் பக்தர்கள் மூலமாக மரியாதை கிடைக்கிறது. அரைக் மேலும் இந்த நேரம் சங்கமயுகத்தில் சுயம் பகவான் தன்னுடைய சுயமரியாதையில் இருக்கும் குழந்தைகளுக்கு மரியாதை கொடுக்கிறார். சுயமரியாதை மற்றும் மரியாதை இரண்டிற்கும் ஒன்றிற்கு ஒன்று மிக ஆழமான சம்மந்தம் இருக்கிறது.

**சுலோகன்: ஒவ்வொரு அடியில் தந்தையின், பிராமண பரிவாரத்தின் ஆசிர்வாதங்களை பெற்றுக் கொண்டே இருந்தீர்கள் என்றால் எப்பொழுதும் முன்னேறிக் கொண்டே இருப்பீர்கள்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 18.04.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# டீச்சர்களுடன் பாப்தாதாவின் சந்திப்பு: தகுதியான ஆசிரியரின் ஒவ்வொரு காரியம் என்ற விதை பலன் அளிப்பதாக இருக்கும், பயனற்றதாக இருக்காது!

டீச்சர்கள் என்றால் ஆசான். ஆசான் என்றால் என்ன அர்த்தம். ஆசான் என்பதற்கு இங்கு படிப்பு அதாவது ஞானசொரூபமானவர் என்று அர்த்தம் ஆகும். மிக உயர்ந்த படிப்பு கொடுப்பதற்கான சகஜமான வழி எது? அனேக விதமான படிப்பறிவு கொடுப்பதற்கான வழிகள் இருக்கிறது தான் இல்லையா? அப்படியானால் படிப்பறிவு கொடுப்பதற்கான அனைத்தையும் விட சுலபமான சாதனம் எது? வாய் மூலமாக அன்றி சொரூபம் மூலமாக படிப்பறிவு கொடுப்பது. சாகார பாபா அனைத்தையும் விட சுலபமான வழியாக சொரூபம் மூலமாகத் தான் கற்றுக் கொடுத்தார் இல்லையா. வார்த்தைகள் மூலமாக மட்டுமின்றி செயல்கள் மூலமாக செய்வித்தார். சொன்னால் அவர்கள் கற்றுக் கொள்வார்கள் என்றில்லாமல் என்ன செய்வோமோ அதைப் பார்த்து மற்றவர்களும் செய்வார்கள் என்ற இது தான் மந்திரம் ஆகும். அப்படி அனைத்தையும் விட சுலபமான வழி சொரூபம் மூலமாக கற்றுக் கொடுப்பது. யாருக்காவது, நீங்கள் ஒரு ஆத்மா, நீங்கள் அமைதி சொரூபமானவர், ஞானசொரூபமானவர் என்று எவ்வளவு தான் புரிய வைத்தாலும் அவர் எதுவரை நீங்கள் அந்த சொரூபத்தில் நிலைத்திருக்கவில்லையோ அதுவரை அவரும் புரிந்து கொள்ள மாட்டார். அந்த மாதிரி அனுபவத்தின் படிப்பு இந்த அளவு அழியாததாகி விடுகிறது. அப்படியானால் நீங்கள் எப்படி கற்றுக் கொடுக்கிறீர்கள் - வார்த்தைகள் மூலமா அல்லது சொரூபம் மூலமாகவா?

## 1977 அவ்யக்த முரளி

ஒவ்வொரு அடி மூலமாக அனேக ஆத்மாக்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். இது தான் தகுதியான டீச்சரின் அடையாளம். சொற்பொழிவு மூலமாக மற்றும் ஏழு நாள் பாடம் மூலமாக யாரையாவது ஞான சொரூபம் ஆக்க வேண்டும். அந்த மாதிரி ஆசிரியரின் ஒவ்வொரு வார்த்தையும் வாக்கியமாக இருக்காது ஆனால் மகாவாக்கியம் என்று கூறப்படும். ஏனென்றால் ஒவ்வொரு வார்த்தையும் மகானாக ஆக்கக் கூடியது என்றால் மகாவாக்கியம் என்று கூறுவோம். ஒவ்வொரு செயலும் அனேகர்களை உயர்ந்தவர்களாக ஆக்கும் பயன் கொடுப்பதாக இருக்க வேண்டும். செய்யும் காரியத்தை விதை என்று கூறப்படும் மற்றும் விளைவை கர்மத்தின் பலன் என்று கூறப்படும். அந்த மாதிரி ஆசிரியரின் காரியம் என்ற விதை பலன் அளிப்பதாக இருக்கும். ஒருவேளை விதை சக்திசாலியானதாக இருக்கிறது என்றால் பழமும் (பலனும்) அவ்வளவு நல்லதாக வெளியாகும். ஒவ்வொரு காரியம் என்ற விதை பலனளிப்பதாக இருக்கும், பலனற்றதாக இருக்காது. இதைத் தான் தகுதியான ஆசிரியர் என்று கூறுவது. ஒவ்வொரு எண்ணம் எப்படி பிரம்மாவின் ஒரு எண்ணம் புது உலகை படைத்தது என்று பிரம்மாவின் அவருடைய எண்ணத்திற்காக வர்ணனை இருக்கிறது அந்த மாதிரி அப்படிப்பட்ட ஆசிரியரின் எண்ணம் புது உலகின் அதிகாரியாக ஆக்கக்கூடியது. புரிந்ததா? ஆசிரியரின் விளக்கம் இது தான்!

டீச்சர்களுக்கு ஒரு லிஃப்டின் கிஃப்டும் இருக்கிறது. அது எது? டீச்சர்கள் ஆவது என்றால் பழைய சம்மந்தத்திலிருந்து தியாகம் செய்வது. இந்த தியாகத்தின் பாக்கியத்தின் லிஃப்டின் கிஃப்ட் டீச்சர்களுக்கு இருக்கிறது. முதலில் தியாகமோ செய்து விட்டீர்கள் தான் இல்லையா. முதல் தியாகம் சம்மந்தத்தினுடையது. அதையோ செய்து விட்டீர்கள். இன்னும் தியாகத்தின் பட்டியல் நீளமானது ஆனால் இந்த தியாகத்தின், தைரியம் வைப்பதின், சகயோகி ஆவதற்கான எண்ணம் வைத்தீர்கள். இந்த லிஃப்ட் தான் கிஃப்ட் ஆகிவிடுகிறது ஆனால் சம்பூர்ண தியாகம் செய்து விட்டீர்கள் என்றால் தந்தைக்காக கிஃப்ட் ஆகிவிட்டீர்கள், உலகத்திற்காக லிஃப்ட் ஆகிவிடுங்கள். அந்த மாதிரி லிஃப்ட் ஆகிவிடுங்கள், அமர்ந்தார்கள், எந்தக் கடினமும் இன்றி சென்றடைந்தார்கள் என்று இருக்க வேண்டும். டீச்சர்களுக்கு மிகுந்த வாய்ப்பு இருக்கிறது ஆனால் எடுத்துக் கொள்பவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். டீச்சர்கள் ஆவதின் பாக்கியத்தையோ அனைவரும் மகிமை செய்து கொண்டே

ஆசையும் வைக்கிறார்கள். ஆசை வைக்கிறார்கள் என்றால் உயர்ந்த பாக்கியம் தான் இல்லையா. அதை எப்பொழுதும் உயர்வாக வைத்துக் கொள்வது என்ற இதுவோ ஒவ்வொருவரின் வரிசைக்கிரமம் ஆகும். டீச்சர்கள் எவ்வளவு விரும்புகிறார்களோ அவ்வளவு தன்னுடைய எதிர்காலத்தை ஒளிமயமாக்க முடியும் ஆனால் யார் தகுதியான டீச்சரோ அவரால் தான் முடியும். கொஞ்சத்தில் குஷியடையக்கூடிய டீச்சரோ நீங்கள் இல்லையே? பாப்தாதாவோ டீச்சர்களை எந்தப் பார்வையில் பார்க்கிறார்? நம் இனத்தவர் என்ற பார்வையோடு பார்க்கிறார் ஏனென்றால் தந்தையும் டீச்சர் தான் இல்லையா. டீச்சர், டீச்சரை பார்க்கிறார் என்றால் நம் இனத்தவர் என்ற பார்வையோடு பார்ப்பார். நம் இனத்தவரைப் பார்த்து குஷியடைவார்கள். டீச்சர்களோ எப்பொழுதும் திருப்தியாக இருப்பார்கள். அப்படி இருக்கிறீர்களா என்று கேட்பது என்றால் நம் இனத்தவரை அவமதிப்பதாகும். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 23.04.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தந்தை மூலமாக பிராப்தியாகியிருக்கும் பொக்கிஷங்களை அதிகரிப்பதற்கான ஆதாரம் -பெரும் வள்ளல் மகாதானி ஆவது!

பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பிய சொரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைத்து அதிகாரம் கொடுக்கக்கூடிய அந்த ஒரே ஒருவர், ஒரே நேரத்தில் அனைவருக்கும் சமமான அதிகாரம் கொடுக்கிறார். வேறு வேறாகக் கொடுப்பதில்லை. யாருக்காவது குப்தமாக விசேஷ பொக்கிஷத்தைத் தனியாகக் கொடுப்பதில்லை ஆனால் ரிசல்ட்டில் வரிசைக்கிரமம் தான் உருவாகிறார்கள். அனைத்து பொக்கிஷங்களின் அதிகாரம் இருந்த போதிலும், கொடுப்பவர் கடலாக மற்றும் நிரம்பியவராக இருந்தபோதிலும் வரிசை எண் ஏன் உருவாகிறது? இதற்கான காரணம் என்ன? உள்ளடக்கும் சக்தி அவரவர் களிடம் வேறு வேறு சதவிகிதத்தில் இருக்கிறது. இந்தக் காரணத்தினால் அனைவரும் 100-சதவிகிதம் ஆகமுடிவதில்லை அதாவது அனைவரும் தந்தைக்குச் சமமாக ஆகமுடிவதில்லை. அனைவருக்கும் எண்ணமோ இருக்கிறது, ஆனால் சொரூபத்தில் கொண்டு வர முடிவதில்லை. ஒவ்வொருவருக்கும் தன்னிடம் அனைத்தையும் விட அதிகமான பொக்கிஷமாக எது இருக்கிறது, அதை வீணாக்குவதினால் அனைத்து பொக்கிஷங்களிலும் குறைவு ஏற்பட்டு விடுகிறது என்று தன்னுடைய பொக்கிஷங்களின் சதவிகிதத்தை சோதனை செய்ய வேண்டும் மேலும் அந்த பொக்கிஷத்தை பெரும்பான்மையோர் வீணாக்குகிறார்கள். அது எந்த பொக்கிஷம்? அது தான் நேரம் என்ற பொக்கிஷம், ஒருவேளை நேரத்தின் பொக்கிஷத்தை எப்பொழுதும் தன்னுடைய மற்றும் அனைவரின் நன்மைக்காக ஈடுபடுத்திக் கொண்டே இருந்தீர்கள் என்றால் மற்ற

அனைத்து பொக்கிஷங்களும் தானாகவே சேமிப்பாகிவிடும். எண்ணத்தின் பொக்கிஷத்தில் எப்பொழுதும் நன்மை பயக்கும் பாவனையின் ஆதாரத்தில் ஒவ்வொரு நொடியிலும் பல மடங்கு வருமானம் செய்ய முடியும். அனைத்து சக்திகளின் பொக்கிஷங்களை நன்மை செய்யும் காரியத்தில் ஈடுபடுத்திக் கொண்டே இருப்பதினால், பெரும் வள்ளல் ஆவதின் ஆதாரத்தினால் ஒன்றுக்குப் பல மடங்கு அனைத்து சக்திகளின் பொக்கிஷம் அதிகரித்துக் கொண்டே இருக்கும். 'ஒன்றைக் கொடுத்து பத்தை அடைவது' என்றல்ல, ஆனால் 'ஒன்றைக் கொடுப்பது பல மடங்கு அடைவது.

ஞானத்தின் பொக்கிஷத்தை நேரத்தைத் தெரிந்து கொண்ட காரணத்தினால் இப்பொழுதில்லையென்றால் பின்பு ஒருபொழுதும் கொடுக்க முடியாது. இப்பொழுது கொடுத்தீர்கள் என்றால் எதிர்காலத்தில் அனேக ஜென்மங்கள் பிராப்தி ஆகும். இதன் ஆதாரத்தில் நேரத்தின் மகத்துவத்தின் காரணமாக எப்பொழுதும் உலக சேவாதாரி ஆவதினால் சேவையின் உடனடி பலனான குஷி என்ற பொக்கிஷம் குறைவின்றி உருவாகி விடுகின்றது. மூச்சின் பொக்கிஷம், நேரத்தின் மகத்துவத்திற்கு ஏற்றபடி ஒன்றிற்குப் பல மடங்கு ஆவதின் வரதானமுடைய நேரம் என்று புரிந்து கொள்வதினால் அதாவது காரியம் மற்றும் அதன் பலனின் ஆழமான விளைவுகளைப் புரிந்து கொள்வதினால், வீணான மூச்சுக்களை பயனுள்ளதாக ஆக்க வேண்டும் என்ற நினைவு எப்பொழுதும் இருப்பதினால், உயர்ந்த காரியங்களின் கணக்கு அல்லது உயர்ந்த காரியங்களின் சூட்சும சம்ஸ்கார ரூபத்தில் உருவாகியிருக்கும் பொக்கிஷம் இயல்பாகவே நிரம்பிக் கொண்டே இருக்கும். அப்படி அனைத்து பொக்கிஷங்களின் சேமிப்பிற்கான ஆதாரம் நேரம் என்ற உயர்ந்த பொக்கிஷத்தை பயனுள்ளதாக ஆக்கினீர்கள் என்றால் நிரந்தரமாக அனைவரும் வெற்றி மூர்த்தியாக சுலபமாக ஆகிவிடுவார்கள் ஆனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? அலட்சியம் அதாவது செய்யும் நேரத்தில் செய்து கொண்டிருக்கும் போதே நாம் செய்து கொண்டிருக்கிறோம் பின்பு வேதனை அடைவோம் என்று அந்த நேரம் தெரிவதில்லை. இதன் காரணமாக ஒரு விஷயத்தில் இரண்டு மடங்கு, மூன்று மடங்கு நேரத்தை இழந்து விடுகிறீர்கள். ஒன்று செய்யும் நேரத்தை, இரண்டாவது உணரும் நேரத்தை, மூன்றாவது வேதனை அடையும் நேரத்தை, நான்காவது பின்பு அதை சோதனை செய்த பிறகு

மாற்றம் செய்வதற்கான நேரம் இந்த மாதிரி பலமடங்கு நேரத்தை இழக்கிறீர்கள். அப்படி ஒரு சின்ன விஷயத்தில் இவ்வளவு நேரத்தை வீணாக்கி விடுகிறீர்கள். மேலும் பின்பு அடிக்கடி வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் காரணத்தினால். பயத்தின் பலனாக சம்ஸ்கார ரூபத்தில் வேதனையடையும் சம்ஸ்காரம் உருவாகி விடுகிறது. இதைத் தான் சாதாரண வார்த்தைகளில் என்னுடைய பழக்கம் அல்லது நேச்சர் (இயல்பு) என்று கூறுகிறீர்கள். பிராமணர்களின் இயற்கையான நேச்சரோ எப்பொழுதும் அனைத்து பிராப்திகளும் நிறைந்தது அதாவது பிராமணர்களின் ஆதி மற்றும் அனாதி சம்ஸ்காரம் வெற்றிக்கானது அதாவது சம்பன்னம் ஆவதற்கானது. வேதனை அடையும் சம்ஸ்காரம் பிராமணர்களினுடையது அல்ல, இது சத்திரியத் தன்மையின் சம்ஸ்காரம் ஆகும். சந்திர வம்சத்தின் சம்ஸ்காரம் ஆகும். சூரியவம்சத்தினர் எப்பொழுதும் அனைத்து பிராப்திகள் நிரம்பிய சொரூபமானவர்கள். சந்திர வம்சத்தினர் அடிக்கடி தனக்குத் தானே அல்லது தந்தையுடன் - .அந்த மாதிரி நினைக்கக்கூடாது தான், பேசக்கூடாது தான், செய்யக்கூடாது தான், ஆனால் நடந்தது நடந்து விட்டது இனிமேல் செய்ய மாட்டோம் என்று இந்த வார்த்தைகளைக் கூறி வேதனை அடைகிறார்கள். எத்தனை தடவை யோசிக்கிறீர்கள் மற்றும் கூறுகிறீர்கள். இதுவும் ராயல் ரூபத்தில் வேதனை அடைவது தான். எந்த சம்ஸ்காரம் என்று புரிந்ததா? சூரிய வம்சத்தினரினுடையதா அல்லது சந்திர வம்சத்தினரினுடையதா? வெகு காலத்து சம்ஸ்காரம் அந்த நேரத்தில் ஏமாற்றி விடும். முதலில் தன்னை தன்னுடைய ஏமாற்றத்திலிருந்து காப்பாற்றிக் கொண்டீர்கள் என்றால் நேரத்தின் ஏமாற்றுதலிலிருந்தும் பாதுகாக்கப்பட்டு விடுவீர்கள். மாயாவின் அனேக விதமான ஏமாற்றங்களிலிருந்து காப்பாற்றப்பட்டு விடுவீர்கள். துக்கத்தின் அம்சம் மாத்திரத்தை உணருதல் மூலமாக எப்பொழுதுமே காப்பாற்றப்பட்டு விடுவீர்கள், ஆனால் அனைத்திற்குமான ஆதாரம் நேரத்தை வீணாக இழக்காதீர்கள். ஒவ்வொரு விநாடியின் லாபத்தையும் எடுங்கள். நேரத்தின் வரதானங்களை தனக்காகவும் மற்றும் அனைவருக்காகவும் காரியத்தில் ஈடுபடுத்துங்கள். நல்லது. எப்பொழுதும் அனைத்து பொக்கிஷங்களால் நிரம்பிய, வீணானதை சக்திசாலியாக ஆக்கக்கூடிய, எப்பொழுதும் பிராப்தி சொரூபமான, ஒவ்வொரு விநாடி மற்றும் எண்ணத்தில் பலமடங்கு செல்வந்தனாக ஆகக்கூடிய, அந்த மாதிரி குறைவில்லா பொக்கிஷத்தின் அதிகாரி ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன்**: சூர்ய வம்சத்தினரின் சம்ஸ்காரம் இருக்கிறது தான் இல்லையா? மீண்டும் மீண்டும் ஒரே தவறை செய்வதினால் அந்த சம்ஸ்காரமே உறுதியாகிவிடுகிறது. எனவே சூர்யவம்சத்தினர் என்றால் சூரியனுக்குச் சமமாக மாஸ்டர் சூரியனாக இருக்க வேண்டும். தன்னுடைய சக்திகள் என்ற கிரணங்கள் மூலமாக எந்தவிதமான குப்பை அதாவது குறைகள் மற்றும் பலஹீனங்கள் இருக்கிறது என்றால், சூரியனுடைய வேலை ஒரு நொடியில் குப்பைகளை சாம்பலாக்கி விடுவது, அந்த மாதிரி பஸ்பம் செய்து விடுங்கள். அதனுடைய பெயர், ரூபம், வண்ணம் நிரந்தரமாக அழிந்து விட வேண்டு உடலை நெருப்பு மூலமாக எரிக்கிறார்க ன்றால் நிரந்தரமாக பெயர், ரூபம், வர்ணம் அழிந்து விடுகிறது. அப்படி பஸ்பம் செய்வது என்றால் பஸ்பம் ஆக்கிவிடுவது, சாம்பலை பஸ்பம் என்றும் கூறுவார்கள். அப்படி இது தான் சூரியவம்சத்தினர் செய்யும் காரியம் ஆகும். தன்னுடையது மற்றுமின்றி மற்றவர்களின் பலஹீனங்களையும் சாம்பலாக்கி விட வேண்டும். அந்த அளவு சக்தி இருக்கிறது தான் இல்லையா? சூரியனின் சக்தியை விட வேறு ஏதாவது சக்திவான் இருக்கிறார்களா என்ன? சந்திரனின் மேல் சூரியன் இருக்கிறது. சூரியனுக்கு மேலோ எதுவும் இல்லை தான் இல்லையா. வேறு எதிலுமே பஸ்பம் செய்யும் சக்தி கிடையாது ஆனால் சூரியனிடம் பஸ்பம் செய்யும் சக்தி இருக்கிறது. அப்படியானால் அந்த மாதிரி தான் நீங்கள் இருக்கிறீர்கள் இல்லையா? மாஸ்டர் சூரியனாக இருக்கிறீர்களா அல்லது சந்திரனாக இருக்கிறீர்களா? அல்லது சில நேரம் சந்திரனாகவும் சில நேரம் சூரியனாகவும் ஆகி விடுகிறீர்களா? மாஸ்டர் சர்வ சக்திவான் என்றால் மாஸ்டர் ஞான சூரியனின் ஒவ்வொரு சக்தியையும் தேவையான நேரத்தில் உபயோகிக்கத் தெரியும் என்றால் மிக அதிசயம் செய்ய முடியும். தேவையாக இருப்பது சகித்துக் கொள்ளும் சக்தி, ஆனால் நிர்ணய சக்தியை உபயோகிக்கிறீர்கள் என்றால், நிர்ணயம் செய்வதிலேயே நேரத்தை கழிக்கிறீர்கள் என்றால் ரிசல்ட்டாக என்ன இருக்கும்? எந்த நேரம் எந்த சக்தியின் தேவை இருக்கிறதோ அந்த நேரம் அதே சக்தியினால் காரியம் செய்ய வேண்டும். தேவையான நேரத்தில் அந்த சக்தி தான் உயர்ந்தது என்று வர்ணனை செய்யப்படுகிறது. எனவே நேரம், பிரபாவம் மற்றும் உபயோகிக்கும் வழி தெரிகிறது என்றால், ஒவ்வொரு சக்தியின் அதிசயம் செய்ய முடியும். இரண்டு நான்கு சக்திகளைக் கூட உபயோகிக்கத் தெரியும் என்றால் மிக

அதிகம் செய்ய முடியும். இரண்டு, நான்குகளில் திருப்தி ஆகி விடாதீர்கள், ஆவதோ சம்பன்னமாக வேண்டும், ஆனால் ஒருவேளை இரண்டு இருந்தால் கூட அதிசயம் செய்ய முடியும். ஒவ்வொரு சக்திக்கும் மகத்துவம் இருக்கிறது. பக்தி மார்க்கத்தில் பார்த்திருந்திருப்பீர்கள். ஒவ்வொரு சக்திக்கும், இயற்கையின் சக்திக்கும் கூட தேவதை ரூபம் காண்பித்திருக்கிறார்கள். சூரிய தேவதை, வாயு தேவதை, பூமி தேவதை என்று காண்பித்திருக்கிறார்கள். அப்படி இந்த அனைத்து சக்திகளுக்கும் தேவதைகள் மற்றும் தேவிகளின் ரூபம் காண்பித்திருக்கிறார்கள் என்றால் இவற்றிற்கு இவ்வளவு மகத்துவத்தைக் காண்பித்திருக்கிறார்கள். அப்படி உங்களுடைய ஒவ்வொரு சக்திக்கும் பூஜை நடக்கிறது - எப்படி பயமற்ற சக்தியின் சொரூபமாக காளி தேவியைக் காண்பிக்கிறார்கள். எதிர்நோக்கும் சக்தியின் சொரூபம் துர்க்கையாக, அப்படி வேறு வேறு பெயரால் உங்களுடைய ஒவ்வொரு சக்தியின் மகிமை மற்றும் பூஜை நடந்து கொண்டிருக்கிறது. திருப்தியாக இருப்பது மற்றும் திருப்திபடுத்துவதின் சக்தி இருக்கிறது என்றால், சந்தோஷிமாதாவின் ரூபத்தில் மகிமை நடந்து கொண்டிருக்கிறது. திருப்தியாக இருப்பது என்றால் சகித்துக் கொள்ளும் சக்தி. உங்களுடையது அந்த அளவு மகிமைக்குரியது.

காற்றுக்குச் சமமாக லேசாக ஆவதின் மற்றும் டபுள் லைட் ஆவதின் சக்தி உங்களிடம் இருக்கிறது என்றால் அதன் பூஜையை வாயு தேவதா ரூபத்தில் செய்து கொண்டிருக்கிறார்கள் மற்றும் பவன் புத்திரன் (வாயு புத்திரன்) ரூபத்தில் பூஜை செய்கிறார்கள். இது நீங்கள் டபுள் லைட்டாக இருப்பதின் பூஜை ஆகும். புரிந்ததா? அப்படியானால் யாருடைய ஒவ்வொரு சக்தியின் பூஜை இவ்வளவு இருக்கிறது என்றால் அவர் சுயம் என்னவாக இருப்பார். தன்னுடைய இந்தளவு மகத்துவத்தைத் தெரிந்து கொள்ளுங்கள். உங்களுடைய மகத்துவத்தைத் தெரிந்திருக்கிறீர்களா? எண்ண முடியாத அளவு தேவி தேவதைகள் இருக்கிறார்கள். பெயரைக் கூட நினைவு செய்ய முடியாது. இந்த அளவு உயர்ந்த பூஜைக்குரியவர்கள் நீங்கள். தெரிந்திருக்கிறீர்களா அல்லது தன்னை சாதாரணமாகவே நினைக்கிறீர்களா? ஒருவேளை தன்னுடைய பூஜையைக் கூட நினைவில் வைத்தீர்கள் என்றால் ஒவ்வொரு காரியமும் பூஜைக்குரியதாக ஆகிவிடும்.

நான் பந்தயத்தில் எந்த நம்பரில் சென்று கொண்டிருக்கிறேன் என்று ஒவ்வொருவரும் தன்னைப் பார்க்க வேண்டும். பந்தயத்தில் இருக்கிறேன் என்பது, இதுவொன்றும் பெரிய விஷயமில்லை, ஆனால் நம்பர் என்னவாக இருக்கிறது? சென்று கொண்டோ இருக்கிறோம், ஆனால் எறும்பு ஊர்வது எங்கே மற்றும் சிங்கப்பாய்ச்சல் எங்கே? எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. அனைவருமே சென்று கொண்டு தான் இருக்கிறார்கள் ஆனால் எந்த மாதிரி சென்று கொண்டிருக்கிறார்கள். சிங்கம் என்றால் இராஜா. இராஜா யாருடைய அடிமையாக இருப்பதில்லை. அந்த மாதிரி இருக்கிறீர்களா? எப்பொழுதாவது ஏதாவது இயற்கையின் மற்றும் மாயாவின் அடிமையாகவோ ஆவதில்லையே? அடிமை ஆகாமல் இருப்பது என்றால் சிங்கம் மாதிரி நடந்து கொள்வது. எறும்பு ஊர்வதை விடவோ செம்மறி ஆட்டின் வேகமோ நல்லது.

**மதுபன் நிவாசிகளுடன்:** அனைவரையும் விட அருகாமையில் யார் இருக்கிறார்? சிந்தியில் ஒரு பழமொழி இருக்கிறது. யார் அடுப்படியில் இருக்கிறாரோ அவர் இதயத்தில் இருக்கிறார்". அப்படி அனைவரையும் விட அருகில் இருப்பவர்கள் மதுபன் நிவாசிகள். அப்படி அருகில் இருப்பதற்கான பலனாக என்ன கொடுத்திருக்கிறீர்கள். பக்தியிலும் அழைக்கிறார்கள் என்றால் "எப்பொழுதும் உன்னுடைய காலடியில் அமரவிடு" என்று கூறுகிறார்கள். அவரோ பக்தன் ஆவார் ஆனால் ஞானம் நிறைந்த ஆத்மாவோ எப்பொழுதும் இதயத்தில் இருக்கிறார். அப்படி மிக அருகாமையில் இருப்பவர், அனைத்து இடங்களையும் விட அருகாமையில் இருக்கிறீர்கள். அப்படியே மனநிலையும் அருகில் இருக்கிறதா? மனநிலையால் அருகில் இருப்பவரின் ஸ்தானம் இதயசிம்மாசனம் ஆகும். ஸ்தானத்திலும் அருகில் இருப்பவராக மற்றும் மனநிலையிலும் அருகில் இருப்பவர்களாக இருக்கிறீர்களா? அனைவருமே அதிகமாகவோ கேட்டிருக்கிறீர்கள், இப்பொழுது செய்ய வேண்டிய காரியமாக என்ன இருக்கிறது? என்ன கேட்டிருக்கிறீர்களோ அதற்கான பிரதிபலனைக் கொடுக்க வேண்டும். அதற்கான பிரதிபலன் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? ஒருவர் கடுமையான வேலை செய்பவர், இன்னொருவர் போகும் பொழுதும், வரும்பொழுதும் யோகி என்று கூறியிருந்தோம் இல்லையா? ஒருவேளை கடுமையாக வேலை செய்பவர்களாக மட்டும் இருக்கிறீர்கள் என்றால் கடுமையான வேலை செய்யும் நேரத்தில் மனநிலையும் கடுமையாக இருக்கிறதா அல்லது

லேசாக இருக்கிறதா? எப்படி கடுமையான வேலை செய்யும் நேரத்தில் உடல் மேலே கீழே செல்லும். அதே போல் மனநிலையும் மேலே கீழே ஆகிறதா அல்லது ஃபரிஷ்தா ரூபத்தில் இருக்கிறதா? வேலை மிக நன்றாகச் செய்கிறீர்கள் என்று செய்யும் காரியத்தின் மகிமையை அனைவரும் செய்கிறார்கள் ஆனால் காரியத்தின் கூடவே மனநிலையையும் அனைவரும் மகிமை செய்ய வேண்டும். என்னென்ன காரியங்கள் செய்கிறீர்களோ, செய்த உயர்ந்த காரியங்களின் பலனை இந்த நேரத்திற்கும், எதிர்காலத்திற்காகவும் சேர்த்து சேமிப்பு செய்கிறீர்களா? அல்லது இங்கேயே செய்தீர்கள் மற்றும் இங்கேயே அதை முடித்து விட்டீர்களா? சங்கமயுகத்தில் செய்யும் காரியத்தின் பலன் அதீந்திரிய சுகம் ஆகும். இதைத் தவிர அற்ப காலத்து பெயர், புகழ், மரியாதை மற்றும் இயற்கை தாசியானதின் பலனை ஏற்றுக் கொண்டீர்கள் என்றால், எதிர்காலத்தினுடையது முடிவடைந்து விடுகிறது. எனவே இங்கேயே செய்தீர்கள், இங்கேயே சாப்பிட்டு விட்டீர்களா அல்லது சேமிப்பும் ஆகிறதா? என்று சோதனை செய்யுங்கள். யார் எப்படி மற்றும் எவ்வளவு தந்தை என்ன கூறியிருக்கிறாரோ அந்த அளவு பிரத்யக்ஷ பலனை இங்கேயும் எடுக்க வேண்டும் மற்றும் எதிர்காலத்திற்காகவும் சேமிப்பாக வேண்டும். எந்த பலனைப் பற்றி தந்தை கூறியிருக்கிறாரோ அதை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு ஏதாவது பலனை ஏற்றுக் கொண்டீர்கள் என்றால் நஷ்டமாகி விடுகிறது.

அப்படி அருகாமையில் இருப்பவர் என்றால் சமமாக ஆகுபவர். நெருக்கத்தின் லாபத்தை சமமானவராக ஆகிக் காண்பிக்க வேண்டும். லட்சியத்தை லட்சணத்தில் கொண்டு வாருங்கள். ஒவ்வொரு லட்சணமும் லட்சியத்தைத் தெளிவுபடுத்த வேண்டும். லட்சியமோ மிக உயர்ந்ததாக இருக்கிறது இல்லையா? எனவே லட்சணமும் இந்த அளவு உயர்ந்ததாக இருக்கட்டும். அந்த மாதிரி ஒரு உதாரணமாக ஆகிக் காண்பியுங்கள். அதைப் பார்த்து எப்படி இவர் நடந்து கொள்கிறாரோ அப்படி நடங்கள் என்று பாப்தாதா சவால் விட முடிய வேண்டும்.

மதுபனின் வாயுமண்டலத்தின் பிரபாவம் இயல்பாக நாலாபுறங்களிலும் பரவவே செய்கிறது. மதுபனின் சூழ்நிலையை சிலர் சொர்க்கத்தின் மாடல் என்று கூறி வர்ணனை செய்கிறார்கள். அதே போலவே பிராமண பரிவாரத்தில் நாலாபுறங்களிலும் மதுபனின் சூழ்நிலை தந்தைக்குச்

சமமாக காரிய நடவடிக்கைகளின் இடையே யோகி நிலையை பரப்புகிறது. மதுபன்நிவாசிகளுக்கு எனக்கு நானே நன்றாக நடந்து கொண்டிருக்கிறேன் என்ற இந்தக் காரியம் மட்டும் இல்லை. நாலாபுறங்களிலும் மதுபன்னின் சூழ்நிலை மற்றும் வைப்ரேஷன் மூலமாக அனைவருக்கும் சகயோகம் கொடுப்பது உங்களுடைய கடமை ஆகும். எப்படி வாய்ப்பு இரண்டு மடங்கு, மூன்று மடங்கு இருக்கிறது என்றால் கடமையும் இரண்டு மடங்காகும்.

மதுபன் நிவாசிகளின் ஒவ்வொரு எண்ணம் மற்றும் காரியம் வரதானத்திற்குத் தகுதியானதாக இருக்க வேண்டும். ஏனென்றால் மதுபன் வரதானபூமி ஆகும். கடைசியில் மதுபன்நிவாசி ஒவ்வொரு எண்ணம் மற்றும் காரியத்தில் குழுவின் ரூபத்தில் வரதானி என்று அனைவரின் வாயிலிருந்து இந்த வார்த்தை வெளியாகும். இப்பொழுது தந்தை இந்த தேதியை (எதிர்) பார்த்துக் கொண்டிருக்கிறார். நல்லது.

**வரதானம்: எப்பொழுதும் மனமகிழ் இனிப்பை உண்பதோடு பிறருக்கும் உண்ணக் கொடுக்கும் உண்மையான சேவாதாரி குஷி நிறைந்தவர் ஆகுக!**

யார் தினசரி அமிர்தவேளையில் மனமகிழ் இனிப்பை உண்கிறாரோ அவர் தானும் முழு நாள் குஷியாக இருக்கிறார். மேலும் மற்றவர்களும் அவரைப் பார்த்து குஷி அடைகிறார்கள். இந்த மனமகிழ்ச்சி கொடுக்கும் டானிக் எப்படிப்பட்ட சூழ்நிலையையும் சிறியதாக ஆக்கிவிடுகிறது. மலையைக் கூட பஞ்சாக ஆக்கிவிடுகிறது. எனவே நாம் மனமகிழ் இனிப்பை உண்டு மற்றவர்களுக்கும் உண்ணக் கொடுப்பவர்கள் என்று எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அழக்கூடிய சூழ்நிலையிலும் கூட மனம் எப்பொழுதும் குஷியாக இருக்க வேண்டும் அப்பொழுது தான் குஷி நிறைந்தவர் என்று கூறுவோம். அவருடைய முகம் மூலமாகவும் சேவை நடக்கும். அவருடைய முகம் ஞானத்தின் நடவடிக்கைகளை பிரத்யக்ஷம் செய்யும்.

**சுலோகன்: யாருடைய ஒவ்வொரு எண்ணம் மூலம் அனேகர்களுக்கு உயர்ந்த வாழ்க்கையை உருவாக்க வேண்டும்**

**என்ற பிரேரணை கிடைக்கிறதோ அவர் தான் புண்ணிய ஆத்மா ஆவார்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 26.04.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சுதந்திரம் பிராமணர்களின் பிறப்புரிமை ஆகும்!

சப்தத்திலிருந்து விலகியிருக்கும் நிலை பிடித்திருக்கிறதா அல்லது சப்தத்தில் வரும் நிலை பிடித்திருக்கிறதா? மாஸ்டர் அனைத்து சக்திகளும் நிறைந்த அதிகாரி என்ற இந்த உயர்ந்த நிலையில் நிலைத்திருக்கிறீர்களா? சப்தத்திலிருந்து விலகிய நிலையில் நிலைத்திருக்க முடியுமா? சர்வ சக்திவானின் ஒவ்வொரு டைரக்ஷனை (வழிகாட்டுதலை) நடைமுறையில் கொண்டு வருவதற்கான தைரியம் வைப்பதில் பயிற்சி ஆகிவிட்டதா? வீணான எண்ணங்களை ஒரு நொடியில் நிறுத்துங்கள் என்று பாப்தாதா டைரக்ஷன் கொடுக்கிறார் என்றால் அதைச் செய்ய முடியுமா? ஒரு நொடியில் மாஸ்டர் சக்தியின் கடல் ஆகி உலகிற்கு சக்தியின் மகாதானம் கொடுங்கள் என்று பாப்தாதா கூறினார் என்றால் ஒரு நொடியில் இந்த நிலையில் நிலைத்திருந்து கொடுக்கக்கூடிய வள்ளலின் காரியத்தைச் செய்ய முடியுமா? டைரக்ஷன் கிடைத்தவுடனேயே மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகி உலகிற்கு சக்திகளின் தானத்தைக் கொடுக்க முடியுமா? அந்த மாதிரி எவரெடியாக இருக்கிறீர்களா? இந்த நிலையில் வருவதற்கு முன்பு தனக்குத் தானே ஒத்திகை பாருங்கள். எந்தவொரு கண்டுபிடிப்பையும் உலகின் முன் வைப்பதற்கு முன்பு அவர்களுக்குள்ளே ஒத்திகை பார்ப்பார்கள். அந்த மாதிரி ஒத்திகை செய்கிறீர்களா? இந்தக் காரியத்தில் மற்றும் பயிற்சியில் யார் வெற்றி அடைய முடியும்? யார் ஒவ்வொரு விஷயத்திலும் சுதந்திரமாக இருப்பாரோ அவர் தான் வெற்றி அடைய முடியும். எந்த விதத்திலும் எதற்கும் அடிமையாக இருத்தலாகாது. பாப்தாதாவும் சுதந்திரம் ஆவதற்கான அறிவுரை கொடுத்துக் கொண்டிருக்கிறார். இன்றைய சூழ்நிலைக்கேற்றபடி சுதந்திரம் என்பது உடலின் உள்ளே உள்ள சம்மந்தத்தின் மேலானது. இந்த ஒரு சுதந்திரம் மூலம் மற்ற அனைத்து சுதந்திரமும் வந்து விடுகிறது. உடலின் ஆதிக்கம் விரும்பாவிட்டாலும் அந்த மாதிரி அனேக ஆதிக்கத்தால் பறக்கும்

பறவையான ஆத்மாவை கூண்டுக்கிளி போல் கட்டிப்போட்டு விடுகிறது. எனவே நான் சுதந்திரப் பறவையாக இருக்கிறேனா அல்லது கூண்டில் அடைக்கப்பட்ட பறவையாக இருக்கிறேனா என்று தன்னைத் தானே பாருங்கள். பழைய உடல் மற்றும் பழைய சுபாவம், சம்ஸ்காரம் மேலும் இயற்கையின் (உடலின்) அனேக விதமான கவர்ச்சிகளின் வசமாகி அல்லது விகாரங்களின் வசமாகக்கூடிய பிற ஆதிக்கத்தில் வந்த ஆத்மாவாக இல்லையே? ஆதிக்கம் எப்பொழுதும் கீழ் நோக்கிக் கொண்டு செல்லும், அதாவது இறங்கும் கலையின் பக்கம் எடுத்துச் செல்லும். ஒருபொழுதும் அதீந்திரிய சுகத்தில் ஆடுவதற்கான அனுபவம் செய்ய விடாது. ஏதாவது விதமான பந்தனத்தில் கட்டப்பட்ட, பிரச்சனையில் இருக்கும் ஆத்மாவாக எப்பொழுதும் தன்னை அனுபவம் செய்வார்கள், லட்சியமும் ரசனையும் இன்றி ரசனையற்ற நிலையின் அனுபவம் செய்வார்கள். எந்தவொரு ஆதரவும் தெளிவாகத் தென்படாது. துக்கத்தின் அனுபவமும் இல்லை, சுகத்தின் அனுபவமும் இல்லை, இடையில் சுழலில் இருப்பார்கள். ஏதாவது அடைய வேண்டும். அனுபவம் செய்ய வேண்டும். வேண்டும், வேண்டும் என்பதில் லட்சியத்திலிருந்து தன்னை எப்பொழுதும் தூரமாக அனுபவம் செய்வார்கள். இது தான் கூண்டில் அடைக்கப்பட்ட பறவையின் நிலை ஆகும் (மின்சாரம் அடிக்கடி தடைப்பட்டது). இப்பொழுது கூட பாருங்கள், பந்தனங்களிலிருந்து விடுபட்ட ஆத்மா குஷியாக இருக்கிறது.

இப்பொழுது தன்னுடைய சுதந்திர தினத்தைக் கொண்டாடுங்கள். எப்படி தந்தை எப்பொழுதும் சுதந்திரமாக இருக்கிறார். அதே போல் தந்தைக்குச் சமமாக ஆகுங்கள். இப்பொழுது கூட குழந்தைகளைப் பிற ஆதிக்கத்தில் இருக்கும் ஆத்மாவாகப் பார்த்து பாப்தாதா என்ன நினைப்பார்? பெயரோ மாஸ்டர் சர்வ சக்திவான் மற்றும் செய்யும் காரியமோ கூண்டுக்கிளியாக ஆவது. யார் தன்னைத் தானே சுதந்திரமாக ஆக்க முடியாமல், அவரே தன்னுடைய பலஹீனங்களில் விழுந்து கொண்டே இருக்கிறார் என்றால், அவர் உலக மாற்றம் செய்பவராக எப்படி ஆவார்? எனவே தனது பந்தனங்களின் பட்டியலை எதிரில் வையுங்கள். சூட்சுமம் மற்றும் ஸ்தூலம் அனைத்தையும் மிக நன்றாக சோதனை செய்யுங்கள். இதுவரையிலும் ஒருவேளை ஏதாவது பந்தனம் இருக்கிறது என்றால் பந்தனத்திலிருந்து விடுபட்டவராக ஒருபொழுதும் ஆக முடியாது. இப்பொழுது இல்லையென்றால் ஒருபொழுதும் இல்லை. நிரந்தரமாக

# 1977 அவ்யக்த முரளி

இந்த பாடத்தை உறுதிப்படுத்துங்கள். புரிந்ததா? சுதந்திரம் பிராமண ஜென்மத்தின் அதிகாரம் ஆகும். தன்னுடைய பிறப்புரிமையை பிராப்தி செய்யுங்கள். நல்லது.

தந்தைக்குச் சமமாக எப்பொழுதும் சுதந்திரமாக இருக்கும் ஆத்மாக்களுக்கு, அனைத்து பிராப்திகளின் அதிகாரி, இயற்கை மற்றும் மாயாவை அடிமையாக்கக்கூடிய எப்பொழுதும் அதீந்திரிய சுகத்தின் ஊஞ்சலில் ஆடக்கூடிய அந்த மாதிரி மாஸ்டர் சுகக்கடல் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தீதி அவர்களுடன் சந்திப்பு:** நீங்கள் அனைத்து விசேஷ ஆத்மாக்கள் பாப்தாதாவின் காரியத்தில் சகயோகிகளாக இருக்கிறீர்கள். சகயோகத்தின் பலனாக விசேஷமாக அனைத்து மற்றும் சகஜ பிராப்திகள் ஏற்படுகிறது. யார் எவ்வளவு காலம் அனைத்து விதங்களில் சகயோகியாக ஆகிறாரோ அதன் பிரத்யக்ஷ பலனாக அவருக்கு அனைத்து பிராப்திகளின் அனுபவம் சகஜமாக ஏற்படுகிறது. யார் அவ்வப்பொழுது தந்தையின் சகயோகியாக ஆகிறாரோ அவருக்கு தந்தையும் பிரதிபலனாக உதவி செய்கிறார். ஒரு தைரியம் நிறைந்த எண்ணம் குழந்தை களினுடையது மற்றும் ஆயிரம் உயர்ந்த எண்ணத்தின் சகயோகம் தந்தையினுடையது. அந்த மாதிரி சகயோகம் தேவையான நேரத்தில் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். குழந்தைகள் நினைத்தார்கள் மற்றும் தந்தையின் சகயோகத்தோடு நடந்தது. இது தான் விசேஷ ஆத்மாக்களுக்கு சகயோகி ஆவதின் பிரத்யக்ஷ பலனாகும். பிரத்யக்ஷ பலனை பிராப்தி செய்யும் ஆத்மா ஒருபொழுதும் கடினத்தை அனுபவம் செய்யாது, இப்பொழுது செய்ததை மீண்டும் செய்து கொண்டிருக்கிறோம் என்று அவ்வளவு சுலபமாக அனுபவம் ஆகும். சென்ற கல்பத்தினுடையது என்றில்லாமல், இப்பொழுது நடந்ததை மீண்டும் இப்பொழுது திரும்பிச் செய்து கொண்டிருக்கிறோம் என்று அனுபவம் ஆகும். சென்ற கல்பத்தின் விஷயத்தைக்கூட யோசிக்க வேண்டியதாக இருக்கும், நினைவில் கொண்டு வர வேண்டியதாக இருக்கும் ஆனால் இது இப்பொழுதிற்கானது. புத்தியில் இதன் சுமை வராது. செய்ய வேண்டும், எப்படி நடக்கும் என்ற சுமையும் இருக்காது. இப்பொழுது செய்தோம். மேலும் இப்பொழுதே மீண்டும் செய்ய வேண்டும். அந்த மாதிரி பிரத்யக்ஷ பலன் பிராப்தி ஆகும். அப்படி

## 1977 அவ்யக்த முரளி

பிரத்யக்ஷ பலன் என்ற பழத்தை அருந்துபவர்கள் தானே நீங்கள் அல்லது எதிர்காலத்தின் ஆதாரத்தில் யோசித்துக் கொண்டிருக்கிறீர்களா? எதிர்காலமோ இருக்கவே இருக்கிறது ஆனால் எதிர்காலத்தை விட உயர்ந்தது பிரத்யக்ஷ பலன் ஆகும். உடனடியை விட்டு விட்டு எதிர்காலத்தின் காத்திருத்தலில் இருக்காத இப்பொழுது தந்தையின் குழந்தையாக னீர்கள். மேலும் இப்பொழுதே கிடைத்தது. தந்தையினிடமிருந்து தூரமாக இருக்கும் ஆத்மாக்கள் எதிர்காலம் அதாவது தூரத்தின் விஷயத்தை யோசிப்பார்கள். நெருக்கமாக இருக்கும் ஆத்மாக்கள் எப்பொழுதும் உடனடி பலனை அனுபவம் செய்வார்கள். ஒன்றிற்கு லட்சம் மடங்கு ரூபத்தில் அனுபவம் செய்வார்கள். அந்த மாதிரி ஆகிறது தான் இல்லையா?

நடந்து கொண்டிருக்கிறோம் என்றல்ல ஆனால் யாரோ நடக்கச் செய்து கொண்டிருக்கிறார். தன்னுடைய மடியில் அமர வைத்து நடக்கச் செய்து கொண்டிருக்கிறார் என்றால் கடினம் இருக்குமா? எப்படி குழந்தை ஒருவேளை தந்தையின் மடியில் அமர்ந்து சுற்றுகிறார் என்றால் அவருக்கு ஒருபொழுதும் களைப்பு ஏற்படாது, மகிழ்ச்சி வரும். தன்னுடைய கால்களினால் நடக்கிறார் என்றால் களைப்பும் இருக்கும், அழவும் செய்வார், கதறவும் செய்வார். இதுவோ நடக்கச் செய்விப்பவர் தந்தை, நடக்கச் செய்வித்துக் கொண்டிருக்கிறார். தந்தையின் மடியில் அமர்ந்து கொண்டு சென்று கொண்டிருக்கிறோம். எவ்வளவு அதீந்திரிய சுகம் மற்றும் ஆனந்தத்தின் அனுபவம் ஏற்படுகிறது. கொஞ்சம் கூட உழைப்பின் மற்றும் கடினத்தின் அனுபவம் இல்லை. பிராப்தி இருக்கிறதா அல்லது கடின உழைப்பு இருக்கிறதா? சங்கமயுகத்தில் எப்பொழுதும் துணைவர்களாக ஆகும் ஆத்மாக்களுக்கு கடின உழைப்பு என்றால் என்ன என்பதின் அறியாத நிலை இருக்கிறது. அந்த மாதிரி கடின உழைப்பு என்றால் என்னவென்று தெரியாதவர்கள் மிகக் குறைந்தவர்கள் தான் இருப்பார்கள். இது தான் கடைசி நிலையின் அடையாளம் ஆகும். அதன் அருகில் வந்து கொண்டிருக்கிறோம். முயற்சி செய்வது கூட ஒரு இயற்கையான காரியம் ஆகி விட வேண்டும். எப்படி மற்ற காரியங்கள் எழுவது, அமர்வது, செல்வது, தூங்குவது இயற்கையான காரியமாக இருக்கிறதோ அதே போல் தன்னை சம்பன்னமாக ஆக்கும் முயற்சியும் இயற்கையான காரியமாக அனுபவம் ஆக வேண்டும். அப்பொழுது தான் இந்த இயற்கையை (தத்துவங்களை)

பரிவர்த்தனை செய்ய முடியும். இப்பொழுதோ அந்த சேவை இன்னும் செய்ய வேண்டியது இருக்கிறது. இப்பொழுது, அனைவரையும் கடைசி தேர்வுக்காக தயார் செய்வதற்காக நீங்கள் அனைவரும் சென்று கொண்டிருக்கிறீர்கள். ஏனென்றால் நீங்கள் அனைவரும் பொறுப்பிலிருப்பவர்கள் இல்லையா? எந்தவொரு சிறிய மற்றும் பெரிய பரீட்சையில் ஸ்திரமாக இருக்கும் அளவிற்கு எவரெடியாக ஆகிவிடுங்கள். இப்பொழுதோ சிறிய பரீட்சையில் கூட ஆட்டம் காண்கிறீர்கள். தன் மூலமாக வரும் பரீட்சையிலேயே குழப்பத்தில் வருகிறீர்கள். எனவே பழையவர்கள் யார் இங்கு வருகிறார்களோ அவர்கள் எவரெடியாகத் தென்பட வேண்டும். அந்த மாதிரி இப்பொழுது தயார் செய்து அனுப்புங்கள். பாப்தாதா உணரும் பாடத்தையும் படிப்பித்தார். அதனுடைய ரிசல்ட்டையும் கேட்போம். அனுபவிகளாக ஆக்கிக் கொண்டே செல்லுங்கள். சொல்பவர்களாக ஆகிவிடுகிறார்கள் ஆனால் அனுபவியாக குறைவாக ஆகிறார்கள். ஒருவேளை அனுபவம் நிறைந்தவர்களாக ஆகிவிட்டார்கள் என்றால், அனுபவி ஒருபொழுதும் ஏமாற்றம் அடையமாட்டார். ஏமாற்றம் அடைகிறார் என்றால், அவர் அனுபவி இல்லை என்பதாகும். அந்த மாதிரியே லட்சியத்தை வைத்து அனைவரிலும் அந்த மாதிரியான லட்சணத்தை நிரப்பிக் கொண்டே செல்லுங்கள். இந்த ரிசல்ட்டைப் பார்க்கலாம். இப்பொழுதோ நாம் சம்பன்னமாகி உலக மாற்றக் காரியத்தை முடித்து வைப்போம். இந்த ஒரே ஒரு ஊக்கம் தான் அனைவரிடமும் இருக்க வேண்டும். இல்லையென்றால் உலக மாற்றக் காரியத்திலும் தடுமாற்றம் இருக்கிறது. இந்த நேரம் மேகத்தை நிரப்புகிறார்கள், கொஞ்சம் மழையாக பொழிகிறார்கள். பிறகு கலைந்து சென்று விடுகிறார்கள். இதற்கான காரணம் என்ன? ஸ்தாபனை செய்யக்கூடிய உலக மாற்றம் செய்பவர்களே ஆடிக் கொண்டிருக்கிறார்கள். தன்னுடைய லட்சியத்திலிருந்து கலைந்து சென்று விடுகிறார்கள் என்றால் மாற்றத்தின் மேகங்களும் கலைந்து சென்று விடுகின்றன. இடி முழங்குகிறது ஆனால் மழை பெய்வதில்லை. நல்லது.

**பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** எப்படி குடும்பத்தில் எல்லைக்குட்பட்ட படைப்பாளர் என்று கூறப்படுகிறீர்கள், அதே போல் பிராமண வாழ்க்கையில் தன்னை இயற்கை மற்றும் மாயாவின் படைப்பாளர் என்று புரிந்து கொண்டு நடக்கிறீர்களா?

# 1977 அவ்யக்த முரளி

படைப்பவர் ஒருபொழுதும் தன்னுடைய படைப்பின் வசமானவராகவும், அடிமையாகவும் ஆவதில்லை. படைப்பவர் என்றால் எஜமானன். எஜமானன் ஒருபொழுதும் அடிமை ஆவதில்லை, அதிகாரியாக இருப்பார்கள். 63-ஜென்மங்களோ கூண்டில் இருந்தீர்கள், இப்பொழுது தந்தை வந்து கூண்டிலிருந்து விடுவிக்கிறார். எப்பொழுது விடுபட்ட ஆத்மா ஆகிவிட்டீர்கள் என்றால், கூண்டிற்குள் மீண்டும் ஏன் செல்ல வேண்டும், அதாவது பந்தனத்தில் ஏன் வர வேண்டும்? பந்தனமற்றவராக இருக்கிறீர்களா? ஒருபொழுதும் என்ன செய்வது, மாயா வந்து விட்டது, விரும்பவில்லை ஆனால் வந்து விட்டது என்று அப்படி பேசவோ அல்லது நினைப்பதோ இல்லையே? முயற்சி செய்பவர்களாக இருக்கிறோம். இப்பொழுது கொஞ்சம் கொஞ்சம் அப்படித் தான் இருக்கும், கர்மாதீத் நிலை இன்னும் அடையவில்லை தானே என்ற இந்த மாதிரியான எண்ணம் முயற்சி செய்வதில் பலஹீனமானவராக ஆக்குவது. தந்தை மூலமாக கிடைத்திருக்கும் பொக்கிஷம் மற்றும் அந்த பொக்கிஷத்தின் சுகம் மற்றும் ஆனந்தத்தின் அனுபவத்தை இப்பொழுது செய்யவில்லை என்றால் சத்யுகத்தில் கூட செய்ய மாட்டீர்கள். தந்தை மூலமாக இந்தப் பொக்கிஷங்கள் பிராப்தி ஆகியிருக்கின்றன என்ற இந்த எண்ணம் சத்யுகத்தில் வெளிப்படாது. இப்பொழுது திரிகாலதரிசியாக இருக்கிறீர்கள். தந்தையின் எதிரில் இருக்கிறீர்கள், பிறகோ தந்தை வானபிரஸ்தத்தில் சென்று விடுவார்.

இப்பொழுது என்ன அடைய வேண்டுமோ, அதை இப்பொழுதே அடைய வேண்டும். அடைந்து விடுவோம் என்று அப்படி இருக்க வேண்டாம். மாயா பார்க்கவே முடியாத அளவிற்கு அந்த அளவு முழு நாளும் குஷியில் தன்னையே மறந்திருங்கள். மாயா தூரத்திலிருந்தே ஓடி விடும். எப்படி இன்றைய நாட்களின் மின்சாரம் அந்த மாதிரி சக்திசாலியாக இருக்கிறது, அதன் தொடர்பில் வரும் மனிதன் தூரமாக வீசப்பட்டு விடுகிறார். ஷாக் அடித்து விடுகிறது. அந்த மாதிரி ஈஸ்வரிய சக்தி மாயாவை தூரமாக வீசி விட வேண்டும். அந்த மாதிரி கரென்ட் இருக்க வேண்டும் ஆனால் யாரில் கரென்ட் இருக்கும்? யாருடைய கனெக்ஷன் (தொடர்பு) சரியாக இருக்குமோ அவரிடம் தான். கனெக்ஷன் சரியில்லை என்றால் கரென்ட் வராது. கனெக்ஷன் என்றால் எந்த நேரம் நினைவில் அமருகிறீர்களோ அந்த நேரம் கனெக்ஷன் சரியாக இருப்பது என்பது மட்டுமல்ல, ஆனால் காரியங்கள் செய்து கொண்டே ஒவ்வொரு விநாடியும் கனெக்ஷன்

இணைந்திருக்க வேண்டும். கரென்ட் வரும் அளவிற்கு துண்டிக்கப்படாத கனெக்ஷனாக இருக்க வேண்டும். பாண்டவர்களின் பட்டமே வெற்றி அடைபவர்கள், என்பதாகும். ஒவ்வொரு கல்பத்திலும் வெற்றி அடைபவர்கள், இது உறுதியானது. தன்னுடைய நினைவுச் சின்னத்தைப் பார்த்து குஷி ஏற்படுகிறது இல்லையா?

தினசரி அமிர்தவேளையில் தந்தை வரதானம் கொடுக்கிறார். ஒருவேளை தினசரி வரதானத்தை பெற்றுக் கொண்டிருந்தீர்கள் என்றால், ஒருபொழுதும் பலஹீனமானவர் ஆக முடியாது. வரதானத்தைப் பெறுவதற்கு பாத்திரமானவராக மட்டும் ஆக வேண்டும். என்னென்ன வேண்டுமோ அவை அனைத்தும் அமிர்தவேளையில் கிடைக்க முடியும். இது விசேஷமாக பிராமணர்களுக்காக நிச்சயிக்கப்பட்ட நேரமாகும். எப்படி உலகிற்கு அவர் எவ்வளவு தான் பெரிய மனிதனாக இருந்தாலும் தன்னுடைய குடும்பத்திற்காக விசேஷமாக நேரம் வைத்திருப்பார். அப்படி அமிர்தவேளை விசேஷமாக குழந்தைகளுக்காக இருக்கிறது. அதற்குப் பிறகு உலகில் உள்ள ஆத்மாக்களுக்காக இருக்கிறது. முதல் வாய்ப்பு குழந்தைகளினுடையது. அப்படியானால் அனைவரும் மிக நல்ல முறையில் வாய்ப்பை எடுத்துக் கொள்கிறீர்களா? இதில் அலட்சியமானவர்கள் ஆகாதீர்கள். மாயாவை வென்ற குழந்தைகளைப் பார்த்து பாப்தாதாவிற்கும் குஷி ஏற்படுகிறது. யார் அடிக்கடி ஏறுகிறார் மற்றும் இறங்கிக் கொண்டே இருக்கிறார் என்றால் தந்தையும் பார்த்து இரக்க மனமுடையவராக இருக்கும் காரணத்தினால் விசேஷமாக அந்த ஆத்மாக்களை இவர்கள் எப்பொழுது மாயாவை வென்றவர்கள் ஆவார்கள் என்று இரக்கம் நிறைந்த பார்வையோடு பார்க்கிறார். நல்லது

**வரதானம்: ஒவ்வொருவருக்கும் அன்பு மற்றும் சக்தியின் பாலனை கொடுக்கக்கூடிய அன்பின் களஞ்சியத்தால் நிரம்பியவர் ஆகுக!**

எந்தக் குழந்தைகள் அனைவருக்கும் எவ்வளவு தந்தையின் அன்பை கொடுக்கிறார்களோ அந்த அளவு அன்பின் களஞ்சியம் நிரம்பியிருப்பதாக இருக்கும். எப்படி ஒவ்வொரு நேரமும் அன்பின் மழை பொழிந்து கொண்டிருக்கிறது என்று அந்த மாதிரி இருக்கும். ஒரு அடியில் அன்பைக் கொடுங்கள் மற்றும் அடிக்கடி அன்பைப் பெறுங்கள். இந்த நேரம் அனைவருக்கும் அன்பு மற்றும் சக்தி தேவையாக இருக்கிறது

என்றால், யாருக்காவது தந்தை மூலமாக அன்பைக் கொடுங்கள். யாருக்காவது சக்தியைக் கொடுங்கள். . அதன் மூலம் அவர்களுடைய ஊக்கம் உற்சாகம் எப்பொழுதுமே நிரம்பியிருக்கட்டும். இது தான் விசேஷ ஆத்மாக்களின் விசேஷ சேவை ஆகும்.

**சுலோகன்: யார் மாயாவி சாதுர்யத்திலிருந்து விலகியிருக்கிறார்களோ அவர்கள் தான் தந்தைக்கு மிகப் பிரியமானவர்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 28.04.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நிரந்தர சுமங்கலியின் அடையாளங்கள்!

பாப்தாதா குழந்தைகளின் கமங்கல்யம் மற்றும் பாக்கியத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். சுமங்கல்யத்திற்கு திலகமும் மற்றும் பாக்கியத்திற்கு ஒளியின் கிரீடமும் இருக்கிறது. கிரீடம் அணிந்தவர் மற்றும் திலகமிட்டவர் என்றால் சுமங்கல்யம் மற்றும் பாக்கியம் நிறைந்தவர். நிரந்தர சுமங்கல்யத்தின் அடையாளம் அழியாத நினைவின் திலகம் ஆகும். நிரந்தர பாக்கியத்தின் அடையாளம் தூய்மை மற்றும் தந்தை மூலமாக கிடைத்திருக்கும் அனைத்து பிராப்திகள் அதாவது ஒளியின் கிரீடம் ஆகும். நினைவு குறைவாக இருக்கிறது என்றால் திலகமும் பிரகாசித்துக் கொண்டிருப்பதாக தெளிவாக தென்படாது. பிரகாசித்துக் கொண்டிருக்கும் திலகம் தந்தையுடன் இருப்பதற்கான நிரந்தர சுமங்கல்யத்தின் அடையாளம் ஆகும். அந்த மாதிரி திலகமிட்ட சுமங்கலி மற்றும் நிரந்தர சுமங்கலியாக இருக்கும் காரணத்தினால் எப்பொழுதும் உலகின் எதிரில் சிரேஷ்ட அதாவது உயர்ந்த ஆத்மாவாக தென்படுகிறார். எப்படி உலகியல் வாழ்க்கை ரூபத்திலும் கூட சுமங்கலியை உயர்ந்த கண்ணோட்டத்தில் பார்க்கிறார்கள். மேலும் ஒவ்வொரு உயர்ந்த காரியத்தில் சுமங்கலியைத் தான் முன்னுக்கு வைப்பார்கள். ஒருவேளை 'சுமங்கல்யம் சென்று விட்டது என்றால் உலகமும் சென்று விட்டது என்று உலகிலும் கூட நம்புகிறார்கள். இந்த விதமாக ஆன்மீக வாழ்க்கையிலும் கூட ஒவ்வொரு ஆத்மாவும் ஒரு நாயகனின் நாயகி ஆவார். அதாவது சுமங்கலி ஆவார். எப்பொழுதும் தன்னுடைய சுமங்கல்யத்தின் திலகத்தை பார்க்கிறீர்களா? எப்பொழுதும் ஒருவரின் அன்பிலேயே மூழ்கியிருப்பதின் அடையாளம், நினைவின் திலகம் அதாவது சுமங்கல்யத்தின் திலகம் ஆகும். ஒருவேளை திலகம் அழிந்து விட்டது என்றால் தன்னுடைய சுமங்கல்யத்தை அழித்து விடுகிறார்கள் என்பதாகும்.

நான் நிரந்தர சுமங்கலியாக இருக்கிறேனா என்று தன்னைத் தானே கேளுங்கள். நிரந்தர சுமங்கலி ஒரு மூச்சிலும் மற்றும் ஒரு கனம் கூட துணையை விட மாட்டார். நிரந்தர சுமங்கலியின் மனதிலிருந்து எழும் வார்த்தைகள் உடன் இருப்போம், உடன் வாழ்வோம், உடன் இறப்போம் என்பதாகும். நிரந்தர சுமங்கலியின் கண்களில், வாயில் நாயகனின் முகம் மற்றும் செயல்கள் நிரம்பி இருப்பதாக இருக்கும், காதுகளில் அவருடைய வாக்கியங்கள் தான் எப்பொழுதுமே கேட்டுக் கொண்டே இருக்கும். எப்படி பக்தியில் முடிவில்லா வார்த்தைகள் கேட்பதற்கான பயிற்சியாளராக இருக்கிறார்கள். மிகுந்த முயற்சிக்கு பிறகு ஒரு தடவையாவது ஒருவேளை வார்த்தை கேட்டு விட்டது என்றால் தன்னுடைய பக்தி வெற்றி அடைந்தது என்று நினைக்கிறார்கள். இந்த அனைத்து பக்தியின் பழக்க வழக்கங்கள் இந்த நேரத்தின் நடைமுறை வாழ்க்கையிலிருந்து காப்பி செய்திருக்கிறார்கள். யாருடைய காதுகளில் அனாதி மகாமந்திரமான "மன்மனாபவ" என்பதின் ஸ்வரம் ஒலித்துக் கொண்டே இருக்கிறதோ அவர் தான் நிரந்தர சுமங்கலி ஆவார். தந்தை இந்த மகாமந்திரத்தை அடிக்கடி கூறி நினைவூட்டுகிறார் என்ற இந்த அனுபவத்தை எப்பொழுதும் செய்வார்கள். காரிய நடவடிக்கைகளின் இடையிலும் இதே முடிவில்லாத அதாவது அழியாத வாக்கியத்தை தந்தையின் எதிரில் கேட்பதின் அனுபவம் செய்வார்கள். மேலும் வேறு எந்த ஆத்மாவின் வார்த்தைகளை கேட்டும் கேட்காமல் இருப்பார்கள். உன்னுடன் தான் பேசுவேன், உன்னிடமிருந்து தான் கேட்பேன் மேலும் நீ சொன்னதைத் தான் சொல்வேன் என்று அந்த மாதிரியான நிலை நிரந்தர சுமங்கலியின் உடையதாக இருக்கும். அந்த மாதிரி நிரந்தர சுமங்கலி எண்ணத்தில் கூட மற்ற ஆத்மாவை ஒரு நொடியின் நினைவிலும் கொண்டு வர மாட்டார் அதாவது எண்ணத்தில் கூட எந்தவொரு மனிதனின் ஈர்ப்பில் வர மாட்டார். பற்றுதலோ பெரிய விஷயம், ஈர்ப்பிலும் வர மாட்டார். எப்படி உலக வாழ்க்கையில் கூட ஒரு ஆணைப் பற்றி நினைப்பது மற்றும் கனவில் வருவதைக் கூட சுமங்கலியைப் பொறுத்தவரை மகாபாவம் என்று எடுத்துக் கொள்ளப்படுகிறது. அதே போலவே ஆன்மீக வாழ்க்கையிலும் கூட ஒருவேளை எண்ணத்திலும், கனவிலும் ஏதாவது மனித ஆத்மா பக்கம் ஈர்ப்பு ஏற்பட்டது என்றால் நிரந்தர சுமங்கலியைப் பொறுத்தவரை மிகப் பெரிய பாவம் என்று சொல்லப்படும். அப்படி நிரந்தர சுமங்கலி என்றால். ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்பதாகும். அந்த மாதிரி சுமங்கல்யத்தின்

திலகம் இடப்பட்டிருக்கிறதா? மாயா திலகத்தை அழித்தோ விடவில்லையே? நிரந்தர சுமங்கல்பத்தின் கூடவே நிரந்தர பாக்கியமும் இருக்கிறது. சுமங்கல்யம் மட்டுமின்றி பாக்கியவானாகவும் இருக்க வேண்டும். நிரந்தர பாக்கியவானின் அடையாளம் ஒளியின் கிரீடம் ஆகும். எப்படி உலகத்தில் கூட பாக்கியத்தின் அடையாளம் இராஜ்யம் செய்வது மேலும் இராஜ்யம் செய்வதின் அடையாளம் கிரீடம் ஆகும். அப்படி ஈஸ்வரிய பாக்கியத்தின் அடையாளம் ஒளியின் கிரீடம் ஆகும். அந்த கிரீடத்தின் பிராப்தியின் ஆதாரம் தூய்மை மற்றும் அனைத்து பிராப்தி, சம்பூர்ண தூய்மை என்றால் மனதளவில் கூட எந்த விகாரத்தின் அம்சம் கூட இருக்கக் கூடாது மற்றும் அனைத்து பிராப்தி என்றால் ஞானம், அனைத்து குணங்கள் மற்றும் அனைத்து சக்திகளின் பிராப்தி. ஒருவேளை ஏதாவது பிராப்தியின் குறை இருக்கிறது என்றால் ஒளியின் கிரீடம் தெளிவாகத் தென்படாது, தூய்மையின்மை மற்றும் பிராப்தியின்மை என்ற மேகங்களில் மறைந்திருப்பதாகத் தென்படும். தன்னை எப்பொழுதும் லேசாக, ஆத்மீக ரூபத்தில் அனுபவம் செய்ய மாட்டார்கள். ாரியம் செய்வதிலும் தன்னை லேசாக இருப்பதாக உணர மாட்டார்கள். அடிக்கடி கடின உழைப்புக்கு பிறகு அல்லது கவனம் வைப்பதின் பயிற்சியின் பிறகு அற்ப காலத்திற்காக தன்னை லேசாக அனுபவம் செய்வார்கள். நான் ஆத்மா ஒளி வடிவமாக இருக்கிறேன் என்று நினைத்தவுடனேயே ஆத்மாவிற்கு பதிலாக உடல் அதாவது தேகம் என்று தன்னை அனுபவம் செய்வார்கள். பாக்கியத்தின் ஆதாரம் அனைத்து பிராப்திகள் ஆகும். அனைத்து பிராப்திகளின் அடையாளம் அழியாத குஷி ஆகும். நிரந்தர பாக்கியவான் நிரந்தரமாக குஷியாக இருப்பார். பாக்கியம் குறைவு என்றால் குஷியும் குறைவு, குஷி குறைவு என்றால் நிரந்தர பாக்கியவான் இல்லை. புரிந்ததா? நிரந்தர சுமங்கலி மற்றும் நிரந்தர பாக்கியம் நிறைந்தவர் என்றால் பாக்கியவானின் அடையாளங்கள் என்ன? இப்பொழுதோ அனைத்து விஷயங்களை எதிரில் வைத்து நான் யார் என்று தன்னை சோதனை செய்யுங்கள். நல்லது.

எப்பொழுதும் சுமங்கல்யத்தின் திலகமிட்டவர், உயர்ந்த பாக்கியவான், அனைத்து பிராப்தி சொரூபமானவர், எப்பொழுதும் தந்தையின் துணைவனாக இருப்பவர், அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தீதி -தாதியுடன்:** அந்த மாதிரி நிரந்தர சுமங்கலி, நிரந்தர பாக்கியவான் மற்றும் சம்பூர்ண பாக்கியவான் எத்தனை பேர் இருப்பார்கள்? நிரந்தர டபுள் லைட் மற்றும் நிரந்தர அனைத்து பிராப்தி நிறைந்த சம்பூர்ண தூய்மையானவராக இருக்க வேண்டும், அந்த மாதிரி எத்தனை மணிகள் இருப்பார்கள்? விரல் விட்டு எண்ணும் அளவு, அத்தனை தானா? அந்த மாதிரி இரத்தினங்களுக்குத் தான் விசேஷமாக பூஜை நடக்கிறது. விசேஷமாக ஒன்பது இரத்தினங்களின் பூஜை நடக்கிறது தான் இல்லையா? அப்படி எது நல்ல தரமுள்ள இரத்தினமாக இருக்குமோ, அந்த ஒரு இரத்தினத்தில் ஒரு வர்ணம் இருந்த போதிலும் அனைத்து வர்ணங்களும் தென்படும். எப்படி வெண்ணிற வைரம் இருக்கிறது, அதில் மிக நல்ல வைரமாக எது இருக்குமோ அது மின்னிக் கொண்டு குறையற்றதாக தென்படும். கவனமாக பார்த்தீர்கள் என்றால் வெள்ளையாக இருந்த போதிலும் அதில் அனைத்து வர்ணங்களும் தென்படும். இதன் காரணம் என்ன? அனைத்து சக்திகளின் நிரம்பிய நிலையின் அடையாளம் இதுவாகும். அனைத்து சக்திகள் விதவிதமான வர்ணத்தின் ரூபத்தில் தென்படுகிறது. அது அறிவியலின் கணக்கு மற்றும் இங்கு அமைதி மூலமாக அனைத்து பிராப்திகள். எப்படி மழைக்குப் பிறகு வானவில் தென்படுகிறது என்றால் அதிலும் அனைத்து வர்ணங்களும் தென்படும். இதுவும் ஞான மழைக்குப்பிறகு மழையின் பலனாக அனைத்து பிராப்தி சொரூபம். அந்த மாதிரி உயர்ந்த வைரம் அல்லது இரத்தினம் அனைத்து பிராப்தி சொரூபம் ஆன காரணத்தினால் எந்த சக்தியை அடைய விரும்புகிறீர்களோ அந்த சக்தியை அந்த இரத்தினம் மூலமாக அடைய முடியும். அந்த மாதிரி இரத்தினங்கள் எத்தனை இருக்கும்? ஒன்பது இரத்தினங்களின் பூஜை விசேஷமாக தடையில்லாமல் இருப்பதற்காக இருக்கும். யார் மேலேயாவது ஏதாவது தடை வருகிறது என்றால் அவர் ஒன்பது இரத்தினங்களின் பூஜை செய்வார். அப்படியானால் அந்த அளவு தடையற்றவராக ஆகியிருக்கிறீர்களா? ஒவ்வொரு இரத்தினமும் முழுமையானதாக இருக்கும், ஆனால் இருந்தாலும் ஒவ்வொரு இரத்தினத்தின் முக்கிய விசேஷம் அதனுடைய தனிப்பட்டதாக இருக்கும். எனவே ஒன்பது இரத்தினங்களுக்கு சேர்ந்தும் பூஜை நடக்கிறது மற்றும் தனித்தனியாகவும் நடக்கிறது. முக்கியமாக இந்த விதமான தடைக்காக இந்த இரத்தினத்தின் பூஜை செய்ய வேண்டும் என்று

வர்ணித்திருக்கிறார்கள். உதாரணமாக பணப்பிரச்சனை அல்லது தடை இருக்கிறது என்றால் பணத்தின் பிராப்திக்காக அல்லது பிராப்தியின்மையின் தடையை அகற்றுவதற்காக முக்கியமான இரத்தினமும் இருக்கிறது. நோயும் அதிக அளவு இருக்கிறது என்றால் அதனுடைய நினைவாக இன்று வரையிலும் தன்னுடைய கையில் மோதிரம் அணிகிறார்கள் அல்லது கழுத்தில் லாக்கெட் செய்து தொங்க விடுகிறார்கள். அப்படி இந்த அனைத்து கணக்கும் தற்சமயத்து பிராப்தியினுடையவை, எனவே அந்த மாதிரியானவர்கள் எத்தனை பேர் இருப்பார்கள். எண்ண முடிகிறதா? பெயர் சொல்ல வேண்டியதில்லை ஆனால் காண்பிக்க வேண்டும். ஒருவேளை அறிவித்தீர்கள் என்றாலும் மேலும் எதிர்காலத்தில் அவர் பிரசித்தியாகவும் ஆவார் ஆனால் இப்பொழுது சம்பூர்ண நிலையில் பார்க்காமல் இது ஏன், இது எப்படி என்று கேள்வி கேட்பார்கள். எனவே தந்தையும் கூற முடியாது. இதில் இத்தனை பேர் இருக்கிறார்கள், இப்படி இருக்க முடியும் என்று காண்பிக்க முடியும். சொல்வதற்கான விஷயம் இல்லை. இப்பொழுது ஒருவரின் பெயரைக் கூறினால் என்றாலும் எத்தனை கேள்விகள் எழுகிறது என்று பாருங்கள். இவர் மேல் என்ன, என்னில் என்ன இல்லை, இவரிலோ இது இருக்கிறது என்று பலவிதமான கேள்விகளில் நேரத்தை வீணாக இழப்பீர்கள் இதை தந்தையும் விரும்பவில்லை. மற்றபடி ஒவ்வொரு கல்பத்திலும் பிரசித்தியான இரத்தினம், சென்ற கல்பம் மாதிரி அவசியம் பிரசித்தி ஆவார். இன்றைய நாட்களில் பெயரை அல்ல காரியம் என்ன செய்கிறார் என்பதை விரும்புகிறோம். இப்பொழுதோ ஒவ்வொருவரின் உள்மனதில் நானும் என்னை இந்த அளவு முன்னேற்றம் செய்வித்து தகுதியானவராக ஏன் ஆகக்கூடாது என்ற லட்சியத்தை வைக்கிறார்கள். நல்லது.

**பார்ட்டிகளுடன்**: வெகு தூரத்திலிருந்து தன்னுடைய ஜென்ம பூமியில் வந்திருக்கிறீர்கள். பிராமணர்களின் ஜென்மபூமி மதுபன் தான் இல்லையா? என்னுடைய ஜென்ம பூமியில் வந்திருக்கிறேன் என்று அப்படி நினைக்கிறீர்களா? ஜென்ம பூமிக்கு மிகுந்த மகத்துவம் வைக்கிறார்கள். இது ஆன்மீக ஜென்ம பூமி ஆகும். இந்த ஆன்மீக ஜென்ம பூமியில் வருவதினால் உலகியல் தன்மை தானாகவே மறந்து விடுகிறது. ஏனென்றால் எப்படி இடமோ அப்படி காரியம் என்ற வர்ணனை இருக்கிறது. எப்படி தொடர்போ அப்படி பாதிப்பு, எப்படி அன்னமோ அப்படி

மனம் என்ற வர்ணனை இருக்கிறது. அதே போலவே எப்படி பூமியோ அப்படி காரியம் செய்வது. ஒருவேளை ஏதாவது மிக தரம் தாழ்ந்த பூமியாக இருக்கிறது என்றால் காரியம் செய்வது அந்த மாதிரி ஆகிவிடுகிறது. நிலத்தின் பிரபாவம் செய்யும் காரியம் மற்றும் சம்ஸ்காரத்தில் ஏற்பட்டு விடுகிறது. எப்படி கோவிலுக்குச் செல்கிறீர்கள் என்றால் பூமியின் பிரபாவமும் இருக்கிறது தான் இல்லையா. ஒருவேளை கோவிலின் பூமியில் யாருக்காவது தீய எண்ணம் வருகிறது என்றால் அவர் தன்னை மிகப் பெரிய பாவியாக புரிந்து கொள்வார். அப்படி இது ஆன்மீக பூமியாகும். இங்கு உலகியல் நினைவு கூட வராமல் இருக்கிறது என்றால் நிரந்தர கர்மயோகியாக ஆகிவிடுவீர்கள். எனவே தான் எங்கிருந்தாலும் தன்னை எப்பொழுதும் பரந்தாமத்து நிவாசி மற்றும் மதுபன் நிவாசி என்று புரிந்து கொள்ளுங்கள் என்று பாப்தாதா எப்பொழுதும் கூறுகிறார். நிராகார நிலையின் கணக்குப்படி பரந்தாம நிவாசி, சாகார நிலையின் கணக்குப்படி மதுபன்நிவாசி. மதுபன் என்று கூறுவதினாலேயே வைராக்கிய உணர்வு மற்றும் இனிமைத்தன்மை இரண்டுமே வந்து விடுகிறது. மனநிலையில் எல்லைக்கட்டாற்பட்ட வைராக்கிய உள்உணர்வு மற்றும் தொடர்பில் இனிமைத்தன்மை இரண்டுமே தேவையாக இருக்கிறது, ஸ்தானத்தோடு மனநிலைக்கு தொடர்பு இருக்கிறது.

அனைவரும் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உள்ளவர்களாக ஆகியிருக்கிறீர்களா அல்லது இப்பொழுதும் எங்காவது பற்றுதல் இருக்கிறதா? எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உள்ளவருக்கு எங்கேயும் பற்றுதலோ, ஈர்ப்போ இருக்காது. அவர் எப்பொழுதும் இந்த பழைய உலகத்திலிருந்து ஒதுங்கியே இருப்பார். எப்பொழுது தந்தை தான் தன்னுடைய உலகம் என்று நினைப்பீர்களோ அப்பொழுது தான் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உள்ளவராக ஆக முடியும். தந்தை தான் உலகம் என்றால் எப்பொழுது தந்தையில் உலகத்தைப் பார்ப்பீர்கள் மற்றும் அனுபவம் செய்கிறீர்கள் என்றால் இன்னும் வேறு என்ன தான் இருக்கிறது. இயல்பாகவே வைராக்கியம் வந்து விடும் இல்லையா? தந்தை தான் என்னுடைய உலகம் என்றால் உலகத்திலேயே இருப்பீர்கள், இன்னொன்றில் செல்லவே இல்லை என்றால் ஒதுங்கி விடுவீர்கள், உலகத்தில் நபர் மற்றும் சாதனம் அனைத்தும் வந்து விடுகிறது என்றால் தந்தையைத் தான் தன்னுடைய உலகமாக ஆக்கியிருக்கிறீர்களா,

இன்னும் வேறு ஏதாவது உலகம் இருக்கிறதா? ஏதாவது உறவு மற்றும் ஏதாவது செல்வம் இருக்கிறதா என்ன? தந்தையின் செல்வம் தான் தன்னுடைய செல்வம். அப்படி இதே நினைவில் இருப்பதினால் இயல்பாகவே எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உள்ளவராக ஆகிவிடுவீர்கள். யாரையாவது பார்த்தும் பார்க்காமல் இருப்பீர்கள், தென்படவே தென்படாது. நல்லது.

நினைவில் இருப்பதினால் சக்தி வருகிறது. ஒருவேளை சக்தி இருக்கிறது என்றால் எந்தவொரு சூழ்நிலையும் சுயநிலையை மேலே கீழே ஆட்ட முடியாது. சோதனைகளை ஒரு விளையாட்டு என்று புரிந்து நடந்து கொள்வார்கள். ஒருவேளை விளையாட்டில் மற்றும் நாடகத்தில் எந்த விதமான சூழ்நிலையைப் பார்க்கிறீர்கள் என்றால் குழப்பத்தில் வந்து நிலை மேலே, கீழே ஆகிறதா என்ன? யாராவது இறந்தாலும் அல்லது என்ன நடந்தாலும் ஆனால் மனநிலை ஆடாது ஏனென்றால் இது நாடகம் என்று புரிந்து கொள்கிறார்கள். அதே போலவே சூழ்நிலைகளை ஒரு காட்சி என்று புரிந்து கொள்ளுங்கள். சூழ்நிலையின் காட்சிகளை பார்வையாளராக இருந்து பார்ப்பதினால் மனநிலை ஆடாது, வாடிப்போக மாட்டீர்கள் மற்றும் மகிழ்ச்சி வரும். எப்பொழுது டிராமா என்ற விஷயத்தை மறக்கிறீர்களோ அப்பொழுது சோர்வுற்று வாடிப்போகிறீர்கள்.

**வரதானம்: சுய இச்சை மற்றும் உறுதியான எண்ணத்தினால் ஒன்றைக் கொடுத்து பல மடங்கைப் பெறக் கூடிய சாதுர்யமானவர் ஆகுக!**

சாதூரியமான குழந்தைகள் மண்ணால் நிரம்பிய காய்ந்த அரிசியைக் கொடுத்து ஒன்றிற்கு பல மடங்கு பாக்கியத்தை உருவாக்கிக் கொள்கிறார்கள். அரிசியை மட்டும் கொடுக்கிறார்கள் மேலும் பலனாக அனைத்து சக்திகள், அனைத்து பொக்கிஷங்கள், 36-வகையினை விட அதிகமான விதத்தில் எடுத்துக் கொள்கிறார்கள் ஆனால் சில குழந்தைகள் அதைக் கொடுக்கும்பொழுதும் சுதாமாவுக்கு சமமாக கைகளுக்கிடையில் (கக்கத்தில்) மறைத்து வைத்துக் கொள்கிறார்கள். தந்தை பிடுங்கி பெற்றுக் கொள்ள முடியும் ஆனால் பிடுங்கினார் என்றால் அதனுடைய பலன் இவ்வளவு கிடைக்காது. எனவே சுய இச்சை மற்றும் உறுதியான எண்ணத்தினால் ஒன்றைக் கொடுத்து பல மடங்கைப் பெற

வேண்டும். இது தான் சாதுர்யம். இந்த மாதிரி கொடுப்பதில் தான் நன்மை உள்ளது.

**சுலோகன்: பார்வையாளர் ஆகி விலகியிருந்து ஒவ்வொரு விளையாட்டையும் பார்ப்பவர் தான் சாட்சியாக பார்ப்பவர்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 30.04.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உயர்ந்த அதிகார நிலையின் ஆதாரம் -இணைந்த ரூபத்தின் நினைவு!

தன்னுடைய இணைந்த ரூபத்தின் நிலையில் எப்பொழுதும் நிலைத்திருக்கிறீர்களா? முதலில், ஆத்மா மற்றும் உடல் என்ற இந்த இணைந்த சொரூபம். இது அனாதி படைப்புச் சக்கரத்தில் அனாதி பங்கை செய்து கொண்டே இருக்கிறது. இரண்டாவது இந்த புருஷோத்தம சங்கமயுகத்தில் பிராமண ஆத்மாக்கள் அதாவது குழந்தைகள் மற்றும் தந்தையின் நிரந்தரமான இணைந்த ரூபம் இருக்கிறது. மூன்றாவது நினைவுச் சின்ன ரூபத்தில் கூட நான்கு புஜங்கள் ரூபத்தை(இலக்ஷ்மி நாராயணன்) காண்பித்திருக்கிறார்கள். அந்த மாதிரி எப்பொழுதும் இணைந்த ரூபத்தின் ஞானத்தை தாரணை செய்து கொண்டே இருந்தீர்கள் என்றால் எப்பொழுதும் உயர்ந்த அதிகாரி என்று தன்னை அனுபவம் செய்வீர்கள்.

முதலில் தன்னுடைய உடல் மற்றும் ஆத்மாவின் இணைந்த ரூபத்தை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். உடல் படைப்பு ஆகும் மற்றும் ஆத்மா படைப்பவர். படைப்பவர் மற்றும் படைப்பின் இணைந்த ரூபம் ஆகும். அப்பொழுது இயல்பாகவே எஜமான நிலை நினைவில் இருக்கும். எஜமானின் நினைவு என்றால் உயர்ந்த அதிகாரத்தில் இருப்பீர்கள். இயக்குபவராக இருப்பீர்களேயன்றி அதன் வசமாகி நடப்பவராக அல்ல ஆனால் இப்படி இருக்கும்பொழுதே எப்படி மனிதர்கள் ஆத்மா, பரமாத்மாவைச் சேர்த்து ஒன்றாக்கி விட்டார்கள், அதே போல் ஆத்மா மற்றும் உடலை தனித்தனி என்பதற்குப் பதிலாக சேர்த்து ஒன்று என நினைத்து விட்டார்கள் அதாவது தன்னுடைய அதிகாரத்தின் நினைவை முடித்து விட்டார்கள். காலப்போக்கில் தேக உணர்வுடையவர்களாக ஆகிவிட்டார்கள். எனவே இணைந்தது என்பதற்குப் பதிலாக ஒன்று என்று நினைக்க ஆரம்பித்தார்கள். அப்படி யார் தன்னை மறந்தாரோ அதனுடைய முடிவாக என்ன இருக்கும். அனைத்தையும் இழந்தார்

என்றால் உணர்விழந்த நிலையில் தன்னுடைய அனைத்தையும் பறிகொடுத்தார்.

அதே போல் தற்சமயம் சங்கமயுகத்தில் தந்தை மற்றும் குழந்தைகளின் இணைந்த ரூபத்தின் நினைவை மறந்து விடுகிறீர்கள் என்றால் உயர்ந்த அதிகாரிக்குப் பதிலாக தன்னை பலமற்ற, சக்தியில்லாத, சோர்வுற்ற. குழம்பிப்போயிருக்கும் ஆத்மா அல்லது வசமாகியிருக்கும் ஆத்மாவாக அனுபவம் செய்கிறீர்கள். இணைந்த ரூபத்தின் நினைவு சக்தியைக் கொண்டு வருகிறது. எந்தவிதமான மாயாவின் தடைகளை இணைந்த ரூபத்தின் நினைவின் மூலம் எதிர்கொள்ளும் அதிகாரியாக இயல்பாகவே அனுபவம் செய்கிறீர்கள். சுயம் நீங்களே பலஹீனமான ஆத்மாவாக இருந்த போதிலும் தந்தையின் துணையின் காரணமாக சர்வ சக்திவானின் தொடர்பு மற்றும் நினைவு மூலம் மாஸ்டர் சர்வ சக்திவான் என்று அனுபவம் செய்கிறீர்கள். அப்படி இணைந்த ரூபத்தில் நிலைத்திருந்தீர்கள் என்றால் எப்பொழுதும் மாயாவை வென்றவர் அதாவது எப்பொழுதும் உயர்ந்த அதிகாரம் உடையவர் என்று அனுபவம் செய்வீர்கள். எப்பொழுது இரண்டு ரூபமுமே நினைவில் இருக்கிறது என்றால் நினைவுச் சின்ன சொரூபம் அதாவது அலங்கார சொரூபம் எப்பொழுதும் நினைவில் இருக்கும். அலங்கார சொரூபம் மாயாவை வென்றதின் அடையாளம் ஆகும். அலங்காரி எப்பொழுதும் தன்னை சக்திசாலியாக அனுபவம் செய்வார். எனவே மூன்று விதமான இணைந்த ரூபத்தை நினைவில் வையுங்கள்.

ஜோடி ரூபத்திலிருந்து விலகி தனியாக இருப்பவராக ஆகாதீர்கள். எப்படி உலகத்தில் இன்றைய நாட்களில் விசேஷமாக அனைவரும் துணையையும் துணைவனையும் விரும்புகிறார்கள். இதன் பின்னாலேயே தான் தன்னுடைய நேரம், உடல், மனம், பொருள் அனைத்தையும் ஈடுபடுத்துகிறார்கள். அப்படி உங்களுக்கும் இந்த மாதிரியான துணைவன் மற்றும் துணை முழுக் கல்பத்தில் கிடைக்க முடியாது. உலகீய வாழ்க்கையில் துணைவனாக இருப்பவர் ஏமாற்றத்தையும் கொடுத்து விடுகிறார், துக்கத்தையும் கொடுக்கிறார், சில நேரம் சிரிப்பார்கள், சில நேரம் அழுவார்கள். அப்படி தன்னுடைய மூட்-ஐயும் (மனநிலையையும்) மாற்றுவார்கள் ஆனால் ஆன்மீகத் துணைவனோ எப்பொழுதும் சிரிக்க வைக்கிறார். ஒருபொழுதும் மூட்

ஆஃப் ஆக்குவதில்லை. ஏமாற்றம் அடைவதிலிருந்து காப்பாற்றுகிறார். எப்பொழுதும் ஒன்றிற்கு ஆயிரம் மடங்கு கொடுக்கக்கூடிய வள்ளல் ஆவார். இருந்தும் துணைவனை தெரிந்து கொள்ளாத காரணத்தினால் எப்பொழுதும் துணையோடு இருப்பதற்குப் பதிலாக ஒதுங்கி விடுகிறீர்கள், குறும்புக் காரியம் அதிகம் செய்கிறீர்கள். சில நேரம் மனதை திருப்பி விடுகிறீர்கள். சில நேரம் புத்தியால் இங்கு, அங்கு அலைய ஆரம்பித்து விடுகிறீர்கள்.

சில நேரம் எண்ணம் மூலமாக விவாகரத்தையும் கொடுத்து விடுகிறீர்கள். ஏதாவது நபர் அல்லது சாதனத்தின் வசமாகி விடுவது என்றால் பிரபாவம் அடைவதாகும். அப்படி அந்த நேரம் தன்னுடைய துணைவனை எண்ணத்தினால் விவாகரத்து கொடுத்ததாக ஆனது. ஒதுங்கி விடுவது என்றால் விவாகரத்து கொடுப்பது. இதய சிம்மாசனத்தில் உண்மையான துணைவியாக இருப்பதற்கு பதிலாக அற்ப காலத்திற்கு துணை கொடுப்பவர்கள், எல்லைக்குட்பட்ட பிராப்தியின் பேராசையை கொடுத்து ஏமாற்றம் அடையச் செய்பவர்கள் அதாவது போலியான பொன் மான் தன் பக்கம் கவர்ந்திழுத்து விடுகிறது. அப்படி சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் துணைவிக்குப் பதிலாக ஏமாற்றப்பட்ட துணைவியாக ஆக்கிவிடுகிறார்கள். எண்ணத்தில் கவர்ந்திழுக்கப்படுவது என்றால் விவாகரத்து கொடுப்பது, உண்மையில் அடிக்கடி எண்ணத்தில் விவாகரத்து கொடுப்பது என்பது நிரந்தரமாக இராஜ்ய பாக்கியத்தை விவாகரத்து கொடுப்பது ஆகும்.

ஒரு சிலர் கோபித்துக் கொள்ளவும் செய்கிறார்கள். கோபிப்பதை ஒரு பொழுதுபோக்கு என்று நினைக்கிறார்கள். அடிக்கடி துணைவனிடம் நானோ அப்படித் தான் நடப்பேன். நான் இதைக் கண்டிப்பாக செய்வேன். நீங்களும் செய்ய வேண்டும் என்று அதட்டுதலை மிகவும் காண்பிக்கிறார்கள். நீங்கள் அழைத்துச் செல்லத்தான் வேண்டும். சர்வ சக்திவானாக இருக்கிறீர்கள் என்றால் சக்தி கொடுங்கள். உதவி செய்வது உங்களுடைய வேலை ஆகும் என்று அதட்டுதலை காண்பிக்கிறார்கள் ஆனால் உதவியைப் பெறுவது என்னுடைய வேலை என்பதை நினைவில் வைப்பதில்லை. ஒரு அடி என்னுடையது, ஆயிரம் அடிகள் துணைவனுடையது என்பதை மறந்து விடுகிறார்கள். எந்த விஷயங்களை துணைவன் கூறியிருந்தாரோ அதே விஷயங்களை பின்பு

துணைவனுக்கே நினைவூட்டுகிறார்கள். அப்படியானால் இது அதட்டுதல் ஆனது இல்லையா? நினைவு என்ற விரலை அடிக்கடி அவர்களே விடுவித்துக் கொள்கிறார்கள், பின்பு நீங்கள் ஏன் விரலைப் பிடிக்கவில்லை என்று கூறுகிறார்கள். அந்த மாதிரி குறும்புக் காரியம் செய்பவர்கள் அதிகம் இருக்கிறார்கள் ஆனால் இந்த மாதிரியான துணைவன் யார் தன்னுடைய கண்களில் அமர்த்தி அழைத்துச் செல்வாரோ அந்த மாதிரியானவர் எப்பொழுது கிடைப்பார் என்ற இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எனவே துணைவனோடு எப்பொழுதும் இணைந்து செல்லுங்கள் அதாவது இணைந்த ரூபத்தில் இருங்கள்.

கூடவே பிராமணர்களின் துணை அனைத்தையும் விட மிக உயர்ந்த துணை ஆகும். அது டிராமாவின் பாக்கியத்தின் அனுசாரம் மிகக் குறைந்த ஆத்மாக்கள் உங்களுக்கு மட்டும் தான் கிடைத்திருக்கிறது ஆனால் துணையிலும் கூட இந்த துணை லாபம் கொடுக்கக்கூடியதா மற்றும் பிராப்தி செய்விப்பதா என்ற இதையும் பார்க்கப்படும். அப்படி பிராமணர்களின் துணை அனைத்து பிராப்திகளையும் செய்விக்கக்கூடியது. பிராமணர்களில் முழுமையான பிராமணன் மற்றும் அரைகுறை பிராமணன் இருவருமே இருக்கிறார்கள். அரைகுறை என்றால் சத்திரியன். அப்படி பிராமணர்களின் துணையும் தேவையாக இருக்கிறது. எது துணைவனின் துணையோ அதே துணை தான் வேண்டும். ஒருவேளை அரைகுறை பிராமணர்களின் துணையை வைத்துக் கொண்டீர்கள் என்றால் உண்மையான துணைவனிடமிருந்து இயல்பாகவே நெருக்கத்திற்குப் பதிலாக தூரமாகி விடுகிறீர்கள். பிராமணர்களின் துணை மூலம் முன்னேறும் கலை இருக்கும். சத்திரியர்களின் துணை மூலம் நிற்கும் கலை ஆகிவிடும். யார் எவ்வளவு உயர்ந்தவராக இருப்பாரோ அந்த அளவு அவருடைய துணையும் உயர்ந்ததாக இருக்கும். எனவே சிரேஷ்ட பிராமணர்கள் எந்த துணை துணைவனால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லையோ அந்த துணையை வைத்துக் கொள்ள முடியாது. நம்பிக்கைக்குரிய துணைவி ஒருபொழுதும் அந்த மாதிரி துணையை வைக்க மாட்டார். என்ன செய்வது, துணையோ தேவையாக இருக்கிறதே என்று அப்படி கூறாதீர்கள் ஆனால் எந்த விதமான துணை வேண்டியது இருக்கிறது இதையும் யோசியுங்கள். அப்படி எப்பொழுதும் துணைவன் மற்றும் துணையைப் புரிந்து நடந்து

கொள்ளுங்கள். துணைவனோடு அன்பிற்குரிய முறையில் நடந்து கொள்ளுங்கள் மற்றும் துணையில் மரியாதைகளை கடைபிடியுங்கள். புரிந்ததா? இதைத் தான் இணைந்த ரூபத்தின் நினைவில் மிக உயர்ந்த அதிகாரத்தின் நிலையில் இருப்பது என்பதாகும். நல்லது.

எப்பொழுதும் அன்பிற்குரியவராக நடக்கக்கூடிய, மரியாதைக்கோட்டிற்குள் இருக்கக்கூடிய, போலியான பொன் மானின் பின்னால் உண்மையான துணைவனை விட்டு வீட்டு துணைவனிடமிருந்து ஒரு நொடி கூட தூரமாக ஆகாதவர்களுக்கு, எப்பொழுதும் நினைவு என்ற விரல் மூலம் துணைவனோடு கைகோர்த்து செல்லக்கூடிய, அந்த மாதிரியான தற்சமயம் மற்றும் எதிர்காலத்து ஆசனதாரி ஆத்மாக்களுக்கும் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தாதி மற்றும் தீதியுடன்:** இந்த தடவை நாடகப்படி பழையவர்களோடு சந்திப்பதற்கான பங்கு விரும்பாவிட்டாலும் நடந்து விட்டது. தொடக்கமே மகாரதிகளிடமிருந்து உருவானது மற்றும் எந்த மகாரதி தந்தை மற்றும் தந்தையின் ஆழமான சமிக்ஞைகளை தெரிந்து கொள்ள முடியுமோ அவர் கேட்டுக் கொண்டே இருந்தும் தெரிந்து கொள்ள முடியாது. எவ்வளவு தான் புது ஜனங்கள் இருந்தாலும் கூட ஆனால் தந்தை புது இடத்திலும் தனிப்பட்ட சந்திப்பை செய்கிறார். அனைவரும் இந்த ஆழமான இரகசியத்தைப் புரிந்து கொள்ள முடியாது. எப்படி மழை ஒரே நேரத்தில் நாலாபுறங்களிலும் விழுகிறது ஆனால் ஒருவேளை பூமி தகுதியானதாக இருந்தால் மழை பெய்வதினால் நன்கு பயிர் விளைந்து விடும். ஒருவேளை பூமி தகுதியானதாக இல்லை என்றால் மழை பெய்தும் பயிர் விளையாது.

அப்படி மகாரதிகளை தொடக்கத்திலிருந்து தந்தை எப்பொழுதும் எந்த பார்வையோடு பார்க்கிறார்? குழந்தைகளாக அல்ல, ஆனால் சகோதரர்களாக பார்க்கிறார். பெரிய குழந்தைகள் சகோதரனுக்கே சமமானவர்கள். எப்படி தந்தை வள்ளலாக இருக்கிறார், அதே போல் மகாரதிகளையும் தந்தை வள்ளலின் பார்வையால் பார்க்கிறார், பெறுபவர்களாக அன்றி தந்தைக்குச் சமமாக கொடுப்பவர்களாகப் பார்க்கிறார். எப்படி தந்தை பாக்கியத்தை உருவாக்குபவராக இருக்கிறார்

என்றால், மகாரதிகளுக்கும் கூட எந்த விதமான துணை பிடித்திருக்கிறது. பார்க்கப் போனால் ஒருவேளை துணைவர்களாக ஆகியிருப்பவர்களில் ஒருவர் உயரமாகவும் இன்னொருவர் உயரம் குறைவானவராகவும் இருக்கிறார் என்றால் என்னவாகும்? கார்ட்டூன் படம் மாதிரி தென்படும் இல்லையா? அப்படி மனநிலையிலும் கூட ஒருவேளை துணையாக இருப்பவர் சமமாக இருக்கவில்லை என்றால் மாஸ்டர் சர்வ சக்திவானாக ஆவதில்லை. துணைவன் சர்வ சக்திவான் மற்றும் இவர் பலஹீனமானவர். அப்படி இதுவும் ஒரு கார்ட்டூன் மாதிரி ஆனது இல்லையா? உயரமானவருக்கும், உயரம் குறைவானவருக்கும் ஜோடியாகிவிட்டது இல்லையா? அப்படியே வெளி யுலகத்திலும் கூட ஒருவேளை இரண்டு துணைவர்களும் சமமாக இல்லை, உடலின் கணக்குப்படியானாலும், படிப்பறிவின் கணக்குப்படியானாலும், இலட்சணத்தின் கணக்குப்படியானாலும் அல்லது மரியாதைகளின் கணக்குப்படியானாலும், அப்படி இருக்கிறது என்றால் ஒருபொழுதும் துணைவன் அவரை தன்னுடைய துணையாக வைக்க மாட்டார், ஒதுக்கி விடுவார். உலகின் எதிரில் அவரைக் கொண்டு வர மாட்டார். அப்படி தந்தையும் எப்பொழுதும் துணையாக யாரை ஆக்குவார்? யார் சமமாக இருக்கிறார்களோ அவர்களைத் தான். உலகின் எதிரில் உதாரணமாக யாரை வைப்பார்? கார்ட்டூனை வைக்க முடியுமா? அப்படி மகாரதி என்றால் சமமான துணைவன். அந்த மாதிரியான துணைவர்களைத் தான் ஒவ்வொரு காரியத்திலும் தந்தை உடன் வைக்கிறார் அல்லது இன்னும் முன்னுக்கு வைக்கிறார். ஒருவேளை துணைவர்களை வரிசைப்படுத்தி தந்தை பார்க்கிறார் என்றால் என்னவாகத் தென்படும்? அந்தக் காட்சி எப்படி இருக்கும்? ஆனால் இருந்தும் தந்தை கடலாக இருக்கும் காரணத்தினால் எப்படி இருந்தாலும் உள்ளடக்கிக் கொள்கிறார். கடலிலோ அனைத்தும் வந்து கலந்து விடும் இல்லையா? ஆனால் வரிசைக்கிரமம் என்றோ கூறுவோம் இல்லையா? ஒவ்வொருவருக்கும் நான் எப்படிப்பட்ட துணைவனாக இருக்கிறேன், எத்தனை தடவை விவாகரத்து கொடுத்தேன். எத்தனை தடவை குறும்புக் காரியம் செய்தேன், எத்தனை தடவை அடக்குதலை காண்பித்தேன் என்று தன்னைத்தான் பார்க்க வேண்டும். முழு நாளின் நடவடிக்கையில் நான் என்னென்ன செய்கிறேன் என்று பார்க்க வேண்டும்.

## 1977 அவ்யக்த முரளி

**பார்ட்டிகளுடன்**: **நிரந்தரமாக நினைவில் இருப்பதற்கான வழி - என்னுடையது என்பதை மறந்து விடுவது!** அனைத்தும் தந்தையினுடையது இந்த உடலும் உங்களுடையது அல்ல, தந்தையினுடையது ஆகும். தந்தை சேவைக்காக கொடுத்திருக்கிறார் என்றால் என்னுடையது என்பது அகன்றுவிட்டது இல்லையா. என்னுடையது என்பது இல்லை என்றால் ஆத்ம அபிமானியாக இயல்பாகவே ஆகிவிடுவீர்கள். ஒருவேளை தந்தையின் நினைவு கொஞ்சம் அகன்று விட்டது என்றால் மாயா வருகிறது. எப்பொழுதும் இணைந்து இருந்தீர்கள் என்றால் உடல் உணர்வில் கொண்டு வருவதற்கு மாயாவின் தைரியம் கிடையாது. தந்தையைத் தவிர வேறு எதுவுமே உங்களுக்கு டிக்கக்கூடாது. எப்பொழுது தந்தையின் துணையிலிருந்து விலகுகிறீர்களோ அப்பொழுது பலஹீனம் ஆகிறீர்கள், அந்த நேரம் என்ன செய்வது? எப்படிச் செய்வது? என்று யோசிக்கிறீர்கள், மாயா மேல் வெற்றி அடைவது கடினம் என்று யோசிக்கிறீர்கள் என்றால் தந்தையிடமிருந்து விலகுகிறீர்கள் என்பதாகும். சர்வ சக்திவான் தந்தை உடன் இருக்கிறார் என்றால் இந்த மாதிரி எண்ணம் வர முடியுமா? மாயா தந்தையிடமிருந்து பிரிப்பதற்காக விதவிதமான ரூபத்தில் வருகிறது. நான் செய்ய முடியாது, நான் பலஹீனமாக இருக்கிறேன் -எப்படிச் செய்வேன் என்ற இந்த பலஹீனமான எண்ணம் மாயா இராவணனின் சேனையின் அகாசூரன், பகாசூரர்கள் ஆவார்கள். அவற்றைக் கண்டு பயப்படக்கூடாது. நான் எப்பொழுதுமே வெற்றி அடைந்தவன், இதற்கு முன்பும் வெற்றி அடைந்திருக்கிறேன், இப்பொழுதும் அடைவேன் என்று அப்படி எப்பொழுதும் நினையுங்கள்.

இந்த நாடகத்தில் விசேஷ பாத்திரத்தை செய்யும் விசேஷ ஆத்மாக்கள் குழந்தைகள் நீங்கள்! ஏனென்றால், அனைவரையும் விட விசேஷத்திலும் விசேஷமானவர் தந்தை ஆவார். தந்தையுடன் சேர்ந்து பாத்திரத்தில் நடிக்கும் ஆத்மாக்கள் இயல்பாகவே விசேஷமானவர்களாக இருப்பார்கள். உலகத்தில் கூட ஒருவேளை ஏதாவது விசேஷ ஆத்மாக்களுடன் கொஞ்சக் காலமாவது இருக்கிறார் என்றால் அவருக்கு போதை இருக்கும். ஒருவேளை பிரதம மந்திரியுடன் கொஞ்ச நேரமாவது இருக்கிறார் என்றால் எவ்வளவு போதை இருக்கிறது. அவரோ இன்று இருக்கிறார் நாளை இல்லாமலும் இருப்பார் ஆனால் இவரோ எவ்வளவு உயர்ந்தவர். மேலும் அழியாதவர். அப்படியானால் இந்தளவு போதை இருக்கிறதா?

# 1977 அவ்யக்த முரளி

நான் தந்தையினுடையவன், தந்தை என்னுடையவர் என்ற ஒரே சீரான போதை எப்பொழுதும் இருக்க வேண்டும். தந்தை எப்பொழுதும் கடலாக இருக்கிறார். மேலும் வள்ளலின் குழந்தைகளும் கடல் மற்றும் வள்ளலாக இருக்கிறீர்கள். பாபா உதவி செய்யுங்கள் என்ற இதுவும் இருக்க வேண்டாம். தந்தை தன்னிடம் ஏதாவது வைத்துக் கொண்டாரா என்ன? ஒருவேளை அனைத்தையும் கொடுத்தே விட்டார் என்றால் பிறகு என்ன கேட்பீர்கள்? பிறந்ததுமே தந்தை கிரீடம், ஆசனம், திலகம் என்ற அனைத்தையும் கொடுத்து விடுகிறார். பிறகு ஏன் கேட்க வேண்டும்? எனவே என்னை மாதிரியான அதிர்ஷ்டசாலி வேறு யாருமே இல்லை என்று அப்படி நினையுங்கள். இருந்ததும் இல்லை, இருக்கவும் மாட்டார். எனவே எப்பொழுதும் ஆடிக் கொண்டே இருங்கள்.

கர்மயோகத்தின் பலன் சகஜயோகா மற்றும் குஷி ஆகும். பிரத்யக்ஷ பலன் இங்கேயே பல மடங்கு கிடைக்கிறது. யார் என்ன செய்கிறாரோ அதனுடைய உலகில் என்னென்ன செய்கிறார்களோ அதை குஷிக்காக செய்கிறார்கள். இது எல்லையில்லா அழியாத குஷியாகும். மனதால் குஷியாக இருப்பதினால் உடலின் நோயும் ஈட்டி போன்றது முள்ளாகி விடுகிறது. அதிகமாக யோசிக்கக்கூடாது, யோசிப்பதினால் முடிவெடுக்கும் சக்தி குறைந்து விடுகிறது. சோதனை வருகிறது என்றால் பரிபக்குவம் ஆவது, பயப்படக்கூடாது. சோதனை அஸ்திவாரத்தை உறுதியாக்குகிறது. அஸ்திவாரத்தைப் போடுகிறார்கள் ஆனால் உறுதியாக்க வேண்டும்.

வெளியில் எவ்வளவு தான் குழப்பமாக இருந்தாலும் ஆனால் ஒரு நொடியில் நிறுத்த வேண்டும். எவ்வளவு தான் விஸ்தாரமானதாக இருந்தாலும் ஒரு நொடியில் சுருக்கத்தில் கொண்டு வந்து விடுங்கள். சுபாவம், சம்ஸ்காரம், எண்ணம் மற்றும் சம்மந்தம் அனைத்தையும் ஒரு நொடியில் உள்ளடக்க வேண்டிய பயிற்சி தேவையாக இருக்கிறது. பசி, தியாகம், குளிர், வெயில் அனைத்தும் இருந்த போதிலும் சம்ஸ்காரம் வெளிப்படக்கூடாது. சுபாவமும் அந்த நேரத்தில் ஏமாற்றம் கொடுத்து விடுகிறது. எனவே சுபாவம், சம்ஸ்காரம், எண்ணம் அனைத்தையும் உள்ளடக்கி விடுங்கள். இதைத்தான் உள்ளடக்கும் சக்தி என்று கூறுவது. அந்த மாதிரியான பயிற்சி நிரந்தரமாக இருக்கட்டும். வெகு காலத்து பயிற்சி உள்ளவராக இருந்தால் தான் தேர்ச்சி அடைய முடியும். நல்லது.

**வரதானம்: லௌகீகத்தை (குடும்ப விஷயத்தை) அலௌகீகத்தில் (ஆன்மீகத்தில்) மாற்றம் செய்து வீட்டைக் கோயில் ஆக்கக்கூடிய, ஈர்ப்புடையவராக ஆகுக!**

இல்லறத்தில் இருந்து கொண்டே வீட்டின் சூழ்நிலையை அந்த மாதிரி உருவாக்குங்கள் அதில் எந்த விதமான லௌகீகத் தன்மையும் இருக்க வேண்டாம். யார் வந்தாலும் இது குடும்பம் அல்ல தெய்வீகமானது என்று அனுபவம் செய்யட்டும். இது சாதாரண வீடு அல்ல, ஆனால் கோயில் ஆகும். இது தான் தூய்மையான இல்லறத்தில் இருப்பவர்களின் சேவையின் பிரத்யக்ஷ சொரூபமாகும். ஸ்தானமும் சேவை செய்யட்டும், வாயுமண்டலமும் சேவை செய்யட்டும். எப்படி கோயிலின் சூழ்நிலை அனைவரையும் கவர்ந்திழுக்கிறது. அப்படி உங்களுடைய வீட்டிலிருந்து தூய்மையின் நறுமணம் வருகிறது என்றால், அந்த நறுமணம் இயல்பாகவே நாலாபுறங்களிலும் பரவும் மற்றும் அனைவரையும் கவர்ந்திழுக்கும்.

**சுலோகன்: மனம், புத்தியை உறுதியோடு ஒருமுனைப்படுத்தி பலஹீனங்களை அழித்து விட்டீர்கள் என்றால் அப்பொழுது தான் உண்மையான யோகி என்று கூறலாம்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 03.05.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கர்மங்களின் மிக ஆழமான விளைவுகள்!

பாப்தாதா எல்லைக்கப்பாற்பட்ட அனாதி, அழியாத நாடகத்தின் காட்சியினுள் விசேஷமாக எந்தக் காட்சியைப் பார்த்து மகிழ்வுறுகிறார்? தெரிந்திருக்கிறீர்களா? தற்சமயம் பாப்தாதா பிராமணர்களின் லீலை, விசித்திரமான மற்றும் சிரிக்க வைக்கும் விஷயங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். எப்படி குழந்தைகள் ஹே பிரபுவே உங்களுடைய லீலை அளவில்லாதது' என்று கூறுகிறார்கள். அதே போல் தந்தையும் குழந்தைகளின் லீலை மிக அதிசயமானது, வகை வகையான லீலைகள் என்று கூறுகிறார். அனைத்தையும் விட அதிசயமான லீலையாக பார்ப்பதற்கு எது தென்படுகிறது என்பதைத் தெரிந்திருக்கிறீர்களா? இந்த நேரம் அனைத்தும் இருக்கிறது என்று கூறுகிறார்கள், ஆனால் என்ன செய்கிறார்கள்? அதை அவர்களும் புரிந்திருக்கிறார்கள். மேலும் என்ன செய்கிறோம் என்பதைத் தெரிந்தும் இருக்கிறார்கள். எப்படி ஏதாவது விகாரத்தின் வசமான ஆத்மா பரவச ஆத்மா, சுயநினைவிழந்த ஆத்மா என்ன கூறுகிறது, என்ன செய்கிறது என்று ஒன்றும் புரிந்து கொள்ள முடியாது. அந்த மாதிரி லீலையை பிராமணர்களும் செய்கிறார்கள். அந்த மாதிரி லீலையைப் பார்த்து பாப்தாதா இரக்கமனம் உடையவராகவும் ஆகிறார். மேலும் கூடவே நியாயம் வழங்கும் தலைமை நீதிபதியாகவும் ஆகிறார். அதாவது லவ் மற்றும் லா (அன்பு மற்றும் சட்டம்) இரண்டின் சமநிலை வைக்கிறார். ஒரு பக்கம் இரக்க மனமுடையவராகி தந்தையின் உறவினால் கடுமையைத் தளர்த்தவும் செய்கிறார். அதாவது ஒன்று, இரண்டு, மூன்று தடவைகள் மன்னிக்கவும் செய்கிறார். இன்னொரு பக்கம் தலைமை நீதிபதியின் ரூபத்தில் நன்மை செய்பவராக இருக்கும் காரணத்தினால் குழந்தைகளின் நன்மைக்காக ஈஸ்வரிய சட்டங்களையும் கூறுகிறார். அனைத்தையும் விட சங்கமயுகத்தின் மிகப் பெரிய அனாதி சட்டமாக எது இருக்கிறது? நாடகத்திட்டப்படி ஒன்றிற்கு லட்சம் மடங்கு பிராப்தி மற்றும் வேதனை அல்லது அனுபவிப்பது இந்த சட்டம் அதாவது

நியமம் தானாக இயங்கிக் கொண்டே இருக்கிறது. தந்தைக்கு ஸ்தூலமான வழக்கப்படி இந்தக் காரியத்திற்காக இதைப் பெற்றுக் கொள்ளுங்கள் அல்லது இந்தக் காரியத்திற்காக இந்த தண்டனை என்று சொல்ல மற்றும் செய்ய வேண்டியிருப்பதில்லை ஆனால் இது தானியங்கி ஈஸ்வரிய இயந்திரம் ஆகும். இந்த இயந்திரத்தை அனேக குழந்தைகள் தெரிந்து கொள்ள முடிவதில்லை. எனவே தான் கர்மங்களின் விளைவு மிக ஆழமானது என்று வர்ணிக்கபட்டிருக்கிறது.

தந்தையை தெரிந்து கொண்டார், அடைந்து விட்டார் அல்லது ஆஸ்தியையும் அடைந்தார், பிராமண பரிவாரத்திற்குள் தன்னை பிராமணன் என்றும் ஏற்றுக் கொண்டார், பிரம்மா குமார் அல்லது பிரம்மா குமாரி என்ற பட்டமும் கிடைத்து விட்டது, ஈஸ்வரிய சேவைக்காக பொறுப்பாளர் ஆகிவிட்டார். சகஜ இராஜயோகி என்றும் கூறுகிறார், பிராப்தியின் அனுபவத்தையும் செய்ய ஆரம்பிக்கிறார், ஈஸ்வரிய போதை பிராப்தியின் போதையும் ஏற ஆரம்பிக்கிறது. அடையப்போவதின் அடையாளமும் தென்படத் தோன்றுகிறது, ஆனால் மேலே இன்னும் என்ன ஆனது? மாயாவின் சவாலை வெற்றிப் பூர்வமாக எதிர்கொள்ள முடியவில்லை. மாயாவின் விதவிதமான ரூபங்களை பகுத்தறிய முடிவதில்லை. எனவே சிலர் மாயாவை பலம் நிரம்பியதாக பார்த்து மனமுடைந்து (சோர்ந்து), போய் விடுகிறார்கள். என்னால் வெற்றி அடைய முடியுமா? சிலர் எதிர் கொண்டிருக்கும் போதே சில நேரம் தோல்வியை, சில நேரம் வெற்றியை அனுபவம் செய்கிறார்கள், களைப்படைந்து விடுகிறார்கள். அதாவது களைப்படைந்து எங்கிருக்கிறாரோ, எப்படியிருக்கிறாரோ அங்கேயே நின்று விடுகிறார். முன்னேற வேண்டும் என்று நினைத்தாலும் தைரியம் வருவதில்லை. சிலர் தன்னில், தந்தையிடமிருந்து நேரடியாக துணையை மற்றும் உதவியைப் பெறுவதற்கு தைரியம் இல்லாததைப் பார்த்து வழியில் செல்லும் மற்ற துணைவர்களையே வழிகாட்டி ஆக்கி அதாவது அவர் மூலமாகவே துணை மற்றும் சகயோகத்தின் பிராப்தி இருக்கிறது என்று (தவறாக) நினைக்கிறார்கள். தந்தைக்குப் பதிலாக ஏதாவது பிற ஆத்மாவை தன்னுடைய ஆதாரம் என்று நினைத்து விடுகிறார்கள், அதனால் தந்தையிடமிருந்து விலகி விடுகிறார்கள். ஒரு சிறிய குச்சியை தன்னுடைய ஆதாரம் என்று நினைக்கும் காரணத்தினால் அடிக்கடி புயல்களில் ஆடவும், விழவும் செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும்

எப்பொழுதும் சென்றடைய வேண்டிய கரையை மிகத் தூரமாக அனுபவம் செய்கிறார்கள். அது போலவே ஏதோ நபரின் ஆதாரத்தின் கூடவே சில ஆத்மாக்கள் ஏதாவது விதமான பிராப்தியின் ஆதாரத்தில் நடப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். இது இருந்தால் அல்லது இப்படி இருந்தால் முயற்சி செய்வேன். இது கிடைத்தால் முயற்சி செய்வேன் தந்தையின் ஆதாரத்தை எடுக்காமல் அற்பகாலத்தின் அனேக ஆதாரங்களை சார்ந்து விடுகிறார்கள்.

அந்த மாதிரி வசதிகள் என்ற ஊன்றுகோலின் ஆதாரத்தில் சென்று கொண்டு இருக்கிறார்கள். அழியாத எந்த ஆதாரம் அழியக்கூடியது மற்றும் மாறிக் கொண்டே இருக்குமோ அதை ஆதாரமாக ஆக்கிய காரணத்தினால், தானும் அனைத்து பிராப்திகளின் அனுபவத்தை கொஞ்ச நேரத்திற்காக மட்டுமே அனுபவம் செய்கிறார்கள். மேலும் மனநிலையும் ஒரே சீராக இருப்பதில்லை, அடிக்கடி மாறிக் கொண்டே இருக்கும். ஒரு நேரம் மிகுந்த குஷி மற்றும் ஆனந்தத்தில் இருப்பார், அடுத்த நேரம் மிகுந்த சோர்வுடையவராக வாடிப்போன மற்றும் இரசனையற்றவராகத் தென்படுவார். என்ன காரணம் என்றால் ஆதாரமே அப்படிப்பட்டது. சில ஆத்மாக்கள் மிக நல்ல ஊக்கம் உற்சாகம், தைரியம் மற்றும் தந்தையின் சகயோகத்தினால் மிக முன்னுக்கு லட்சியத்தின் அருகில் வரை வந்து சேர்ந்து விடுகிறார்கள் ஆனால் 63 ஜென்மங்களின் கணக்கை இங்கேயே முடிக்க வேண்டும். தன்னுடைய கடந்த கால சம்ஸ்காரம் சுபாவம் வெளிப்பட்டு நிரந்தரமாக முடிவடைந்து கொண்டிருக்கின்றன. அந்தக் கர்மங்களின் ஆழமான விளைவுகளைத் தெரிந்து கொள்ளாமல், என்ன கடைசி வரை இப்படியே நடக்குமா என்று பயந்து விடுகிறார்கள். இன்று வரையிலும் இந்த மோதல் ஏன் நடக்கிறது? இந்த வீணான எண்ணங்களின் குழப்பத்தின் காரணமாக கடந்து செல்ல முடிவதில்லை. யோசிப்பதிலேயே நேரத்தை வீணாக்கி விடுகிறார்கள். மேலும் கோடியில் சிலர் தான் புயல் களையும், நாடகத்தால் கொடுக்கப்பட்ட பரிசு என்று புரிந்து சுபாவ சம்ஸ்காரத்தின் மோதலை முன்னேறு வதற்கான ஆதாரம் என்று புரிந்து மாயாவை பகுத்தறிந்து கொண்டு கடந்து செல்கிறார்கள். எப்பொழுதும் தந்தையை துணைவனாக்கிக் கொண்டே சாட்சியாக இருந்து ஒவ்வொருவரின் பங்கைப் பார்த்து எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருந்து சென்று கொண்டே இருக்கிறார்கள். இப்பொழுது வந்து சேர்ந்து விடுவோம் என்ற நிச்சயம்

எப்பொழுதும் இருக்கிறது. இவ்வாறு தந்தை இத்தனை விதவிதமான குழந்தைகளின் லீலைகளைப் பார்க்கிறார்.

சத்தியமான தந்தையிடம் தன்னுடைய வாழ்க்கை என்ற படகை கொடுத்து விட்டீர்கள் என்றால் சத்தியத்தின் துணை உள்ள படகு ஆடும், ஆனால் மூழ்காது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தந்தையிடம் பொறுப்பைக் கொடுத்து விட்டு திருப்பி எடுத்துக் கொள்ளாதீர்கள். நான் செல்ல முடியுமா நான் எங்கிருந்து வந்திருக்கிறேன்? எனது என்பதை அகற்றுவது என்றால் தந்தையினுடையவராக ஆவது. இந்த தவறைத் தான் செய்கிறீர்கள். மேலும் இதே தவறு செய்து தன்னை குழப்பி வேதனை அடைகிறீர்கள். நான் செய்கிறேன் அல்லது என்னால் செய்ய முடியும் என்ற இந்த தேக அபிமானத்தின் நான், எனது என்பது இருக்க வேண்டாம். இந்த மொழியையே மாற்றுங்கள். எப்பொழுது நான் தந்தையினுடையவராக ஆகிவிட்டேன் என்றால் பொறுப்பாளர் யார்? எப்படி தந்தை நடத்துவிப்பாரோ அப்படி நடந்து கொள்வேன். என்ன தந்தை கூறுவாரோ அதைச் செய்வேன், எந்த நிலையின் ஸ்தானத்தில் தந்தை அமர வைப்பாரோ அங்கு அமருவேன் என்ற இந்த ஒன்று மட்டும் தான் என்னுடைய பொறுப்பு இருக்கிறது என்று புரிந்து கொள்ளுங்கள். ஸ்ரீமத்தில் என்னுடையது என்ற மனம் சொல்லும் வழியைக் கலக்க மாட்டேன் என்றால் வேதனைப்படுவதிலிருந்து விலகி, பிராப்தி சொரூபம் மற்றும் முயற்சி செய்வதின் சுலபமான நிலையை பிராப்தி செய்வேன், அதாவது எப்பொழுதும் நல்ல புத்தியை பெறுவேன். மற்றவர்களைப் பார்த்து நீங்கள் பயப்படாதீர்கள். என்ன ஆகும்? இப்படியும் ஆகுமா? என்று பயப்படாதீர்கள் ஆனால் ஆழமாகச் செல்லுங்கள், ஏனென்றால் தற்சமயம் கடைசி நேரத்தின் அருகாமையின் காரணமாக ஒரு பக்கம் அனேக விதமான மிச்சமிருக்கும் கணக்கு வழக்கு, சுபாவம், சம்ஸ்காரம் அல்லது மற்றவர்களின் உறவு நெருக்கம் மூலமாக வெளியாகும், அதாவது இறுதி விடைபெறும். அப்படி வெளியில் வந்து கொண்டே அனேக விதமான மனம் சம்மந்தப்பட்ட சோதனைகள் என்ற நோய்களைப் பார்த்து பயப்படாதீர்கள் ஆனால் இது மிகக் கொடிய, இறுதியின் அடையாளம் என்று புரிந்து கொள்ளுங்கள். இன்னொரு பக்கம் இறுதி நேரம் அருகில் இருக்கும் காரணத்தினால் கர்மங்களின் விளைவுகளின் இயந்திரமும் அதிவேகமாக இயங்குவதாகத் தென்படும். தர்மராஜ்புரிக்கு செல்வதற்கு முன்பு இங்கேயே செய்த கர்மம் மற்றும் அதன் தண்டனையின்

சாட்சாத்காரம் இருக்கும். ஒருவேளை சத்தியமான தந்தையின் உண்மையான குழந்தை ஆகி, சத்திய ஸ்தானத்தின் நிவாசியாகி, சிறிது அசத்திய காரியம் செய்தீர்கள் என்றாலும் பிரத்யக்ஷமாக தண்டனையின் அனேக அதிசயமான ரூபத்தில் காட்சிகள் இங்கேயே கிடைக்கும். பிராமண பரிவாரம் அல்லது பிராமணர்களின் பூமியில் கால் நிற்க முடியாது, ஒவ்வொரு (பாவக்) கறையும் தெளிவாகத் தென்படும், மறைக்க முடியாது. அவரே தன்னுடைய தவறின் காரணமாக மன உளைச்சலில் நிலைத்திருக்க முடியாது. தன்னைத் தானே தண்டனைக்குரியவராக அவர்களே ஆக்கிக் கொள்வார்கள். இவை அனைத்தும் நடக்கத் தான் செய்யும். இதன் ஞானம் தெரிந்தவராக ஆகுங்கள். பயப்படாதீர்கள். புரிந்ததா? மாஸ்டர் சர்வ சக்திவான் பயப்படுவதில்லை. நல்லது.

கர்மங்களின் விளைவுகளை தெரிந்திருப்பவர்களுக்கு, எப்பொழுதும் ஒவ்வொரு விநாடி, ஒவ்வொரு எண்ணத்திலும் தந்தையின் ஸ்ரீமத்படி நடக்கக்கூடிய, தன்னுடைய வாழ்க்கையின் பொறுப்பை தந்தைக்கு ஒப்படைக்கக்கூடிய, எப்பொழுதும் தந்தையின் ஆதாரத்தை எதிரில் வைத்து அனைத்து தடைகளிலிருந்து ம் விலகியிருக்கக்கூடிய, சம்பூர்ண நிலையை எதிரில் வைக்கும் அந்த மாதிரி தைரியம், உற்சாகம், ஊக்கத்தில் எப்பொழுதும் இருப்பவர்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தீதி அவர்களுடன்:** இப்பொழுதோ தந்தை குழந்தைகளை சம்பன்ன ரூபத்தில் பார்க்க விரும்புகிறார் ஆனால் சம்பன்னம் ஆவதில் தான் அதிசயமான விஷயங்களைப் பார்ப்பீர்கள். ஏனென்றால் இது நடைமுறை பரீட்சை ஆகிவிட்டது. எந்த விதமான புதிய காட்சி அல்லது ஆச்சரியப்படும்படியான காட்சி எதிரில் வந்தாலும், அந்தக் காட்சியை பார்வையாளர்(சாட்சியான) கண்ணோட்டத்தோடு பார்க்க வேண்டும். ஆடக்கூடாது. ஏதாவது அந்த மாதிரியான காட்சி எதிரில் வருகிறது என்றால் முதலில் பார்வையாளராகி பார்க்கும் நிலை என்ற ஆசனத்தில் அமர்ந்து பார்ப்பது அல்லது நிர்ணயம் செய்வதினால் மிகுந்த மகிழ்ச்சி வரும். பயம் வராது. இப்பொழுது நடக்கத் தான் வேண்டும் என்றால் பயப்படுவது அல்லது பயபீதி ஆவது இருக்கவே முடியாது. எப்படி அனேக் தடவைகள் பார்த்த காட்சியையே மீண்டும் பார்க்கிற மாதிரி. இந்தக் காரணத்தினால் என்னவானது? ஏன் ஆனது? அந்த மாதிரியும் ஆகுமா?

என்ற இதுவோ புது விஷயம் ஆனது. இந்த எண்ணம் அல்லது வார்த்தைகள் இருக்காது. இன்னும் இரகசியம் அறிந்து நடப்பவராக, யோகம் நிறைந்தவராக, லைட் ஹவுஸ் ஆகி வாயுமண்டலத்தை டபுள் லைட் ஆக்குவீர்கள். பயப்படுபவர்களாக இருக்க மாட்டீர்கள். அந்த மாதிரி அனுபவம் ஆகிறது தான் இல்லையா? இதைத் தான் மலைக்கு சமமான சோதனையை கடுகுக்கு சமமான அனுபவம் ஆவது என்று கூறுவது. பலஹீனமானவருக்கு மலை போன்று தோன்றும் மற்றும் மாஸ்டர் சர்வ சக்திவானுக்கு கடுகாக அனுபவம் ஆகும். இதன் மேல் தான் வரிசைக்கிரம எண் உருவாகிறது. நடைமுறை பரீட்சையில் தேர்ச்சி பெறுவதிலும் வரிசை எண் உருவாகிறது. எப்பொழுதும் பரீட்சையில் மதிப்பெண் கிடைக்கும். படிப்போ நடந்து கொண்டே இருக்கும், ஆனால் வரிசை எண் பரீட்சையின் ஆதாரத்தில் இருக்கும். ஒருவேளை பரீட்சை இல்லை என்றால் வரிசை எண்ணும் இல்லை. எனவே உயர்ந்த முயற்சி செய்பவர் பரீட்சையை ஒரு விளையாட்டு என்று புரிந்து கொள்கிறார். விளையாட்டில் ஒருபொழுதும் பயப்படுவதில்லை. விளையாட்டோ பொழுதுபோக்காக இருக்கிறது. அப்படி பொழுதுபோக்கில் பயப்படுவது கிடையாது. நாளாக நாளாக மிக அதிகமாக முன்னேறுவதற்கும் மற்றும் முன்னேற்றுவதற்குமான காட்சிகளைப் பார்ப்பீர்கள். மிகச் சிறிய தவறு கடினமாக்கி விடும், அது எந்த தவறு? ஏற்கெனவே சொல்லி இருக்கின்றோம் இல்லையா! நான் எப்படிச் செய்வது, நான் செய்ய முடியாது, நான் அப்படி நடந்து கொள்ள முடியாது. ஆகியவை. நீங்கள் (தனியாக) நடங்கள் என்று யார் கூறியது? நீங்களாகவே நடங்கள் என்று தந்தையோ கூறவில்லை. துணைவனின் துணையை பிடித்துக் கொண்டு நடங்கள், துணையை விட்டு விட்டு தன் மேல் ஏன் சுமையை தூக்கிக் கொண்டு செல்கிறீர்கள் அதனால் என்னால் நடக்க முடியாது, நான் செய்ய முடியாது என்று கூற வேண்டியதாக இருக்கிறது. தவறு அவர்களுடையது மற்றும் தந்தையிடம் புகார் கூறுவார்கள். விரலை அவர்களே விட்டு விடுகிறார்கள். சுமையை அவர்களே தூக்குகிறார்கள், பின்பு சுமையை தூக்க முடியாது என்று கூறுகிறார்கள். நீங்கள் தூக்குங்கள் என்று யார் கூறியது. சுமை தூக்கு வதற்கான பழக்கம் இருக்கிறது இல்லையா? யாருக்கு சுமை தூக்குவதின் பழக்கம் இருக்கிறதோ அவருக்கு உட்கார்ந்து சுலபமான காரியம் செய்யக் கூறினீர்கள் என்றால் செய்ய முடியாது. அப்படி இதுவும் பழைய பழக்கத்தின் வசம் ஆகிவிடுகிறார்கள். இது என்னுடைய பழைய சம்ஸ்காரம் என்றும் கூற முடியாது. பழைய

சம்ஸ்காரம் என்றால் மர்ஜீவா (மறுபிறவி எடுத்தவர்) ஆகவில்லை. மர்ஜீவா ஆகிவிட்டீர்கள் என்றால் புதிய ஜென்மம், புதிய சம்ஸ்காரம் இருக்க வேண்டும், பழைய சம்ஸ்காரம் இந்த ஜென்மத்தினுடையது. அல்ல, முந்தைய ஜென்மத்தினுடையது. அந்தக் குலமே வேறு. இந்தக் குலமும் வேறு. அது சூத்திர குலம், இது பிராமண குலம். எப்பொழுது குலம் மாறுகிறதோ அப்போது அந்தக் குலத்தின் மரியாதையை க் கடைபிடிக்க வேண்டும். எப்படி உலகியல் வழக்கத்தில் கூட ஒருவேளை கன்னியாவின் குலம் திருமணத்திற்குப் பிறகு மாறிவிடுகிறது என்றால், அந்தக் குலத்தின் மரியாதைப்படி தன்னை நடத்திக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. இதுவும் குலம் மாறிவிட்டது இல்லையா? எனவே பழைய பழக்கம் இல்லையா, எனவே இப்படியெல்லாம் இருக்கத் தான் செய்யும் என்று இதை யோசித்தும் பலஹீனமானவர் ஆகக்கூடாது ஆனால் இப்பொழுதைய குலத்தின் மரியாதை என்ன, அந்த மரியாதையின்படி இது இல்லவே இல்லை. நல்லது.

**வரதானம்: ஒவ்வொருவரின் சுபாவம், சம்ஸ்காரத்தைத் தெரிந்து, மோதுவதற்குப் பதிலாக பாதுகாப்பாக இருக்கக்கூடிய மாஸ்டர் ஞானம் நிறைந்தவர் ஆகுக!**

எந்தவொரு விஷயத்தையும் பெரியதாக அல்லது சிறியதாக ஆக்குவது தன்னுடைய புத்தியின் ஆதாரத்தில் இருக்கிறது. எப்பொழுது ஒவ்வொருவரின் சுபாவ சம்ஸ்காரத்தைத் தெரிந்து கொண்டீர்கள் என்றால் ஞானம் நிறைந்தவர் ஒருபொழுதும் யாருடைய சுபாவு, சம்ஸ்காரத்தின் மோதலில் வர முடியாது. எப்படி இது குழி அல்லது மலை என்று யாருக்காவது தெரிகிறது என்றால் தெரிந்தவர் ஒருபொழுதும் மோத மாட்டார். ஒதுங்கிச் சென்று விடுவார். அதே போல் நீங்களும் ஒதுங்கி விடுங்கள். அதாவது தன்னை பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள். ஏதாவது காரியத்திற்காக ஒதுங்காதீர்கள் ஆனால் தன்னுடைய பாதுகாப்பு சக்தியினால் மற்றவர்களையும் பாதுகாப்பது இது தான் ஒதுங்கி விடுவது.

**சுலோகன்: பறக்கும் கலையை அனுபவம் செய்ய வேண்டும் என்றால் எப்பொழுதும் பாக்கியம் மற்றும் பாக்கியத்தை உருவாக்குபவரின் நினைவில் இருங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 05.05.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வரதானி, மகாதானி மற்றும் தானி ஆத்மாக்களின் லட்சணம்! (வரமளிக்கும் வள்ளல், பெரும் வள்ளல் மற்றும் வள்ளல் ஆத்மாக்களின் லட்சணம்)

வரமளிக்கும் வள்ளல் தந்தை தன்னுடைய வரதானி (வரமளிக்கும் வள்ளல்), மகாதானி (பெரும் வள்ளல் மற்றும் தானி (வள்ளல்) குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். யார் தன்னை அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பியவர் ஆக்கியிருக்கிறாரோ அவர் தான் வரதானி குழந்தைகள். யார் அனைத்து பொக்கிஷங்களினால் தன்னை நிரப்பவில்லையோ, ஆனால் தனது சக்திக்கேற்ப சேமிப்பு செய்திருக்கிறாரோ அவர் மகாதானி ஆவார். யார் சேமிக்கவில்லை ஆனால் இப்பொழுது கிடைத்தது, அப்பொழுதுதான் பெற்றார். அந்த நேரம் என்ன பெற்றாரோ அதைக் கொடுத்தார், அவர் தான் தானி ஆத்மாக்கள்! யார் சேமிப்பு செய்யவில்லை ஆனால் சம்பாதித்தார், கொஞ்சம் தனக்காக செலவழித்தார் மற்றும் கொஞ்சம் கொடுத்தார். அந்த மாதிரி மூன்று விதமான குழந்தைகளை தந்தை பார்த்துக் கொண்டிருக்கிறார்.

வரதானி குழந்தைகள் தனது சேமிக்கப்பட்ட பொக்கிஷங்களை அதாவது தன்னுடைய சக்தி, தன்னுடைய குணம் மூலமாக, தன்னுடைய ஞான பொக்கிஷம் மூலமாக, பலமற்ற ஆத்மாக்களுக்கு வரதானம் மூலமாக தைரியம், உற்சாகத்தின் சக்தி மற்றும் குஷியின் பொக்கிஷத்தை தன்னுடைய சகயோகத்தின் சக்தி மூலம் கொடுத்து அந்த பலஹீனமானவர்களை சக்திசாலி ஆக்கிவிடுகிறார்கள்.

மகாதானி முயற்சி செய்விப்பதற்கான யுக்திகள் மற்றும் உற்சாகம், ஆர்வத்தில் கொண்டுவருவதற்கான யுக்திகளைக் கூறி பலஹீனமான ஆத்மாக்களை முயற்சி செய்விட்டதற்கான பொறுப்பாளர் ஆகுகிறார். நினைவூட்டிக் கொண்டே சக்தி நிறைந்த நிலையை கொண்டு வருவதற்கு பொறுப்பாளர் ஆகிறார்கள் - தன்னுடைய சக்திகளின் சகயோகம் கொடுக்க முடிவதில்லை, ஆனால் வழியைத் தெளிவாகக் காண்பிப்பதற்கு பொறுப்பாளர் ஆகிறார்கள். இந்த மாதிரி செய்யுங்கள், இப்படி நடந்து கொள்ளுங்கள் என்று இந்த விதமாக வழிகாட்டுவதற்கு(மார்க்கதர்ஷன் பொறுப்பாளர் ஆகிறார்.

தானி குழந்தைகள் என்ன கேட்டார்களோ, என்ன பிடித்திருக்கிறதோ, என்ன அனுபவம் செய்தார்களோ அந்த வர்ணனை மூலமாக ஆத்மாக்களை தந்தையின் பக்கம் ஈர்ப்பு செய்வதற்கு பொறுப்பாளர் ஆகிறார்கள், ஆனால் வழிகாட்டுபவர்கள் மற்றும் தன்னுடைய சக்திகளின் சகயோகம் மூலமாக யாரையாவது உயர்ந்தவர்கள் ஆக்கக்கூடியவர்கள் மகாதானியாக ஆகமுடிவதில்லை. அப்படி முதல் நம்பர் சகயோகம் கொடுக்கக்கூடியவர்கள். இரண்டாவது மார்க்கதர்ஷனம் செய்விப்பவர்கள். மூன்றாவது வெறும் வழி மட்டும் கூறுபவர்கள். இப்பொழுது இந்த மூன்றிலிருந்து நீங்கள் யார் என்று பார்க்க வேண்டும். ஏனென்றால் உணர வேண்டும். யாரை? தன்னை. தன்னை உணரும் இந்தப் பாடம் தான் நடந்து கொண்டிருக்கிறது. அதன் மூலம் இதுவரை என்னென்ன குறைகள் இருந்து விட்டனவோ அவற்றிலிருந்து தன்னை விடுவிக்க முடிய வேண்டும்.

எப்படி தந்தை விடுவிப்பவராக இருக்கிறார். அதே போல் குழந்தைகளும் மாஸ்டர் விடுவிப்பவர்கள் ஆனால் முதலில் தன்னை விடுவிப்பவராக எப்பொழுது ஆவீர்களோ அப்பொழுது தான் மற்றவர்களையும் விடுவித்து தன்னுடைய சுயசொரூபம் மற்றும் சுயதேசத்தின் சுவமானத்தில் நிலைத்திருக்கச் செய்ய முடியும். இன்றைய நாட்களின் சூழலில் ஒவ்வொரு ஆத்மாவும் ஏதாவது விஷயத்தில் பந்தனவசமாகியிருக்கிறது. நாலா புறங்களிலுமுள்ள ஆத்மாக்களில் சிலர் உடல் துக்கத்தின் வசமாகியிருக்கிறார்கள். சிலர் உறவுகளின் வசமாகியிருக்கிறார்கள், சிலர் இச்சைகளின் வசமாகியிருக்கிறார்கள், சிலர் தன்னுடைய துக்கம் நிறைந்த சம்ஸ்காரம் மற்றும் சுபாவத்தின் வசமாகியிருக்கிறார்கள். சிலர்

# 1977 அவ்யக்த முரளி

பிரபு பிராப்தி கிடைக்காமல் அமைதியின்றி அலையும் துக்கத்தின் வசமாகியிருக்கிறார்கள், சிலர் வாழ்க்கையின் லட்சியம் தெளிவாக இல்லாத காரணத்தினால் வேதனை அடைந்து ஏதாவது மிருகம் மாதிரி சாப்பிட்டு தூங்கி வாழ்வை கழித்தார் இருந்தும் திருப்தியில்லை. செய்தும், தியாகம் செய்தும் ஏதாவது கற்றுக் கொண்டும் லட்சியத்தை அடைந்தும் அழைப்பதிலும் கதறும் துக்கத்தின் வசமாகியிருக்கிறார்கள். அந்த மாதிரி அனேக விதமான பந்தனவசமாகி துக்கம், அசாந்தியின் வசமான ஆத்மாக்கள் தன்னை விடுவிக்க விரும்புகிறார்கள். அந்த மாதிரி தன்னுடைய ஆத்மா என்ற உறவில் சகோதரர்களின் துக்கத்தைப் பார்த்து இரக்கம் வரவில்லையா? ஆத்மாக்களின் துக்கம் நிறைந்த வாழ்க்கைக்கு எந்தவொரு ஆதாரமும் கிடைக்கவில்லை என்று தெளிவாகத் தென்படுகிறது. தென்படுகிறதா அல்லது தன்னுடைய காரியங்களிலேயே பிஸியாக இருக்கிறீர்களா? சிலர் சாதனை உலகியல் முறைப்படி வாழ்க்கையில் குழந்தைப்பருவத்து காலம், படிப்பின் காலம் தனக்காக இருக்கிறது. அதற்குப் பிறகு தன்னுடைய குழந்தைகளுக்காக காலம் இருக்கிறது, அதாவது மற்றவர்களுக்காக பொறுப்பிற்கான காலம் இருக்கிறது. ஆன்மீக வாழ்க்கையிலும் முதலில் தன்னை பரிபக்குவம் ஆக்குவதின் முயற்சி செய்தீர்கள். இப்பொழுது உலகிற்கு நன்மை செய்பவராக, உலகின் ஆத்மாக்களுக்காக மற்றும் தன்னுடைய உண்மையான குடும்பத்திற்காக இருக்கிறது. உலகின் அனைத்து ஆத்மாக்களும் உங்களுடைய பரிவாரத்தை(குடும்பத்தை)ச் சேர்ந்தவர்களே ஏனென்றால் எல்லோருக்கும் தந்தையானவரின் குழந்தைகள் நீங்கள்! அப்படி எல்லைக்கப்பாற்பட்ட பரிவாரத்தைச் சேர்ந்தவர்கள் நீங்கள். எனவே தன்னுடைய பரிவாரத்திற்காக இரக்கம் வரவில்லையா? எனவே இப்பொழுது இரக்க மனமுடையவராக ஆகுங்கள். மாஸ்டர் படைப்பவர் ஆகுங்கள். தனக்கு நன்மை செய்பவராக இன்றி அதன் கூடவே உலகிற்கு நன்மை செய்பவராக ஆகுங்கள். தன்னால் சேமிக்கப்பட்ட சக்திகள் மற்றும் ஞானத்தின் பொக்கிஷங்களை மாஸ்டர் ஞான சூரியனாகி உள்உணர்வு, பார்வை மற்றும் நினைவு அதாவது சுபபாவனையின் உயர்ந்த எண்ணம் மூலமாக, தன்னுடைய வாழ்க்கையில் குணங்களின் தாரணைகள் மூலமாக, இந்த அனைத்து சாதனங்களின் கிரணங்கள் மூலமாக அமைதியின்மையை அகற்றுங்கள். எப்படி சூரியன் ஒரு ஸ்தானத்தில் இருந்த போதிலும் தன்னுடைய கிரணங்கள் மூலமாக நாலாபுறங்களிலுமுள்ள இருளை அகற்றுகிறது.

அதே போல் மாஸ்டர் ஞான சூரியன் ஆகி துக்கமான ஆத்மாக்கள் மேல் இரக்கம் காட்டுங்கள்.

தனது மற்றும் சேவை இரண்டிலும் சமநிலை வையுங்கள். தன்னையும் மறக்காதீர்கள் மற்றும் உலக சேவையையும் மறக்காதீர்கள், உலகைச் சுற்றி வருவது எவ்வளவு நேரத்திற்கான வேலை ஆகும். உலகின் அதிபதியின் குழந்தைகள் நீங்கள் என்றால் அதிபதியாகி உலகைச் சுற்றி வலம் வாருங்கள். எப்பொழுது மூன்று உலகங்களைச் சுற்றி வர முடியும் என்றால் உலகைச் சுற்றி வருவது என்ன பெரிய விஷயம். எப்படி முந்தைய காலத்து தகுதியான இராஜாக்கள் எப்பொழுதும் தன்னுடைய இராஜ்யத்தைச் சுற்றி வருவார்கள். பிரஜைகளை எப்பொழுதும் சுகமானவர்களாக மற்றும் திருப்தியாக வைத்திருந்தார்கள். இவை அனைத்தையும் யாரிடமிருந்து கற்றுக் கொண்டார்கள். அனைத்து பழக்க வழக்கங்களின் அஸ்திவாரம் சங்கமயுகத்தின் காலமாகும் மற்றும் சங்கமயுகத்தின் பிராமணர்கள் ஆவார்கள். எனவே தான் இன்று வரையிலும் கூட ஏதாவது இந்த மாதிரியான பழக்கத்தைச் செய்வதற்காக பிராமணர்களைத் தான் அழைக்கிறார்கள். அப்படி உங்களிடமிருந்து இராஜாக்கள் இந்த பழக்கத்தைக் கற்றுக் கொண்டார்கள். கற்றுக் கொடுப்பவர் நீங்கள் தான் என்றால் அவசியம் செய்ய முடியும். எனவே மாஸ்டர் படைப்பவராகி உலகை மேற்பார்வை செய்யுங்கள். புரிந்ததா? என்ன செய்ய வேண்டுமென்று இப்பொழுது குழந்தைத்தனத்தின் அலட்சியத்தை விடுங்கள். நேரம், சக்திகளை சேவையில் பயனுள்ளதாக ஆக்குங்கள். நல்லது.

எப்பொழுதும் அனைத்து பொக்கிஷங்களை பயனுள்ளதாக ஆக்கக்கூடிய, தனக்காக மற்றும் உலகிற்காக சேவையில் சமநிலை வைக்கக்கூடிய, மாஸ்டர் ஞான சூரியன், எப்பொழுதும் இரக்க மனமுடைய, எப்பொழுதும் அனைவருக்காக சகயோகத்தின் பாவனை மற்றும் நல்விருப்பம் வைக்கக்கூடிய அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

உலகைச் சுற்றி வலம் வருகிறீர்களா? எவ்வளவு நேரத்தில் வருகிறீர்கள்? ஏனென்றால் எந்த அளவு ஒருவரின் தெய்வீக புத்தியாக இருக்குமோ, தெய்வீகத்தன்மையின் ஆதாரத்தில் வேகம் இருக்கும். எப்படி ஆகாய

விமானமும் பறக்கின்றன. அவற்றிலும் எவ்வளவு சக்தியுள்ள இயந்திரம் இருக்குமோ அந்த அளவு வேகமும் இருக்கும். அப்படி இங்கேயும் யாருக்கு எந்த அளவு தெய்வீகத்தன்மை இருக்கிறதோ. தெய்வீகத் தன்மை தான் சுத்தமான (மனோ) நிலை அதாவது இரட்டை சுத்திகரிக்கப்பட்ட நிலை. யாருக்கு புத்தி தெய்விகமாக இருக்குமோ அந்த அளவு அவரின் வேகம் இருக்கும். ஒரு நொடியில் மற்றும் தெளிவான ரூபத்தில் சுற்றி வர முடியும். ஏனென்றால் இங்கிருந்தே தான் அனைவருக்கும் திருப்தி அதாவது அனைத்து பிராப்தி செய்விப்பதற்கான சம்ஸ்காரத்தை நிரப்ப வேண்டும். அப்பொழுது தான் உலக மகாராஜா ஆவீர்கள். அந்த இராஜ்யத்தில் இல்லை என்று எதுவும் இருக்காது. எப்பொழுதும் திருப்தியான அனைத்து பிராப்தி சொரூபமானவர்களாக இருப்பீர்கள். அப்படியானால் அந்த சம்ஸ்காரத்தை எங்கிருந்து நிரப்புவீர்கள்? இங்கிருந்து தான். உலகைச் சுற்றி வரும் இந்த நேரத்தின் நினைவாக மிகவும் மகத்துவம் நிறைந்தது என்று வர்ணனை செய்யப்படுகிறது. அந்தி மாலை நேரத்தில் தேவதைகள் சுற்றி வரும் நேரம் என்று கூறுகிறார்கள். எவ்வளவிற்கு எவ்வளவு சக்கரவர்த்தி ஆகி சுற்றி வருவீர்களோ அந்த அளவு நாலாபுறங்களிலிருந்தும் நாங்கள் ஜோதியைப் பார்த்தோம். சென்று கொண்டிருக்கும் பரிஷ்தாக்களைப் பார்த்தோம் என்ற வார்த்தைகளின் ஒலி வெளியாகும். இந்த ஒலி பரவிக் கொண்டே இருக்கும் மற்றும் ஜோதியை, பரிஷ்தாக்களை, எங்கிருந்து இந்த ஜோதி வந்தது, எங்கிருந்து இந்த பரிஷ்தாக்கள் சுற்றி வர வருகிறார்கள் என்று (உங்களை) தேட ஆரம்பிப்பார்கள். எப்படி தொடக்கத்தில் தந்தை சாட்சாத்காரம் செய்விப்பவராக ஆனார், இப்பொழுது கடைசியிலும் தந்தையுடன் சேர்த்து குழந்தைகளும் அதற்குப் பொறுப்பாளர் ஆக வேண்டும். விழித்துக் கொண்டிருக்கும்போதே பார்ப்பார்கள்.

எப்படி கனவில் திடீரென்று பல காட்சிகள் வந்து விடுகின்றன இல்லையா? அப்படி அனுபவம் செய்வார்கள். அப்பொழுது தான் அறிவியலைச் சேர்ந்தவர்களும் இந்த விசித்திர லீலையை தெரிந்து கொள்ள மற்றும் பார்ப்பதற்காக அருகில் வருவார்கள். அந்த மாதிரியான விசித்திர காட்சிகளையும் கொஞ்ச நேரத்திலேயே பார்ப்பார்கள் மற்றும் கேட்பார்கள் ஆனால் சுற்றி வந்தீர்கள் என்றால் தானே பார்ப்பார்கள் இல்லையா? இல்லை என்றால் அப்படி எப்படிப் பார்க்க முடியும்?

## 1977 அவ்யக்த முரளி

உட்கார்ந்து கொண்டிருக்கும்போதே வெகுதூரத்திலிருந்து ஏதோ கிரணங்கள் வருகின்றன, கிரணங்கள் வந்து கொஞ்சம் எழுப்பிவிட்டு சென்று விட்டன என்று அந்த மாதிரி அனுபவம் செய்வார்கள். வேறு விதமாகவும் பல அனுபவங்கள் செய்வார்கள். இதற்காகத் தான் இப்பொழுது சம்பூர்ணமானவராகி சேவையில் நேரம் மற்றும் சக்திகளை ஈடுபடுத்துங்கள் என்று கூறினோம். வீட்டில் அமர்ந்து கொண்டிருக்கும் போதே அனைவரும் ஓடிக் கொண்டு, தேடிக் கொண்டு வருவார்கள். நல்லது.

பலஹீனங்களை அகற்றுவதற்கான சுலபமான வழி எது? என்னென்ன எண்ணங்களில் வருகின்றனவோ அவற்றை தந்தையிடம் அர்ப்பணம் செய்து விடுங்கள். என்னென்ன வருகின்றதோ அவற்றை தந்தையின் எதிரில் வைத்து தந்தையிடம் பொறுப்பைக் கொடுத்து விடுங்கள். பின்பு நீங்கள் சுதந்திரம் ஆகிவிடுவீர்கள். நான் தந்தையினுடையவன் மற்றும் தந்தை என்னுடையவர் என்ற இந்த உறுதியான ஒரு எண்ணத்தை மட்டும் வையுங்கள். எப்பொழுது என்னுடைய தந்தையாக இருக்கிறார் என்றால், என்னுடையது என்பதின் மேல் அதிகாரம் இருக்கும் இல்லையா? அதிகார சொரூபத்தில் நிலைத்திருந்தீர்கள் என்றால் அடிமைத்தனம் தானாகவே அகன்றுவிடும். நான் அதிகாரி நிலையில் இருக்கிறேனா என்று ஒவ்வொரு நொடியும் சோதனை செய்யுங்கள். உலகத்தின் அதிபதியின் குழந்தை நான் என்ற இது உறுதியாக இருக்கிறதா?

அப்படி குழந்தையாக இருப்பவரிலிருந்து அதிபதி ஆகுபவர். தந்தைக்குச் சமமாக அனைத்து சக்திகளின் அதிகாரி மாஸ்டர் சர்வ சக்திவானாக இருக்கிறேன் - இந்த நினைவை அடிக்கடி மீண்டும் மீண்டும் செய்து மற்றும் உணருங்கள். பிறகு எப்பொழுதும் மாஸ்டர் சர்வ சக்திவான் என்று அனுபவம் செய்வீர்கள். தீவிரமாக முயற்சி செய்பவர் ஒருபொழுதும் எந்தக் காரணத்தினாலும் களைப்படைய மாட்டார். காரணத்திற்கு நிவாரணத்தின் ரூபம் கொடுத்துக் கொண்டே முன்னேறிச் சென்று கொண்டே இருப்பார். நீங்கள் மிகவும் அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள், ஏனென்றால் பிராமண பரிவாரத்தில் பிராமணன் ஆவதற்கான லாட்டரி உங்களுக்கு கிடைத்திருக்கிறது. கோடியில் சிலருக்குத் தான் இந்த லாட்டரி கிடைக்கிறது. என்ன ஆனாலும் சரி, எதிரில் என்ன வந்தாலும் சரி, நிற்கக்கூடாது, பின்னடையக்கூடாது, லட்சியத்தைக் கண்டிப்பாக அடைய

வேண்டும். இந்த "ஒருவரின் பலம், ஒருவர் மேல் உள்ள நம்பிக்கை"-ன் ஆதாரத்தில் அவசியம் சென்றடைவோம், உத்திர வாதம் இருக்கிறது. உறுதியான எண்ணம் வைப்பது குழந்தையினுடைய வேலை மற்றும் சென்றடையச் செய்வது தந்தையின் வேலை.

எப்பொழுதும் தன்னை தந்தையுடன் இருப்பவர் என்று அந்த மாதிரி துணையின் அனுபவம் செய்கிறீர்களா? எப்பொழுதும் சுயம் சர்வ சக்திவான் துணைவன் ஆகிவிட்டார் என்றால் அதனுடைய விளைவாக என்ன தென்படும்? எப்பொழுதும் வெற்றி அடைபவர். பக்தியில் கூட ஏதாவது தடை வருகிறது என்றால் என்ன கூறுகிறார்கள்? ஒரு நொடியின் துணையைக் கொடுத்து விட்டீர்கள் என்றால் தடையிலிருந்து விடுபட்டு விடுவேன் என்று தான் கூறுகிறார்கள் ஆனால் இப்பொழுது ஞானத்தின் ஆதாரத்தில் எப்பொழுதும் தந்தையின் உடன் இருக்கிறோம் என்றால் யார் தந்தையின் துணைவனாக எப்பொழுதும் இருக்கிறாரோ அவர் எப்பொழுதும் தடையற்றவராக இருக்கிறார். மேலும் யார் தடையற்றவராக இருப்பாரோ அவர் எப்பொழுதும் குஷியாக இருப்பார். தடை குஷியை இல்லாமல் செய்து விடுகிறது. ஒருவேளை மாஸ்டர் சர்வ சக்திவானும் தடைகள் காரணமாக பிரச்சனைக்குள்ளாகிறார் என்றால் பாவம் மற்றவர்களின் நிலைமை என்னவாகும். எனவே மாஸ்டர் சர்வ சக்திவான் ஒருபொழுதும் நிலைகுலைந்து போகக் கூடாது.

யாருடைய சம்ஸ்காரம், சுபாவத்தையும் பார்க்காதீர்கள். தன்னுடைய அனாதி சம்ஸ்காரம், சுபாவத்தைப் பாருங்கள். தந்தையின் சுபாவம், சம்ஸ்காரத்தைப் பாருங்கள். கேட்டும் கேட்காமல் இருக்கும் பழக்கம் இருந்தால் ஆட மாட்டீர்கள், தேர்ச்சி பெற்று விடுவீர்கள். அனைத்தையும் விட சுலபமான விஷயம் எது, அதை புரிந்து கொள்வதினால் நிரந்தரமாக சகஜமான மார்க்கம் என்று அனுபவம் ஆகும்? அந்த சுலபமான விஷயம் என்ன வென்றால் எப்பொழுதும் தன்னுடைய பொறுப்பை தந்தையிடம் கொடுத்து விடுங்கள். பொறுப்பை கொடுப்பது சுலபம் தான் இல்லையா? தன்னை லேசாக ஆக்கிக் கொண்டீர்கள் என்றால் மார்க்கம் ஒருபொழுதும் கடினமாக அனுபவம் ஆகாது. களைப்படைகிறீர்கள் அல்லது குழப்பம் ஆகிறீர்கள் என்றால், கடினம் அனுபவம் ஆகிறது. எப்பொழுது அனைத்து பொறுப்பையும் தந்தையிடம் கொடுத்தாகிவிட்டது என்றால் பரிஷ்தாவாக ஆகிவிட்டீர்கள். பரிஷ்தாக்கள் எப்பொழுதாவது களைப்படைவார்களா

என்ன? ஆனால் இந்த சுலபமான விஷயத்தை செய்ய முடிவதில்லை அதனால் கடினமாகிவிடுகிறது. தவறுதலாக சிறுசிறு பொறுப்புக்கள் என்ற சுமையை தன் மேல் எடுத்துக் கொள்கிறீர்கள் எனவே கடினமாகிவிடுகிறது. பக்தியில் அனைத்தையும் ராமிடம் ஒப்படைத்து விடுங்கள் என்று கூறினீர்கள். இப்பொழுது செய்யும் நேரம் வருகிறது என்றால் தன்னிடமே ஏன் வைத்துக் கொள்கிறீர்கள்? என்னுடைய சுபாவம், என்னுடைய சம்ஸ்காரம் என்ற இந்த என்னுடையது எங்கிருந்து வந்தது. ஒருவேளை என்னுடையது அகன்று விட்டது என்றால் பற்றுதலை வென்றவர் ஆகிவிட்டீர்கள். பற்றுதல் அழிந்து விட்டது என்றால், நிரந்தரமான நினைவு சொரூபம் ஆகிவிடுவீர்கள். அனைத்தையும் தந்தையிடம் ஒப்படைப்பதினால் எப்பொழுதும் குஷியாக மற்றும் லேசாக இருப்பீர்கள். கொடுப்பதில் பரந்த மனமுடையவராக ஆகுங்கள். ஒருவேளை பழைய குப்பைக்கூளங்களை வைத்துக் கொண்டீர்கள் என்றால் நோயாளி ஆகிவிடுவீர்கள்.

நிச்சப்புத்தி உடையவரின் அடையாளம் எப்பொழுதும் கவலையற்ற நிலை. யார் கவலையற்று இருப்பாரோ அவர் தான் ஒரே சீராக இருப்பார். ஆட மாட்டார், அசையாமல் இருப்பார். என்ன ஆனாலும் யோசிக்காதீர்கள். என்ன, ஏன் என்பதில் ஒருபொழுதும் செல்லாதீர்கள், மூன்று காலங்களையும் தெரிந்தவராகி ஆகி கவலையற்று இருங்கள். ஒவ்வொரு அடியிலும் நன்மை இருக்கிறது. எந்த விஷயத்தில் தீமை தென்பட்டாலும் கூட அதிலும் நன்மை அடங்கியிருக்கிறது, உள்நோக்கு பார்வை உடையவராக ஆகி மட்டும் பாருங்கள். பிராமணர் களுக்கு ஒருபொழுதும் தீமை ஏற்பட முடியாது. ஏனென்றால் நன்மையே செய்யும் தந்தையின் கரத்தைப் பிடித்திருக்கிறீர்கள் இல்லையா? தீமையையும் அவர் நன்மையில் மாற்றம் செய்து விடுவார். எனவே எப்பொழுதும் கவலையின்றி இருங்கள்.

அனைவரும் எப்பொழுதும் திருப்தியாக இருக்கிறீர்களா? எப்பொழுதும் திருப்தியாக இருப்பவர் தான் தந்தையின் அருகில் இருக்க முடியும். திருப்தி எப்பொழுதும் தந்தையின் அருகில் செல்வதற்கான சாதனம் ஆகும். திருப்தி இல்லை என்றால் எப்பொழுதும் தந்தையிடமிருந்து தூரமாக இருக்கிறீர்கள். என்னென்ன நடக்கிறதோ அதை கடந்ததை கடந்ததாக்கிக் கொண்டே பகுத்தறியும் சக்தியினால் பகுத்தறிந்து

கொண்டே நடந்து கொண்டீர்கள் என்றால் எப்பொழுதும் திருப்தியாக இருப்பீர்கள்.

பிராப்தி செய்திருக்கும் தன்னுடைய பொக்கிஷங்களை, எத்தனை பொக்கிஷங்கள் மற்றும் எந்தெந்த பொக்கிஷங்கள் சேமிப்பாகியிருக்கிறது மற்றும் எது ஆகவில்லை என்று எப்பொழுதும் சோதனை செய்து கொண்டே இருங்கள். நேரம் கூட மிகப் பெரிய பொக்கிஷம் ஆகும், ஞானமும் பொக்கிஷம் ஆகும், சக்திகள், தெய்வீக குணங்களும் பொக்கிஷம் ஆகும். அப்படி அனைத்து பொக்கிஷங்களும் சேமிப்பாகியிருக்கிறது என்றால், அப்பொழுது தான் சம்பன்னமானவர் என்று கூறலாம். அனைத்தும் இருக்கிறது என்ற இதில் கூட திருப்தியாக இருக்காதீர்கள் ஆனால் தானும் சாப்பிட முடிய வேண்டும் மற்றும் மற்றவர்களையும் சம்பன்னம் ஆக்க முடிய வேண்டும் என்று அந்த அளவு இருக்க வேண்டும். எந்த ரூபத்தில் ஒருவரிடம் குறை இருக்கிறதோ அதே ரூபத்தில் மாயா வரும், ஏனென்றால் மாயா மிகவும் சாதுர்யமானது. எனவே அனைத்து பொக்கிஷங்களையும் சேமித்துக் கொண்டே இருங்கள். காலியாக விடாதீர்கள். நல்லது - ஓம் சாந்தி.

**வரதானம்: நினைவு மற்றும் சேவை மூலமாக அனைத்து குழப்பங்களுக்கும் முடிவுகட்டி ஜோதியில் பலியாகக்கூடிய உண்மையான விட்டில் பூச்சி ஆகுக!**

எந்த குழந்தைகள் நினைவு மற்றும் சேவையில் எப்பொழுதும் பிஸியாக இருக்கிறார்களோ, அவர்கள் அனைத்து குழப்பங்களிலிருந்து சுலபமாகவே விடுபட்டு விடுகிறார்கள். ஏதாவது குழப்பம் இருந்து விட்டது என்றால் குழம்பிக் கொண்டே தான் இருப்பார்கள். சில நேரம் உறவுகளின் குழப்பம், சில நேரம் தன்னுடைய சுபாவம், சம்ஸ்காரத்தின் குழப்பம் அந்த மாதிரி வீணான மற்றும் அனைத்து பிரச்சனைகளும் எப்பொழுது புத்தியில் ஜோதியைத் தவிர (சிவபாபாவைத்தவிர) வேறு எதுவுமே இல்லையோ அப்பொழுது தான் அகலும். ஜோதியில் பலியாகுபவர்கள், ஜோதிக்குச் சமமானவர் ஆகிவிடுகிறார்கள். அந்த மாதிரி பலியாகுபவர்கள் தான் உண்மையான விட்டில் பூச்சிகள்.

**சுலோகன்: யார் உண்மையான தங்கம் ஆகிறார்களோ அவர்களுடைய தொடர்பினால் இரும்புக்குச் சமமான ஆத்மாக்களும் தங்கம் ஆகி விடுகின்றன!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 09.05.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சம்பூர்ண தூய்மை தான் விசேஷ வாழ்க்கைப் பங்கை செய்பவர்களின் அலங்காரம் ஆகும்!

தன்னை இந்த வாழ்க்கை நாடகத்திற்குள் விசேஷ பங்கைச் செய்பவர், விசேஷ பாத்திரம் உடையவர் என்று நினைக்கிறீர்களா? விசேஷ பாத்திரத்தின் விசேஷம் என்னவென்று அதைத் தெரிந்திருக்கிறீர்களா? விசேஷம் என்னவென்றால் தந்தையுடன் சேர்ந்து துணைவனாகி பாத்திரத்தை செய்கிறீர்கள். மேலும் கூடவே ஒவ்வொரு பங்கையும் தன்னுடைய பார்வையாளர் நிலையில் நிலைத்திருந்து கொண்டே செய்கிறீர்கள். அப்படி தந்தையுடன் சேர்ந்து துணைவனின் மற்றும் பார்வையாளரின் நிலை தான் விசேஷமாக ஆனது. அந்த விசேஷத்தின் காரணமாகத்தான் விசேஷ பாத்திரத்தை ஏற்றுச் செய்பவர் என்று வர்ணிக்கப்படுகிறீர்கள். அப்படி ஒவ்வொரு பங்கையும் செய்து கொண்டே இரண்டு விசேஷங்களும் இருக்கின்றனவா என்று தன்னைத் தானே எப்பொழுதும் சோதனை செய்யுங்கள். இல்லையென்றால் சாதாரண பாத்திரம் ஏற்று செய்பவர் என்று கூறப்படுவீர்கள். தந்தை உயர்ந்தவர் ஆனால் குழந்தைகள் சாதாரணமானவர்கள் என்ற இது அழகே இல்லை.

விசேஷ பங்கை செய்வதற்கான அலங்காரம் எது? சம்பூர்ண தூய்மை தான் உங்களுடைய அலங்காரம் ஆகும். எண்ணத்தில் கூட தூய்மையின்மையின் அம்ச மாத்திரமும் இருக்க வேண்டாம். அந்த மாதிரியான அலங்காரம் நிரந்தரமாக இருக்கிறதா? ஏனென்றால் நீங்கள் அனைவரும் எல்லைக்குட்பட்ட, அற்ப காலத்து பங்கைச் செய்பவர்கள் அல்ல ஆனால் எல்லைக்கப்பாற்பட்ட, ஒவ்வொரு விநாடி, ஒவ்வொரு எண்ணத்தால் எப்பொழுதும் பங்கைச் செய்பவர்கள். எனவே எப்பொழுதும் அலங்கரிக்கப்பட்டவர்கள், அதாவது எப்பொழுதும் பவித்திர

சொரூபமானவர்கள். இந்த நேரத்தின் அலங்காரம் பல ஜென்மங்களுக்காக அழியாததாக ஆகிவிடுகிறது.

முக்கிய சம்ஸ்காரம் நிரப்புவதற்கான நேரம் இப்பொழுது தான். ஆத்மாவில் ஒவ்வொரு ஜென்மத்தின் சம்ஸ்காரங்களின் பதிவை இந்த நேரம் நிரப்பிக் கொண்டிருக்கிறீர்கள். இசைத்தட்டில் பதிவு செய்யும் போது ஒவ்வொரு விநாடியின் கவனம் வைக்கப்படும். எந்த விதமான டென்ஷனின் அட்டென்ஷன், டென்ஷனில் அட்டென்ஷன் இருக்கட்டும். ஒருவேளை எந்தவிதமான டென்ஷன் இருக்கிறது என்றால் பதிவை சரியாக நிரப்ப முடியாது. நிரந்தரமாக உயர்ந்த பெயருக்குப் பதிலாக எவ்வளவு நன்றாக நிரப்ப வேண்டுமோ அந்த அளவு நிரப்பவில்லை என்ற இந்த மாதிரியான விமர்சனமே இருக்கும். அனைத்து விதமான டென்ஷனிலிருந்து விடுபட்டு தன்னுடைய மற்றும் நேரத்தின், தந்தையின் துணையின் எனவே கவனத்தை வைத்துக் கொண்டே ஒவ்வொரு விநாடியின் பங்கைச் செய்யுங்கள். மாஸ்டர் சர்வ சக்திவான் அனைத்து சக்திகள் நிறைந்தவரின் குழந்தை, அந்த மாதிரி ஞானம் நிறைந்த ஆத்மாக்களில் டென்ஷனிற்கான ஆதாரம் இரண்டு வார்த்தைகள் ஆகும். எந்த இரண்டு வார்த்தைகள்? ஏன் மற்றும் என்ன? எந்த விஷயத்திலும் இது ஏன் நடந்தது? இது என்ன இது எப்படி நடந்தது? என்று எப்பொழுது இந்த இரண்டு வார்த்தைகள் புத்தியில் வந்து விடுகின்றனவோ அப்பொழுது எந்த விதமான டென்ஷனும் உருவாகிறது ஆனால் சங்கமயுகத்தைச் சேர்ந்த உயர்ந்த பாத்திரத்தை ஏற்று செய்யும் ஆத்மாக்கள் ஏன், என்ன என்ற டென்ஷன் வைக்க முடியாது. ஏனென்றால் அனைத்தையும் தெரிந்திருக்கிறார்கள். சாட்சி மற்றும் துணையின் விசேஷத்தினால் நாடகத்தின் ஒவ்வொரு பங்கையும் செய்து கொண்டே ஒருபொழுதும் டென்ஷன் வர முடியாது. எனவே தன்னுடைய இந்த விசேஷமான நன்மையே பயக்கும் நேரத்தைப் புரிந்து கொண்டு ஒவ்வொரு விநாடியின் சம்ஸ்காரங்களின் பதிவை நம்பர் ஒன் நிலையில் நிரப்பிக் கொண்டே இருங்கள்.

ஞானம் நிறைந்த நிலை என்றால் இந்த சங்கமயுகத்தின் நிலையின் ஆசனம் என்னவென்று தெரிந்திருக்கிறீர்களா? பக்தி மார்க்கத்தில் கல்வியின் தேவி சரஸ்வதிக்கு எந்த ஆசனம் கொடுத்திருக்கிறார்கள்? (அன்னப்பறவை) அன்னப்பறவையை ஏன் கொடுத்திருக்கிறார்கள்.

அதனுடைய விசேஷ குணமாக எது வர்ணிக்கப்பட்டிருக்கிறது? அதனுடைய விசேஷ குணமாக ஞானம் நிறைந்ததைத் தான் காண்பித்திருக்கிறார்கள் இல்லையா? சரி மற்றும் தவறு (சத்தியம் மற்றும் அசத்தியத்தை) தெரிந்திருப்பது இதுவும் ஞானம் ஆனது இல்லையா? அப்படி ஞானம் நிறைந்தவரின் ஆசனமும், ஞானம் உள்ளதாகத் தான் காண்பித்திருக்கிறார்கள். எப்பொழுதும் சுத்த எண்ணத்தின் உணவை புத்தி மூலமாக கிரகணம் செய்பவர் எப்பொழுதுமே அனைத்து ஆத்மாக்கள் மூலமாக மற்றும் படைப்பு மூலமாக குணத்தை தாரணை செய்பவராக இருப்பார். அதைத் தான் முத்து எடுத்துக் கொள்வதாகக் காண்பித்திருக்கிறார்கள். மூன்றாவது விஷயம் தூய்மை. சுத்தத்தின் அடையாளமாக வெண்ணிறம் காண்பிக்கப்பட்டிருக்கிறது. சுத்தம் என்றால் தூய்மை. அப்படி எப்பொழுதும் ஞானம் நிறைந்த நிலையில் நிலைத்திருப்பதற்கான அடையாளமாக அன்னப்பறவையின் ஆசனம் காண்பிக்கப்பட்டிருக்கிறது. சரஸ்வதியை, எப்பொழுதும் சேவாதாரி ரூபத்தின் அடையாளமாக வீணை வாசித்துக் கொண்டிருப்பவராக காண்பித்திருக்கிறார்கள். இந்த ஞானத்தின் வீணையை எப்பொழுதும் வாசித்துக் கொண்டிருப்பது என்றால் எப்பொழுதும் சேவாதாரியாக இருப்பது. எப்படி ஆசனத்தை நினைவுச் சின்ன ரூபத்தில் காண்பித்திருக்கிறார்களோ அதே போல் அனைத்து விசேஷங்களையும் தாரணை செய்து, பங்கைச் செய்வது இதுவும் விசேஷ பங்கு தான். எனவே எப்பொழுதும் அந்த மாதிரி விசேஷ பாத்திரம் ஏற்று செய்பவர் என்று புரிந்து கொண்டு ஒவ்வொரு பங்கையும் செய்யுங்கள்.

இயற்கையின் அடிமையாகவோ நீங்கள் இல்லையே? இயற்கையின் எந்தவொரு தத்துவமும் உங்களை குழப்பத்தில் கொண்டு வர வேண்டாம். இன்னும் வரும் நாட்களிலோ மிகுந்த சோதனை வரும். எந்த விதமான சாதனங்களின் ஆதாரத்தில் உங்களுடைய நிலை இருக்க வேண்டாம், மாயாவை வென்றவரின் கூடவே இயற்கையை வென்றவராகவும் ஆக வேண்டும். இயற்கையின் குழப்பத்திற்கு இடையே - இது என்ன? இது ஏன் நடந்தது? இது எப்படி நடக்கும்? என்று கொஞ்சமாவது எண்ணத்தில் டென்ஷன் ஆனது என்றால் அட்டென்ஷன் குறைவானது. அதனால் முழுமையாகத் தேர்ச்சி அடையமாட்டீர்கள். எனவே எப்பொழுதும் அசையாதவர்களாக இருக்க வேண்டும். நல்லது.

எப்பொழுதும் தன்னுடைய ஞானம் நிறைந்த ஆசனத்தில் நிலைத்திருக்கக்கூடிய, ஒவ்வொரு விநாடியும் உயர்ந்த பங்கைச் செய்யக்கூடிய, அனைத்து விதமான சோதனையில் முழுமையாகத் தேர்ச்சி அடைந்து 'பாஸ் வித் ஹானர்' ஆகக்கூடிய, எப்பொழுதும் ஒரு தந்தையின் நினைவின் ரசனையில் ஒரே சீராக இருக்கக்கூடிய அந்த மாதிரி எப்பொழுதும் தந்தைக்குச் சமமான உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன்: சக்திசேனை மற்றும் பாண்டவ சேனை இருவர்களுமே மாயாவைப் பகுத்தறிந்து விரட்டக் கூடியவர்கள் தான் இல்லையா?** பயம் அடைந்து நிற்பவர்களாக இல்லை தானே. யுத்தம் செய்யக்கூடிய போர் வீரர்களாக யார் இருக்கிறார்களோ அவர்களுக்காக அந்த மாதிரியும் சுலோகன் இருக்கிறது தோற்பது மற்றும் புறமுதுகு காட்டுவது மற்றும் நிற்பது -இது கோழைகள் செய்யும் காரியமாகும். போர்வீரன் என்றால் சாவது மற்றும் சாகடிப்பது. அப்படி நீங்களும் ஆன்மீகப் போர்வீரர்கள் ஆவீர்கள். ஆன்மீக சேனையில் இருக்கிறீர்கள் இல்லையா? அப்படி ஆன்மீக போர்வீரர்களும் பயப்படுவதில்லை. புறமுதுகு காட்டுவதில்லை ஆனால் முன்னேறிச் சென்று கொண்டு எப்பொழுதும் வெற்றி அடைபவர்களாக ஆகிறார்கள். அப்படி நீங்கள் வெற்றி அடைபவர்களா அல்லது பயப்படுபவர்களா? சில நேரம் மிகுந்த யுத்தம் செய்து களைப்படைந்து விடுகிறீர்கள் அல்லது தினசரி யுத்தம் செய்து அலட்சியமானவர் ஆகிவிடுகிறீர்கள். அப்படியே தினசரி ஒரே காரியத்தை செய்ய வேண்டியதாக இருக்கிறது என்றால் அனேக தடவைகள் அந்த மாதிரியும் ஆகிறது - இதுவோ இப்படி நடந்து கொண்டு தான் இருக்கிறது. எதுவரை செய்ய முடியும், முழு வாழ்க்கையின் விஷயம் ஆகும், ஒரு வருடத்தின் விஷயமோ இல்லை என்று யோசிக்கிறார்கள் ஆனால் முழு வாழ்க்கையில் ஒருவேளை ஐயாயிரம் வருடங்களின் பிராப்தியின் கணக்கை பார்த்தீர்கள் என்றால் ஒரு நொடிக்கான விஷயமா அல்லது முழு வாழ்க்கைக்கான விஷயமா? எல்லைக்கப்பாற்பட்ட கணக்கில் பார்த்தீர்கள் என்றால் ஒரு நொடிக்கான விஷயம் ஆகும். விசால புத்தியுடையவர் எல்லைக்கப்பாற்பட்ட கணக்கோடு பார்ப்பார், அவர் ஒருபொழுதும் களைப்படைய மாட்டார். முழுக் கல்பத்தினுள் முக்கால் பகுதி பிராப்தி ஆகும், இதுவோ கடைசியில்

கீழே சரிவதற்கான அனுபவம் ஆகிறது. இந்தக் கொஞ்ச நேரத்தின் ஆதாரத்தில் கல்பத்தின் முக்கால் பகுதி பிராப்தி இருக்கிறது, அந்த கணக்கோடு பார்த்தீர்கள் என்றால் இது ஒன்றுமே இல்லை. எல்லைக்கப்பாறப்பட்ட தந்தை, எல்லைக்கப்பாறப்பட்ட ஆஸ்தி இருக்கிறது என்றால் புத்தியையும் எல்லைக்கப்பாறப்பட்ட நிலையில் வையுங்கள், எல்லைக்குட்பட்ட விஷயங்களை முடிவு கட்டுங்கள். புரிந்ததா? எப்பொழுது யாருடைய ஆதாரத்துடன் மற்றும் யாராவது அவரே உங்களை உடன் அழைத்துச் செல்கிறார் என்றால் களைப்படைவதற்கான விஷமோ இல்லை. தந்தையோ நினைவின் துணை என்ற மடியில் அழைத்துச் செல்கிறார். ஏன் களைப்படைந்து விடும் அளவிற்கு நடந்தே வருகிறீர்கள். எப்பொழுதும் மற்றும் துணையின் மடியிலிருந்து ஏன் கீழே இறங்குகிறீர்கள் பின்பு அதன் காரணமாக என்ன செய்வது என்று கதறுகிறீர்கள். எதுவும் செய்ய வேண்டாம், இருந்தும் களைப்படைகிறீர்கள். என்ன காரணம்? தன்னுடைய முட்டாள்தனம். தன்னுடைய பிடிவாதம் செய்கிறீர்கள்.

எப்படி சிறு குழந்தைகளின் பிடிவாதம் இருக்கிறது இல்லையா? சிறு குழந்தை பிடிவாதம் செய்து தன்னுடைய மனம் சொல்லும் வழிப்படி நடக்கிறீர்கள், எனவே தன்னைத் தானே வேதனையடையச் செய்கிறீர்கள், இந்த சிறு குழந்தைகளின் பிடிவாதம் செய்யாதீர்கள். ஸ்ரீமத்தில் ஒருவேளை மனம் சொல்லும் வழியை கலக்குகிறீர்கள் என்றால், அந்த மாதிரி கலப்பவர்களுக்கு தண்டனை கிடைக்கிறது. தண்டனையை தந்தை கொடுப்பதில்லை, ஆனால் சுயம் நீங்களே, உங்களை தண்டனைக்கு உரியவர்களாக ஆக்கி விடுகிறீர்கள். குஷி, சக்தி மறைந்து விடுவதே தண்டனை ஆகும் இல்லையா?

யார் யாருடைய நெருக்கத்தில் இருக்கிறாரோ அவருடைய சேர்க்கையின் பாதிப்பு அவசியம் ஏற்படும். ஒருவேளை தந்தையின் நெருக்கத்தில் இருக்கிறீர்கள் என்றால் அவருடைய தொடர்பின் பாதிப்பு அவசியம் ஏற்படும். எப்படி தந்தையின் ஆன்மீக பாதிப்பு இருக்கிறது என்றால் யார் அவருடைய தொடர்பில் இருப்பாரோ அவருக்கு ஆன்மீகப் பாதிப்பு ஏற்படும். ஒருவரின் தொடர்பு மட்டும் இருக்கிறது என்றால் ஒரே ஒரு பாதிப்பு இருக்கும். ஒருவேளை சர்வ சக்திவான் தந்தையின் தொடர்பு எப்பொழுதும் இருக்கிறது என்றால் ஒருபொழுதும் வாடிப்போக முடியாது.

கனெக்ஷன் இருக்கிறது என்றால் கரென்ட் வந்து கொண்டே இருக்கும். கனெக்ஷன் சரியாக இருக்கிறது என்றால் தானாகவே அனைத்து சக்திகளின் கரென்ட் வரும். எப்பொழுது அனைத்து சக்திகளும் கிடைத்துக் கொண்டே இருக்கும் என்றால் எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்து இருப்பீர்கள், துக்கம் அகன்று விடும். சங்கமயுகத்தின் நேரம் குஷியோடு இருப்பதற்கான நேரம். ஒருவேளை அந்த மாதிரியான நேரத்தில் யாராவது துக்கப்படுத்தினார்கள் என்றால் நன்றாக இருக்காது தான் இல்லையா?

மகாவீர் மற்றும் மகாவீராங்கனைகளின் முக்கிய அடையாளமாக என்ன இருக்கும்? தற்சமயத்திற்கு ஏற்றபடி மகாவீரின் அடையாளம் ஒவ்வொரு விநாடி, ஒவ்வொரு எண்ணத்தில் முன்னேறும் கலையை அனுபவம் செய்வார்கள். யார் மகாவீராக இல்லையோ அவர் சில விநாடிகள் மற்றும் சில எண்ணத்தில் ஏறும் கலையின் அனுபவம், சிலவற்றில் நிற்கும் கலையின் அனுபவம் இருக்கும். முன்னேறும் கலை இயல்பாகவே அனைவருக்காக நன்மை அதாவது நன்மை செய்வதின் சேவைக்கு பொறுப்பாளர் ஆக்கிவிடுகிறது. எண்ண அலைகள் சூழ்நிலைகள் மூலமாகவும் அனேகர்களுக்கு நன்மை செய்ய முடியும். எனவே தான் ஏறும் கலை உன் காரணமாக அனைவருக்கும் நன்மை" என்று கூறப்படுகிறது. அவர் அனேகர்களுக்கு வழி கூறுவதற்கு பொறுப்பாளர் ஆகிவிடுகிறார்கள். அவர்களுக்கு நிற்பதின் மற்றும் களைப்படைவதின் அனுபவம் இருக்காது. அவர் எப்பொழுதும் களைப்பற்றவராக, எப்பொழுதும் ஊக்கம், உற்சாகத்தில் இருப்பவராக இருப்பார். உற்சாகம் ஒருபொழுதும் குறையக்கூடாது. இவரைத் தான் மகாவீர் என்று கூறுவது. நிற்பவர் குதிரைப்படை, களைப்படைபவர் காலாட்படை, எப்பொழுதும் சென்று கொண்டே இருப்பவர் மகாவீர். அவருக்கு மாயாவின் எந்தவொரு ரூபத்திலும் கண் மூழ்காது. அதை பார்க்கவே மாட்டார்கள். அவர் மாயாவின் எந்தவிதமான ரூபத்தையும் பார்த்தும் பார்க்காமல் இருப்பார். மகாவீர் என்றால் முழு ஞானம், முழு ஞானம் உடையவர் ஒருபொழுதும் ஃபெயில் ஆக முடியாது. எப்பொழுது. ஞானத்தின் ஏதாவது ஒரு பாடம் நினைவிருப்பதில்லையோ அப்பொழுது தோல்வி அடைகிறார்கள். ஞானம் மட்டும் இல்லை, ஞானம் நிறைந்தவராக ஆக வேண்டும். இது புது விஷயம், இது என்னவென்று தெரியவில்லை என்ற இந்த வார்த்தைகள் அவர்களுடையதாக இருக்காது.

## 1977 அவ்யக்த முரளி

கடைசியின் முயற்சி மற்றும் கடைசியின் சேவை எது? இன்றைய நாட்களில் என்ன முயற்சி தேவையோ மற்றும் சேவை தேவையோ அது உள்உணர்வு மூலம் வாயுமண்டலத்தை சக்திசாலியாக ஆக்குவது. ஏனென்றால், பெரும்பான்மையோர் தன்னுடைய முயற்சி மூலம் முன்னேறிச் செல்வதில் பலமற்றவராக இருக்கிறார்கள். எனவே அந்த மாதிரி சக்தியற்ற மற்றும் பலஹீனமான ஆத்மாக்களுக்கு தன்னுடைய உள்உணர்வு மூலமாக பலம் கொடுப்பது மிக அவசியமாகும். இப்பொழுது இந்த சேவை தேவையாக இருக்கிறது. ஏனென்றால் வார்த்தைகள் மூலம் மிக அதிகமாக கேட்டு இப்பொழுது நாம் அனைவரும் நிரம்பி விட்டோம் என்று நினைக்கிறார்கள். எதுவும் புது விஷயமாக அனுபவம் ஆகாது. வாய்மொழி மூலம் அவர்கள் கேட்க விரும்புவதில்லை. உள்உணர்விற்கு நேரடி தொடர்பு வாயுமண்டலத்தோடு இருக்கிறது. வாயுமண்டலம் சக்திசாலியாக இருப்பதினால் அனைவரும் பாதுகாப்பாகி விடுவார்கள். இது தான் தற்சமயத்தின் விசேஷ சேவையாகும். வரதானியின் அர்த்தமே உள்உணர்வு மூலம் சேவை செய்பவர். வரதானியின் நிலை தற்சமயம் அவசியமாக இருக்கிறது. உள்உணர்வு மூலம் என்ன விரும்புகிறீர்களோ அதைச் செய்ய முடியும். இப்பொழுது வரதானம் பெறும் நேரம் முடிவடைந்து விட்டது. வள்ளலின் குழந்தைகள் வள்ளலாக இருப்பார்கள். வள்ளலுக்கு யாரிடமிருந்து பெறுவதின் அவசியம் இல்லை. எனவே இப்பொழுது வரதானி ஆகுங்கள்.

எப்படி சேவையின் வளர்ச்சிக்கான திட்டத்தை உருவாக்குகிறீர்கள். அதே போல் தன்னுடைய முயற்சி செய்வதின் புத்திக்கு திட்டத்தை உருவாக்குங்கள். சேவையிலோ மற்றவர்களின் சகயோகத்தின் தேவை ஏற்படுகிறது ஆனால் தன்னுடைய முயற்சியின் வளர்ச்சிக்கான திட்டத்தில் தந்தையின் உதவியோடு மிக அதிகமாக செய்ய முடியும். இப்பொழுது மனம், சொல், செயல் மூன்றிற்கான திட்டத்தை உருவாக்குங்கள். உ தன்னுடைய தினசரி டைரியை எழுதுங்கள். அப்பொழுது தான் வரிசை எண் முன்னுக்கு இருக்க முடியும். இல்லையென்றால் முன் வரிசையில் எண்ணை பெற முடியாது. பின்னாலேயே இருக்க வேண்டியதாக இருக்கும். முன்னேறிச் செல்பவர்களின் அடையாளமாக இது இருந்தது. நல்லது. ஓம் சாந்தி.

## 1977 அவ்யக்த முரளி

**வரதானம்: தந்தைக்குச் சமமாக எல்லைக்கப்பாற்பட்ட உள்உணர்வை வைக்கக்கூடிய மாஸ்டர் உலகிற்கு நன்மை செய்பவர் ஆகுக!**

எல்லைக்கப்பாற்பட்ட உள்உணர்வு என்றால் அனைத்து ஆத்மாக்களுக்காக நன்மை பயக்கும் உள்உணர்வு வைப்பது. இது தான் மாஸ்டர் விஷ்வ கல்யாணகாரி (உலகிற்கு நன்மை செய்பவர்) ஆவது. தன்னுடைய மற்றும் தன்னுடைய எல்லைக்குட்பட்ட பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களின் நன்மைக்காக இல்லை, ஆனால் அனைவரின் நன்மைக்கான உள்உணர்வு இருக்கட்டும். தன்னுடைய முன்னேற்றத்தில், தன்னுடைய பிராப்தியில் தன்னுடைய உள்உணர்வை திருப்தியாக வைத்திருந்து நடந்து கொள்ள வேண்டும். இது தான் சுயகல்யாணி ஆனால் யார் எல்லைக்கப்பாற்பட்ட உள்உணர்வு வைத்து எல்லைக்கப்பாற்பட்ட சேவையில் பிஸியாக இருக்கிறாரோ அவரை தந்தைக்குச் சமமாக மாஸ்டர் உலகிற்கு நன்மை செய்பவர் என்று கூற முடியும்.

**சுலோகன்: இகழ்ச்சி-புகழ்ச்சி, மரியாதை-அவமரியாதை, நஷ்டம்-லாபத்தில் சமமாக இருப்பவர் தான் யோக சொரூபமான ஆத்மா!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 11.05.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சம்பன்ன சொரூபத்தின் அடையாளம் நற்சிந்தனை மற்றும் நற்சிந்தனையாளர்!

பாப்தாதா குழந்தைகளை எப்பொழுதும் சம்பூர்ண சொரூபத்தில் பார்க்கிறார். ஒவ்வொரு குழந்தையும் தந்தைக்குச் சமமாக ஆனந்தம், அன்பு, சுகம் மற்றும் அமைதி சொரபமாக ஒவ்வொருவரின் நெற்றியிலிருந்து, கண்களிலிருந்து என்ன பார்க்கத் தென்படுகிறது? குணங்கள் மற்றும் சக்திகளின் களஞ்சியம் மாதிரி தென்படுகிறது. தன்னையும் அந்த மாதிரி சம்பன்னமானவர் என்று புரிந்து எப்பொழுதும் நடந்து கொள்கிறீர்களா? சம்பன்ன சொருபத்தின் அடையாளம் அனைத்து ஆத்மாக்களுக்கும் இரண்டு விஷயங்கள் மூலம் தென்படும். அந்த இரண்டு விஷயங்கள் எவை? அந்த மாதிரி சம்பன்ன ஆத்மா எப்பொழுதும் தனக்காக நற்சிந்தனையில் இருப்பார் மற்றும் பிற ஆத்மாக்களுக்காகவும் நற்சிந்தனையாளராக இருப்பார். அப்படி நற்சிந்தனை மற்றும் நற்சிந்தனையாளர் இந்த இரண்டுமே தான் சம்பன்ன ஆத்மாக்களின் அடையாளமாகத் தென்படும். சம்பன்ன ஆத்மாவிடம் தீய சிந்தனை மற்றும் வீணான சிந்தனை தானாகவே முடிவடைந்து விடும். ஏனென்றால் நற்சிந்தனைக்கான பொக்கிஷமாகிய சத்திய ஞானம் அந்த மாதிரி ஆத்மாவிடம் மிகவும் அதிகமாக இருக்கும். ராயல் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் தீய சிந்தனை மற்றும் வீணான சிந்தனை என்ற கற்கள் மற்றும் மண்ணோடு விளையாட மாட்டார்கள்.

நற்சிந்தனைக்காக எவ்வளவு அளவற்ற பொக்கிஷம் கிடைத்திருக்கிறது என்ற அதைத் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? குறைவில்லா பொக்கிஷம்தான் இல்லையா? நற்சிந்தனை என்றால் சக்திசாலியான எண்ணம். அப்படி சக்திசாலியானது மற்றும் வீணானது இரண்டும் சேர்ந்தே இருக்க முடியாது. எப்படி இரவு மற்றும் பகல் சேர்ந்தே

இருப்பதில்லை. அமிர்தவேளை எழுந்தவுடன் மற்றும் கண்கள் திறந்தவுடனேயே என்ன நல்ல எண்ணம் மற்றும் சிந்தனை வைக்க வேண்டும் என்ற இதையும் தந்தை ஏற்கனவே கூறியிருக்கிறார். அமிர்தவேளையில் சக்திசாலியான தந்தை மேல் உள்ள அன்பையும் சேர்த்து எப்படி நல் எண்ணங்கள் வைப்பீர்களோ அந்த மாதிரியே முழு நாளிலும் பிரபாவம் ஏற்படும். ஏனென்றால் அமிர்தவேளை ஆதி காலம், சதோபிரதானமான நேரமாகும். தந்தை மூலமாகக் குழந்தைகளுக்கு வரதானங்கள் மற்றும் விசேஷ சகயோகம் கொடுப்பதற்கான நேரம் ஆகும். எனவே அமிர்தவேளையின் முதல் எண்ணத்தின் ஆதாரத்தில் முழு நாளில் தினசரி நடவடிக்கைகளின் மேல் பாதிப்பு ஏற்படுகிறது. எப்படி பிரம்மா எண்ணத்தினால் இந்த உலகை படைத்தார் என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அப்படி எண்ணத்திற்கு (சங்கல்பம்) அந்த அளவு மகத்துவத்தை கூறியிருக்கிறார்கள். பிரம்மா ஆதி காலத்தில் படைப்பை படைக்கிறார். அப்படியே பிராமணர்கள் நீங்கள் ஆதி காலம் அதாவது அமிர்தவேளையில் எப்படி எண்ணத்தை வைப்பீர்களோ அது போலவே முழு நாளின் நடவடிக்கை என்ற படைப்பு தானாகவே நடந்து கொண்டிருக்கும்.

பிராமணர்களின் முதல் எண்ணம் எது? அந்த நேரம் எந்த மாதிரியான நிலை இருக்கும். தந்தைக்குச் சமமான நிலையில் நிலைத்திருந்து சந்திக்கிறீர்கள் இல்லையா? திறந்தவுடனேயே எந்த எண்ணம் வருகிறது? தந்தையைத் தவிர வேறு ஏதாவது தென்படுகிறதா? எப்பொழுது காலை வணக்கம் கூறுகிறீர்கள் என்றால் குழந்தை என்று புரிந்து தான் காலை கண்கள் வணக்கம் கூறுகிறீர்கள் இல்லையா? அப்படி குழந்தை என்றால் எஜமானன். மேலும் தந்தையும் குழந்தைகளுக்கு எந்த மாதிரி பதிலளிக்கிறார்? குழந்தையாக இருப்பவர்களிலிருந்து எஜமானன் ஆகுபவர்கள் என்று தான். தந்தையினும் தலையின் கிரீடமாக இருக்கும் குழந்தைகள். அப்படி முதல் எண்ணமே சக்திசாலியாக ஆனது இல்லையா. முதல் சந்திப்பு தந்தையோடு நடக்கிறது. மேலும் முதல் சந்திப்பில் தந்தை ஒவ்வொரு நாளும் சமமாக ஆகுங்கள் என்ற வரதானம் கொடுக்கிறார். அதில் அனைத்து வரதானங்களும் நிரம்பி இருக்கிறது. அப்படி யாருடைய நாளின் தொடக்கமே அந்த அளவு மகானாக இருக்கிறது என்றால் அவருடைய முழு நாளும் எப்படி இருக்கும்? வீணானதாக இருக்க முடியுமா? ஆனால் அந்த மாதிரி உயர்ந்த சந்திப்பை

யாரால் எப்பொழுதும் செய்ய முடியும்? யாருடைய எண்ணத்திலும் பாபா மற்றும் உலகமும் பாபா என்றிருக்கிறதோ அவரால் தான் முடியும். அந்த மாதிரி தந்தையின் நெருக்கமான குழந்தைகளின் சந்திப்பும் நெருக்கமாக இருக்கும். இல்லையென்றால் நெருக்கமான சந்திப்பு இன்றி எதிரில் சந்திப்பது போல் இருக்கும். அனைத்து குழந்தைகளும் அவசியம் சந்திப்பை செய்கிறார்கள் ஆனால் நம்பர் ஒன் குழந்தைகள் சமமான ரூபத்தில் நெருக்கத்தில் அதாவது உடன் இருப்பதின் அனுபவம் செய்கிறார்கள். உடன் இருப்பது இருவரில்லை ஆனால் ஒருவர் என்று அந்த மாதிரி. இரண்டாம் நம்பரில் இருப்பவர்கள் தந்தையின் அன்பை, தந்தையின் வரதானங்களை, தந்தையின் சந்திப்பை சமமான சொரூபத்தில் இன்றி, ஆனால் சமமாக வேண்டும் என்ற நல் எண்ணங்களின் சொரூபமாக சந்திக்கிறார்கள். நேரெதிர் அனுபவம் என்றால் தந்தையிடமிருந்து அனைத்து பிராப்திகள் கிடைத்துக் கொண்டிருக்கிறது என்று அந்த மாதிரி அனுபவம் செய்வார்கள். அப்படி முதல் நம்பரில் இருப்பவர்கள் சமமாகி சந்திக்கிறார்கள். இரண்டாம் நம்பரில் இருப்பவர்கள் சமமாக வேண்டும் என்ற எண்ணத்தோடு சந்திக்கிறார்கள். மூன்றாம் நம்பரில் இருப்பவர்களின் விஷயத்தையோ கேட்கவே வேண்டாம்.... மூன்றாம் நம்பரில் இருப்பவர்களின் லீலை விசித்திரமாக இருக்கும். இந்த நேரம் குழந்தையாகி சந்திப்பார்கள் மற்றும் அடுத்த நேரம் கேட்பவர்கள் ஆகிவிடுவார்கள். பல ரூபங்கள் உள்ளவர்களாக இருப்பார்கள். சில நேரம் இந்த ரூபத்தில் சந்திப்பார்கள் மற்றும் சில நேரம் வேறு ரூபத்தில் சந்திப்பார்கள். அப்படி குழந்தைகளிலும் சந்திப்பைச் செய்வது வரிசைக்கிரமமாக இருக்கிறது. யாருடைய எண்ணம் எப்பொழுதும் உயர்வாக இருக்கிறதோ அதாவது தந்தைக்குச் சமமான சொரூபத்திலிருந்து சந்திப்பைச் செய்கிறார்களோ, அவர்களுடைய அமிர்தவேளையின் முதல் எண்ணம் முழு நாளின் நடவடிக்கைகளின் மேல் பாதிப்பை ஏற்படுத்தும். அந்த மாதிரியானவர்கள் நிரந்தர நற்சிந்தனையில் இயல்பாகவே இருப்பார்கள். இரண்டாம் நம்பரிலிருப்பவர்கள் இயல்பாகவே இருப்பதில்லை. ஆனால் அடிக்கடி கவனம் வைப்பதினால் நற்சிந்தனையில் இருக்கிறார்கள். மூன்றாம் எண்ணில் இருப்பவர்கள் சுயசிந்தனை மற்றும் வீணான சிந்தனை இரண்டின் யுத்தத்திலிருப்பர்கள், சில நேரம் வெற்றி அடைபவர்களாக மற்றும் சில நேரம் மனமுடைந்து போவோர்களாகவும் ஆகிறார்கள். எப்பொழுதும் நற்சிந்தனையில் இருங்கள் அதற்கான வழியாக

# 1977 அவ்யக்த முரளி

அதிகாலை நேரத்தில் சக்திசாலியான எண்ணம் வைக்க வேண்டும் என்று ஏற்கனவே கூறியிருந்தோம். அந்த மாதிரி நற்சிந்தனையில் இருக்கக்கூடியவர்கள் முழு நாளில், உறவு நெருக்கத்தில் வந்திருக்கும் ஆத்மாக்களுக்காக எப்பொழுதும் நற்சிந்தனை வைப்பவர்களாக இருக்கிறார்கள். யார் எப்படிப்பட்ட ஆத்மாவாக இருந்தாலும், அவர் உயர்ந்த குணம் அல்லது தாழ்ந்த குணம் உள்ளவராக தொடர்பில் வந்தாலும் ஆனால் அனைவருக்காகவும் நற்சிந்தனை வைப்பவர் அதாவது அபகாரிகள் மேலும் உபகாரம் செய்பவர்கள். ஒருபொழுதும் எந்த ஆத்மாவிற்காகவும் வெறுப்பு நிறைந்த பார்வை இருக்காது. ஏனென்றால் அறியாமையின் வசமாகியிருப்பவர் அதாவது அறிவில்லாத குழந்தை என்று தெரிந்திருக்கிறார். அறிவில்லாத குழந்தை செய்யும் எந்தவொரு காரியத்தின் மீதும் வெறுப்பு ஏற்படுவதில்லை. இன்னும் அதிகமாக குழந்தை மேல் இரக்கம் மற்றும் அன்பு வரும். அந்த மாதிரி நல்ல சிந்தனை உள்ளவர் எப்பொழுதும் தன்னை உலகை மாற்றம் செய்பவர், உலகிற்கு நன்மை செய்பவர் என்று புரிந்து கொண்டு ஆத்மாக்களின் மேல் இரக்கமனம் இருக்கும் காரணத்தினால், வெறுப்பு உணர்வை வைக்காமல் எப்பொழுதும் நல்ல உணர்வு மற்றும் பாவனை வைப்பார். இதே காரணத்தினால் எப்பொழுதும் நற்சிந்தனையாளராக இருப்பார். இவர் ஏன் அப்படி செய்தார் என்று நினைக்க மாட்டார். ஆனால் இந்த ஆத்மாவிற்கு நன்மை எப்படி ஏற்படும் என்று அதை நினைப்பார். அந்த மாதிரியான நற்சிந்தனையின் நிலை எப்பொழுதும் இருக்கிறதா? ஒருவேளை நற்சிந்தனை இல்லை என்றால் நற்சிந்தனையாளராகவும் இல்லை. இரண்டிற்கும் சம்மந்தம் இருக்கிறது. அந்த மாதிரி சம்பன்னம் ஆகும் இலட்சியத்தை வைத்திருப்பவர்கள் இந்த இரண்டு இலட்சணத்தை தாரணை செய்வார்கள். புரிந்ததா? ஒருவேளை வீணான எண்ணம் என்றால் நற்சிந்தனையின் நிலை நிலைத்திருக்க முடியாது. எனவே தன்னுடைய சக்தியைப் பாருங்கள். நற்சிந்தனையாளராக ஆவதற்கான பயிற்சியுடையவராக ஆகுங்கள் இவைகள் உங்களுடைய சக்திகளே தான் இல்லையா?

யார் சேவை செய்கிறார்களோ, அந்த மாதிரி சேவாதாரிகள் மேல் தந்தையின் விசேஷ அன்பு எப்பொழுதும் இருக்கிறது. ஏனென்றால் தியாகம் நிரம்பியவராக இருக்கிறார் இல்லையா? தியாகத்தின் பாக்கியம் இயல்பாகவே கிடைத்து விடுகிறது. என்ன மற்றும் எப்படி கிடைக்கிறது

அதைத் தெரிந்திருக்கிறீர்களா? எப்படி ஒன்று கடினமாக உழைத்து சம்பாதிப்பது மற்றும் இன்னொன்று திடீரென்று யாருக்காவது லாட்டரி கிடைத்து விட்டது என்றால் தன்னுடைய முயற்சியின் சக்திகளை மற்றும் அனைத்து குணங்களின் அனுபவம் செய்வது, இதையே அனைவரும் செய்கிறார்கள் ஆனால் விசேஷமாக சகயோகத்தின் உடனடி பலன் என்னுடைய முயற்சியின் நிலையை விட பிராப்தி அதிகமாக இருக்கிறது என்று அந்த மாதிரி அனுபவம் ஆகும். எந்த அனுபவங்களுக்காக வெகுகாலமாக முயற்சியின் லட்சியமாக வைத்து வந்திருக்கிறீர்களே அந்த அனுபவங்கள் சுலபமானதாக மற்றும் சக்தி நிறைந்த நிலையுடையதாக இருக்கும். விரும்பாவிட்டாலும் பாபாவின் அதிசயம் தான் என்று மனதால் வெளியாகும். இந்த மாதிரியம் ஆக முடியும் என்று நான் நினைக்கவேயில்லை, அதை நடைமுறையில் அனுபவம் செய்து கொண்டிருக்கிறேன். அப்படி சகயோகி ஆத்மாக்களுக்கு அந்த மாதிரி தந்தையின் விசேஷ வரதானத்தின் பிராப்தியின் அனுபவம் ஆகும். அந்த மாதிரியான அனுபவம் வாழ்க்கையின் ஒரு விசேஷ நினைவுச்சின்ன ரூபம் ஆகிவிடும். நல்லது.

அந்த மாதிரி தந்தையின் நிரந்தர சகயோகி ஆத்மாக்களுக்கு, ஒவ்வொரு அடியில் தந்தையைப் பின்பற்றி நடந்து கொண்டே தந்தையை பிரத்யக்ஷம் செய்பவர்களுக்கு, எப்பொழுதும் தன்னுடைய குணங்களின் பிராப்தியின் அலைகளில் மிதந்து கொண்டே இருப்பவர்களுக்கு, மகிழ்ச்சியாக இருப்பவர்களுக்கு, தந்தையின் அன்பில் மூழ்கியிருப்பவர்களுக்கு, அந்த மாதிரி சமமான ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன்**: **எப்பொழுதும் இந்த கர்மேந்திரியங்களிலிருந்து விலகியவராக அதாவது தன்னை ஆத்மா எஜமானன் என்று புரிந்து தந்தையின் அன்பிற்குரியவர்களாகி நடந்து கொள்கிறீர்களா?** தந்தையின் அன்பிற்குரியவர்கள் யார்? யார் விலகியிருக்கிறாரோ அவர் தான் தந்தை கூட அனைவரின் அன்பிற்குரியவராக ஏன் இருக்கிறார்? ஏனென்றால் விலகியிருக்கிறார். ஒருவேளை விலகியிருப்பவராக இல்லை, உங்கள் மாதிரி பிறப்பு, இறப்பில் வருகிறார் என்றால் அனைவரின் அன்பிற்குரியவராக ஆக முடியாது. அப்படி நீங்கள் அனைவரும் தந்தையின் அன்பிற்குரியவர்களாக எப்பொழுது ஆவீர்கள்

என்றால் எப்பொழுது தன்னை உடலின் உணர்விலிருந்து விலகியிருப்பவராக புரிந்து நடந்து கொள்வீர்களோ அப்பொழுது தான். விலகியிருப்பவராக ஆகாமல் அன்பிற்குரியவராக ஆக முடியாது. யார் எந்தளவு விலகியவராக அதாவது ஆத்மீக நினைவில் இருக்கிறாரோ அந்த அளவே தந்தையின் அன்பிற்குரியவராக இருக்கிறார். எனவே வரிசைக்கிரமமான அன்பு நினைவுகள் கொடுக்கிறோம் இல்லையா? வரிசை எண் உருவாவதின் ஆதாரம் விலகியிருப்பவராக ஆவதில் இருக்கிறது. விலகியிருக்கும் நிலை மூலமாக நினைவு செய்து உருட்டுகிறார். மாலையை நினைவு செய்யும் பொழுது நம்பர் ஒன் ஆக வருவீர்கள்? யார் விலகியிருப்பவராகவும் சமமானவராகவும் இருக்கிறாரோ அவர் தான் வருவார். நானோ பிற்காலத்தில் வந்திருக்கிறேன் என்னையோ யாரும் தெரிந்திருக்கவில்லை என்று அப்படியில்லை. தந்தையோ அனைத்து குழந்தைகளையும் தெரிந்திருக்கிறார். எனவே அன்பிற்குரியவராக ஆவதற்கான ஆதாரம் விலகியிருப்பவராக ஆவது. இதை உறுதியாக்குங்கள். இந்த முதல் பாடத்தின் பரீட்சையில் முழு மதிப்பெண்கள் கிடைக்க வேண்டும். எனவே சென்று கொண்டிருக்கிறேன், பேசிக் கொண்டிருக்கிறேன், என்ன செய்து கொண்டிருக்கிறேனோ அவை அனைத்தையும் செய்து கொண்டே செய்விப்பவராக ஆகி செய்விக்கிறேனா என்ற இதை சோதனை செய்யுங்கள். ஆத்மா செய்விப்பது மேலும் கர்ம இந்திரியங்கள் செய்பவை. இந்தப் டத்தை உறுதியாக்குவதினால் நிரந்தரமாக அனைத்து பொக்கிஷங்களின் எஜமானத்தன்மையின் போதை இருக்கும். எந்தப் பொருளும் பிராப்தி இல்லை என்ற அனுபவம் இருக்காது. தந்தை கிடைத்திருக்கிறார் என்றால் அனைத்தும் கிடைத்திருக்கிறது. சொல்வதற்காக மட்டும் இன்றி அவருக்கு அனைத்து பிராப்தியின் அனுபவம் இருக்கும், எப்பொழுதும் குஷி, அமைதி, ஆனந்தத்தில் மூழ்கியிருப்பார். கிடைத்து விட்டது, அடைந்து விட்டேன் என்ற இந்த போதையிலேயே இருப்பார்.

எப்பொழுதும் தன்னுடைய சுய மரியாதை என்ற ஆசனத்தில் அமர்ந்திருக்கிறீர்களா? சுய போதை என்ற ஆசனம் எது? உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் உயர்ந்த குழந்தைகள் பிராமணர்கள் என்பதாகும். இந்த உயர்ந்த சுய மரியாதையில் எப்பொழுதும் நிலைத்திருக்கிறீர்களா அல்லது ஆசனம் ஆடுகிறதா? மாயா ஆசனத்தை அசைப்பதற்கு முயற்சி

செய்கிறது. இருப்பதே தந்தையின் உயர்ந்த குழந்தைகள் என்றால் பின்பு ஏன் மறக்க வேண்டும்? இந்த பிராமண ஜென்மம் கூட இயற்கையான வாழ்க்கை ஆகும். இயற்கையான வாழ்க்கையின் விஷயம் மறப்பதில்லை, தற்காலிக விஷயம் மறக்கும்.

தந்தை கொடுக்கும் நற்சிந்தனைக்கான பொக்கிஷத்தை அடிக்கடி நினைவு செய்வது என்றால் உபயோகிப்பது. உபயோகிப்பதினால் குஷி இருக்கும். நற்சிந்தனை இருப்பது கூட சிந்தனை செய்வதாகும். சிந்தனை செய்வதினால் குஷி என்ற எந்த வெண்ணெய் வெளியாகுமோ அது வாழ்க்கையை சக்திசாலியானதாக ஆக்கிவிடும். பின்பு யாரும் அசைக்க முடியாது. மாயா அசைக்கும் ஆனால் நீங்கள் அசைய மாட்டீர்கள். அனுமானின் உதாரணம் யாருடையது? மகாரதிகளினுடையது. நீங்கள் மகாரதி தான் இல்லையா? எப்பொழுது சென்ற கல்பத்தில் ஆடவில்லை என்றால் இப்பொழுது எப்படி ஆடுவீர்கள்? இப்பொழுது ஆடாத அசையாத அனுமானுக்குச் சமமாக எப்பொழுதும் ஒரே சீரான நிலையில் நிலைத்திருப்பது, கொஞ்சம் கூட எண்ண அளவில் கூட ஆடாத நிலை இது தான் ஆடாத அசையாத அங்கதன் ஆவது.

எப்பொழுதும் ஆயுதம் தரித்தவராகி மாயாவைக் எதிர்த்துக் கொண்டு நடந்து கொள்கிறீர்களா? யார் ஆயுதம் தரித்தவராக இருப்பாரோ அவர் எப்பொழுதும் பயமற்றவராக இருப்பார். யாரிடமிருந்து? எதிரியிடமிருந்து பயமற்றவராக இருப்பார். எப்படி காவல் காக்கும் காவலாளி ஒருவேளை ஆயுதம் தரித்தவராக இருக்கிறார் மற்றும் என்னுடைய ஆயுதம் எதிரியை விரட்டக்கூடியது மற்றும் தோல்வியடையச் செய்வது என்ற நிச்சயம் அவருக்கு இருக்கிறது என்றால் அவர் எவ்வளவு பயமற்றவராகி காவல் காத்துக் கொண்டே இருக்கிறார். அப்படி இங்கேயும் எவ்வளவு தான் மாயா எதிர்த்தாலும் ஆயுதம் தரித்தவராக இருக்கிறார் என்றால் மாயாவைக் கண்டு ஒருபொழுதும் பயப்படமாட்டார், தோல்வி அடையமாட்டார் அதாவது எப்பொழுதும் வெற்றி அடைபவராக இருப்பார். அப்படியானால் அனைத்து ஆயுதங்களும் எப்பொழுதும் கைவசம் இருக்கின்றனவா? ஒன்று குறைவாக இருக்கிறது என்றால் தோல்வி ஏற்படலாம். சக்திகள் தான் ஆயுதங்கள் ஆகும். அப்படி அனைத்து சக்திகள் என்ற ஆயுதங்கள் எப்பொழுதும் கைவசம் இருக்கின்றனவா? ஆயுதங்களை கையாளத் தெரியுமா? பாண்டவர்களின் வீரத்தன்மையை மிக உயரமான ரூபத்தில்

கண்பித்திருக்கிறார்கள், சக்திகளின் வீரத்தன்மையை ஆயுதங்கள் மூலம் காண்பித்திருக் கிறார்கள். பாண்டவர்கள் எப்பொழுதும் பிரபுவின் துணைவர்களாக இருந்தார்கள். மேலும் துணையின் காரணமாக வெற்றி அடைந்தவர்களாக ஆனார்கள். உங்களுக்கும் எப்பொழுதும் தந்தையின் துணை அனுபவம் ஆகிறதா? எப்பொழுது துணையின் அனுபவம் ஆகிறது என்றால் எது தந்தையின் குணம் மற்றும் சக்திகளாக இருக்கின்றனவோ அவை உங்களுடையவைகளாக ஆனது. எப்படி தந்தை ஆத்மீக நிலையில் இருக்கிறார், அதே போல் உடனிருப்பவரும் ஆத்மீக நிலையில், உடலைப் பார்த்தும் ஆத்மாவைப் பார்ப்பார்.

அனைவரும் அமிர்தவேளையின் அனுபவம் செய்கிறீர்களா? ஒருவேளை யாருக்காவது வீட்டில் அமர்ந்திருக்கும்போதே லாட்டரி கிடைக்கிறது இருந்தும் அவர் அதை விட்டு விடுகிறார் என்றால் அவரை என்னவென்று கூறுவது? இதுவும் வீட்டில் அமர்ந்திருக்கும் போதே லாட்டரி கிடைக்கிறது, ஒருவேளை இப்பொழுது இந்த லாட்டரியைப் பெறவில்லை என்றால் இந்த நாளும் நினைவிருக்கும் இப்பொழுது இது பிராப்திக்கான நாளாகும். கொஞ்ச காலத்திற்குப் பிறகு இதே நாள் வேதனை அடைவதற்கான நாளாக ஆகிவிடும். எனவே எவ்வளவு விரும்புகிறீர்களே அந்த அளவு எடுத்துக் கொள்ளுங்கள், வேகத்தை அதிகரியுங்கள். இப்பொழுது இல்லை என்றால் ஒருபொழுதும் இல்லை என்பதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். இன்று ஆனால் இப்பொழுது, அதைத் தான் தீவிர முயற்சி செய்பவர் என்று கூறுவது.

வீடு செல்வதற்கான ஏற்பாடுகளை செய்து விட்டீர்களா? தயார் ஆவது என்றால் அனைத்து கயிறுகளும் அறுக்கப்பட்டவைகளாக இருக்க வேண்டும். அப்படி அனைத்து கயிறுகளும் அறுந்து விட்டனவா? ஒருவேளை அனைத்து கயிறுகளும் அறுந்திருந்தால் வீடு செல்வீர்கள். இல்லையென்றால் ஜென்மம் எடுக்க வேண்டியதாக இருக்கும். சேவையை முடித்து விட்டீர்களா? எதுவரை உலகிற்கு செய்தி கொடுக்கவில்லை என்றால் உலகிற்கு நன்மை செய்பவர் என்ற பெயர் எப்படி ஏற்படும்? பின்போ பாரதத்தின் நன்மை செய்பவர் என்றாகிவிடும்.
என்ன நடந்து கொண்டிருந்தாலும் சுலபமாகவே உடலிலிருந்து விலகிவிடுவோம் என்று அந்த அளவு பயிற்சி உள்ளவராக இருக்கிறீர்களா? இந்தப் பயிற்சி இருக்கிறதா? எந்தவொரு உறவும்

மற்றும் சம்ஸ்காரமும் குழப்பம் செய்ய வேண்டாம். அனைவருக்குமோ செல்ல வேண்டும் ஆனால் ஒரு சாரார் சுலபமாக செல்வார்கள், இன்னொரு சாரார் யுத்தம் செய்து செய்தே செல்வார்கள். அப்படி செல்வதற்காக தயாராக இருக்கிறீர்கள் என்ற இதுவோ சரி தான் ஆனால் சுலபமாகச் செல்வோம் என்ற இந்த தயார் நிலை இருக்கிறதா? நேரடியாகச் செல்வீர்களா அல்லது சுற்றிச் செல்வீர்களா? தர்மராஜ்புரி கஷ்டம் நிறைந்த புரி ஆகும். ஒருவேளை ஏதாவது உடன் இருக்கிறது என்றால் சுங்கவரியில் (கஸ்டம்) நிற்க வேண்டியதாக இருக்கும். எனவே செல்வதின் கூடவே இந்த தயார் நிலையும் வேண்டும். கஸ்டமிலிருந்து விடுபட்டு இருக்கிறேனா என்ற இதையும் பார்க்க வேண்டும். பாஸ்போர்ட் ஆகியவை அனைத்தையும் சோதிக்க வேண்டும். பெட்டி, பைகள் அனைத்தையும் சோதிக்க வேண்டும். நல்லது.

**வரதானம்: ஒரே எண்ணத்தில் நிலைத்திருந்து மகா தீர்த்தத்தின் பிரத்யக்ஷம் செய்யக்கூடிய பொறுப்புள்ள ஆத்மா ஆகுக!**

இந்த அபு உலகிற்கான லைட் ஹவுஸ் ஆகும். இந்த மகா தீர்த்தத்தின் பிரத்யக்ஷத்தை (வெளிப்படுத்த) செய்வதற்காக அனைத்து பிராமண குழந்தைகளுக்கும் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் இங்கிருந்து தான் புகலிடம் கிடைக்க வேண்டும் என்ற ஒரே ஒரு எண்ணம் இருக்கட்டும். அனைவருக்கும் நன்மை ஏற்படட்டும். எப்பொழுது இந்த நல்விருப்பங்களின் தீபம் ஒவ்வொருவரின் உள்மனதில் எரியுமோ, அனைவரின் சகயோகம் இருக்குமோ அப்பொழுது தான காரியத்தில் வெற்றி இருக்கும். இது என்னுடைய பொறுப்பாகும் என்று அனைவரின் மனதிலிருந்து வெளியாக வேண்டும். எப்பொழுது ஒவ்வொருவரும் தன்னை அந்த மாதிரி பொறுப்பானவர் என்று புரிந்து கொள்வாரோ அப்பொழுது தான் பிரத்யக்ஷதாவின் கிரணங்கள் தந்தையின் வீட்டிலிருந்து நாலாபுறமும் பரவும்.

**சுலோகன்: உள்நோக்குமுகம் என்ற விசேஷத்தை தாரணை செய்து விட்டீர்கள் என்றால் அனைவரின் ஆசீர்வாதம் கிடைத்துக் கொண்டே இருக்கும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 14.05.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சுவமானம் (சுயமரியாதை) மற்றும் ஃபர்மான் (கட்டளை)!

எப்பொழுதும் பாக்கியத்தை உருவாக்கும் தந்தை மூலமாக பிராப்தி ஆகியிருக்கும் தன்னுடைய பாக்கியத்தை சிந்தனை செய்து கொண்டே மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா? ஏனென்றால் முழுக் கல்பத்தினுள் அனைத்தையும் விட உயர்ந்த பாக்கியத்தை இந்த நேரம் தான் பிராப்தி செய்கிறீர்கள். இந்த நேரம் தான் எப்பொழுதும் பாக்கியசாலி நிலையின் அனுபவம் செய்ய முடியும். எதிர்காலத்து புது உலகில் கூட அந்த மாதிரி பாக்கியம் பிராப்தி ஆகாது, அப்படியானால் எவ்வளவு தந்தை குழந்தைகளை உயர்ந்த பாக்கியசாலி என்று நினைக்கிறாரோ அந்த அளவே ஒவ்வொருவரும் தன்னை புரிந்து கொண்டு நடக்கிறீர்களா? இதைத் தான் சுவமானத்தில் (சுயமரியாதையில்) நிலைத்திருப்பது என்று கூறுவது. எண்ணம், சொல், செயல் மூன்றிலும் கவனம் வையுங்கள். ஒன்றோ எப்பொழுதும் சுவமானத்தில் இருப்பது, இன்னொன்று ஒவ்வொரு அடியிலும் தந்தையின் கட்டளைப்படி நடப்பது. சுவமானம் மற்றும் ஃபர்மான் (கட்டளை). இந்த இரண்டு விஷயங்கள் மேல் கவனம் வைக்க வேண்டும். கூடவே அனைவரின் நெருக்கத்தில் வரும்போது மரியாதை கொடுக்க வேண்டும்.

சுவமானத்தில் நிலைத்திருப்பதினால் எப்பொழுதும் விக்ன விநாஷக் (தடைகளை அழிக்கும்) நிலையில் இருப்பீர்கள். சுவமானம் என்றால் என்ன என்று அதை நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்களா? எது தந்தையின் மகிமையாக இருக்கிறதோ அது தான் உங்களுடைய சுவமானம் ஆகும். ஒரே ஒரு மகிமையை நினைவில் வைத்தால் கூட சுவமானத்தில் இயல்பாகவே நிலைத்து விடுவீர்கள். சுவமானத்தில் நிலைத்து விடுவதினால் எந்த விதமான அபிமானம் அதாவது உடலின், புத்தியின், பெயரின், சேவையின் அபிமானம் மற்றும் விசேஷ குணங்களின் அபிமானம் தானாகவே முடிவடைந்து விடும். எனவே

எப்பொழுதும் விக்ன விநாஷக் ஆக இருப்பீர்கள். அதே போல் சுவமானத்தில் நிலைத்திருப்பவர்கள் எப்பொழுதும் பணிவாக இருப்பார்கள். அபிமானம் இருக்காது ஆனால் பணிவு இருக்கும். இதன் மூலம் அனைவர் மூலமாக இயல்பாகவே எப்பொழுதும் மரியாதை கிடைக்கிறது. மரியாதை பெறுவதின் இச்சையிலிருந்து விலகியிருக்கும் காரணத்தினால் அனைவர் மூலமாக உயர்ந்த மரியாதை கிடைப்பதற்கான பாத்திரமாக ஆகிவிடுகிறார்கள். இது அனாதி நியமம் ஆகும். அனைவர் மூலமாக மரியாதை கேட்பதினால் கிடைக்காது ஆனால் மரியாதை கொடுப்பதினால், சுவமானத்தில் நிலைத்திருட்பதினால், இயற்கை தாசிக்கு சமமாக, சுவமானத்தின் அதிகாரத்தின் ரூபத்தில் மரியாதை பிராப்தி ஆகிறது. மரியாதையின் தியாகத்தில் அனைவரின் மரியாதைக்குரியவர் ஆவதின் பாக்கியம் பிராப்தி ஆகிறது. எப்படி சுவமானத்தில் நிலைத்திருப்பவர்களுக்கு இந்த ஒரு ஜென்மத்தில் மட்டும் மரியாதை கிடைப்பதில்லை ஆனால் முழுக் கல்பத்தில் அரைக்கல்பம் தன்னுடைய இராயல் இராஜ குடும்பம் மூலமாக மற்றும் பிரஜை மூலமாக மரியாதை பிராப்தி ஆகிறது. மேலும் அரைக் கல்பம் பக்தர்கள் மூலமாக மரியாதை பிராப்தி ஆகிறது. இந்த அளவிற்கு கடைசி ஜென்மத்தில் சைத்தன்ய ரூபத்தில் தன்னால் பிராப்தி செய்திருக்கும் மரியாதையின் பிராப்தியை நீங்களே பார்க்கிறீர்கள். சைத்தன்ய தன்னுடைய ஜடச்சிலைகளை பார்க்கிறீர்கள் தான் இல்லையா, அப்படி முழுக் கல்பத்தில் பிரப்தி ஆகியிருக்கும் மரியாதையின் ஆதாரமாக என்ன ஆனது? அற்ப காலத்து அழியும் மரியாதையின் தியாகம் என்றால் சுவமானத்தில் நிலைத்திருப்பது பணிவானவராகி மரியாதை கொடுப்பதாகும். இந்த கொடுப்பது தான் பெறுவதாக ஆகிவிடுகிறது. மரியாதை கொடுப்பது என்றால் அந்த ஆத்மாவை ஊக்கம் உற்சாகத்தில் கொண்டு வந்து முன்னுக்கு வைப்பது. அற்ப காலத்து புண்ணியம் அற்ப காலத்தின் பொருளை கொடுப்பதினால் ஏற்படுகிறது மற்றும் அற்ப காலத்து சகயோகம் கொடுப்பதினால் ஏற்படுகிறது ஆனால் இது நிரந்தர ஊக்கம், உற்சாகம் அதாவது குஷியின் பொக்கிஷம் மற்றும் தன்னுடைய சகயோகத் தினால் ஆத்மாவை நிரந்தரமாக புண்ணிய ஆத்மா ஆக்கிவிடுகிறது எனவே இது மிகப் பெரிய புண்ணியம் ஆகிவிடுகிறது. ஒரு ஜென்மத்தில் செய்த இந்த புண்ணியத்தின் பலன் முழுக் கல்பமும் கிடைக்கிறது. எனவே தான் மரியாதை கொடுப்பது என்றால் கொடுப்பது அல்ல ஆனால் பெறுவது என்று கூறப் பட்டிருக்கிறது. உலகியல்

முறையில் கூட யாராவது புண்ணிய காரியம் செய்கிறார்கள் என்றால் அனைவரின் முன்பு மரியாதைக்குரியவராக ஆகிறார் ஆனால் இந்த உயர்ந்த புண்ணியத்தின் பலனாக பூஜைக்குரியவராகவும் மற்றும் மரியாதைக்குரியவராகவும் ஆகிறார். எனவே அந்த மாதிரி புண்ணிய ஆத்மாவாகி எப்பொழுதும் புண்ணிய காரியம் செய்கிறேனா என்று உங்களை நீங்களே கேளுங்கள். மரியாதை கொடுங்கள் மற்றும் மரியாதை கிடைக்க வேண்டும் மேலும் என்னுடைய மரியாதை ஏன் வைக்கப்படவில்லை, இவருக்கு ஏன் வைக்கப்படுகிறது? நீங்கள் பெறுபவரா அல்லது கொடுப்பவரா? பெற வேண்டும் என்ற இந்த பாவனையும் ராயல் பிச்சைக்காரத்தனம் ஆகும். அப்படி சுவமானம் மற்றும் சம்மான் அதாவது மரியாதை. சுவமானத்தில் இருக்க வேண்டும், மரியாதை கொடுக்க வேண்டும்.

வேறு என்ன செய்ய வேண்டும்? ஒவ்வொரு அடியிலும் கட்டளைப்படி நடக்க வேண்டும். ஒவ்வொரு அடியிலும் கட்டளைப்படி நடப்பவர்களின் எதிரில் முழு உலகமும் பலியாகிவிடுகிறது. கூடவே மாயாவும் தன்னுடைய வம்சத்தையும் சேர்த்து பலியாகிவிடுகிறது அதாவது அடிபணிந்து விடுகிறது. மாயா அடிக்கடி தாக்குகிறது என்றால் ஒவ்வொரு அடியிலும் கட்டளைப்படி நடக்கவில்லை என்பது நிரூபணமாகிறது. எப்பொழுதும் கட்டளைப்படி நடக்காத காரணத்தினால் மாயாவும் ஒரே வெட்டு இரண்டு துண்டு என்ற ரூபத்தில் பலியாவதில்லை. எனவே அடிக்கடி தாக்குதல் செய்கிறது. மேலும் அடிக்கடி நீங்கள் கதறுவதற்கான காரணம் ஆகிவிடுகிறது. மாயா வந்து விட்டது என்று கதறுதல் ஆனது இல்லையா. இன்று இந்த ரூபத்தில் வந்தது, இப்பொழுது என்ன செய்வது. மாயாவை அதாவது தடையை எப்படி அகற்றுவது? அப்படி ஒரே வெட்டில் இரண்டு துண்டு ஆகாத காரணத்தினால் மாயாவும் கதறுகிறது. நீங்களும் கதறுகிறீர்கள். எனவே கட்டளைப்படி நடங்கள். பின்பு மாயாவும் பலியாகிவிடும். நீங்கள் தந்தை மேல் பலியாகிவிடுங்கள். மாயா உங்கள் மேல் பலியாகிவிடும். அப்படி கட்டளைப்படி நடப்பது எவ்வளவு சுலபமான வழியாக ஆனது. சுவமானம் மற்றும் கட்டளை சுலடம் தான் இல்லையா. இதைக் கடைபிடிப்பதினால் பல ஜென்மங்களுக்கு கடினத்திலிருந்து விடுபட்டு விடுவீர்கள். இப்பொழுது சகஜயோகியாக இருக்கிறீர்கள் மற்றும் எதிர்காலத்தில் சகஜ வாழ்க்கை இருக்கும். அந்த மாதிரி சகஜ வாழ்க்கையை உருவாக்குங்கள். புரிந்ததா. நல்லது.

# 1977 அவ்யக்த முரளி

அந்த மாதிரி எப்பொழுதும் கட்டளைப்படி நடக்கக்கூடிய எப்பொழுதும் சுவமானத்தில் இருக்கக்கூடிய, அற்பகாலத்தின் அழியும் மரியாதையை தியாகம் செய்யக்கூடிய, எப்பொழுதும் மரியாதைக்குரிய பூஜைக்குரிய பாகத்தை பிராப்தி செய்யக்கூடிய அந்த மாதிரி தந்தை மேல் எப்பொழுதும் பலியாகக்கூடிய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் அனைவருக்கும் மரியாதை கொடுத்து அன்பை பெறக்கூடிய அன்பிற்குரிய ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பாண்டவ சேனை யுத்த மைதானத்தில் இருக்கிறீர்களா? பாண்டவர்களை மகாவீரர்கள் என்று கூறுவார்கள். மகாவீர் என்றால் எப்பொழுதும் மாயாவை வென்றவர். மகாவீர் ஒருபொழுதும் மாயாவைக் கண்டு பயப்படுவதில்லை. மாறாக சவால் விடுகிறார். எந்த ரூபத்தில் மாயா வந்தாலும் ஆனால் பகுத்தறியும் சக்தியினால் மாயாவை பகுத்தறிந்து கொண்டே வெற்றி அடைபவராக ஆவார். அப்படியானால் பகுத்தறியும் சக்தி வந்து விட்டதா? மாயாவை தூரத்திலிருந்து வரும்பொழுதே பகுத்தறிந்து விடுகிறீர்களா அல்லது எப்பொழுது மாயா தாக்கத் தொடங்குகிறதோ அப்பொழுது பகுத்தறிகிறீர்களா? எவ்வளவிற்கு எவ்வளவு பகுத்தறியும் சக்தி வீரியமாக இருக்குமோ அந்த அளவு மாயாவை தூரத்திலிருந்தே விரட்டி விடுவீர்கள். ஒருவேளை வந்து விட்டது பின்பு விரட்டினீர்கள் என்றால் அதில் கூட நேரம் வீணாகி விடுகிறது. பின்பு வந்து வந்து சில நேரம் அமர்ந்தும் விடுகிறது. எனவே வரவே விடாதீர்கள். இன்றைய நாட்களில் தொலைநோக்கு பார்வை உடையவராக ஆவதின் பயிற்சி செய்ய வேண்டும். அறிவியல் சாதனங்கள் கூட தூரத்திலிருந்தே பகுத்தறிவதற்கான முயற்சி செய்கிறார்கள். முன்பு புயல் வந்தது பிறகு அதிலிருந்து பாதுகாத்துக் கொள்வது என்பது இருந்தது ஆனால் இப்பொழுது அப்படியல்ல. இப்பொழுதோ புயல் வந்து கொண்டிருக்கிறது என்ற அதைத் தெரிந்து விரட்டுவதற்கு முயற்சி செய்கிறார்கள். எப்பொழுது அறிவியலும் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறது என்றால் அமைதியின் சக்தி எவ்வளவு முன்னேற வேண்டும். தூரத்திலிருந்தே விரட்டுவதற்காக எப்பொழுதும் மூன்று காலத்தையும் தெரிந்த நிலையில் நிலைத்திருங்கள். ஒவ்வொரு விஷயத்தையும் மூன்று காலங்களினால்

பாருங்கள். என்ன விஷயம்? தற்சமயத்து ரூபம் என்ன மேலும் முன்பும் இந்த ரூபத்தில் வந்திருந்தது. மேலும் இப்பொழுது வந்திருக்கும் அதை எப்படி அழிப்பது? அப்படி மூன்றையும் பார்ப்பதினால் ஒருபொழுதும் மாயாவின் தாக்குதல் தோல்வி அடையச்செய்வதற்கு காரணமாக இருக்காது ஆனால் மூன்று காலத்தையும் தெரிந்தவராகி பார்ப்பதில்லை, நிகழ்காலத்தைப் பார்க்கிறீர்கள். எனவே சில நேரம் தோல்வி, சில நேரம் வெற்றி ஏற்படுகிறது. எப்பொழுதும் வெற்றி அடைபவராக ஆவதில்லை. மூன்று காலங்களையும் தெரிந்த நிலையில் நிலைத்திருப்பவரிடமிருந்து ஒருபொழுதும் மாயா தப்பித்து கொள்ள முடியாது. ஒருவேளை அடிக்கடி மாயாவின் தாக்குதல் நடந்து கொண்டே இருக்கிறது என்றால் அதீந்திரிய சுகத்தின் அனுபவத்தை விரும்பினாலும் செய்ய முடியாது.

அதீந்திரிய சுகம் சங்கமயுகத்தின் வரதானம் என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது -இது வேறு எந்த யுகத்திலும் இருப்பதில்லை. இது இப்பொழுதிற்கான அனுபவம். எனவே ஒருவேளை அதீந்திரிய சுகத்தை அனுபவம் செய்யவில்லை என்றால் பிராமணன் ஆகி என்ன செய்வீர்கள்? பிராமணனின் விசேஷமாகிய அதீந்திரிய சுகத்தை அனுபவம் செய்யவில்லை என்றால் ஒன்றுமே இல்லை. இந்தக் காரணத்தினால் எப்பொழுதும் நான் அதீந்திரிய சுகத்தில் இருக்கிறேனா என்று பாருங்கள்.

**தனிப்பட்ட சந்திப்பு: (1) அதிந்திரிய சுகத்தில் இருப்பவர்களின் அடையாளம்:** அதீந்திரிய சுகத்தில் இருப்பவர்கள் ஒருபொழுதும் அற்ப காலத்து இந்திரியங்களின் சுகத்தின் பக்கம் ஈர்க்கப்பட மாட்டார்கள், எப்படி ஏதாவது ஒரு செல்வந்தன் பாதையில் சென்று கொண்டிருக்கும் போது எந்தப் பொருளின் பக்கம் ஈர்க்கப்படுவதில்லை. ஏனென்றால் அவர் முழுமையாக நிரம்பியவராக இருக்கிறார். இதே முறையில் அதீந்திரிய சுகத்தில் இருக்கக்கூடியவர் இந்திரியங்களின் சுகத்தை விஷத்திற்கு சமமாக நினைப்பார். விஷத்தின் பக்கம் யாராவது ஈர்க்கப்படுவார்களா என்ன? அப்படி இந்திரியங்களின் சுகத்திலிருந்து எப்பொழுதும் விலகியிருப்பார்கள். கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்காது, ஆனால் ஞானம் நிறைந்தவராக இருக்கும் காரணத்தினால் அவரின் எதிரில் அது துச்சமாகத் தென்படும். ஒருவேளை காலப்போக்கில் இந்திரியங்களின் சுகத்தின் பக்கம் ஈர்க்கப்படுகிறார் என்றால் அதீந்திரிய

சுகத்தின் அனுபவத்தில் ஏதோ குறை இருக்கிறது என்று நிரூபணம் ஆகிறது. இச்சை இருக்கிறது ஆனால் பிராப்தி இல்லை. விருப்பம் வைத்திருப்பவராக இருக்கிறார் ஆனால் குழந்தை அல்ல. குழந்தை என்றால் அதிகாரி. இது பிராப்தி ஆக வேண்டும் என்ற இந்த இச்சையில்லை ஆனால் பிராப்தி இருக்கிறது என்ற இந்த அதிகாரத்தின் குஷியில் இருப்பவர். எப்பொழுதும் இந்த அதீந்திரிய சுகத்தில் இருங்கள். இந்திரியங்களின் சுகத்தின் அனுபவத்தை எத்தனை ஜென்மங்களாக செய்து கொண்டிருக்கிறீர்கள், அதிலிருந்து என்ன பிராப்தி ஆனது என்ற ஞானமும் இருக்கிறது இல்லையா? என்ன பிராப்தி ஆனது? சம்பாதித்தீர்கள் மற்றும் இழந்தீர்கள். எப்பொழுது இழக்கவ வண்டும் என்றால் பின்பு இப்பொழுதும் அதன் தா பக்கம் ஏன் ஈர்க்கப்படுகிறீர்கள்? அதீந்திரிய சுகத்தின் பிராப்திக்கான நேரம் இப்பொழுது கூட கொஞ்சம் இருக்கிறது. இது இப்பொழுது இல்லையென்றால் ஒருபொழுதும் கிடைக்காது. இதனுடைய வியாபாரத்தை இப்பொழுது செய்யவில்லை என்றால் ஒருபொழுதும் செய்ய முடியாது. இருந்தும் விடலாமா, விட வேண்டாமா என்று யோசித்து கொண்டே இருக்கிறார்கள். விட்டால் விடுபடும் என்று தந்தை கூறுகிறார். அதற்கு விடுபடுவதே இல்லை என்று கூறுகிறார்கள். அவரே பிடித்துக் கொண்டிருக்கிறார் பின்பு விடுபடுவதில்லை என்று கூறுகிறார். படைப்பவரே நீங்கள் தான் இல்லையா. அடிக்கடி தட்டுதடுமாறாதீர்கள்.

**2) எப்பொழுதும் ஆடாது அசையாமல் இருப்பதற்கான விசேஷ தாரணை!** எப்பொழுதும் குணத்தை கிரகிப்பவராக ஆகுங்கள். இப்பொழுது ஒவ்வொரு விஷயத்திலும் குணத்தை கிரகிப்பவராக ஆனீர்கள் என்றால் குழப்பத்தில் வர மாட்டீர்கள். குணத்தை கிரகிப்பவர் என்றால் நன்மை பயக்கும் பாவனை உள்ளவர். அவகுணத்தை பார்ப்பதினால் நன்மையின்மையின் பாவனை மற்றும் குழப்பத்தில் இருப்பார்கள். அவகுணத்திலும் குணத்தை பார்ப்பது இதைத் தான் குணத்தை கிரகிப்பவர் என்று கூறுவது. அவகுணத்தை பார்த்தும் தனக்கு குணத்தை எடுக்க வேண்டும். அவகுணம் உடையவர்களிலிருந்து எப்படி இவர் அவகுணத்தில் திடமாக இருக்கிறார் இதைப் போல் நான் குணத்தில் திடமாக இருக்கிறேன் என்று குணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். குணத்தை கிரகிப்பவராக ஆகுங்கள் மற்றும் அவகுணத்தை கிரகிக்காதீர்கள்.

**3) ஆத்மாவை சக்திசாலியாக ஆக்கக்கூடிய உணவு குஷியாகும்!**
குஷி மாதிரி சத்துணவு இல்லை என்று கூறுகிறார்கள் இல்லையா. குஷியிலிருப்பவர் சக்திசாலியாக இருப்பார். நாடகம் என்ற கேடயத்தை மிக நன்றாக காரியத்தில் கொண்டு வருவதினால் எப்பொழுதும் குஷியில் இருப்பீர்கள், வாடிப்போக மாட்டீர்கள். ஒருவேளை எப்பொழுதும் நாடகத்தின் நினைவிலிருந்தீர்கள் என்றால் ஒருபொழுதும் சோர்வடைய முடியாது. குஷி எப்பொழுதும் புத்தியில் ஞானத்தின் ரூபத்தில் இல்லை. எந்த மாதிரியான காட்சியாக இருந்தாலும் அதிலிருந்து நம்முடைய நன்மையை எடுத்துக் கொள்ள வேண்டும். பின்பு எப்பொழுதும் குஷியாக இருப்பீர்கள். இந்தக் குஷி தான் ஆத்மாவை சக்திசாலி ஆக்கக்கூடிய உணவாகும். இந்த மாதிரி உயர்ந்த பூமியில் வருவது என்றால் பாக்கியசாலி ஆவதாகும். இதே பாக்கியத்தை எப்பொழுதும் நிலைத்திருக்கச் செய்வதற்காக எப்பொழுதும் கவனம் மற்றும் நிலை ஒரே சீராக இருக்கட்டும். ஒரே சீரான நிலை என்றால் ஒருவரின் ரசனையிலேயே இருப்பது மேலும் வேறு எந்த ரசனையும் தன் பக்கம் இழுக்காமல் இருப்பது. ஒருவேளை வேறு ஏதாவது ரசனையில் புத்தி செல்கிறது என்றால் ஒரே சீராக இருக்க முடியாது தந்தைக்குச் சமமாக தன்னை ஞானம் நிறைந்தவர் அதாவது ஞானக்கடல் என்று அனுபவம் செய்கிறீர்களா? ஞானம் நிறைந்தவர் என்றால் எப்பொழுதும் சத்திய காரியம் செய்பவர், வீணானவை செய்ய மாட்டார். எப்பொழுது சத்தியமான தந்தையின் குழந்தை சத்யுக ஸ்தாபனை செய்கிறீர்கள் என்றால் காரியமும் சத்தியமாக இருக்க வேண்டும். சொல், செயல், எண்ணம் அனைத்தும் சத்தியமாக இருக்க வேண்டும். இதைத் தான் தந்தைக்குச் சமமான மாஸ்டர் ஞானம் நிறைந்த அதாவது ஞான சொரூப நிலை என்று கூறுவது. நல்லது.

**வரதானம்: ஒவ்வொரு காரியத்தின் சுமையை தந்தையிடம் விட்டு விட்டு சுயம் டிரஸ்டியாகி இருக்கக்கூடிய டபுள் லைட் ஃபரிஷ்தா ஆகுக!**

தைரியம் வைக்கக்கூடிய குழந்தைகளுக்கு பாப்தாதா எப்பொழுதும் உதவி செய்கிறார். குழந்தைகள் உயர்ந்த எண்ணத்தை வைக்கிறார்கள், மேலும் தந்தை ஆஜராகி விடுகிறார். அனைத்து காரியங்களை

தந்தையிடம் ஒப்படைத்து மட்டும் விடுங்கள். தன் மேலே பொறுப்புக்களின் சுமையை எடுக்காதீர்கள். டிரஸ்டியாகி இருந்தீர்கள் என்றால் எப்பொழுதும் டபுள் லைட் பரிஷ்தா ஆகி லேசாக பறந்து கொண்டே இருப்பீர்கள். இதயம் சுத்தமாக இருக்கிறது என்றால் விரும்பியது கிடைத்து விடும்.

**சுலோகன்: ஊக்கம் உற்சாகத்தின் இறக்கை உடன் இருக்கிறது என்றால் பறக்கும் கலையில் பறந்து கொண்டே இருப்பீர்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 16.05.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மாயாவின் தாக்குதலை எதிர்கொள்வதற்காக இரண்டு சக்திகள் அவசியம் தேவை!

பாப்தாதா அனைத்து குழந்தைகளின் முயற்சியின் வேகத்தின் முடிவைப் பார்த்துக் கொண்டிருந்தார். புதியவர்கள் மற்றும் பழையவர்கள் இருவர்களின் முயற்சியின் வேகத்தைப் பார்த்துக் கொண்டு தந்தைக்கு குழந்தைகளின் மேல் அதிக அன்பும் ஏற்பட்டது. மேலும் கூடவே இரக்கமும் ஏற்பட்டது. அன்பு ஏன் ஏற்பட்டது? சிறியவர்கள், பெரியவர்கள் அறிமுகம் கிடைத்தவுடனேயே, அறிமுகத்தின் கூடவே தன்னுடைய சக்திக்கேற்றபடி கிடைத்த பிராப்தியின் ஆதாரத்தில் கடந்த கால வாழ்க்கை மற்றும் தற்சமயத்து பிராமண வாழ்க்கை இரண்டிலும் மிகப் பெரிய வித்தியாசத்தை அனுபவம் செய்து கொண்டே, அலைந்து கொண்டிருந்தவருக்கு ஒரு ஆதாரம் கிடைத்தது என்று தென்பட்டுக் கொண்டே, நிச்சயபுத்தியுடையவராகி, ஒவ்வொருவரின் சகயோகத்தினால், ஒவ்வொருவரின் அனுபவத்தின் ஆதாரத்தினால் லட்சியத்தை நோக்கி செல்லத் தொடங்கினார்கள் என்று பார்த்தோம். குஷி, சக்தி, சாந்தி மற்றும் சுகத்தின் அனுபவத்தில் சிலர் மற்றவர்களைப் பொருட்படுத்தாமல் ஆன்மீக வாழ்க்கையின் அனுபவம் என்ற அடியை முன்னே எடுத்து வைத்து சென்று கொண்டிருந்தார்கள். பிராப்தியின் முன்பு சிலவற்றை விடுகிறார்கள் மற்றும் தியாகம் செய்கிறார்கள், எந்தவொரு உணர்வும் இருப்பதில்லை. தந்தை கிடைத்தார், அனைத்தும் கிடைத்தது அந்த போதையில் தியாகமும் தியாகமாகப்படவில்லை, நினைவு மற்றும் சேவையில் உடல், மனம், பொருளால் ஈடுபட்டுவிட்டனர். முதல் போதை, முதல் குஷி, முதல் ஊக்கம், உற்சாகத்தை வித்தியாசமானதாக மிகப்பிரியமானதாக அனுபவம் செய்தார்கள். இந்த தியாகம் மற்றும் தொடக்க காலத்து போதை, திரிகாலதரிசி, மாஸ்டர் ஞானக்கடல், மாஸ்டர் சர்வ சக்திவானின் நிலையின் முதல் உத்வேகத்தில்

# 1977 அவ்யக்த முரளி

எந்த சுயநினைவும் இருப்பதில்லை, பழைய உலகத்தின் அனைத்தும் துச்சமாக அனுபவம் ஆனது, சாரமற்றதாக அனுபவம் ஆனது. அப்படி ஒவ்வொருவரின் முதல் நிலையைப் பார்த்துக் கொண்டே ஒவ்வொருவரும் தந்தைக்காக எவ்வளவு தியாகம் மற்றும் ஈடுபாட்டுடன் முன்னேறுவதற்கான முயற்சி செய்தார்கள் என்று மிக அதிக அன்பு ஏற்பட்டது. அந்த மாதிரி தியாகம் செய்தவர்கள், ஞானம் நிறைந்தவர்கள், நிச்சயபுத்தி குழந்தைகள் மேல் பாப்தாதாவும் தனது அனைத்து செல்வங்களோடு சேர்த்து பலியானார். எப்படி குழந்தைகள் பாபா நாங்கள் உங்களுடையவர்கள் என்று நினைத்தனர்.. அதே போலவே தந்தையும் பதிலாக எது தந்தையினுடையதோ அது உங்களுடையது' என்றுத் தான் கூறினார். அந்த மாதிரி அதிகாரியாகவும் ஆனார்கள், ஆனால் போகப்போக என்ன நடந்தது? மகாவீர் அதாவது ஆன்மீக போர்வீரனாகி மாயாவிற்கு சவால் விடுகிறார்கள், வெற்றி அடைவதற்கான அதிகாரத்தையும் புரிந்து கொள்கிறார்கள் ஆனால் மாயாவின் அனேக விதமான தாக்குதலை எதிர்கொள்வதற்காக இரண்டு விஷயங்களின் குறை ஏற்பட்டு விடுகிறது. அந்த இரண்டு விஷயங்கள் எவை? ஒன்று எதிர்கொள்வதற்கான சக்தியின் குறைவு, இன்னொன்று பகுத்தறிதல் மற்றும் நிர்ணயம் செய்யும் சக்தியின் குறைவு இந்த குறைகளின் காரணமாக மாயாவின் அனேக விதமான தாக்குதலில் சில நேரம் தோல்வி, சில நேரம் வெற்றி கிடைப்பதினால், சில நேரம் உத்வேகம், சில நேரம் சுயநினைவில் வந்து விடுகிறார்கள். எதிர்கொள்வதற்கான சக்தியின் குறைவிற்கான காரணம் என்ன? தந்தையை நிரந்தர துணைவனாக ஆக்கத் தெரிவதில்லை, துணையைப் பெறுவதற்கான முறை தெரிவதில்லை. சுலபமான முறை அதிகாரமுடைய நிலை. எனவே பலஹீனமானவர்களைப் பார்த்து மாயா தன்னுடைய தாக்குதலை செய்து விடுகிறது.

பகுத்தறியும் சக்தி இல்லாததற்கான காரணம் என்ன? புத்தியின் ஒருமுனைப்பாடு இல்லாத நிலை. வீணான எண்ணம் மற்றும் அசுத்த எண்ணங்களின் குழப்பம் இருக்கிறது. ஒருவரிடமிருந்து அனைத்து ரசனையையும் எடுப்பதற்கான ஒரே சீரான நிலை இல்லை. அனேக ரசனையில் புத்தி மற்றும் மனநிலை மேலே கீழே சென்று விடுகிறது. இதன் காரணமாக பகுத்தறியும் சக்தி குறைந்து விடுகிறது. மேலும் பகுத்தறியாததின் காரணமாக மாயா அவரை தன்னுடைய

வாடிக்கையாளர் ஆக்கிவிடுகிறது. இது மாயா என்று இதையும் அறிந்து கொள்ள முடியாது. இது தவறு என்ற இதையும் தெரிந்து கொள்ள முடியாது. இன்னும் அதிகமாக மாயாவின் வாடிக்கையாளர் மற்றும் மாயாவின் துணைவனாகி தந்தையை மற்றும் பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களுக்கும் இப்படி நடந்து கொண்டு தான் இருக்கும், எதுவரை சம்பூர்ணம் ஆகவில்லையோ அதுவரை இந்த மாதிரியான விஷயங்கள் நடக்கத் தான் செய்யும் என்று தன்னுடைய புத்திசாலித்தனத்தை முன்னுக்கு வைக்கிறார்கள். அந்த மாதிரி அனேக விதமான விசித்திரமான ஞானத்துளிகளை மாயாவின் சார்பாக வக்கீலாகி தந்தையின் எதிரில் மற்றும் பொறுப்பாளர் ஆகியிருப்பவரின் எதிரில் வைக்கிறார்கள். ஏனென்றால் மாயாவின் துணைவன் ஆன காரணத்தினால் எதிர்கட்சியைச் சேர்ந்தவராக ஆகிவிடுகிறார். மாயாவை வென்றவர் என்ற பதவியை விட்டுவிடுகிறார்கள். என்ன காரணம்? பகுத்தறியும் சக்தியின் குறைவு.

அந்த மாதிரி அதிசயமான, இரமணீகரமான வழக்குகள் தந்தையின் எதிரில் வருகின்றன. வாதாடும் பாய்ன்டுகளும் பெரிய நல்ல நல்லதாக இருக்கும். புதிது புதிதாக கண்டுபிடிப்பும் செய்கிறார்கள். ஏனென்றால் முதுகெலும்பாக மாயா இருக்கிறது. எப்பொழுது பாப்தாதா குழந்தைகளின் அந்த மாதிரி நிலையைப் பார்க்கிறார் என்றால் இரக்கம் வருகிறது. தந்தை கற்றுக்கொடுக்கிறார் மற்றும் குழந்தைகள் மிகச்சிறிய தவறின் காரணமாக என்ன செய்து கொண்டே இருக்கிறார்கள்? மிகச்சிறிய தவறு - ஸ்ரீமத்தில் தன் மனம் சொல்லும் வழியை கலப்பது. அதற்கான ஆதாரம் என்ன? அலட்சியம் மற்றும் சோம்பல். அனேகவிதமான மாயாவின் கவர்ச்சிக்குப்பின்னால் கவர்ச்சிக்கப்படுவது, எனவே முதலில் என்ன ஊக்கம் உற்சாகம் இருந்ததோ அது காலப்போக்கில் மாயாவை வெல்வதற்கான முழுமையான சக்தி இல்லாத காரணத்தினால் குறைந்து விடுகிறது. முயற்சி செய்யாதவராக ஆகிவிடுகிறார். என்ன செய்வது, எதுவரை செய்வது. இதுவோ தெரியாமல் இருந்தது. அந்த மாதிரி வீணான எண்ணங்களின் குழப்பத்தில் வந்து விடுகிறார்கள் ஆனால் இந்த அனைத்து விஷயங்களும் பாதையில் கடந்து செல்லும் பக்கத்து சாட்சிகள். இவை சென்றடைய வேண்டிய இலக்கு அல்ல, இதைக் கடந்து செல்ல வேண்டுமேயன்றி இலக்கு என்று புரிந்து இங்கேயே நின்று

விடக்கூடாது ஆனால் அனேக குழந்தைகள் இதையே தன்னுடைய இலக்கு அதாவது என்னுடைய பங்கே இது தான், அதிர்ஷ்டமே இது தான் என்று பாதையில் கடந்து செல்லும் காட்சிகளையே தன்னுடைய இலக்கு என்று புரிந்து உண்மையான இலக்கிலிருந்து தூரமாகி விடுகிறார்கள் ஆனால் உயர்ந்த இலக்கை சென்றடைவதற்கு முன்பு புயல் சூராவளி வரும், படகு அக்கரைக்குச் செல்வதற்காக இடையில் சூழல்களைக் கடந்து செல்லத் தான் வேண்டும். எனவே அவசரத்தில் பயப்படாதீர்கள். களைப்படையாதீர்கள். நின்று விடாதீர்கள். துணைவனை துணையாக வைத்தீர்கள் என்றால் ஒவ்வொரு கடினமும் சுலபமாகிவிடும். தைரியம் உள்ளவராக ஆனீர்கள் என்றால் உதவி கிடைத்தே விடும். தந்தையைப் பாருங்கள் மற்றும் தந்தையை பின்பற்றினீர்கள் என்றால் எப்பொழுதும் சுலபமாகவே ஊக்கம் உற்சாகத்தின் வாழ்க்கையை அனுபவம் செய்வீர்கள். வழியில் சென்று கொண்டிருக்கும்போதே எந்தவொரு நபரையும், சாதனத்தையும் ஆதாரமாக ஆக்காதீர்கள். எதன் ஆதாரம் அழியக்கூடிய ஒன்றோ அந்த அழியக்கூடியது என்ன பிராப்தியை செய்விக்க முடியும். ஒருவரின் பலம் ஒருவர் மேல் உள்ள நம்பிக்கை' இந்த பாடத்தை எப்பொழுதும் உறுதியாக ஆக்குங்கள், பின்பு இடையில் உள்ள சூழலை சுலபமாகக் கடந்து சென்று விடுவீர்கள் மற்றும் இலக்கை எப்பொழுதும் அருகில் அனுபவம் செய்வீர்கள்.

இது தான் முயற்சி செய்பவர்களின் ரிசல்ட்டாக இருந்தது. பெரும்பான்மையோர் இடையில் வரும் சூழலில் குழம்பிக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் இந்த அனைத்து விஷயங்களும் தன்னுடைய லட்சியத்தில் முன்னேறுவதற்கான நல்ல சகுணம் என்று புரிந்து கொள்ளுங்கள். எப்படி வினாஷத்தை நல்ல சகுணம் மற்றும் நன்மை பயக்கக்கூடியது என்று கூறுகிறீர்கள். அதே போல் இந்த சோதனைகளும் பரிபக்குவம் ஆகுவதற்கான ஆதாரம் ஆகும். மார்க்கத்தைக் கடந்து முன்னேறிக் கொண்டிருக்கிறோம் - இது அடையாளங்கள் ஆகும். இந்த அனைத்து விஷயங்களையும் பார்த்து பயப்படாதீர்கள். இப்பொழுது லட்சியத்தை சென்றடைந்தே விட்டோம் என்ற இந்த ஒரு எண்ணத்தை மட்டும் வையுங்கள். புரிந்ததா, எப்படி மின்சாரம் இடையிடையே தடைபடுகிறது என்றால் பிடிப்பதில்லை ஒரே சீரான நிலை இருந்தால் பிடிக்கும். அதே போல் தந்தைக்கும் குழந்தைகளின் ஒரே சீரான நிலை விருப்பமாக இருக்கிறது. இதுவோ

இயற்கையின் விளையாட்டாகும் ஆனால் நீங்கள் அந்த மாதிரி விளையாட்டை விளையாடாதீர்கள். எப்பொழுதும் ஆடாமல் அசையாமல் இருக்க வேண்டும்.

அந்த மாதிரி மாஸ்டர் ஞானம் நிறைந்த எப்பொழுதும் வெற்றி நிறைந்த, எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய மாயாவின் அனைத்து கவர்ச்சிகளிலிருந்து விலகியிருக்கக்கூடிய, லட்சியத்தின் அருகில் சென்றடைந்திருக்கும் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**சேவாதாரி குரூப்:** எவ்வளவு எதிர்காலத்திற்கு சேமித்திருக்கிறீர்கள்? சேவையின் பலனோ (வெண்ணையோ) கிடைக்கவே கிடைக்கிறது. அதாவது என்ன செய்கிறீர்களோ அதன் பல மடங்கைவிட அதிகமாக சேமிப்பாகிறது. எப்படி ஒரு விதை போட்டீர்கள் என்றால் எத்தனை பழங்கள் கிடைக்கின்றன, ஒன்றே ஒன்று மட்டும் வருவதில்லை. விதை ஒன்றைப் போடுகிறீர்கள், பழம் ஒவ்வொரு பருவத்திலும் கிடைத்துக் கொண்டே இருக்கிறது. இதுவும் சேவையின் வெண்ணையாக பலன் பலமடங்காக சேமிப்பாகிவிடுகிறது. மேலும் ஒவ்வொரு ஜென்மத்தில் கிடைத்துக் கொண்டே இருக்கிறது. எண்ணம், சொல், செயல் மூன்று விதத்திலும் ஒவ்வொருவரும் சேவை செய்தீர்களா? வாய்மொழி மற்றும் காரியத்தின் கூடவே மனதின் நல்எண்ணங்கள் அந்த உயர்ந்த உள்உணர்வு மூலமாகவும் மிகுந்த சேவை செய்ய முடியும். ஒருவேளை மூன்று சேவைகளும் சேர்ந்தே இல்லை என்றால் பலன் அந்த அளவு கிடைக்காது. தற்சமயத்திற்கு ஏற்றாற்போல் மூன்று சேவைகளும் சேர்ந்தே இருக்க வேண்டும். தனித்தனியாக அல்ல. எப்பொழுது மனநிலை சக்திசாலியாக இருக்கிறதோ அப்பொழுது தான் வார்த்தையிலும் சக்தி வருகிறது. இல்லையென்றால் சொல்பவர் பண்டிதனுக்குச் சமமாக ஆகிவிடுகிறார். பண்டிதர்கள் கதையை எவ்வளவு நன்றாக கூறுகிறார்கள். பண்டிதன் என்று ஏன் கூறுகிறோம்? ஏனென்றால் கிளிக்குச் சமமாக படித்ததை அப்படியே மீண்டும் சொல்கிறார்கள். ஞானி என்றால் புரிந்து கொண்டவர். புரிந்து சேவை செய்வதினால் வெற்றி கிடைக்கிறது. ஞானம் நிறைந்த குழந்தைகள் மூன்று விதமான சேவையை சேர்த்தே செய்வார்கள். படங்களின்

உணர்வில் இல்லாமல் தந்தையின் உணர்வில் இருந்து சேவை செய்தீர்கள் என்றால் மூன்று சேவைகளும் சேர்ந்தே நடந்து விடும்.

செய்ய வேண்டிய வேலை என்று புரிந்து ஒருவேளை சேவை செய்தீர்கள் என்றால் ஆத்மாக்களுக்கு ஆத்மீக நினைவு வராது. அவர்களும் கேட்பது ஒரு வேலை என்று புரிந்து சென்று விடுவார்கள். ஒருவேளை இரக்க மனமுடையவராகி நன்மை பயக்கும் பாவனை வைத்து சேவை செய்தீர்கள் என்றால் ஆத்மாக்கள் விழித்தெழுவார்கள். அவர்களுக்கும் நாமும் ஏதாவது செய்ய வேண்டும் என்று தன் மேல் இரக்கம் வரும். தந்தையோ குழந்தைகளுக்கு எப்பொழுதும் முன்னேறிச் செல்வதற்கான சமிக்ஞை கொடுக்கிறார். மற்றபடி எவ்வளவு செய்தீர்களோ அது நாடகப்படி மிக நன்றாக உழைத்திருக்கிறீர்கள், நேரம் கொடுத்தீர்கள் அதனால் நிகழ்காலமும், எதிர்காலமும் சேமிப்பானது.

**பார்ட்டிகளுடன்: 1) தந்தையை உள்ளத்தின் உண்மையான துணைவனாக வைத்தீர்கள் என்றால் குஷிகளின் சுரங்கம் என்னுடன் இருக்கிறது என்று எப்பொழுதும் அனுபவம் செய்வீர்கள்!** இந்த மந்திரத்தை எப்பொழுதும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். நிரந்தரமாக இந்த சேர்ந்திருப்பதின் ஆன்மீக பாதிப்பு இருந்து கொண்டே இருக்கும். ஏனென்றால் மிகப் பெரிய பாதிப்பைச் செய்வது சர்வ சக்திவானுடையது. சத்சங்கத்தின் மகிமை இருக்கிறது என்றால் எப்பொழுதும் புத்தி மூலமாக சத்திய தந்தை, சத்திய ஆசிரியர், சத்தியமான குருவின் சங்கத்தில் இருக்க வேண்டும். இது தான் சத்சங்கம் ஆகும். இந்த சத்சங்கத்தில் இருப்பதினால் எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்து மற்றும் லேசாக இருப்பீர்கள். எந்தவிதமான சுமையின் அனுபவம் ஆகாது. நிச்சயபுத்தி உடையவராகவோ இருக்கிறீர்கள். இதுவோ சரி தான் ஆனால் நிச்சயத்தின் பலனாக தந்தையை எப்பொழுதும் துணைவனாக்கி வைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நேரமும் தந்தையின் துணை இருக்கட்டும். அப்படி எப்பொழுதும் துணையின் அனுபவத்தினால் நிரம்பியவரின் அனுபவம் செய்வீர்கள். நிரம்பியவர் என்று அந்த மாதிரி அனுபவம் ஆகும். எப்பொழுது தந்தையை தன்னுடையவராக ஆக்கினீர்கள் என்றால் தந்தையினுடையதாக என்னென்ன இருக்கிறதோ அவை அனைத்தும் உங்களுடையதாக ஆகிவிடும்.

**2) எப்பொழுதும் ஈஸ்வரிய போதையில் மற்றும் எதிர்காலத்து தேவதை பதவியின் போதையில் இருக்கிறீர்களா?**

சங்கமயுகத்தின் பிராப்தியாக என்ன இருக்கிறது? தந்தையை அடைய வேண்டும். மேலும் எதிர்காலத்தின் பிராப்தியாக தேவ பதவியை அடைய வேண்டும். அப்படி இரண்டு பிராப்தியின் நினைவு இருக்கிறதா? யாருக்கு தந்தை கிடைத்து விட்டாரோ அவருக்கு போதை எவ்வளவு இருக்கும். தந்தைக்கு மேல் வேறு ஒன்றும் இல்லை. எப்பொழுதும் நினைவில் இருப்பதினால் என்னென்ன பிராப்தியாகி இருக்கிறதோ அதன் அனுபவம் செய்ய முடியும். நினைவு இல்லை என்றால் பிராப்தியின் அனுபவம் இல்லை. நான் மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற இந்த பிராப்தியின் போதையில் எப்பொழுதும் இருங்கள். சக்திகள் தந்தையின் செல்வம் என்றால் குழந்தைகளுக்கு அதன் மேல் அதிகாரம் இருக்கிறது. அதிகாரி குழந்தைகளின் மனதிலிருந்து என்ன அடைய வேண்டுமோ அதை அடைந்தாகிவிட்டது என்ற இந்த பாடல் தான் ஒலித்துக் கொண்டிருக்கும். வழியில் சென்று கொண்டிருக்கும்போதே ஏதாவது விதமான தடை வருகிறது என்றால் தடையற்றவராக இருப்பதற்கான முறை தெரியுமா? தடையை அகற்றுவது சுலபமா அல்லது கடினமா? எப்பொழுது தந்தையின் கையை விடுகிறீர்களோ அப்பொழுது கடினம் அனுபவம் ஆகிறது. ஒருவேளை தந்தை எப்பொழுதும் உடன் இருக்கிறார் என்றால் ஒரு கடினமும் இல்லை. தந்தையின் துணையை விடுவதினால் பலஹீனம் ஆகிவிடுகிறீர்கள். பலஹீனமானவருக்கு சிறு விஷயம் கூட பெரியதாக அனுபவம் ஆகும். வீரம் நிறைந்தவருக்கு பெரிய விஷயமும் சிறியதாகத் தோன்றும். எப்பொழுது தந்தை துணை கொடுப்பதற்கு தயாராக இருக்கிறார் என்றால் எடுப்பவர்கள் எடுக்கவில்லை என்றால் தந்தை என்ன செய்ய முடியும். விலகிச் செல்லாமல் இருந்தீர்கள் என்றால் எப்பொழுதும் சுலபமாகத் தோன்றும்.

**3) என்றால் தந்தையின் துணையின் நினைவில் இருப்பவர்கள்!**

சென்ற கல்பத்திலும் கூட பாண்டவர்களின் நினைவின் விசேஷமாக என்ன வர்ணிக்கப்பட்டிருக்கிறது. தந்தை நம்முடன் இருக்கிறார் என்ற போதை பாண்டவர்களுக்கு இருந்தது. தந்தையின் துணையின் போதை இருந்த காரணத்தினால் சவால் விடுபவர்களாக ஆனார்கள். நாங்கள் வெற்றி அடைபவர்களாக ஆவோம் என்று சவால் விட்டார்கள் இல்லையா. சவால் விடுவதற்கான ஆதாரம் தந்தையின் துணையாக இருந்தது.

அப்படி பாண்டவர்களின் துணையின் விசேஷமாக இது வர்ணனை செய்யப்பட்டிருக்கிறது என்றால் நடைமுறையில் எவ்வளவு போதை இருக்கும். மாயாவின் மிகப் பெரிய வீரர்களுக்கும் பாண்டவர்களின் எதிரில் ரிசல்ட்டாக என்ன ஆனது? வினாஷத்தை பிராப்தி செய்தார்கள். அந்த மாதிரி மாயாவின் தடைகளைக் கடந்து செல்பவர்கள் என்று அனுபவம் செய்கிறீர்களா அல்லது மாயாவைக் கண்டு பயப்படுகிறீர்களா? எந்த விதமான மாயாவின் தடை வந்தாலும், திரிகாலதரிசியாகி அதாவது மாயா ஏன் வந்தது, மேலும் அதை விரட்டுவதற்கான வழி என்ன என்று இவை அனைத்தையும் தெரிந்தவர்களாக இருங்கள். மாயா வந்து விட்டது, என்ன செய்வது அந்த மாதிரி பயப்படுபவர்களாக இருக்காதீர்கள். பாண்டவர்களின் படங்களையும், பசுபாலனை செய்பவர்களின் ரூபத்தில் காண்பித்திருக்கிறார்கள். பசுபாலனை செய்பவர் உடன் இருந்தார். சைத்தன்யமாக தன்னுடைய ஜட நினைவுச்சின்ன ரூபத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். இது அதிசயமான விஷயம் இல்லையா?

**4) சக்திகளின் அல்லது கோபிகைகளின் நினைவுச்சின்னமானது -குஷியில் நடனமாடுவது!** காலில் சலங்கை கட்டி நடனம் ஆடுவதாகக் காண்பிக்கிறார்கள். யார் எப்பொழுதும் குஷியில் இருக்கிறாரோ அவருக்காக குஷியில் ஆடிக்கொண்டிருக்கிறார் என்று கூறுவார்கள். ஆடுகிறார்கள் என்றால் கால்களை உயர்த்தி வைப்பார்கள். அதே போல் யார் குஷியில் ஆடுபவராக இருப்பாரோ அவருடைய புத்தி மேலே இருக்கும். தேகத்தின் உலகத்தில் மற்றும் தேகதாரிகள் மேல் இருக்காது ஆனால் ஆத்மாக்களின் உலகத்தில் ஆத்மீக ஸ்திதியில் இருப்பார்கள். அந்த மாதிரி குஷியில் ஆடிக்கொண்டே இருங்கள். யாருக்கு எப்பொழுதும் குஷி இருக்கும்? யார் தன்னை கோபிகா என்று நினைக்கிறாரோ அவருக்குத் தான். கோபிகா என்றால் யாருடைய புத்தியின் நினைவு எப்பொழுதும் கோபி வல்லபருடன் இருக்கிறதோ அவர் தான். தன்னை குடும்பத்து மாதா என்று நினைக்காமல் கோபிகா என்று புரிந்து கொள்ளுங்கள். குடும்பஸ்தன் என்ற வார்த்தையே நன்றாக இல்லை. கோபிகாக்களின் பெயர் சொன்னவுடனேயே அனைவரும் குஷியாகி விடுகிறார்கள். பெயர் சொன்னவுடனேயே மற்றவர்கள் குஷியாகி விடுகிறார்கள் என்றால் சுயம் கோபிகைகள் எவ்வளவு குஷியாக இருப்பார்கள். நல்லது.

**வரதானம்: இடைவிடாத நினைவு மூலமாக அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு காணக்கூடிய பறக்கும் பறவை ஆகுக!**

எப்பொழுது இவர் என்னுடைய பாபா என்று அனுபவம் ஆகிவிடுகிறது என்றால் எது என்னுடையதாக இருக்கிறதோ அது இயல்பாகவே நினைவில் இருக்கும். நினைவு செய்யப்படுவது இல்லை. என்னுடையது என்றால் அதிகாரம் கிடைத்து விடுவது. என்னுடைய பாபா மற்றும் நான் பாபாவுடையவன் என்ற இதைத் தான் சகஜயோகா என்று கூறுவது. அந்த மாதிரி சகஜயோகியாகி ஒரு தந்தையின் நினைவில் மூழ்கியிருந்து கொண்டே முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். இந்த இடைவிடாத நினைவு தான் அனைத்து பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டு பறக்கும் பறவை ஆக்கி பறக்கும் கலையில் எடுத்துச் செல்லும்.

**சுலோகன்: சிந்திக்கும் சக்தியின் அனுபவி ஆனீர்கள் என்றால் ஞானச் செல்வம் அதிகரித்துக் கொண்டே இருக்கும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 19.05.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆத்ம ஞானம் மற்றும் பரமாத்ம ஞானத்தில் உள்ள வேற்றுமை!

தன்னை எப்பொழுதும் சுயதரிசன சக்கரதாரி என்று அனுபவம் செய்கிறீர்களா? நினைக்க மட்டும் செய்கிறீர்களா அல்லது ஒவ்வொரு நேரமும் அனுபவம் ஆகிறதா? ஒன்று புரிந்து கொள்வது, இன்னொன்று சொரூபத்தில் கொண்டு வருவது அதாவது அனுபவம் செய்வது. இந்த உயர்ந்த வாழ்க்கையின் மற்றும் உயர்ந்த ஞானத்தின் உயர்ந்த விஷயம் அனுபவம் செய்வது. ஒவ்வொரு விஷயத்தையும் எதுவரை அனுபவத்தில் கொண்டு வரவில்லை என்றால், பிறகு ஆத்ம ஞானம் மற்றும் பரமாத்ம ஞானத்தில் எந்த வேறுபாடும் இருப்பதில்லை. ஆத்மாக்கள், ஆத்ம ஞானத்தைக் கூறும் மற்றும் புரிய வைப்பவர்களேயன்றி அனுபவம் செய்விப்பவர்கள் அல்ல. பரமாத்மாவின் ஞானம் ஒவ்வொரு விஷயத்தையும் அனுபவம் செய்வித்துக் கொண்டே முன்னேறும் கலையின் பக்கம் அழைத்துச் செல்கிறது. எனவே ஞானத்தின் ஒவ்வொரு விஷயத்தை அனுபவத்தில் கொண்டு வந்திருக்கிறேனா என்று உங்களை நீங்களே கேளுங்கள். நீங்கள் புரிந்து கொள்பவர்களா, கேட்பவர்களா அல்லது அனுபவிகளாக இருக்கிறீர்களா? வாழ்க்கையின் அனேக விதமான அனுபவம் ஆத்மாவை ஞானம் நிறைந்ததாக மற்றும் சக்தி நிறைந்ததாக ஆக்குகிறதா? எந்தவொரு ஞானத்தின் விஷயத்திலும் சக்தி நிறைந்தவராக இல்லை என்றால், அவசியம் அந்த அனைத்து ஞான விஷயங்களின் அனுபவியாக ஆகவில்லை. புரிந்து கொள்ளும், புரிய வைக்கும் மற்றும் வர்ணனை செய்பவர்களாக ஆகியிருக்கிறீர்கள், ஆனால் சிந்தனை செய்பவராக ஆகவில்லை. எப்படி மற்றவர்களுக்கு 7 நாள் பாடத்தில் 7 விஷயங்களைக் கூறுகிறீர்கள். அந்த 7 விஷயங்களையே எதிரில் வையுங்கள் மற்றும் அனைத்து விஷயங்களிலும் அனுபவியாக ஆகியிருக்கிறேனா அல்லது ஏதாவது விஷயத்தில் புரிந்து கொள்ளும் அளவில் மட்டும், வேறு ஏதாவது பாய்ன்ட்டில் கேட்கும் அளவில் மட்டும் ஆகியிருக்கிறேனா என்று

சோதனை செய்யுங்கள். அனைத்து விஷயங்களின் அனுபவியாக ஆகியிருப்பவர் மிகக்குறைவு என்று பாப்தாதா ரிசல்ட்டைப் பார்த்து தெரிந்து கொள்கிறார். ஏனென்றால் அனுபவி என்றால் எப்பொழுதும் எந்த விதமான ஏமாற்றம், துக்கம், குழப்பத்திலிருந்து விலகியிருப்பார். அனுபவம் தான் அஸ்திவாரம் ஆகும். அனுபவம் என்ற அஸ்திவாரம் பலஹீனமாக இருக்கிறது என்றால், ஏதேனும் தன்னுடைய சம்ஸ்காரம், மற்றவர்களின் சம்ஸ்காரம் அல்லது மாயாவின் சிறிய - பெரிய தடைகளினால் பாதிக்கப்பட்டு விடுகிறார்கள் என்றால் அனுபவத்தின் அஸ்திவாரம் உறுதியாக இல்லை என்று நிரூபணம் ஆகிறது. அனுபவியானவர் எப்பொழுதும் தன்னை நிரம்பியவர் என்று புரிந்து நிர்ப்பந்தத்தை நிர்ப்பந்தம் என்று புரிந்து கொள்ளாமல் வாழ்க்கையை உறுதி செய்வதற்கான ஆதாரம் என்று புரிந்து கொள்வார்கள். நிர்பந்தத்தின் நிலை பிராப்தியின்மையின் அடையாளமாகும். அனுபவியானவர் அனைத்து பிராப்திகளின் சொரூபமானவர்.

இந்த விதமாக துக்கத்தின் அலை மற்றும் ஏமாற்றம் அடைகிறார்கள் என்றால் அதற்கும் காரணம் அவர் மாயாவின் அனேக ரூபங்களின் அனுபவி ஆகவில்லை. அனுபவியாக யார் இருக்கிறாரோ அவர் மாயாவை ஒன்றும் தெரியாத குழந்தை மாதிரி நினைப்பார். எப்படி ஒன்றும் தெரியாத குழந்தைகள் ஏதாவது காரியம் செய்கிறது என்றால், இவர் ஒன்றும் அறியாதவர், குழந்தைகளின் காரியமே அந்த மாதிரி தான் இருக்கும் என்று புரிந்து கொள்ளப்படுகிறது. இதே விதமாக அனுபவி அதாவது முதிர்ந்த நிலை உடையவரின் எதிரில் சிறு குழந்தைகள் விளையாடுகிறார்கள் என்றால், மாயாவின் அனேக விதமான வீலையை அனுபவியானவர் குழந்தைகளின் விளையாட்டு என்று அனுபவம் செய்வார். மற்றவர்கள் மாயாவின் சிறிய தடையை மலைக்குச் சமமாக நினைப்பார்கள், மேலும் மாயா மிகவும் பலம் பொருந்தியது, மாயாவை வெல்வது மிகக் கடினம் என்று தான் நினைப்பார்கள். இதற்கான காரணம் என்ன? அனுபவத்தின் குறைவு அந்த மாதிரியான ஆத்மாக்கள் பாப்தாதாவின் வார்த்தைகளை மட்டும் எடுத்துக் கொள்வார்கள், உணர்வுகளைப் புரிந்து கொள்ள மாட்டார்கள். அனுபவத்தின் ஆதாரம் இருக்காது ஆனால் பாப்தாதாவும் கூறுகிறார் மாயாவை வெற்றி அடைவது சித்தி வீட்டிற்குச் செல்லும் விஷயம் மாதிரி அல்ல. மேலும் மாயாவும் சர்வ சக்திவான் ஆகும். இப்பொழுது யாரும் சம்பூர்ணம்

ஆகவில்லை. கடைசியில் சம்பூர்ணம் ஆவீர்கள் என்று இந்த வார்த்தைகளை ஆதாரமாக ஆக்குவார்கள். அந்த மாதிரியான வார்த்தைகளை தன்னுடைய ஆதாரமாக்கி நடந்து கொள்வதினால் ஆதாரம் பலஹீனமாக இருக்கும் காரணத்தினால் அடிக்கடி மேலே கீழே சென்று கொண்டிருப்பார்கள். எனவே வார்த்தைகளை ஆதாரமாக ஆக்காதீர்கள் ஆனால், தந்தையின் உள்நோக்கத்தை/உணர்வுகளைப் புரிந்து கொள்ளுங்கள். அனுபவத்தை தன்னுடைய ஆதாரமாக ஆக்குங்கள். மேலே கீழே செல்வதற்கான காரணமே அனுபவத்தின் குறைவு ஆகும். தன்னை மாஸ்டர் சர்வ சக்திவான், வெற்றி இரத்தினம், சுயதரிசன சக்கரதாரி, சிவசக்தி பாண்டவ சேனை, சகஜ இராஜயோகி, மகாதானி, வரதானி, விஷ்வ கல்யாணகாரி என்று கூறிக் கொள்கிறார்கள் ஆனால் எப்பொழுது தன்னுடைய நன்மைக்கான விஷயம் ஏதாவது வருகிறது, மாயாவை வெல்வதற்கான ஏதாவது விஷயம் வருகிறது என்றால் என்ன செய்கிறார்கள் மற்றும் என்ன கூறுகிறார்கள்? என்ன செய்கிறார்கள் என்று தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? மிகவும் மகிழ்ச்சி அளிக்கும் விளையாட்டை விளையாடுகிறார்கள். ஞானம் நிறைந்த நிலையிலிருந்து முற்றிலும் ஒன்றும் தெரியாதவர் ஆகிவிடுகிறார்கள். எப்படி மாயா ஒன்றும் தெரியாத குழந்தையாக இருக்கிறது, அதே போல் மாயாவின் வசமாகி ஞானம் நிறைந்த நிலையை மறந்து ஒன்றும் தெரியாத குழந்தைக்குச் சமமாக ஆகிவிடுகிறார்கள். என்ன கூறுகிறார்கள்? 'இந்த மாதிரி நான் நினைக்கவேயில்லை, முதலிலேயே தெரிந்திருந்தால் தியாகம் செய்திருக்க மாட்டேன், பிராமணன் ஆகியிருக்க மாட்டேன், இவ்வளவு எதிர்க்க வேண்டியதிருக்கும் சகித்துக் கொள்ள வேண்டியதிருக்கும், ஒவ்வொரு விஷயத்திலும் தன்னை மாற்ற வேண்டியதிருக்கும், அழிக்க வேண்டியதிருக்கும் மற்றும் இறக்க வேண்டியதிருக்கும் என்ற இது தெரியாமலேயே போயிற்று என்று கூறுவார்கள். திரிகாலதரிசி, ஞானம் நிறைந்தவராக இருந்தும் இதைக் கூறுவது, ஒன்றும் தெரியாத குழந்தைத்தனம் இல்லையா? இவை அனைத்தும் ஏன் நடக்கிறது. ஏனென்றால், எப்பொழுதும் தந்தையின் துணையின் அனுபவம் ஆனால் இல்லை. எப்பொழுதும் தந்தையின் துணையின் அனுபவி அந்த மாதிரியான பலஹீனமான எண்ணத்தை எண்ண முடியாது. தந்தையின் துணையின் போதைக்கான சென்ற கல்பத்தின் நினைவுச்சின்னம் கூட இன்று வரை வர்ணிக்கப்படுகிறது. அது எது? மிகப் பெரிய சேனை எதிரில் இருந்த போதும் பெரிய பெரிய

மகாவீரர்கள் எதிரில் இருந்த போதும் பாண்டவர்களுக்கு எதன் போதை இருந்தது. தந்தையின் துணையின் போதை இருந்தது. மிகப் பெரிய படை என்றால் மாயாவின் அனேக விதவிதமான சொரூபம் கூட தந்தையின் துணையின் பெரிய படை அல்ல, ஆனால் ஒரு விநாடியில் விநாஷம் ஆகிக் கிடந்தார்கள். அந்த மாதிரியான போதை நினைவுச் சின்னத்திலும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. மகாவீரனை மகாவீரன் என்று நினைக்கவில்லை, ஆனால் இறந்த பிணமாக நினைத்தார்கள். இது யாருடைய நினைவுச்சின்னம்? தந்தை உடன் இருக்கக்கூடிய அனுபவி ஆத்மாக்களின் நினைவுச்சின்னம் ஆகும். இந்தக் காரணத்தினால் அனுபவி ஒருபொழுதும் ஏமாற்றம் அடைவதில்லை என்று கூறினோம். அவர்கள் கடினத்தை அனுபவம் செய்வதில்லை. தெரியாததை அனுபவம் செய்வதில்லை. சென்ற கல்பத்தின் நினைவுச் சின்னத்தை நடைமுறையில் அனுபவம் செய்கிறீர்களா அல்லது வர்ணனை மட்டும் செய்கிறீர்களா? குழந்தைகள் யார் தன்னுடைய நன்மையைச் செய்ய முடிவதில்லை, தன்னை பரிவர்த்தனை செய்ய முடிவதில்லை, மேலும் தன்னுடைய பலஹீனத்தை வீரச் செயல் என்று புரிந்து வர்ணனை செய்கிறார்கள் என்றால், அந்த மாதிரி குழந்தைகளின் நிலையை பாப்தாதா எப்பொழுது பார்க்கிறார் என்றால் புரிந்து கொள்பவர்கள், ஆனால் அனுபவி இல்லை என்று தந்தையும் புரிந்து கொள்கிறார். இந்தக் காரணத்தினால் ஞானம் நிறைந்தவர், ஆனால் சக்தி நிறைந்தவர் இல்லை. கேட்பவர், கூறுபவராக இருக்கிறார், ஆனால் புரிந்து கொள்பவர் மற்றும் தந்தைக்குச் சமமாக ஆகுபவராக இல்லை. யார் சமமாக இல்லையோ அவர் எதிர்கொள்ளவும் முடிவதில்லை. சில நேரம் குழப்பம் அடைகிறார்கள். சில நேரம் புன்முறுவலிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். எனவே ஏகாந்தவாசி ஆகுங்கள், உள்நோக்குப் பார்வை உடையவராக ஆகுங்கள். ஒவ்வொரு விஷயத்தின் அனுபவத்தில் தன்னை சம்பன்னம் ஆக்குங்கள். முதல் பாடம் தந்தை மற்றும் குழந்தைகள் என்பதற்கானது. யாருடைய குழந்தை? என்ன பிராப்தி ஆகிறது, இந்த முதல் பாடத்தின் அனுபவியாக ஆனீர்கள் என்றால் சுலபமாகவே மாயாவை வென்றவர் ஆகி விடுவீர்கள். அற்ப நேரத்தின் அனுபவத்தில் இருக்கிறீர்கள். அதிக நேரம் கேட்பதிலும், புரிந்து கொள்வதிலும் இருக்கிறீர்கள் ஆனால் அனுபவி மூர்த்தி அதாவது எப்பொழுதும் அனைத்து அனுபவத்தில் இருப்பது. புரிந்ததா? கடலின் குழந்தையாக ஆகியிருக்கிறீர்கள், ஆனால் கடல் அதாவது நிரம்பியதின் அனுபவம் செய்யவில்லை நல்லது.

எப்பொழுதும் அந்தர்முகி (உள்நோக்குப்பார்வை உடையவர்) என்றால் ஹர்ஷித்முகி (மலர்ந்த முகம் உடையவர்). குழந்தைகளுக்கு, மாயாவின் ஒவ்வொரு தாக்குதலையும் வெண்ணையிலிருக்கும் முடி என்று புரிந்து கடந்து செல்லக்கூடிய, அந்த மாதிரி சகஜயோகி, எப்பொழுதும் தந்தையின் துணையை அனுபவம் செய்யக்கூடிய அனைத்து அனுபவிகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தீதி - தாதியுடன்:** சாட்சியாகி அனைத்து ஆத்மாக்களின் அவரவர்களின் பங்கைப் பார்த்துக் கொண்டே, ஏதாவது ஒரு பங்கைப் பார்த்து அப்படி ஏன் என்ற குழப்பம் ஏற்படுகிறதா? மகாரதி மேலும் குதிரைப்படை இருவருக்குமான முக்கியமான வேற்றுமை என்ன? குதிரைப்படையின் அடையாளமாக என்ன இருக்கும்? கேள்விக்குறி மகாரதிகளின் அடையாளம் - முற்றுப்புள்ளி. எப்படி ஏதாவது சேனை இருக்கிறது என்றால் அதில் இது முதல் நம்பர், இது இரண்டாவது என்று அதில் அடையாளம் இருக்கும். பிறகு அவர்களுக்கு பதக்கம் கிடைக்கும். அதன் மூலம் இது முதல், இது இரண்டாவது என்று தெரியவரும். அப்படி அனாதி நாடகத்தில் ஆன்மீக சேனையின் போர்வீரர்களுக்கு எந்தப் பதக்கமும் கொடுக்கப்படுவதில்லை ஆனால் நாடகப்படி தானாகவே அவர்களுக்கு மனநிலை என்ற பதக்கம் பிராப்தி ஆகியே விடுகிறது. எந்தவொரு பதக்கமும் அணிவிக்கப்படுவதில்லை, ஆனால் இயல்பாகவே அணிந்திருப்பதாக இருக்கும். அப்படி மகாவீரனின் பதக்கமாக முற்றுப்புள்ளி இருக்கும். புள்ளி கூட அல்ல, முற்றுப்புள்ளி. மேலும் இரண்டாம் நம்பர் அதாவது குதிரைப்படையின் அடையாளம் சில நேரம் புள்ளி மற்றும் சில நேரம் கேள்வி. முக்கியமான அடையாளமாக கேள்விக்கானதாக இருக்கும். இதிலிருந்தே இந்த ஆத்மா எந்த நிலையில் இருக்கிறார் என்று புரிந்து கொள்ளலாம். இந்த அடையாளமே பதக்கம் ஆகும். தெளிவாகவே தென்படும் தான் இல்லையா? நாளாக நாளாக ஒவ்வொரு ஆத்மாவும் தன்னுடைய காட்சியை தானே செய்வித்துக் கொண்டிருக்கிறது. விரும்பாவிட்டாலும் கூட ஒவ்வொருவரின் நிலைக்கேற்ப மனநிலை தென்பட்டுக் கொண்டே இருக்கிறது. சூழ்நிலை அந்த மாதிரி வரும், பிரச்சனைகள் அவர்கள் எதிரில் அந்த மாதிரி வரும், அதனால் விரும்பாவிட்டாலும் கூட தன்னை மறைத்துக் கொள்ள முடியாது. ஏனென்றால் இப்பொழுது எப்படி நேரம் அருகில் வந்து

கொண்டிருக்கிறது என்றால் அருகாமையின் நேரத்தின் காரணமாக மாலை அதுவே தன்னுடைய காட்சியைக் காண்பிக்கும். மனநிலை தன்னுடைய வரிசை எண்ணை இயல்பாகவே வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும். அந்த மாதிரி அனுபவம் ஆகிறது தான் இல்லையா? யாராவது முன்னேற வேண்டும் என்றால் அவருக்கு வாய்ப்பே அந்த மாதிரி கிடைத்து விடுகிறது. யாருடைய வரிசை எண் பின்னுக்குரியது என்றால் இயல்பாகவே பிரச்சனை மற்றும் சம்பவங்கள் அந்த மாதிரி எதிரில் வரும். அதன் காரணமாக தானாகவே முன்னேறிச் செல்வதில் நிற்கும் கலை ஆகிவிடும். எவ்வளவு தான் விரும்பினாலும் ஆனால் முன்னேறிச் செல்ல முடியாது. சுவரைத் தாண்டுவதற்கான சக்தி இருக்காது. மேலும் இதற்கான மூல காரணம் தொடக்கத்திலிருந்து ஒவ்வொரு குணம், ஒவ்வொரு சக்தியின், ஒவ்வொரு ஞான பாய்ன்ட்டின் அனுபவியாகி நடந்து கொள்ளவில்லை. வெகு சில ஆத்மாக்களின் அஸ்திவாரமாக அனுபவம் இருக்கும் ஆனால் பெரும்பான்மையோரின் ஆதாரம் குழுவின் ஒற்றுமையைப் பார்ப்பது மற்றும் சாத்வீக வாழ்க்கைப் பார்த்து பிரபாவம் அடைவது. இது ஒரு ஆதாரம் என்று புரிந்து நடப்பது. மேலும் யாரோ ஒருவருடைய துணை காரணமாக ஊக்கம், உற்சாகம் நிறைந்து நடக்க ஆரம்பிப்பது, வேறு யாரோ கூறியதினால் நடப்பது, ஞானம் நன்றாக இருக்கிறது அதன் ஆதாரத்தினால் செல்வது, அந்த மாதிரி நடந்து கொள்பவர்களின் அனுபவத்தின் அஸ்திவாரம் உறுதியாக இல்லாத காரணத்தினால் சென்று போகப் போக மிகவும் குழப்பம் அடைவார்கள் ஆனால் வரிசை எண்ணோ உருவாகத் தான் வேண்டும். அனேகர் இப்பொழுது கூட அந்த மாதிரி இருக்கிறார்கள் யார் யோகா கற்றுக் கொடுக்கிறார்களோ, அவர்களுக்கே யோகாவின் அனுபவம் இல்லை. யோகா என்றால் எதைக் கூறுவது, யோகா மூலம் இந்த பிராப்தி ஆகிறது என்று வர்ணனை செய்கிறார்கள் ஆனால் யோகி வாழ்க்கை என்று எதைக் கூறுவது அதன் அனுபவம் மிக அற்ப காலத்திற்கானதாக இருக்கிறது. "நாடகம்" என்று கூறுகிறார்கள் ஆனால் நாடகத்தின் இரகசியத்தைத் தெரிந்து நாடகத்தின் ஆதாரத்தினால் வாழ்க்கையில் அனுபவம் செய்வது மிகக்குறைவானவர்கள். அந்த மாதிரி தென்படுகிறது தான் இல்லையா? இருந்தாலும் தந்தை கூறுகிறார் - அந்த மாதிரி ஆத்மாக்களுக்கும் துணை கொடுத்து இலட்சியம் வரை அழைத்துச் செல்லத் தான் வேண்டும் இல்லையா? தந்தை தன்னுடைய உறுதிமொழியையோ நிறைவேற்றுவார் இல்லையா? ஆனால்

சங்கமயுகத்தின் பிராப்தியின் உயர்ந்த பாக்கியமாக என்ன இருக்கிறதோ அதில் காலியாக இருந்து விடுகிறார்கள். சகயோகத்தின் லிஃப்ட் மூலம் சென்று கொண்டே இருப்பார்கள் ஆனால் எது முழு கல்பத்தில் கிடைக்காததோ அது இப்பொழுது கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதிலிருந்து வஞ்சிக்கப்பட்டு இருந்து விடுவார்கள். அந்த மாதிரியானவர்களைப் பார்த்து இரக்கமும் வருகிறது. கருணையும் வருகிறது. கடலின் குழந்தையாக ஆன பிறகும் குளத்தில் குளிப்பவர்களாக ஆகிவிடுகிறார்கள். தன்னுடைய சிறு சிறு பலஹீனங்களின் விஷயத்தில் நேரத்தைக் கழிப்பது என்பது குளத்தில் குளிப்பதாக ஆனது தான் இல்லையா? நல்லது.

**பார்ட்டிகளுடன்**: அனைவரும் எப்பொழுதும் துணையின் அனுபவம் செய்கிறீர்களா? ஏனென்றால் தந்தையை தன்னுடைய துணைவனாக ஆக்குவது தான் முக்கியமான விஷயம் ஆகும். ஒருவேளை நிரந்தரமான துணைவனாக ஆக்கினீர்கள் என்றால் மாயா தானாகவே உங்களிடமிருந்து விலகிச் சென்று விடும். ஏனென்றால் இந்த ஆத்மாக்கள் என்னை விட்டு விட்டு இன்னொருவரை துணைவனாக்கி விட்டார் என்று பார்க்கும் பொழுது தானாகவே விலகிச் சென்று விடும். எப்பொழுதும் தந்தையின் துணைவனாக ஆகுங்கள், ஒரு விநாடி கூட விலகியிருக்காதீர்கள். எப்பொழுது துணைவன் துணையைக் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறார் என்றால் பின்பு ஏன் விலகி விடுகிறீர்கள்? லாபமும் இருக்கிறது. லாபமுள்ள விஷயம் எப்பொழுதாவது விடப்படுமா என்ன? துணைவனின் துணை இல்லாத காரணத்தினால் தனியாகச் செல்கிறீர்கள் எனவே தான் கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்கிறது. தந்தையின் துணையின் அர்த்தம் நிச்சயமாக நடந்தே தீரும் என்பதாகும். விலகிவிடுகிறீர்கள் என்றால் சிறிய விஷயம் கூட கடினமாக அனுபவம் ஆகிறது. எனவே உள்நோக்குப் பார்வை உடையவராகி இந்த அனுபவங்களின் உள்ளே செல்லுங்கள், பிறகு சக்திசாலியான அனுபவம் செய்வீர்கள்.

எப்பொழுதும் தன்னை குஷியில் இருப்பதாக அனுபவம் செய்கிறீர்களா? எப்படி ஸ்தூல பொக்கிஷத்தின் அதிபதி எப்பொழுதும் பொக்கிஷத்தின் போதையில் இருப்பார். அதே போல் தன்னை குஷியின் பொக்கிஷத்தால் நிரம்பியவர் என்று புரிந்து நடந்து கொள்கிறீர்களா? எப்பொழுதும்

குஷியின் பொக்கிஷம் உடன் இருக்கிறதா அல்லது சில நேரம் கொள்ளை அடிக்கப்பட்டு விடுகிறதா? ஒருவேளை யாராவது பொக்கிஷத்தை கொள்ளை அடித்துவிட்டார் என்றால் குஷியும் சென்று விடுகிறது. குஷி செல்வது என்றால் பொக்கிஷமும் செல்வது. பொக்கிஷத்தையோ தந்தை கொடுத்திருக்கிறார், ஆனால் அதை பாதுகாப்பவர்கள் வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள். இந்த பொக்கிஷம் தன்னுடையது என்றால் தன்னுடையது என்று எது இருக்கிறதோ அதை எவ்வளவு பாதுகாட்டாக வைக்கப்படும். சிறிய பொருளைக் கூட கவனமாக பாதுகாப்பார்கள். இதுவோ மிகப் பெரிய பொக்கிஷம் ஆகும். ஒருவேளை பாதுகாக்கத் தெரியும் என்றால் எப்பொழுதும் நிரம்பியவராக இருப்பார்கள். அப்படி எப்பொழுதும் குஷியில் இருக்கிறீர்களா? பிராமண வாழ்க்கையே குஷி தான். ஒருவேளை குஷி இல்லை என்றால் ஒன்றுமே இல்லை. எப்பொழுதும் கவனம் வையுங்கள். எந்த வழியால் பொக்கிஷம் கொள்ளையடிக்கப்படுகிறது என்று அந்த வழியைத் தெரிந்து அதை மூடி விடுங்கள். பின்பு எப்பொழுதும் சக்திசாலியான நிலையை அனுபவம் செய்வீர்கள். பொக்கிஷத்தைப் பாதுகாக்கக் கற்றுக்கொள்ளுங்கள், பாதுகாப்பதற்கான ஆதாரம் கவனம். எனவே எப்பொழுதும் குஷியாக இருப்பதற்கான உறுதிமொழியை உங்களுக்கு நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள். மற்றவர்களின் எதிரில் உறுதிமொழி எடுப்பதினால் தற்காலிகமாகத் தான் இருக்கும் ஆனால் உங்களுக்கு நீங்களே, என்ன ஆனாலும் சரி உறுதிமொழியை ஒருபொழுதும் துண்டிக்க மாட்டேன் என்று உங்களுக்கு நீங்களே உறுதிமொழி எடுத்துக் கொள்ளுங்கள். தந்தை கிடைத்தார், ஆஸ்தி கிடைத்தது பின்பு வேறு என்ன பாக்கி இருக்கிறது. இவ்வளவு உயர்ந்த பிராப்தி உள்ளவர் எவ்வளவு போதையில் இருப்பார். எப்பொழுதும் மாயாவை வென்றவர் என்றால் எப்பொழுதும் முகம் மலர்ந்து இருப்பவர். தன்னுடைய மற்றும் மற்றவர்களின் சேவையின் சமநிலை இருக்கிறது என்றால் கடின உழைப்பு குறைவு மற்றும் வெற்றி அதிகமாக இருக்கும். நல்லது.

**வரதானம்**: ஆன்மீக உடற்பயிற்சி மூலமாக எடையை (சுமையை குறைக்கக் கூடிய சமமான மற்றும் அருகில் இருப்பவர் ஆகுக!

ஆன்மீக உடற்பயிற்சி என்றால் இந்த நேரம் நிராகாரி, அடுத்த நேரம் அவ்யக்த பரிஷ்தா, அதற்கடுத்த நேரம் சாகாரி கர்மயோகி. மேலும் இந்த

நேரம் உலக சேவாதாரி. அந்த மாதிரி தினசரி உடற்பயிற்சி செய்தீர்கள் என்றால் வீணானதின் சுமையாக என்ன இருக்கிறதோ அது நீங்கிப் போய்விடும். எப்பொழுது சுமை முடிவடைந்து விடுகிறது என்றால் பிரியதர்ஷனிற்குச் சமமாக டபுள் லைட் ஆகுங்கள். அப்பொழுது தான் ஜோடி பார்க்க நன்றாக இருக்கும். ஒருவேளை பிரிதர்ஷன் மெல்லியதாக இருக்கிறார் மற்றும் பிரியதர்ஷினி பருமனாக இருக்கிறார் என்றால் ஜோடி நன்றாக இருக்காது. ஆன்மீக பிரியதர்ஷன் பிரியதர்ஷினிகளுக்குச் சமம் ஆகுங்கள், அருகில் இருப்பவர் ஆகுங்கள் என்று கூறுகிறார்.

**சுலோகன்: தன்னுடைய வாழ்க்கை என்ற மலர்ச்செண்டு மூலமாக தெய்வீகத் தன்மையின் நறுமணத்தை பரப்புவது தான் குணம் நிறைந்தவர் ஆவது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 21.05.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கமயுக பிராமண வாழ்க்கையின் முக்கியமான குணம் மற்றும் காரியம்!

தன்னுடைய தற்சமயத்து சங்கமயுக பிராமண வாழ்க்கையின் விசேஷத்தைத் தெரிந்திருக்கிறீர்களா? தன்னுடைய விசேஷமாகிய அதாவது முக்கியமான குணம் மற்றும் காரியத்தைத் தெரிந்திருக்கிறீர்களா? அந்த குணம் மற்றும் காரியம் வேறு எந்த யுகத்திலும் இருக்க முடியாது, அது எந்த விசேஷ குணம்? அது ஞானம் நிறைந்த நிலை, மாஸ்டர் ஞானக் கடல் மற்றும் காரியம் உலக சேவாதாரி அதாவது இறைசேவை செய்பவர். இரண்டு விசேஷங்களையும் நிரந்தரமாக நினைவில் வைக்கிறீர்களா? நாங்கள் உலக சேவகர்கள் என்று நீங்கள் கூறவும் செய்கிறீர்கள், உலக சேவகனின் விளக்கம் என்ன? யாரை உலக சேவகன் என்று கூற முடியும்? அவருடைய லட்சணம் என்னவாக இருக்கும்? லட்சியமாக என்ன இருக்கிறது மற்றும் பிராப்தி என்ன ஆகிறது? உலக சேவாதாரி என்றால் சேவை செய்பவரின் லட்சணமாக உலகை தன்னுடைய சேவை மூலமாக சம்பன்னமானதாக மற்றும் சுகமானதாக ஆக்க வேண்டும் என்பது தான் எப்பொழுதுமே இருக்கிறது. எதிலிருந்து சம்பன்னமாக்க வேண்டும். எது இல்லையோ, அதிலிருந்து அதாவது ஈஸ்வரிய சுகம், சாந்தி மற்றும் ஞான செல்வத்தினால், அனைத்து சக்திகளினால், அனைத்து ஆத்மாக்களை யாசிக்கும் நிலையிலிருந்து அதிகாரியாக ஆக்குவது. ஏனென்றால் உலக சேவாதாரி எப்பொழுதும் நன்மை பயக்கும் மற்றும் இரக்கம் நிறைந்த பார்வையினால் அனைவரையும் பார்க்கிறார். எனவே உலகை மாற்றம் செய்தே தான் ஆக வேண்டும் என்ற இதே லட்சியம் இருக்கிறது. இதே ஆர்வம் மற்றும் ஈடுபாடு இரவு பகலாக இருக்கிறது.

சேவாதாரியின் லட்சணமாக என்ன தென்படும்? சேவாதாரி தன்னுடைய ஒவ்வொரு விநாடி, எண்ணம், வார்த்தை மற்றும் காரியம், உறவு, நெருக்கத்தை சேவையிலேயே ஈடுபடுத்துவார். சேவாதாரி சேவை

செய்வதற்காக விசேஷமாக நான்கு மணி நேரம் மற்றும் ஆறு மணிநேரத்திற்காக சேவாதாரி என்று நிச்சயம் செய்வதில்லை. ஒவ்வொரு அடியிலும் களைப்பில்லா சேவையை செய்து கொண்டிருப்பார். அவர் பார்ப்பதில், நடந்து கொள்வதில், உணவு அருந்துவதில் அனைத்திலும் சேவை நிரம்பியிருப்பதாக இருக்கும். முக்கிய சேவையின் சாதனமான நினைவு, உள்உணர்வு, பார்வை மற்றும் செயல் இந்த அனைத்து விதத்தினாலும் சேவையில் முழுமையாக ஈடுபட்டுக் கொண்டிருப்பார். 1) நினைவு மூலமாக அனைத்து ஆத்மாக்களை சக்தி சொரூபமாக ஆக்குவார், 2) உள்உணர்வு மூலமாக வாயுமண்டலத்தைத் தூய்மையாக மற்றும் சக்திசாலியாக ஆக்குவார். 3) பார்வை மூலமாக ஆத்மாக்களுக்கு தன்னுடைய மற்றும் தந்தையின் சாட்சாத்காரத்தை செய்விட்டார். காரியம் மூலமாக உயர்ந்த காரியம் செய்வதற்காக தன்னைத் தானே 4) பொறுப்பாளர் ஆக்கி தைரியம் ஊட்டுவதற்கான தூண்டுதலை செய்விப்பார்.

அந்த மாதிரியான சேவாதாரி, தன்னுடைய இரவு, பகலின் ஓய்வையும் தியாகம் செய்து சேவையிலேயே ஓய்வை அனுபவம் செய்வார். நீங்கள் அந்த மாதிரியான சேவாதாரியா? சேவாதாரியின் தொடர்பில் இருக்கக்கூடிய மற்றும் சம்மந்தத்தில் வரக்கூடிய ஆத்மாக்கள் அவருடைய நெருக்கம் மற்றும் துணை மூலமாக சீதளம் மற்றும் சக்தி, சாந்தியின் நீர் ஊற்றின் கீழே அமர்ந்திருக்கிறேன் என்று அந்த மாதிரி அனுபவம் செய்வார்கள். மேலும் ஏதாவது ஆதரவையும் மற்றும் தனக்கென்று ஒரு இடத்தின் பிராப்தியின் அனுபவம் செய்வார்கள். அந்த மாதிரி சேவாதாரியின் எண்ணம் மற்றும் சுபபாவனை, சுபவிருப்பங்கள் சூரியனின் கிரணங்கள் மாதிரி நாலாபுறங்களிலும் பரவும். எப்படி சேவாதாரிகளின் ஜடச்சிலைகள் அற்ப காலத்திற்காக, அற்ப காலத்தின் விருப்பங்களை நிறைவேற்றுகிறது. அந்த மாதிரி சைத்தன்ய உயர்ந்த சரித்திரம் நிறைந்த சேவாதாரி நிரந்தரமாக அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்றுகிறார். எனவே காமதேனு என்று வர்ணிக்கப்படுகிறார். எப்படி ஏதாவது ஒரு சுரங்கம் நிரம்பியிருக்கிறது என்றால் எவ்வளவு விரும்புகிறீர்களோ அவ்வளவு தன்னை நிரப்பிக்கொள்ள முடியும். எல்லைக்குட்பட்ட சுரங்கத்தில் இன்னும் விசேஷம் இருக்கும். எல்லைக்குட்பட்ட சுரங்கத்திலிருந்து ஒரு பொருள் கிடைக்கிறது, ஆனால் இது விசித்திரமான சுரங்கம் ஆகும். இதிலிருந்து

யாருக்கு என்ன வேண்டுமோ அது கிடைக்க முடியும், அந்த மாதிரியான சேவாதாரி, துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு சுலபமாகவே லட்சியத்தின் அனுபவத்தை செய்விப்பார். எப்பொழுதும் முகம் மலர்ந்து, எப்பொழுதும் திருப்தியாக இருப்பதற்கான வரதானம் சேவாதாரிக்கு இயல்பாகவே பிராப்தி ஆகிறது. ஏனென்றால் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் வேறு வேறான பங்கு இருக்கிறது என்று அவர் தெரிந்திருக்கிறார். கதாபாத்திரத்தின் எந்த விதமான பங்கையும் பார்த்து அதிருப்தியாக இருக்க மாட்டார். அந்த மாதிரியான சேவாதாரியின் மனதிலிருந்து எப்பொழுதும் மகிழ்ச்சியாக மற்றும் திருப்தியாக இருப்பதற்கான பாடலாக எது வெளியாகும்? ஆஹா பாபா ஆஹா என்னுடைய பங்கு. மேலும் ஆஹா இனிமையான நாடகம். எப்பொழுது அவரே இந்த மனதின் பாடலைத் தொடர்ந்து பாடிக்கொண்டிருக்கிறார், அதனால் தான் அனைத்து ஆத்மாக்களும், இப்பொழுதும் மேலும் முழுக் கல்பத்திலும் அவருக்கு ஆஹா! ஆஹா என்று பாராட்டுக்கள் தெரிவிக்கின்றனர்.

அந்த மாதிரியான சேவாதாரி எப்பொழுதும் வெற்றி மாலை அணிந்தவராக இருப்பார். வெற்றி இயல்பான அதிகாரமாகும் என்ற இதே நிச்சயம் மற்றும் போதையில் இருப்பார். எப்பொழுதும் சம்பன்னமானவராக மற்றும் தந்தையின் நெருக்கத்தை அனுபவம் செய்வார். இது தான் சேவாதாரிகளின் பிராப்தி ஆகும். அந்த மாதிரியான லட்சியம், லட்சணம் மற்றும் பிராப்தியை அனுபவம் செய்கிறீர்களா? எப்பொழுது பிராமண வாழ்க்கையின் விசேஷமான காரியமே இது தான் என்றால் தன்னுடைய காரியத்தை யதார்த்த முறையில் செய்து கொண்டிருக்கிறீர்களா? ஒன்று தந்தை மேல் இருக்கும் அன்பின் காரணமாக செய்வது, இன்னொன்று கடமையை நிறைவேற்றுவது, அப்படி இரண்டையும் செய்பவர்களாக இருக்கிறீர்களா அல்லது கூறுபவர்களாக மட்டும் இருக்கிறீர்களா? கூறுபவர்களாக மட்டும் இல்லையே? கூறுபவர்களாக அன்றி செய்பவர்களாக ஆகுங்கள். சேவாதாரிகளின் மகத்துவம் என்ன என்று புரிந்ததா? நல்லது.

அந்த மாதிரி இரவு பகலாக சேவையிலேயே ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு, சம்பன்னம் ஆகி அனைவரையும் சம்பன்னம் ஆக்குபவர்களுக்கு, அனைத்து சொரூபத்தினால் ஆல்ரவுண்ட் சேவை செய்பவர்களுக்கு, எப்பொழுதும் அனைவருக்காகவும் நன்மை மற்றும்

இரக்கம் நிறைந்த பாவனை வைப்பவர்களுக்கு அந்த மாதிரியான விசேஷ சேவாதாரிகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 24.05.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தந்தையின் நேரடிக் குழந்தைகள் தான் இரட்டை பூஜைக்கு உரியவர்களாக ஆகிறார்கள்!

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் பாக்கியத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். முழு உலகத்திற்குள் கோடியில் சிலர் என்று வர்ணிக்கப்பட்ட ஆத்மாக்கள், யார் தந்தையை அடைந்திருக்கிறார்களோ அவர்கள் எவ்வளவு குறைந்த எண்ணிக்கையில் இருக்கிறார்கள். தெரிந்து கொள்ள மட்டும் இல்லை, ஆனால் தெரிவதின் கூடவே யாரை அடைய வேண்டுமோ அவரை அடைந்தாகி விட்டது. அந்த மாதிரி தந்தையின் மிக அன்பிற்குரிய, சகயோகி குழந்தைகளின் பாக்கியத்தை பார்த்துக் கொண்டிருந்தோம். பொதுவாக அனைத்து ஆத்மாக்களும் குழந்தைகள் தான் ஆனால் ஆத்மாக்கள் நீங்கள் நேரடிக் குழந்தைகள் ஆவீர்கள். நீங்கள் சிவவம்சி பிரம்மா குமார் மற்றும் குமாரிகள் ஆவீர்கள். முழு உலகத்திலும் மற்ற ஆத்மாக்கள் தர்ம ஷேத்திரத்தில் மற்றும் இராஜ்ய ஷேத்திரத்தில் மகானாக பெயர் பெற்றவர்களாக இருக்கிறார்கள். தர்மத் தந்தைகளாக ஆகியிருக்கிறார்கள். ஜகத்குரு என்று கூறிக் கொள்பவர்களாக ஆகியிருக்கிறார்கள், ஆனால் தாய் தந்தையின் உறவில் ஆன்மீக ஜென்மம் மற்றும் வளர்ப்பு யாருக்குமே பிராப்தி ஆவதில்லை. ஆன்மீக தாய் தந்தையின் அனுபவத்தை கனவில் கூட செய்வதில்லை. மேலும் உயர்ந்த ஆத்மாக்கள் நீங்கள் மற்றும் பல கோடி மடங்கு அதிபதி ஆத்மாக்கள் நீங்கள் ஒவ்வொரு நாளும் தாய் தந்தை மற்றும் அனைத்து உறவுகளின் அன்பு நினைவைப் பெறுவதற்கு பாத்திரமானவர்களாக ஆகியிருக்கிறீர்கள். ஒவ்வொரு நாளும் அன்பு நினைவு கிடைக்கிறது தான் இல்லையா? அன்பு நினைவு மட்டும் அல்ல, ஆனால் சுயம் சர்வ சக்திவான் தந்தை குழந்தைகள் உங்களுடைய சேவகன் ஆகி ஒவ்வொரு அடியிலும் துணையாக இருக்கிறார். மிக அன்போடு தலையின் கிரீடமாக்கி, கண்களின் மணியாக்கி உடன்

அழைத்துச் செல்கிறார். அந்த மாதிரியான பாக்கியம் ஜகத்குரு மற்றும் தர்ம தந்தைக்குக் கிடையாது. ஏனென்றால் உயர்ந்த ஆத்மாக்கள் நீங்கள் நேரெதிரில் தந்தையின் ஸ்ரீமத்தைப் பெறுபவர்கள். தூண்டுதல் மூலமாகவோ மற்றும் உணர்வுகளை தொடுதல் மூலமாகவோ இன்றி வாய்வழிப் பிறந்தவர்கள் நீங்கள். வாய் மூலமாக நேரடியாகக் கேட்கிறீர்கள். அந்த மாதிரியான பாக்கியம் வேறு எந்த ஆத்மாக்களுக்காவது இருக்கிறதா? பெரும்பான்மையான ஏழை பாரதவாசிகள் மற்றும்கள்ளம் கபடமற்ற ஆத்மாக்களுக்குத் தான் இருக்கிறது. யார் நாம் எப்பொழுதாவது தந்தையை சந்திக்க முடியுமா என்ற நம்பிக்கை இல்லாதவர்களாக இருந்தார்கள். இந்த மாதிரியான உயர்ந்த பாக்கியம் அந்த மாதிரி நம்பிக்கை இழந்தவர்களுக்குத் தான் கிடைத்திருக்கிறது. எப்பொழுது நம்பிக்கை இழந்த யாரோ நம்பிக்கைக்குரியவர் ஆகிறார் மற்றும் அசம்பவம் சம்பம் ஆகிறது என்றால், எவ்வளவு குஷி மற்றும் போதை ஏற்படுகிறது. அந்த மாதிரியான தன்னுடைய பாக்கியம் எப்பொழுதும் நினைவில் இருக்கிறதா?

முழு நாடகத்தினுள் மற்ற தர்மத்தின் ஆத்மாக்களை பாருங்கள் மற்றும் தன்னை பார்த்தீர்கள் என்றால் மிகப் பெரிய வேற்றுமை இருக்கும். முதல் விஷயமாக நீங்கள் நேரடிக் குழந்தைகள் என்று கூறினோம். தாய் தந்தை மற்றும் அனைத்து உறவுகளின் சுகத்தை அனுபவம் செய்பவர்கள். நேரடிக் குழந்தை ஆன காரணத்தினால் உலக இராஜ்யத்தின் ஆஸ்தி சுலபமாக பிராப்தி ஆகிவிடுகிறது. படைப்பின் தொடக்க காலம் சத்யுகம் அதாவது சொர்க்கத்தின் சதோபிரதான, சம்பூர்ண பிராப்தி ஆத்மாக்கள் உங்களுக்குத் தான் பிராப்தி ஆகிறது. மேலும் அனைத்து ஆத்மாக்களும் வருவதே மத்திய காலத்தில் தான். உயர்ந்த ஆத்மாக்கள் உங்களால் அனுபவிக்கப்பட்ட சுகம் மற்றும் இராஜ்யத்தை ரஜோபிரதான ரூபத்தில் பிராப்தி செய்கிறார்கள். எப்படி ஆத்மாக்கள் உங்களுக்கு தர்மம் மற்றும் இராஜ்யம் இரண்டுமே பிராப்தி ஆகிறது ஆனால் மற்ற ஆத்மாக்களுக்கு தர்மம் இருக்கிறது என்றால். இராஜ்யம் இல்லை, இராஜ்யம் இருக்கிறது என்றால் தர்மம் இல்லை. ஏனென்றால் துவாபர்யுகத்திலிருந்து தர்மம் மற்றும் இராஜ்யம் இரண்டின் தண்டு வேறு வேறாக ஆகிவிடுகிறது. அதனுடைய அடையாளமாக முழு நாடகத்தினுள் இரட்டை கிரீடம் அணிந்தவர்கள் நீங்கள் மட்டும் தான். வேறு யாரையாவது பார்த்திருக்கிறீர்களா? இன்னும் விசேஷங்கள் இருக்கின்றன. சம்பூர்ண

# 1977 அவ்யக்த முரளி

பிராப்தி என்றால் உடல், மனம், செல்வம், உறவு மற்றும் இயற்கையின் அனைத்து சுகம் எதில் பிராப்தியில்லாத பொருள் ஒன்றும் இல்லை, துக்கத்தின் பெயர், அடையாளமே இல்லை அந்த மாதிரி உயர்ந்த பிராப்தி வேறு எந்த ஆத்மாவுக்கும் பிராப்தி ஆவதில்லை. நேரடிக் குழந்தை ஆன காரணத்தினால், உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் குழந்தை ஆன காரணத்தினால், பரம்பூஜ்ய தந்தையின் குழந்தை ஆன காரணத்தினால் நீங்கள் ஆத்மாக்களும் இரட்டை ரூபத்தில் பூஜை செய்யப்படுகிறீர்கள். ஒன்று சாலிகிராமத்தின் ரூபத்தில், இன்னொன்று தேவி மற்றும் தேவதையின் ரூபத்தில் நடக்கிறது. அந்த மாதிரி விதிப்பூர்வமான பூஜை. தர்ம தந்தை மற்றும் எந்தவொரு பெயர், புகழ் பெற்ற ஆத்மாவுக்கும் நடப்பதில்லை. என்ன காரணம்? ஏனென்றால் நீங்கள் நேரடி வம்சாவளிகள் ஆவீர்கள். நீங்கள் எவ்வளவு பாக்கியசாலிகள், சுயம் பகவான் உங்களுடைய பாக்கியத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார் என்று புரிந்து கொண்டீர்களா? எனவே எப்பொழுதும் தன்னுடைய அந்த மாதிரியான பாக்கியத்தை நினைவில் வையுங்கள். பலஹீனத்தின் பாடலை பாடாதீர்கள். பக்தர்கள் பலஹீனத்தின் பாடல் பாடுகிறார்கள் மற்றும் குழந்தைகள் நீங்கள் பாக்கியத்தின் பாடலைப் பாடுகிறீர்கள். எனவே நான் பக்தனா அல்லது குழந்தையா என்று உங்களை நீங்களே கேளுங்கள். தன்னுடைய உயர்ந்த பாக்கியத்தைப் புரிந்து கொண்டீர்களா? நல்லது.

அந்த மாதிரி பலகோடி மடங்கு பாக்கியம் நிறைந்தவர்களுக்கு, நேரடியான தந்தையின் முதல் படைப்பிற்கு, அனைத்து சம்மந்தங்களின் சுகத்தின் அதிகாரிகளுக்கு, அனைத்து பிராப்தியின் அதிகாரிகள், இராஜ்ய பாக்கியத்தின் அதிகாரிகளுக்கு இரட்டை பூஜைக்கு அதிகாரி மற்றும் தந்தையின் தலையின் கிரீடமாக இருப்பவர்களுக்கு அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: ஒருவரின் பலம் மற்றும் ஒருவர் மேல் உள்ள நம்பிக்கையின் ஆதாரத்தினால் வெற்றியை அடையக்கூடிய மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகுக!**

யார் உண்மையான ஈடுபாட்டுடன் ஒருவரின் பலம், ஒருவர் மேல் உள்ள நம்பிக்கையின் ஆதாரத்தில் இருக்கிறார்களோ. அவர்களுக்கு எப்பொழுதும் வெற்றி கிடைத்துக் கொண்டே இருக்கிறது. மேலும் கிடைத்துக் கொண்டே இருக்கும். ஏனென்றால் உண்மையான ஈடுபாடு தடைகளை சுலபமாகவே முடித்து விடும். எங்கு அனைத்து சக்திகள் நிறைந்த தந்தையின் துணை இருக்கிறதோ, அவர் மேல் முழுமையான நம்பிக்கை இருக்கிறதோ அங்கு சிறு சிறு விஷயங்கள் அவையாகவே ஒன்றுமே இல்லை என்பது போல் முடிவடைந்து விடும். அசம்பவமும் சம்பவம் ஆகிவிடும். வெண்ணையிலிருந்து முடியை எடுப்பது போல் அனைத்து விஷயங்களும் வெற்றி ஆகிவிடும். அப்படி தன்னை மாஸ்டர் சர்வ சக்திவான் என்று புரிந்து வெற்றி சொரூபமானவராக ஆகிக் கொண்டே இருங்கள்.

**சுலோகன்: கண்களில் தூய்மையின் பொலிவு மற்றும் முகம் மூலம் தூய்மையின் புன்முறுவல் இருக்கட்டும், இது தான் உயர்ந்த பெர்சனாலிட்டி (தனித்தன்மை) ஆகும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 27.05.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அமிர்தவேளையில் உடலால் செய்யும் காரியங்களையும் மற்றும் மனதின் சக்திசாலி நிலையையும் செட்டிங் செய்யுங்கள் (முன்பாக தயார் செய்யுங்கள்)!

இன்று பாப்தாதாவின் எதிரில் எந்த சபை அமர்ந்திருக்கிறது? தெரிந்திருக்கிறீர்களா? இன்று இரண்டு விதமான சபை இருக்கிறது. ஒன்று யார் எதிரில் அமர்ந்திருக்கிறார்களோ அந்த அனைத்து பாரதவாசி குழந்தைகளின் சபை ன்னொன்று வெளிநாட்டு குழந்தைகளின் சபை. வெளிநாட்டு குழந்தைகள் மிகுந்த ஊக்கம், உற்சாகம் மற்றும் ஈடுபாட்டுடன் தந்தையை பிரத்யக்ஷம் செய்ய வேண்டும் என்ற திட்டங்களை உருவாக்கிக்கொண்டே அடிக்கடி தந்தையின் மகிமை பாடிக்கொண்டே, குஷியில் நடனமாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய குஷியின் மனதின் பாடல் பாப்தாதாவிற்கு எதிரில் கேட்கக்கூடியதாக இருக்கிறது. அனைத்து பக்கங்களிலும், விசேஷ ரூபத்தில் தந்தையின் அன்பு மற்றும் சேவையின் சூழ்நிலை ஈர்க்கக்கூடியதாக இருக்கிறது. பாப்தாதாவிற்கும் குழந்தைகளைப் பார்த்து குழந்தைகளின் ஊக்கத்தின் மேல் குஷி ஏற்படுகிறது. கூடவே குழந்தைகள் உங்கள் அனைவரின் சந்திப்பதற்கான ஊக்கத்தைப் பார்த்து மகிழ்ச்சி ஏற்படுகிறது. இன்று அமிர்தவேளை பாப்தாதா நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகளிடம் சுற்றி வருவதற்காகப் புறப்பட்டார். என்ன பார்த்தோம்? மதுபன் வரதான பூமியில் மிகவும் குஷியோடு வந்திருக்கும் குழந்தைகள், இதே சந்திப்பிற்கான இதே குஷியில் மற்ற அனைத்து விஷயங்களையும் மறந்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் வரிசைக்கிரமமான முயற்சியின் அனுசாரம் வரதானத்தை பெறுவதின் ஊக்கம் உற்சாகத்தில் இருந்தார்கள். மற்ற

# 1977 அவ்யக்த முரளி

அனைத்து பக்கங்களிலும் சுற்றி வந்து என்ன பார்த்தோம்? பெரும்பான்மையோரின் உடல் அவரவர்களின் ஸ்தானத்தில் இருந்தபோதிலும், மனதின் லயிப்பு மதுபன் பக்கம் இருந்தது. அவ்யக்த ரூபத்தினால் யோக சொரூபமான குழந்தைகள் மதுபன்னிலேயே தன்னை அனுபவம் செய்து கொண்டிருக்கிறார்கள். நாலாபுறங்களிலும் அனைவரின் சொரூபம் சாதகப் பறவைக்குச் சமமாக தென்பட்டுக் கொண்டிருந்தது. நினைவு யாத்திரையின் சார்ட்டில் என்ன பார்த்தோம்? பொசிஷன் (பதவி) மற்றும் அபொசிஷன் (எதிர்ப்பு) இரண்டின் விளையாட்டைப் பார்த்தோம். சக்திக்கேற்றபடி ஒவ்வொருவரும் தன்னுடைய பொசிஷனில் நிலைத்திருக்க அதிக முயற்சி செய்கிறார்கள் ஆனால் மாயாவின் அபொசிஷன் ஒரே சீரான நிலையில் நிலைத்திருப்பதில் தடை ரூபமாக ஆகிக் கொண்டிருந்தது. இதற்கான காரணம் என்ன? ஒன்று, முழு நாளின் நடவடிக்கைகளில் அடிக்கடி குறைவு இருக்கிறது.

இரண்டாவது, சுத்த எண்ணங்களின் பொக்கிஷம் சேமிப்பாகாத காரணத்தினால் வீணான எண்ணங்களில் அதிக நேரத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். சிந்தனை சக்தி மிகக்குறைவாக இருக்கிறது. மூன்றாவது, எந்த விதமான மிகச்சிறிய சூழ்நிலைகள், அவை ஒன்றுமே இல்லை, அந்த மிகச் சிறிய விஷயங்களை பலஹீனத்தின் காரணமாக மிகப் பெரியது என்று நினைத்து அதை அகற்றுவதில் அதிக நேரத்தை வீணாக்குகிறார்கள். என்ன காரணம்? அவ்வப்பொழுது அனேகவிதமான சூழ்நிலைகளைக் கடந்து செல்வதற்கான யுக்திகளாக என்ன கேட்கிறார்களோ, அது அந்த நேரம் பயப்படும் காரணத்தினால் நினைவில் வருவதில்லை. நான்காவது, தன்னுடைய சுபாவ சம்ஸ்காரமே, இப்படி நடக்கக்கூடாது என்று புரிந்து கொண்ட போதிலும், அடிக்கடி அந்த சுபாவ சம்ஸ்காரத்தின் வசம் ஆகும் காரணத்தினால் ஏமாற்றமும் அடைந்திருக்கிறார்கள், ஆனால் இருந்தும் படைப்பவர் என்று கூறிக்கொண்டே வசமாகி விடுகிறார்கள். தன்னுடைய அனாதி, ஆதி சம்ஸ்காரத்தை அடிக்கடி நினைவில் கொண்டு வருவதில்லை. இந்தக் காரணத்தினால் சம்ஸ்காரம், சுபாவத்தை அகற்றுவதற்கு சக்தி நிறைந்தவராக ஆக முடிவதில்லை.

## 1977 அவ்யக்த முரளி

அந்த மாதிரி நான்கு விதமான யுத்தம் செய்பவர்களைப் பார்த்தோம். யுத்தம் செய்பவர் என்ற வார்த்தையைக் கேட்டு சிரிப்பு வருகிறது. மேலும் எந்த நேரம் நடைமுறை செயலில் வருகிறீர்களோ, அந்த நேரம் சிரிப்பு வருகிறதா? பாப்தாதாவிற்கு அந்த மாதிரி விளையாட்டைப் பார்த்து குழந்தைகள் மேல் இரக்கம் மற்றும் நன்மை பயக்கும் எண்ணம் வருகிறது. இதுவரையிலும் பெரும்பான்மையோர் வீணான எண்ணங்களின் புகார்களை அதிகமாகச் செய்கிறார்கள். வீணான எண்ணத்தின் காரணமாக உடல் மற்றும் மனம் இரண்டும் பலஹீனம் ஆகி விடுகிறது. வீணான எண்ணத்திற்கான காரணம் என்ன? தன்னுடைய தினசரி நடவடிக்கைகளை செட் (முன்பாக தயார் செய்ய) செய்யத் தெரிவதில்லை என்று ஏற்கனவே கூறியிருந்தோம்.

அமிர்தவேளையில் தினசரி காரியங்களை, உடலினுடையது மற்றும் மனதினுடையதை செட் செய்யுங்கள். எப்படி உடலின் காரியங்களை முழு நாளில் இந்தக் காரியம் செய்ய வேண்டும் என்று தயாரிக்கிறீர்கள், அதே போல் தன்னுடைய ஸ்தூல காரியத்தின் கணக்கின்படி மனதின் நிலையையும் செட் செய்யுங்கள். அமிர்தவேளை நினைவு யாத்திரைக்கான நேரம் என்று செட் ஆகியிருக்கிறது என்றால் அந்த மாதிரி நல்ல நேரத்தில், எப்பொழுது நேரத்தின் சகயோகமும் இருக்கிறது, புத்தியின் சதோபிரதான நிலையின் சகயோகமும் எப்படி இருக்கிறது, அந்த மாதிரி நேரத்தில் மனதின் நிலையும் அனைத்தையும் விட சக்தி நிறைந்த நிலையாக தேவையாக இருக்கிறது. சக்தி நிறைந்த நிலை என்றால் தந்தைக்குச் சமமான விதை ரூப நிலை. அப்படி இந்த அமிர்தவேளைக்கான உயர்ந்த நேரம் இருக்கிறது என்றால் அந்த மாதிரி உயர்ந்த நிலையும் இருக்க வேண்டும். சாதாரண நிலையிலேயோ காரியம் செய்து கொண்டும் இருக்க முடியும் ஆனால் இது விசேஷ வரதானத்திற்கான நேரம் ஆகும். இந்த நேரத்தை யதார்த்த முறையில் உபயோகிக்காத காரணத்தினால் முழு நாளின் நினைவின் நிலையில் பாதிப்பு ஏற்படுகிறது. அப்படி முதல் கவனமாக அமிர்தவேளையின் சக்தி நிறைந்த நிலையின் செட்டிங் செய்யுங்கள்.

இரண்டாவது விஷயம், எப்பொழுது ஞானத்தின் ஆழமான விஷயங்களைக் கேட்கிறீர்களோ, அதாவது இடைவிடாது வகுப்பில் படிக்கிறீர்களோ, அந்த நேரம் என்ன ஞான விஷயங்கள்

வெளியாகின்றனவோ? அந்த ஒவ்வொரு விஷயங்களைக் கேட்டுக் கொண்டே அனுபவம் நிறைந்தவராகிக் கேட்பதில்லை. ஞான சொரூபமான ஆத்மா ஒவ்வொரு விஷயத்தின் சொரூபத்தின் அனுபவம் செய்கிறது. கேட்பது என்றால் அந்த சொரூபத்தின் அனுபவியாகிக் கேட்பது ஆனால் அனுபவி ஆவது மிகக் குறைவாக தெரிந்திருக்கிறது. கேட்பது பிடித்திருக்கிறது, ஆழமான விஷயம் என்று அனுபவமும் ஆகிறது. மிக நல்ல பொக்கிஷம் கிடைத்துக் கொண்டிருக்கிறது என்று குஷியும் ஏற்படுகிறது ஆனால் நிரப்புவது அதாவது சொரூபம் ஆவது என்ற இந்தப் பயிற்சி இருக்க வேண்டும். நான் ஆத்மா உடலற்றவன் என்ற இதை அடிக்கடி கேட்கிறீர்கள், ஆனால் உடலற்ற நிலையின் அனுபவியாகிக் கேளுங்கள். எப்படி ஞானத்துளிகளோ அப்படி அனுபவம் இருக்க வேண்டும். பரந்தாமத்தின் விஷயங்களைக் கேட்கிறீர்கள் என்றால் பரந்தாம்நிவாசியாகி பரந்தாமத்தின் விஷயங்களைக் கேளுங்கள், சொர்க்கவாசி தேவதை நிலையின் அனுபவியாகி சொர்க்கத்தின் விஷயங்களைக் கேளுங்கள். இதைத் தான் கேட்பது என்றால் நிரப்புவது என்று கூறுவது. நிரட்புவது என்றால் சொரூபம் ஆவது. ஒருவேளை இந்த முறையில் முரளி கேட்டீர்கள் என்றால் சுத்த எண்ணத்தின் பொக்கிஷம் சேமிப்பாகிவிடும். மேலும் இதே பொக்கிஷத்தின் அனுபவத்தை அடிக்கடி நினைவு செய்தீர்கள் என்றால் முழு நேரமும் புத்தி இதிலேயே பிஸியாக இருக்கும். வீணான எண்ணங்களிலிருந்து சுலபமாக விலகிவிடுவீர்கள். ஒருவேளை அனுபவி ஆகிக் கேட்பதில்லை என்றால் தந்தையின் பொக்கிஷத்தை தன்னுடைய பொக்கிஷமாக ஆக்குவதில்லை எனவே காலியாக இருக்கிறீர்கள் அதாவது வீணான எண்ணங்களுக்கு நீங்களே இடம் கொடுக்கிறீர்கள். மேலும் இன்னும் முழு நாள் நடவடிக்கைகளில் என்னென்ன குறை செய்கிறீர்கள் என்பதை பின்பு வேறொரு நாள் கூறுவோம். முதலில் இந்த இரண்டு விஷயங்களை சரி செய்யுங்கள். அதிகமான டோஸ் கொடுக்கவில்லை. நல்லது.

எப்பொழுதும் சக்திசாலியாக, எப்பொழுதும் ஞானத்தின் பொக்கிஷத்தினால் நிரம்பிய, நினைவு யாத்திரை மூலமாக அனைத்து சக்திகளின் அனுபவி மூர்த்தி, எப்பொழுதும் ஒவ்வொரு சூழ்நிலையை சுயநிலை மூலமாக ஒரு நொடியில் மேலும் சகஜமாக கடந்து செல்லக்கூடிய அந்த மாதிரி தந்தைக்குச் சமமாக குணம் நிறைந்த மற்றும்

சக்தி நிறைந்த ஞானம் நிறைந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தீதி அவர்களுடன்:** இன்று விசேஷமாக வெளிநாட்டினரை தந்தை தன் பக்கம் இழுக்கக்கூடிய காரியம் நடந்து கொண்டிருக்கிறது. இந்த சபையைப் பார்த்துக் கொண்டும் பாப்தாதாவிற்கு அடிக்கடி வெளிநாட்டினர் எதிரில் தென்படுகிறார்கள். விசேஷமாக நினைவின் ஈர்ப்பினால் மிக உறுதியோடு இனிமையிலும் இனிமையான விஷயங்கள் பேசுகிறார்கள். ஒவ்வொருவரும் தன்னுடைய மனதின் ஊக்கம் நிறைந்த எண்ணத்தை தந்தையின் எதிரில் எப்படி நேரெதிரில் பேசப்படுகிறதோ அப்படி வைக்கிறார்கள். வெளிநாட்டில் இருப்பவர்களுக்கு இவ்வளவு குஷி ஏன் இருக்கிறது? இதற்கான காரணம் என்ன? ஏனென்றால் புதுப்பது மலர்த்தோட்டம், நாமோ பிற்காலத்தில் வந்திருப்பவர்கள், எதுவரை ஏதாவது விசேஷ காரியம் செய்யவில்லை என்றால் உயரே தாண்டிச் சென்று எப்படி முன்னேற முடியும் என்று நினைக்கிறார்கள். நான் ஏதாவது விசேஷ காரியம் செய்து காண்பிக்க வேண்டும் இந்த ஆர்வம் அவர்களுக்கு இருக்கிறது. இதுவரை என்ன நடக்கவில்லையோ அதைச் செய்து காண்பிக்க வேண்டும். இந்தக் காரணத்தினால் இந்த போதையில் இரவு பகல், உடல், பணம் எதுவுமே தென்படுவதில்லை. நல்ல லட்சியம் வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஸ்தானமும் நம்முடைய தேசத்தில் நாலாபுறங்களிலும் பெயர் பரவ வேண்டும் என்று நினைக்கிறார்கள். இந்த பந்தயத்தின் காரணமாக ஒருவர் இன்னொருவரை விட முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறார்கள். வெளிநாட்டிலிருந்து பெயர் வெளியாக வேண்டும் என்ற இதுவோ சரி தான், ஆனால் எந்த மூலையிலிருந்து வெளியாகும்? எந்த ஸ்தானம் (இடம்) இதற்கு பொறுப்பாக ஆகும்? எந்த ஸ்தானத்தினுடைய நபர் இதற்கு பொறுப்பாளர் ஆகிறார்? எனவே ஒவ்வொருவரும் தன்னுடைய முழுமையான ஈடுபாட்டில் இருக்கிறார்கள் மேலும் பாப்தாதாவிற்கும் குழந்தைகளின் கடின உழைப்பு மற்றும் உற்சாகம் பிடித்திருக்கிறது. (தாதியிடம்) நீங்கள் இங்கு அமர்ந்திருக்கிறீர்களா அல்லது வெளிநாட்டிலா? வெளிநாட்டு சேவைக்கானத் திட்டம் ஓடுகிறதா அல்லது எப்பொழுது விமானத்தில் அமருவீர்களோ, அப்பொழுது திட்டம் ஓடுமா?

மகாரதிகளிடம் ஒரு கேள்வி கேட்கிறோம். தந்தையிடேமோ அதிகக் கேள்விகள் கேட்கிறீர்கள். மகாரதிகளுக்கான விசேஷம் -ஆன்மீக உரையாடல். மகாரதிகளுடன் இது நன்றாக இருக்கிறது. வெற்றி மாலையின் மணியாக யார் ஆகிறார்களோ அதில் முதல் எண் மற்றும் 108-வது எண், இரண்டிற்கும் வித்தியாசம் என்னவாக இருக்கிறது? அனைவரும் வெற்றி இரத்தினம் என்று தான் கூறிக்கொள்கிறார்கள். பெயரே வெற்றி மாலை தான் ஆனால் முதல் எண் வெற்றி இரத்தினம் மற்றும் கடைசி எண்ணின் வெற்றி இரத்தினம் இவர்களின் ஏதோ முக்கியமான பாடத்தில் வெற்றி அடைவதற்கான ஆதாரம் இருக்கிறது மற்றும் மொத்த மதிப்பெண்களின் ஆதாரத்தில் இருக்கிறது. ஒன்று முக்கியமான பாடத்தில், இரண்டாவது அனைத்து பாடங்களின் மொத்த மதிப்பெண்களின் வித்தியாசம். அப்படியானால் இதனுடைய ஆழமான இரகசியம் என்ன? அதாவது வெற்றிக்கான ஆழமான இரகசியம் என்ன? இதில் மிகுந்த இரகசியம் அடங்கியிருக்கிறது. ஜோடி மணிகளின் விசேஷ பாடம் எது? மற்றும் அஷ்ட இரத்தினங்களின் பாடம் எது? நூறு இரத்தினங்களின் பாடம் எது? அதிலேயும் முன்னால் மற்றும் பின்னால் இருப்பவர்களுக்குள் என்ன வித்தியாசம் இருக்கிறது? இந்த ஆழமான விஷயத்தின் மேல் உங்களுக்குள் சிந்தனை செய்யுங்கள். பின்பு நாம் கூறுவோம். இன்று சுற்றி வந்தோம் இல்லையா. இதுவோ மேலோட்டமான விஷயமாக ஆனது ஆனால் விசேஷமாக மகாரதிகள் செய்யும் முயற்சியில் என்ன நுணுக்கமான வித்தியாசம் இருந்து விடுகிறது. இதன் காரணமாக இரண்டாவது எண்ணிற்கு பிறகு மூன்றாவது வருகிறது. பிறகு நான்காவது வருகிறது? அவரோ மகாரதி, பெயர் பெற்றவர் தான் ஆனால் இரண்டாவது, மூன்றாவது எண்ணும் எதனுடைய ஆதாரத்தில் உருவாகிறது? பூஜையோ எட்டு பேருக்கும் செய்கிறார்கள், ஆனால் பூஜையிலும் வித்தியாசம் இருக்கிறது, வெற்றியிலும் வித்தியாசம் இருக்கிறது. ஒவ்வொருவரின் விசேஷமும் முக்கியமானது, மேலும் பிறகு என்ன குறை இருந்து விடுகிறது அதுவும் முக்கியமானது. அதன் ஆதாரத்தில் பின்பு வரிசை எண் உருவாகிறது. இன்று இருவர்களையுமே பார்த்துக் கொண்டிருந்தோம் என்றால் இந்த விஷயத்தை உங்களுக்குள் சிந்தனை செய்யுங்கள். புரிந்ததா?

**டில்லி பார்ட்டியுடன்:** டில்லியை தர்பாராக ஆக்கியிருக்கிறீர்களா? டில்லி தர்பார் என்று கூறுகிறார்கள் என்றால் டில்லியை உங்களுடைய தர்பாராக

ஆக்கியிருக்கிறீர்களா? இராஜ்யம் தயாராகி விட்டதா? தர்பாரில் யார் அமர்வார்கள்? தர்பாரில் முதன் முதலாக மகாராஜா, மகாராணிகள் தேவையாக இருக்கிறார்கள். எத்தனை மகாராஜா, மகாராணிகள் தயாராகி இருக்கிறீர்கள்? டில்லியைச் சேர்ந்தவர்களுக்கு இராஜ்யத்தின் அஸ்திவாரம் போட வேண்டும். இராஜ்யத்தின் அஸ்திவாரம் எப்படி போடப்படும், அதற்கான ஆதாரம் என்ன? இராஜ்யம் என்றால் அதிகாரத்தை பிராப்தி செய்து விடுவது. முதலில் சுயத்தின் இராஜ்யம், பிறகு உலகின் இராஜ்யம். அப்படியானால் டில்லி வசிக்கக் கூடியவர்கள் சுயத்தின் மேல் அதிகாரியாக ஆகியிருக்கிறார்களா? வெளிநாட்டிலிருந்தோ பெயர் வெளியாகும், ஆனால் பெயர் எங்கே வந்து சேரும்? (டில்லியில்) அப்படியானால் டில்லியைச் சேர்ந்தவர்கள் புதுமையை செய்து காட்ட வேண்டும். ஏனென்றால் டில்லி சேவையின் தொடக்க ஸ்தானம் ஆகும். சேவையின் விதை சொரூபம் டில்லி ஆகும். எப்படி டில்லி ஆதி ஸ்தானமாக இருக்கிறதோ, அப்படி சேவையின் கணக்குப் படியும் மற்றும் இராஜ்யத்தின் ஸ்தானத்திலும், இராஜ்ய ஸ்தானமாகவும் இருக்கிறது என்றால் இரண்டு கணக்குப்படி டில்லியைச் சேர்ந்தவர்கள் விசேஷம் செய்ய வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்? மேளா செய்வீர்களா? மாநாடுகள் செய்வீர்களா? இதுவோ பழைய விஷயமாகி விட்டது ஆனால் புதுமையாக என்ன செய்வீர்கள்? முதல் விஷயமாகவோ டில்லியைச் சேர்ந்தவர்களுக்கு நாங்கள் அனைவரும் டில்லியில் கோட்டையை உறுதியாக்குவோம், வெற்றியோ கண்டிப்பாக கிடைக்கத்தான் வேண்டும், இந்த எண்ணத்தின் விரதம் என்ற ஒரே உறுதியான எண்ணம் குழு ரூபத்தில் இருக்க வேண்டும். எப்படி ஏதாவது காரியத்தில் வெற்றி அடைவதற்காக விரதம் இருக்கிறார்கள் இல்லையா? அதுவோ ஸ்தூலமான விரதம் வைக்கிறார்கள் ஆனால், இது மனதிற்கான விரதம் ஆகும். இந்த விரதத்தினால் பொறுப்பாளர் ஆகி எந்தவொரு காரியமும் செய்வீர்கள்.

செய்யும் காரியம் சாதாரணமாக இருந்தாலும் கூட முடிவு புதுமையானதாக இருக்க வேண்டும். உதாரணமாக மாநாடு செய்கிறீர்கள், வெளித் தோற்றத்தில் சாதாரணமானதாக இருக்கிறது ஆனால், வெற்றி புதுமையானதாக இருக்க வேண்டும். எப்பொழுது ஒரே நேரத்தில் மற்றும் அனைவரின் ஒரே எண்ணம் நடக்கத்தான் வேண்டும் என்று உறுதியாக இருக்கிறதோ அப்போழுது டில்லி என்ன அதிசயம்

செய்கிறது என்று பின்பு பாருங்கள். பலஹீனமான எண்ணம் இருக்க வேண்டாம். நடக்கத் தான் வேண்டும். அப்படியல்ல நடந்தே தான் தீரும். ஆகும், ஆகாது இதுவரையிலுமோ நடக்கவில்லை .. இது பலஹீனமான எண்ணம். ஒரு உறுதியான எண்ணத்தின் பட்டி (அனல்) இருக்கட்டும். பின்பு அனைவரும் டில்லியை பின்பற்றிச் செய்வார்கள். இப்பொழுது அந்த மாதிரி ஏதாவது புதுமையைக் காண்பியுங்கள். சொற்பொழிவு நிகழ்த்தினீர்கள், மக்கள் வந்தார்கள், கேட்டார்கள் மற்றும் சென்றுவிட்டார்கள். சொற்பொழிவு நிகழ்த்துபவர்கள், சொற்பொழிவு செய்தார்கள் மற்றும் சென்று விட்டார்கள் இதுவோ நடந்து கொண்டு தான் இருக்கிறது. இப்பொழுது இரட்டை மேடைகள் ஒன்று சுயத்தின் மற்றும் இன்னொன்று ஸ்தானத்தின் மேடைகளை தயார் செய்யுங்கள். எப்பொழுது இரட்டை மேடை இருக்கிறதோ அப்பொழுது வெற்றி கிடைக்கும். ஸ்தூல மேடையில் கொடி கட்டுவது, சுலோகன் வைப்பது படங்கள் வைப்பது மிக சுலபம் ஆனால் ஒவ்வொருவரும் சைத்தன்ய படங்கள் ஆவீர்கள். ஒவ்வொருவரின் புத்தியில் வெற்றிக் கொடி பறக்க வேண்டும். வெற்றி எங்களுடைய பிறப்புரிமை என்று அனைவருக்கும் சுலோகன் ஒன்றானதாக இருக்க வேண்டும். பிறகு பாருங்கள், டில்லியைச் சேர்ந்தவர்கள் அதிசயம் செய்வார்கள். டில்லியைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு லிஃப்டின் கிஃப்டும் இருக்கிறது, அது எது? டில்லியைச் சேர்ந்தவர்களுக்கு, அதிலேயும் விசேஷமாக சக்தி சேனைகளின் விசேஷ குணம் எது? யக்ஞத்தின் ஸ்தாபனைக் காரியத்தில் டில்லியின் சக்தி சேனையிலிருந்து சுதாமா மாதிரி ஒரு பிடி அவல் வந்தது, அது மிகுந்த மகத்துவத்தின் நேரத்தில் காரியத்தில் உதவுவதாக இருந்தது. அப்படி மகத்துவத்தின் நேரத்தில் ஒருவேளை காரியத்தில் ஒருபிடி அவலையாவது போடுகிறார்கள் என்றால் அது மிகுந்த வளர்ச்சி அடைந்து விடுகிறது. பொதுவாக இந்த அளவு வளர்ச்சி அடைவதில்லை, தேவையான நேரத்தில் சகயோகம் கொடுத்ததினால் டில்லியைச் சேர்ந்தவர்களுக்கு விசேஷமாக கிஃப்டின் லிஃப்ட் கிடைத்திருக்கிறது. தந்தையிடமிருந்து நாடகப்படி டில்லியைச் சேர்ந்தவர்களுக்கு எப்பொழுதும் நிரம்பியவர்களாக இருப்பதற்கான வரதானம் பிராப்தி ஆகியிருக்கிறது. டில்லியின் பூமியில் அஸ்திவாரம் நன்றாக இருக்கிறது. உதாரணமாக ஆகுபவர்களின் விசேஷ சகயோகம் கிடைக்கிறது. டில்லியின் சேவை மற்ற சேவை ஸ்தானங்களுக்கு உதாரணமாக ஆகட்டும். எப்படி தொடக்கத்தில் விசேஷத்தைக்

காண்பித்தீர்கள், அதே போல் இப்பொழுது காண்பியுங்கள். அதற்கான சகயோகம் கிடைத்து விடும். டில்லியைச் சேர்ந்தவர்கள் வெளிநாட்டினரை விட நல்ல திட்டம் உருவாக்க முடியும். ஏனென்றால் இங்கு மிகுந்த சேவைக்கான சாதனம் இருக்கிறது. இங்கு கடின உழைப்பிற்கான அவசியம் இல்லை. கோட்டையை உறுதியாக்க வேண்டும் என்ற விஷயம் மட்டும் தான். நல்லது. எப்பொழுது உ அனைவரின் எண்ணம் என்ற விரல் ஒன்றாகச் சேருமோ அப்பொழுது ஒவ்வொரு காரியத்திலும் வெற்றி இருக்கும். அனைவரின் பார்வை டில்லி மேல் இருக்கிறது. எப்பொழுது ஒவ்வொருவரின் நெருக்கத்தில் வந்து கையோடு கை சேர்ப்பீர்களோ அப்பொழுது முற்றுகை இட முடியும். கையோடு கை சேர்ப்பது என்றால் எண்ணம் ஒருமித்திருப்பது. அனைவரிடமும் ஒரே மாதிரியான ஊக்கம் உற்சாகம் இருக்கட்டும், ஊக்கம் உற்சாகத்தை ஊட்ட வேண்டியதாக இருக்க வேண்டாம். நல்லது.

முயற்சி செய்வதில் ஆழமான விஷயம் என்ன? மேலும் உயர்ந்த முயற்சி எது? ஒவ்வொரு எண்ணம், மூச்சில் இயல்பாகவே தந்தையின் நினைவு இருக்க வேண்டும். இதைத் தான் நினைவு சொரூபம் என்று கூறுவது. எப்படி பக்தியிலும் இடைவிடாது அந்த சப்தம் ஒலிக்க வேண்டும், இடைவிடாது ஜபம் இருக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். அதே மாதிரி முயற்சி செய்வதும் நிரந்தரமாக இருக்க வேண்டும். இதைத் தான் உயர்ந்த முயற்சி என்று கூறுவது. நினைவு செய்ய வேண்டியதாக இல்லாமல் நினைவு வந்து கொண்டே இருக்க வேண்டும். இது தான் மகாரதிகள் செய்யும் முயற்சி ஆகும். மகாரதி என்றால் இயல்பான நினைவு. மகாரதியின் ஒவ்வொரு எண்ணமும் மகானாக இருக்க வேண்டும். எவ்வளவிற்கு எவ்வளவு முன்னேறிச் சென்று கொண்டே இருப்பீர்களோ அந்த அளவு சாதாரணத்தன்மை அழிந்து கொண்டே இருக்கும். மகான்தன்மை வந்து கொண்டே இருக்கும். இது தான் முன்னேறுவதின் அடையாளம். நல்லது.

**வரதானம்: மூன்று காலங்கள், மூன்று உலகங்களின் ஞானத்தை தாரணை செய்து புத்திவான் ஆகக்கூடிய விக்ன விநாஷக் ஆகுக!**

யார் மூன்று காலங்கள் மற்றும் மூன்று உலகங்களின் ஞானம் நிறைந்தவராக இருக்கிறாரோ அவர்களைத் தான் புத்திவான் அதாவது

கணேஷ் என்று கூறுவது. கணேஷ் என்றால் விக்ன விநாஷக். அவர் எந்த விதமான சூழ்நிலையிலும் விக்ன ரூபம் ஆக முடியாது. ஒருவேளை யாராவது விக்ன ரூபம் ஆனாலும் கூட நீங்கள் விக்ன விநாஷக் ஆகிவிடுங்கள், இதன் மூலம் விக்னம் அழிந்து விடும். விக்ன விநாஷக் ஆத்மாக்கள் சூழ்நிலை, சுற்றுபுறத்தையும் மாற்றம் செய்து விடுவார்கள். அதைப் பற்றிய வர்ணனை செய்ய மாட்டார்கள்.

**சுலோகன்: தன்னுடைய நடத்தை மற்றும் முகம் மூலம் சத்தியத்தின் பண்பை அனுபவம் செய்விப்பது தான் உயர்ந்த நிலை ஆகும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 28.05.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பாப்தாதாவின் நிரந்தர இதய சிம்மாசனதாரி, சமமான குழந்தைகளின் லட்சணம்!

பாப்தாதா நெருக்கமான சமமான நட்சத்திரங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். தந்தைக்கு எப்பொழுதும் நினைவு இருக்கிறது. எப்படி குழந்தைகள் நினைவு சொரூபமாக இருக்கிறார்கள். அதே போல் தந்தையும் தன்னுடைய நெருக்கமான குழந்தைகளின் நினைவு சொரூபமாக இருக்கிறார். எப்படி குழந்தைகள் நினைவு சொரூபம் ஆவதினால் சக்தி நிறைந்த சொரூபத்தின் அனுபவம் செய்கிறார்கள். பாப்தாதாவும் சுயம் சக்தி நிறைந்த சொரூபமாக இருந்தபோதிலும், சமமான குழந்தைகளின் சகயோகம் மற்றும் நினைவினால் தன்னுடைய சொரூபத்தில் இன்னும் அதிகப்படியும் சேர்ந்து விடுகிறது. எனவே சாகார பிரம்மாபாபாவின் சகயோகி சொரூபத்தின் அடையாளமாக ஆயிரம் புஜங்கள் காண்பிக்கப்பட்டிருக்கிறது. புஜங்கள் சகயோகத்தின் அடையாளம். அப்படி தந்தையின் கூடவே சேர்த்தே யார் நிரந்தர சகயோகிகளாக இருக்கிறார்களோ அவர்களுடைய அடையாளம் புஜங்களின் ரூபத்தில் இருக்கிறது. அந்த மாதிரி சமமான குழந்தைகளின் ஸ்தானமாக எது இருக்கிறது? எந்த ஸ்தானத்தில் அவர்கள் நிவாசம் செய்கிறார்கள். அவர்கள் எப்பொழுதும் இதய சிம்மாசனத்தில் அல்லது உலக ராஜ சிம்மாசனத்தில் அமருபவர் என்று தன்னை நினைக்கிறார்கள்; அதாவது அந்த நிலையில் நிலைத்திருக்கிறார்கள். எப்படி மிகப் பெரிய மகான் ஆத்மாக்கள் ஒருபொழுதும் தரையில் கால் வைப்பதில்லை. எப்படி இங்கேயும் பார்த்திருக்கிறீர்கள். எப்பொழுது பெரிய மனிதர்கள் வருகிறார்கள் என்றால் முழு வழியிலும், படிகளிலும் கம்பளம் விரித்து விடுகிறார்கள். அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்களின் கால்கள் தரையில் இல்லாமல் கம்பளத்தின் மேல் இருக்கிறது. இந்த அடையாளம் யாருடையது? எங்கிருந்து தொடங்கியது? இங்கேயோ அவர்களின்

கால்கள் கம்பளம் வரை தான் இருக்கிறது ஆனால் யார் தந்தைக்குச் சமமான குழந்தைகளோ அவர்களுடைய புத்தி என்ற கால் ஆசனத்தைத் தவிர கீழே வருவதில்லை. அவர்களை ஆசனதாரிகள் என்று கூறப்படுவது அதாவது எப்பொழுதும் ஆசனத்திலேயே இருக்கிறார்கள், கீழே வருவதில்லை. அந்த மாதிரி யார் எப்பொழுதும் இதயசிம்மாசனதாரி மற்றும் ராஜ்ய சிம்மாசனத்திலேயே இருக்கிறார்களோ அவர்களுக்கு அனைத்து ஆத்மாக்களிடமிருந்து பிரதிபலனாக என்ன கிடைக்கிறது? அன்போ கிடைக்கவோ செய்கிறது ஆனால் இதய சிம்மாசனதாரி குழந்தைகள் என்ன காரியம் செய்கிறார்களோ, என்ன வார்த்தை சொல்கிறார்களோ அது அனைவரின் இதயத்தில் எப்படி தந்தை மூலமாக என்னென்ன வார்த்தைகள் வெளியாகிறதோ அது நிரந்தரமாக நினைவுச்சின்னம் ஆகி விடுகிறது. அனைவரின் இதயத்திலும் நிரம்பி விடுகிறது, அந்த மாதிரி பதிகிறது, நினைவுச் சின்னமாக இருந்து விடுகிறது. பின்பு அரை கல்பத்திற்கு பிறகு நினைவுச்சின்னமாக கீதை ரூபத்தில் எழுதப்படுகிறது. அப்படி தந்தையின் மகாவாக்கியத்தின் நினைவுச்சின்னம் ரூபத்தில் மேலே இருந்து விடுகிறது. இந்த விதமாக யார் இதய சிம்மாசனதாரி குழந்தைகளோ அவர்கள் எந்த ஆத்மாவைப் பற்றி எண்ணுகிறார்களோ அது அவர்களின் இதயத்தில் பதிந்து விடுகிறது. உதாரணமாக நீங்கள் எந்த ஆத்மா மேலும் சுபபாவனை மற்றும் சுபவிருப்பங்கள் வைக்கிறீர்கள் என்றால் அவருக்கு இவர் உண்மையிலேயே என் மேல் சுபபாவனை மற்றும் சுபவிருப்பங்கள் வைக்கிறார் என்று இதயத்தில் சென்று பதியும். ஒன்று மேலோட்டமானது, இரண்டாவது பொறுப்பாளராக ஆகியிருக்கும் ஸ்தானத்தின் காரணமாக மரியாதை கொடுப்பது, மூன்றாவது இதயப்பூர்வமாக ஏற்றுக் கொள்வது.

யார் சமமான குழந்தைகளோ அவருடைய எண்ணமும் அம்பு பாய்வது போல் இதயத்தில் பாயும். எப்படி முந்தைய காலத்தில் அம்பு எய்வார்கள் என்றால் யார் மேல் அம்பு பாய்கிறதோ அவர் தன்னோடு அம்பையும் சேர்த்துக் கொண்டு கீழே வந்து விழுந்து விடுவார். இந்த விதமாக யார் இதய சிம்மாசனதாரியோ:

1) அவர் எந்த ஆத்மாவிற்காக இதயப்பூர்வமான எண்ணம் வைக்கிறாரோ அந்த நபர் அதாவது ஆத்மா அவரே தன்னுடைய இதயத்தின் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்காக எதிரில் வந்து விடுவார்,

2) இன்னொரு விஷயம் யார் அந்த நிலையில் நிலைத்திருந்து வார்த்தைகளைச் சொல்வாரோ அவருடைய இரண்டு வார்த்தைகள் இதயத்திற்கு ஆறுதல் அளிப்பதாக இருக்கும். இரண்டு வார்த்தைகள் தான் கூறினார் ஆனால் இதயத்திற்கு ஆறுதல் கிடைத்து விட்டது, டானிக் கிடைத்து விட்டது என்று உணருவார்,

3) மூன்றாவது விஷயம் எப்பொழுதும் அந்த மாதிரியான ஆத்மாக்களை தூரத்தில் இருந்தபோதும் உள்ளப்பூர்வமாக நினைவு செய்வார்கள். உள்ளப்பூர்வமாக நினைவு செய்வதின் அடையாளமாக என்ன இருக்கும்? எப்படி அருகில் நெருக்கத்தில் இருக்கிறார் தூரமாக இல்லை என்று அந்த மாதிரி அனுபவம் ஆகும். எப்படி தந்தையை உள்ளப்பூர்வமாக நினைவு செய்கிறீர்கள் என்றால் என்ன அனுபவம் ஆகிறது. தூரமாக அனுபவம் ஆகிறதா என்ன? உடனிருப்பதின் அனுபவம் ஆகிறது தான் இல்லையா? இந்த விதமாக யார் இதய சிம்மாசனதாரி குழந்தைகளாக இருக்கிறார்களோ அவர்களுக்கும் நடைமுறையில் பிரதிபலன் தென்படும். இதைத் தான் பிரத்யக்ஷக்ஷ் பலன் என்று கூறுவது.

4) நான்காவது விஷயம் -அவர் இதய சிம்மாசனதாரியாக இருப்பார். யார் சிம்மாசனதாரியாக இருப்பார்? இராஜா இருப்பார் இல்லையா? எப்படி யாராவது பெரியவர் இருக்கிறார் என்றால் அவரை அனைவரும் தன்னுடையவர் என்று நினைக்கிறார்கள். சிறியவராக இருப்பவர்கள் பெரியவர்களை என்னுடையவர் என்று நினைப்பார்கள். அப்படி இதய சிம்மாசனதாரி குழந்தைகளை ஒவ்வொருவரும் தன்னுடைய பெரியவர் என்று நினைப்பார்கள். இது தான் அடையாளம். தன்னுடையவர் என்று உணர்வு ஏற்படும். நம்முடைய மூதாதையர், பெரியவர், பூஜைக்குரியவர் என்று அனுபவம் ஆகும். சொல்வதற்கு இந்த வார்த்தை பக்தி மார்க்கத்தைச் சேர்ந்ததாக இருக்கிறது ஆனால் எப்படி முன்னோராக இருப்பவர்களைப் பற்றி இவர் எங்களுடைய மூதாதையர், பூஜைக்குரியவர் என்ற போதை இருக்கிறதோ, இதே விதமாக ஒவ்வொரு ஆத்மாவும் யார் யார் தொடர்பில் இருக்கிறார்களோ அவர்கள் இவர் தான் எங்களுடைய மூதாதையர் பூஜைக்குரியவர் என்று உணருவார்கள். தன்னுடையவர் என்று உணருவார்கள். அந்த மாதிரி இதயசிம்மாசனதாரியாக எத்தனை பேர் ஆவார்கள்? குறைவானவர்கள் தான் ஆவார்கள். இது தான் அஷ்டரத்தினங்களின் விசேஷம் ஆகும், இது 100-லும் இருப்பதில்லை. அவர்களிலும் தாய் தந்தையர் இருக்கிறார்கள், இருந்தும் அவர்களிலும் வரிசை எண் இருக்கிறது தான் இல்லையா?

அப்படி எப்பொழுது முதல் இடத்திலும் வரிசை எண் இருக்கிறது என்றால் பின்னால் வருபவர்களிலும் வரிசை எண் இருக்கும்.

தாதி வெளிநாட்டு சேவைக்காக சென்று கொண்டிருக்கிறார். இதன் குஷி அனைவருக்கும் இருக்கிறது. ஏன்? செல்வதில் பொதுவாக வேறு உணர்வலைகள் தான் இருக்க வேண்டும், ஆனால் குஷி ஏன் இருக்கிறது? மேலும் முக்கியமாக குஷியின் அலை இருக்கிறது, ஏன்? விசேஷமாக அனைவருக்கும் இந்த விஷயத்தில் குஷி இருக்கிறது. எதை அனைவரும் வெகு காலமாக ஏதாவது கொஞ்சம் நடக்க வேண்டும். கொஞ்சம் பரிவர்த்தனை வர வேண்டும் என்று வெகு காலமாக காத்துக் கொண்டிருந்தார்களோ, அப்படி இந்தப் பங்கை பார்த்து அனைவரின் புத்தியில் ஏதாவது புதுமை, பரிவர்த்தனையின் பாவனை வந்து கொண்டிருக்கிறது. இவர் சென்று கொண்டிருக்கவில்லை ஆனால் எதையோ அருகில் கொண்டு வருகிறார் என்று அனைவருக்கும் அப்படி அனுபவம் ஆகிறது. ஏதோ பரிவர்த்தனை புதுமையின் வரைபடம் எதிரில் வருவதினால் செல்வதின் எண்ணம் அதில் அடங்கி விட்டது. இப்பொழுது ஏதோ பரிவர்த்தனையின் அஸ்திவாரம் உருவாகிக் கொண்டிருக்கிறது என்ற இது தான் அனைவரின் புத்தியில் இருக்கிறது. வெகு காலமாக ஏதாவது புது விஷயம் இப்பொழுது நடக்க வேண்டும் என்று அனைவரின் எண்ணத்தில் இருக்கிறது. வெகு காலமாக அதே காட்சிகள் நடந்து கொண்டிருக்கிறது. கொஞ்சம் புதுமை நடக்க வேண்டும். வெளிநாடு செல்வதற்கான பங்கு என்ன உருவாகியிருக்கிறதோ அதில் அனைவரின் இதயத்தில் இயல்பாகவே இந்த அலை இருக்கிறது. யாருக்கும் எதுவும் சொல்லப்படவில்லை; ஆனால் ஒரு புது ஊக்கம் உற்சாகம் இருக்கிறது. அங்கேயோ (வெளிநாட்டில்) ஊக்கத்தில் இருக்கிறார்கள்; ஆனால் பாரதத்திலும் புதுமை நடக்கும் என்று நினைக்கிறார்கள். எனவே அனைவருக்கும் குஷியின் புது உணர்வலைகள் இருக்கிறது. அருகாமையில் சென்றடைவது தென்பட்டுக் கொண்டிருக்கிறது. நெருக்கத்தின் காட்சிகள் வந்து கொண்டிருக்கிறது என்று நினைக்கிறார்கள், இந்த உணர்வு வருகிறது. எனவே யார் விசேஷ ஆத்மாக்களாக இருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் நேரத்தினுடன் மிகுந்த சம்மந்தம் இருக்கிறது. எப்படி பிரம்மாவின் ஆத்மாவிற்கு காலத்துடன் ஆழமான தொடர்பு இருக்கிறது! பிரம்மாவின் ஜென்மம் மற்றும் சங்கமயுகம் வருவது ஏற்படுகிறது. ஒருவேளை பிரம்மாவிற்கு

பங்கு இல்லை என்றால் சங்கமயுகம் இருக்காது. பிரம்மாவின் சாகார பங்கின் முடிவு மேலும் மற்ற பங்கின் ஆரம்பம் ஆவது, இதுவும் நேரத்தை அருகில் கொண்டு வருவதற்கான ஆதாரம் ஆகும். பிரம்மாவின் பங்கின் முடிவு என்றால் சங்கமயுகத்தின் முடிவு. எனவே எப்படி பிரம்மாவின் ஆத்மாவிற்கு நேரத்துடன் ஆழமான சம்மந்தம் இருக்கிறது, அதே போலவே யார் பின்பற்றி நடக்கும் ஆத்மாக்களாக இருக்கிறார்களோ அவர்களுடைய ஒவ்வொரு காரியத்திற்கும் நேரத்துடன் அந்த அளவு நெருக்கமான சம்மந்தம் இருக்கிறது. நேரத்தைக் காட்டும் கடிகாரம் மாதிரி ஆகி விடுகிறார்கள். எப்படி பாருங்கள் நீங்கள் யார் பொறுப்பாளர்களாக அவர்கள் ஆகியிருக்கிறீர்களோ உங்களுடைய எண்ணங்களை படிக்கிறார்கள். அனைவரும் இவர்களின் நிலை எதுவரை வந்தடைந்திருக்கிறது என்று நேரத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். அப்படி நேரம் என்ன காட்டுகிறது? அனைவரும் சோதிக்சுவோ செய்கிறீர்கள் இல்லையா? எப்படி உங்கள் எதிரில் நேரத்தின் கடிகாரமாக சாகார் பாபா இருந்தார். அவருடைய நிலையைப் பார்த்து நீங்களும் ஏதோ நடக்கப் போகிறது என்று நினைத்தீர்கள். நெருக்கத்தின் அனுபவம் ஆனது பரிஷ்தா ரூபத்தைப் பார்ப்பது போல் உடலற்ற நிலை, அந்த மாதிரி உணர்வு ஏற்பட்டது. அப்படி நேரத்தின் கடிகாரம் ஆகி விட்டது இல்லையா? அப்படி நீங்கள் யார் பொறுப்பாளர்களாக இருக்கிறீர்களோ அவர்களும் நேரத்தின் கடிகாரமாக இருக்கிறீர்கள். அந்தப் பார்வையாலேயே கடிகாரம் என்ன காட்டிக் கொண்டிருக்கிறது என்று உங்களை பார்க்கிறார்கள். இந்த வெளிநாடு செல்வதற்கான பங்கு இதுவும் ஏதோ முக்கியமான மணி அடித்தது என்று அந்த மாதிரி அனுபவம் ஆகும்.

**பரதாதியுடன் (நிர்மல்சாந்தா தாதியுடன்):** நாடகம் உங்களையும் நெருக்கமான பங்கைச் செய்வதற்கு பொறுப்பாளர் ஆக்கியிருக்கிறது. எப்படி சென்ற கல்பத்தில் ஆக்கியிருந்ததோ அதே போல் இப்பொழுதும் ஆக்குகிறது. திட்டம் யோசிப்பதினால் நடப்பதில்லை, ஆனால் விரும்பாவிட்டாலும் நாடகத்தின் பங்கு பொறுப்பாளராக ஆக்கி விடுகிறது. இதிலேயும் பெரிய ரகசியம் இருக்கிறது. உங்களுக்கு வரதானமும் இருக்கிறது. லௌகீக மற்றும் அலௌகீக தந்தையின் குலத்தின் பெயரை பெருமையடையச் செய்வதற்கு பொறுப்பாளரான ஆத்மா நீங்கள். இதுவும் விசேஷ வரதானம் ஆகும். எனவே உங்களைப் பார்த்து இருவரும் நினைவுக்கு வந்து விடுகிறார்கள். லௌகீக

லட்சணமும் நினைவு வருகிறது, மேலும் லட்சணம் மூலமாக என்ன எதிர்காலம் உருவாகிறதோ அதுவும் நினைவு வரும். உங்களுடைய ஒவ்வொரு அடியிலும் இருக்கும் வரதானமாகிய இரண்டு குலத்தின் பெயரை பெருமையடையச் செய்வது என்பது நிரம்பியிருக்கிறது. எனவே நாடகம் அதுவாகவே ஆசனத்தின் பக்கம் இழுத்துக் கொண்டிருக்கிறது. அவ்வப்பொழுது என்னென்ன மகாவாக்கியங்களை ஆத்மாக்களுக்காக பாப்தாதா கூறியிருக்கிறாரோ அவை நடைமுறையில் வந்து கொண்டிருக்கிறது. விசேஷ வரதானம் இருக்கிறது. மேலும் சேவைக்கான வாய்ப்பும் உங்களுக்கு விசேஷமாக இருக்கிறது. உங்களுக்கு இரண்டு சேவை, முகம் மூலமாகவும் மற்றும் செயல்கள் மூலமாகவும் செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. இவர்களுடைய முகத்தின் மூலம் அவ்யக்த நிலை அடைவதால், அனுபவம் செய்வார்கள் ஆனால் உங்களுடைய முகம் போகும் பொழுதும், வரும்பொழுதும் பிரம்மாபாபாவின் முகம் மற்றும் செயல்களை பிரத்யக்ஷம் செய்யும். இது அதிகப்படியான சேவைக்களம் ஆனது இல்லையா? நீங்கள் எங்கு சென்றாலும் என்ன கூறுகிறார்கள்? அனைவருக்கும் தந்தையின் உணர்வு வருகிறது தான் இல்லையா? அப்படி இந்த முகமும் சேவை செய்வதற்கான கருவியாகிறது. இரட்டை சேவை ஆனது இல்லையா?

**தாதியுடன்**: தற்சமயம் ஆத்மா உங்களுடைய இரட்டை ரூபத்தினால் ஆவஹானத்தின் லீலை நடந்து கொண்டிருக்கிறது. ஒருபக்கம் பக்த ஆத்மாக்கள் தெரியாத ரூபத்தில் ஆவாஹனம் செய்து கொண்டிருக்கிறார்கள். அஷ்ட தேவதையின் ரூபத்தில் ஆவாஹனம் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னொரு பக்கம் ஞான சொரூபமானவராகி, ஞானம் நிறைந்த குழந்தைகள் ஆத்மாக்கள் ஆவாஹனம் செய்து கொண்டிருக்கிறார்கள். எப்படி உங்களுடைய ஜடச்சிலையை அஷ்டதேவதையின் ரூபத்தில் செய்கிறார்கள். அதே போலவே ஆவாஹனம் செய்து கொண்டிருக்கிறார்கள் ஆனால் அவர்கள் தெரியாதவர்கள்: எனவே அவர்களுக்கு அந்த ரசனை வருவதில்லை ஆனால் அவர்களுக்கு ஆவாஹனம் செய்வதினாலும் வரதானத்தின் அனுபவத்தின் பிராப்தியின் அனுபவமாகும். அப்படி இரட்டை ஆவஹானம் ஆனது இல்லையா? இரண்டு மூர்த்திகள் சென்று கொண்டிருக்கிறார்களா, மூன்று மூர்த்திகள் சென்று கொண்டிருக்கிறார்களா? அல்லது எட்டு பேருமே சென்று

கொண்டிருக்கிறார்களா? இதுவும் ஒரு விசேஷ அலை தான் இல்லையா? அனைவரும் நாங்களும் உடன் சென்று கொண்டிருக்கிறோம் என்ற உணர்வில் இருக்கிறார்கள். இதற்கான காரணம் என்ன? இது அன்பின் நெருக்கத்தின் அடையாளமாகும். யார் இவ்வளவு காலம் நாடகப்படி பொறுப்பாளராகி பங்கைச் செய்தார், அதனுடைய பிரதிபலனை, பிரத்யக்ஷமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். பொறுப்பாளராகி பங்கைச் செய்ததின் ரிசல்ட் எதிரில் வந்து கொண்டிருக்கிறது. இந்த நேரம் மூவர் உங்களுடைய பங்கில் -எப்படி பிரம்மாவுடைய காரியம் படைப்புக்கானது, விஷ்ணுவுடையது பாலனைக்கானது, சங்கருடையது விநாஷத்திற்கானது என்று காண்பிக்கிறார்கள். அதுவும் நாடகப்படி தான் ஆனால் ஒவ்வொருவரது விசேஷத்தைக் காண்பித்திருக்கிறார்கள். அப்படி இப்பொழுது தந்தை பார்க்கிறார். மூவரின் விசேஷ குணமாக எது இருக்கிறது? நீங்கள் எந்த மூர்த்தி ஆவீர்கள். தற்சமயத்து பங்கிற்கு ஏற்றபடி மூவருக்குமே விசேஷ பங்கு நடைமுறையில் இருக்கிறது. இவரோ (தாதி) பொறுப்பாளர் ஆகி அனைவரின் ஊக்கம், உற்சாகம் மற்றும் சேவைக்களத்தில் புதிய திருப்பத்தைக் கொண்டு வருவதற்குக் காரணமான ஆதாரமூர்த்தி ஆகிச் சென்று கொண்டிருக்கிறார். அப்படி ஆதாரமூர்த்தி இவர் சென்று கொண்டிருக்கிறார், மேலும் உங்களுடைய (தீதியினுடைய) விசேஷமாக அனைவரும் இதைத் தான் பார்க்கிறார்கள். எவ்வளவு முன்னேற்றம் செய்பவராக இருக்கிறார். இவர் ஒருவரில் இருவரை உணர வைக்கிறார். யாரையாவது பொறுப்பாளர் ஆக்குவது என்பது நன்மை செய்பவர் ஆவதாகும். மேலும் இவர் (பரதாதி) தாரணைமூர்த்தி ஆவார். நாம் அனைவரும் ஒன்று என்ற உதாரணத்தைக் காண்பித்தார். அப்படி ஆதாரமூர்த்தி, உத்தார்மூர்த்தி (நன்மை செய்பவர்) மற்றும் உதாரணமூர்த்தி. இது மூவரின் விசேஷமாக ஆனது இல்லையா?

இந்த நேரம் நடைமுறை பங்கில் ஜனக்கின் (ஜானகி தாதியின்) பங்கு சேவையின் மிக விரும்பத்தக்கது மாதிரி நடந்து கொண்டிருக்கிறது. லண்டனில் சுதேஷ் மற்றும் ஜெயந்தி இருவருமே சேவைக்குப் பொறுப்பாளர் ஆகியிருக்கிறார்கள். இவர்கள் இருவரும் தற்சமயம் மிக நல்ல மனநிலையில் இருக்கிறார்கள். ஒன்றாக விரல் கொடுத்து சேவையை அதிகரிக்கவே வேண்டும் என்று நினைக்கிறார்கள். இந்த நேரம் நல்ல வேகத்தோடு சேவையில் மகிழ்ச்சி நிறைந்த ஆத்மாக்களாகத் தென்படுகிறார்கள். இதுவும் நாலா புறங்களிலுள்ள சூழ்நிலைக்கான ஒரு

பிரத்யக்ஷ ரூபம் ஆகும். அனைவரின் பார்வை அங்கு இருக்கிறது. இப்பொழுது அனைவரின் நல்லெண்ணம் அந்தப் பக்கம் இருக்கிறது. ஏதோ நடக்கப்போகிறது, வாயுமண்டலத்தில் பிரபாவம் இருக்கிறது.

எண்ணத்தின் வெற்றியின் உடனடி நிரூபணம் எப்படி ஏற்படுகிறது? நினைத்தீர்கள் மற்றும் நிறைவேறியது. உள்உணர்வு மற்றும் நினைவு மூலமாக எப்படி சேவை செய்ய முடியும் என்ற இதன் மேல் ஏதாவது ஆன்மீக உரையாடல்கள் செய்தீர்களா? நேரத்திற்கு ஏற்றபடி வாய்மொழியின் கூடவே எண்ணம் அதாவது நினைவு மற்றும் உள்உணர்வு அதாவது சுப பாவனை இருக்கட்டும் -இதன் மூலம் மிக நல்ல சேவை நடக்க முடியும். ஏனென்றால் கேட்டதாக இருந்தால் மீண்டும் கேட்பதாக உணர்வார்கள். யார் அதிக நெருக்கத்திலிருக்கும் ஆத்மாக்களோ அவர் இதை சாதாரணமானது என்று நினைக்கிறார் ஆனால் புதிய ரூபத்தின் சேவைக்கான முறையை அவர்களுக்கும் கற்றுக் கொடுங்கள். எதுவரை அவரே அனுபவியாக ஆகவில்லையோ அதுவரை ஏதாவது புதிய வடிவம் தேவையாக இருக்கிறது. புதிய அனுபவம் செய்வியுங்கள். குழுவிலும் அந்த மாதிரியான சேவையின் நிகழ்ச்சியை உருவாக்கிச் செய்ய முடியும். விசேஷ லட்சியத்தைக் கொடுத்து அமர வையுங்கள். பிறகு அவர்களிடமிருந்து அனுபவத்தைக் கேளுங்கள். மிக நல்லதாகக் கூறுவார்கள். எப்படி வாய்மொழி மூலமாக சேவையின் மிகுந்த அனுபவம் செய்தீர்கள். அது உங்களுடைய படைப்பு ஆகும். இப்பொழுது எண்ணம் மற்றும் உள்உணர்வு மூலமாக செய்யும் சேவை, சேவைக்களத்தில் அதிகப்படியாக தேவையாக இருக்கிறது. இதற்கான திட்டத்தை உருவாக்குங்கள். எப்பொழுது மகிழ்ச்சி வருமோ அப்பொழுது நம்முடைய புதுமையின் ஏறும் கலை என்று அனுபவம் செய்வார்கள். எப்படி அறிவியலைச் சேர்ந்தவர்கள் ஏதாவது கண்டுபிடிப்பதில் பிஸியாக இருக்கிறார்கள், இதே விதமாக என்ன ஞான விஷயம் சொல்லப்பட்டதோ அதன் ஆழத்தில் புதிய ரூபத்தின் கண்டுபிடிப்பை செய்வதற்காக அமிர்தவேளையில் லட்சியத்தை எடுத்து அமர்ந்தீர்கள் என்றால் டச்சிங் (உணர்த்தப்படுவது) ஏற்படும். புதுப்புது கண்டுபிடிப்புகள் வெளியாகும். அதன் மூலம் மற்றவர்களுக்கும் புதுமையின் அனுபவம் ஏற்படும். நல்லது.

**வரதானம்: முன் பின் யோசித்து, புரிந்து ஒவ்வொரு காரியத்தையும் செய்யக்கூடிய ஞான சொரூப ஆத்மா, திரிகாலதரிசி ஆகுக!**

எந்தக் குழந்தைகள் திரிகாலதரிசி அதாவது மூன்று காலங்களின் ஞானத்தைப் புத்தியில் வைத்து, முன் பின் யோசித்து, புரிந்து கொண்டு காரியங்களைச் செய்கிறார்களோ அவர்களுக்கு ஒவ்வொரு காரியத்திலும் வெற்றி கிடைக்கிறது. நான் மிக பிஸியாக இருந்தேன், எனவே என்ன வேலை எதிரில் வந்ததோ அதைச் செய்யத் தொடங்கி விட்டேன் என்று அப்படி இருக்க வேண்டாம். எந்தவொரு காரியம் செய்வதற்கு முன்பும் முதலில் மூன்று காலங்களையும் யோசிக்க வேண்டும் என்ற இந்தப் பழக்கம் ஏற்பட்டு விட வேண்டும். திரிகாலதரிசி நிலையில் நிலைத்திருந்து காரியம் செய்தீர்கள் என்றால் எந்தவொரு காரியமும் வீணானதாக மற்றும் சாதாரணமானதாக இருக்காது.

**சுலோகன்: தன்னுடைய திருப்தியான மற்றும் குஷி நிறைந்த வாழ்க்கை மூலம் சேவை செய்தீர்கள் என்றால் தான் உண்மையான சேவாதாரி என்று கூறுவோம்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 29.05.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# முயற்சி (புருஷார்த்தம்) செய்யும் வேகத்தில் தடை ஏற்படுவதற்கான காரணம் மற்றும் அதற்கான நிவாரணம்!

ஒவ்வொரு முயற்சியாளர்களும் அவரவர்களின் சக்திக்கேற்றபடி முயற்சி செய்யும் மார்க்கத்தில் சென்று கொண்டிருக்கிறார்கள் - பாப்தாதாவும் ஒவ்வொரு முயற்சியாளரின் வேகத்தைப் பார்க்கிறார், ஒவ்வொருவரின் எதிரில் எந்த விதமான தடை வருகிறது மற்றும் எப்படி முழு முயற்சியோடு தடைகளை அழிப்பவர்களாக ஆகிறார்கள் என்பதைத் தெரிந்திருக்கிறார். சில நேரம் நிற்கிறார்கள். சில நேரம் ஓடுகிறார்கள் மற்றும் சில நேரம் உயரே தாண்டிச் செல்லவும் செய்கிறார்கள் ஆனால் தடைகள் ஏன் வருகின்றன, அதன் காரணமாக தீவிர முயற்சியாளரிலிருந்து வெறும் முயற்சியாளர் ஆகிவிடுகிறார்கள்? முன்னேறிச் செல்வதற்குப் பதிலாக நிற்பவர்களாக ஆகிவிடுகிறார்கள். எஜமானன் மற்றும் மாஸ்டர் சர்வ சக்திவானுக்குப் பதிலாக, சோர்வுடையவராக மற்றும் அடிமையாக ஆகிவிடுகிறார்கள். இதற்கு என்ன காரணம்? மிகச் சிறு சிறு விஷயங்கள் ஆகும். எப்படி அன்றைய தினமும் கூறியிருந்தோம். பெரும்பான்மையோரின் எதிரில் வீணான எண்ணங்களின் புயல் அதிகமாக வருகிறது என்ற இது தான் மூல காரணமாகும்.

வீணான எண்ணம் வருவதற்கான ஆதாரம், நல்லெண்ணம் அதாவது சுத்தமான சிந்தனை, ஞானத்தின் பொக்கிஷத்தின் குறைவு என்பதாகும். கிடைத்த போதிலும் உபயோகிக்கத் தெரிவதில்லை, சேமிக்கத் தெரிவதில்லை அல்லது அதற்கான விதி தெரிவதில்லை. இந்தக் காரணத்தினால் வளர்ச்சி அடைவதில்லை. (ஞானம்) கேட்டார் அதாவது கிடைத்தது, ஆனால் அந்த நேரம் அற்ப காலத்தின் குஷி மற்றும் சக்தியை

அனுபவம் செய்வதோடு முடித்து விடுகிறார்கள். எப்படி உலகியல் ரீதியில் சம்பாதித்தார் மற்றும் சாப்பிட்டார். கொஞ்சம் சாப்பிட்டார் மற்றும் வீணாக செலவழித்தார். இதே விதமாக தாரணை செய்யும் சக்தியின் பலஹீனத்தின் காரணத்தினால், விதி மூலமாக வளர்ச்சி அடையச் செய்யாத காரணத்தினால் எப்பொழுதும் தன்னை ஞானம் மற்றும் சக்திகளின் பொக்கிஷத்தால் காலியாக அனுபவம் செய்கிறார்கள் எனவே நிரந்தரமாக சக்திசாலி ஆக முடிவதில்லை. நிரந்தரமாக மகிழ்ச்சி உடையவராக இருக்க முடிவதில்லை. பலஹீனமானவரான காரணத்தினால், மாயாவின் தடைகளுக்கு வசமாகி மற்றும் மாயாவின் அடிமை ஆகிவிடுகிறார்கள். கூடவே மற்ற ஆத்மாக்களை சம்பன்னமாகப் பார்த்து இவர்கள் சோர்வடைந்து விடுகிறார்கள். ஞான பொக்கிஷத்தை சேமிப்பது, நேரத்தின் உயர்ந்த பொக்கிஷத்தை சேமிப்பது அல்லது ஸ்தூல பொக்கிஷத்தை ஒன்றிலிருந்து லட்சக்கணக்கான மடங்காக ஆக்குவது அதாவது சேமிப்பது. அப்படி இந்த அனைத்து பொக்கிஷங்களை சேமிப்பதற்கான முக்கியமான வழி சுத்தமான அதாவது தூய்மையான புத்தி மற்றும் உண்மையான உள்ளம் ஆகும். தூய்மையான புத்திக்கான ஆதாரம் புத்தி மூலமாக தந்தையைத் தெரிந்து, புத்தியையும் தந்தையின் எதிரில் சமர்ப்பணம் செய்வது. சமர்ப்பணம் செய்வது என்றால் என்னுடையது என்பதை அகற்றுவது. அந்த மாதிரி புத்தியை சமர்ப்பணம் செய்திருக்கிறீர்களா? சூத்திரதன்மையின் புத்தியை சமர்ப்பணம் செய்வது என்றால் கொடுப்பது. அப்படி கொடுப்பதின் கூடவே தெய்வீக புத்தியை அடைவது. கொடுப்பது தான் அடைவது ஆகும். எப்படி வியாபாரம் செய்கிறார்கள் என்றால் கொடுக்கிறார்கள், பிறகு பெறுகிறார்கள் இல்லையா? பணம் கொடுப்பது, பொருளைப் பெறுவது அதே போல் இங்கேயும் கொடுப்பது தான் பெறுவதாகும். முதலில் அனைத்தையும் கொடுப்பது. எப்படி? நல்லெண்ணம் மூலமாக அனைத்தும் தந்தையினுடையது, என்னுடையது அல்ல. என்னுடையது என்ற உரிமையை விடுவது இதைத் தான் சமர்ப்பணம் என்று கூறுவது. இதையே தான் பற்றுதலை வென்ற நிலை என்று கூறுவது. நினைவு சொரூபமாக இல்லாத காரணத்தினால் மற்றும் வீணான எண்ணம் இருக்கும் காரணத்தினால், சோர்வுடையவர் மற்றும் அடிமையானவர் ஆகும் காரணத்தினால் என்னுடையவர் என்பதிலிருந்து பற்றுதலை வென்றவர் ஆவதில்லை. என்னுடையது என்பதின் விஸ்தாரம் மிக அதிகம் இருக்கிறது. முழு நாளும் பாப்தாதாவும் அனைத்து

குழந்தைகளின் விளையாட்டை. விசேஷமாக கொடுக்கும் விஷயத்தில் செய்யும் சாதூர்யத்தின் விளையாட்டைப் பார்த்துக் கொண்டே இருக்கிறார். இந்த நேரம் கொடுப்பார். பின்பு அடுத்த நேரம் திருப்பி எடுத்துக் கொள்வார். இந்த நேரம் வாய்மூலம் எதுவும் என்னுடையது அல்ல என்று கூறுவார், ஆனால் மனதில் அந்த உரிமையை வைத்துக் கொண்டிருப்பார். உரிமை என்றால் பற்றுதல், சில நேரம் செயல் மூலம் கொடுத்து பின்பு வார்த்தை மூலம் திருப்பி எடுத்து விடுகிறார்கள். புதியதின் கூடவே பழையதையும் தன்னிடம் வைத்துக் கொள்ள விரும்புகிறார்கள் என்ற இந்த சாதுர்யத்தை செய்கிறார்கள். நான் டிரஸ்டியாக (பொறுப்பாளராக) இருக்கிறேன் என்று கூறுகிறார்கள் ஆனால் நடைமுறையில் குடும்பஸ்தனாக இருக்கிறார்கள். அப்படி வீணான எண்ணத்தை அகற்றுவதற்கான ஆதாரம் குடும்பஸ்தன் என்ற உணர்வை அகற்றுவதாகும். அவர் குமாரியானாலும் அல்லது குமாரரானாலும் என்னுடைய சுபாவம், என்னுடைய சம்ஸ்காரம். என்னுடைய புத்தி என்ற இவை குடும்பஸ்தனின் விஸ்தாரமாகும். யார் சமர்ப்பணம் ஆகிவிட்டாரோ அவருக்கு எது தந்தையின் சுபாவமோ அது தான் அவருடைய சுபாவம், எது தந்தையின் சம்ஸ்காரமோ அது தான் அவருடைய சம்ஸ்காரமாக இருக்க வேண்டும். எப்படி தந்தையிடம் தெய்வீக புத்தி இருக்கிறதோ, அதே போல் உங்களுடைய புத்தியும் இருக்க வேண்டும். அப்படி தெய்வீக புத்தியில் நினைவு இருக்கவில்லை என்ற இது இருக்கவே முடியாது. ஒரு மணி நேரத்து உங்களுடைய மனநிலையை சோதனை செய்தீர்கள் என்றால் அப்பொழுது உங்களுடைய எண்ணங்களின் ஆதாரமாக ஏதாவது என்னுடையது என்பதாகத் தான் இருக்கும். என்னுடையது என்பதின் அடையாளம் பற்றுதல் என்று கூறியிருந்தோம்.

பற்றுதலின் பல நிலைகள் இருக்கின்றன. ஒன்று சூட்சும பற்றுதல், அதை சூட்சும ஆத்மீக நிலையில் நிலைத்திருந்து தான் தெரிந்து கொள்ள முடியும். இன்னொன்று ஸ்தூல ரூபத்தின் பற்றுதல் அதை சுலபமாகத் தெரிந்து கொள்ள முடியும். சூட்சும பற்றுதலுக்கு மிகுந்த விஸ்தாரம் இருக்கின்றது. பற்றுதலின்றி புத்தியின் ஈர்ப்பு அங்கு வரை செல்ல முடியாது மற்றும் புத்தியின் அடிபணிதல் அங்கு வரை செல்ல முடியாது. அப்படி அடிமையாகுதல் பற்றுதலின் காரணமாகத்தான். ஆனது. அது எண்ணத்திலிருந்தாலும், வார்த்தைகளிலிருந்தாலும்,

காரியத்திலிருந்தாலும், உறவிலிருந்தாலும், நெருக்கத்திலிருந்தாலும் விரும்பாவிட்டால் கூட அதற்காக அவசியம் நேரம் ஈடுபடுத்தப்படும். இந்தக் காரணத்தினால் வீணான எண்ணத்தின் மூல காரணம் பற்றுதல் ஆகும். இதை சோதனை செய்யுங்கள். எந்த விஷயங்களை நீங்கள் விரும்பவில்லையோ அதுவும் வீணான எண்ணங்களின் ரூபத்தில் டிஸ்டர்ப் (தொந்தரவு செய்கிறது. இதற்கான காரணம் கூட பழைய சுபாவம், சம்ஸ்காரங்களில் என்னுடையது என்பது இருப்பதாகும். எதுவரை என்னுடைய சுபாவம், என்னுடைய சம்ஸ்காரம் என்றிருக்கிறதோ அது அவசியம் ஈர்க்கும். எப்படி என்னுடைய படைப்பு படைப்பவரை இழுக்கிறது. அதே போல் என்னுடைய சுபாவம், சம்ஸ்காரம் என்ற படைப்பு ஆத்மா படைப்பவரை தன் பக்கம் இழுக்கும். இது என்னுடையதல்ல, இது சூத்திரத்தன்மையின் சம்ஸ்காரம் ஆகும். சூத்திரத்தன்மையின் சம்ஸ்காரத்தை என்னுடையது என்று கூறுவது பெரிய பாவம் ஆகும், திருட்டும் ஆகும் என்றால் ஏமாற்றுதலும் ஆகிறது. சூத்திரர்களின் பொருளை ஒருவேளை பிராமணர் திருடுகிறார் என்றால் அதாவது என்னுடையது என்று கூறுகிறார் என்றால் இது மிகப் பெரிய பாவமாகும். மேலும் பாபா இவை அனைத்தும் உங்களுடையது என்று அப்படிக் கூறிவிட்டு பிறகு என்னுடையது என்று கூறுவது ஏமாற்றுவதாகும். மேலும் இந்த விதமாக பாவம் ஏற்படுவதினால், பாவங்களின் சுமை அதிகரித்துக் கொண்டே இருப்பதினால், புத்தி உயர்ந்த நிலையில் நிலைத்திருக்க முடிவதில்லை. இதன் காரணமாக வீணான எண்ணங்களின் தாழ்ந்த நிலையில் அடிக்கடி வர வேண்டியதாக இருக்கிறது. பிறகு என்ன செய்வது என்று கதறுகிறார்கள்.

வீணான எண்ணங்களுக்கு இன்னொரு காரணம் முழு நாளின் தினசரி நடவடிக்கையில் எண்ணம், சொல், செயலுக்காக தந்தை மூலமாக மரியாதை நிரம்பிய என்ன ஸ்ரீமத் இருக்கிறதோ அதை ஏதாவது ரூபத்தில் மீறி நடப்பதாகும். கட்டளைப்படி நடப்பவரிலிருந்து கட்டளையை மீறுபவராக ஆகிவிடுகிறீர்கள். மரியாதைக் கோட்டை எண்ணம் மூலமாகக் கூட ஒருவேளை தாண்டுகிறீர்கள் என்றால் வீணான எண்ணம் என்ற இராவணன் தாக்குதல் செய்ய முடியும். எனவே எண்ணம் மூலமாக, வார்த்தைகள், செயல், உறவு நெருக்கம் மூலமாக பிராமணர்களின் நியமங்கள் மற்றும் நெறிமுறைகளை மீறவில்லை தானே இல்லையே என்று இந்த சோதனை செய்யுங்கள். அவசியம் ஏதோ ஒரு நெறிமுறை

விடுபட்டிருக்கிறது. அதனால் தான் புத்தியில் வீணான எண்ணம் கலந்து விடுகிறது. இரண்டாவது காரணம் என்னவென்று புரிந்து கொண்டீர்களா? எனவே மிக நல்ல முறையில் சோதனை இருக்க வேண்டும். அப்பொழுது தான் வீணான எண்ணங்களிலிருந்து விடுபட முடியும். முழு நாளிற்கான தந்தை மூலமாக என்ன ஒரு சுத்தமான வாழ்க்கை கிடைத்திருக்கிறதோ, புத்திக்கான வாழ்க்கை சுத்த எண்ணத்தை செய்வது. வார்த்தைகளுக்கான வாழ்க்கை என்னென்ன தந்தை மூலமாக கேட்டிருக்கிறோமோ அதைக் கூறுவது. காரியத்தின் வாழ்க்கையாவது கர்மயோகியாகி ஒவ்வொரு காரியத்தையும் செய்வது, தாமரை மலருக்குச்சமமாக விலகியவராக மற்றும் அன்பானவராகி இருப்பது, உயர்ந்த காரியம் மூலமாக தந்தையின் உயர்ந்த காரியங்களை வெளிப்படுத்துவது மற்றும் ஒவ்வொரு காரியத்தையும் சரித்திர ரூபத்தில் செய்வது, சாதுர்யம் அல்ல ஆனால் சரித்திரம், அதுவும் தெய்வீக சரித்திரமாக இருக்க வேண்டும். நெருக்கத்தின் வாழ்க்கையானது கருவியாகி அவர் நெருக்கத்தில் வருவது, மேலும் எப்பொழுதும் அனைவரின் தந்தையாக இருப்பவரின் நெருக்கத்தில் கொண்டு வருவது. அப்படி அந்த மாதிரி தூய்மையான வாழ்க்கையில் பிஸியாக இருப்பதினால் வீணான எண்ணங்களிலிருந்து துறவரம் ஆகிவிடும். அவர்கள் இல்லறத்தில் துறவரம் என்று கூறுகிறார்கள். தந்தை கூறுகிறார் தூய்மையான இல்லறத்திலிருந்து தான் துறவரம் ஆக வேண்டும். குடும்பஸ்தன் வேறு ஆவார் அவரை குடும்பஸ்தன் என்று கூற முடியாது. தூய்மையான இல்லறத்தை டிரஸ்டி என்று கூறுவோமேயன்றி குடும்பஸ்தன் என்று கூற மாட்டோம். அப்படி துறவரத்திற்கான ஆதாரம் தூய்மையான இல்லறம் என்று புரிந்து கொண்டீர்களா? நல்லது.

எப்பொழுதும் மரியாதா புருஷோத்தமராகி, அனைத்து பொக்கிஷங்களையும் பயனுள்ளதாக ஆக்கக்கூடிய வெற்றியடையும், வீணானதை பயனுள்ளதாக மாற்றம் செய்யக்கூடிய அந்த மாதிரி தந்தையின் கட்டளைப்படி நடக்கும். எப்பொழுதும் ஸ்ரீமத்படி நடக்கக்கூடிய குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன்**: **சக்திகள் தன்னுடைய சிறப்புக்களை காண்பிப்பார்கள், பாண்டவர்கள் அதற்கு துணை புரிவார்கள்!** சக்திகளை முன்னுக்கு வைப்பது என்றால் சுயம் அவரே முன்னுக்கு

இருப்பது, அவர்களை முன்னுக்கு வைப்பதினால் உங்களுடைய பெயர் பிரசித்தியாகிவிடும். யார் தியாகம் செய்கிறாரோ அதன் பாக்கியம் தானாகவே சேமிப்பாகி விடுகிறது. சக்திகள் ஆயுதம் தரித்தவராக இருக்கிறீர்களா? ஆயுதங்களினால் களைப்படைந்து விடவில்லையே? ஆயுதம் தரித்த சக்திகளுக்குத் தான் பூஜை நடக்கிறது. அப்படியானால் நீங்கள் அனைவரும் பூஜைக்குரியவர்களா? பூஜைக்குரியவர் என்றால் ஆயுதம் தரித்தவர். ஒருவேளை ஏதாவது நேரத்தில் ஆயுதத்தை விட்டு விட்டீர்கள் என்றால் அந்த நேரம் பூஜைக்குரியவர் அல்ல. சக்தி ரூபம் இல்லை என்றால் பலஹீனமானவராக இருக்கிறீர்கள். பலஹீனமானவருக்கு பூஜை நடப்பதில்லை. பூஜைக்குரியவர் என்றால் எப்பொழுதும் பூஜைக்குரியவர். சில நேரம் பூஜைக்குரியவர். சில நேரம் பலஹீனமானவர் என்று அப்படியல்ல. அப்படியானால் ஆயுதங்கள் எப்பொழுதும் உடன் இருக்கின்றனவா? எப்பொழுது தன்னை குடும்பஸ்தன் என்று நினைக்கிறீர்களோ அப்பொழுது குடும்பஸ்தனின் வலை இருக்கிறது. குடும்பஸ்தன் ஆவது என்றால் வலையில் மாட்டிக் கொள்வது. டிரஸ்டி என்றால் விடுபடுவது. எனவே நான் பூஜைக்குரியவன் என்ற நினைவை எப்பொழுதுமே வையுங்கள்.

எப்படிப்பட்ட சூழ்நிலை ஏதாவது வந்தாலும் அதில் வெற்றி அடைவதின் காரணமாக திருப்தியாக இருக்கிறார்கள். எப்பொழுதாவது குழந்தைகள் ஆகியோர் மேல் கோபப்படுவது இல்லையே? குழந்தைகள் என்று கூறுகிறீர்கள், குழந்தைகள் என்றால் ஒன்றும் அறியாதவர்கள். குழந்தைகள் என்றால் சஞ்சலமானவர்கள், இருப்பதே சஞ்சல சுபாவம் மற்றும் ஒன்றும் அறியாதவர்கள் என்றால் அவர்கள் மேல் ஏன் கோபப்படுகிறீர்கள்? இவர்கள் கலியுகக் குழந்தைகள் கீழான குணங்களோடு பிறந்தவர்கள் என்று எப்பொழுது இந்த இரகசியத்தை தெரிந்திருக்கிறீர்கள் என்றால், அவசியம் அவர்கள் குழப்பம் செய்பவர்களாக இருப்பார்கள். எப்படி மண்ணோ அப்படித் தான் பானையும் உருவாகும். மண் சூடாக இருக்கிறது என்றால் தண்ணீர் குளுமையாக இருக்க வேண்டும் என்றால் எப்படி இருக்க முடியும். எனவே கோபப்படுவது என்றால் ஞானம் நிறைந்தவராக இல்லை. இரகசியத்தைத் தெரிந்திருக்கவில்லை. ஒருவேளை யோக சொரூபமானவராகி அவர்களுக்கு அறிவுரைகள் கூறினீர்கள் என்றால் அவர்கள் மாறி விடுவார்கள். கோபப்படாதீர்கள்.

முழு நாளும் எண்ணம், சொல் மற்றும் செயல் தந்தையின் நினைவு மற்றும் சேவையிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறதா? ஒவ்வொரு எண்ணத்திலும் தந்தையின் நினைவு மற்றும் சேவை இருக்க வேண்டும். அது போலவே ஒவ்வொரு வார்த்தை மூலமாக தந்தையின் நினைவை ஊட்ட வேண்டும் அல்லது கொடுக்கப்பட்ட பொக்கிஷத்தை மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும். காரியம் மூலமாகவும் தந்தையின் சரித்திரங்களை நிரூபிக்க வேண்டும். அப்படி எப்பொழுதும், நினைவு மற்றும் சேவையிலேயே இருக்கிறீர்களா? ஒருவேளை நினைவு மற்றும் சேவை இந்த இரண்டிலும் எப்பொழுதும் பிஸியாக இருந்தீர்கள் என்றால் மாயா வர முடியுமா? ஒருவேளை நினைவு மற்றும் சேவையை மறக்கிறீர்கள் என்றால் மாயாவின் வாசலைத் திறந்து விடுகிறீர்கள். இந்த வாசலை திறக்காதீர்கள். நினைவு மறந்த நிலை என்றால் மாயாவின் கதவுகளைத் திறப்பது. நினைவு என்றால் உறுதியான காட்ரெஜ் பூட்டைப் போடுவது. நினைவு மற்றும் சேவையின் நினைவு இரட்டை பூட்டாகும். இரட்டை பூட்டு போட்டீர்கள் என்றால் மாயா ஒருபொழுதும் வர முடியாது. ஒருவேளை நினைவு என்ற ஒரே ஒரு பூட்டு மட்டும் போட்டீர்கள், சேவை இல்லை என்றாலும் மாயா வந்து விடும். பிராமண வாழ்க்கை இருப்பதே நினைவு மற்றும் சேவைக்காகத் தான். அப்படி வாழ்க்கையின் காரியத்தை யாராவது மறப்பார்களா என்ன?. ஒருவேளை மறக்கிறீர்கள் என்றால் மாயாவிடம் ஏமாற்றம் அடைகிறீர்கள். ஏமாற்றம் அடைவதினால் துக்க உணர்வு வருகிறது. எனவே இரட்டைப் பூட்டை எப்பொழுதும் போட்டு வையுங்கள், இதனால் எப்பொழுதும் பாதுகாப்பாக, குஷியாக, திருப்தியாக இருப்பீர்கள்.

தன்னை எப்பொழுதும் ஒவ்வொரு அடியையும் ஸ்ரீமத்படி எடுத்து வைக்கக்கூடிய உயர்ந்த ஆத்மா என்று நினைக்கிறீர்களா? ஒவ்வொரு அடியும் ஸ்ரீமத்படி இருக்கிறதா அல்லது மன்மத் அதாவது மனம் சொல்லும் வழியில் இருக்கிறதா? அதைத் தெரிந்து கொள்வது எப்படி என்று தெரிந்திருக்கிறீர்களா? பகுத்தறிவதற்கான வழி என்ன? ஒருவேளை ஒவ்வொரு அடியும் ஸ்ரீமத்படி இருக்கிறது என்றால் ஒருபொழுதும் தன்னுடைய மனம் திருப்தியில்லாமல் இருக்காது என்பது தான் ஸ்ரீமத் மற்றும் மன்மத்தை பகுத்தறிவதற்கான வழியாகும். மனதில் எந்த விதமான குழப்பமும் இருக்காது. இயல்பாகவே ஸ்ரீமத்படி

நடப்பதினால் இயற்கையான குஷி இருக்கும். எப்படி ஏதாவது நல்ல காரியம் செய்யப்படுகிறது என்றால் அதற்கான குஷி உள்மனதில் இயல்பாகவே இருக்கும். தீய காரியம் செய்யப்படுகிறது என்றால் வெளியே வார்த்தைகளினால் கூறாவிட்டாலும் உள்ளே மனதில் உறுத்தும். மனம் சொல்லும் வழியில் நடப்பவர்களின் மனதில் குழப்பம் இருக்கும். ஸ்ரீமத்படி நடப்பவர்கள் எப்பொழுதும் லேசாக மற்றும் குஷியாக இருப்பார்கள். இதன் மூலம் நான் ஸ்ரீமத்படி நடக்கிறேனா அல்லது மனம் சொல்லும் வழிப்படி நடக்கிறேனா என்று தெரிந்து கொள்ள முடியும். இது தான் தெர்மாமீட்டர் ஆகும். எப்பொழுதெல்லாம் மனதில் குழப்பம் ஏற்படுகிறது. குஷியின் சதவிகிதம் குறைகிறது என்றால் அவசியம் ஏதோ ஸ்ரீமத்தை மீறியிருக்கிறீர்கள் என்பதாகும். இதை சோதனை செய்யுங்கள். எப்பொழுதும் சோதனை செய்வது மற்றும் மாற்றம் செய்வது இருக்க வேண்டும். சோதிப்பதற்கான அர்த்தமே மாற்றம் செய்வதற்காகத் தான். சோதனை மற்றும் மாற்றம் இந்த இரண்டின் சக்திகளுமே வேண்டும். ஒருவேளை இரண்டிலிருந்து ஒன்றின் குறை இருக்கிறது என்றாலும் திருப்தியாக இருக்க முடியாது. தானும் திருப்தியாக இருக்க முடியாது. மேலும் மற்றவர்களையும் திருப்தி செய்ய முடியாது. எப்பொழுது சகித்துக் கொள்ளும் சக்தி இருக்குமோ அப்பொழுது தான் மாற்றம் செய்யும் சக்தி வரும். புத்தியின் தொடர்பு தெளிவாக இருப்பதினால் பகுத்தறியும் சக்தி வரும். நல்லது.

**வரதானம்: பலஹீனமான எண்ணங்களின் வலையை அகற்றி பிற ஆதிக்கத்தின் பந்தனத்தில் இருந்து விடுபடக்கூடிய சுதந்திர ஆத்மா ஆகுக!**

பிற ஆதிக்கத்தின் பந்தனம் தன்னுடைய மனதின் வீணான, பலஹீனமான எண்ணங்களின் வலை ஆகும். இந்த வலை கேள்வியின் ரூபத்தில் இருக்கும். எப்பொழுது, என்னவாகும் என்று தெரியவில்லை, அந்த மாதிரி ஆகிவிடாதே என்ற கேள்வி எழுகிறது என்றால் அது வலை ஆகிவிடுகிறது ஆனால் சங்கமயுக பிராமணர்களுக்கு என்ன ஆகுமோ அது நன்மை நிரம்பியதாகவே இருக்கும், உயர்ந்த மற்றும் நல்லதிலும் நல்லதாகவே இருக்கும் என்ற ஒரே ஒரு சக்திசாலியான எண்ணம் இருக்க வேண்டும். இந்த சக்திசாலியான எண்ணத்தினால் வலையை அகற்றி

விட்டீர்கள் என்றால் பந்தனத்திலிருந்து விடுபட்ட சுதந்திர ஆத்மா ஆகிவிடுவீர்கள்.

**சுலோகன்: மற்றும் யோக சொருப ஆத்மாவின் நடைமுறை சொரூபம் பணிவு மற்றும் பயமற்ற நிலை ஆகும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 31.05.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உலக நன்மை செய்வதற்கான சுலபமான வழி -உயர்ந்த எண்ணங்களின் ஒருமுகப்பட்ட நிலை!

தன்னுடைய நிராகார (உடலற்ற) மற்றும் சாகார (உடலிலிருக்கும்) இரண்டு நிலைகளையும் மிக நல்ல முறையில் தெரிந்து கொண்டீர்களா? இரண்டு நிலைகளிலுமே நிலைத்திருப்பது சுலபமாக அனுடவம் ஆகிறதா? அல்லது சாகார நிலையில் நிலைத்திருப்பது சுலபமாக இருக்கிறது மற்றும் நிராகார நிலையில் நிலைத்திருப்பதில் கடினம் அனுபவம் ஆகிறதா? நினைத்தீர்கள் மற்றும் நிலைத்திருந்தீர்கள். ஒரு நொடிக்கான எண்ணம் எங்கு விரும்புகிறீர்களோ அங்கு நிலைத்திருக்கச் செய்ய முடியும் எண்ணம் தான் உயரே கொண்டு செல்வதற்கு மற்றும் கீழே கொண்டு வருவதற்கான ஆன்மீக லிஃப்ட் ஆகும், அதன் மூலம் விரும்பினால் மிக உயர்ந்த அதாவது உயர்ந்த இலக்கை சென்றடையுங்கள் அதாவது நிராகார நிலையில் நிலைத்திருந்து விடுங்கள். விரும்பினால் ஆகார நிலையில் நிலைத்திருந்து விடுங்கள் மற்றும் விரும்பினால் சாகார நிலையில் நிலைத்திருந்து விடுங்கள். அந்த மாதிரியான பயிற்சியை அனுபவம் செய்கிறீர்களா? எண்ணத்தின் சக்தியை எங்கு விரும்புகிறீர்களோ அங்கு ஈடுபடுத்த முடியுமா? ஏனென்றால் ஆத்மா இந்த சூட்சும சக்தி களின் அதிபதியாகும். மாஸ்டர் சர்வ சக்திவான் என்றால் அனைத்து சக்திகளையும் எப்பொழுது, எங்கே மற்றும் எப்படி விரும்புகிறீர்களோ அப்படி காரியத்தில் ஈடுபடுத்த முடிய வேண்டும். அந்த மாதரி அதிபதி நிலைலயை அனுபவம் செய்கிறீர்களா? எண்ணத்தை உருவாக்கக் கூடிய படைப்பவர் என்று தன்னை அனுபவம் செய்கிறீர்களா? படைப்பின் வசமாகவோ ஆவதில்லையே? ஒரு நொடியில் எந்த நிலையில் நிலைத்திருப்பதற்கான டைரக்ஷன் (வழிகாட்டுதல்) கிடைக்கிறதோ அதே நிலையில் ஒரு நொடியில் நிலைத்திருந்து விடும் மாதிரி பயிற்சி இருக்கிறதா? அல்லது யுத்தம்

செய்தே நேரம் கழிந்து விடுகிறதா? ஒருவேளை யுத்தம் செய்தே நேரம் கடந்து சென்று விட்டது, தன்னை நிலைத்திருக்கச் செய்ய முடியவில்லை என்றால் அவரை மாஸ்டர் சர்வ சக்திவான் என்று கூறுவோமா அல்லது சத்ரியன் என்று கூறுவோமா? சத்ரியன் என்றால் சந்திரவம்சம்.

தற்சமயம் உலக நன்மை செய்வதற்கான சுலபமாக சாதனம் தன்னுடைய உயர்ந்த எண்ணங்களின் ஒருமுகப்பாடு மூலமாக, அனைத்து ஆத்மாக்களின் அலைந்து கொண்டிருக்கும் புத்தியை ஒருமுகப்படுத்துவதாகும். முழு உலகிலுள்ள அனைத்து ஆத்மாக்களும் விசேஷமாக அலைந்து கொண்டிருக்கும் புத்தி ஒருநிலைப்பட்டு விட வேண்டும். மேலும் மனம் சஞ்சலத்திலிருந்து ஒருநிலைப்பட்டு விட வேண்டும் என்ற இந்த விருப்பத்தைத் தான் வைக்கிறார்கள். உலகின் இந்த தேவையை மற்றும் விருப்பத்தை எப்படி நிறைவேற்றுவீர்கள்? ஒருவேளை நீங்களே ஒருமுகப்பட்ட நிலையில் இல்லை. என்றால் மற்றவர்களை எப்படி அப்படி. ஆக்க முடியும்? எனவே ஒருமுகப்பட்ட நிலை என்றால் எப்பொழுதும் ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்று அந்த மாதிரி நிரந்தரமாக ஒரே சீரான நிலையில் நிலைத்திருப்பதற்கான விசேஷ பயிற்சி செய்யுங்கள். அதற்காக எப்படி ஏற்கனவே கூறியிருந்தோம் ஒன்று வீணான எண்ணங்களை சுத்த எண்ணங்களில் மாற்றம் செய்யுங்கள். இன்னொரு விஷயம் மாயா வரக்கூடிய அனேக விதமான தடைகளை தன்னுடைய ஈஸ்வரிய முனைப்பாட்டின் ஆதாரத்தில் சுலபமாக அகற்றிவிட்டு, அடியை முன்னே எடுத்து வைத்துச் சென்று கொண்டே இருங்கள். தடைகளைக் கண்டு பயப்படுவதற்கான முக்கியமான காரணம் எது? எப்பொழுதெல்லாம் ஏதாவது தடை வருகிறது. என்றால் தடை வந்த போது முழு ஈடுபாட்டின் சோதனையில் இவை அனைத்தும் வரத்தான் செய்யும் என்று பாப்தாதா ஏற்கனவே இந்த ஞானத்தைக் கொடுத்து விட்டார் என்ற இதை மறந்து விடுகிறீர்கள் எப்பொழுது தடைகள் வரத்தான் செய்யும் என்று முன்பாகவே தெரிகிறது என்றால் பின்பு பயப்படுவதற்கான என்ன அவசியம் இருக்கிறது? புது விஷயம் என்று ஏன் நினைக்கிறீர்கள்? மாயா ஏன் வருகிறது? வீணான எண்ணம் ஏன் வருகிறது? புத்தி ஏன் இங்கு அங்கு அலைகிறது? சூழ்நிலை ஏன் பாதிப்பை ஏற்படுகிறது? உறவினர்கள் ஏன் ஒத்துழைப்பதில்லை? பழைய சம்ஸ்காரம் இன்று வரையிலும் ஏன் வெளிப்படுகிறது? இந்த அனைத்து கேள்விகளும்

தடையை அகற்றுவதற்குப் பதிலாக தந்தை மேல் இருக்கும் ஈடுபாட்டை அகற்றுவதற்குக் காரணம் ஆகிவிடுகிறது. எவ்வளவு முன்னேறிச் செல்வீர்களோ அந்த அளவு மாயா விதவிதமான ரூபத்தில் சோதிப்பதற்காக வரும் என்ற தந்தையின் இந்த மகாவாக்கியத்தை மறந்து விடுகிறீர்களா என்ன? ஆனால் சோதனை தான் முன்னேறுவதற்கான சாதனமேயன்றி கீழே தள்ளுவதற்கானது இல்லை ஏனென்றால் காரணம் நிவாரணம் ஆவதற்குப் பதிலாக காரணத்தை யோசிப்பதில் நேரத்தை இழந்து விடுகிறீர்கள். சக்தியை இழந்து விடுகிறீர்கள் காரணத்திற்குப் பதிலாக நிவாரணத்தை யோசித்தீர்கள் என்றால் தடையற்றவர் ஆகிவிடுவீர்கள். ஏன் வந்தது? என்று அப்படி யோசிக்காமல், இதுவோ வரத்தான் செய்யும் என்ற இந்த நினைவில் இருப்பதினால் சக்தி நிறைந்த சொரூபமானவராகி விடுவீர்கள்.

இரண்டாவது விஷயம், சிறிய தடையில் ஏன் என்ற கேள்வி எழுவதினால் வீணான எண்ணங்களின் வரிசை உருவாகிவிடுகிறது. மேலும் அந்த வரிசையை அகற்றுவதற்காக. அதிக நேரம் எடுத்து விடுகிறது. எனவே முக்கியமான பலஹீனமானது ஞான சொரூபத்தில் அதாவது ஞானம் நிறைந்த நிலையில் நிலைத்திருந்து தடைகளை கடந்து செல்ல முடிவதில்லை. ஞானியாக இருக்கிறீர்கள் ஆனால் ஞான சொரூபமாக ஆக வேண்டும். சூழ்நிலை ஏன் பாதிப்பை ஏற்படுத்துகிறது, அதற்கும் காரணம் இருக்கிறதா? தன்னுடைய சக்திசாலியான உள்உணர்வு மூலமாக சூழ்நிலையை மாற்றம் செய்பவர் நான் என்ற இந்த நினைவை மறந்து விடுகிறீர்கள். எப்பொழுது நான் உலகை மாற்றம் செய்பவன் என்று கூறுகிறீர்கள் என்றால் உலக. மாற்றத்தில் சூழ்நிலையையும் மாற்றம் செய்ய வேண்டும். அசுத்தத்தைத் தான் சுத்தமாக ஆக்குவதற்காக பொறுப்பாளராக இருக்கிறீர்கள். பின்பு சூழ்நிலையே அப்படி இருந்தது அதனால் பலஹீனமாகி விட்டேன் என்று அப்படி ஏன் யோசிக்கிறீர்கள். எப்பொழுது இருப்பதே கலியுகம், தமோபிரதானம், அசுர படைப்பு பின்பு அதில் சூழ்நிலை அசுத்தமாக இல்லாமல் வேறு என்னவாக இருக்கும் தமோகுண உலகின் நடுவில் இருந்து கொண்டே சூழ்நிலையை மாற்றம் செய்ய வேண்டும், இது தான் பிராமணர்கள் செய்ய வேண்டிய நல்ல காரியம் ஆகும். காரியத்தின் நினைவில் இருப்பதினால் அதாவது படைப்பவர் என்ற நினைவில் நிலைத்திருப்பதினால் சூழ்நிலை அதாவது படைப்பின் வசமாக மாட்டீர்கள் எனவே, மாற்றம் செய்பவர் ஆகி எப்படி

மாற்றம் செய்வோம் என்ற இதை யோசிப்பதற்குப் பதிலாக சூழ்நிலை அப்படி இருந்தது அதனால் பலஹீனமாகி விட்டேன், சூழ்நிலை மாறினால் நானும் மாறுவேன் சூழ்நிலை நல்லதாக இருந்தது என்றால் என்னுடைய மனநிலையும் நன்றாக இருக்கும் ஆனால் சூழ்நிலையை மாற்றம் செய்பவர் யார்? இதை மறந்து விடுகிறீர்கள். இந்தக் காரணத்தினால் மிகச் சிறிய சூழ்நிலையின் பாதிப்பும் ஏற்பட்டு விடுகிறது. மேலும் என்ன கூறுகிறார்கள் என்றால் உறவினர்கள் கேட்பதில்லை மற்றும் உடன் இருப்பவர்கள் நல்லவர்கள் இல்லை, இந்தக் காரணத்தினால் சக்திசாலியாக ஆவதில்லை. பாப்தாதாவோ ஒவ்வொரு ஆத்மாவிற்கும் அவரவர்களுக்கென்று தனித்தனியான பங்கு இருக்கிறது என்று ஏற்கனவே கூறியிருக்கிறார். சிலர் சதோகுணியாக (உயர்ந்த எப்பொழுது குணமுடையவராக), சிலர் ரஜோகுணியாக (இரண்டாம் நிலை குணமுடையவராக) மற்றும் சிலர் தமோகுணியாக (தாழ்ந்த குணமுடையவராக) இருக்கின்றனர். விதவிதமான ஆத்மாக்கள் மற்றும் விதவிதமான வாழ்க்கை என்றால் அனைத்து ஆத்மாக்களுக்கும் ஒரே மாதிரியான பங்கு இருக்க முடியாது. ஒருவேளை ஏதாவது ஆத்மாவிற்கு தமோகுணி அதாவது அஞ்ஞானத்தின் பங்கு இருக்கிறது என்றால் சுபபாவனை மற்றும் சுபவிருப்பங்களினால் அந்த ஆத்மாவிற்கு சாந்தி மற்றும் சக்தியின் தானம் கொடுங்கள் ஆனால் அதே அஞ்ஞானியின் பங்கைப்பார்த்து தன்னுடைய உயர்ந்த நிலையின் அனுபவத்தை ஏன் மறந்து விடுகிறீர்கள்.. தன்னுடைய நிலையில் ஏன் தடுமாறுகிறீர்கள்? சாட்சியாகி பங்கைப் பார்த்துக் கொண்டே, எந்த சக்தியின் தானம் கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுங்கள் ஆனால் பயப்படாதீர்கள். தன்னுடைய உயர்ந்த நிலையின் பங்கில் நிலைத்திருங்கள். தமோகுணி ஆத்மாவின் தொடர்பின் பாதிப்பு ஏற்படுவதற்கான காரணம் எப்பொழுதும் தந்தையின் உயர்ந்த தொடர்பில் இருப்பதில்லை. எப்பொழுதும் உயர்ந்த தொடர்பில் இருக்கக்கூடியவர்கள் மேல் மற்ற தொடர்பின் பாதிப்பு ஏற்பட முடியாது. எனவே நிவாரணத்தைப் பற்றி யோசியுங்கள்.

வேறு என்ன கூறுகிறார்கள். என்னுடைய உறவினரின் புத்தியின் பூட்டை திறங்கள். தந்தை அனைத்து ஆத்மாக்களின் புத்தியின் பூட்டைத் திறப்பதற்கான சாவியை குழந்தைகளிடம் முன்பாகவே கொடுத்து விட்டார். எனவே ஏன் சாவியை உபயோகிப்பதில்லை? தன்னுடைய

காரியத்தை மறக்கும் காரணத்தினால் பாபா நீங்களே இவருடைய புத்தியின் பூட்டை திறங்கள் மற்றும் புத்தியை பரிவர்த்தனை செய்யுங்கள் என்று தந்தைக்கும் அடிக்கடி நினைவூட்டுகிறார்கள். தந்தையோ அனைத்து ஆத்மாக்கள் என்ற குழந்தைகளுக்காக எப்பொழுதுமே உலக நன்மை செய்பவராக இருக்கவே இருக்கிறார், பிறகு அடிக்கடி ஏன் நினைவூட்டுகிறீர்கள்? தந்தையை தனக்குச் சமமாக மறப்பவர் என்று நினைத்தீர்களா என்ன? சொல்வதற்கும் அவசியமே இல்லை. எவ்வளவு உங்களுக்கு தன்னுடைய எல்லைக்குட்பட்ட பங்கின் உறவின் சிந்தனை இருக்கிறது ஆனால் தந்தையோ எப்பொழுதும் குழந்தைகளின் சம்மந்தத்தில் இருப்பவர் என்றால் தந்தை குழந்தைகளை மறக்க முடியாது ஆனால் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் அவரவர்களின் நேரத்திற்கான பங்கு இருக்கிறது. சிலருக்கு தொடக்கத்தில் பங்கு இருக்கிறது, சிலருக்கு இடையில், சிலருக்கு கடைசியில் பங்கு இருக்கிறது, சிலருக்கு பக்தியின் பங்கு இருக்கிறது. சிலருக்கு ஞானத்தின் பங்கு இருக்கிறது எனவே பூட்டு எப்பொழுது திறக்கும் என்று அடிக்கடி. கவலைப்படாதீர்கள் ஆனால் பூட்டைத் திறப்பதற்கான சாதனம் தன்னுடைய மனதின் எண்ணம் மூலமாக சேவை மற்றும் தன்னுடைய உள்உணர்வு மூலமாக சூழ்நிலையை மாற்றம் செய்வதற்கான சேவை ஆகும். தன்னுடைய வாழ்க்கையின் மாற்றம் மூலமாக ஆத்மாக்களை பரிவர்த்தனை செய்யும் சேவையின் கடமையை நிறைவேற்றிக் கொண்டே செல்லுங்கள் இப்பொழுது பூட்டைத் திறங்கள், பூட்டைத் திறங்கள் என்று அடிக்கடி கூறாதீர்கள். உங்களுடைய பூட்டைத் திறந்தீர்கள் என்றால் அவர்களுடையது திறந்தே விடும். முக்கியமாக ஏன் யோகா வருவதில்லை? பூட்டு ஏன் திறப்பதில்லை? மற்றும் மாயா ஏன் வருகிறது? என்று இந்த மூன்று விஷயங்களை அடிக்கடி எழுதுகிறார்கள் மிக அதிகமாக யோசிக்கிறீர்கள் எனவே மாயாவிற்கும் மகிழ்ச்சி ஏற்படுகிறது. எப்படி மல்யுத்தத்திலும் ஒருவேளை கொஞ்சமாவது விழ ஆரம்பித்தார் என்றால் மகிழ்ச்சி வருகிறது. மேலும் விழ வைத்து மேலே அமர வேண்டும் என்று மகிழ்ச்சி வருகிறது. அப்படி மாயா வந்து விட்டது மாயா ஏன் வந்தது என்று யோசிக்கிறீர்கள் என்றால் பயந்திருப்பதை பார்த்து மாயா தாக்கி விடுகிறது. எனவே மாயா வரத்தான் செய்யும் என்று ஏற்கனவே கூறியிருந்தோம். மாயா வருவது என்றால் வெற்றி அடைபவர் ஆவதற்காக காரணம் ஆனது. சக்திகளின் பிராப்தியை அனுபவத்தில் கொண்டு வருவதற்காக மாயா காரணம் ஆகிறது. ஒருவேளை எதிரி

இல்லை என்றால் வெற்றி அடைந்தார் என்று எப்படி கூற முடியும் வெற்றி இரத்தினமாக ஆவதற்காக மாயாவின் இந்த சிறு சிறு ரூபமாகும். எனவே மாயாவை வென்றவர் என்று புரிந்து, வெற்றி இரத்தினம் என்று புரிந்து மாயா மேல் வெற்றியை அடையுங்கள். புரிந்ததா? நீங்கள் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆவீர்கள், பலஹீனமானவர் ஆகாதீர்கள், மாயாவிற்கு சவால் விடுபவர்கள் ஆகுங்கள். நல்லது

எப்பொழுதும் மாயாவை வென்றவரிலிருந்து உலகை வென்றவருக்கு, சூழ்நிலையை தன்னுடைய சக்திசாலியான உள்உணர்வினால் உயர்ந்த நிலை உள்ளதாக ஆக்கக்கூடிய உயர்ந்த வழி மற்றும் தந்தையின் தொடர்பினால் அனேக மாயா நிறைந்த தீய சேர்க்கையிலிருந்து விலகியிருக்கக்கூடிய எப்பொழுதும் ஞான சொரூபம், சக்தி சொரூப நிலையில் நிலைத்திருக்கக்கூடிய அந்த மாதிரி எப்பொழுதும் வெற்றி அடையும் இரத்தினங்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன்: சங்கமயுகத்தின் மிகப் பெரிய பொக்கிஷம் எது?**

மிகப் பெரிய பொக்கிஷம் அதீந்திரிய சுசும் ஆகும். அது வேறு எந்த யுகத்திலும் கிடைக்க முடியாது. சத்யுகத்தில் கூட அதீந்திரிய சுகத்தின் வர்ணனை செய்ய மாட்டார்கள். இந்த அதீந்திரிய சுகம் இந்த நேரத்திற்கான பொக்கிஷம் ஆகும். இந்த பொக்கிஷத்தின் அனுபவம் இருக்கிறதா? எது மிக நல்ல பொருளாக இருக்கிறது அல்லது பிடித்திருக்கிறது என்றால் அதை ஒருபொழுதும் மாப்பதில்லை அதீந்திரிய சுகம் மிகப் பெரிய மற்றும் மிக நல்ல பொக்கிஷம் ஆகும் என்றால் நிரந்தரமாக நினைவிருக்க வேண்டும் நினைவு என்றால் அனுபவத்தில் வருவது. யார் இந்த அனுபவத்தில் இருப்பாரோ அவர் இந்திரியங்களின் சுகத்தில் இருக்க மாட்டார். யார் எப்பொழுதும் அதீந்திரிய சுகத்தில் இருப்பதில்லையோ அவர் இந்திரியங்களின் சுகத்தின் பக்கம் ஈர்க்கப்பட்டு விடுகிறார். இந்திரியங்களின் சுகத்தின் அனுபவியாகவோ இருக்கிறீர்கள் தான் இல்லையா? அந்த அற்பகாலத்தின் சுகத்திலும் கூட துக்கம் நிரம்பியிருக்கிறது எப்படி இன்றைய நாட்களில் கசப்பான மருந்துக்கு மேல் இனிப்பை பூசி விடுகிறார்கள் அப்படி இந்த இந்திரியங்களின் சுகம், சுகம் கொடுப்பதாக

தென்படுகிறது ஆனால் உண்மையில் அது என்ன? எப்பொழுது அது துக்கம் என்று நினைக்கிறீர்கள் என்றால் பின்பு ஏன் ஈர்க்கப்படுகிறீர்கள்?

எப்பொழுதும் தன்னை முக்கியமான கதாபாத்திரம் ஏற்று செய்பவர் என்று புரிந்து நடந்து கொள்கிறீர்களா? யார் முக்கியமான நடிகராக இருப்பாரோ அவருடைய ஒவ்வொரு நடிப்பும் விசேஷமாக இருக்கும். அப்படி உங்களுக்கும் ஒவ்வொரு செயலின் மேல் அந்த அளவு கவனம் இருக்கிறதா? எந்தவொரு காரியமும் சாதாரணமானதாக இருக்க வேண்டாம். சாதாரண ஆத்மா என்ன காரியம் செய்தாலும் அதை தேக அபிமானத்தோடு செய்வார். விசேஷ ஆத்மா, ஆத்ம அபிமானியாகி காரியம் செய்வார். ஆத்ம அபிமானியாகி தன்னுடைய பங்கைச் செய்வதின் ரிசல்ட்டாக என்ன இருக்கும்? அவர் தானும் திருப்தியாக மற்றும் அனைவரும் அவர் மேல் திருப்தியாக இருப்பார்கள். யார் நல்ல நடிப்பை செய்கிறாரோ அவரைப் பார்த்து அனைவரும் ஒன்ஸ் மோர் (மீண்டும் ஒரு முறை) என்று கூறுவார்கள். அப்படி அனைவரின் திருபதியுடையவராசு இருப்பது என்றால் ஒன்ஸ் மோர் என்று சொல்வது. தன் மெல் திருப்தியாக இருப்பது மட்டும் பெரிய விஷயம் இல்லை ஆனால் தானும் திருப்தியாக இருந்து மற்றவர்களையும் திருப்திப் படுத்த வேண்டும். இது தான் முழுமையான சுலோகன் ஆகும். அது எப்பொழுது ஆத்ம அபிமானியாகி விசேஷமாக பங்கைச் செய்வீர்களோ அப்பொழுது தான் இருக்க முடியும். அந்த மாதிரி டங்கைச் செய்வதில் மகிழ்ச்சியும் வரும். குஷியும் இருக்கும்.

எப்பொழுதும் தன்னுடைய உயர்ந்த சுயமரியாதையாகிய மாஸ்டர் சர்வ சக்திவானின் நிளைவில் இருக்கிறீர்களா? மிக நல்ல சுயமரியாதை எது? மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகும் எப்படி ஏதாவது ஒரு பெரிய அதிகாரி அல்லது இராஜா இருக்கிறார். என்றால், எப்பொழுது அவர் சுயமரியாதையின் ஆசனத்தில் அமருகிறார் என்றால் மற்றவர்களும் அவருக்கு மரியாதை கொடுப்பார்கள். ஒருவேளை அவரே இருக்கையில் அமரவில்லை என்றால் அவருடைய ஆணையை யாரும் ஏற்றுச் செய்ய மாட்டார்கள். அதே போலவே எதுவரை நீங்கள் உங்களுடைய சுயமரியாதையின் ஆசனத்தில் இல்லை என்றால் மாயாவும் உங்கள் எதிரில் அடிபணிய முடியாது. ஏனென்றால் இவர் ஆசனத்தில்

அமரவில்லை என்று அதற்கும் தெரியும் ஆசனத்தில் அமர்வது என்றால் தன்னை மாஸ்டர் சர்வ சக்திவான் என்று நினைப்பது.

சங்கமயுகம் தான் உடனடிப் பலன் கொடுப்பது சத்யுகத்தில் சங்கமயுகத்தின் பலன் தான் வந்து கொண்டிருக்கும். சங்கமயுகத்தில் ஒன்றிற்கு நூறு மடங்கு நிரம்பி பிரத்யக்ஷ பலன் கிடைக்கிறது. நான் தந்தையினுடையவன் என்று ஒரு முறை நினைத்தீர்கள் என்றால் அனேக ஜென்மங்கள் இந்த ஒரு எண்ணத்தின் ஆதாரத்தில் பலன் கிடைத்துக் கொண்டே இருக்கும் நான் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆவேன் என்று ஒரு தடவை நினைத்தீர்கள் என்றால் மாயாவை வென்றவர் ஆவதற்கு, வெற்றி அடைவதின் போதையின் அனுபவம் இருக்கும் பிரத்யக்ஷ பலன் சங்கமயுகத்தில் தான் அனுபவம் ஆகிறது. எப்படி விதை விதைக்கப்படுகிறது என்றால் பழம் கிடைக்கிறது தான் இல்லையா? அப்படி நினைப்பது மற்றும் முயற்சி செய்வது இது தான் விதை மற்றும் அதற்கான பழம் (பலன்), ஒன்றிற்கு பல மடங்கு கிடைத்து விடுகிறது. அதனால் தான் சங்கமயுகத்தின் மகிமை இருக்கிறது. அனைத்தையும் விட சங்கமயுகத்தின் மிகப் பெரிய பலன் சுயம் தந்தை பிரத்யக்ஷ ரூபத்தில் கிடைக்கிறார் பரமாத்மாவும் சாகார மனித ரூபத்தில் சந்திப்பதற்காக வருகிறார். இந்த பலனில் மற்ற அனைத்து பலன்களும் வந்து விடுகின்றன. நல்லது,

**வரதானம்: கீதையின் பாடம் படிக்கும் மற்றும் படிப்பிக்கும் பற்றுதலை வென்று நினைவு சொரூபமானவர் ஆகுக!**

கீதை ஞானத்தின் முதல் பாடம் உடலற்ற ஆத்மா ஆகுங்கள் மற்றும் கடைசிப் பாடம் பற்றுதலை வென்று நினைவு சொரூபமானவர் ஆகுங்கள் என்பதாகும். முதல் பாடம் விதியாகும் மற்றும் கடைசி பாடம் விதி மூலம் சித்தி ஆகும். அப்படி ஒவ்வொரு நேரமும் முதலில் நீங்கள் இந்தப் பாடத்தை படியுங்கள். பிறகு மற்றவர்களுக்கு படிப்பியுங்கள். நீங்கள் அந்த மாதிரி உயர்ந்த காரியம் செய்து காண்பியுங்கள், உங்களுடைய உயர்ந்த காரியத்தைப் பார்த்து அனேக ஆத்மாக்கள் உயர்ந்த காரியம் செய்து தன்னுடைய பாக்கிய ரேகையை உயர்ந்ததாக ஆக்கிக் கொள்ளட்டும்.

**சுலோகன்: பரமாத்மா அன்பில் மூழ்கியிருந்தீர்கள் என்றால் கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விடுவீர்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 02.06.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அனைத்து ஆத்மாக்களின் ஆதாரமானவர், நன்மை செய்பவர் மற்றும் மூதாதையர் -பிராமணரிலிருந்து தேவதைகளே!

பாப்தாதா நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகளை விசேஷமாக அவர்களின் இரண்டு ரூபங்களில் பார்த்துக் கொண்டிருக்கிறார். அந்த இரண்டு ரூபங்கள் எவை, தெரிந்திருக்கிறீர்களா? அந்த இரண்டு ரூபங்கள் -ஒன்று அனைவரின் பூர்வஜமானவர் (மூதாதையர்), இன்னொன்று அனைவரின் பூஜைக்குரியவர். அப்படி பூர்வஜமானவர் மற்றும் பூஜைக்குரியவர். பூஜையின் கூடவே மகிமைக்கும் தகுதியானவராக இருக்கவே இருக்கிறார்கள். அப்படி நான் தான் அனைத்து மத ஸ்தாபகர்கள் மற்றும் அனைத்து மதங்களின் ஆத்மாக்களின் மூதாதையர் என்று தன்னுடைய இரண்டு ரூபங்களின் நினைவு இருக்கிறதா? பிராமணரிலிருந்து தேவதை ஆகுபவர்' அதாவது ஆதி சனாதன தர்மத்தின் ஆத்மாக்கள், விதை அதாவது தந்தை மூலமாக நேரடியாக தண்டு ரூபத்தில் இருக்கிறார்கள். கல்ப விருட்சத்தின் படத்தில் கூட உங்களுடைய இடம் எங்கே இருக்கிறது? மூல ஸ்தானம் தான் இல்லையா? அப்படி மூலமானது தண்டு, அதன் மூலமாகத் தான் அனைத்து மதங்கள் என்ற கிளைகள் உருவாகின்றன. அப்படி மூல ஆதாரமானவர் அதாவது அனைவரின் பூர்வஜமானவர் (மூதாதையர்} 'பிராமணனிலிருந்து தேவதை ஆகுபவர் ஆகும், அந்த மாதிரி பூர்வஜமானவர்கள் அதாவது ஆதிதேவ் மூலமாக ஆதி படைப்பாக இருப்பவர்கள். ஒவ்வொருவருக்கும் தன்னுடைய மூதாதையர் மேல் மரியாதையும் அன்பும் இருக்கும். ஒவ்வொரு காரியத்தின் ஆதாரமாக, குலத்தின் மரியாதைகளின் ஆதாரமாக, பழக்க வழக்கத்தின் ஆதாரமாக பூர்வஜமானவர்கள் இருப்பார்கள். அப்படி அனைத்து ஆத்மாக்களின்

# 1977 அவ்யக்த முரளி

ஆதாரமானவர் மற்றும் நன்மை செய்பவர் பூர்வஜமானவர் நீங்கள் ஆவீர்கள். அப்படி தன்னுடைய உயர்ந்த சுவமானத்தில் (சுயமரியாதையில்) நிலைத்திருக்கிறீர்களா?

பூர்வஜ்'ன் சுவமானம் இருக்கும் காரணத்தினால் பூர்வஜமானவர்களின் ஸ்தானத்திற்கும் சுயமரியாதை இருக்கிறது. எந்த மதத்தைச் சேர்ந்தவர்களும் தெரியாதிருந்த போதிலும் பாரத பூமி அதாவது பூர்வஜமானவர்களின் ஸ்தானத்தை மகத்துவத்தின் பார்வையோடு பார்க்கிறார்கள். கூடவே அனைத்து மகான் பிராப்திகளின் ஆதாரமான சகஜ யோகா மற்றும் வேறு எந்த விதமான யோகமற்றும் ஆத்மீக சக்தியின் பிராப்தியின் கேந்திரமாக பாரதத்தைத் தான் நம்புகிறார்கள். பாரதத்தின் நினைவுச்சின்னமான கீதா சாஸ்திரத்தையும் அனைத்து சாஸ்திரங்களின் உயர்ந்த மரியாதைக்குரிய சாஸ்திரமாக நம்புகிறார்கள். அறிவியல் மற்றும் அமைதி இரண்டிற்கும் பிரேரணை கொடுக்கக்கூடியது கீதா சாஸ்திரம் என்று நம்புகிறார்கள். தன்னுடைய பூர்வஜமானவர்களின் படங்கள் மற்றும் வாழ்க்கை சரித்திரத்தைப் பார்ப்பதற்கும் மற்றும் கேட்பதற்கும் மனதில் ஆர்வம் உருவாகிறது முழுமையான அறிமுகம் இல்லாத காரணத்தினால், நினைவு இல்லாத காரணத்தினால், விருப்பம் இருந்த போதிலும் மதம் மற்றும் தேசத்தின் வேற்றுமை இருக்கும் காரணத்தினால் அந்த அளவு அருகில் வர முடிவதில்லை. இந்த அனைத்து விஷயங்களின் காரணமாக அந்த அனைவரின் மூதாதையர் நீங்களே ஆவீர்கள். எப்படி உலகியல் முறையில் கூட தன்னுடைய பூர்வஜமானவர்களின் பூமி அதாவது இடத்தின் மேல், படங்களின் மேல், பொருட்களின் மேல் மிகுந்த அன்பு ஏற்படுகிறது. அதே போலஹேதரிந்தும் தெரியாமலும் பாரதத்தின் பழைய பொருட்கள் மற்றும் பழைய படங்களின் மதிப்பு மற்ற மதத்தைச் சேர்ந்தவர்களிடம் இன்று வரை இருக்கிறது.

அந்த மாதிரி பொறுப்பாளராக ஆகியிருக்கும் பூர்வஜ ஆத்மாக்கள் நாம் இந்த நேரம் மனம், சொல் மற்றும் செயல் மூலமாக என்ன காரியம் செய்கிறோம் மற்றும் எந்த எண்ணத்தை உருவாக்குகிறோமோ அது அனைத்து ஆத்மாக்கள் வரை சென்றடைகிறது என்ற இந்த மகாமந்திரத்தை எப்பொழுதும் நினைவு வைக்கிறீர்களா? தண்டு மூலமாகத் தான் அனைத்து கிளைகளுக்கும் சக்தி கிடைக்கிறது. அந்த

மாதிரி ஆத்மாக்கள் உங்கள் மூலமாகத் தான் அனைத்து ஆத்மாக்களுக்கும் உயர்ந்த எண்ணங்களின் சக்தி மற்றும் அனைத்து சக்திகளின் பிராப்தி இயல்பாகவே ஆகிக்கொண்டிருக்கிறது. இந்த அளவு கவனம் இருக்கிறதா? பூர்வஜமானவரைத் தான் அனைவரும் பின்பற்றி நடப்பார்கள். எனவே எந்த எண்ணம், எந்த காரியத்தை நீங்கள் செய்வீர்களோ அதை ஸ்தூல மற்றும் சூட்சும ரூபத்தில் அனைவரும் பின்பற்றுவார்கள். இவ்வளவு பெரிய பொறுப்பு இருக்கிறது என்று புரிந்து கொண்டு ஒவ்வொரு எண்ணத்தையும் மற்றும் காரியத்தையும் செய்கிறீர்களா? பூர்வஜ ஆத்மாக்கள் உங்களின் ஆதாரத்தினால் இந்த உலகின் காலத்தின் மற்றும் நிலையின் ஆதாரம் இருக்கிறது. எப்படி நீங்கள் சதோபிரதானமாக (உயர்ந்த நிலையில் இருக்கிறீர்கள் என்றால் முழு உலகத்தின் இயற்கை மற்றும் வாயுமண்டலம் பொற்காலத்தின் சதோபிரதானமாகஇருக்கிறது. அப்படி காலத்தின் மற்றும் நிலையின் ஆதாரம், இயற்கையின் ஆதாரம் பூர்வஜ ஆத்மாக்கள் உங்கள் மேல் இருக்கிறது. என்னுடைய காரியத்தின் ஆதாரம் நான் செய்த காரியத்தின் கணக்கின் அனுசாரம் விளைவாக என்னவோ அது தான் இருக்கும் என்று அப்படி மட்டும் நினைக்காதீர்கள் ஆனால் பூர்வஜ ஆத்மாக்களின் கர்மங்களின் விளைவுகள் தன்னையும் சேர்த்து அனைத்து ஆத்மாக்கள் மற்றும் படைப்புச் சக்கரத்தினுடன் சம்மந்தப்பட்டிருக்கிறது. அந்த மாதிரி நீங்கள் மகான் ஆத்மாக்களா? அந்த மாதிரி நினைவில் இருப்பதினால் எப்பொழுதும் கவனம் இருக்கும். எந்த விதமான அலட்சியமும் வராது. சாதாரண மற்றும் வீணான எண்ணம் மற்றும் காரியம் நடக்காது. எப்பொழுதும் இந்த உயர்ந்த பொசிஷனில் நிலையில்) இருந்தீர்கள் என்றால் மாயா ஆப்பொசிஷன் எதிர்ப்பு) செய்யாது. உங்களுடைய பொசிஷனின் எதிரில் அதுவும் நமஸ்காரம் செய்யும் 5 விகாரங்கள் மற்றும் 5 தத்துவங்கள் உங்கள் எதிரில் அடிமையின் ரூபத்தில் வந்து விடும். மேலும் 5 விகாரங்களுக்கு அரைக் கல்பத்திற்காக விடைபெற்றுச் சென்று விடு என்று ஆணையிட்டீர்கள் என்றால் அவை சென்று விடும். இயற்கை சதோபிரதானமானதாக சுகம் கொடுப்பதாக ஆகிவிடும். ஒருவேளை பூர்வஜத்தின் பொசிஷன் மூலம் எண்ணத்தினால் ஆணையிட்டீர்கள், ஆனால் அது அப்படி நடக்கவில்லை என்று இருக்கவே முடியாது. அதாவது இயற்கை மாற்றத்தில் வரவில்லை மற்றும் 5-விகாரங்கள் விடைபெறவில்லை என்ற இது இருக்க முடியாது. புரிந்ததா? அந்த மாதிரி உயர்ந்த சுவமானத்தை நாலாபுறங்களிலுமுள்ள

மகாவீர் குழந்தைகளுக்கு தந்தை நினைவூட்டுகிறார். அனைவருமே வரிசைக்கிரமமாகவோ இருக்கத் தான் இருக்கிறார்கள். நல்லது.

அந்த மாதிரி அனைவரின் ஆதாரமானவர், மாயா மற்றும் இயற்கையின் பந்தனங்களிலிருந்தும் விடுபட்ட, நிரந்தர அதிகாரி, நிரந்தரமாக தன்னுடைய பூர்வஜ பொசிஷனில் நிலைத்திருக்கக்கூடிய, தன்னுடைய ஒவ்வொரு எண்ணம் மற்றும் காரியம் மூலமாக அனைத்து ஆத்மாக்களையும் உயர்ந்தவராக மற்றும் சக்திசாலியாக ஆக்குவதற்கு பொறுப்பாளர் என்று புரிந்து கொள்பவர்களுக்கு, அந்த மாதிரி மாஸ்டர் படைப்பவர், மாஸ்டர் சர்வ சக்திவான், ஞானம் நிறைந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்,

**நிர்மல் சாந்தா தாதியுடன்:** நீங்கள் உங்களை பூர்வஜமானவர் என்று நினைக்கிறீர்களா? இப்பொழுது வெளிநாட்டிற்கு கூட தாதி சென்றிருக்கிறார் என்றால் எதற்காக சென்றிருக்கிறார். அனைத்து மதத்தைச் சேர்ந்தவர்களும் தாதியை தன்னுடைய பூர்வஜமானவர் என்ற பார்வையோடு பார்ப்பார்கள். இந்த ஆத்மாக்கள் நம்முடைய உறவினர்கள், நம்முடையவர்கள் என்ற அந்த உணர்வு வரும், வைப்ரேஷன் வரும் ஆனால் எப்படி எப்பொழுது அவர்கள் நெருக்கத்தில் வருவார்களோ அப்பொழுது புரிந்து கொள்ள முடியும் ஆனால் வைப்ரேஷன் அவசியம் வரும். ஒவ்வொரு இடத்திலும் உயர்ந்த பார்வையோடு உயர்ந்த ஆத்மாக்களின் பாவனையோடு வைப்ரேஷன் மூலமாக திருஷ்டி மூலமாக கொஞ்சம் பிராப்தி ஆகிவிட வேண்டும் என்ற இந்த பாவனையோடு பார்ப்பார்கள். மேலும் பார்த்துக் கொண்டும் இருக்கிறார்கள். எப்படி மேகங்களுக்கிடையே மறைந்திருக்கும் நிலவு கவர்ந்திழுத்துக் கொண்டிருக்கிறது. அந்த மாதிரி மிக உயர்ந்த ஒன்று மற்றும் உயர்ந்த நபர் என்று அப்படி அனுபவம் செய்வார்கள் ஆனால் ஞானம் இல்லாத காரணத்தினால் மேகங்களுக்கிடையே இப்பொழுது அனுபவம் செய்வார்கள். மேகங்களுக்கிடையே கொஞ்சம் கிரணங்கள், கொஞ்சம் குளுமை தென்படும். மேலும் தெளிவாக அடைவதற்காக ஈர்க்கப்படுவார்கள். அப்படி பூர்வஜமானவர்களின் பிரத்யக்ஷம் செய்வதற்கான சேவைக்காக சிலர் சாகாரத்தில் சிலர் ஆகாரத்தில் சூட்சும உலகில்) பொறுப்பாளர் ஆகிக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் எப்பொழுதும் ஒருவர் இன்னொருவரின் சகயோகியாஇருக்கிறார்

அப்படித் தான் இல்லையா? நீங்கள் அனைவரும் கூட உங்களை சகயோகி என்று நினைக்கிறீர்கள் தான் இல்லையா? பொறுப்பாளராகவோ ஒருவர் தான் ஆவார் ஆனால் காட்சியோ சக்திசேனைக்கு ஆகுமா அல்லது ஒருவருக்கு ஆகுமா? எப்படி தந்தை மூலமாக குழந்தைகளுக்கு காட்சிகள் கிடைக்கிறது, குழந்தைகள் மூலமாக தந்தைக்குக் கிடைக்கிறது. அதே போலவேபொறுப்பாளரான ஒரு ஆத்மா மூலமாக அனைத்து சகயோகி ஆத்மாக்களின் காட்சியும் கிடைக்கும். ஒருவேளை அனைவரும் அங்கு சென்று விட்டீர்கள் என்றால் மற்றபடி இங்கு யாரைப் பார்ப்பதற்காக வருவார்கள். மற்றவர்களும் இப்படித் தான் இருக்கிறார்கள் என்று கேட்பார்கள். பின்பு ஈர்க்கப்படுவார்கள். அனைத்தும் ஒரு தடவையிலேயேவா தென்படும்? வியாபாரியாக இருந்தாலும் கூட அனைத்து பொருட்களையும் ஒரே தடவையில் வெளியில் எடுத்து விடுகிறாரா என்ன? ஒவ்வொரு விஷயத்தின் மகத்துவம் வைத்துக் கொண்டே பின்பு அதை முன்னுக்கு வைப்பார்கள். நாடகப்படி ஒவ்வொரு இரத்தினத்தின் மதிப்பு வேறு வேறு நேரத்தில் மற்றும் வேறு வேறு நிலையில் பிரத்யக்ஷம் ஆகும். எனவே நாலாபுறங்களிலும் நினைவுச் சின்னமாக கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஒரே ஒரு இடத்தில் மட்டும் இருக்கின்றனவா? பின்போ ஒரே இடத்தில் அனைவரின் கோயில்கள் கட்டப்பட்டு விட வேண்டும் ஆனால் ஒவ்வொரு இரத்தினத்தில் ஒவ்வொரு ஸ்தானத்தில் வேறு வேறு விதமான சேவையின் மகத்துவம் இருக்கிறது. எனவே நாலாபுறங்களிலும் கோயில்கள் இருக்கின்றன. நாலாபுறங்களிலும் நினைவுச் சின்னங்கள் இருக்கின்றன இல்லையா? கிராமத்திலும் நினைவுச்சின்னம் இருக்கும். பூர்வஜமானவர்கள் உங்களுடைய நினைவுச்சின்னம் இல்லாத எந்தவொரு இடமும் இருக்காது. அந்த மாதிரி கிராமம் ஏதாவது இருக்கிறதா?

**தீதி அவர்களுடன்**: உங்களுடைய விமானம் வேகமானதா அல்லது தாதியினுடையதா? அவர்களுடைய விமானமோ ஸ்தூலமானது மற்றும் உங்களுடையது? அது அறிவியலின் விமானம் மற்றும் உங்களுடையது அமைதியின் விமானம் ஆகும். அறிவியலின் படைப்பவர் அமைதியாகும். அமைதியின் சக்தியிலிருந்து தான் அறிவியல் வந்தது. ஆக படைப்பவர் சக்திசாலியானவராக இருப்பார் இல்லையா? எப்படி பொறுப்பாளர் ஆகியிருக்கும் உடன் இருப்பவர் விசேஷமாக இந்த நேரம் எந்த நிலையில்

நிலைத்திருக்கிறார் காட்சிகள் அளிப்பவராகவா அல்லது வரம் அளிப்பவராகவா? மகாதானி ஆக இருக்கிறார். என்னென்ன பொக்கிஷங்கள் இருக்கின்றன, அதை அவர் தந்தையிடமிருந்து சக்தியைப் பெற்று சுலபமாக தன்னுடைய சக்தி மூலமாக அனைவருக்கும் எண்ணம் மூலமாக, வைப்ரேஷன் மூலமாக லைட், மைட்டின் அனுபவம் செய்விப்பது என்ற இந்த வரதானம் இருக்கிறது அப்படி பொறுப்பாளராக ஒரு இரத்தினம் ஆகியிருக்கிறார் அதே போல் இன்னும் மற்ற இரத்தினங்களும் ஆவார்கள். விசேஷமாக இந்த சேவைக்கான கங்கணத்தைக் கட்டிக் கொள்ள வேண்டும். அப்பொழுது சேவைக்கான புது திருப்பம் நடைமுறையில் தென்படும். பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்கள் யார் திரைச்சீலைக்கு உள்ளே இருக்கிறீர்களோ அவர்கள் எப்பொழுது மேடைக்கு வருவதற்கான தைரியத்தை காண்பிப்பார்களோ அப்பொழுது புதிய திருப்பம் ஏற்படும் முழு நேரமும் பூர்வஜமானவர் என்ற பொசிஷனில் நிலைத்திருந்து, தன்னை தண்டு என்று புரிந்து அனைத்து கிளைகளுக்கும் சக்திகளின் நீரைக் கொடுங்கள். இல்லையென்றால் யார் வறண்டு போய் இருக்கிறார்களோ அவர்களை மீண்டும் மீண்டும் பசுமையாக்குங்கள் நல்லது.

**பார்ட்டிகளுடன்: ஒவ்வொருவரும் தன்னை உலகிற்கு நன்மை செய்பவர் என்று புரிந்து கொண்டே ஒவ்வொரு எண்ணம் மற்றும் காரியம் மூலமாக உலகிற்கு நன்மை ஏற்பட வேண்டும் அந்த மாதிரி எண்ணம் மற்றும் காரியம் செய்கிறீர்களா?** எப்பொழுது ஒவ்வொரு எண்ணமும் உயர்ந்ததாக இருக்குமோ அப்பொழுது தான் தனக்கும் மற்றும் உலகிற்கும் நன்மை ஏற்படும். நான் உலக நன்மைக் காரியத்திற்குப் பொறுப்பாளராக இருக்கிறேன் என்று தன்னுடைய வேலை எப்பொழுதும் நினைவில் இருக்க வேண்டும் பொறுப்பாளர் தன்னுடைய வேலையை ஒருபொழுதும் மறப்பதில்லை. உலகியல் முறையில் கூட ஏதாவது வேலை செய்பவர் தன்னுடைய வேலையை நன்றாகச் செய்யவில்லை என்றால் அவரை என்ன செய்வார்கள்? (நீக்கி விடுவார்கள்). இங்கு யாரும் நீக்கப்படுவதில்லை ஆனால் அவராகவே வெளியேறிவிடுகிறார். அங்கு சம்பளத்தில் பிடித்துக் கொள்வார்கள் அல்லது வேலையிலிருந்து நீக்குவதற்கான எச்சரிக்கை கொடுப்பார்கள் இங்கு ஒருவேளை தன்னுடைய வேலையைச் சரியாக செய்யவில்லை என்றால் நாடகப்படி பிராப்தியின் சம்பளம் பிடிக்கப்பட்டு விடுகிறது. குஷி

குறைந்து விடுகிறது. சக்தி குறைந்து விடுகிறது. தெரியவில்லை குஷி ஏன் குறைந்து விட்டது என்று அவர்களே அனுபவம் செய்வார்கள். காரணமாக என்ன இருக்கிறது? ஏதாவது விதத்தில் தன்னுடைய வேலையை சரியாகச் செய்யவில்லை. ஏதோ கொஞ்சம் நிச்சயம் தவற விட்டு விடுகிறார்கள். அப்படி வேலையில் மிக நன்றாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்களா? உலக நன்மை செய்வதைத் தவிர வேறு ஏதாவது எண்ணம் இருப்பது என்ற இது இருக்க முடியாது. ஒருவேளை எண்ணம் இருக்கிறது என்றால் வேலை முடிந்து விட்டதா என்ன? அப்படி எப்பொழுதுமே தன்னுடைய வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்களா? அல்லது எல்லைக்குட்பட்ட பொறுப்புகளை செய்து கொண்டே இந்த ஆன்மீகப் பொறுப்பை மறந்து விடுகிறீர்களா? நான் உலகிற்கு நன்மை செய்பவன் என்ற இந்த நிச்சயம் எப்பொழுதுமே இருக்கட்டும். எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு போதைஇருக்கும். ஒருவேளை போதைகுறைவாக இருக்கிறது என்றால் சேவையும் குறைவாக செய்வார்கள். எனவே தன்னுடைய வேலையில் எப்பொழுதும் மிக சரியாக இருங்கள். யார் வேலையில் மிகச் சரியாக இருப்பாரோ அவரை அனைவரும் நேர்மையானவர் என்ற பார்வையோடு பார்ப்பார்கள். உண்மையுள்ளவர் என்ற பார்வையோடு பார்க்கிறார்கள் இல்லையா? அதே போல் யார் தன்னுடைய சேவையில் மிகச் சரியாக இருக்கிறாரோ அவர் தான் தந்தைக்கு உண்மையானவர் என்று தந்தையும் நினைக்கிறார். ஒரு வகையினர் தந்தையின் நிச்சயத்தில் முழுமையானவர் ஆனால் தந்தையின் நிச்சயத்தின் கூடவே சேவையிலும் உண்மையானவராக இருக்க வேண்டும். இதுவும் பாடம் தான் இல்லையா? எப்படி ஞானத்தின் பாடம் இருக்கிறது அப்படியே சேவையின் பாடமும் இருக்கிறது. இதில் உண்மையாக இருப்பவர் தான் வரிசை எண்ணிலும் முன்னுக்குச் செல்ல முடியும். வரிசை எண் மொத்த மதிப்பெண்களின் ஆதாரத்தில் இருக்கும் ஆனால் மற்றவர்களுக்கு சேவை செய்து கொண்டே தனக்கும் சேவை செய்ய வேண்டும். தன்னுடைய சேவை செய்து கொண்டு மற்றவர்களின் சேவையை மறக்கவும் கூடாது அல்லது மற்றவர்களுக்கு சேவை செய்து கொண்டு தன்னுடைய சேவையையும் மறக்கக்கூடாது. இரண்டிற்கும் சமநிலை வேண்டும். அந்த மாதிரியானவரைத் தான் உலகிற்கு நன்மை செய்பவர் என்று கூறுவது ஆத்ம ஞானியாக இருக்கிறீர்கள் ஆனால் உலகிற்கு நன்மை செய்பவர்களாக தந்தை மூலமாக பொறுப்பாளர் ஆகியிருக்கும்

குழந்தைகள் தான் ஆக முடியும். அப்படி மாதர்கள் மற்றும் சக்திசேனை, சக்தி ரூபத்தோடு சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்களா? தன்னுடைய பலஹீனம் இருக்கிறது என்றால் சேவையிலும் பலஹீனம் ஏற்பட்டு விடும். எனவே சக்தி ரூபமாக சேவை செய்தீர்கள் என்றால் தான் வெற்றி கிடைக்கும். உங்களை சாதாரண மாதா என்று நினைக்காதீர்கள், ஜகத்மாதா என்று நினையுங்கள். ஜகத்மாதா என்றால் உலகிற்கு நன்மை செய்பவர். பாண்டவர்களும் தன்னை மகாவீர் என்று புரிந்து சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்களா? மகாவீரர்கள் கடினமானதை சுலபமாக ஆக்குவார்கள். நினைவுச்சின்னமாகக் கூட, சஞ்சீவினி மூலிகை கொண்டு வருவது எவ்வளவு கடினமாக இருந்தது, ஆனால் முழு மலையையுமே தூக்கி வந்தார். மகாவீர் என்றால் மலையை கடுகாக ஆக்குபவர். அந்த மாதிரி மகாவீரன் ஆகி சேவைக் களத்தில் வாருங்கள். எப்படி உங்களுடைய நிலை இருக்குமோ அப்படி பிரதிபலன் கிடைக்கும். நடிகர் எப்பொழுது ஏதாவது ஒரு நடிப்பைச் செய்கிறார் என்றால் ஒருவேளை மேடை நல்லதாக இருக்கிறது என்றால் நடிப்பின் மதிப்பு இருக்கும். எனவே ஒவ்வொரு காரியத்தையும் செய்து கொண்டே ஸ்டேஜ் (மேடை) அதாவது மனநிலை எந்த மாதிரி இருக்கிறது என்று சோதனை செய்யுங்கள். சக்திசாலியான நிலை இருக்கிறதா அல்லது நடிக்க மட்டும் செய்து கொண்டே இருக்கிறீர்களா? தன்னுடைய நிலையில் இருந்து ஒவ்வொரு நடிப்பையும் செய்தீர்கள் என்றால் பின்பு எவ்வளவு வெற்றி கிடைக்கிறது என்று பாருங்கள்.

**மதுபன் நிவாசிகளுடன்:** அனைவரும் தடையற்றவர்களாக இருக்கிறீர்கள் தான் இல்லையா? இடைவிடாத யோகிகளாக இருக்கிறீர்களா? யோகா ஒருபொழுதும் துண்டிக்கப்படுவதில்லையே? யார் மேல் அன்பு இருக்கிறதோ அந்த அன்பை நடைமுறையில் தெரிந்து நடந்து கொள்பவர் இடைவிடாத யோகியாக இருப்பார்கள். இன்றைய மகான் ஆத்மாக்களாக யார் இருக்கிறார்களோ அவர்களுடைய பெயரும் அகண்டானந்த் என்றிருக்கிறது ஆனால் அனைத்திலும் அகண்ட சொரூபமாகவோ நீங்கள் தான் இருக்கிறீர்கள் இல்லையா? ஆனந்தத்திலும் அகண்டம் சுகத்திலும் அகண்டம் அப்படி அனைத்திலும் அகண்டமாக இருக்கிறீர்களா? சூழ்நிலை மற்றும் வைப்ரேஷனின் சகயோகம் இருக்கிறது. பூமியின் சகயோகமும் இருக்கிறது அப்படி மதுபன் நிவாசிகளைப் பொருத்தவரை சுலபமாகும். தீய சேர்க்கையில்

மட்டும் வந்து விடக்கூடாது. இன்னொன்று மற்றவர்களின் அவகுணங்களைப் பார்த்து, கேட்டு அதை பொருட்படுத்தாதவராக இருக்க வேண்டும். அப்படி இந்த விசேஷம் மூலமாக அகண்ட யோகியாகஆக முடியும். ஒருவேளை யாருடைய தீய சேர்க்கையில் வந்து அல்லது அவகுணத்தை பார்க்கிறீர்கள் என்றால் யோகா துண்டித்து விடுகிறது. யார் யோகியாக இல்லையோ அவர் பூஜைக்குரியவராக ஆக முடியாது. ஒருவேளை யோகா துண்டிக்கப்படுகிறது என்றால் கொஞ்ச காலத்திற்காக பூஜைக்குரியவராக இருப்பார் சதா காலத்திற்கான பூஜைக்குரியவர் ஆக வேண்டும் இல்லையா? அரைக்கல்பம் நீங்களே பூஜைக்குரிய சொரூபம், அரைக்கல்பம் ஜடச்சிலைகளுக்கான பூஜை அந்த மாதிரி இருக்கிறீர்களா? நல்லது.

**வரதானம்: பிரசன்னத்தின் (முகமலர்ச்சி) ஆன்மிக ஆளுமைத்தன்மை பெர்சனாலிடி தன்மையின் மூலமாக அனைவரையும் அதிகாரி ஆக்கக் கூடிய மகிமை மற்றும் பூஜைக்குரியவர் ஆகுக!**

யார் அனைவரிடமிருந்து திருப்தியின் சான்றிதழைப் பெறுகிறாரோ அவர் எப்பொழுதும் பிரசன்னமாக இருக்கிறார். மேலும் இந்த பிரசன்னத்தின் ஆன்மீக ஆளுமைத் தன்மையின் காரணமாக புகழ் பெற்றவராக அதாவது மகிமை மற்றும் பூஜைக்குத் தகுதியானவர் ஆகிவிடுகிறார். நற்சிந்தனையாளர், மகிழ்ச்சி நிறைந்து இருக்கக்கூடிய ஆத்மாக்கள் உங்கள் மூலமாக குஷியின், ஆதரவின், தைரியத்தின் இறக்கைகளின் ஊக்கம், உற்சாகத்தின் மூலம் என்ன பிராப்தி ஆகிறதோஅந்த பிராப்தி யாரையாவது அதிகாரி ஆக்கிவிடுகிறது மற்றும் வேறு யாரையாவது பக்தன் ஆக்கிவிடுகிறது.

**சுலோகன்: தந்தையிடமிருந்து வரதானத்தைப் பெறுவதற்கான சுலபமான வழி உள்ளப்பூர்வமான அன்பு வைப்பது!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

## 05.06.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆன்மீக வாழ்க்கையின் கடமையே விகாரியை நிர்விகாரி ஆக்குவது ஆகும்!

எப்பொழுதும் தன்னை உலக மாற்ற காரியத்தில் சகயோகியாக இருந்து அதே ஈடுபாட்டோடு இருக்கிறேன் என்று புரிந்து நடந்து கொள்கிறீர்களா? எது பாப்தாதாவின் காரியமோ அதுவே என்னுடைய காரியம் என்ற இந்த நினைவு இருக்கிறதா? எப்படி தந்தை அனைத்து சக்திகள் மற்றும் குணங்களின் கடலாக இருக்கிறாரோ அதே போல் தன்னையும் நிரம்பியவராக அனுபவம் செய்கிறீர்களா? தன்னுடைய பலஹீனமான எண்ணம் மற்றும் சம்ஸ்காரத்தை மாற்றம் செய்யும் சக்தியில் பலம் வந்திருக்கிறதா? ஏனென்றால் எதுவரை தன்னை மாற்றிக் கொள்ளும் சக்தியில் பலம் இல்லையோ அதுவரை உலக மாற்றத்தை செய்ய முடியாது. எனவே இதுவரை எந்த அளவு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று தன்னைப் பாருங்கள். எண்ணத்தில், வார்த்தையில், காரியத்தில் லௌகீகத்திலிருந்து அலௌகீகமாக எத்தனை சதவிகிதம் ஆகியிருக்கிறது? லௌகீகத்தை அலௌகீகமாக ஆக்குவது தான் பரிவர்த்தனை ஆகும். இந்த சக்தி அனுபவம் ஆகிறதா? எந்தவொரு லௌகீக பொருள் மற்றும் நபரைப் பார்த்தும் அலௌகீக சொரூபத்தில் பரிவர்த்தனை செய்யத் தெரிகிறதா? பார்வையை உள்உணர்வை எண்ண அலைகளை, வாயுமண்டலத்தை லௌகீகத்திலிருந்து அலௌகீகமாக மாற்றும் பயிற்சி இருக்கிறதா? எப்பொழுது பிராமணர்களின் ஜென்மமே அலௌக்கமாக இருக்கிறது என்றால் எப்படி அலௌகீக ஜென்மம், அலௌகீக தந்தை அலௌகீக பரிவாரம் என்றிருக்கிறது என்றால் அதே போலவே செய்யும் காரியமும் அலௌக்கமாக இருக்கிறதா? பிராமண வாழ்க்கையின் விசேஷ காரியமே லௌகீகத்தை அலௌகீகமாக ஆக்குவது. தன்னுடைய ஜென்மத்தின் காரியத்தின் கவனம் இருக்கிறதா? இம்மாதிரி லௌகீகத்தை அலௌகீகமாக மட்டும் மாற்றுவதற்கான

முயற்சியே அனைத்து பிரச்சனைகளிலிருந்தும், அனைத்து பலஹீனங்களிலிருந்தும் விடுவிக்க முடியும்.

அமிர்தவேளையிலிருந்து இரவு வரை என்னென்ன பார்க்கிறீர்கள், கேட்கிறீர்கள், நினைக்கிறீர்கள் மற்றும் காரியம் செய்கிறீர்களோ அவைகளை லௌகீகத்திலிருந்து அலௌகீகமாக மாற்றம் செய்யுங்கள். இந்தப் பயிற்சி மிக சுலபமானது ஆனால் கவனம் வைப்பதின் அவசியம் இருக்கிறது. எப்படி உடலுக்குத் தேவையான காரியங்களாகிய உணவு அருந்துவது, தண்ணீர் குடிப்பது நடப்பது ஆகியவற்றை இயல்பாகவே சுலபமான முறையில் செய்து கொண்டு இருக்கிறீர்கள். அப்படி உடலுக்கான காரியங்களையும் சேர்த்து ஆத்மாவின் மார்க்கம், ஆத்மாவின் உணவு ஆத்மாவின் முயற்சி அதாவது நடப்பது, ஆத்மாவாக சுற்றி வருவது ஆத்மாவின் ரூபத்தைப் பார்ப்பது மற்றும் ஆத்மாவின் ரூபத்தைப்பற்றி என்ன நினைப்பது என்ற இவற்றைக் கூடவே செய்து கொண்டிருந்தீர்கள் என்றால் லௌகீகத்திலிருந்து அலௌகீக வாழ்க்கையை சகஜமாக அனுபவம் செய்வீர்கள். எந்தவொரு லௌகீக நடவடிக்கைகளை ஒரு கருவியாக இருந்து செய்து கொண்டே தன்னுடைய லௌகீக காரியத்தின் ஈர்ப்பு மற்றும் சுமை தன் பக்கம் ஈர்க்காது எப்படி லௌகீக காரியம் நடந்த போதிலும் அலௌகீக காரியத்தின் காரணமாக இரட்டை வருமானத்தின் அனுபவம் ஏற்படுகிறது என்று அந்த மாதிரி அனுபவம் செய்வீர்கள். அலௌகீக சொரூபமே டிரஸ்டி ஆகும். டிரஸ்டி ஆகி காரியம் செய்வதினால் என்னவாகும், எப்படி ஆகும் என்ற இந்த சுமை முடிவடைந்து விடுகிறது. அலௌகீக சொரூபம் என்றால் தாமரை மலருக்குச் சமம் எப்படிப்பட்ட கீழான தரம் தாழ்ந்த சூழ்நிலை இருந்தாலும், எண்ண அலைகள் இருந்தாலும், எப்பொழுதும் தாமரை மலருக்குச் சமமாக இருப்பது. லௌகீக சேற்றில் இருந்த போதும் விலகி அதாவது ஈர்ப்பிலிருந்து விலகி மற்றும் எப்பொழுதும் தந்தையின் அன்பிற்குரியவராக அனுபவம் செய்வார்கள். எந்த விதமான மாயா நிறைந்த அதாவது விகாரங்களின் வசமாகிய நபரின் நெருக்கத்தினால் அவர் வசம் ஆகமாட்டார், ஏனென்றால் தன்னுடைய அலௌகீக காரியமாகிய வசமடைந்திருக்கும் ஆத்மாக்களை பந்தனத்திலிருந்து பந்தனமற்றவராக ஆக்குவது, விகாரியிலிருந்து விகாரமற்றவராக ஆக்குவது அதாவது லௌகீகத்திலிருந்து அலௌகீகமாக ஆக்குவது எப்பொழுதுமே

நினைவிருக்கும். இது தான் அலௌகீக வாழ்க்கையில் நாம் செய்யும் சாரியம் ஆகும். வசமடைந்திருக்கும் ஆத்மாவை விடுவிப்பவர் அவரே வசமாக முடியாது.

நாம் அனைவரும் ஒரு தந்தையின் குழந்தை ஆன்மீக சகோதரர்கள் ஆவோம். இந்த ஆன்மீக பார்வை நினைவிருப்பதால் தேகதாரி பார்வை அதாவது லௌகீக பார்வை எதன் மூலம் விகாரங்களின் உற்பத்தி ஆகிறதோ அந்த விதையே அழிந்து விடும். எப்பொழுது விதை அழிந்து விட்டது என்றால் பின்பு அனேக விதமான விஸ்தாரம் என்ற விகாரங்களின் மரம் இயல்பாகவே அழிந்து விடும். இன்று வரையிலும் அனேக குழந்தைகளிடமிருந்து பார்வை சஞ்சலமாகிறது மற்றும் பார்வை தீயதாக ஆகிறது என்ற புகார் இருக்கிறது. ஏன் இப்படி இருக்கிறது? எப்பொழுது லௌகீக தேகம் அதாவது உடலில் அலௌகீக ஆத்மாவைப் பார் என்று தந்தையின் கட்டளை இருக்கிறது என்றால், பின்பு உடலை ஏன் பார்க்கிறீர்கள்? ஒருவேளை பழக்கம் என்று கூறுகிறீர்கள், பழக்கத்தினால் கட்டாயப்படுத்தப்படுகிறீர்கள் மற்றும் அற்ப காலத்தின் ஏதாவதொரு ரசனையின் வசமாகி விடுகிறீர்கள். இதன் மூலம் ஆத்மா, பரமாத்மா பிராப்தியின் ரசனையில் இது வரையிலும் அனுபவி ஆகவில்லை. பரமாத்மா பிராப்தியின் ரசனை மற்றும் தேகதாரி கர்மேந்திரியங்கள் மூலமாக அற்ப காலத்திற்கு பிராப்தியாகும் ரசனை இதனுடைய மிகப் பெரிய வித்தியாசத்தை அனுபவம் செய்யவில்லை. எப்பொழுது அற்ப காலத்தின் காதின் ரசனை, வாயின் ரசனை, கண்களின் ரசனை மற்றும் ஏதாவது கர்மேந்திரியத்தின் ரசனை ஈர்க்கிறது என்றால் அந்த நேரம் இந்த மிகப் பெரிய வித்தியாசத்தின் இயந்திரத்தை உபயோகப்படுத்துங்கள். எப்பொழுது இந்த தேகத்தின் கவர்ச்சி, தேகத்தின் பார்வை, தேகம் மூலமாக பிராப்தியாகியிருக்கும் இந்த ரசனை பாம்பிற்குச் சமமாக நிரந்தரமாக அழிக்கக்கூடியது என்று ஏற்கனவே கூறியிருந்தோம். இது பாம்பின் விஷமா அல்லது கவர்ந்திழுக்கும் ரசனையா? இருந்தும் அமிர்த ரசனையை விட்டு விட்டு விஷத்தின் பக்கம் ஈர்க்கப்படுவது என்ற இதை என்னவென்று கூறலாம். அந்த மாதிரியானவரை ஞானம் நிறைந்தவர் மற்றும் மாஸ்டர் சர்வ சக்திவான் என்று கூறுவோமா? வசமாகியிருக்கும் ஆத்மா எப்பொழுதும் பலஹீனமாக மற்றும் தன் மேல் அதிருப்தியாக இருப்பார். இந்தக் காரணத்தினால் லௌகீகத்தை அலௌகீகத்தில் மாற்றம் செய்யுங்கள்.

முதல் பாடமான நான் ஆத்மா என்ற நினைவை உறுதி ஆக்குங்கள். ஆத்மா இந்த உடல் மூலமாக யாரைப் பார்க்கும்? ஆத்மா, ஆத்மாவைப் பார்க்குமேயன்றி உடலை அல்ல. ஆத்மா கர்ம இந்திரியங்கள் மூலமாக காரியம் செய்கிறது. அப்படி மற்ற ஆத்மாக்களையும் காரியம் செய்து கொண்டு இருப்பதைப் பார்த்து இந்த ஆத்மாவும் காரியம் செய்து கொண்டிருக்கிறது என்ற நினைவு இருக்கும். அந்த மாதிரி ஆன்மீக பார்வை உடையவராகி யாரைப் பார்த்தாலும் ஆத்மாவின் ரூபத்திலேயே பாருங்கள். இந்த பயிற்சியின் குறை இருக்கும் காரணத்தினால் பார்வை சஞ்சலமாகிறது அவரே முதல் பாடத்தை உறுதியாக்க வில்லை, மேலும் மற்றவர்களுக்கு பாடம் கற்பிக்கத் தொடங்கி விட்டார். இந்தக் காரணத்தினால் தன் மேல் கவளம் குறைவாக இருக்கிறது. மற்றவர்களுக்காக கவனம் அதிகமாக இருக்கிறது. தன்னை பார்ப்பதற்கான பயிற்சி குறைவாக இருக்கிறது மற்றவர்களைப் பார்க்கிறீர்கள் என்றால் அலௌகீகத்திற்குப் பதிலாக லௌகீக ரூபம் தான் தென்படுகிறது. தன்னுடைய பலஹீனங்களை குறைவாகப் பார்க்கிறீர்கள் மேலும் மற்றவர்களின் பலஹீனங்களை அதிகமாகப் பார்க்கிறீர்கள். அலௌகீக உள்உணர்வு அதாவது ஒவ்வொருவருக்காகவும் சுப பாவனை மற்றும் நன்மை பயக்கும் பாவனையோடு தொடர்பில் வருவது என்ற இதைத் தான் ஆன்மீக வாழ்க்கையின் ஆன்மீக உள்உணர்வு என்று கூறுவது ஆனால் ஆன்மீக உள் உணர்வுக்குப் பதிலாக உலகிய உள் உணர்வு அவகுணங்களை தாரணை செய்யும் உள் உணர்வு, பொறாமை மற்றும் வெறுப்பை தாரணை செய்யும் உள் உணர்வின் காரணமாக, ஆன்மீக வாழ்க்கையில் ஆன்மீக பரிவாரம் மூலமாக ஆன்மீக சகயோகத்தின் குஷி, ஆன்மீக அன்பின் பிராப்தியின் சக்தியை பிராப்தி செய்ய முடிவதில்லை. இந்தக் காரணத்தினால் உலகியல் உள் உணர்வையும் ஆன்மீக உள் உணர்வில் மாற்றம் செய்யுங்கள். அப்படி முயற்சி செய்வதில் பலஹீனம் இருப்பதற்கான காரணம் லௌகீகத்தை அலௌகீகத்தில் மாற்றம் செய்யத் தெரியவில்லை. லௌகீக சம்மந்தத்திலும் அவௌகீக சம்மந்தம் அதாவது ஆன்மீக சகோதரன் சகோதரியின் நினைவை வையுங்கள். எந்த விதமான சம்மந்தத்தின் பக்கம் லௌகீக சம்மந்தத்தின் ஈர்ப்பு ஈர்க்கிறது அதாவது பற்றுதலின் பார்வை செல்கிறது என்றால் லௌகீக சம்மந்தத்தினுள் தந்தையோடு அனைத்து அழியாத சம்மந்தத்தின்

நினைவு மற்றும் தந்தையின் அனைத்து உறவுகளின் அனுபவத்தின் ஞானம் குறைவாக இருக்கும் காரணத்தினால் புத்தி லௌகீக சம்மந்தத்தின் பக்கம் அலைகிறது. எனவே அனைத்து சம்மந்தங்களின் அனுபவியானவர் ஆகுங்கள், பிறகு லௌகீக சம்மந்தத்தின் பக்கம் ஈர்ப்பு இருக்காது. முழு நாள் நடவடிக்கைகளின் இடையே லௌகீகம் மற்றும் அலௌகீகத்தின் வித்தியாசத்தை நினைவில் வைத்தீர்கள் என்றால் லௌகீகத்திலிருந்து அலௌகீகம் ஆகிவிடும். பிறகு இந்த புகார் முடிவடைந்து விடும். மீண்டும் மீண்டும் ஒரே புகார் செய்வது எதை நிரூபிக்கிறது? அலௌகீக வாழ்க்கையின் அனுபவம் இல்லை என்பதைத் தான். எனவே இப்பொழுது தன்னை மாற்றிக் கொண்டே உலகத்தை மாற்றுபவராக ஆகுங்கள். புரிந்ததா? மிகச் சிறிய விஷயம் புரிவதில்லையா? மிகப் பெரிய கான்டிராக்ட்டையோ (ஒப்பந்தம்) எடுத்திருக்கிறீர்கள் -உலகத்திற்கு மிகப் பெரிய சவாலை கொடுத்திருக்கிறீர்கள். ஒரு விநாடியில் முக்தி ஜீவன்முக்தி கொடுப்போம் என்று சவால் விடுக்கிறீர்கள் இல்லையா? அழைப்பிதழில் என்ன எழுதுகிறீர்கள்? ஒரு நொடியில் தந்தையிடமிருந்து ஆஸ்தியை வந்தடையுங்கள் மற்றும் முக்தி, ஜீவன் முக்தியின் அதிகாரி ஆகுங்கள். அப்படி உலகிற்கு சவால் விடுபவர்கள் தன்னுடைய உள் உணர்வு பார்வையை மாற்றம் செய்ய முடியாதா? மாற்றம் செய்த பிறகே விடுவோம் அதாவது வெற்றியாளர் ஆகியே காண்பிப்போம் என்று தனக்கே சவால் கொடுங்கள். நல்லது.

ஒவ்வொரு எண்ணம், நேரம், உறவு மற்றும் நெருக்கம் ஆகியவற்றில் லௌகீகத்தை அலௌகீகமாக ஆக்கக்கூடிய அலௌகீக பிராமண வாழ்க்கையின் அனுபவியான, உலக மாற்றத்தின் கூடவே சுயமாற்றம் மூலமாக உலகிற்கு சரியான வழி காண்பிக்கக்கூடிய, எப்பொழுதும் தந்தையின் அனைத்து உறவுகளின் அனுபவியான அனைத்து பிராப்திகளின் ரசனையில் மூழ்கியிருக்கக்கூடிய ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற அனுபவம் செய்யக்கூடிய அனுபவியானவர்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன்**: டிரஸ்டியின் முக்கிய லட்சணமாக என்ன தென்படும்? யார் டிரஸ்டியாக இருப்பாரோ அவர் எப்பொழுதும் ஒவ்வொரு விஷயத்திலும் லேசாக அனுபவம் செய்வார். இது தான் அவருடைய

முக்கியமான லட்சணம் ஆகும். டபுள் லைட்டாக அனுபவம் செய்வார். உடலின் உணர்வுக்கான சுமையும் இல்லாமல் இருக்க வேண்டும். இதைத் தான் டிரஸ்டி என்று கூறுவது ஒருவேளை தேக உணர்வின் சுமை இருக்கிறது என்றால் ஒரு சுமையின் கூடவே அனேக விதமான சுமை வந்து விடும். இந்த சுமைகளிலிருந்து விலகியிருப்பதற்கான சாதனம் டிரஸ்டி நிலை ஆகும். எனவே தேக உணர்வில் எவ்வளவு நேரம் இருக்கிறோம் என்று இதை சோதனை செய்யுங்கள். எப்பொழுது தந்தையின் குழந்தை ஆகிவிட்டீர்கள் என்றால் உடல், மனம், பொருளையும் சேர்த்து தந்தையின் குழந்தையாக ஆகிவிடுங்களேன்? அனைத்தையும் தந்தைக்குக் கொடுத்து விட்டீர்கள் இல்லையா? எப்பொழுது கொடுத்து விட்டீர்கள் என்றால் தன்னுடையது என்பது எங்கிருக்கிறது? எப்பொழுது தன்னுடையது இல்லை என்றால் எந்த விஷயத்தின் மரியாதை வேண்டும்? ஒருவேளை மரியாதை வேண்டும் என்பதிருந்தால், இதிலிருந்து கொடுத்து விட்டு பின்பு எடுத்துக் கொள்கிறீர்கள் என்பது நிரூபணம் ஆகிறது. இப்பொழுது கொடுத்தீர்கள், அடுத்த நேரம் எடுத்துக் கொண்டீர்கள், இந்த விளையாட்டை விளையாடுகிறீர்கள். டிரஸ்டி என்றால் என்னுடையது என்பது இல்லாத நிலை. எப்பொழுது என்னுடையது என்பது இல்லாமல் ஆகிவிடுமோ அப்பொழுது பற்றுதலும் முடிவடைந்து விடும். டிரஸ்டி பந்தனம் உள்ளவராக அன்றி சுதந்திர ஆத்மாவாக இருப்பார். எந்தவொரு ஈர்ப்பின் வசமாவது கூட டிரஸ்டி நிலை இல்லை. டிரஸ்டி என்றாலே சுதந்திரமானவர்.

சேவை ஸ்தானத்தில் சேவையின் பொறுப்பாளர் என்ற ரூபத்தில் இருக்கும் ஆத்மாக்களேயன்றி யாரும் என்னுடைய லௌகீக பரிவாரத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பது எப்பொழுதும் புத்தியில் இருக்க வேண்டும். அனைவரும் ஆன்மீக சேவாதாரிகள், சிலர் சேவை செய்வதற்குப் பொறுப்பாளராக இருக்கிறார்கள், சிலருக்கு சேவை செய்ய வேண்டும். லௌகீக சம்மந்தம் கூட சேவைக்காகத் தான் கிடைத்திருக்கிறது -இவர் என்னுடைய மகன் அல்லது மகள் என்று அப்படியில்லை. சேவையின் காரணமாக இந்த சம்மந்தம் கிடைத்திருக்கிறது நான் கணவன், தந்தை, சித்தப்பா என்ற இந்த உறவு முடிவடைந்து விட வேண்டும், பின்பு டிரஸ்டியாக முடியும். எப்பொழுது என்னுடையது என்பது இருக்கிறதோ அப்பொழுது நினைவானது மறந்த

நிலையின் ரூபம் எடுத்து விடுகிறது. ஒருவேளை என்னுடையது முடிவடைந்து விட்டது என்றால் பற்றுதலை வென்றவராகி விடலாம். பற்றுதலை வென்ற நிலை என்றால் நினைவு சொரூபம் ஆகும்.

பற்றுதல் தான் மாதர்களுக்குப் மிகப் பெரிய சோதனை ஆகும். ஒருவேளை மாதர்கள் பற்றுதலை வென்றவர்களாகி விட்டார்கள் என்றால் வரிசை எண் முன்னுக்கே இருப்பார்கள். பாண்டவர்களுக்கு நம்பர் ஒன் ஆவதற்காக என்ன முயற்சி செய்ய வேண்டும்? பாண்டவர்கள் ஒருவேளை ஒருவரின் ரசனையின் நிலையில் ஒருமித்த புத்தி உடையவர்களாகி விட்டார்கள் என்றால் நம்பர் ஒன் ஆகிவிடுவார்கள். பாண்டவர்களின் புத்தி மிக அதிகமாக அங்கு இங்கு அலைவதாக இருக்கும். எனவே பாண்டவர்களின் புத்தி ஒருமுனைப்பட்டதாகி விட்டது என்றால் நம்பர் ஒன் ஆகிவிடுவார்கள். பொதுவாகவே பாண்டவர்களுக்கு வீட்டில் கூட ஒரு இடத்தில் அமர்வதற்கான பழக்கம் இருப்பதில்லை. ஸ்திரமாகி ஒரு இடத்தில் அமர மாட்டார்கள். எழுவார்கள், போவார்கள், வருவார்கள் இந்தப் பழக்கம் இருக்கும். புத்திக்கும் ஓடுவதற்கான பழக்கம் ஏற்பட்டு விடுகிறது. அதனுடைய பாதிப்பு புத்தியில் தான் வருகிறது. சக்ரவர்த்தி ஆக வேண்டும் என்றால் இப்படி சக்கரம் அடிக்க வேண்டும் அதாவது சுற்றி வர வேண்டும் என்றோ நினைக்கவில்லையே? இப்படி வீணாகச் சுற்றி வராதீர்கள். சுயதர்ஷன சக்கரதாரி ஆகுங்கள் பரதர்ஷன (மற்றவைகளை, மற்றவர்களைப் பார்க்கும்) சக்கரதாரி ஆகாதீர்கள்.

அனைவரும் தன்னுடைய புதிய வாழ்க்கை அதாவது பிராமண வாழ்க்கையின் உயர்ந்ததிலும் உயர்ந்த போதையில் இருக்கிறீர்களா? அனைத்தையும் விட உயர்ந்த வாழ்க்கை பிராமண வாழ்க்கையாகும். புது ஜென்மம் உயர்ந்ததிலும் உயர்ந்த பிராமண ஜென்மம் ஆகும். அதைத் தான் ஆன்மீக/தெய்வீக ஜென்மம் என்று கூறுவது. அப்படியானால் இந்த போதை இருக்கிறதா? உயர்ந்ததிலும் உயர்ந்த ஆத்மாக்களின் எண்ணம், காரியம் எப்பொழுதும் சாதாரணமானதாக அன்றி உயர்ந்ததாக இருக்கும். எப்படி உலகத்தில் கூட ஒருவேளை ஏதாவது செல்வந்தர் பிச்சைக்காரனின் காரியம் செய்கிறார் என்றால் என்னவாகும்? அனைவரும் சிரிப்பார்கள் இல்லையா? அப்படி உயர்ந்த காரித்திற்குக் பதிலாக சாதாரண காரியம் செய்கிறார் என்றால் அனைவரும் என்ன

கூறுவார்கள்? எனவே பிராமணன் ஒருபொழுதும் வீணான எண்ணம் மற்றும் வீணான காரியத்தை செய்ய முடியாது.

கேட்ட பிறகு, கேட்டதை சொரூபத்தில் கொண்டு வருவது என்றால் நிரப்புவது. சொல்வதோ பரம்பரையாக வந்து கொண்டிருக்கிறது ஆனால் சங்கம யுகத்தின் விசேஷமே சொரூபத்தில் கொண்டு வந்து உலகிற்கு காண்பிக்க வேண்டும். சொல்பவர்களும் அதிகமாக இருக்கிறார்கள், ஆனால் சொரூபத்தில் கொண்டு வருபவர்கள் கோடியில் சிலர். அப்படி நீங்கள் சொரூபத்தில் கொண்டு வருபவர்களேயன்றி கூறுபவர்கள் அல்ல; என்ன கேட்டிருக்கிறோமோ அதை எந்த அளவு சொரூபத்தில் கொண்டு வந்திருக்கிறோம் என்று பார்க்க வேண்டும். சொரூபத்தில் கொண்டு வருபவரை எந்த மூர்த்தி என்று கூறலாம். சாட்சாத் மற்றும் சாட்சாத்கார மூர்த்தி அப்படியானால் நீங்கள் சாட்சாத்கார மூர்த்தி தான் இல்லையா? தன்னையும் சாட்சாத்காரம் செய்விப்பவர் மற்றும் தன் மூலமாக தந்தையின் சாட்சாத்காரமும் செய்விப்பவர். தன்னுடைய சாட்சாத்காரம் என்றால் மற்றவர்களுக்கும் தன்னுடைய ஆத்மீக சொரூபத்தின் சாட்சாத்காரம் செய்விப்பவர். அந்த மாதிரி சாட்சாத்காரம் செய்விப்பவரைத் தான் சொரூபமானவர் என்று கூறுவது நீங்கள் அனைவரும் அப்படித் தான் இருக்கிறீர்கள் இல்லையா? நல்லது.

**வரதானம்: பிராமண வாழ்க்கையில் ஒவ்வொரு நொடியும் சுகம் நிறைந்த நிலையை அனுபவம் செய்யக்கூடிய சம்பூர்ண பவித்ர ஆத்மா ஆகுக!**

தூய்மையைத் தான் சுகம், சாந்தியின் பிறப்பிடம் என்று கூறுவது. தூய்மையின்மையானது துக்கம், அமைதியின்மையின் அனுபவம் செய்விக்கும். பிராமண வாழ்க்கை என்றால் ஒவ்வொரு நொடியும் சுகம் நிறைந்த நிலையில் இருப்பவர். துக்கமானதாகத் தென்பட்டால் கூட எங்கு தூய்மையின் சக்தி இருக்கிறதோ அங்கு துக்கத்தின் அனுபவம் ஆக முடியாது. தூய்மையான ஆத்மாக்கள் மாஸ்டர் சுகம் கொடுப்பவர்களாகி துக்கத்தை ஆன்மீக சுகத்தின் சூழ்நிலையில் மாற்றம் செய்து விடுவார்கள்.

**சுலோகன்: சாதனங்களை உபயோகித்துக் கொண்டே சாதனாவை (இடைவிடாத பயிற்சி) அதிகரிப்பது தான் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வு ஆகும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 07.06.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கமயுகத்திற்கு (உயர்ந்த யுகத்திற்கு) விஷேச வரதானம் -முன்னேறும் கலை அனைவருக்கும் நன்மை பயப்பது!

அனைவரும் நேரத்திற்கு ஏற்றபடி தன்னை ஏறும் கலையில் ஒவ்வொரு விநாடியும் மற்றும் எண்ணத்தில் அனுபவம் செய்கிறீர்களா? ஏனென்றால் இந்த சின்னஞ்சிறு சங்கமயுகம் தான் முன்னேறும் கலைக்கானது என்று அனைவரும் தெரிந்திருக்கிறீர்கள். இந்த யுகத்திற்கு மற்றும் காலத்திற்கு நாடகப்படி 'முன்னேறும் கலை அனைவருக்கும் நன்மை பயப்பது' என்ற வரதானம் கிடைத்திருக்கிறது. வேறு எந்த யுகத்திற்கும் இந்த மாதிரியான வரதானம் பிராப்தியில்லை. சங்கமயுகத்தை தர்மாவு யுகம் (சிரேஷ்டமான என்றும் கூறப்படுவது அதாவது யதார்த்த தர்மம் மற்றும் யதார்த்த காரியம் செய்யக்கூடிய உயர்ந்த ஆத்மாக்கள் இந்த தர்மாவு யுகத்தில் தங்களுடைய பங்கைச் செய்கிறார்கள். தர்ம சக்தி, இராஜ்ய சக்தி, அறிவியலின் சக்தி, அனைத்து சக்திகளும் இந்த யுகத்தில் தான் தங்களுடைய முக்கிய பங்கைக் காண்பிக்கின்றன. அதாவது இந்த காலத்தில் தான் இந்த மூன்று சக்திகளும் ஆத்மாக்களுக்கு பிராப்தி ஆகிறது. அந்த மாதிரி உயர்ந்த காலத்தில் விசேஷ பங்கைச் செய்பவர்கள் யார்? தன்னை அந்த மாதிரி உயர்ந்த காலத்தில் பங்கைச் செய்பவர் என்று நினைக்கிறீர்களா?

முன்னேறும் கலைக்கான ஆதாரம் விசேஷ ஆத்மாக்கள் உங்கள் மேல் இருக்கிறது. உங்களுடைய முன்னேறும் கலையால் தான் அனைத்து ஆத்மாக்களுக்கும் நன்மை ஏற்படுகிறது. அனைத்து ஆத்மாக்களின் வெகுகாலத்து ஆசையான முக்தி அடைய வேண்டும் என்பது உங்களுடைய முன்னேறும் கலையின் ஆதாரத்தினால் தான் நிறைவேறுகிறது. அனைத்து ஆத்மாக்களின் முக்தி பிராப்தி செய்வதற்கான ஆதாரம் ஆத்மாக்கள் உங்களுடைய ஜீவன்முக்தியால்

பிராப்தியாகும். அப்படி தன்னை ஆதாரமூர்த்தி என்று நினைத்து நடந்து கொள்கிறீர்களா? கொடுப்பவர் தந்தை வள்ளல் ஆவார் ஆனால் பொறுப்பாளராக யாரை ஆக்கியிருக்கிறார்? ஆஸ்தி தந்தை மூலமாக பிராப்தி ஆகிறது ஆனால் தந்தையும் குழந்தைகளைப் பொறுப்பாளர் ஆக்குகிறார். நாம் விசேஷ ஆத்மாக்களின் ஆதாரத்தினால் அனைத்து ஆத்மாக்களுக்கும் நன்மை இருக்கிறது என்று இந்த அளவு கவனம் ஒவ்வொரு அடியிலும் தன் மேல் இருக்கிறதா? இந்த நினைவு வைப்பதினால் தற்சமயம் ஏதாவது ரூபத்தில் பெரும்பான்மையோரிடம் தென்படும் அலட்சியம் மற்றும் சோம்பல் முடிவடைந்து விடும். இந்தக் காரணத்தினால் முன்னேறும் கலைக்குப் பதிலாக நிற்கும் கலையில் வந்து விடுகிறார்கள். மேலும் இந்த நிற்கும் கலையிலும் கூட மிகவும் சாதுர்யமானவர்களாக ஆகிவிட்டார்கள். என்ன சாதுர்யத்தைக் காண்பிக்கிறார்கள்? கேட்டிருக்கும் ஞான விஷயங்கள் மற்றும் அவ்வப்பொழுது என்னென்ன யுக்திகள் தந்தை மூலமாக கிடைத்துக் கொண்டிருக்கிறது, அந்த யுக்திகள் மற்றும் விஷயங்களை யதார்த்த முறையில் உபயோகிப்பதில்லை தவறாக உபயோகிக்கிறார்கள். உள்நோக்கத்தை மறந்து வார்த்தையைப் பிடித்து கொள்கிறார்கள். தன்னுடைய பழைய சுபாவத்தின் வசமாகி யதார்த்த பாவத்தை (உள்நோக்கத்தை) சுபாவ வசமாகி மாற்றி விடுகிறார்கள்.

எப்படி குழந்தைகளை மாஸ்டர் திரிகாலதரிசிகளாக ஆக்குவதற்காக பாப்தாதா வாழ்க்கை நாடகத்தின் அனைத்து இரகசியங்களை குழந்தைகளின் எதிரில் தெளிவாக்குகிறார். நாடகத்தின் இரகசியத்தின் அனுசாரம் நாடகத்தில் புதிய இராஜ்யத்தில் அனைத்து விதமான பதவி அடைபவர்கள் இருக்கிறார்கள் மற்றும் மாலை வரிசைக்கிரமமாக உருவாகிறது என்றால் அனைவரும் மகாரதியாக ஆக மாட்டார்கள். மேலும் அனைவரும் வெற்றி மாலையிலும் வர மாட்டார்கள் என்று முயற்சி செய்பவர்களின் வரிசை எண் மற்றும் புது உலக இராஜ்யத்தின் இரகசியத்தைக் கூறுகிறார். அனைவருமே மகாராஜாவாகவோஆக மாட்டார்கள். எனவே நம்முடைய வாழ்க்கை பங்கே அந்த மாதிரி தென்படுகிறது. முன்னோக்கிச் செல்வதற்காக தந்தை இவற்றை கூறுகிறார். அதனால் குழந்தைகள் முன்னோக்கிச் செல்வதற்குப் பதிலாக தவறான விதமாக எடுத்துக் கொள்கிறார்கள். அதாவது தன்னுடைய அலட்சியம் மற்றும் சோம்பலை அகற்றுவதில்லை ஆனால்

தந்தை சொல்லும் விஷயத்தின் பாவத்தை மாற்றி, அதே விஷயத்தையே உதாரணமாக ஆக்கிவிடுகிறார்கள். மேலும் நீங்கள் அப்படி கூறினீர்கள் என்று தந்தைக்கு சொல்கிறார்கள் இந்த விதமாக தன்னுடைய பல விதமான சுபாவத்தின் வசமாகி யதார்த்த விஷயங்களின் பாவத்தை மாற்றி நிற்கும் கலையின் சதுரங்கத்தை மிக நன்றாக காண்பிக்கிறார்கள். மாயாவை வென்றவர் ஆவதற்கான வழிகளை அந்த நேரத்தில் காரியத்தில் ஈடுபடுத்துவதற்கான கவனத்தை அவர்களே குறைவாக வைக்கிறார்கள் ஆனால் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்வதற்கான சாதனமாக தந்தையின் வார்த்தைகளை உபயோகிக்கிறார்கள். மாயா மிகவும் பொல்லாதது என்று நீங்களே தானே கூறினீர்கள் என்று கூறுகிறார்கள். பிரம்மாபாபாவையும் மாயா விடுவதில்லை, மகாரதிகளையும் மாயா தாக்குகிறது. எப்பொழுது பிரம்மாபாபாவையே விடுவதில்லையோ, மகாரதிகளையும் விடுவதில்லை என்றால் எங்களிடம் வந்து நாங்கள் தோல்வி அடைந்தோம் என்றால் இது என்ன பெரிய விஷயம் இது நடக்கத் தான் செய்யும். கடைசி வரை இதுவோ இருக்கத் தான் செய்யும். இந்த விதமாக முயற்சி செய்வதில் நிற்பதற்கான வார்த்தைகளை தன்னுடைய ஆதாரமாக்கி முன்னேறும் கலையில் செல்வதிலிருந்து வஞ்சிக்கப்பட்டு விடுகிறார்கள். பாபா கூறுகிறார், மாயா வரும் ஆனால் மாயாவை வென்று உலகை வென்றவர்கள் என்று யார் வர்ணனை செய்யப்பட்டிருக்கிறார்கள்? ஒருவேளை மாயா வரவேயில்லை என்றால் எதிரியை எதிர்கொள்ளாமல் யாரையாவது வெற்றி அடைந்தவர் என்று கூறுவார்களா? மாயா வரும் ஆனால் தோல்வி அடைய வேண்டும் என்ற இதையோ தந்தை கூறவில்லை. மாயா மீது தாக்க வேண்டுமேயன்றி தோல்வி அடையக்கூடாது. ஒவ்வொரு கல்பத்திலும் வெற்றி அடைந்த ஆத்மாக்கள் நீங்கள் மேலும் வெற்றி அடைந்தவராக ஆகியே காண்பிப்போம் என்ற இந்த சக்திசாலியான வார்த்தையை மறந்து விடுகிறார்கள் ஆனால் தன்னுடைய பலஹீனத்தின் காரணமாக தந்தையின் வார்த்தைகளையும் பலஹீனம் ஆக்கி விடுகிறார்கள். எப்படி பிரம்மாபாபா மாயாவை வென்றவராகி உலகை வென்று பதவியை அடைந்தே விட்டார். இது ஒவ்வொரு கல்பத்தின் நினைவுச்சின்ன ரூபமாகவும் இருக்கிறது. எனவே எப்படி பிரம்மாபாபா மாயா பலம் பொருந்தியதாக இருந்தபோதிலும் தன்னை பலம் நிறைந்தவராக ஆக்கினாரேயன்றி பயப்படவில்லை. எனவே தந்தையைப் பின்பற்றி

நடங்கள். வெற்றி அடைய வேண்டும் என்ற உணர்வை கையில் எடுத்துக் கொள்ளுங்கள். முயற்சி இல்லாதவராக ஆவதின் உணர்வு, தன்னுடைய அற்ப புத்திக்கேற்றபடி புரிந்து கொண்டு தனக்கு ஏமாற்றம் கொடுக்காதீர்கள். தந்தையின் ஒவ்வொரு வார்த்தையில் ஒவ்வொரு ஆத்மாவின் மூன்று காலங்களின் நன்மை நிரம்பியிருக்கிறது. எனவே தான் உலகிற்கு நன்மை செய்பவர் என்று மகிமை செய்யப்பட்டிருக்கிறார். நன்மை பயக்கும் வார்த்தையை தன்னுடைய நன்மையின்மைக்காக காரியத்தில் ஈடுபடுத்தாதீர்கள். இன்றைய நாட்களில் பெரும்பான்மையோர் இந்த விதமான ஞானம் நிறைந்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். இந்த விதமான ஞானம் நிறைந்தவர் என்று புரிந்து கொள்வதினால் அனேகர் தன்னை அனைத்தும் தெரிந்தவர் என்று கூறுகிறார்கள். மேலும் செய்வது வீணானவை மற்றும் தவறான காரியம். இதை ராயல் ரூபத்தின் பாவம் என்று கூறுவோம் ஆனால் தன்னை அனைத்தும் தெரிந்தவர் என்று நிரூபிப்பதற்கான முறையை மிக நன்றாக தெரிந்திருக்கிறார்கள். வீணான காரியம் மற்றும் ராயல் ரூபத்தின் பாவம் பார்ப்பதற்கு ஒன்றாகத் தென்படுகிறது ஆனால் அது தனக்கும் மற்றும் மற்றவர்களுக்கும் நஷ்டத்தை ஏற்படுத்துவதாக இருக்கிறது. அந்த மாதிரி காரியம் செய்வதினால் அவரும் உள் மனதால் திருப்தியாக இருக்க மாட்டார், இது தான் அதைப் பகுத்தறிவதாகும். குஷியின் அனுபவம், சக்தியின் அனுபவம் சய்ய மாட்டார், தன்னை குணங்களினால் சக்திகளின் பொக்கிஷத்தால் காலியாக அனுபவம் செய்வார் ஆனால் வெளிமுகமாக தேக அகங்காரத்தின் காரணமாக, தனக்குத் தெரியும் என்ற அகங்காரம் இருக்கும் காரணத்தினால், தனக்கும் தெரியும் என்பதை தெளிவுபடுத்திக் கொண்டே இருப்பார். அவருடைய ஒவ்வொரு வார்த்தையும் உள்ளே காலி ஆனால் வெளியில் தன்னை மறைப்பதாக இருக்கும். எப்படி "காலியானது தான் சத்தம் போடும் அப்படி வெளிப்பகட்டு அதிகமாக இருக்கும் ஆனால் உள்ளே ஏமாற்றமாக, வெளிப்படையான பகட்டு இருக்கும். கூடவே அந்த மாதிரியான காரியங்களின் விளைவாக அனேக பிராமண ஆத்மாக்கள் மற்றும் உலகின் அஞ்ஞான ஆத்மாக்களுக்கு முறைகேடான சேவை செய்வதற்கான காரணமாகி விடுவார். அந்த மாதிரி பாவங்கள் மற்றும் வீணான காரியங்களின் காரணமாக ஒன்று தன் மேல் அதிருப்தியாக, இன்னொன்று அனேகருக்கு முறைகேடான சேவை செய்வதின்

காரணமாக ஏறும் கலைக்குப் பதிலாக நிற்கும் கலையில் வந்து விடுகிறார்கள்.

நடைமுறையில் குஷி ஏன் குறைந்து விடுகிறது என்று தன்னைத் தானே சோதனைசய்யுங்கள் மற்றும் தீவிரமாக முயற்சி செய்வதின் ஊக்கம், உற்சாகம் ஏன் குறைந்து விடுகிறது மற்றும் யோகம் நிறைந்த நிலைக்குப் பதிலாக வீணான எண்ணங்களின் பக்கம் ஏன் அலைந்து விடுகிறார்? மற்றும் தன்னுடைய சுபாவம், சம்ஸ்காரங்களின் பந்தனம் ஏன் விடுபடவில்லை? என்று தன்னை சோதனை செய்யுங்கள். என்ன காரணமாக இருக்கிறது? காரணத்தை தெரிந்திருக்கிறீர்களா? எப்படி தொடக்கத்தில் வந்ததும் தந்தையிடமிருந்து பிராப்தியாகியிருக்கும், முயற்சி செய்வதின் வழிமுறைகளை மிகக்கடுமையாக செய்யத் தொடங்கிவிடுகிறார்கள். இரவு பகலாக களைப்பு மற்றும் தடைகள் ஆகியவற்றை பொருட்படுத்துவதில்லை. தந்தை கிடைத்திருக்கிறார். ஆஸ்தி அடைய வேண்டும், அதிகாரி ஆக வேண்டும் இதே போதையில் அடியை மிக வேகமாக முன்னே எடுத்து வைத்துக் கொண்டே செல்கிறார்கள் ஆனால் இப்பொழுது என்ன செய்கிறார்கள்? எப்படி இன்றைய நாட்களில் கடின உழைப்பு செய்வது கடினமாக இருக்கிறது. சம்பளம் வேண்டும், ஆனால் கடின உழைப்பு வேண்டாம் அதே போல் பிராமண ஆத்மாக்களும் கடின உழைப்பிலிருந்து அலட்சியம் உடையவர்களாக ஆகிவிடுகிறார்கள் மற்றும் சோம்பலில் வந்து விடுகிறார்கள். அனைவருமே மகாவீரராக மற்றும் மகாரதியாக ஆக விரும்புகிறார்கள் ஆனால் உழைப்போ மெதுவாக நடந்து செல்பவருக்கானதைக் கூட செய்வதில்லை. தயாரான மேடையை விரும்புகிறார்கள். உழைத்து மேடையை உருவாக்க விரும்புவதில்லை. நான் எதிலும் குறைந்தவனாக இருக்கக்கூடாது ஆனால் மகாரதிகளின் பட்டியலில் இருக்க வேண்டும் என்று நினைப்பார்கள் ஆனால் மகாரதியின் உண்மையான அர்த்தம் 'மகாரதியின் மகான்தன்மை', அதில் நிலைத்திருப்பதை கடினமாக அனுபவம் செய்வார்கள். சகயோகி என்ற பெயரில் லாபத்தை சரியாக எடுத்துக் கொள்கிறார்கள். இந்தக் காரணமாக ஒவ்வொரு அடியிலும் என்ன உழைப்பு மற்றும் கவனம் வேண்டுமோ, முயற்சி செய்யும் வாழ்க்கையின் நினைவு வேண்டுமோ, தந்தையின் துணையின் சக்தி வேண்டுமோ அது நடைமுறையில் இருப்பதில்லை. கடின உழைப்பு செய்ய விரும்புவதில்லை ஆனால்

தந்தையின் உதவியோடு கடந்து செல்ல விரும்புகிறார்கள் தந்தையின் வேலையை அதிகமாக நினைவில் வைக்கிறார்கள் தன்னுடைய வேலையை மறந்து விடுகிறார்கள். இதன் காரணமாக என்ன வழிமுறைகள் கூறப்பட்டிருக்கிறதோ அதை காரியத்தில் ஈடுபடுத்துவதில்லை அந்த நேரத்தில் உபயோகிக்கத் தெரிவதில்லை ஆனால் யோகாரன் வருவதில்லை, என்ன செய்யட்டும் மற்றும் பந்தனம் ஏன் அகலுவதில்லை, என்ன செய்யட்டும்? என்று அடிக்கடி தந்தையிடம் கேட்க வருகிறார்கள் எப்பொழுது படித்த பாடம் மீண்டும் தங்ஸ்ண்ளங் �after ஸ்ரீர்ன்ழளங் நடந்து கொண்டிருக்கிறது, ஆழமாக உணர்ந்து அறியும் தங்ஹப்ண்ள்ண்ஹற்ண்ர்ய்) பாடம் நடந்து கொண்டிருக்கிறது என்றால் பாடத்தில் இதை தந்தை கூறவில்லையா என்ன? மீண்டும் கூறவேண்டிய அளவிற்கு ஏதாவது தங்கிப்போய் விட்டதா என்ன? முதலில் இதுவோ இரண்டாம் வகுப்பின் பாடமாகும். இந்தக் காரணத்தினால் கேட்டதை சிந்தனை செய்யுங்கள். சிந்தனை செய்யாததினால் சக்திசாலியாக ஆகாமல் பலஹீனமானவராக ஆகிவிட்டீர்கள் மேலும் பலஹீனமானவர் ஆன காரணத்தினால் அடிக்கடி நிற்கிறீர்கள். ஏறும் கலையின் அனுபவம் செய்ய முடிவதில்லை. எனவே பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்கள் நம்முடைய ஏறும் கலையின் காரணத்தினால் தான் அனைவருக்கும் நன்மை இருக்கிறது என்ற இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நல்லது.

தந்தையை மற்றும் தந்தையின் ஒவ்வொரு வார்த்தையையும் மிகச் சரியான ரூபத்தில் புரிந்து கொள்ளக்கூடிய, கடுமையாக உழைத்து தன்னை மகான் ஆக்கி அனைவரையும் மகான் ஆக்கக்கூடிய, ஒவ்வொரு அடியிலும் ஏறும் கலைக்கான லட்சியம் மற்றும் லட்சணத்தை அனுபவம் செய்யக்கூடிய, எப்பொழுதும் தன்னை அனேக விதமான மாயாவின் ராயல் ரூபத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளக்கூடிய, அந்த மாதிரி மாயாவை வென்ற, ஒவ்வொரு கல்பத்தின் வெற்றி இரத்தினங்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன்**: நிச்சயபுத்தியுடையவர் வெற்றி இரத்தினமாகிறார் என்ற இது எப்பொழுதும் நினைவிருக்கிறதா? நிச்சயத்தின் பலன் வெற்றியாகும். எந்தவொரு காரியம் செய்தாலும், ஒருவேளை காரியம் செய்து கொண்டே தன் மேல் தந்தை மேல், நாடகத்தில் நிச்சயம்

இருக்கிறது. அனைத்து விதத்திலும் நிச்சயம் இருக்கிறது என்றால் வெற்றி கிடைக்கவில்லை என்று ஒருபொழுதும் அப்படி இருக்க முடியாது. ஒருவேளை தோல்வி ஏற்படுகிறது என்றால் அதற்கான காரணம் நிச்சயத்தில் குறைவு. ஒருவேளை இது நடக்குமா அல்லது நடக்காதா, வெற்றி கிடைக்குமா அல்லது கிடைக்காதா என்று தன் மேலேயே சந்தேகம் இருக்கிறது என்றால் கூட முழுமையான நிச்சயம் என்று கூற மாட்டோம். நிச்சயபுத்தி உடையவரின் எண்ணம் பலஹீனமானதாக இல்லாமல் உறுதியானதாக இருக்கும். என்ன ஆகுமோ அதைச் செய்து விடலாம் என்று இது கூட சந்தேகத்தின் எண்ணம் ஆகும். என்ன ஆகுமோ என்றல்ல, ஆகும். என்பது நிச்சயிக்கப்பட்டது - இது தான் நிச்சயம் ஆகும். காரியம் செய்வதற்கு முன்பு கூட இது ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டது என்று அந்த மாதிரி நிச்சயம் வேண்டும். அந்த நிலை இருக்கிறதா? மாயா எப்படி வந்தாலும், ஆனால் மேலே கீழே ஆடக்கூடாது. நிச்சயபுத்தி உடையவர் ஒவ்வொரு புயலையும் மற்றும் மாயாவின் தடையை இது ஒன்றுமே இல்லை என்பது போல் கடந்து செல்வார். எப்படி கோடை இருந்தும் வெப்பம் இல்லாத நிலையை ஏற்படுத்த அறிவியலின் சாதனங்கள் இருக்கின்றன, அதே மாதிரி யார் நிச்சயபுத்தி உள்ளவராக இருப்பாரோ அவரின் எதிரில் மாயாவின் புயல் வரும் ஆனால் அவரைப் பொருத்தவரை பெரிய விஷயமாக இருக்காது. பாதுகாப்பாக இருப்பதற்கான சாதனம் அவரிடம் இருக்கிறது என்றால் மாயாவை வென்றவர் ஆகிவிடுவார். ஒவ்வொரு காரியத்தில் அவரே நிச்சயபுத்தி உடையவர். அந்த மாதிரி நிச்சயபுத்தி உடையவர் எப்பொழுதும் பார்வையாளராகி தன்னுடைய பங்கையும் பார்ப்பார் மற்றும் மற்றவர்களுடையதையும் பார்த்து குழப்பம் அடைய மாட்டார். ஏன், என்ன என்பதில் செல்ல மாட்டார்.

ஸ்தாபனையின் காரியத்தில் யார் ஆதி இரத்தினங்களோ அவர்களுக்கு ஆதி இரத்தினத்தின் போதை இருக்கிறதா? இந்த போதைகூட குஷியைக் கொடுக்கும். எந்த பாக்கியத்தை இன்று மனிதர்கள் கனவில் கூட பார்ப்பதற்கு கூட இச்சை வைக்கிறார்கள், அந்த பாக்கியத்தை நீங்கள் நடைமுறை வாழ்க்கையில் செய்து அனுபவம் செய்திருக்கிறீர்கள். நீங்கள் சைத்தன்யத்தில் அனுபவம் செய்திருக்கிறீர்கள், மற்ற அனைவரும் இப்பொழுது சரித்திரம் கேட்பவர்கள் தான் என்றால் இது குறைந்த பாக்கியமா என்ன? வேறு எந்த விதமான பாக்கியத்தையும் இப்பொழுது

அடைய முடியும், ஆனால் இந்த பாக்கியத்தை அடைய முடியாது. அந்த மாதிரி பாக்கியமோ கோடியில் சிலர், அந்த சிலரிலும் சிலருக்கு பிராப்தி ஆகிறது. ஒருவேளை தொடக்கத்தில் வந்திருந்தவர்கள் வேறு எதையும் நினைவு செய்யாவிட்டாலும் இது ஒவ்வொரு கல்பத்திலும் அடங்கியிருக்கும் எனது பங்கு என்று பாக்கியத்தை மட்டும் நினைத்துக் கொண்டிருக்கிறார் என்றால் கூட எப்பொழுதும் குஷியாக இருப்பார். பிராமணர்களின் விசேஷம் குஷி ஆகும். குஷியில்லை என்றால் பிராமணர் இல்லை.

தற்சமயம் வெளிநாடுகள் மூலமாக துரித சேவை தொடங்கிக் கொண்டிருக்கிறது. கொஞ்ச காலத்திற்குள் அனேகருக்கு ஒரே நேரத்தில் அனைத்து சாதனங்கள் மூலமாக செய்தி கொடுப்பது தொடங்கி விட்டது. எப்படி இப்பொழுது வெளிநாட்டினர் செய்தி கொடுப்பதில் அதிகமாக சகயோகிகளாக இருக்கிறார்கள். அனைத்து சாதனங்களும் சுலபமாக பிராப்தி ஆகிக் கொண்டிருக்கிறது, இதை வெளிநாட்டினரிடமிருந்து பாரதத்தினர் காப்பி செய்வார்கள். பாரதவாசிகள் பரந்த மனமுடையவர்களாக இருப்பதில்லை. சங்கோஜப்படுபவர் களாக இருக்கிறார்கள். வெளிநாட்டினர் திறந்த மனமுடையவர்களாக இருக்கிறார்கள். அப்படி அங்கே உள்ள இதே ஓசை பாரதம் வரை வந்தடைந்து பாரதத்திற்கு அறிவுரை கிடைக்கும். வெளிநாட்டினர் நம்முடைய பாரதத்தின் தத்துவத்திற்கு மகத்துவம் கொடுக்கிறார்கள். மேலும் நாம் கொடுப்பதில்லை என்று வெட்கம் வரும். ஒரே நேரத்தில் அனைத்து சாதனங்கள் மூலமாக துரித சேவைக்கான இந்த அஸ்திவாரம் பரவிக் கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு வருடமும் ஏதாவது புதுமை வேண்டும். அப்படி ஞானம் மற்றும் யோகாவின் ஞானத்தில் வெளிநாட்டினரிடம் இவர்கள் ஈர்க்கப்படுவார்கள். இது பாரதவாசிகளுக்கு ஒரு பாடம் கிடைத்து விடும் என்ன நடக்கிறது அந்த பங்கில் ஏதாவது விசேஷம் இருக்கிறது. அப்படி நாலாபுறங்களிலும் ஊக்கம், உற்சாகம் நன்றாக இருக்கும் காரணத்தினால் பிரதிபலன் நன்றாக இருக்கிறது. இதுவும் நினைவுச்சின்னம் ஆகிக் கொண்டே இருக்கும். இதே வெளிநாடு எங்கெல்லாம் பிராமணர்கள் மூலமாக சேவையின் பங்கு நடக்கிறதோ அதுவே எதிர்காலத்தில் சுற்றுலா ஸ்தானம் ஆகிவிடும். நினைவுச் சின்ன ரூபத்தில் ஆகும் ஆனால் கோயில் இருக்காது. நடைமுறை ஸ்தானத்தின் தோற்றம் நினைவுச் சின்னத்தின் ரூபத்தில் இருக்கும். விசேஷமாக

பெயர் பெற்ற நபர்கள் மூலமாக என்ன சேவை நடந்து கொண்டிருக்கிறதோ, அதன் மூலம் பாரதத்திற்கு அறிவுரையும் கிடைக்கிறது மேலும் எதிர்காலத்தில் இராஜ்யத்தின் ஸ்தானமும் நிச்சயம் ஆகிக்கொண்டே இருக்கிறது. நல்லது.

**வரதானம்: உயர்ந்த நேரத்திற்கு ஏற்ற படி எப்போழுதும் உயர்ந்த காரியம் செய்து பாராட்டின் பாடலை பாடக்கூடிய பாக்கியவான் ஆத்மா ஆகுக!**

இந்த உயர்ந்த நேரத்தில் எப்பொழுதும் உயர்ந்த காரியம் செய்து மனதால் ஆஹா ஆஹா என்ற பாடலை பாடிக்கொண்டே இருங்கள். "ஆஹா என்னுடைய உயர்ந்த காரியம் அல்லது ஆஹா உயர்ந்த காரியத்தைக் கற்றுக்கொடுக்கக்கூடிய பாபா" அப்படி எப்பொழுதும் ஆஹா ஆஹா என்ற பாடலைப் பாடுங்கள். ஒருபொழுதும் துக்கமான காட்சிகளைப் பார்த்துக் கொண்டும் ஐயோ என்ற வார்த்தை வெளியாக வேண்டாம். ஆஹா! டிராமா ஆஹா ஆஹா பாபா ஆஹா. எது கனவில் கூட இல்லாமல் இருந்ததோ அது வீட்டில் இருந்து கொண்டே கிடைத்தது. இதே பாக்கியத்தின் போதையில் இருங்கள்.

**சுலோகன்: மனம், புத்தியை சக்திசாலியாக ஆக்கி விட்டீர்கள் என்றால் எந்தவொரு குழப்பத்திலும் ஆடாமல் அசையாமல் இருப்பீர்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 10.06.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மந்திரம் மற்றும் இயந்திரத்தை நிரந்தரமாக உபயோகிப்பதினால் வேற்றுமை நீங்கி விடும்!

பாப்தாதா அனைத்து குழந்தைகளின் தற்சமயநிலை மற்றும் இறுதி நிலை இரண்டையும் பார்க்கிறார். அங்கங்கே தற்சமயத்தின் மற்றும் இறுதி நிலையில் வித்தியாசம் தென்படுகிறது. மேலும் சில இடங்களில் மிகுந்த வித்தியாசம் தென்படுகிறது. மிகுந்த வித்தியாசம் ஏன் இருந்து விடுகிறது. லட்சியமும் அனைவருக்கும் மிக உயர்ந்தவர் ஆக வேண்டும் என்ற ஒன்று தான். மேலும் பதவியை பிராப்தி செய்விப்பவரும் ஒருவர் தான். நேரத்தின் வரதானம் மற்றும் வரமளிக்கும் வள்ளலின் வரதானமும் அனைவருக்கும் கிடைத்திருக்கிறது. முயற்சி செய்யும் மார்க்கமும் ஒன்று தான், அழைத்துச் செல்பவரும் ஒருவர் தான். இருந்தும் இவ்வளவு வித்தியாசம் ஏன் ஏற்பட்டு விடுகிறது. என்ன காரணமாக இருக்கிறது என்று அந்தக் காரணத்தை பார்த்துக் கொண்டிருந்தோம்.

தற்சமயத்திற்கு ஏற்றபடி முக்கிய காரணமாக என்ன பார்த்தோம்? ஒன்று முதன்முதலான மன்மனாபவ, அதாவது நான் தான் தேவதை ஆகப்போகிறவன் என்னும் பாப்தாதா மூலமாகக் கிடைத்திருக்கும் மந்திரத்தை எப்பொழுதும் நினைவில் வைப்பதில்லை. பக்தி மார்க்கத்தில் கூட மந்திரத்தை ஒருபொழுதும் மறப்பதில்லை. மந்திரத்தை மறப்பது என்றால் குருவிடமிருந்து பிரிந்து சென்று விடுவோம் என்கிற பயம் இருக்கிறது ஆனால் குழந்தைகள் ஆன பிறகு என்ன செய்து விட்டீர்கள். பக்தர்களுக்கு இருப்பதை போன்ற பயமோ அகன்று விட்டது. இன்னும் முயற்சி செய்வதில் அதிகார உரிமையைப் புரிந்து கொள்வதின் லாபத்தை தவறாக எடுத்துக் கொண்டு தந்தையால் கொடுக்கப்பட்ட மந்திரத்தை மற்றும் ஸ்ரீமத்தை முழுமையான முறையில் நடைமுறையில் கொண்டு வருவதில்லை. ஒன்று மந்திரத்தை மறந்து விடுகிறார்கள்.

# 1977 அவ்யக்த முரளி

அடுத்தது மாயா ஜீத் ஆவதற்கு பாபா கொடுத்திருக்கும் பல்வேறு எந்திரங்களை (வழிகள்) சரியான நேரத்தில் உபயோகிப்பதில்லை. ஒருவேளை மந்திரம் மற்றும் இயந்திரம் என்ற இந்த இரண்டு விஷயங்களை, நடைமுறை வாழ்க்கைக்காக இயந்திரம் அதாவது புத்தி யோகத்தை நினைப்பதற்காக மற்றும் புத்தியை ஒருமுகப்படுத்துவதற்காகப் பயன்படும் மந்திரத்தை நினைவு வைத்தீர்கள் என்றால் வேற்றுமை அகன்று விடும். மன்மனாபவ என்பதை தினசரி கேட்கிறீர்கள் மற்றும் மற்றவர்களுக்கும் கூறுகிறீர்கள் ஆனால் நினைவு சொரூபமாக எந்த அளவு ஆகியிருக்கிறீர்கள்? முதல் பாடம் மகாமந்திரம் ஆகும். இந்த மந்திரத்தின் நடைமுறை தாரணையினால் தான் முதல் நம்பரில் வர முடியும். முதல் பாடத்தின் நினைவு சொரூபத்தின் குறைவின் காரணமாகத் தான் வெற்றி அடைபவர் ஆவதிலும் மதிப்பெண் குறைந்து விடுகிறது. மந்திரம் ஏன் மறந்து விடுகிறது? ஏனென்றால் பாப்தாதா ஒவ்வொரு நேரத்தின் நினைவு செய்வதன் பொருட்டு என்னென்ன வழிகாட்டுதல் கொடுத்திருக்கிறாரோ அதை மறந்து விடுகிறீர்கள்.

அமிர்தவேளையின் நினைவிற்கான சொரூபம், இறை ஞானத்தை படிப்பதற்கான நினைவின் நினைவு சொரூபம், காரியம் செய்து கொண்டே கர்மயோகியாக இருப்பதற்கான நினைவு சொரூபம். டிரஸ்டியாகி தன்னுடைய உடல் நிர்வாகத்திற்கான காரியங்களின் நேரத்தில் நினைவு சொரூபம், அனேக விகாரி ஆத்மாக்களின் நெருக்கத்தில் வரும் நேரத்திற்கான நினைவு சொரூபம், தீய எண்ண அலைகளை பரப்பும் ஆத்மாக்களின் எண்ண அலைகளை மாற்றம் செய்யும் காரியம் செய்வதற்கான நேரத்தின் நினைவு சொரூபம் என்று அனைத்து வழிகாட்டுதல்களும் கிடைத்திருக்கிறது. நினைவு இருக்கிறதா? எப்படி எதிர்காலத்தில் (சத்யுகத்தில்), எப்படி நேரத்திற்கு ஏற்றாற்போல் ஆடையை மாற்றுவீர்கள்? ஒவ்வொரு நேரத்தின் காரியத்திற்கான ஆடை மற்றும் அலங்காரம் வேறு வேறாக இருக்கும். அப்படி இந்தப் பயிற்சியை இங்கே தாரணை செய்வதினால் எதிர்காலத்தில் பலனின் ரூபத்தில் பிராப்தி செய்வீர்கள். அங்கே ஸ்தூலமான ஆடையை மாற்றுவீர்கள், மேலும் இங்கே எப்படி நேரமோ, எப்படி காரியமோ அப்படி நினைவு சொரூபம் இருக்கட்டும். பயிற்சி இருக்கிறதா அல்லது மறந்து விடுகிறதா? இந்த நேரத்தின் உங்களுடைய

பயிற்சியின் நினைவார்த்தமாக பக்தி மார்க்கத்திலும் கூட மிக பிரசித்தி பெற்ற கோவில்களிலும் அங்கேயும் நேரத்திற்கு ஏற்றபடி ஆடையை மாற்றுகிறார்கள். ஒவ்வொரு தரிசனத்திற்கான ஆடை வேறு வேறாக தயாரிக்கப்பட்டு இருக்கிறது. அப்படி இந்த நினைவுச் சின்னமும் எந்த ஆத்மாக்களினுடையது? எந்த ஆத்மாக்கள் இந்த சங்கமயுகத்தில் எப்படி நேரமோ அப்படி சொரூபத்தை உருவாக்குவதற்கான பயிற்சி உடையவர்களாக இருக்கிறார்களோ அவர்களுடையது. பாப்தாதா குழந்தைகளின் முழு நாளின் தினசரி நடவடிக்கைகளை சோதனை செய்கிறார். ரிசல்ட்டில் நேரத்திற்குத் தகுந்தாற் போல் நினைவு சொரூபத்தின் பயிற்சி குறைவாகத் தென்படுகிறது. நினைவிலிருக்கிறது, ஆனால் சொரூபத்தில் வரத்தெரிவதில்லை. அமிர்தவேளையின் நேரமாக இருக்கும், அந்த நேரம் விசேஷமாக குழந்தைகளுக்காக அனைத்து சக்திகளின் வரதானத்தின், அனைத்து அனுபவங்களின் வரதானத்தின், தந்தைக்குச் சமமாக சக்திசாலியான லைட் ஹவுஸ், மைட் ஹவுஸ் சொரூபத்தில் நிலைத்திருப்பதற்கான, உழைப்பு குறைவு, பிராப்தி அதிகம் ஆவதற்கான பொன்னான நேரம் ஆகும். அந்த நேரத்திலும் மாஸ்டர் விதை ரூபம், வரதானி சொரூபத்தின் என்ன நினைவு இருக்க வேண்டுமோ அதற்குப் பதிலாக, சக்திசாலியான சொரூபத்திற்குப் பதிலாக, தந்தைக்குச் சமமான நிலையை அனுபவம் செய்வதற்கு பதிலாக எந்த சொரூபத்தை தாரணை செய்கிறார்கள். பெரும்பான்மையோர் முறையீடு செய்கிறார்கள் அல்லது புகார் செய்கிறார்கள் அல்லது மனமுடைந்து போன சொரூபமாகி அமர்ந்து விடுகிறார்கள். வரதானி, உலகிற்கு நன்மை செய்யும் சொரூபத்திற்கு பதிலாக தனக்காக வரதானத்தை கேட்பவராக ஆகிவிடுகிறார். அல்லது தன்னுடைய புகார்கள் அல்லது மற்றவர்களின் புகார்களை செய்வார்கள். எனவே எப்படி நேரம், அப்படி நினைவு சொரூபம் இல்லாத காரணத்தினால் சக்திசாலியான சொரூபமாகவும் ஆக முடிவதில்லை. இந்த விதமாக முழு நாளின் நடவடிக்கைகளில், நேரத்திற்கு ஏற்ற மாதிரி சொரூபத்தை தாரணை செய்யாத காரணத்தினால் வெற்றி கிடைப்பதில்லை, பிராப்தி ஆவதில்லை. பின்பு குஷி ஏன் ஏற்படுவதில்லை என்று கூறுகிறார்கள். இதற்கான காரணம் என்ன? இயந்திரம் மற்றும் மந்திரத்தை மறந்து விடுகிறார்கள்.

# 1977 அவ்யக்த முரளி

இன்றைய நாட்களின் பெயர் பெற்றவர்கள் அல்லது யாரை பெரிய மனிதர்கள் என்று கூறுகிறார்களோ அவர்களும் எம்மாதிரி மேடையில் செல்கிறார்களோ அதே மாதிரியான ஆடை, அதே ரூபம் அதாவது தன்னுடைய சுபாவத்தையும் அதற்கேற்றபடி வைத்துக் கொள்ளும் இந்த நடைமுறை உள்ளது. ஒருவேளை குஷி நிறைந்த உற்சவத்தின் மேடையில் செல்கிறார்கள் என்றால் தன்னுடைய சொரூபத்தையும் அதற்கேற்றபடி பார்ப்பார்கள், 'எப்படி மேடையோ அப்படி சொரூபம்' என்னும் பயிற்சி உடையவராக இருப்பார்கள். அது அற்பகாலத்திற்கானதாக இருந்தாலும் சரி, அல்லது செயற்கையானதாக இருந்தாலும் சரி, ஆனால் யார் இந்த மாதிரி பயிற்சி உள்ள நபராக இருப்பாரோ அவர் தான் அனைவர் மூலமாகவும் மகிமைக்குரியவராக ஆகிறார். அவர்களுடையது செயற்கையானது, உங்களுடையது உண்மையானது. அப்படி உண்மை மற்றும் ராயல்தன்மையின் பயிற்சி உள்ளவராக ஆகுங்கள். 'என்னவாக இருக்கிறீர்கள், எப்படி இருக்கிறீர்கள், யாருடையவராக இருக்கிறீர்கள் அந்த நினைவில் இருங்கள். முதலில் ஒவ்வொரு நேரமும் அந்த மாதிரியான சொரூபம் இருந்ததா என்று சிந்தித்துப் பாருங்கள். ஒருவேளை இல்லை யென்றால். உடனே தன்னை சோதித்த பிறகு மாற்றம் செய்யுங்கள். காரியம் செய்த பிறகு செய்யாமல், காரியம் செய்வதற்கு முன்பு நினைவு சொரூபத்தை சோதனை செய்யுங்கள். எங்காவது, ஏதாவது காரியத்திற்காகச் செல்ல வேண்டியது இருக்கிறது என்றாலும் செல்லுவதற்கு முன்பாக தயார் செய்வதாக இருக்குமேயன்றி சென்ற பிறகு அல்ல. அந்த மாதிரி ஒவ்வொரு காரியம் செய்வதற்கு முன்பும், நிலையில் நிலைத்திருப்பதற்கான தயார் செய்யுங்கள். செய்த பிறகு யோசிப்பதினால் செய்த காரியத்தின் பிராப்திக்குப் பதிலாக வேதனை அடைய வேண்டி வந்து விடுகிறது. அப்படி துவாபர்யுகத்திலிருந்து பிராப்திக்குப் பதிலாக பிரார்த்தனை மற்றும் பச்சாதாபத்தை (வேதனையை) அடைந்தீர்கள் ஆனால் இப்பொழுது பிராப்திக்கான நேரம் ஆகும். அப்படி பிராப்திக்கான ஆதாரமாவது எப்படி நேரமோ அப்படி நினைவு சொரூபம்' ஆகும். என்ன குறை செய்கிறீர்கள் என்று இப்பொழுது புரிந்ததா. அனைவருமே தெரிந்திருக்கிறீர்கள், தெரிவதிலோ அனைத்தையும் தெரிந்தவர்களாக ஆகிவிட்டீர்கள் ஆனால் தெரிந்த பிறகு அந்த மாதிரி நடப்பதும் மற்றும் ஆவதும் வேண்டும். ஒருவேளை யாராவது நினைவு மறந்த பிறகு, நீங்கள் யாருக்காவது இந்த மாதிரி செய்யாதீர்கள் அல்லது இந்த மாதிரி செய்ய

வேண்டும் என்று ஞானம் சொன்னீர்கள் என்றால் என்ன பதில் கூறுவார்கள்? நீங்கள் எதை தெரிந்திருக்கவில்லையோ அவை அனைத்தையும் நாங்கள் தெரிந்திருக்கிறோம் என்று தான் கூறுவார்கள். அப்படி ஒவ்வொரு விஷயத்தின் அனைத்தையும் தெரிந்தவர் ஆகிவிட்டீர்கள் இல்லையா? ஆனால் அனைத்தையும் தெரிந்தவர் பலஹீனமாக எப்படி ஆகிறார்? செய்யக்கூடாது என்று புரிந்தும் கொள்கிறார்கள். பிறகும் செய்து கொண்டிருக்கிறார்கள், அந்தளவு பலஹீனமாக இருக்கிறார்கள். அப்படி தெரிந்து கொள்வதில் நம்பர் ஒன்-ஆக இருக்கவே இருக்கிறார்கள், இப்பொழுது நடப்பதில் நம்பர் ஒன் ஆகுங்கள். புரிந்ததா? இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? கேட்பது மற்றும் சொரூபம் ஆவது. ஒவ்வொரு வாரமும் நேரத்திற்குச் தகுந்தாற்போல் நினைவு சொரூபம் ஆவதற்கான பயிற்சி செய்ய வேண்டும். நடைமுறையில் அனுபவம் செய்ய வேண்டும். நல்லது.

எப்பொழுதும் தந்தையின் நினைவில் இருந்து கொண்டே ஒவ்வொரு காரியமும் செய்கிறீர்களா? தந்தையின் நினைவிலிருப்பது சுலபமா அல்லது கடினமா? ஒருவேளை சுலபமான விஷயம் என்றால் நிரந்தரமாக நினைவு இருக்க வேண்டும். சுலபமான காரியம் நிரந்தரமாக மற்றும் இயல்பாக நடந்து கொண்டே இருக்கும். அப்படியானால் நிரந்தரமாக தந்தையின் நினைவு இருக்கிறதா? நினைவு நிரந்தரமாக இருப்பதற்கான சாதனம் மிக சுலபமானது. ஏன்? ஒருவேளை உலகியல் முறையில் கூட பார்த்தீர்கள் என்றால் யாருடைய நினைவு இயல்பாகவும், சுலபமாகவும் இருக்கிறது?. யார் மேல் அன்பு இருக்கிறதோ, எந்த நபர் மற்றும் வைபவத்தின் மேல் அன்பு இருக்கிறதோ அது விரும்பாவிட்டாலும் நினைவில் வரும். உடல் மேல் அன்பு ஏற்பட்டு விட்டது என்றால் உடலின் உணர்வு மறக்கிறதா? இல்லை தான் இல்லையா? விரும்பினாலும் மறப்பதில்லை. ஏன்? ஏனென்றால் அரைக்கல்பமாக உடல் மிக அன்பிற்குரிய தாக இருந்தது. எப்படி உலகியல் முறையில் கூட அன்பான நபர் மற்றும் பொருள் இயல்பாக நினைவு இருக்கிறது. அதே போலவே இங்கே அனைத்தையும் விட அன்பானவர், அன்பிற்குரியவர் யார்? தந்தை தான் இல்லையா? இவரை விட வேறு யாரும் அன்பானவராக இருக்க முடியாது தான் இல்லையா? எனவே மிகவும் அன்பிற்குரிய காரணத்தினால் சுலபமாக மற்றும் நிரந்தரமாக நினைவு இருக்க வேண்டும் இல்லையா? இருந்தாலும் ஏன் இருப்பதில்லை, அதற்கான

காரணம் என்ன? இதிலிருந்து இது வரையிலும் கூட வேறு எங்கோ கொஞ்சம் அன்பு மாட்டிக் கொண்டிருக்கிறது என்று நிரூபணம் ஆகிறது. முழுமையான அன்பை தந்தை மேல் வைக்கவில்லை எனவே தான் நிரந்தரத்திற்குப் பதிலாக, ஒரு தந்தைக்குப் பதிலாக வேறு பக்கங்களிலும் புத்தி சென்று விடுகிறது. அப்படி மிகவும் அன்பிற்குரிய தந்தையின் அன்பை முதலில் அனுபவம் செய்திருக்கிறீர்களா, ஆத்மீக அன்பின் அனுபவம் செய்திருக்கிறீர்களா? ஆத்மா என்றால் ஆத்மாவின் அன்பும் ஆத்மீகமாக இருக்கும் இல்லையா? அப்படி ஆத்மீக அன்பின் அனுபவம் இருக்கிறதா? அனுபவம் செய்த விஷயம் ஒருபொழுதும் மறக்க முடியாது. ஆத்மீக அன்பின் அனுபவம் அது ஒரு விநாடிக்கான அனுபவமாக இருந்தாலும் கூட எவ்வளவு உயர்ந்தது. ஒருவேளை ஒரு நொடியில் அந்த அன்பின் அனுபவத்தில் சென்று விட்டீர்கள் என்றால் முழு நாளும் என்னவாகும்?. எப்படி ஏதாவது சக்திசாலியான பொருள் ஒன்று இருக்கிறது என்றால் அதனுடைய ஒரு துளி கூட மிகுந்த காரியங்களைச் செய்ய முடியும். சக்தி குறைவான பொருளின் எவ்வளவு துளிகள் இட்டாலும் இவ்வளவு செய்ய முடியாது. அப்படி ஆத்மீக அன்பின் ஒரு சில விநாடிகள் கூட மிகுந்த சக்தி கொடுக்கிறது. அப்பொழுது தான் மறக்கும் பயிற்சியில் உதவி செய்கிறது. அப்படியானால் அனுபவியாக இருக்கிறீர்களா அல்லது கேட்பவராக மட்டும் இருக்கிறீர்களா அல்லது ஏற்றுக் கொண்டீர்களா? எது தந்தையின் குணமாக இருக்கிறதோ அந்த அனைத்து குணங்களின் அனுபவியாக இருக்கிறீர்களா என்று சோதனை செய்யுங்கள். எவ்வளவு அனுபவி ஆத்மாவோ அந்த அளவு மாஸ்டர் சர்வ சக்திவான். முயற்சி செய்வதின் வேகம் குறைவான காரணத்தினால் அனுபவத்திற்குப் பதிலாக சொல்பவர்களாக இருக்கிறீர்கள். அனுபவத்தில் செல்வதினால் வேகம் தானாகவே அதிகரித்து விடும்.

எப்படி தந்தை எப்பொழுதும் சக்திசாலியாக இருக்கிறாரோ அதே போல் தன்னை எப்பொழுதும் சக்திசாலியானவர் என்று நினைக்கிறீர்களா? தந்தை சில நேரம் சக்திசாலியானவராகவும், சில நேரம் பலஹீனமானவராகவும் இருக்கிறாரா அல்லது எப்பொழுதும் சக்திசாலியானவராக இருக்கிறாரா? எப்பொழுதும் சக்திசாலியாக இருக்கிறார் இல்லையா? அந்த மாதிரி சக்திசாலியாக இருக்கிறார், அதனால் தான் தந்தையிடமிருந்து சக்தியின் தானத்தைப் பெறுகிறார்கள். தந்தை சக்திசொரூபமாக அதாவது சக்தியையும்

கொடுப்பவர் என்றால் குழந்தைகளுக்கு என்ன ஆக வேண்டும்? சக்தி பெறுபவராகவா அல்லது கொடுப்பவராகவா? தந்தை வந்ததுமே அனைத்தின் அதிகாரி ஆக்கிவிடுகிறார், எப்பொழுது வந்தவுடனேயே அனைத்தையும் கொடுத்து விடுகிறார் என்றால் கேட்பதற்கு என்ன அவசியம் இருக்கும். கேட்காமலேயே கிடைத்து விடுகிறது என்றால் கேட்பதற்கான அவசியமே இருக்கிறதா என்ன? கேட்பதினால் குஷி ஏற்படுவது இல்லை. யாரிடம் ஞானம் இல்லையோ அவர்கள் "சக்தி கொடுங்கள், உதவி கொடுங்கள்" என்று கேட்பார்கள். உதவி கிடைப்பதற்கான வழி "தைரியம்". "தைரியமுள்ள குழந்தைகளுக்கு கிடைக்கும் தந்தையின் உதவி" தைரியம் வைத்தீர்கள் என்றால் லட்சம் மடங்கு உதவி கிடைக்கும். ஒன்றைச் செய்வது மேலும் லட்சத்தைப் பெறுவது என்ற இந்தக் கணக்கைத் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? எனவே தைரியத்தை ஒருபொழுதும் இழக்கக்கூடாது. தைரியத்தை விட்டீர்கள் என்றால் சொத்தை விட்டீர்கள், சொத்தை விட்டீர்கள் என்றால் தந்தையை விட்டீர்கள். என்ன ஆனாலும் சரி, எப்படிப்பட்ட சூழ்நிலை வந்தாலும் சரி, தைரியத்தை விடக்கூடாது. தைரியத்தை விட்டீர்கள் என்றால் உயிரை விட்டீர்கள். தைரியம் தான் இந்த மர்ஜீவா (இருந்து கொண்டே இறந்துபோன) வாழ்க்கையின் சுவாசம் ஆகும். சுவாசமே சென்று விட்டது என்றால் வேறு என்ன இருக்கிறது. தைரியம் இருக்கிறது என்றால் மயக்கம் அடைந்தவர்கள் கூட விழிப்பற்று விடுவார். அறிவியலின் புத்திக்கான காரணமும் தைரியம் தான். தைரியத்தின் ஆதாரத்தினால் நிலவு வரை சென்று விடுகிறார்கள். பகலை இரவாகவும், மேலும் இரவைப் பகலாகவும் ஆக்கி விடுகிறார்கள். தைரியம் வைத்து செல்பவர்களுக்கு, சுலபமாக வரதானம் பிராப்தி ஆகிவிடுகிறது, கடினமும் சுலபமாகி விடுகிறது, அசம்பவ விஷயமும் சம்பவம் ஆகிவிடுகிறது.

பிரம்மா குமாரிகள் என்ன கூறுகிறார்கள் மற்றும் என்ன செய்கிறார்கள் என்று அனைவரும் பார்க்கிறார்கள். எனவே என்ன கூறுகிறீர்களோ அதைச் செய்பவர்களாக ஆகுங்கள். "பகவான் கிடைத்து விட்டார்", "பகவான் கிடைத்து விட்டார்" என்ற கோஷத்தையோ போடுகிறீர்கள் ஆனால் பகவான் கிடைத்து விட்டார் என்றால் புத்தி அந்த பக்கம் செல்லும் அளவிற்கு வேறு ஏதாவது இன்னும் தேவையாக இருக்கிறதா? எனவே அப்படி (ஒருவரிடமிருந்து) அனைத்து பிராப்திகளையும் அடையும்

அனுபவத்தை அனைவரின் எதிரில் காண்பியுங்கள். உங்களுடைய சக்தி சொரூபத்தை இப்பொழுது அனைவரும் பார்க்க விரும்புகிறார்கள். இப்பொழுது மகாரதிகளுக்கு ஏதாவது திட்டத்தை உருவாக்க வேண்டும். விக்ன விநாஷக் (தடையை அழிப்பவர்) ஆக ஆவதற்கான வழி எது? நாடகப்படி என்ன நடக்கிறதோ அது நாடகப்படி நடந்தது என்று புரிந்து கொண்டு மேலே சென்று கொண்டே இருக்கவா? ஆத்மாக்களுக்கு தீமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்றால் இரக்க மனமுடையவர் என்ற காரணத்தினால் அந்த ஆத்மாக்களுக்கு தீமை நடக்காத அளவிற்கு என்ன செய்ய வேண்டும்? அதற்காக ஏதாவது வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். சுற்றுப்புறச் சூழலையும் சக்திசாலியாக ஆக்குவதற்காக இப்பொழுது ஏதாவது திட்டம் வேண்டும். இப்பொழுது இந்த ஒரு அலை அடித்துக் கொண்டிருக்கிறது. ஒன்று பொதுவான தடை, இன்னொன்று எதில் அனேக ஆத்மாக்களுக்கு தீமை இருக்கிறது. அனேக ஆத்மாக்களுக்கு தீமை ஏற்படுவதற்காக அவர் தன்னைத் தானே காரணம் ஆக்கிவிடுகிறார். இந்த மாதிரியான அலை இப்பொழுது அடித்துக் கொண்டிருக்கிறது. அவர்களுக்காக திட்டத்தை உருவாக்குங்கள். மகாரதிகள் எண்ணத்தை உருவாக்குவது அல்லது திட்டத்தை உருவாக்குவது என்ற இதுவும் சுற்றுப்புறச் சூழலில் பரவுகிறது. சூழ்நிலையை மாற்ற வேண்டும். தற்சமயம் இந்த விஷயத்திற்கான தேவை இருக்கிறது. அப்படி விக்ன விநாஷக் என்ற பெயர் இருக்கிறது என்றால் அது தன்னுடைய எண்ணம், சொல், செயலில் தென்பட வேண்டும். எப்படி தீயை அணைப்பவர்கள் இருக்கிறார்கள், தீப்பிடித்தது என்றால் தீயை அணைக்காமல் அவர்களால் இருக்கவே முடியாது. எப்படிப்பட்ட கடினமான காரியமாக இருந்தாலும் திட்டமிட்டு தீயை அணைப்பார்கள். நீங்களும் தடைகளை அழிப்பவர்கள். சூழ்நிலையை எப்படி அகற்றுவது? எண்ணத்தை உருவாக்கினீர்கள் என்றால் சூழ்நிலை மாறும். இதுவோ தொடக்கத்திலிருந்தே நடந்து கொண்டே தான் இருக்கிறது, இந்த தடைகள் ஏற்படத் தான் வேண்டும். மரம் இற்றுப்போகத் தான் வேண்டும் என்று லேசாக ஆக்காதீர்கள். தடை ஏற்பட்டிருப்பதை அழியுங்கள். எப்படி ஏதாவது ஸ்தூல நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்றால் அப்படியே விட்டு விட மாட்டார்கள், தூரத்திலிருந்தும் ஓடி வந்து நஷ்டப்படுபவரை காப்பாற்றுவதற்காக, அவரைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் இயற்கையாகவே வரும். இதுவோ நடந்து கொண்டு தான் இருக்கிறது என்று அப்படியில்லை. இது நாடகம், ஒவ்வொரு

ஆத்மாவிற்கும் அவரவர்களின் பங்கு இருக்கிறது என்று குழப்பத்தில் வருவதில்லை ஆனால் நீங்கள் பாதுகாப்பு மற்றும் இரக்கம் காட்டுபவர்கள், இந்த பாவனையோடு யோசியுங்கள். தடைகளை அழிப்பவர்கள் நீங்கள் இந்த லட்சியத்தை வைக்க வேண்டும். எந்த விஷயத்திற்கான லட்சியம் வைக்கிறீர்களோ அது மெது மெதுவாக நடந்தேறிவிடும். மற்றும் கவனம் மட்டும் வேண்டும். மகாரதிகள் அனைத்து விதிகள் மற்றும் அனைத்து சக்திகளையும் லட்சியம் தனக்காக மட்டும் உபயோகிக்கக் கூடாது. இந்த யோசனை இப்பொழுது இருக்கிறதா அல்லது இல்லையா? இருக்க வேண்டும். இதிலிருந்து விலகிச் செல்லக்கூடாது. விலகிச் சென்றீர்கள் என்றால் தனிப்பட்டு இராஜா ஆவீர்கள். உலக மகாராஜா ஆக முடியாது. உலக நன்மைக்கான பாவனை வைப்பதினால் உலக மகாராஜா ஆவீர்கள்.

**வரதானம்: தடைகளை பொழுதுபோக்கிற்கான விளையாட்டு என்று புரிந்து கடந்து செல்லக்கூடிய தடையற்றவர் மற்றும் வெற்றி அடைபவர் ஆகுக!**

தடை வருவது இது நல்ல விஷயம் ஆகும் ஆனால் தடை தோல்வியைக் கொடுக்கக்கூடாது. தடை வருவதே உறுதியாக ஆக்குவதற்காகத் தான். எனவே தடைகளைக் கண்டு பயப்படுவதற்குப் பதிலாக அவற்றை பொழுதுபோக்கிற்கான விளையாட்டு என்று புரிந்து கடந்து சென்று விடுங்கள். அப்பொழுது தான் தடையற்றவர், வெற்றி அடைபவர் என்று கூறுவோம். எப்பொழுது அனைத்து சக்திகளும் நிறைந்த தந்தை துணையாக இருக்கிறார் என்றால் பயப்படுவதற்கான எந்த விஷயமும் இல்லை. தந்தையின் நினைவில் மற்றும் சேவையில் பிஸியாக மட்டும் இருந்தீர்கள் என்றால் தடையற்றவர்கள் ஆவீர்கள். எப்பொழுது புத்தி ஓய்வாக இருக்கிறது என்றால் தான் தடை அல்லது மாயா வருகிறது. பிஸியாக இருந்தீர்கள் என்றால் மாயா மற்றும் தடை விலகிச் சென்று விடும்.

**சுலோகன்: சுகம் என்ற கணக்கில் சேமிப்பதற்காக விதிமுறைப்படி, இதயப்பூர்வமாக அனைவருக்கும் சுகம் கொடுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 12.06.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தாமரை மலருக்குச் சமமான நிலை தான் பிராமண வாழ்க்கையின் உயர்ந்த ஆசனம் ஆகும்!

எப்பொழுதுமே பிராமண வாழ்க்கையின் உயர்ந்த ஆசனமான தாமரை மலருக்குச் சமமான நிலையில் நிலைத்திருக்கிறீர்களா? பிராமணர்களின் ஆசனம் எப்பொழுதும் உடன் இருக்கும் என்றால் நீங்கள் அனைத்து பிராமணர்களும் எப்பொழுதும் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறீர்களா? தாமரை மலருக்குச் சமமான நிலை என்றால் எப்பொழுதும் ஒவ்வொரு கர்ம இந்திரியங்கள் மூலமாக காரியம் செய்து கொண்டும் இந்திரியங்களின் ஈர்ப்பிலிருந்து விலகிய மற்றும் அன்பான நிலையில் இருப்பது நினைவில் மட்டும் விலகிய மற்றும் அன்பான நிலை அல்ல ஆனால் ஒவ்வொரு விநாடியும் செய்யும் காரியம் அனைத்தும் விலகிய மற்றும் அன்டான நிலையிலிருந்து செய்ய வேண்டும். இதனுடைய நினைவுச் சின்னமாக உங்கள் அனைவரின் மகிமையாக இதுவரையிலும் பக்தர்கள் ஒவ்வொரு கர்ம இந்திரியத்திற்காக மகிமை செய்வதில் கமல கண், கமல வாய், கமல கைகள் என்று கூறி மகிமை பாடுகிறார்கள். அப்படியானால் இது எந்தக் காலத்து நிலையின் ஆசனம் ஆகும்? இந்த பிராமண வாழ்க்கையினுடையது. ஒவ்வொரு கர்ம இந்திரியமும் கமலத்திற்குச் (தாமரை மலருக்கு சமமாக ஆகியிருக்கிறதா? கமல கண் ஆகியிருக்கிறதா? கமல கைகள் ஆகியிருக்கின்றன? கமலம் என்றால் காரியம் செய்து கொண்டும் விகார பந்தனங்களிலிருந்து விடுபட்ட நிலை உடலைப் பார்த்துக் கொண்டும் இருக்கிறீர்கள் ஆனால் பார்த்துக் கொண்டிருந்தும் கண், கமலக் கண்ணாக இருக்கிறது, உடலின் கவர்ச்சியின் பந்தனத்தில் வரவில்லை. எப்படி தாமரை, நீரில் இருந்து கொண்டும் நீரிலிருந்து விலகிய அதாவது நீரின் கவர்ச்சியின் பந்தனத்திலிருந்து விலகிய, அனேக விதமான சம்மந்தத்திலிருந்து விலகி இருக்கிறது. தாமரை மலரின் சம்மந்தமும்

அதிகம் இருக்கின்றன. தனியாக இருப்பதில்லை, இல்லற மார்க்கத்தின் அடையாளத்தின் வடிவமாகும். அப்படி பிராமணன் என்றால் தாமரை மலருக்குச் சமமாக ஆகும் ஆத்மாக்கள் குடும்ப வாழ்க்கையில் இருந்தும் அது லௌகீக அல்லது அலௌகீக குடும்பமாக இருந்தாலும் சேற்றுடன் அதாவது தூய்மையற்ற தரம் குறைந்த சூழ்நிலையில் இருந்த போதிலும் விலகியிருப்பது எந்த குணம் படைப்பவரிடம் இருக்கிறதோ, மாஸ்டர் படைப்பவரிலும் அதே குணம் இருக்கும். எப்பொழுதும் இந்த ஆசனத்தில் நிலைத்திருக்கிறீர்களா? அல்லது சில நேரம் நிலைத்திருக்கிறீர்களா? எப்பொழுதும் இந்த ஆசனத்தில் அமர்ந்திருப்பவர் தான் அனைத்து பந்தனங்களிலிருந்தும் விடுபட்டு எப்பொழுதும் யோக சொரூபமானவராக ஆக முடியும், ஐந்து விகாரங்கள், இயற்கையின் ஐந்து தத்துவங்களின் பந்தனத்திலிருந்து எத்தனை சதவிகிதம் விடுபட்டு இருக்கிறேன் என்று தன்னைத் தானே பாருங்கள். ஒன்றாக ஒட்டியிருக்கும் ஆத்மாவா அல்லது விடுபட்ட ஆத்மாவா?

நீங்கள் அனைவரும் பாப்தாதாவிடம் அனைவரையும் விட்டுவிட்டு உங்களுடையவராக மட்டும் ஆவேன், நீங்கள் என்ன கூறுவீர்களோ, எப்படி செய்விப்பீர்களோ அப்படியே நடத்துவிப்பேன் மற்றும் நடப்பேன் என்று உறுதிமொழி கொடுத்திருக்கிறீர்கள். அந்த உறுதிமொழியைக் கடைபிடித்துக் கொண்டிருக்கிறீர்களா? முழு நாளில் எவ்வளவு நேரம் உறுதிமொழியை கடைபிடிக்கிறீர்கள் மற்றும் எவ்வளவு நேரம் உறுதிமொழியை மறக்கிறீர்கள்? எனக்கு இருப்பதோ ஒரு சிவபாபாவைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற பாடலையோ தினசரி பாடுகிறீர்கள். அந்த மாதிரி நிலை இருக்கிறதா? வேறு ஏதாவது உறவு, அன்பு, உதவி மற்றும் பிராப்தி, நபர் மற்றும் சாதனம் தந்தையிடமிருந்து பிரிக்கக்கூடியதாக இருக்கிறதா? அந்த மாதிரி ஏதாவது நபர் அல்லது பொருள் பந்தனமற்ற ஆத்மாவை தன்னுடைய ஈர்ப்பினால் பந்தனத்தில் கட்டிப்போடக்கூடியதாக இருக்கிறதா? எப்பொழுது வேறு யாரும் இல்லை என்றால் நிரந்தரமாக பந்தனமற்ற மற்றும் யோகம் நிறைந்த ஆத்மாவாக அனுபவம் செய்கிறீர்களா? அல்லது வேறு யாரும் இல்லை என்று சொல்கிறீர்கள், ஆனால் (உண்மையில்) இருக்கிறார்களா? யாராவது இருக்கிறார்களா அல்லது அனைத்தும் முடிவடைந்து விட்டனவா? ஒருவேளை இருக்கிறார் என்றால் ஏன் இந்தப் பாடலைப் பாடுகிறீர்கள்? பாப்தாதாவை குஷிப்படுத்துவதற்காக பாடுகிறீர்களா அல்லது அந்த

மாதிரி கூறி தன்னுடைய நிலையை உருவாக்குவதற்காகப் பாடுகிறீர்களா? பிராமண வாழ்க்கையின் விசேஷத்தை தெரிந்திருக்கிறீர்களா? பிராமணன் என்றால் நினைப்பது, பேசுவது, செய்வது அனைத்தும் ஒன்றாக இருக்க வேண்டும். வித்தியாசம் இருக்கக்கூடாது. அப்படி பிராமண வாழ்க்கையின் விசேஷத்தை எப்பொழுது கடைபிடிப்பீர்கள்? இப்பொழுதா அல்லது இறுதியிலா? சில அந்த மாதிரி குழந்தைகளும் இருக்கிறார்கள் யார் தன்னுடைய முயற்சிக்குப் பதிலாக நேரத்தின் மேல் விட்டு விடுகிறார்கள். நேரம் வரும்பொழுது செய்து விடலாம். ஆகிவிடும் என்று கூறுகிறார்கள். ஆத்மாக்கள் அவர்களே பலஹீனமாக இருக்கும் காரணத்தினால் நேரத்தின் மேல் வைக்கிறார்கள். உங்களிடமும் எப்பொழுது யாராவது மியூசியம் (அருங்காட்சியகம்) மற்றும் கண்காட்சியைப் பார்ப்பதற்காக வருகிறார்கள் என்றால் என்ன கூறுகிறார்கள்? நேரம் கிடைத்தால் வருவோம். இப்பொழுது எங்களுக்கு நேரம் இல்லை என்ற இது அஞ்ஞானிகளின் வார்த்தை ஆகும். ஏனென்றால் நேரத்தின் ஞானத்திலிருந்து அஞ்ஞானிகளாக இருக்கிறார்கள் ஆனால் உங்களுக்கோ இந்த நேரம் நடந்து கொண்டிருக்கிறது, இந்த தற்சமயத்து நேரத்தை எந்த நேரம் என்று கூறுகிறார்கள் என்ற ஞானமோ இருக்கிறது. நன்மை பயக்கும் யுகம் அதாவது நேரம் என்று கூறுகிறீர்கள் இல்லையா? முழுக் கல்பத்திற்கான வருமானம் செய்வதற்கான நேரம் என்று கூறுகிறீர்கள், உயர்ந்த காரியம் என்ற விதை விதைப்பதற்கான நேரம் என்று கூறுகிறீர்கள், 5000 வருடங்களின் சம்ஸ்காரத்தைப் பதிவு செய்வதற்கான நேரம் என்று கூறுகிறீர்கள். உலக நன்மை, உலக மாற்றம் ஏற்படும் நேரம் என்று கூறுகிறீர்கள். நேரத்தின் ஞானம் உள்ளவர்கள் கூட தற்சமயத்து நேரத்தை இழந்து கொண்டே வரக்கூடிய நேரத்தின் மேல் விட்டு விடுகிறார்கள் என்றால் இதை என்னவென்று கூறுவது? நேரமோ உங்களுடைய படைப்பாகும். படைப்பின் ஆதாரத்தில் படைப்பவரின் முயற்சி இருக்கிறது என்றால் அதாவது நேரத்தின் ஆதாரத்தில் தன்னுடைய முயற்சி இருக்கிறது என்றால் படைப்பவரை என்னவென்று கூறுவது?

நீங்கள் உயர்ந்த ஆத்மாக்கள் படைப்பின் ஆதாரமூர்த்திகள் என்று பாப்தாதா ஏற்கனவே கூறியிருக்கிறார். அந்த மாதிரி ஆதாரமூர்த்தியானவர் நேரத்தின் மற்றும் எந்தவிதமான ஆதாரத்தில்

இருக்கிறார் என்றால் அடிமையென்று கூறுவோமா அல்லது ஆதாரமூர்த்தி என்று கூறுவோமா? எனவே ஆதாரமூர்த்தியான ஆத்மா எந்த விதமான ஆதாரத்தின் மேலோ இருந்து கொண்டு இருக்கவில்லையே என்று தன்னைத் தானே சோதனை செய்யுங்கள். ஒரு தந்தையின் ஆதாரத்தைத் தவிர வேறு ஏதாவது எல்லைக்குட்பட்ட ஆதரவின் ஆதாரத்தில் செல்லக்கூடிய ஆத்மாவாகவோ இல்லையே? எனக்கு இருப்பதே ஒரே ஒருவரின் ஆதாரம் தான் என்ற உறுதிமொழியோ இருக்கிறது ஆனால் நடைமுறையில் என்ன இருக்கிறது? ஒருவரின் ஆதாரத்தின் நடைமுறை எடுத்துக்காட்டாக என்ன அனுபவம் இருக்கும்? எப்பொழுதும் ஒரு அழியாத ஆதரவைப் பெறக்கூடியவர் இந்த கலியுக தூய்மையற்ற உலகத்திலிருந்து விலகிவிட்ட அனுபவத்தை செய்வார். அந்த மாதிரி ஆத்மாவின் வாழ்க்கைப் படகு கலியுக உலகத்தின் கரையை விட்டு சென்று விட்டது. எப்பொழுதும் தன்னை கலியுக தூய்மையற்ற விகார ஈர்ப்புகளிலிருந்து விலகிவிட்டதாக அதாவது விடுபட்டு விட்டதாக அனுபவம் செய்வார். எந்தவொரு கலியுக கவர்ச்சியும் அவரை ஈர்க்க முடியாது. எப்படி அறிவியல் மூலமாக பூமியின் ஈர்ப்பிலிருந்து விலகிச் சென்று விடுகிறார்கள், ஆகாயத்தில் சென்று விடுகிறார்கள். அதாவது தூரமாகச் சென்று விடுகிறார்கள். ஒருவேளை எந்த விதமான கவர்ச்சி அது உடலின் சம்மந்தத்தின் மற்றும் உடலின் பதார்த்தங்களின் கவர்ச்சி இருக்கிறது என்றால் ஏதாவது அற்ப காலத்து ஆதரவு உருவாக்கப்பட்டிருக்கிறது என்று நிரூபணம் ஆகிறது. இந்த ஆதரவின் வெளிப்படையான எடுத்துக்காட்டாக அழியும் அற்ப காலத்து ஆதரவு இருக்கும் காரணத்தினால் பிராப்தியும் அற்ப காலத்திற்கு ஏற்படுகிறது. அதாவது கொஞ்ச நேரத்திற்கானது. அழியக்கூடியது. எப்படி கொஞ்சம் அனுபவம் ஆகிறது. நினைவிருக்கிறது. சக்தி கிடைக்கிறது என்று சிலர் கூறுகிறார்கள் இல்லையா? சக்தி சொரூபத்தின் அனுபவம் ஆகிறது, ஆனால் எப்பொழுதும் இருப்பதில்லை, அதற்கான காரணம் என்ன? கண்டிப்பாக ஒரு ஆதரவிற்குப் பதிலாக ஏதாவது எல்லைக்குட்பட்ட ஆதரவின் ஆதாரம் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆதாரமே ஆடுகிறது என்றால் தானும் ஆடுகிறார் அதாவது, குழப்பத்தில் வருகிறார். எனவே தன்னுடைய ஆதாரத்தை சோதனை செய்யுங்கள், சோதனை செய்யத் தெரியுமா? சோதனை செய்வதற்காக தெய்வீக அதாவது சக்திசாலியான புத்தி வேண்டும். ஒருவேளை இல்லை என்றால் புத்திவான் ஆத்மாக்களின் சகயோகத்தோடு தன்னுடைய சோதனை செய்யுங்கள்.

பாப்தாதா ஒவ்வொரு பிராமண ஆத்மாவிற்கும் ஜென்மம் கிடைத்த உடனேயே தெய்வீக சக்திசாலியான புத்தி மற்றும் தெய்வீகக் கண்கள் பிராமண ஜென்மத்தின் வரதானத்தின் ரூபத்தில் கொடுத்திருக்கிறார். அல்லது பிராமணர்களுக்குப் பிறந்த நாள் பரிசாக தந்தை மூலமாக ஒவ்வொருவருக்கும் கிடைத்திருக்கிறது என்று இப்படியும் கூறலாம். தன்னுடைய பிறந்த நாள் பரிசை பாதுகாப்பாக வைத்துக் கொள்ளத் தெரியுமா? ஒருவேளை எப்பொழுதும் இந்தப் பரிசை யதார்த்த முறையில் உபயோகித்தீர்கள் என்றால் எப்பொழுதும் தாமரை மலருக்குச் சமமாக இருப்பீர்கள் அதாவது எப்பொழுதும் தாமரை மலருக்குச் சமமான நிலையின் ஆசனத்தில் நிலைத்திருப்பீர்கள். என்ன சோதனை செய்ய வேண்டும் என்று புரிந்ததா? அனைத்து கர்ம இந்திரியங்களும் எந்தளவு தாமரை மலராக ஆகியிருக்கிறது? அந்த மாதிரி தாமரை மலருக்குச் சமமாக ஆகுபவர்கள் எப்பொழுதும் கவர்ச்சியிலிருந்து விலகி அதாவது எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்து இருப்பார்கள். எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைவாக இல்லை என்றால் எங்கோ ஈர்க்கப்படுகிறார்கள். அதனால் தான் மகிழ்ச்சி நிறைந்து இருக்க முடியவில்லை. இப்பொழுது இந்த அனைத்து விஷயங்களிலிருந்துப் புத்தி மூலமாக விலகிவிடுங்கள். சொல்வது மற்றும் செய்வது ஒன்றாகச் செய்யுங்கள். உறுதிமொழி கூறுபவராக மட்டும் இல்லாமல் அதன்படி நடப்பவர்களாக ஆகுங்கள். நல்லது.

எப்பொழுதும் அனைத்து சம்மந்தங்களினால் ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்று எப்பொழுதும் தன்னை ஆதாரமூர்த்தி என்று நினைக்கக்கூடிய, நேரத்தின் ஆதாரத்திலிருந்து விலகி தன்னை சக்திசாலியானவர் என்று புரிந்து நடக்கக்கூடிய அந்த மாதிரி சக்திசாலியான ஆத்மாக்களுக்கு, பந்தனமுக்த் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் யோகம் நிறைந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்டிகளுடன்**: பாண்டவர்கள் மற்றும் சக்திகள் இருவருமே யுத்த ஸ்தலத்தில் நின்று கொண்டிருக்கிறீர்களா? யுத்தம் செய்து கொண்டே வெற்றி அடைந்து கொண்டே முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறீர்களா? அப்படி வெற்றி பெரும் ஆத்மாக்களுக்கு

நிரந்தரமாக வெற்றியின் குஷி இருக்கும். வெற்றி அடைபவர்களுக்கு துக்க உணர்வுகள் இருக்காது. தோல்வி அடைவதில் தான் துக்கம் இருக்கும். வெற்றி இரத்தினங்கள் எப்பொழுதும் குஷியாக அதாவது மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். கனவில் கூட துக்கத்தின் காட்சிகள் வர வேண்டாம். அதாவது துக்க அனுபவத்தின் உணருதல் வர வேண்டாம். கனவிலும் கூட துக்கம் ஏற்படுகிறது தான் இல்லையா? யாராவது அந்த மாதிரியான காட்சியைப் பார்த்து கனவிலும் துக்கமாக ஆக மாட்டார்களா? எப்பொழுது கனவும் சுகம் நிறைந்ததாக இருக்கிறது என்றால் அவசியம் நடைமுறையில் சுகசொரூபமாக இருப்பார்கள். எப்பொழுது நீங்கள் தன்னுடைய குணங்களின் மகிமை செய்கிறீர்களோ அப்பொழுது சுகசொரூபம் என்று கூறுகிறீர்கள் அல்லது துக்கத்தையும் கூறுகிறீர்களா? ஆத்மாவின் அனாதி சொரூபம் என்றால் துக்கம் எங்கிருந்து வந்தது? எப்பொழுது அனாதி சொரூபத்திலிருந்து கீழே வருகிறீர்கள் என்றால் துக்கம் ஏற்படுகிறது. எனவே துக்கத்திலிருந்து விடுபட்டு விட்டேன் என்று அப்படி அனுபவம் செய்கிறீர்களா? மற்றவர்களின் துக்கத்தின் விஷயங்களைக் கேட்டு துக்க உணர்வுகள் வர வேண்டாம். ஏனென்றால் இது துக்கங்களின் உலகம் என்று தெரியும். உங்களைப் பொருத்தவரை துக்கமான உலகம் முடிவடைந்து விட்டது. உங்களுக்கோ நன்மை பயக்கும் ஏறும் கலைக்கான யுகம் ஆகும். அப்படி எண்ணத்திலும் கூட துக்கத்தின் உலகத்தை விட்டுச் சென்று விட வேண்டும், நங்கூரம் அவிழ்க்கப்பட்டு விட்டது தான் இல்லையா? ஒருவேளை துக்கம் கொடுக்கக்கூடிய உறவினர்கள் அல்லது துக்கத்தின் சூழ்நிலை தன் பக்கம் ஈர்க்கிறது என்றால் சூட்சுமத்தில் கொஞ்சம் கயிறுகள் அறுபடாமல் இருக்கின்றன என்று புரிந்து கொள்ளுங்கள். சூட்சும கயிறுகள் அனைத்தும் அறுந்து விட்டனவா அல்லது இன்னும் கொஞ்சம் இருக்கின்றனவா? அதைத் தெரிந்து கொள்வது மற்றும் அதன் அடையாளம் ஈர்க்கப்படுவது ஆகும். ஒருவேளை கயிறுகள் கட்டப்பட்டிருக்கின்றன என்றால் முன்னேறிச் செல்ல முடியாது. ஒருவேளை இதுவரையிலும் துக்கமான உலகத்தின் கரையை விட வில்லை என்றால் சங்கமயுகத்தைச் சேர்ந்தவராக ஆகவில்லை தானே. பின்போ கலியுகம் மற்றும் சங்கமயுகத்தின் இடையிலிருப்பவராக ஆகிவிட்டீர்கள். இங்கேயும் இல்லை, அங்கேயும் இல்லை, அப்படிப்பட்டவரின் நிலைமை என்னவாகும்? சில நேரம் இங்கு, சில நேரம் அங்கு என்று பத்தி ஒருநிலைப்பட்டதாக அனுபவம் செய்ய மாட்டார்கள். அலைவது பிடித்திருக்கிறதா என்ன? எப்பொழுது

பிடிக்கவில்லை என்றால் அதை அகற்றிவிடுங்கள். எப்பொழுதும் தன்னை சுகசொரூபத்தில் நிலைத்து வையுங்கள். பேசுவதானாலும் சுகம் நிறைந்த வார்த்தைகள், யோசிப்பதானாலும் சுகத்தின் விஷயங்கள். பார்த்தீர்கள் என்றாலும் சுகசொரூப ஆத்மாவைப் பாருங்கள். உடலைப் பார்த்தீர்கள் என்றால் உடலோ கடைசி விகார தத்துவங்களால் உருவானது எனவே கக்சொரூப ஆத்மாவைப் பாருங்கள். எப்படி சத்யுகத்து தேவதைகளுக்கு துக்கம் என்ற வார்த்தையே தெரியாதோ அந்த மாதிரி பயிற்சி வேண்டும். ஒருவேளை அவர்களிடம் கேட்டீர்கள் என்றால் துக்கம் என்று ஏதாவது இருக்கிறதா என்று கூறுவார்கள். அப்படி அந்த சம்ஸ்காரத்தை இங்கேயே நிரப்ப வேண்டும். துக்கம் என்ற வார்த்தையின் ஞானமே இல்லாதது மாதிரியான சம்ஸ்காரத்தை இப்பொழுது உருவாக்குங்கள். பிராப்தியின் ஆதாரத்தில் கடின உழைப்பு ஒன்றுமே இல்லை. இராஜ்யம் செய்வதின் சம்ஸ்காரம் உருவாக வேண்டும். அதற்காக ஒருவேளை இந்த ஒரு பிறவியின் சில வருடங்கள் கடின உழைப்பு செய்ய வேண்டியது இருக்கிறது என்றாலும் அது என்ன பெரிய விஷயம்? 5000-வருடங்களின் சம்ஸகாரத்தை உருவாக்குவதற்காக சிறிது காலம் கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்கிறது.

தடை வருகிறது என்றால் அதில் எந்த இழப்பும் இல்லை, ஏனென்றால் விடைபெறுவதற்காக வருகிறது ஆனால் ஒருவேளை தங்கிவிட்டது என்றால் இழட்பாகும். வந்தது மற்றும் சென்று விட வேண்டும். தடையை விருந்தாளி ஆக்கி உட்கார வைக்காதீர்கள். வந்தது மற்றும் சென்றது அப்படி இந்த நேரம் அந்த மாதிரியான முயற்சி தேவையாக இருக்கிறது. ஒருவேளை தடையை பல தடவைக்கான விருந்தாளியாக ஆக்கினீர்கள் என்றால் பழக்கம் ஏற்பட்டு விடும், பின்பு இருப்பிடம் ஆக்கிவிடும். எனவே வந்தது உடனே சென்றது என்று அப்படி இருக்க வேண்டும். அரைக்கல்பமாக மாயா விருந்தாளியாக இருக்கிறது. எனவே இரக்கமோ ஏற்படவில்லையே? இப்பொழுது இரக்கப்படாதீர்கள்.

இப்பொழுது கூட நினைவு யாத்திரையின் அனுபவம் இன்னும் ஆழமான ரூபத்தில் இருக்க முடியும். அனைவரும் வர்ணனை செய்கிறார்கள், நினைவிலும் இருக்கிறார்கள் ஆனால் நினைவு மூலமாக என்ன பிராப்திகள் ஆக வேண்டுமோ அந்த பிராப்திகளின் பலனை இன்னும் அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள். அதில் இப்பொழுது நேரம் மற்றும்

கவனம் கொடுப்பதற்கான தேவை இருக்கிறது. அதன் மூலம் உண்மையிலேயே அனுபவத்தின் கடலில் மூழ்கியிருக்கிறேன் என்று தெரிய வரும். எப்படி தூய்மை, அமைதியின் சூழ்நிலையின் உணர்வு வருகிறது, அதே போல் உயர்ந்த யோகி தந்தையின் அன்பிலேயே மூழ்கியிருப்பவராக இருக்கிறார் என்ற இந்த அனுபவம் ஏற்படட்டும். ஞானத்தின் பிரபாவம் இருக்கிறது. யோகாவின் சித்தி சொரூபத்தின் பிரபாவம் இருக்கட்டும். அது எப்பொழுது உங்களுக்கு அனுபவம் இருக்குமோ அப்பொழுது இருக்கும். எப்படி அந்த (உலகியல்) கடலின் கரையில் செல்கிறார்கள், அதே போல் அனுபவக் கடலின் கரையில் செல்லுங்கள். தினசரி புதுப்புது அனுபவம் இருக்கட்டும். எனவே நினைவு யாத்திரையின் மேல் கவனம் இருக்கட்டும்.

உள்நோக்கு முகமுடையவராகி முன்னேற வேண்டும், அது இப்பொழுது குறைவாக இருக்கிறது. சேவை செய்து கொண்டும் நினைவில் மூழ்கியிருக்கிறார் என்ற இந்த பிரபாவம் இப்பொழுது ஏற்படுவதில்லை. சேவை செய்கிறார்கள் என்ற பிரபாவம் இருக்கிறது ஆனால் நிரந்தர யோகியாக இருக்கிறார் என்ற அந்த நிலையில் இப்பொழுது வாருங்கள். இதன் கண்டுபிடிப்பை செய்வதிலேயே முழு மூச்சாக ஈடுபட்டிருங்கள். எதை வேறு யாருமே செய்யவில்லையோ அதை நான் செய்ய வேண்டும் என்ற இந்த பந்தயத்தை இப்பொழுது செய்யுங்கள். நினைவு யாத்திரையின் அனுபவங்களின் பந்தயம் செய்யுங்கள். இதற்காக யார் யோகா பயிற்சி முகாம் செய்விக்கிறார்களோ அவர்களுக்கு நல்ல வாய்ப்பு அவர்களுக்கு வேறு எந்த பொருப்பும் கிடையாது. இது ஒரு பொறுப்பு தான். இதனால் சுலபமாக தடையற்றவராக ஆகிறார், சூழ்நிலை மாறுகிறது. அனைவரும் தன்னில் பிஸியாக இருக்கிறார்கள், மற்றவர்களையும் பார்ப்பதற்கு, கேட்பதற்கு தடைகளில் பலஹீனம் ஆவதற்கான வாய்ப்பு இருப்பதில்லை. அந்த மாதிரி திட்டத்தை உருவாக்குங்கள். அதன் மூலம் ஒவ்வொருவரும் தன்னுள் மூழ்கியிருக்க வேண்டும். சாகார அலௌகீக வாழ்க்கையின் போதை இருந்தாலும் அல்லது பிராப்திகளின் போதை இருந்தாலும் இருக்கட்டும். அதன் அன்பிலேயே மூழ்கியிருங்கள், அதிர்வலைகளாகப் பரவும் அளவிற்கு சூழ்நிலையில் வராதீர்கள். நல்லது.

# 1977 அவ்யக்த முரளி

**வரதானம்: எல்லைக்குட்பட்ட விருப்பங்களிலிருந்து விடுபட்டிருந்து அனைத்து கேள்விகளிலிருந்தும் விலகியிருக்கக்கூடிய எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்தவர் ஆகுக!**

எந்தக் குழந்தைகள் எல்லைக்குட்பட்ட விருப்பங்களிலிருந்து விலகியிருக்கிறார்களோ அவர்களுடைய மூகத்தில் மகிழ்ச்சியின் பொலிவு தென்படுகிறது. மகிழ்ச்சி நிறைந்தவர் எந்தவொரு விஷயத்திலும் கேள்வி நிறைந்தவராக ஆவதில்லை. அவர்கள் எப்பொழுதும் சுயநலமற்றவராக, மேலும் எப்பொழுதும் அனைவரையும் குறையில்லாதவராக அனுபவம் செய்வார்கள். வேறு யார் மேலேயும் பழி சுமத்த மாட்டார்கள். எப்படிப்பட்ட சூழ்நிலை வந்தாலும், ஏதாவது ஒரு ஆத்மா தனது கணக்கு வழக்கை முடிப்பதற்காக எதிரில் வந்தாலும், உடலின் கர்ம வினைகளின் அனுபவம் கஷ்டம் தர வந்தாலும், ஆனால் அவர்கள் திருப்தியின் காரணமாக எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்தவராக இருப்பர்.

**சுலோகன்: வீணானதின் சோதனையை அலட்சியத்தின் ரூபத்தில் இல்லாமல், கவனமாகச் செய்யுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 14.06.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பாரதம் மற்றும் வெளிநாட்டைச் சுற்றி வலம் வந்த செய்தி!

வெளிநாட்டின் விசேஷம் -ஒரு பக்கம் உலகை மாற்றம் செய்யும் ஸ்தூல சாதனங்களைக் கண்டு பிடிப்பதற்குப் பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்கள், விஞ்ஞானிகள் தங்களுடைய கண்டுபிடிப்பின் தரத்தை அதிகரிப்பதிலேயே ஈடுபட்டிருந்தார்கள். விஞ்ஞானிகளின் ஈடுபாடு, நேரம் மற்றும் இயற்கையின் தத்துவங்களின் மேல் வெற்றி பெறுவதற்கான, அனைத்து தத்துவங்களையும் தமது வசமாக்குவதில் ஆர்வத்தோடு ஈடுபட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு பொருளை இன்னும் ரிஃபைன் செய்வதில் அவர்கள் தன்னுடைய வெற்றி என்று நினைக்கிறார்கள். எப்படி சென்ற கல்பத்தின் நினைவுச் சின்னத்திலும் இராவண இராஜ்யத்தின் விசேஷமாக அனைத்து தத்துவங்களையும் தன்னுடைய வசமாக்குவது என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. சென்ற கல்பத்தைப் போல் இதே காரியத்தில் வெளிநாட்டு ஆத்மாக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். கூடவே விஞ்ஞானி ஆத்மாக்கள் யோகி ஆத்மாக்கள் உங்களுக்காக, உங்களுடைய உயர்ந்த யோகாவின் பிராப்தியாக சொர்க்கத்தின் இராஜ்ய பாக்கியத்தின் பிராப்தியாக என்ன இருக்க வேண்டுமோ, அந்த வரக்கூடிய இராஜ்யத்தில் அனைத்து சுகங்களின் சாதனம் இராஜயோகி ஆத்மாக்கள் உங்களுக்கு கிடைக்க போகிறது என்று தெரிந்திருக்காவிட்டாலும் கூட அதை உருவாக்குவதில் முழு மூச்சாக ஈடுபட்டிருக்கிறார்கள். அதாவது தேவதை ஆகப்போகும் உங்களுக்காக இயற்கையின் மிக உயர்ந்த சாதனங்களின் கண்டுபிடிப்பை செய்யும் உங்களுடைய சேவையிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். எப்படி நீங்கள் தந்தை மூலமாக அனைத்து பிராப்திகளின் ஈடுபாட்டில் இருக்கிறீர்கள், அதே போல் வெளிநாட்டு ஆத்மாக்களும் தங்களுடைய அறிவியல் பலம் மூலமாக உலகை சொர்க்கமாக ஆக்கும் இச்சை உள்ளவர்களாக இருக்கிறார்கள். சொர்க்கம் என்றால் 'இல்லை என்ற பொருள் எதுவும் இல்லை' என்ற நிலையாகும். இதே காரியத்தின்

ஈடுபாட்டில் ஈடுபட்டிருக்கும் ஆத்மாக்கள் நாடகப்படி பொறுப்பாளர் ஆகி தன்னுடைய காரியத்தை மிக நல்ல முறையில் செய்து கொண்டிருக்கிறார்கள், ஆனால் உங்களுக்காகத் தான் செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் உங்களுக்காக தயார் செய்வதிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று உங்கள் அனைவருக்கும் அனுபவம் ஆகிறதா? எவ்வளவு உண்மையுடன் சுத்தமாக சேவை செய்கிறார்கள் என்று ஒருவேளை அவர்களின் காரியத்தை மற்றும் ஈடுபாட்டைப் பார்த்தீர்கள் என்றால் அனுபவம் செய்வீர்கள். சேவையின் காரியத்தில் மிக நன்றாக நம்பிக்கைக்குரியவராகி இரவு, பகலாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். சேவாதாரியோ ஒரே ஈடுபாட்டில் மூழ்கியிருக்கிறார்கள் ஆனால் அனைத்து சுகங்களின் சாதனத்தை அடையக்கூடிய ஆத்மாக்கள் நீங்கள், உலக இராஜ்யத்தின் அதிகாரி ஆகக்கூடியவர்கள், அவர்கள் இதே ஈடுபாட்டில் மூழ்கியிருக்கிறார்களா அல்லது தடை ஈடுபாட்டை அழியாததாக ஆக்க விடுவதில்லையா? ஈடுபாட்டின் அக்னி அழியாததாக சுடர்விட்டுக் கொண்டிருக்கிறதா அல்லது இந்த நேரம் ஈடுபாடு மற்றும் அடுத்த நேரம் தடை என்று அப்படி இருக்கிறதா?

வெளிநாட்டின் விஞ்ஞானி ஆத்மாக்களில் நிரந்தரமாக தன்னுடைய காரியத்தின் ஈடுபாட்டில் இருக்கும் விசேஷத்தை பார்த்தோம். அப்படி எது உங்களுடைய சேவாதாரிகளில் குணமாக இருக்கிறதோ அது உலகிற்கு அதிபதியாகக்கூடிய ஆத்மாக்களிலும் அந்த குணம் இருக்கிறது இல்லையா? தன்னைத் தானே சோதனை செய்யுங்கள். இன்னொரு பக்கம் வெளிநாட்டில் பரமாத்ம ஞானி குழந்தைகளைப் பார்த்து அவர்களிலும் தற்சமயம் இப்பொழுது வெகுவிரைவாக தந்தையின் செய்தியைக் கொடுக்க வேண்டும் என்ற திட எண்ணம் மற்றும் ஈடுபாடு, ஊக்கம், உற்சாகம் இருக்கிறது. வெளிநாட்டிலிருந்து பொறுப்பாளர் ஆகியிருக்கும் விசேஷ ஆத்மாக்கள் எந்த ஆத்மாக்களின் அனுபவத்தின் பேச்சின் மூலம் பாரதவாசி கும்பகர்ணர்கள் விழித்தெழுவார்கள். அந்த மாதிரி பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களை தந்தையின் எதிரில் பிரத்யக்ஷம் செய்யுங்கள் அதாவது உறவு மற்றும் நெருக்கத்தில் கொண்டு வாருங்கள். நேரத்தின் நெருக்கத்தின் அறிவிப்புவெளிநாடு மூலமாக பாரதத்தில் பரவட்டும். இந்த ஒரு ஈடுபாட்டின் திட எண்ணத்தின் கங்கணத்தைக் கட்டிக் கொண்டிருப்பதாக பரமாத்ம ஞானி

குழந்தைகளைப் பார்த்தோம். அவர்களுக்கும் பகலும் இல்லை, இரவும் இல்லை என்று இரண்டும் சமமாக இருந்தது. இந்த ஈடுபாட்டில் மூழ்கியிருக்கிறார்கள். தற்சமயத்து ஈடுபாட்டில் பெரும்பான்மையோர் தடையிலிருந்து விடுபட்ட ஆத்மாக்கள் ஒவ்வொருவரின் அன்பு மற்றும் சகயோகம் என்ற கயிற்றில் உருண்டு கொண்டிருக்கும் மாலையின் மணிகள் நன்றாக ஜொலிப்பதாக பார்க்கத் தென்பட்டது. புதியவர்கள் மற்றும் பழையவர்கள் அப்படி ஒவ்வொரு ஆத்மாவிலும் இந்த உயர்ந்த காரியத்தில் நானும் விரல் கொடுக்க வேண்டும் என்ற ஒரே ஒரு ஊக்கம் தான் இருந்தது. கொஞ்சம் செய்து காண்பிக்க வேண்டும் என்றிருந்தது. மேலும் என்ன பார்த்தோம்? செய்தியைப் பெறக் கூடிய ஆத்மாக்கள் விருப்பம் வைத்திருக்கும் ஆத்மாக்கள் அதாவது தெரிந்து கொள்ள வேண்டும் என்றிருக்கும் ஆத்மாக்கள் கொஞ்ச நேரத்தில் அமைதி மற்றும் சக்தியின் அஞ்சலியைப் பெற்று மிகுந்த குஷி அடைகிறார்கள். பொறுப்பாளராக ஆகியிருக்கும் ஆத்மாக்களை பரமாத்மா மூலமாக மற்றும் தந்தை கடவுள் மூலமாக அனுப்பப்பட்டவர்கள் என்று ஆன்மீக பரிஷ்தாக்களாக அனுபவம் செய்கிறார்கள். கொஞ்சம் பெற்ற சேவைக்கு பிரதிபலன் கொடுப்பதில் தன்னுடைய குஷியை அனுபவம் செய்கிறார்கள். மேலும் உடனடியாக பிரதிபலன் கொடுப்பார்கள். கொஞ்சம் செய்த சேவைக்கு மிகுந்த நன்றி உணர்வுள்ளவர்களாக இருப்பார்கள். இது தற்சமயத்து பரமாத்ம ஞானிகளின் மற்றும் பொறுப்பாளர் ஆகியிருக்கும் உயர்ந்த ஆத்மாக்களின், இந்த சேவையின் சக்கரத்தில் சக்கரவர்த்தி ஆக வேண்டும் என்று டிராமாவில் என்ன அடங்கியிருக்கிறதோ இதே அடங்குதலில் ஸ்தாபனை மற்றும் விநாஷத்தின் ரகசியத்திற்கு மிகுந்த தொடர்பு இருக்கிறது. இந்த கொஞ்ச நேரத்திற்கு சேவை கொடுப்பது அல்லது சக்கரவர்த்தி ஆகி தன்னுடைய பார்வை மூலமாக, வார்த்தை மூலமாக மற்றும் நெருக்கம் மூலமாக அல்லது சூட்சும சுபபாவனை மற்றும் சுபவிருப்பங்களின் உள்உணர்வு மூலமாக அனேக விதமான உங்களுடைய இராஜ்யத்தின் தயாராவதற்கு பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஞானி மற்றும் விஞ்ஞானி ஆத்மாக்கள் பிரசித்தி ஆவார்கள். மிக உயர்ந்த ஆத்மாக்கள் உங்களின் பார்வை மூலமாக பொறுப்பாளர் ஆகியிருக்கும் சேவாதாரி ஆத்மாக்களுக்கு சேவையின் பலன் கிடைக்கும். மேலும் சேவாதாரி ஆகியிருக்கும் காரியத்தில் உதவி கிடைக்கும். இரகசியத்தைப் புரிந்து கொண்டீர்களா?

பாரதத்திலோ உங்களுடைய பக்த ஆத்மாக்கள் கிடைப்பார்கள் ஆனால் மூன்று விதமான ஆத்மாக்கள் தேவையாக இருக்கிறது - ஒன்று பிராமணனிலிருந்து தேவதை ஆகும்" ஆத்மாக்கள் மற்றும் பிரஜை ஆகும் ஆத்மாக்கள், இரண்டாவது பக்த ஆத்மாக்கள் மேலும் மூன்றாவது உங்களுடைய இராஜ்யத்தை தயார் செய்து கொடுக்கக்கூடிய ஆத்மாக்கள். சேவாதாரி அனைத்து சுகங்களின் சாதனம் மற்றும் பொருட்களைத் தயார் செய்வதற்குப் பொறுப்பாக ஆகிறார்கள் மற்றும் நீங்கள் அதை அனுபவிக்கிறீர்கள். இந்த ஐந்து தத்துவங்கள் மற்றும் ஐந்து தத்துவங்களால் உருவாக்கப்பட்டிருக்கும் உயர்ந்த தரமுள்ள பொருட்கள் அனைத்தும் உங்களுடைய சேவைக்காக பொறுப்பாளர் ஆகிவிடும். இந்த அளவு உயர்ந்த சுயமரியாதை நினைவில் இருக்கிறதா? அல்லது இதுவரையிலும் நினைவு மற்றும் நினைவு மறந்த விளையாட்டிலேயே சென்று கொண்டிருக்கிறீர்களா? "நினைவு சொரூபமானவராக இருந்து சக்தி சொரூபமானவர்" ஆகுங்கள். வெளிநாட்டுச் செய்தியை கேட்டீர்களா? மேலும் தற்சமயத்து சக்கரவர்த்தி ஆத்மாக்களின் சுற்றி வருவதின் இரகசியம் இருக்கிறது. எங்கு எங்கு பரமாத்மா ஞானி குழந்தைகள் ஆத்மாக்கள் ஈஸ்வரிய சேவை நிலையங்கள் திறப்பதற்கு பொறுப்பாளர் ஆகிறார்கள் மேலும் வருங்காலத்திலும் ஆவார்கள். அப்படி இப்பொழுதைய வெளிநாட்டு சேவை நிலையங்கள் எதிர்காலத்தில் உங்களுடைய சுற்றுலா ஸ்தலங்களாக ஆகும். எப்படி பாரதத்தில் நினைவுச் சின்ன ஸ்தானமாக கோவில்கள் இருக்கின்றன ஆனால் இது துவாபரயுகத்திற்குப் பின்னர் உருவாகும். எனவே வெளிநாட்டு ஆத்மாக்களுக்கும் எதிர்கால ஸ்தாபனையில் தொடர்பு இருக்கிறது. புரிந்ததா? இன்று வெளிநாட்டுச் செய்தியை கூறினோம், பின்பு பாரதத்தின் செய்தியைக் கூறுவோம். இந்த அனைத்து செய்தியையும் கேட்ட பிறகு, என்ன செய்ய வேண்டும்?கேட்க மட்டும் வேண்டுமா அல்லது ஏதாவது செய்யவும் வேண்டுமா? அந்த மாதிரி அனைத்து சாதனங்களையும் பெறுவதற்காக தன்னை உலகிற்கு அதிபதி ஆக்குவதற்கு எப்பொழுதும் தகுதியானவராக ஆகுங்கள். நிரந்தர யோகி ஆவது தான் யோக்ய (தகுதியான) ஆத்மா ஆவது. அந்த மாதிரி தன்னை நினைக்கிறீர்களா? தீவிர முயற்சியாளராகி தன்னையும் சம்பன்னம் ஆக்குங்கள். மேலும் பொறுப்பாளர் ஆகியிருக்கும் சேவாதாரி ஆத்மாக்களுக்கும் செய்யும்

காரியத்தில் சம்பன்னம் ஆவதற்கு பிரேரணை கொடுங்கள். அப்பொழுது உலக மாற்றம் ஏற்படும்.

எப்பொழுதும் முழு ஈடுபாட்டின் மூலமாக தடையை அழிப்பவராக ஆகக்கூடிய விக்ன விநாஷக் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தன்னுடைய பார்வை மற்றும் உள்உணர்வு மூலமாக உலக சேவையில் முழுமையாக ஈடுபட்டிருக்கக்கூடிய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக குணங்கள், ஞானம், சக்திகளை தானம் செய்யக்கூடிய மகாதானிகளுக்கு ஆன்மீக பார்வையினால் வரதானம் கொடுக்கக்கூடிய ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன்**: உலகின் அனைத்து ஆத்மாக்களுக்காக எப்பொழுதும் இரக்கம் மற்றும் நன்மை பயக்கும் பாவனை இருக்கிறதா? எல்லைக்குட்பட்டதின் நன்மை பயக்கும் பாவனை இருக்கிறதா அல்லது எல்லைக்கப் பாற்பட்டதின் பாவனை இருக்கிறதா? இப்பொழுது உலகிற்காக நன்மை பயக்கும் பாவனை இருக்கிறது என்றால் தானாகவே தனக்காகவும் இருக்கும். சங்கமயுக பிராமணர்களின் விசேஷ ட்யூட்டி மற்றும் தர்மம் மற்றும் காரியமே உலக நன்மை செய்வது தான். தன்னுடைய ஜென்மத்தின் வேலை செய்வது கடினமாக இருக்காது. எனவே எப்பொழுதும் அமிர்தவேளையில் என்னுடைய பதவியே உலக நன்மை செய்வதற்கானது என்று தன்னுடைய பதவியின் நினைவைக் கொண்டு வாருங்கள். தன்னுடைய பதவியில் அமர்ந்திருப்பதினால் எதிர்ப்பிலிருந்து பாதுகாப்பாக இருப்பீர்கள்.

எப்பொழுதும் சாட்சி நிலையின் இருக்கையில் அமர்ந்திருந்து கொண்டே தன்னுடைய மற்றும் மற்றவர்களின் ஒவ்வொரு செயலையும் பார்க்கிறீர்களா? ஏதாவது நாடகத்தின் காட்சியை இருக்கையில் அமர்ந்திருந்து பார்ப்பதில் மகிழ்ச்சி வரும். எந்தவொரு காட்சியும் இருக்கை இன்றி பார்ப்பதில்லை. அப்படி சாட்சி நிலையின் இருக்கையில் எப்பொழுதும் அமர்ந்திருக்கிறீர்களா? இந்த எல்லைக்கப்பாற்பட்ட நாடகம் எப்பொழுதும் நடந்து கொண்டே இருக்கிறது. இது இரண்டு - மூன்று மணி நேரங்களுக்கானது அல்ல, அழியாதது. அப்படி எப்பொழுதும் பார்ப்பதற்காக இருக்கையும் எப்பொழுதும் தேவையாக இருக்கிறது. இரண்டு மணி நேரம் இருக்கையில் அமர்ந்திருந்தீர்கள். பிறகு

இறங்கிவிட்டீர்கள் என்று அப்படி இருக்க வேண்டாம். யார் எப்பொழுதுமே பார்வையாளராகி பார்க்கிறாரோ அவர் ஒருபொழுதும் வெற்றி மற்றும் தோல்விக்கான காட்சியைப் பார்த்து குழப்பம் அடைய மாட்டார். எப்பொழுதும் ஒரே சீராக இருப்பார். நாடகம் என்ற நினைவு இருக்கிறது என்றால் எப்பொழுதும் ஒரே சீராக இருப்பார். நாடகத்தை மறந்தார் என்றால் குழப்பத்தில் இருப்பார். ஒருவேளை நாடகம் என்று சில நேரம் நினைவிருக்கிறது என்றால் இராஜ்யமும் சில நேரமும் செய்வீர்களா? ஒருவேளை பார்வையாளராக சில நேரம் இருக்கிறீர்கள் என்றால் சொர்க்கத்தில் துணைவனாகவும் சில நேரம் இருப்பீர்கள். ஞானம் நிறைந்தவராகவோ இருக்கிறீர்கள் இல்லையா? அனைத்தையும் தெரிந்திருக்கிறீர்கள் ஆனால் தெரிந்திருந்தும் பார்வையாளரின் நிலையில் இல்லாத காரணத்தினால் கவனத்தில் அலட்சியம், சுயசிந்தனைக்குப் பதிலாக வீணான விஷயங்களில் சுய சிந்தனையை இழந்து விடுகிறீர்கள். சுயசிந்தனையில் இல்லாதவர் பார்வையாளராக இருக்க முடியாது. பரசிந்தனையை (பிற சிந்தனைகள்) முடிவு கட்டுவதற்கான ஆதாரம் என்ன? ஒருவேளை ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் நற்சிந்தனையாளராக இருந்தீர்கள் என்றால் பரசிந்தனை ஒருபொழுதும் செய்ய மாட்டீர்கள். அப்படி எப்பொழுதும் நற்சிந்தனை மற்றும் சுபசிந்தனையாளராக இருப்பதினால் எப்பொழுதும் பார்வையாளராக இருப்பீர்கள். சாட்சி என்றால் இப்பொழுதும் சாத்தி (துணைவன்) மற்றும் எதிர்காலத்திலும் சாத்தி,

விசேஷ ஆத்மாக்கள் தன்னுடைய விசேஷமாக என்ன காண்பித்தீர்கள்? விசேஷ ஆத்மாக்களின் கடைசி விசேஷம் எதுவாக இருக்கும்? அதை முன்பாகவே பாப்தாதா காட்சியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அது என்ன விசேஷமாக இருக்கும்? எப்படி அறிவியலைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொரு பொருளையும் நுண்ணியதாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் தன்னுடைய வேகத்தை மிகத் துரிதமாகவும் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். எப்படி மினிட் மோட்டார் என்று பொதுவாக கூறுவார்கள். அதே போல் விசேஷ ஆத்மாக்களின் கடைசி விசேஷமாக ஒரு நொடியில் எந்தவொரு ஆத்மாவையும் முக்தி மற்றும் ஜீவன் முக்தியின் அனுபவியாக ஆக்கி விடுவார்கள் என்ற இது தான் இருக்கும். வழி மட்டும் கூற மாட்டார்கள் ஆனால் ஒரு விநாடியில் அமைதி மற்றும் அதீந்திரிய சுகத்தின் அனுபவம் செய்விப்பார்கள். ஜீவன்

முக்தியின் அனுபவம் சுகமாகும் மற்றும் முக்தியின் அனுபவம் சாந்தியாகும். எதிரில் வந்தார் மற்றும் அனுபவம் செய்தார் என்று அப்படி இருக்க வேண்டும். அந்த மாதிரியான வேகம் எப்பொழுது இருக்கும் என்றால் எப்பொழுது அறிவியலின் மேல் அமைதியின் வெற்றியைப் பார்த்து அறிவியலின் மேலும் இவர்களுக்கு வெற்றி கிடைத்து விட்டது என்று அனைவரின் வாயிலிருந்தும் ஆஹா, ஆஹா! என்ற வார்த்தைகள் வெளியாகும். எதை அறிவியல் செய்ய முடியவில்லையோ அதை அமைதி செய்து காண்பிக்க வேண்டும். அறிவியலின் லட்சியமும் கூட அனைவரும் அமைதி நிறைந்த, சுகம் நிறைந்த வாழ்க்கை வாழ வேண்டும் என்பது தான். அப்படி எதை அறிவியல் செய்ய முடியவில்லையோ அதை எப்பொழுது நீங்கள் செய்வீர்களோ அப்பொழுது தான் அறிவியலின் மேல் வெற்றி என்று கூறுவார்கள். அமைதி விரும்புபவர்களுக்கு அமைதி மற்றும் சுகம் விரும்புபவர்களுக்கு சுகம் கிடைக்க வேண்டும். அப்பொழுதுதான் மகிமை செய்வார்கள், உங்களை பூர்வஜமானவர்கள், இஷ்ட தேவ் என்று நினைப்பார்கள் மற்றும் ஏற்றுக் கொள்வார்கள். மேலும் அளவில்லா தந்தையின் மகிமையை செய்வார்கள். இதே ஆதாரத்தினால் பின்பு துவாபர் யுகத்தில் பக்தர்கள் மற்றும் தர்மத் தந்தைகளின் சம்ஸ்காரம் வெளிப்படும். இந்த விசேஷ காரியம் இப்பொழுது நடக்க போகிறது. அப்பொழுது தான் வெற்றியின் நேரம் வந்து விட்டது என்று புரிந்து கொள்ளுங்கள். அனைவருக்கும் ஏதாவது கிடைக்கும். பாரதவாசிகள் மட்டும் என்னுடைய தந்தை என்று நினைக்க மாட்டார்கள், அனைவருமே நினைப்பார்கள் அப்பொழுது தான் கொள்ளுப்பாட்டனார் என்று கூற முடியும் இல்லையா? மற்ற தேசத்தைச் சேர்ந்தவர்கள் இவர்கள் பாரதத்தின் தந்தையின் அறிமுகம் கொடுக்கிறார்கள் என்று இப்பொழுது நினைக்கிறார்கள் ஆனால் கடவுள் ஒருவர் என்று கூறப்படுகிறது என்றால் அனைவரும் அந்த ஒருவரின் அனுபவத்தையோ செய்ய வேண்டும் இல்லையா? எப்பொழுது அந்த மாதிரி ஒருவரின் அனுபவம் செய்வார்களோ அப்பொழுது வெற்றி கிடைக்கும் என்று புரிந்து கொள்ளுங்கள். என்னுடைய தந்தை என்ற வார்த்தை அனைவரின் வாயிலிருந்து வெளியாகும். அப்பொழுது தான் துவாபரயுகத்தில் அனைவரும் 'ஓ காட் ஃபாதர்' (ஓ கடவுளே / தந்தையே) என்று கூறி அழைக்கிறார்கள். நல்லது.

**வரதானம்: எப்பொழுதும் ஒரு தந்தையின் அன்பில் மூழ்கியிருக்கும் சகயோகியிலிருந்து சகஜயோகி ஆத்மா ஆகுக!**

எந்தக் குழந்தைகளுக்கு தந்தை மேல் அதிக அன்பு இருக்கிறதோ, அந்த அன்பான ஆத்மாக்கள் எப்பொழுதும் தந்தையின் உயர்ந்த காரியத்தின் சகயோகியாக இருப்பார்கள். மேலும் யார் எவ்வளவு சகயோகியாக இருக்கிறார்களோ அந்த அளவு சகஜயோகி ஆகிவிடுவார். தந்தையின் அன்பில் மூழ்கியிருக்கும் சகயோகி ஆத்மா ஒருபொழுதும் மாயாவின் சகயோகியாக ஆக முடியாது. அவருடைய ஒவ்வொரு எண்ணத்தில் பாபா மற்றும் சேவை இருக்கிறது. எனவே தூங்கினார் என்றாலும் அதில் மிகுந்த ஓய்வு கிடைக்கும், சாந்தி மற்றும் சக்தி கிடைக்கும். தூக்கம், தூக்கமாக இருக்காது. எப்படி சம்பாதித்து விட்டு குஷியில் படுத்திருக்கிறார் என்று இருக்கும். இந்த அளவு மாற்றம் ஏற்பட்டு விடும்.

**சுலோகன்: அன்பின் கண்ணீர் இதயத்தின் பெட்டகத்தில் முத்தாகி விடுகிறது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 16.06.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஒரே படிப்பின் மூலம் வரிசைக்கிரமமான பூஜைக்குரிய பதவி அடைவதற்கான ஆழமான இரகசியம்!

இன்று பாப்தாதா ஒவ்வொரு ஆத்மாவின் முயற்சி செய்யும் காரியத்தின் நிலை மற்றும் முயற்சி செய்வதின் அனுசாரம் இராஜபதவி அல்லது பூஜைக்குரிய பதவியின் மிக இரமணீகரமான மற்றும் ஆழமான நிலையை பார்த்துக் கொண்டிருக்கிறார். எப்படி முயற்சி செய்வதில் வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள் அதே போலவே பதவி மற்றும் பூஜைக்குரிய நிலையிலும் வரிசைக் கிரமமாக இருக்கிறார்கள். யார் முதல் நம்பர் உயர்ந்த முயற்சி செய்பவராக இருக்கிறாரோ, அவருடைய இராஜபதவி மற்றும் பூஜைக்குரிய பதவி மிக உயர்ந்ததாகவும் மற்றும் ஆழமான இரகசியம் நிரம்பியதாகவும் இருக்கிறது. பூஜைக்குரியவர்களாகவோ அனைவரும் ஆகிறார்கள். உலகைப் பொருத்தளவில் அனைத்து முயற்சிச் செய்யும் ஆத்மாக்களும் உயர்ந்த பூஜைக்குரியவர்கள் தான். இதில் அஷ்ட இரத்தினங்கள். 136-ன் மாலை, 16,000-ன் மாலை மற்றும் 9 லட்சம் பிரஜை பதவி அடைபவர்கள் இருக்கிறார்கள் ஆனால் அனைவரும் ஏதாவது ரூபத்தில் பூஜைக்கு உரியவராக அவசியம் ஆகிறார்கள். இன்று வரையிலும் கூட அனேக எண்ணிலடங்கா சாலிகிராமங்களை தயாரித்து பூஜை செய்கிறார்கள் ஆனால் அனேக சாலிகிராம ரூபத்தின் பூஜை மற்றும் விசேஷமாக இஷ்ட தேவதைகளின் கோயில் ரூபத்தின் பூஜை. அதில் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது, அதைத் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? சாலிகிராம ரூபத்தில் அனேகர்களுக்கு பூஜை நடக்கிறது, மேலும் அஷ்ட தேவதைகளின் ரூபத்தில் ஏதாவது பெயர்பெற்ற ஆத்மாவின் பூஜை நடக்கிறது. 16,000-ன் மாலையையும் சில நேரம் நினைவு செய்கிறார்கள், 108-ன் மாலையை அனேக தடவைகள் நினைவு செய்கிறார்கள். மேலும் அஷ்ட இரத்தினங்களை அல்லது அஷ்ட தேவதைகளை அல்லது

தேவிகளை தந்தைக்குச் சமமாக எப்பொழுதும் தன்னுடைய இதயத்தில் வைத்து நினைவு செய்கிறார்கள். ஏன் இவ்வளவு வித்தியாசம் ஏற்பட்டது. பாப்தாதாவோ அனைத்து குழந்தைகளுக்கும் ஒரே படிப்பு, அதாவது மனிதனிலிருந்து தேவதை ஆவதற்கு மற்றும் வெற்றி இரத்தினமாக ஆவதற்கான ஒரே லட்சியம் தான் கொடுக்கிறார். இருந்தாலும் பூஜைக்குரிய நிலையில் ஏன் இவ்வளவு வித்தியாசம் ஏற்பட்டுவிடுகிறது. சிலருக்கு இரட்டைப் பூஜை அதாவது சாலிகிராம ரூபத்திலும் பூஜை மற்றும் தேவி தேவதைகளின் ரூபத்திலும் பூஜை நடக்கிறது. சிலருக்கு சாலிகிராம ரூபத்தில் மட்டும். மாலையின் மணியின் ரூபத்தில் மட்டும் பூஜை நடக்கிறது. இதற்கான என்ன இரகசியமாக இருக்கிறது? முக்கியமான காரணம் ஆத்ம அபிமானி ஆவதற்கான லட்சியம் மற்றும் ஆத்மீக சொரூபத்தில் நிலைப்பதற்கான முயற்சி இதையோ ஒவ்வொரு பிராமண ஆத்மாவும் பிறந்ததிலிருந்தே செய்கிறார்கள். ஆத்ம அபிமானி ஆவதற்கான முயற்சி செய்யாதவராக ஒரு பிராமணன் கூட இருக்கமாட்டார். இந்தப் பாடத்தில் அதாவது உடலின், பழைய சம்ஸ்காரம் மற்றும் சம்மந்தத்திலிருந்து முழுமையாக மர்ஜீவா ஆவது (உடலிலிருந்து கொண்டே இறந்தவர் ஆவது) என்ற இந்த முயற்சி செய்வதில் வரிசை எண் உருவாகிறது. சில முயற்சி செய்பவர்களுக்கு கர்மேந்திரியங்கள் மேல் வெற்றி கிடைத்துவிடுகிறது. அதாவது இந்திரியங்களை வென்றவராக ஆகிவிடுகிறார். மேலும் சிலர் கண்களின் ஏமாற்றத்தின் மூலம், வாய் மூலமாக அனேக ரசனைகளைப் பெறுவதின் ஏமாற்றத்தில், இந்த விதமாக ஏதாவது கர்ம இந்திரியத்தின் ஏமாற்றத்தில் வந்து விடுகிறார்கள், அதாவது சம்பூர்ண நிர்விகாரி, அனைத்து இந்திரியங்களையும் வென்றவராக ஆக முடிவதில்லை. இதே காரணத்தினால் அந்த மாதிரி கர்மேந்திரியங்கள் மூலம் தோல்வி அடையக்கூடிய பலஹீனமான முயற்சி செய்பவர்கள், உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் குழந்தை ஆன காரணத்தினால், உயர்ந்த தந்தையின் தொடர்பின் காரணத்தினால், படிப்பு மற்றும் பாலனையின் காரணமாக உலகிற்குள் உயர்ந்த ஆத்மாக்களாக இருக்கும் காரணத்தினால் ஆத்மா அதாவது சாலிகிராம ரூபத்திலும் பூஜை செய்யப்படுகிறார்கள் ஆனால் அனைத்து கர்மேந்திரியங்களையும் வென்றவர் ஆகாத காரணத்தினால் சாகார ரூபத்தில் தேவி மற்றும் தேவதையின் ரூபத்தில் பூஜை செய்யப்படுவதில்லை. சம்பூர்ண தூய்மை ஆகாத காரணத்தினால் சம்பூர்ண நிர்விகாரி என்ற மகிமைக்குத்

தகுதியான தேவி மற்றும் தேவதை ரூபத்தில் பூஜை நடப்பதில்லை. நிரந்தரமாக பாப்தாதாவின் இதய சிம்மாசனதாரியாக ஆகாத காரணத்தினால் அல்லது எப்பொழுதும் இதயத்தில் இதயத்தைக் கொள்ளை கொள்ளும் ஒரு தந்தையின் நினைவு அல்லது எப்பொழுதும் இதயத்தில் பரந்த இதயம் கொண்டவரின் நினைவு இல்லாத காரணத்தினால், பக்த ஆத்மாக்களும் அஷ்ட தேவதையின் ரூபத்தில் இதயத்தில் நிரப்புவதில்லை. நிரந்தரமாக நினைவு இல்லை என்றால் சதா காலத்திற்கான கோயில் ரூபத்தில் நினைவுச் சின்னமும் இருப்பதில்லை. அப்படி வித்தியாசம் ஏற்பட்டுவிட்டது இல்லையா? ஒரு பூஜை மற்றும் இரட்டை பூஜையில் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. அந்த பிரஜையின் பூஜைக்குரிய ரூபம் மற்றும் அந்த இராஜபதவி அடைபவர்களின் பூஜைக்கான ரூபம் இதிலும் வித்தியாசம் இருக்கிறது.

விசேஷமாக தேவதைகளின் ஒவ்வொரு காரியத்திற்கும் பூஜை நடக்கிறது. மேலும் சில தேவதைகளுக்கு தினசரி பூஜை நடக்கிறது, ஆனால் ஒவ்வொரு காரியத்திற்காகவும் நடப்பதில்லை. சிலருக்கு எப்பொழுதாவது நிச்சயிக்கப்பட்ட முக்கியமான நாட்களில் பூஜை நடக்கிறது, இதற்கும் இரகசியம் இருக்கிறது. நான் எந்த விதமான பூஜைக்குரியவனாக ஆகிறேன் என்று தன்னைத் தானே கேளுங்கள். ஒருவேளை ஏதாவது பாடத்தில் வெற்றியாளராக ஆகவில்லை என்றால் எப்படி துண்டித்த சிலைக்கு பூஜை நடப்பதில்லை, பூஜைக்குரிய நிலையிலிருந்து சாதாரண கல்லாகிவிடுகிறது. எந்த மதிப்பும் இருப்பதில்லை. அந்த மாதிரி ஒருவேளை ஏதாவது பாடத்தில் முழுமையான வெற்றியாளராக ஆகவில்லை என்றால் உயர்ந்த பூஜைக்குரியவராக ஆக முடிவதில்லை. (பொதுவான) பூஜைக்குரிய மற்றும் மகிமைக்குத் தகுதியானவராக ஆவார்கள். மகிமைக்குத் தகுதியானவராக ஏன் ஆகிறார்கள்? ஏனென்றால் தந்தையின் குழந்தையான காரணத்தினால், தந்தையுடன் சேர்ந்து பங்கைச் செய்த காரணத்தினால், தந்தையின் மகிமையை பாடிய காரணத்தினால், தனது சக்திக்கேற்றபடி தியாகம் செய்ததின் காரணமாக அல்லது தனது சக்திக்கேற்ப நினைவில் இருந்ததின் காரணமாக மகிமை ஏற்படுகிறது.

மேலும் பூஜைக்கான இரகசியமும் இருக்கிறது. ஒன்று தூய்மையின் காரணமாக பூஜை நடக்கிறது. இரண்டாவது உயர்ந்த ஆத்மாவாகி

# 1977 அவ்யக்த முரளி

சர்வசக்திவான் தந்தை மூலமாக என்ன சக்திகளை தாரணை செய்திருக்கிறாரோ அந்த சக்திகளுக்கும் விதவிதமான ரூபத்தில் நினைவுச் சின்ன ரூபத்தில் பூஜை நடக்கிறது. எப்படி எந்த ஆத்மாக்கள் வித்யா அதாவது ஞானத்தை தாரணை செய்யும் சக்தியை சம்பூர்ண ரூபத்தில் தாரணை செய்திருக்கிறார் என்றால், ஞானத்தின் சக்தியின் நினைவுச் சின்னமாக சரஸ்வதியின் ரூபத்தில் பூஜை நடக்கிறது. சம்ஹாரம் செய்யும் சக்தியின் நினைவுச்சின்னம் துர்காவின் ரூபத்தில் நடக்கிறது. ஞானச் செல்வத்தை கொடுக்கும் மகாதானி, அனைத்து பொக்கிஷங்களின் செல்வத்தைக் கொடுக்கும் லட்சுமியின் ரூபத்தில் பூஜிக்கப்படுகிறது. ஒவ்வொரு தடை மேலும் வெற்றி அடைவதற்கான நினைவுச் சின்னமான விக்ன விநாஷக் ரூபத்தில் பூஜை செய்யப்படுகிறது. மாயாவை வென்றவர் அதாவது மாயாவின் பயங்கரமான ரூபத்தையும் சகஜமான மற்றும் சரளமாக ஆக்குவதின் சக்தியின் பூஜையாக மகாவீரரின் ரூபத்தில் இருக்கிறது. அப்படி உயர்ந்த ஆத்மாக்களின் ஒவ்வொரு சக்திக்கு மற்றும் உயர்ந்த காரியத்திற்கும் பூஜை நடக்கிறது. சக்திக்கான பூஜை ஒவ்வொரு தேவி, தேவதையின் பூஜையின் ரூபத்தில் காண்பிக்கப்பட்டிருக்கிறது என்றால் அந்த மாதிரி பூஜைக்குரிய, யாருடைய ஒவ்வொரு காரியம் மற்றும் சக்திகளின் பூஜை இருக்கிறதோ அவரைத் தான் பரம்பூஜ்ய அதாவது உயர்ந்த பூஜைக்குரியவர் என்று கூறப்படுகிறது. எனவே இப்பொழுது தன்னை சம்பூர்ண மூர்த்தியாக ஆக்குங்கள். எனவே நான் துண்டிக்கப்பட்ட மூர்த்தியா அல்லது பூஜைக்குரிய மூர்த்தியா என்று சோதனை செய்யுங்கள். சம்பூர்ண நிர்விகாரி மற்றும் 16-கலைகள் நிரம்பியவர் என்று தான் மகிமை செய்யப்படுகிறது. நிர்விகாரியாக மட்டும் ஆகியிருக்கிறீர்களா அல்லது சம்பூர்ண நிர்விகாரியாக ஆகியிருக்கிறீர்களா? இடைவிடாத யோகா இருக்கிறதா அல்லது துண்டிக்கப்படுகிறதா? ஆடாத நிலை இருக்கிறதா அல்லது மேலே கீழே சென்று ஆட்டம் காண்கிறதா? தந்தை என்ன விரும்புகிறார்? ஒவ்வொரு ஆத்மாவும் தந்தைக்குச் சமமாக சம்பூர்ணம் ஆக வேண்டும். மேலும் குழந்தைகளும் அனைவரும் விரும்புகிறார்கள், ஆனால் செய்பவர்கள் சிலர் தான் எனவே வரிசை எண் உருவாகிவிடுகிறது. நல்லது. கேட்பதோ அதிகமாகக் கேட்கிறீர்கள். கேட்பது மற்றும் செய்வது இதைச் சமமாக ஆக்குங்கள். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? அந்த மாதிரி உயர்ந்த பூஜைக்குரிய, எப்பொழுதும் ஒரு தந்தையை துணையாக

வைத்துக் கொள்ளக்கூடிய, அந்த மாதிரி உலகின் ஆதாரமூர்த்தி, உலக மாற்றம் செய்யும் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்டிகளுடன்**: எப்பொழுதும் அனைத்து காரியங்கள் செய்து கொண்டே பரிஷ்தா என்று அனுபவம் செய்கிறீர்களா? பரிஷ்தா என்றால் யாருக்கு உடல் மற்றும் உடலின் உலகத்தோடு மற்றும் உலகின் பதார்த்தங்களின் கவர்ச்சியோடு எந்த தொடர்பும் இல்லையோ அவர் தான். எப்பொழுதும் தந்தையின் நினைவு மற்றும் சேவை. இதிலேயே இருப்பவர். எப்பொழுதும் தந்தை மற்றும் சேவை என்ற இந்த ஈடுபாடு தான் இருக்கிறதா? தந்தை மற்றும் சேவையைத் தவிர புத்தி செல்லும் அளவிற்கு வேறு என்ன இருக்கிறது? டிரஸ்டி எப்பொழுதும் விலகியிருப்பார். டிரஸ்டியைப் பொறுத்தவரை நினைவு மற்றும் சேவை என்ற இந்த ஒரு வேலை தான் இருக்கிறது. ஒருவேளை காரியங்கள் செய்கிறார் என்றாலும் சேவைக்காகத் தான் செய்கிறார். குடும்பஸ்தன் சுயநலம் காரணமாக செய்கிறார் மற்றும் டிரஸ்டி சேவைக்காக செய்கிறார், அனைத்து பாடத்திலும் முழுமையானவர் ஆவதற்கான இயல்பான முயற்சி நடக்கிறதா? எப்படி எப்படி நேரத்தின் மற்றும் சம்பூர்ண நிலையின் அருகில் வந்து கொண்டிருப்பார்களோ அப்பொழுது முயற்சி செய்வதின் சொரூபமும் மாறிக் கொண்டே இருக்கும். தொடக்கத்தில் செய்த முயற்சி மத்திய காலத்தில் செய்த முயற்சி மற்றும் இறுதி காலத்தின் முயற்சியில் வித்தியாசம் இருக்கிறது தான் இல்லையா? இப்பொழுது சம்பூர்ண நிலையின் அருகாமைக்கான முயற்சி என்னவாக இருக்கிறது? எப்படி ஏதாவது தானாக இயங்கக்கூடியதாக இருக்கிறது என்றால் ஒரு தடவை அதை இயக்கி வைத்தீர்கள் என்றால் அது இயங்கிக் கொண்டே இருக்கும், அடிக்கடி இயக்க வேண்டியதாக இருக்காது. இதே விதத்தில் ஒரு தடவை லட்சியம் வைத்தீர்கள் மேலும் பிறகு தானாக ஒவ்வொரு அடியிலும், ஒவ்வொரு எண்ணத்திலும், நேரத்திலும் முன்னேறும் கலைக்கு ஏற்ப நடந்து கொண்டிருக்கிறது என்று அந்த மாதிரி அனுபவம் ஆகிறதா? முயற்சி செய்வதின் சக்திசாலியான சொரூபத்தின் அடையாளம் என்னவாக இருக்கும்? (நேரத்திற்கு முன்பே அதை வந்தடைவார்கள்), நேரத்திற்கு முன்பு வந்து சேர்பவர்களின் அடையாளம் என்னவாக இருக்கும்? அவர்கள் அனைத்து பாடங்களின் அனுபவியாக இருப்பார்களா அல்லது ஏதாவது முக்கியமான

பாடத்திற்காக மட்டும் இருப்பார்களா? (அனைத்தின்) அப்படியானால் அனைத்து பாடங்களில் சமமான மதிப்பெண் இருக்கிறதா? முன்பாகச் செல்வதோ நல்லது தான் ஆனால் அனைத்து பாடத்தின் லாபத்தை எடுக்க வேண்டும். இதுவும் அவசியம் ஆகும். நல்ல லட்சியம் தான் மேலும் லட்சியத்தில் பரிவர்த்தனையும் இருக்கிறது.

எப்பொழுதும் தன்னை தந்தையின் காரியத்தில் மற்றும் தன்னுடைய காரியத்தில் சகயோகி ஆகக்கூடிய சகஜயோகி, நெருக்கமான ஆத்மா என்று நினைக்கிறீர்களா? தந்தையின் காரியத்தில் யார் எவ்வளவு சகயோகியாக இருப்பாரோ அந்த சகயோகி தான் யோகி ஆக முடியும். சகயோகியாக இல்லை என்றால் யோகி இல்லை. சகயோகம் கொடுப்பது என்றால் தந்தை மற்றும் தந்தையின் காரியத்தின் நினைவில் இருப்பது. வெளியுலகத்திலும் கூட யாராவது யாருக்காவது சகயோகம் கொடுக்கிறார் என்றால் அவரின் நினைவு இருக்கும். அப்படி யோகி என்றால் சகயோகி. சகயோகி ஆவதினால் இயல்பாகவே யே ஆகிவிடுகிறார் மற்றும் இன்னொன்று சசுயோகி ஆவதினால் பல மடங்கு சேமிப்பு செய்து விடுகிறார்கள். சகயோகமாக என்ன கொடுக்கிறார்கள்? பழைய உடலை மற்றும் மிக கீழ் நிலையில் உள்ள மனதை, அவருடைய நினைவினால் சதோபிரதானமாக ஆக்கி சேவையில் ஈடுபடுத்துகிறார்கள் அல்லது ஒரு பிடி அவலுக்கு சமமான செல்வத்தை ஈடுபடுத்துகிறார்கள். வேறு என்ன செய்கிறார்கள்? உடல், மனம், பொருள் மூன்றினாலும் சகயோகி ஆவது என்றால் யோகி ஆவதாகும். எங்கு உடல் செல்லுமோ, அங்கு தான் பணத்தையும் ஈடுபடுத்துவீர்கள் என்று பாடல் பாடுகிறீர்கள் இல்லையா? அப்படி இது நிரந்தர யோகி ஆவதற்கான சாதனம் ஆகும். ஏனென்றால் சகயோகி ஆவதினால், சகயோகத்தின் பிரதிபலன் கிடைப்பதினால் யோகா சலபமாகிவிடுகிறது. எனவே ஒவ்வொரு எண்ணம் மற்றும் காரியத்தினால் தந்தையின் சகயோகியாக ஆகுங்கள். ஒவ்வொரு சேவையில், காரியத்தில் சகயோகி ஆவதினால் வீணானது முடிவடைந்து விடும். ஏனென்றால் தந்தையின் காரியம் சக்திசாலியானது. அந்த மாதிரி சகயோகி, தீவிரமாக முயற்சி செய்பவராக இயல்பாகவே ஆகிவிடுகிறார்.

எப்பொழுதும் தன்னை நிச்சயபுத்தி உள்ள கவலையற்ற ஆத்மா என்று அனுபவம் செய்கிறீர்களா? யார் நிச்சயபுத்தி உடையவரோ அவர்

கவலையற்றவராகவும் இருப்பார். எந்தவிதமான சிந்தனையும் கவலையும் இருக்காது, என்ன ஆனது, ஏன் ஆனது இந்த மாதிரி ஆகவில்லை என்றால்.. இவைகள் அனைத்தும் வீணான சிந்தனை. நிச்சயபுத்தி உடையவர் கவலையின்றி இருப்பார். வீணான சிந்தனை செய்ய மாட்டார். எப்பொழுதும் சுயசிந்தனையில் இருப்பவர் சுயநிலையில் இருப்பதினால் சூழ்நிலை மேல் வெற்றி பிராப்தி செய்கிறார். மற்ற பக்கங்களிலிருந்து வந்திருக்கும் சூழ்நிலைகளை ஏன் ஏற்றுக் கொள்கிறீர்கள். சூழ்நிலைகளிலிருந்து விடுபட்டுவிட்டீர்கள் என்றால் சுயசிந்தனையில் இருப்பீர்கள். மேலும் யார் சுயசிந்தனையில் நிலைத்திருக்கிறாரோ அவர் எப்பொழுதும் சுகக்கடலில் மூழ்கியிருப்பவராக இருப்பார். நீங்கள் சுகக்கடலில் மூழ்கியிருக்கிறீர்களா? எப்பொழுது தந்தை சுகக்கடலாக இருக்கிறார் என்றால் குழந்தைகள் மாஸ்டர் சுகக்கடலாக ஆனார்கள். எண்ணத்தில் கூட துக்க உணர்வுகள் வருகிறதா அல்லது எப்பொழுதுமே சுகமானவராக இருக்கிறீர்களா? சுகக்கடலின் மாஸ்டராக இருப்பவருக்கு துக்கம் இருக்க முடியாது. ஒருவேளை துக்கம் வருகிறது என்றால் மாஸ்டர் துக்கக்கடலாக ஆவீர்கள். அவரிடம் இராவணன் கண் மூலமாகவும் வருகிறான். காதுகள் மூலமாகவும் வருகிறான். மேலும் வாய் மூலமாகவும் வருகிறான். சர்வ சக்திவானின் எதிரில் இராவணன் வர முடியாது. தந்தையின் நினைவு மிகப் பெரிய பாதுகாப்பாகும்.

யார் மாயா மற்றும் தடைகளிலிருந்து ஒருபொழுதும் ஏமாற்றம் அடைவதில்லையோ அவர் இவ்வுலகத்திலிருந்து விலகியிருப்பவராகவும் அன்பானவராகவும் தென்படுவார். எனவே தாமரை மலருக்குச் சமமாக இருக்கிறீர்களா அல்லது சேற்றின் துளி பட்டு விடுகிறதா? ஒருவேளை ஒவ்வொரு அடியையும் ஸ்ரீமத்படி எடுத்து வைத்தீர்கள் என்றால் எப்பொழுதும் தாமரை மலராக இருப்பீர்கள். மனம் சொல்லும் வழி கலந்து விடுவதினால் எப்பொழுதும் தாமரை மலராக இருக்க முடிவதில்லை, உலகம் என்ற கடலில் ஏதாவது அலையின் பிரபாவம் ஏற்படுவது என்றால் தண்ணீரின் துளிப்படுவது,

சங்கமயுகத்தின் உயர்ந்த பொக்கிஷம் அதீந்திரிய சுகம் ஆகும். இந்த பொக்கிஷத்தின் பிராப்தியின் அனுபவத்தை செய்கிறீர்களா? அதீந்திரிய சுகத்தின் பொக்கிஷம் கிடைத்திருக்கிறதா? கிடைத்திருக்கும்

# 1977 அவ்யக்த முரளி

பொக்கிஷம் ஏன் காணாமல் போய் விடுகிறது? இதற்கான காவல் என்னவாக இருக்கிறது? கவனம், கவனத்தை குறைவாக வைப்பது என்றால் பிராப்தி செய்திருக்கும் தன்னுடைய பொக்கிஷத்தை தொலைத்து விடுவது. முழுக் கல்பத்திலும் மீண்டும் இந்த பொக்கிஷம் பிராப்தி ஆகுமா? அந்த மாதிரி விலைமதிக்க முடியாத பொருளை எவ்வளவு பாதுகாப்பாக வைக்க வேண்டியதாக இருக்கிறது. ஸ்தூலத்திலும் கூட மிக நல்ல பொருளை பாதுகாப்பாக வைப்பார்கள். எப்படி அங்கேயும் காவலாளி கவனக்குறைவாக இருக்கிறார் என்றால் நஷ்டத்தை ஏற்படுத்திவிடுவார். இங்கேயும் கவனக்குறைவு வருகிறது என்றால் பொக்கிஷத்தை தொலைத்து விடுவார். அடிக்கடி கவனம் வேண்டும். அமிர்தவேளையில் நினைவில் அமர்ந்தீர்கள். கவனம் கொடுத்தீர்கள் பின்பு போகும்பொழுதும், வரும்பொழுதும் அதைத் தொலைத்து விட்டீர்கள். அமிர்தவேளை கவனம் கொடுக்கிறார்கள். மேலும் அனைத்தையும் செய்து விட்டேன் என்று நினைக்கிறார், ஆனால் நாள் முழுவதும் முழு கவனம் கொடுக்க வேண்டும். அதீந்திரிய சுகத்தின் அனுபவத்தை இப்பொழுது செய்யவில்லை என்றால் ஒருபொழுதும் செய்ய மாட்டீர்கள். 5000 வருடத்தின் கணக்குப்படி இது எவ்வளவு உயர்ந்த காலம் ஆகும். இவ்வளவு உயர்ந்த பிராப்திக்காக கொஞ்ச நேரம் கூட கவனம் வைப்பதில்லை என்றால் என்ன செய்வது? செய்யும் காரியம் மற்றும் யோகா இரண்டும் சேர்ந்தே இருக்க வேண்டும். யோகா என்றாலே நினைவின் கவனம் எப்படி காரியம் விடுபடுவதில்லையோ அதே போல் ஞானமும் விடுபடக்கூடாது. இதைத் தான் கர்மயோகி என்று கூறுவது.

பாண்டவர்களின் விசேஷமாக என்ன மகிமை செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிந்திருக்கிறீர்களா? பாண்டவர்களின் வெற்றிக்கான முக்கிய ஆதாரம் ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை. பாண்டவர்களின் உலகமாக தந்தை இருந்தார். இது யாருடைய நினைவுச்சின்னம்? உங்களுடைய நினைவு சின்னம் ஒவ்வொரு கல்பத்திலும் மகிமை செய்யப்படுகிறது. அப்படியானால் அந்த மாதிரி அனுபவம் ஆகிறதா? உலகமே தந்தை தான், எங்கு பார்த்தாலும் அங்கு தந்தை தான் தென்படுகிறாரா? உலகத்தில் சம்மந்தம் இருக்கும் அப்படி சம்மந்தமும் தந்தையுடன் மேலும் செல்வமும் தந்தையுடன் இருந்தது என்றால் வேறு ஏதாவது மீதம் இருந்துவிட்டதா? பாண்டவர் என்றால் யாருடைய உலகமே தந்தையோ அவர் தான். அந்த மாதிரி பாண்டவர் ஒவ்வொரு

காரியத்திலும் வெற்றி அடையவே செய்வார். ஆகுமா அல்லது ஆகாதா என்ற இந்த கேள்வியே எழ முடியாது. காரியம் செய்வதற்கு முன்பு முதலில் எண்ணம் எழுகிறது. ஆகுமா, ஆகாதா அல்லது நடந்தே தான் தீரும் என்ற இந்த நிச்சயம் இருக்கிறதா? பாண்டவர்களுக்கு முதலிலேயே நமக்குத் தான் வெற்றி கிடைக்கும். ஏனென்றால் சர்வ சக்திவான் உடன் இருக்கிறார் என்ற நிச்சயம் இருக்கிறது. பாண்டவர் என்றால் எப்பொழுதுமே வெற்றி இரத்தினம், வெற்றி இரத்தினம் தான் தந்தைக்கு மிகவும் பிரியமானதாக இருக்கிறது.

**வரதானம்: இதயத்தில் ஒரு திலாராமை நிரப்பி ஒருவரிடமிருந்து அனைத்து சம்மந்தங்களின் அனுபவத்தை செய்யக்கூடிய திருப்தியான ஆத்மா ஆகுக!**

ஞானத்தை நிரப்புவதற்கான ஸ்தானம் புத்தி ஆகும் ஆனால் நாயகனை நிரப்புவதற்கான ஸ்தானம் இதயம் ஆகும். சில சில பிரியதர்ஷினிகள் புத்தியை அதிகமாக ஓட வைக்கிறார்கள், ஆனால் பாப்தாதான் உண்மையான உள்ளம் வைப்பவர்கள் மேல் திருப்தியாக இருக்கிறார். எனவே இதயத்தின் அனுபவத்தை இதயத்திற்கு தெரியும் மற்றும் இதயத்திலிருக்கும் திலாராமிற்குத் தெரியும். யார் உள்ளப்பூர்வமாக சேவை செய்கிறாரோ அல்லது நினைவு செய்கிறாரோ அவர்களுக்கு உழைப்பு குறைவு மேலும் திருப்தி அதிகமாக கிடைக்கிறது. இதயம் உள்ளவர்கள் எப்பொழுது திருப்தியின் பாடலைப் பாடுகிறார்கள். அவர்களுக்கு நேரத்திற்கு தகுந்தாற்போல் ஒருவரோடு அனைத்து சம்மந்தங்களின் அனுபவம் ஏற்படுகிறது.

**சுலோகன்: அமிர்தவேளையில் பிளைன் (தெளிவான) புத்தியுடையவராகி அமர்ந்தீர்கள் என்றால் சேவைக்கான புது விதிகள் உணர்த்துதலாகக் கிடைக்கும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 18.06.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# யோகாவின் சக்திசாலியான நிலை எப்படி உருவாகும்?

ஆன்மீக சந்திப்பை செய்வதற்காக வரதான பூமியில் வந்திருக்கிறீர்கள். ஆன்மீக சந்திப்பு சப்தத்திலிருந்து விலகிய நிலையில் நிலைத்திருப்பதினால் ஏற்படுமா அல்லது வார்த்தைகள் மூலமாக ஏற்படுமா? சப்தத்திலிருந்து விலகிய நிலை பிரியமாக இருக்கிறதா அல்லது சப்தத்தில் வரும் நிலை பிரியமாக இருக்கிறதா? சப்தத்திலிருந்து விலகிய நிலை சக்திசாலியானதா? மேலும் அது அனைவரின் சேவைக்குக் காரணமாகிறதா அல்லது வாய்மொழி மூலமாக அனைவருக்கும் செய்யும் சேவையின் நிலை சக்திசாலியாக அனுபவம் ஆகிறதா? எல்லைக்கப்பாற்பட்ட சேவை சப்தத்திலிருந்து விலகிய நிலை மூலம் ஆகிறதா அல்லது வார்த்தைகள் மூலம் ஆகிறதா? இறுதி சம்பூர்ண நிலை, அந்த நிலையில் அனைத்து சக்திகளினால் நிரம்பிய மாஸ்டர் சர்வ சக்திவான், மாஸ்டர் ஞானம் நிறைந்த நிலை, நடைமுறை ரூபத்தில் இருக்கும். அந்த மாதிரி சம்பூர்ண நிலை, சப்தத்திலிருந்து விலகி இருப்பதில் இருக்குமா அல்லது சப்தத்தில் வருவதினால் இருக்குமா? அனைத்து ஆத்மாக்களுக்காக உலகிற்கு நன்மை செய்யும் மகாதானி, வரதானி அனைவருக்காகவும் அனைத்து மனவிருப்பங்களை நிறைவேற்றும் நிலை, சப்தத்திலிருந்து விலகிய நிலையில் இருக்குமா அல்லது சப்தத்தில் வரும் நிலையில் இருக்குமா? இரண்டின் அனுபவியான நீங்கள், இரண்டு நிலையையும் தெரிந்தவர்களாக இருக்கிறீர்களா? இரண்டிலும் அதிக நேரம் எந்த நிலையில் நிலைத்திருக்க முடியும். எந்த நிலை சுலபமாக அனுபவம் ஆகிறது? ஒரு நொடியில் எந்த நிலையில் நிலைத்திருப்பதற்கான டைரக்ஷன் கிடைத்தவுடன் அதே நேரம் தன்னை அந்த நிலையில் நிலைத்திருக்கச் செய்கிற மாதிரி எவெரடியாக இருக்கிறீர்களா அல்லது நிலைத்திருப்பதிலேயே நேரம் சென்று விடுமா? ஏனென்றால், சம்பன்னம் ஆவதற்கான நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது என்றால்,

நேரத்திற்கு முன்பு தன்னில் இந்த விசேஷத்தின் அனுபவம் செய்கிறீர்களா? கடைசி நேரத்தில் முற்றுப்புள்ளி வைப்பதற்கான அனைத்தையும் விட உயர்ந்த சாதனம், டைரக்ஷன் கிடைத்தது, அதன் பிரகாரம் அந்த நேரம் அந்த நிலையில் நிலைத்து விடுவது என்பது தான். இந்த சாதனத்தை, பயிற்சியை அனுபவத்தில் கொண்டு வருகிறீர்களா? பயிற்சி இருக்கிறதா? இந்தப் பயிற்சியையோ பாப்தாதா வெகுகாலமாக கற்றுக் கொடுத்திருக்கிறார், மேலும் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார், ஆனால் இந்தப் பயிற்சியில் தன்னை எவ்வளவு சம்பன்னமானவர் என்று நினைக்கிறீர்கள்? இப்பொழுது இந்த வருடத்தின் இறுதி வரை தன்னை அந்த மாதிரி எவரெடியாக ஆக்க முடியுமா? நேரத்தைப் பார்த்து தன்னுடைய பயிற்சி செய்வதில் தயாராக இருக்கிறீர்களா? அல்லது இன்னும் அலட்சியமானவராக ஆகிவிட்டீர்களா? தெரியவில்லை விநாஷம் எப்பொழுது ஆகும்? இந்த விஷயத்தை யோசித்துக் கொண்டே முயற்சி செய்வதில் சம்பன்னம் ஆவதற்குப் பதிலாக வீணான சிந்தனை அல்லது வீணான எண்ணங்களின் பலஹீனத்தில் இருப்பதற்கான ஓய்வு விரும்பியாக ஆகி விடவில்லையே?

குழந்தைகளின் தற்சமயத்து முயற்சியின் வேகத்தைப் பார்த்து பாப்தாதா புன்முறுவலிட்டுக் கொண்டே இருக்கிறார். அனைத்து ஆத்மாக்களுக்கும் அடிக்கடி யோகி ஆகுங்கள், ஞானி ஆகுங்கள் என்ற செய்தியைத் தான் கொடுக்கிறீர்கள் என்றால் செய்தி கொடுப்பவர்கள் தனக்கும் இந்த செய்தியை கொடுக்கிறீர்களா? பெரும்பான்மையான ஆத்மாக்கள் முக்கியமான பாடமாகிய நினைவு யாத்திரை மற்றும் யோகி ஆகும் நிலையில் பலவீனமானவராகத் தென்படுகிறார்கள். அடிக்கடி யோகா ஏன் செய்ய முடியவில்லை அல்லது நிரந்தர யோகா ஏன் இருப்பதில்லை என்ற இந்த ஒரு புகாரைத் தான் பாப்தாதாவின் எதிரில் மற்றும் பொறுப்பாளராக இருக்கும் ஆத்மாக்களின் எதிரில் வைக்கிறார்கள். யோகாவின் சக்திசாலியான நிலை எப்படி உருவாகும்? அனேக தடவைகள் அனேக விதமான யுக்திகள் கிடைத்த போதிலும் அடிக்கடி இந்தக் குறிப்புச் சீட்டுக்கள் தான் பாப்தாதாவிற்கு கிடைக்கிறது. இதன் மூலம் என்ன புரிந்து கொள்வது? சர்வ சக்திவானின் குழந்தை ஆகி சக்தியில்லாத ஆத்மாவாக ஆவது, யார் தன்னையே கட்டுப்படுத்த முடியவில்லையோ அவர் உலகத்தின் இராஜ்யத்தை எப்படிக்

கட்டுப்படுத்த முடியும்? இதற்கான என்ன காரணம்? யோகாவையோ கற்றிருக்கிறார்கள், ஆனால் யோகம் நிறைந்த நிலையில் இருப்பதற்கான யுக்திகளை உபயோகத்தில் கொண்டு வரத் தெரிவதில்லை. யோகா, யோகா என்று கூறுகிறார்கள் ஆனால் உபயோகத்தில் கொண்டு வருவதற்கான கவனம் வைப்பதில்லை.

தற்சமயம் விசேஷமாக ஒரு அலை தென்படுகிறது. எந்தவொரு விஷயம் எதிரில் வந்தாலும் தந்தை மூலமாக கிடைத்திருக்கும் எதிர்நோக்கும் சக்தியை அவரே பிரயோகம் செய்வதில்லை. தந்தையை எதிரில் வைத்து விடுகிறார்கள். நீங்கள் உடன் அழைத்துச் செல்ல வேண்டும், எங்களுக்கு சக்தி ஆனால் கொடுங்கள், உதவி கொடுப்பது உங்களுடைய வேலை ஆகும். நீங்கள் செய்யவில்லை என்றால் யார் செய்வார்? கொஞ்சம் ஆசீர்வாதம் செய்து விடுங்கள், நீங்களோ கடலாக இருக்கிறீர்கள், எனக்கு கொஞ்சம் அஞ்சலி (வழங்கி விடுதல்) கொடுத்து விடுங்கள் என்று கூறுகிறார்கள். அவரே எதிர்கொள்வதற்கான தைரியத்தை விட்டு விடுகிறார். மேலும் தைரியமற்றவராக ஆகும் காரணத்தினால் உதவியிலிருந்தும் வஞ்சிக்கப்பட்டு இருந்து விடுகிறார். பிராமண வாழ்க்கையின் விசேஷ ஆதாரம் தைரியமாகும். எப்படி மூச்சு இல்லை என்றால் வாழ்க்கை இல்லை, அதே போல் தைரியம் இல்லை என்றால் பிராமணன் இல்லை. தைரியம் உள்ள குழந்தைகளுக்கு தந்தையின் உதவி இருக்கிறது என்பது தந்தையின் உறுதிமொழியாகும். தந்தையின் உதவி மட்டும் என்பதல்ல. தற்சமயத்து அலையில் தந்தை மேல் விட்டு விடுகிறார்கள். மேலும் அவர் அலட்சியமானவராக இருந்து விடுகிறார். இப்பொழுது என்ன செய்ய வேண்டும். விசேஷமான பலவீனம் ஒவ்வொரு சக்தியை மற்றும் ஒவ்வொரு ஞானத்தின் யுக்தியைக் கேட்டும் மற்றும் அது கிடைத்தும் தனக்காக உபயோகிப்பதில்லை அதாவது பயிற்சியில் கொண்டு வருவதில்லை. வர்ணனை செய்யும் வரை கொண்டு வருகிறார்கள் ஆனால் உள்நோக்குப் பார்வையுடையவராகி ஒவ்வொரு சக்தியின் தாரணையை பயிற்சியில் கொண்டு வாருங்கள். எப்படி ஏதாவது புதிய கண்டுபிடிப்பை செய்பவர் இரவு பகலாக அதே கண்டுபிடிப்பின் ஈடுபாட்டில் தன்னையே மறந்திருக்கிறார். அதே போல் ஒவ்வொரு சக்தியின் பயிற்சியில் மூழ்கியிருப்பவராக இருக்க வேண்டும். எப்படி சகித்துக் கொள்ளும் சக்தி மற்றும் எதிர்கொள்ளும் சக்தி என்று எதைக் கூறுவது? சகித்துக் கொள்ளும் சக்தி மூலம் என்ன பிராப்தியாக

ஆகிறது, சகித்துக் கொள்ளும் சக்தியை எந்த நேரம் உபயோகப்படுத்தப்படுகிறது? சகித்துக் கொள்ளும் சக்தி இல்லாத காரணத்தினால் எந்த விதமான தடைகளின் வசமானவர்களாக ஆகி விடுகிறார்கள்? ஒருவேளை ஏதாவது மாயாவின் ரூபம் கோபத்தின் ரூபத்தில் எதிர்ப்பதற்காக வருகிறது என்றால் எந்த முறையில் வெற்றியாளர் ஆக முடியும்? எந்தெந்த சூழ்நிலையின் ரூபத்தில் மாயா சகித்துக் கொள்ளும் சக்தி இருக்கிறதா என்று சோதனை செய்ய முடியும்? முன்பாகவே விஸ்தாரமாக புத்தி மூலமாக எதிரில் கொண்டு வாருங்கள். உண்மையான பரீட்சை அறைக்குள் செல்வதற்கு முன்பு முதலில் தன்னுடைய ஆசிரியர் ஆகி தன்னுடைய பரீட்சையை நீங்களே எடுத்தீர்கள் என்றால், உண்மையான பரீட்சையில் ஒருபொழுதும் தோல்வி அடைய மாட்டீர்கள். அப்படி ஒவ்வொரு சக்தியின் விஸ்தாரத்தில் மற்றும் பயிற்சியில் செல்லுங்கள். பயிற்சியை குறைவாகச் செய்கிறீர்கள். அனைவரும் வியாசராக ஆகிவிட்டீர்கள் ஆனால் பயிற்சி செய்வதில்லை. இந்த விதமாக தன்னை பிஸியாக வைக்கத் தெரிவதில்லை. எனவே மாயா உங்களை பிஸி ஆக்கி விடுகிறது. ஒருவேளை எப்பொழுதும் பயிற்சியில் பிஸியாக இருந்தீர்கள் என்றால் வீணான எண்ணங்களின் புகார் முடிவடைந்து விடும். கூடவே நீங்கள் பயிற்சியில் இருப்பதற்கான பிரபாவம் உங்களுடைய முகத்திலிருந்து தென்பட வேண்டும். என்ன தென்படும்? உள்நோக்குமுகமானவர் எப்பொழுதும் சிரித்தமுகமாகத் தென்படுவார். ஏனென்றால் மாயா தாக்குவது முடிவடைந்து விடும். அந்த மாதிரி அனுபவங்களை அதிகரித்துக் கொண்டே செல்வதினால் அடிக்கடி ஒரே புகார் செய்வதிலிருந்து விடுபட்டு விடுவீர்கள். எப்படி அனைத்து சக்திகளின் பயிற்சிக்காக கூறினோம். அதே போல் தன்னை யோக சொரூப ஆத்மா என்று கூறுகிறீர்கள் ஆனால் யோகா என்றால் என்ன என்ற விளக்கத்தை மற்றவர்களுக்குக் கூறுகிறீர்கள் ஆனால் அது உங்களது பயிற்சியாக இருக்கிறதா?

**யோகாவின் முக்கிய விசேஷங்கள்**: சகஜயோகா, கர்மயோகா, இராஜயோகா, நிரந்தர யோகா மற்றும் பரமாத்மா யோகா. இதை வர்ணனை செய்கிறீர்கள். இந்த அனைத்து விஷயங்களையும் தன்னுடைய பயிற்சியில் கொண்டு வந்திருக்கிறீர்களா? சகஜயோகா என்று ஏன் கூறப்படுகிறது? அதனுடைய தெளிவான விளக்கத்தை நன்றாகத் தெரிந்திருக்கிறீர்களா? மற்றும் பயிற்சியிலும் கொண்டு

வந்திருக்கிறீர்களா? ஞானம் நிறைந்தவர்களாகவோ இருக்கிறீர்கள், இப்பொழுது பயிற்சியில் கொண்டு வாருங்கள். மேலும் அனைத்து விசேஷங்களின் பயிற்சி வேண்டும். அப்பொழுது தான் சம்பூர்ண யோகி ஆக முடியும். சகஜயோகாவின் பயிற்சி இருக்கிறது மற்றும் இராஜயோகாவின் பயிற்சி இல்லை என்றால் முழுமையாகத் தேர்ச்சி பெற முடியாது. எனவே ஒவ்வொரு யோகாவின் விசேஷத்தை, ஒவ்வொரு சக்தியை மற்றும் ஒவ்வொரு ஞானத்தின் முக்கியமான கருத்துக்களை பயிற்சி செய்யுங்கள். இந்தக் குறை இருக்கும் காரணத்தினால் பெரும்பான்மையோர் பலஹீனம் ஆகிவிடுகிறார்கள். அதே போல் பயிற்சியின் குறை இருக்கும் காரணத்தினால் பலவீனமான ஆத்மா ஆகிவிடுகிறார்கள். பயிற்சியுள்ள ஆத்மா, முழு ஈடுபாட்டில் இருக்கும் ஆத்மாவின் எதிரில் எந்த விதமான தடையும் எதிரில் வருவதில்லை. முழு ஈடுபாட்டின் அக்னி மூலம் தடை தூரத்திலிருந்தே பஸ்டமாகிவிடுகிறது. எப்படி நீங்கள் சக்தி சொரூபத்தின் சக்தி மூலம் அசுரன் மற்றும் ஐந்து விகாரங்கள் பஸ்பம் ஆனதாகக் காண்பிக்கிறீர்கள் இல்லையா? அல்லது ஓடிக்கொண்டிருப்பதாக நீங்கள் மாடல் தயாரிக்கிறீர்கள் இல்லையா? அப்படி இது யாருடைய மாடலை உருவாக்குகிறீர்கள். இப்பொழுது என்ன செய்கிறீர்கள்? ஒவ்வொரு விஷயத்தை பிரயோகம் செய்வதின் விதியில் ஈடுபட்டு விடுங்கள். பயிற்சி செய்வதின் பிரயோக சாலையில் அமர்ந்து கொண்டிருந்தீர்கள் என்றால் ஒரு தந்தையின் ஆதரவு மற்றும் மாயாவின் அனேக விதமான தடைகள் விலகுவதாக அனுபவம் செய்வீர்கள். இப்பொழுது ஞானக்கடல், குணங்களின் கடல் மற்றும் சக்திகளின் கடலின் மேலே அலைகளில் நீந்திக் கொண்டிருக்கிறீர்கள். எனவே அற்பகாலத்திற்கான புத்துணர்வை அனுபவம் செய்கிறீர்கள் ஆனால் இப்பொழுது கடலின் ஆழத்தில் சென்றீர்கள் என்றால் அனேக விதமான விசித்திர அனுபவம் செய்து இரத்தினங்களை பிராப்தி செய்ய முடியும். நீங்களும் சக்திசாலியானவராக ஆகுங்கள். இப்பொழுது இந்த துண்டுச் சீட்டுகளை எழுதாதீர்கள். தந்தைக்குச் சிரிப்பு வருகிறது. சின்ன சின்ன விஷயங்கள், மேலும் அதே விஷயத்தை எழுதுகிறீர்கள். வெளியுலக டாக்டரின் வேலையைக்கூட தந்தை மேல் வைக்கிறீர்கள்.படைப்பு உங்களுடையது. கர்ம பந்தனம் உங்களால் உருவாக்கப்பட்டது மற்றும் அகற்றுவதற்கான வேலையை தந்தை மேல் வைக்கிறீர்கள். தந்தையின் வேலை யுக்தி கூறுவதா அல்லது அவரே செய்வதா? சொல்வதற்காக பொறுப்பாளராக இருக்கிறாரா அல்லது செய்வதற்காகவும்

பொறுப்பாளராக இருக்கிறாரா? குறும்பு செய்பவர்களாக ஆகிவிடுகிறீர்கள் தான் இல்லையா? குறும்புக்கார குழந்தைகள் அனைத்தையும் தந்தையின் மேலேயே விட்டு விடுவார்கள். என்னுடைய (லௌகீக) குழந்தை நான் கூறுவதைக் கேட்டு நடப்பதில்லை. பாபா நீங்களே சரி செய்யுங்கள் என்று கூறுகிறார்கள். தந்தையோ சரி செய்வதற்கான வழி கூறுகிறார். செய்தீர்கள் என்றால் அடைவீர்கள், தந்தையை உலக சேவகன் என்று புரிந்து அனைத்தையும் தந்தை மேல் விட விரும்புகிறார்கள். எனவே என்ன டைரக்ஷன் கிடைக்கிறதோ அதன் மேல் கவனம் கொடுத்து நடைமுறையில் கொண்டு வந்தீர்கள் என்றால் அனைத்து தடைகளிலிருந்தும் விடுபட்டவர் ஆகிவிடுவீர்கள். புரிந்ததா? நல்லது.

எப்பொழுதும் ஒரு தந்தையின் ஒவ்வொரு கட்டளையைக் கடைப்பிடிக்கக்கூடிய கட்டளைப்படி நடக்கும் குழந்தைகளுக்கு, ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற இந்த பாடத்தின்படி நடக்கக்கூடிய, நம்பிக்கைக்குரிய குழந்தைகளுக்கு, எப்பொழுதும் தன்னை பயிற்சியில் பிஸியாக வைக்கக்கூடிய, சம்பூர்ண ஞானம் மற்றும் யோகாவின் ஒவ்வொரு விசேஷத்தை வாழ்க்கையில் கொண்டு வரக்கூடிய அந்த மாதிரி விசேஷ ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

**விடைபெறும் நேரத்தில் தாதிகளுடன்**: மகாரதிகளின் வேகம் அனைவரையும் விட அதிகமாக இருக்கிறது அதாவது தீவிரமாக இருக்கிறது, ஆனால் கூடவே பிரேக்கும் (நிறுத்துவதும்) அந்த அளவு சக்திசாலியாக இருக்க வேண்டும். ஒரு நொடியில் எண்ணம் மூலமாக முழு உலகமும் என்ன மூன்று உலகங்களின் சக்கரத்தை எதிரில் கொண்டு வந்து, மூன்று உலகங்களையும் சுற்றி வந்து கொண்டிருந்தாலும் ஒருவேளை ஸ்டாப் (நில்) என்று கூறினால் முற்றிலும் புத்தி விதை ரூப நிலையில் ஒரு நொடியில் நிலைத்து விட வேண்டும். அந்த மாதிரி பயிற்சி இருக்க வேண்டும். அதிக விஸ்தாரம் மற்றும் ஸ்டாப் பிரேக் அந்த அளவு சக்திசாலியாக இருக்க வேண்டும், நிறுத்துவதில் நேரம் எடுக்கக் கூடாது. எப்படி ஸ்தூல இராணுவத்தைச் சேர்ந்தவர்களுக்கு, ஒருவேளை முழு வேகத்தில் ஓடிக்கொண்டிருப்பவர்களுக்கு இராணுவத்தலைவர் ஸ்டாப்" என்று கட்டளையிட்டார் என்றால், உடன் அதே நேரம் நிற்க வேண்டியதாக

இருக்கும். ஒருவேளை யாராவது ஒரு நொடி தாமதம் செய்தாலும் கூட சுட்டு விடுவார்கள். அப்படி அது உடல் சம்மந்தப்பட்ட பயிற்சி, அதே போல் இது சூட்சும பயிற்சி. மகாரதிகளின் முயற்சி செய்வதின் வேகம் தீவிரம் என்றால் பிரேக்கும் சக்திசாலியாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் கடைசியில் மதிப்போடு தேர்ச்சி பெறுபவராக ஆவார்கள். ஏனென்றால் அந்த நேரத்து சூழ்நிலை புத்தியில் எண்ணங்களைக் கொண்டு வரக்கூடியதாக இருக்கும். அந்த நேரம் அனைத்து எண்ணங்களிலிருந்தும் விலகி ஒரு எண்ணத்தில் நிலைத்திருப்பதற்கான பயிற்சி தேவை சூழ்நிலைகள் இழுக்கும். அந்த மாதிரி நேரத்தில் பிரேக் சக்திசாலியாக இல்லை என்றால் தேர்ச்சி பெற முடியாது. எனவே மகாரதிகளுக்கு எந்த நேரம் விஸ்தாரத்தில் பரந்து கிடக்கும் புத்தியை உடனே அந்த நேரம் ஸ்டாப் செய்வதற்கான பயிற்சி இருக்க வேண்டும். ஓட்டுநருக்கு காரை ஓட்டுவதற்கான பயிற்சி செய்விக்கிறார்கள் என்றால், வேண்டுமென்றே அந்த மாதிரியான பாதை உருவாக்கப்பட்டிருக்கும் அதன் மூலம் இவர் விபத்திலிருந்து எவ்வளவு பாதுகாப்பாக இருக்க முடியும் என்று தெரிய வந்து விடும்.

இதே போலவே இதுவும் முன்பாகவே பயிற்சி வேண்டும். ஸ்டாப் என்று கூறினீர்கள், மேலும் நடக்க வேண்டும். இது தான் அஷ்ட ரத்தினங்களின் பரிசு. ஒரு விநாடி கூட அங்கு இங்கு என்றில்லை, அதனால் தான் எட்டு பேர் மட்டும் உருவாகிறார்கள். அந்த மாதிரி பயிற்சி இருக்கிறதா? எப்படி ஸ்தூலமான கை ஆகியவை கட்டுப்பாட்டில் இருக்கின்றன, அதே போல் சூட்சும சக்திகள், எண்ணம் முற்றிலும் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். அந்த மாதிரி அனுபவியாக இருக்கிறீர்களா? உண்மையில் இது விஸ்தாரமான எண்ணத்தைக் கட்டுப்படுத்துவதற்கான விஷயம் ஆகும் ஆனால் அந்த மனிதர்கள் மூச்சை கட்டுப்படுத்துவதற்கான சாதனமாக ஆக்கிவிட்டார்கள். இங்கு விஸ்தாரத்திற்குப் பதிலாக ஒரு எண்ணத்தில் நிலைத்திருப்பது, ஆனால் அந்த மனிதர்கள் மூச்சை கட்டுப்படுத்துவதற்கான பயிற்சியை தொடங்கி விட்டார்கள். இப்பொழுது மகாரதிகளின் நினைவு யாத்திரையின் அந்த மாதிரி சித்தி வேண்டும். அந்த மாதிரி ஒரு எண்ணத்தை தாரணை செய்யக்கூடிய யார் எவ்வளவு நேரம் விரும்புகிறாரோ அவ்வளவு நேரம் புத்தியை ஸ்திரமாக்கிக் கொள்ள வேண்டும். நல்லது ஓம் சாந்தி,

## 1977 அவ்யக்த முரளி

**வரதானம்: பரிஷ்தா சொரூபத்தில் நிலைத்திருந்து ஒவ்வொரு காரியம் செய்யக்கூடிய பிரம்மாபாபாவிற்குச் சமமான அவ்யக்த ஃபரிஷ்தா ஆகுக!**

எங்களுக்கு பிரம்மாபாபா மேல் மிகுந்த அன்பு இருக்கிறது என்று குழந்தைகள் கூறுகிறார்கள். அன்பின் அர்த்தம் சமமாக ஆவது. எப்படி பிரம்மாபாபா பரிஷ்தா ரூபத்தில் இருக்கிறார், அதே போல் பிரம்மாபாபாவிற்குச் சமமாக பரிஷ்தா சொரூபத்தில் நிலைத்திருந்து ஒவ்வொரு காரியம் செய்யுங்கள். பரிஷ்தா என்றால் ஒளி வடிவமான உடல். எனவே ஒளி வடிவமான உடலிலிருந்து காரியம் செய்யுங்கள், ஒளி வடிவமான உடலைப் பாருங்கள். இந்த பரிஷ்தா சொரூபத்தில் எந்தவொரு தடையும் பிரபாவம் செய்ய முடியாது. உங்களுடைய எண்ணம், உள்உணர்வு, பார்வை அனைத்தும் டபுள் லைட் ஆகிவிடும்.

**சுலோகன்: யாருடைய எண்ணம், சொல் மற்றும் செயல் சமமாக இருக்கிறதோ, அவர் தான் சர்வோத்தம முயற்சியாளர் ஆவார்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 20.06.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நிரந்தர சகஜயோகி ஆவதற்கான சாதனம் மகாதானி ஆவதாகும்!

அனைத்து பிராமண ஆத்மாக்கள் தங்களை சகஜயோகி மற்றும் நிரந்தர யோகியின் உயர்ந்த நிலையில் எப்பொழுதும் நிலைத்திருக்கச் செய்வதற்கான முயற்சியில் இருக்கிறார்கள். அனைவரின் லட்சியம் சகஜயோகி ஆவதற்கானது ஆனால் தன்னுடைய பலஹீனங்களின் காரணமாக சில நேரம் சகஜமாக அனுபவம் செய்கிறார்கள். சில நேரம் கடினமாக அனுபவம் செய்கிறார்கள். பலஹீனம் என்று கூறி கடினமாக்கிவிடுகிறார்கள். உண்மையில் ஒவ்வொரு உயர்ந்த ஆத்மா மற்றும் பிராமண ஆத்மா, மாஸ்டர் சர்வ சக்திவான் ஆத்மா, திரிகாலதரிசி, மாஸ்டர் ஞானக்கடல் ஆத்மா எந்தவொரு எண்ணத்திலும் மற்றும் காரியத்திலும் கடினம் அனுபவம் செய்ய முடியாது. சகஜயோகியுடன் கூடவே அந்த மாதிரியான உயர்ந்த ஆத்மாக்கள் இயல்பாகவே யோகியாக இருப்பார்கள், ஏனென்றால் அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்களுக்கு தந்தை மற்றும் சேவை தான் உலகமாகும். தந்தையின் நினைவு மற்றும் சேவை தான் பிராமண பிறவியின் சம்ஸ்காரம் ஆகும். தந்தை மற்றும் சேவையைத் தவிர வேறு எந்த உலகமும் தென்படுவதில்லை. மேலும் சம்ஸ்காரங்களில் வேறு எந்த எண்ணமும் எழ முடியாது. எந்தவொரு மனித ஆத்மாவின் புத்தி உலகிய சம்மந்தம் மற்றும் பிராப்தியின் பக்கம் தான் போகும். பிராமண ஆத்மாக்களுக்கு அனைத்து சம்மந்தங்களின் ஆதாரம் மற்றும் அனைத்து பிராப்திக்கான ஆதாரம் ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை. அப்படியானால் இயல்பான யோகி ஆவது கடினமா அல்லது சுலபமா? விரும்பாவிட்டாலும் கூட எங்கு அனைத்து சம்மந்தம் மற்றும் அனைத்து பிராப்திகள் இருக்கின்றனவோ அங்கு புத்தி செல்லும். அப்படி இயல்பான யோகியாக ஆனீர்கள் இல்லையா? ஒருவேளை சகஜயோகி மற்றும் இயல்பான யோகியாக அவசியம் தந்தையோடு அனைத்து மந்தங்களின் அனுபவம் இல்லை. அனைத்து சம்மந்தங்களினால் தந்தையை தன்னுடையவராக ஆக்கவில்லை.

அனைத்து பிராப்திக்கான ஆதாரம் ஒரு தந்தை ஆவார். இந்த அனுபவத்தை நடைமுறையில் கொண்டு வரவில்லை.

இப்பொழுது சகஜயோகி ஆவதற்காக என்ன முயற்சி செய்வீர்கள்? சகஜயோகி ஆக விரும்புகிறீர்கள் தான் இல்லையா? சகஜயோகி ஆவதற்கான சாதனம் எப்பொழுதும் தன்னை எண்ணம் மூலமாக வார்த்தைகள் மூலமாக மற்றும் காரியம் மூலமாக உலகின் அனைத்து ஆத்மாக்களுக்காக சேவாதாரி என்று புரிந்து சேவை யிலேயே அனைத்தையும் ஈடுபடுத்துங்கள். பிராமண வாழ்க்கையில் என்னென்ன பொக்கிஷங்கள் தந்தை மூலமாக பிராப்தி ஆகியிருக்கின்றனவோ அவை அனைத்தையும் ஆத்மாக்களுக்காக சேவையில் ஈடுபடுத்துங்கள். சக்திகளின் கஜானா, குணங்களின் கஜானா, ஞானத்தின் கஜானா மற்றும் உயர்ந்த வருமானத்திற்கான நேரத்தின் கஜானா அனைத்தையும் சேவையில் ஈடுபடுத்துங்கள் அதாவது சகயோகி ஆகுங்கள். தன்னுடைய உள்ளுணர்வு மூலமாக சுற்றுப்புறத்தை உயர்ந்ததாக ஆக்குவதற்கான சகயோகம் கொடுங்கள். நினைவு மூலமாக அனைவருக்கும் மாஸ்டர் சக்திவான் சொரூபத்தின் நினைவூட்டுங்கள். வார்த்தைகள் மூலமாக ஆத்மாக்களை சுயதரிசன சக்கரதாரி, மாஸ்டர் திரிகாலதரிசி ஆக்குவதற்கான சகயோகி, காரியம் மூலமாக எப்பொழுதும் தாமரை மலருக்குச் சமமாக இருக்கும் மற்றும் கர்மயோகி ஆவதற்கான செய்தியை ஒவ்வொரு காரியம் மூலமாக கொடுங்கள். தன்னுடைய உயர்ந்த தந்தையிடமிருந்து அனைத்து சம்மந்தங்களின் அனுபவம் மூலமாக அனைத்து ஆத்மாக்களுக்கும் அனைத்து சம்மந்தங்களின் அனுபவம் செய்விக்கும் சகயோகம் கொடுங்கள். தன்னுடைய ஆன்மீக நெருக்கத்தின் மகத்துவத்தைத் தெரிந்து கொண்டு, உயர்ந்த நேரத்தின் செய்தியை கொடுப்பதின் மற்றும் நேரத்திற்கு தகுந்தாற்போல் தற்சமயத்து சங்கமயுகத்தின் ஒரு விநாடி அனேக ஜென்மங்களின் பிராப்திக்கான காரணமாக ஆகியிருக்கிறது. ஒரு அடியில் பலகோடி மடங்கு வருமானம் நிரம்பியிருக்கிறது. அப்படி நேரத்தின் கஜானாவைத் தெரிந்து கொண்டு மற்றவர்களுக்கும் நேரத்திற்குள் பிராப்தி ஆவதற்கான அறிமுகம் கொடுங்கள். ஒவ்வொரு விஷயம் மூலமாக சகயோகி ஆனீர்கள் என்றால் சகஜயோகி ஆகியே விடுவீர்கள்.

# 1977 அவ்யக்த முரளி

சகயோகியாக ஆகத் தெரியுமா? யார் கஜானாக்களினால் நிரம்பியிருக்கிறாரோ அவரே சகயோகி ஆக முடியும். அனேக ஆத்மாக்களுக்கு மகாதானி ஆக வேண்டும் என்ற எண்ணம் சம்பன்ன ஆத்மாவிற்கு இயல்பாகவே வரும். மகாதானி ஆவது என்றால் சகயோகி ஆவது, சகயோகி ஆவது என்றால் சகஜயோகி ஆவது. மகாதானி அனைத்து கஜானாக்களையும் தனக்காக குறைவாக உபயோகிப்பார், சேவைக்காக அதிகமாக உபயோகிப்பார். ஏனென்றால் அனேக ஆத்மாக்களுக்காக மகாதானி ஆவது தான் பெறுவதாகும். அனைவருக்காகவும் நன்மை செய்பவராக ஆவது தான் தனக்கு நன்மை செய்பவராக ஆவது. தானம் கொடுப்பது என்றால் ஒன்றுக்கு நூறு மடங்கு சேமிப்பு செய்வது. அப்படி தற்சமயம் தனக்காக சின்ன சின்ன விஷயங்களில் மற்றும் சிறிய எறும்புக்குச் சமமாக வரும் தடைகளில் தன்னுடைய அனைத்து கஜானாக்களையும் தனக்காக ஈடுபடுத்துவதற்கான நேரம் இல்லை. எல்லைக்கப்பாற்பட்ட சேவாதாரி ஆனீர்கள் என்றால் தன்னுடைய சேவை சகஜமாகிவிடும். பரந்த மனதோடு நன்மை பயக்கும் நோக்கத்தோடு பிராப்தியின் கஜானாவை கொடுத்துக் கொண்டே இருங்கள். நன்மை செய்யும் எண்ணம் உள்ளவராக ஆவதினால் தனக்கு நன்மை சுலபமாக ஏற்பட்டுவிடும். தடைகளை அகற்றுவதில் நேரத்தை செலவழிப்பதற்குப் பதிலாக சேவையின் ஈடுபாட்டில் தன்னுடைய நேரத்தை ஈடுபடுத்துங்கள். ஒவ்வொரு எண்ணம் மற்றும் மூச்சிலும் சேவை மட்டும் தான் இருக்கிறது என்று அந்த மாதிரி மகாதானி ஆகுங்கள். அப்படி சேவையின் ஈடுபாட்டின் பலனாக தடை சுலபமாகவே அழிந்து விடும். ஏனென்றால் தற்சமயம் பிரத்யக்ஷ பலனை அடைவதற்கான நேரமாகும். சேவையின் பலனாக உடனடியாக தன்னில் குஷி மற்றும் சக்தியை அனுபவம் செய்விக்கும் ஆனால் உண்மையான உள்ளத்தோடு செய்யப்பட்ட சேவையாக இருக்க வேண்டும். உண்மையான உள்ளத்தின் மேல் தந்தை மிகவும் திருப்தியாக இருக்கிறார்.

அனேக குழந்தைகள் சேவையோ நாங்கள் செய்கிறோம் ஆனால் பலன் கிடைப்பதில்லை அதாவது வெற்றி கிடைப்பதில்லை என்று கூறுகிறார்கள். இது ஏன் ஆகிறது? ஏனென்றால் சேவையை இரண்டு விதமாகச் செய்கிறார்கள். ஒன்று உள்ளப்பூர்வமாக மற்றும் இன்னொன்று மற்றவர்களுக்குக் காண்பிப்பதற்காக அதாவது பெயர்,

புகழ் பெற வேண்டும் என்ற அற்பகால இச்சையோடு செய்கிறார்கள். விதையே அற்பகாலத்திற்கானது என்றால் அந்த மாதிரி விதையின் அற்ப கால பலனாக பெயர், புகழை அடைந்து விடுகிறார்கள். பிறகு வெற்றியின் பலன் எப்படி கிடைக்கும்? பெயர் கிடைக்க வேண்டும் என்ற பாவனையின் பலன் பெயர், புகழின் ரூபத்திலோ பிராப்தியோ ஆகிவிடுகிறது. மற்றவர்களுக்குக் காண்பிக்க வேண்டும் என்ற எண்ணம் விதை ரூபமாக இருப்பதின் காரணத்தினால் அனைவரின் எதிரில் தென்படுவதில் வந்தே விடுகிறார்கள். அனைவரின் வாயிலிருந்து அற்பகாலத்தின் மகிமையின் பலனாக இவர் சேவை மிக நன்றாகச் செய்கிறார் என்பது கிடைத்து விடுகிறது. எப்பொழுது அற்ப காலத்து மகிமையின் பலன் கிடைத்துவிட்டது அதாவது பழுக்காத பிஞ்சு பழத்தையே ஏற்றுக் கொண்டுவிட்டீர்கள் என்றால், முழுமையான பலனின் பிராப்தி அதாவது நன்றாகப் பழுத்த பழத்தின் பிராப்தி எப்படி இருக்கும்? ரிசல்ட்டாக என்ன இருக்கும்? பழுக்காத பழத்தை சுவீகாரம் செய்யும் காரணத்தினால் மற்றும் அற்ப காலத்து விருப்பம் நிறைவேறும் காரணத்தினால் எப்பொழுதும் சக்திசாலியாக ஆக முடியாது. அதிகாரியாக ஆக முடியாது. மேலும் சேவை செய்தபோதிலும் பலஹீனமான காரணத்தினால், அவர் தன் மேலேயே எப்பொழுதும் திருப்தியாக இருக்க மாட்டார். மேலும் அனைவரையும் திருப்தி செய்ய முடியாது. எனவே இவ்வளவு செய்த போதிலும் ஏன் வெற்றி ஏற்படுவதில்லை என்ற கேள்விக்குறி எப்பொழுதும் இருக்கும். இவர் அப்படிச் செய்கிறார், இவர் ஏன் இப்படிச் செய்கிறார்? அந்த மாதிரி இருக்கக்கூடாது, இந்த மாதிரி தான் இருக்க வேண்டும். இந்த கேள்விக் குறியிலேயே இருப்பார். எனவே சேவாதாரியாகவும் உள்ளப்பூர்வமாக ஆகுங்கள்.

உண்மையான உள்ளத்தோடு சேவாதாரியாகும் குழந்தைகளின் விசேஷ லட்சியம் என்னவாக இருக்கும்? மனமுடைந்த ஆத்மாக்களை சக்திசாலியாக ஆக்குபவராக, எப்படிப்பட்ட அவகுணம் நிறைந்த ஆத்மாவை, ஏழை ஆத்மாவை எப்பொழுதும் தந்தை மூலமாகக் கிடைத்திருக்கும் குணங்களின் தானம் மூலமாக குணங்களின் கஜானாக்களினால் ஏழையை செல்வந்தனாக்கும் உயர்ந்த எண்ணம் மற்றும் சுபபாவனை வைப்பார்கள். உண்மையான உள்ளத்தோடு சேவை செய்பவர்கள் எப்பொழுதும் பிரத்யக்ஷ பலன் பெறுவதினால் தன்னை

வெற்றி மூர்த்தி என்று அனுபவம் செய்வார்கள். எனவே அந்த மாதிரி எப்பொழுதும் சகயோகி ஆனீர்கள் என்றால் சகயோகத்தின் பலனாக சகஜயோகி ஆகிவிடுவீர்கள். எப்பொழுதும் சகயோகி ஆவதினால் எப்பொழுதும் பிசியாக இருப்பீர்கள். எண்ணத்திலும் பிஸியாக இருந்தீர்கள் என்றால் தன் மேலும் தந்தையிடமும் வீணானதின் புகாராக என்ன கூறுகிறீர்களோ அவை அனைத்தும் முடிவடைந்து விடும்.

எப்பொழுதும் ஒவ்வொரு எண்ணத்தினால் சேவை செய்யக்கூடிய, அற்பகாலத்து பலனை தியாகம் செய்யக்கூடிய, எப்பொழுதும் வெற்றிமூர்த்தியாக ஆகக்கூடிய, ஒவ்வொரு ஆத்மாவிற்கும் நன்மை செய்வதற்காக பொறுப்பாளர் ஆகக்கூடிய, உயர்ந்த சிந்தனை உள்ள ஆத்மாவிற்கு, எப்பொழுதும் தந்தை மற்றும் சேவையிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நெருக்கமான ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் அனைத்து கஜானாக்களின் மகாதானி ஆத்மாக்களுக்கு, அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன்**: ஆத்மாவின் அனைத்து குணங்களையும் அனுபவம் செய்திருக்கிறீர்களா? எது தன்னுடைய இயற்கையான குணமோ, ஞான சொரூபம், அன்பு சொரூபம் மற்றும் சுகம், சாந்தி ஆனந்த சொரூபம் என்ற இந்த அனைத்து குணங்களின் அனுபவம் இருக்கிறதா? ஆனந்த சொரூபம் மற்றும் ஞான சொரூபத்தின் நிலை என்றால் என்ன, அந்த நிலையில் நிலைத்திருப்பதற்கான அனுபவம் இருக்கிறதா? இந்த அனுபவம் செய்வது என்றால் அனைத்து குணங்களையும் அனுபவம் செய்வது மற்றும் அமைதியை மட்டும் பிராப்தி செய்வது என்பது தன் கையில் தான் இருக்கிறது. ஒருவேளை ஒவ்வொரு குணத்தின் அனுபவம் இருக்கிறது என்றால் சூழ்நிலையின் நேரத்திலும், அனுபவத்தின் ஆதாரத்தினால் சூழ்நிலையை மாற்றிவிடுவீர்கள். எனவே ஒவ்வொரு குணத்தின் அனுபவி ஆவது என்பது தான் தற்சமயம் செய்ய வேண்டிய முயற்சி ஆகும். எப்படி ஸ்தூலமான லிஃப்ட் இருக்கிறது, அதில் எந்த தளத்தின் எண்ணை அழுத்துகிறீர்களோ அந்த தளத்திற்குத் தான் எடுத்துச் செல்லும். அந்த மாதிரி இதிலேயும் பயிற்சி வேண்டும். இது புத்தியின் லிஃப்ட் ஆகும், நினைவு என்ற பொத்தானை அழுத்தினீர்கள் என்றால் உடன் சென்றடைவீர்கள். சில நேரம் லிஃப்ட் இருந்த போதும்

# 1977 அவ்யக்த முரளி

வேலை செய்யாமல் இருக்கும் அல்லது மேலே செல்வதற்காக நீங்கள் எண்ணை அழுத்தினீர்கள், ஆனால் அது கீழே வந்துவிடும் மேலும் இரண்டாவது எண்ணை அழுத்தினீர்கள் ஆனால் நீங்கள் மூன்று அல்லது நான்காவது மாடிக்கு வந்துவிடுவீர்கள் என்று அந்த மாதிரி ஆகிவிடும் ஆனால் அந்த மாதிரி இங்கு இல்லையே? லிஃப்ட் தன்னுடைய கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். ஒருவேளை விரும்பாவிட்டாலும் கூட கீழே வந்து விடுகிறீர்கள் என்றால், ஏதோ தொய்வு இருக்கிறது. கட்டுப்படுத்தும் சக்தி இல்லை. யார் தன்னைத் தான் கட்டுப்படுத்த முடிவதில்லையோ அவர் இராஜ்யத்தை எப்படி கட்டுப்படுத்துவார்? அங்கு இராஜ்யமும் சட்டப்படி நடப்பதாக இருக்கும், இயற்கையும் கட்டளைப்படி நடக்கும். இங்கோ இயற்கை ஏமாற்றிவிடுகிறது. அப்படி இயற்கையின் அதிகாரியாக யார் ஆவார்கள். யார் சுயம் தன்னுடைய அதிகாரியாக இருப்பாரோ அவர் தான் ஆவார். எந்த விதமான எண்ணம், சுபாவம், நபர் மற்றும் வைபவத்தின் அடிமைத்தனம் இருக்க வேண்டாம். இதைத் தான் அதிகாரி என்று கூறுவது. தன்னுடைய சுபாவத்திலும் அடிமைத்தனம் இருக்கக்கூடாது. என்னுடைய சுபாவம் அந்த மாதிரி, எனவே செய்து விட்டேன் என்று கூறுவது கூட அடிமைத்தனமாக ஆனது இல்லையா? அதிகாரி எப்பொழுதும் சக்திசாலியாக இருப்பார்.

ஆஹா பாபா, ஆஹா டிராமா என்ற பாடலைப் பாடிக் கொண்டே இருந்தீர்கள் என்றால் எப்பொழுதும் ஆர்வம் நிறைந்த ஈடுபாட்டில் மூழ்கியிருப்பீர்கள். ஏனென்றால் யார் பார்வையாளர் ஆகி, ஒவ்வொரு பங்கையும் செய்கிறாரோ அவர் தான் முழுமையான ஈடுபாட்டில் இருக்க முடியும். எப்பொழுதாவது யாராவது பாடல் பாடுகிறார் என்றால் அதிலேயே மூழ்கியிருப்பார் இல்லையா? அப்படி இந்தப் பாடலைப் பாடுபவர்கள் எப்பொழுதும் ஒருவரின் ஈடுபாட்டிலேயே மூழ்கியிருப்பார்கள். ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற இந்தப் பாடலைப் பாடிக்கொண்டே இருங்கள். மிகப் பெரிய படை. எவ்வளவு பெரிய படையாக இருக்குமோ அந்த அளவு தன்னுடைய இராஜ்யத்தை சுலபமாகவே அடைந்து விடுகிறார்கள். இவை அனைத்தையும் தன்னுடைய திடமான எண்ணத்தினால் என்ன விரும்புகிறீர்களோ அதைச் செய்ய முடியும். அந்த ஆத்ம ஞானி கூட ஸ்தூலமான தபஸ்யா மூலம், அற்ப காலத்தின் தபஸ்யா மூலம், அற்ப காலத்தின் சித்தியை பிராப்தி செய்துவிடுகிறார்கள். நீங்கள் ஆன்மீக

தபஸ்வி, பரமாத்மா ஞானியாக இருக்கிறீர்கள். அவருடைய எண்ணம் என்ன செய்யும்? எப்பொழுதும் வெற்றி இரத்தினத்தின் நினைவு இருப்பதினால் மாயாவின் அனேக விதமான தடைகள் ஒன்றுமே இல்லாதது போல் முடிவடைந்துவிடும். எப்படி அவருடைய பெயர், அடையாளமே மறைந்துவிடும் அளவிற்கு அவர் மேல் வெற்றி அடையுங்கள் என்று கூறுவார்கள் இல்லையா? எப்பொழுதும் வெற்றி அடைபவரின் நினைவு மற்றும் போதை இருக்கிறது என்றால் மாயாவின் தடைகளின் பெயர், அடையாளம் இருக்காது. மாயாவின் தடை இறந்து போன எறும்பிற்குச் சமமாகும். அதைக் கண்டு பயப்படுபவராக இல்லையே. மாவீரன் அனைத்து வீரம் நிறைந்தவர், தடைகளைக் கண்டு பயப்படமாட்டார். தடைகளைப் புரிந்து கொண்டீர்கள் தான் இல்லையா? ஏன் வருகிறது, எப்படி அகலும், இந்த அனைத்தின் ஞானம் இருக்கிறது தான் இல்லையா? தடை வருகிறது முன்னேறச் செய்வதற்காக, தடை வருவதினால் அனுபவியாகவும் மற்றும் உறுதியானவராகவும் ஆகிவிடுவீர்கள். தெரிந்து கொள்வதினால் ஞானம் நிறைந்தவர் தடைகளிலிருந்து லாபத்தை எடுப்பாரேயன்றி பயப்படமாட்டார். தடை வந்திருக்கிறது. முன்னேற்றம் செய்விப்பதற்காக, இந்த நினைவு வருவதினால் மகாவீர் ஆகிவிடுவீர்கள். வீணான எண்ணங்களினால் பயப்படவோ இல்லையே எண்ணங்கள் மேல் வெற்றி அடைபவர் பயப்படமாட்டார், பயந்தீர்கள் என்றால் மாயா பலஹீனத்தைப் பார்த்து மேலும் தாக்குதல் செய்யும். வீரம் நிறைந்தவர் என்று பார்த்தால் விடை பெற்றுச் சென்றுவிடும்.

2) நீங்கள் சுயதரிசன சக்கரதாரி தான் இல்லையா? சுயதரிசன சக்கரதாரியாக இருப்பவர் எதிர்காலத்தில் குடைநிழலில் இருப்பவர். ஒருவேளை சுயதரிசன சக்கரதாரியாக இல்லை என்றால் எதிர்காலத்தில் குடைநிழலில் இருப்பவராகவும் இல்லை. சுயதரிசன சக்கரம் அனேக வீணான குழப்பங்களுக்கு முடிவு கட்டிவிடுகிறது. சுயதரிசன சக்கரத்தின் எதிரில் எந்தவொரு குழப்பமும் நிலைத்திருக்க முடியாது. ஒரு நொடியில் முடிவடைந்துவிடும். அப்படியானால் தன்னுடைய அலங்காரத்தை எப்பொழுதும் தக்க வைத்துக் கொள்கிறீர்களா? அல்லது களைப்படைந்து விடுகிறீர்களா? சுயதரிசன சக்கரத்தை தாரணை செய்வது என்றால் லேசாக இருப்பது. லேசாக இருக்கும் ஒன்றை எப்பொழுதும் தாரணை செய்வது கடினமாக இருக்காது. சுயதரிசன சக்கரதாரி ஆவது தான்

லேசாக ஆவது. எனவே நிரந்தரமாக இந்தச் சக்கரத்தை சுற்றிக் கொண்டே இருங்கள். இதை விடக்கூடாது. ஏனென்றால் பிராப்தியின் அனுபவம் இருக்கிறது தான் இல்லையா?

3) எவ்வளவு தாகமுள்ள ஆத்மாக்களின் தாகத்தைத் தீர்ப்பீர்களோ அந்த அளவு தானும் திருப்தியான ஆத்மாவாக இருப்பீர்கள். மற்றவர்களுக்குக் குஷி கொடுப்பது என்றால் சுயம் குஷியாக இருப்பது. எப்படி தானம் செய்வதினால் செல்வம் அதிகரிக்கிறது. அதே போல் மற்ற ஆத்மாக்களுக்கு குஷி, சாந்தி, சக்தி கொடுப்பதல்ல, ஆனால் தன்னுள் நிரப்புவதாகும். எப்பொழுது சேவை செய்வதின் முழு ஈடுபாடு வந்து விடுகிறது என்றால், தூங்கிக் கொண்டிருந்தால் கூட கனவிலும் சேவை செய்வார்கள். கனவிலும் கூட சேவைக்கான நல்ல நல்ல திட்டம், யோகா மூலம் உணர்த்துதல் ஏற்பட்டது போல் கனவிலும் வரும். ஈடுபாட்டின் பிரதிபலன் கனவில் கிடைக்கிறது. இதைத் தான் நல்ல ஈடுபாட்டோடு மூழ்கியிருப்பது என்று கூறுவது. குழந்தைகள் உங்களுக்காக பிராமணர்களின் உலகம் இருக்கிறது. மற்றபடி வெளி உலகம் சாரமற்றது. பார்த்துக் கொண்டே பார்க்காமலும், வாழ்ந்து கொண்டும் அதில் வாழாமலும் இருக்கிறீர்கள். எனவே சேவாதாரியின் கனவில் என்ன வரும்? தந்தை மற்றும் சேவை வேறு எதுவுமே முற்றிலும் இருக்காது. நல்லது.

4) பாபா. மாயாவை ஒரு வார்த்தையினால் மயக்கமடையச் செய்யுங்கள். அது எந்த வார்த்தை? எங்கு பாபா இருக்கிறாரோ அங்கு மாயா இல்லை. ஒருவேளை உள்ளப்பூர்வமாக, உறவோடு, அன்பாக பாபா என்று கூறினால் மாயா ஓடிவிடும். எப்படி எவ்வளவு பெரிய கொள்ளைக்காரனாக இருந்தாலும், பிடிபட்டு விடுகிறானென்றால், அப்பொழுது பெரிய கொள்ளைக்காரன் கூட செம்மறி ஆடு ஆகிவிடுவான். அப்படி பாபா என்ற வார்த்தை வெளியாவது மேலும் கொள்ளைக்காரன் பிடிபடுவது. எந்த மாயா ஒரு நொடிக்கு முன்பு சிங்கத்தின் ரூபமுடையதாக இருந்ததோ, அது ஒரு நொடிக்குப் பிறகு செம்மறி ஆடு ஆகிவிடுகிறது. எனவே இந்த சாதனத்தை எப்பொழுதும் உடன் வைத்துக் கொள்ளுங்கள். பாபாவை மறந்தீர்கள் என்றால் அனைத்தையும் மறந்தீர்கள். சாதனம் சுலபமானது, ஆனால் அடிக்கடி உபயோகம் செய்வதற்கு முறை தெரிய வேண்டும். ஒரு நொடியில்

பரிவர்த்தனை ஆக வேண்டும். இதைத் தான் உபயோகம் செய்வதற்கு முறை தெரிகிறது என்று கூறுவது. என்னுடைய பாபா (தந்தை) என்பதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள், எப்பொழுது என்னுடைய பாபா வந்தது என்றால், மாயா ஓடிவிட்டது.

5) சகஜயோகியின் நிலை இயல்பாகவே உருவாகியிருக்க வேண்டும். அதற்கான விதி -அமிர்தவேளையின் மகத்துவத்தைத் தெரிந்து கொள்ளுங்கள். அமிர்தவேளை நாளின் தொடக்கமாகும். யார் அமிர்தவேளையில் அதாவது நாளின் தொடக்கத்தின் நேரத்தை சக்திசாலியான நிலையாக உருவாக்குவார்களோ அவர்களுக்கு நாள் முழுவதும் உதவி கிடைக்கும். முழு நாளின் வாழ்க்கை மகான் ஆகிவிடும். ஏனென்றால், எப்பொழுது அமிர்தவேளையில் விசேஷமாக தந்தையிடமிருந்து சக்தியை நிரப்பிவிட்டால், சக்தி சொரூபமாகி நடப்பது கடினமாக இராது. எப்படிப்பட்ட காரியம் எதிரில் வந்தாலும் கடினம் அனுபவம் ஆகாது ஆனால் அடைந்த சக்தியின் ஆதாரத்தினால் சுலபமாகிவிடும், லம் சகஜயோகியின் நிலை இயல்பாகவே உருவாகியிருக்கும். அமிர்தவேளையைத் தவற விடுவது என்றால் சங்கமயுகத்தில் விசேஷ பிராப்தியை அழிப்பதாகும். என்னென்ன ஈஸ்வரிய மரியாதைகள் இருக்கின்றனவோ அந்த மரியாதைப்பூர்வமான வாழ்க்கை வாழ்வதினால் உலகின் எதிரில் ஒரு உதாரணம் ஆகிவிடுவீர்கள்.

உலகம் உங்களுடைய வாழ்க்கையைப் பார்த்து தன்னுடைய வாழ்க்கையை உருவாக்கும். எனவே மரியாதைக்கோட்டிற்கு உள்ளே இருந்தீர்கள் என்றால் மாயா வர முடியாது. என்னவானாலும் சரி, தன்னுடைய ஊக்கம், உற்சாகம் புதியதாக இருக்க வேண்டும். தன்னுடைய ஊக்கம், உற்சாகத்திற்கான ஆதாரம் தானே தான், அதில் வேறு யாரும் தடை ஏற்படுத்த முடியாது. அதில் எப்பொழுதும் முன்னேறும் கலை இருக்க வேண்டும். பலஹீனமானவர்களின் வேலை தான் நிற்பது. நல்லது.

**வரதானம்: தன்னுடைய நடைமுறை வாழ்க்கையின் நிரூபணம் மூலமாக அமைதியின் சக்தியின் ஒலியைப் பரப்பக்கூடிய விசேஷ சேவாதாரி ஆகுக!**

ஒவ்வொருவருக்கும் அமைதியின் சக்தியின் அனுபவம் செய்விப்பது தான் விசேஷ சேவை ஆகும். எப்படி அறிவியலின் சக்தி பெயர் பெற்றது. அதே போல் அமைதியின் சக்தி பெயர் பெற்றதாக ஆக வேண்டும். அமைதியின் சக்தி அறிவியலின் சக்தியை விட உயர்ந்தது என்று அனைவரின் வாயிலிருந்தும் வார்த்தை வெளியாக வேண்டும். அந்த நாளும் வரும். அமைதியின் சக்தியின் பிரத்யக்ஷதா என்றால் தந்தையின் பிரத்யக்ஷதா. அமைதியின் சக்தியின் நடைமுறை நிரூபணம் உங்கள் அனைவரின் வாழ்க்கை ஆகும். ஒவ்வொருவரும் நாள் முழுவதும் அங்கு இங்கு சென்று கொண்டிருக்கும்பொழுது அமைதியின் மாடல் ஆக (மாதிரியாக) தென்பட்டது என்றால், அறிவியலைச் சேர்ந்தவர்களின் பார்வையும் அமைதியின் சக்தி நிறைந்தவர்கள் மேல் செல்லும். அந்த மாதிரி சேவை செய்யுங்கள் அப்பொழுது தான் விசேஷ சோதாரி என்று கூறுவோம்.

**சுலோகன்: சேவை மற்றும் மனநிலையின் சமநிலை வைத்தீர்கள் என்றால், அனைவரின் ஆசீர்வாதம் கிடைத்துக் கொண்டே இருக்கும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 22.06.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நட்சத்திரங்களின் உலகத்தின் இரகசியம்!

இன்று பாப்தாதா அனைத்து நட்சத்திரங்களையும் ஜொலித்துக் கொண்டிருக்கும் ரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைத்து நட்சத்திரங்களும் ஜொலிக்கின்றன ஆனால் ஜொலிப்பதிலும் வரிசைக்கிரமம் உள்ளது. நட்சத்திரங்களின் உலகம் அதாவது உங்களது உலகத்தைப் பார்த்திருக்கிறீர்களா? நட்சத்திரங்களின் உலகத்தின் பாடல் பாடுகிறார்கள் ஆனால் அது எந்த நட்சத்திரங்களின் உலகம் மகிமையாக பாடப்படுகிறது என்ற இந்த இரகசியத்தை நீங்கள் அனைவரும் தெரிந்திருக்கிறீர்கள். ஒவ்வொரு நட்சத்திரமும் அவரவர்களின் பிரபாவத்தைக் காண்பிக்கின்றன. நட்சத்திரங்களின் ஆதாரத்தில் ஜாதகம் மற்றும் எதிர்காலத்தைக் கூறுகிறார்கள். சைத்தன்ய ரூபத்தில் ஞான நட்சத்திரங்கள் நீங்கள் முழுக் கல்பத்திற்கும் ஒவ்வொரு ஆத்மாவின் ஜாதகத்தின் ஆதாரமூர்த்தி ஆவீகள். ஞான நட்சத்திரங்களின் உயர்ந்த பிறவி மற்றும் தற்வேைபொதய பிறவியின் ஆதாரத்தில் பிராப்தியின் (பலன்) பிறவி அதாவது பூஜைக்குரிய பதவியின் பிறவி மற்றும் பூஜைக்குரிய நிலையின் ஆதாரத்தில் பூஜாரியின் பிறவி அந்த மாதிரி 84 பிறவிகளின் கதையின் ஆதாரம் மற்ற தர்மத்தின் ஆத்மாக்களின் ஜாதகத்தின் ஆதாரமாக உள்ளது. உங்களுடைய ஜாதகத்தில் அவர்களுடைய ஜாதகம் அடங்கியிருக்கிறது. கதாநாயகன், கதாநாயகி பாத்திரமுள்ள உங்களின் ஆதாரத்தில் முழு நாடகமும் அடங்கியிருக்கிறது.

ஆத்மாக்கள் உங்களுடைய பூஜாரி நிலை ஆரம்பமானது மற்றும் மற்ற ஆத்மாக்களின் மதங்கள் ஸ்தாபனை ஆவது ஆரம்பமானது, பூர்வஜ ஆத்மாக்களான உங்களின் ஆதாரத்தில் தான் இந்த சிறுசிறு வம்சத்தினர் வெளிப்படுகிறார்கள். நினைவுச் சின்ன ரூபத்தில் எல்லைக்குட்பட்ட நட்சத்திரங்களின் ஆதாரத்தில் எதிர்கால வாழ்க்கை உருவாகிறது.

ஏனென்றால், இந்த நேரம் சைத்தன்ய நட்சத்திரங்களான நீங்கள் திரிகாலதரிசியாக இருக்கிறீர்கள். ஒவ்வொரு ஆத்மாவின் எதிர்காலத்தையும் உருவாக்குவதற்கு பொறுப்பாளராக ஆகியிருக்கிறீர்கள். முக்தி கொடுத்தாலும், ஜீவன்முக்தி கொடுத்தாலும், ஜீவன்முக்தியின் வாசலை திறப்பதற்கான பொறுப்பாளராக ஞான சூரியன் தந்தையின் கூடவே ஞான நட்சத்திரங்கள் தான் பொறுப்பாளர் ஆகிறார்கள். எனவே உங்களுடைய ஞாபகார்த்த ஜட நட்சத்திரங்களும் எதிர்காலத்தைக் காண்பிப்பவைகளாக ஆகியிருக்கின்றன. அதாவது எதிர்காலத்தைக் காண்பிப்பதற்கு பொறுப்பாளராக ஆகியிருக்கின்றன. அப்படி ஜட நினைவுச் சின்னமான எல்லைக்குட்பட்ட நட்சத்திரங்களைப் பார்த்து தன்னுடைய நட்சத்திர சொரூபம் நினைவில் வருகிறதா? நட்சத்திரங்களிலும் வேறு வேறு வேகத்தைக் காண்பிக்கிறார்கள். சுற்றி வருவதற்கான வேகத்தை சிலவற்றிற்கு அதிகமாகக் காண்பிக்கிறார்கள் மேலும் சிலவற்றிற்கு குறைந்த வேகத்தை காண்பிக்கிறார்கள். சில நட்சத்திரங்கள் கூட்டமாக இருக்கிறார்கள். சில நட்சத்திரங்கள் பிறவற்றிலிருந்து கொஞ்சம் தூரத்திலிருப்பதாகக் காண்பிக்கிறார்கள். சில அடிக்கடி இடம் மாறுகின்றன. மேலும் சில வால் நட்சத்திரங்களும் இருக்கின்றன. இப்படி அனேக விதமான சைத்தன்ய நட்சத்திரங்களின் நிலை, முயற்சி செய்வதின் வேகம், கூட்டக இருக்கும்போது ஆடாத, அசையாத மற்றும் மேலும், கீழும் செல்வதற்கான ரூபம், சேவாதாரி மற்றும் அனைவரின் அன்பிற்குரிய நிலை மற்றும் சகயோகியின் சொரூபம், உயர்ந்த குணங்கள் மற்றும் கடமையின் சொரூபத்தை நினைவுச் சின்ன ரூபத்தில் காண்பித்திருக்கிறார்கள்.

நட்சத்திரங்களின் சம்மந்தத்தை சந்திரனுடன் காண்பித்திருக்கிறார்கள். சில சந்திரனின் அருகிலிருக் கின்றன. மேலும் சில தூரத்தில் இருக்கின்றன. ஞான சூரியனின் குழந்தையாக இருந்த போதும் சந்திரனுடன் இருப்பதற்கான சித்திரத்தை ஏன் உருவாக்கியிருக்கிறார்கள். இதற்கும் இரகசியம் இருக்கிறது. சந்திரன் என்றால் பெரிய அம்மா பிரம்மாவை கூறப்படுவதாகும். ஞான சூரியனிடமிருந்து அனைத்து சக்திகளின் ஞானத்தின் ஒளியை அவசியம் பெறுகிறார்கள், ஆனால் நாடகத்தில் தனது பாகத்தை செய்வதில் சாகார ரூபத்தில் துணையாக இருப்பது ஆதிபிதா பிரம்மா மற்றும் பிராமணர்கள் ஆவர். ஞான சூரியன் இந்த சக்கரத்திலிருந்து விலகியிருக்கிறார்.

எனவே அனேக பிறவிகளில் வேறு வேறு பெயர் ரூபத்தில், சந்திரன் மற்றும் ஞான நட்சத்திரங்கள் உடனிருக்கின்றன. இதே காரணத்தினால் நினைவுச்சின்ன சித்திரத்திலும் சந்திரன் மற்றும் நட்சத்திரங்களின் சம்மந்தம் இருப்பதாக காண்பித்திருக்கிறார்கள். நான் எந்த மாதிரியான நட்சத்திரம் என்று உங்களை நீங்களே கேளுங்கள். அனைவருடன் சேர்ந்திருக்கும் போது அனைவரின் அன்பிற்குரியவராக மற்றும் எப்பொழுதும் சகயோகி ஆவதற்கான நிலை இருக்கிறதா? கூட்டத்தில் சுபாவம், சம்ஸ்காரம், நிலை மாறி விடுகிறது. அதாவது இடத்தை மாற்றிவிடுகிறீர்களா? எப்பொழுதும் உலகிற்கு வெளிச்சம் கொடுக்கும் பிரகாசமான நட்சத்திரமாக இருக்கிறீர்களா? அல்லது தனக்குத்தானே ஞானத்தின் ஒளி மற்றும் நினைவின் சக்தியைக் கொடுக்க முடியாதா? மற்ற ஆத்மாக்களின் ஒளி மற்றும் சக்தியின் ஆதாரத்தில் இருந்து கொண்டிருக்கிறீர்களா? எப்பொழுதும் தன்னை திரிகாலதரிசி நிலையில் நிலைத்து வைக்கிறீர்களா? அந்த மாதிரி தன்னைத் தானே சோதனை செய்யுங்கள். மூன்று விதமான நட்சத்திரங்கள் இருக்கிறார்கள் என்று ஏற்கனவே கூறியிருந்தோம் - 1) எப்பொழுதும் அதிர்ஷ்ட நட்சத்திரம், 2) எப்பொழுதும் வெற்றியின் நட்சத்திரம், 3) நம்பிக்கை நட்சத்திரம். இந்த மூன்றில் நான் எதுவாக இருக்கிறேன் என்று தன்னைத் தானே கேளுங்கள். நான் யார் என்று நீங்களே உங்களைத் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? முதல் கேள்விக்கு விடை கிடைத்தது தான் இல்லையா? நீங்களே உங்களை தீர்மானம் செய்யுங்கள், புரிந்ததா? நல்லது. இன்று முரளி சொல்வதற்காக வரவில்லை, சந்திப்பதற்காக வந்திருக்கிறோம். இந்த சந்திப்பு கூட ஒவ்வொரு கல்பத்திலும் அடங்கியிருக்கிறது. இந்த சந்திப்பின் நினைவுச் சின்னமாக ஆங்காங்கே அனேக வழிமுறைகளில் விழா கொண்டாடுகிறார்கள். நல்லது.

எப்பொழுதும் தந்தையோடு சந்திக்கக்கூடிய, எண்ணம், சொல் மற்றும் செயலில் வெற்றி அடையும் நட்சத்திரங்களுக்கு, எப்பொழுதும் தந்தையை துணைவனாக ஆக்கக்கூடிய நெருக்கமான நட்சத்திரங்களுக்கு, ஒவ்வொரு எண்ணத்தினால் உலகிற்கு ஒளி மற்றும் சக்தியைக் கொடுக்கக்கூடிய, எப்பொழுதும் ஜொலித்துக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன்**: 1) எப்பொழுதும் தன்னை ஒவ்வொரு காரியத்தையும் செய்து கொண்டே உடலின், செல்வத்தின், குடும்பத்தின் டிரஸ்டி என்று புரிந்து நடந்து கொள்கிறீர்களா? டிரஸ்டியின் விசேஷமாக என்ன இருக்கும்? ஒரு வார்த்தையில் சொல்வதானால், டிரஸ்டி என்றால் பற்றுதல் இல்லாதவர் (நஷ்டோமோஹா), டிரஸ்டிக்கு எதிலேயும் பற்றுதல் இருப்பதில்லை, ஏன்? ஏனென்றால் என்னுடையது என்பது இல்லை. என்னுடையதில் பற்றுதல் இருக்கும். குடும்பத்திற்காக என்னவெல்லாம் சாதனம் கிடைத்திருக்கின்றனவோ மேலும் சேவைக்காக சம்மந்தம் இருக்கிறது. அதில் என்னுடையது என்பது இருப்பதில்லை ஆனால் பாப்தாதாவினால் கொடுக்கப்பட்ட சொத்து என்று புரிந்து கொண்டு சேவை செய்வீர்கள் மற்றும் சாதனங்களை காரியத்தில் ஈடுபடுத்துவீர்கள் என்றால் சுலபமாகவே டிரஸ்டி ஆகிவிடுவீர்கள். டிரஸ்டி என்றால் என்னுடையது என்பது முடிந்து பாபா, பாபா என்பது தான் வாயிலிருந்து வெளிப்பட வேண்டும். அந்த மாதிரி நிலை இருக்கிறதா? அல்லது எந்த சாதனங்களை காரியத்தில் ஈடுபடுத்துவீர்களோ அதில் என்னுடையது என்பதின் உணர்வு இருக்கிறதா? என்னுடையது என்பது இருக்கிறது என்றால் தேக உணர்வு வருகிறது. ஒருவேளை உடலுக்கும் டிரஸ்டியாக இருக்கிறீர்கள் என்றால் தேக உணர்வு இருக்க முடியாது. எப்பொழுதும் ஜென்மம் ஏற்பட்டது அப்பொழுது முதல் உறுதிமொழியாக என்ன செய்தீர்கள்? என்னுடையது என்று என்னவெல்லாம் இருக்கிறதோ அவை அனைத்தும் தந்தையினுடையது. உடலிலிருந்து கொண்டே மறுபிறவி எடுத்தவராக ஆனீர்கள் இல்லையா? பின்பு என்னுடையது என்பது எங்கிருந்து வந்தது. கொடுக்கப்பட்ட பொருள் ஒருபொழுதும் திருப்பி வாங்கப்படுவதில்லை. அப்படியானால் எப்பொழுதும் ஆத்ம அபிமானி ஆவதற்கான அதாவது பற்றுதல் இல்லாதவராக ஆவதற்கான சகஜ சாதனமாக என்ன ஆனது? நான் டிரஸ்டி ஆவேன். சென்ற கல்பத்தின் நினைவுச் சின்னத்திலும் அர்ஜுனனுக்கு நினைவுச் சின்னமாக என்ன காண்பித்தார்கள்? அதில் அர்ஜுனனுக்கு கடினம் எப்பொழுது அனுபவம் ஆனது? எப்பொழுது என்னுடையது என்பது வந்ததோ, அப்போது என்னுடையது அகன்றது, பற்றுதலை வென்றவர் அதாவது நினைவு சொரூபம் ஆகிவிட்டார். என்னுடைய கணவன், என்னுடைய மனைவி, என்னுடைய வீடு. என்னுடைய குழந்தைகள், என்னுடைய கடை, என்னுடைய அலுவலகம் அப்படி இந்த என்னுடைய, என்னுடைய என்பது சுலபமானதை கடினமாக்கிவிடுகிறது. சகஜ மார்க்கத்திற்கான சாதனம்

பற்றுதலை வென்ற அதாவது டிரஸ்டி நிலை ஆகும். இந்த நினைவினால் தந்தை மற்றும் அனைவரையும் சகயோகி ஆக்குங்கள். புரிந்ததா?

பல இடங்களிலிருந்து வந்திருந்தபோதிலும் இந்த நேரம் நீங்கள் அனைவரும் மதுபன் வாசிகளாக இருக்கிறீர்களா? இந்த நேரம் தன்னை குஜராத்தி, பஞ்சாபி, உபி உத்திரபிரதேச வாசியாகவோ நினைக்க வில்லையே? எப்பொழுதும் தன்னை பரந்தாமத்தில் வசிப்பவராகவும் மற்றும் பாகத்தை நடிப்பதற்காக மதுபன்வாசி என்று புரிந்து கொள்ளுங்கள். மதுபன்வாசி என்று புரிந்து கொள்வதினால் போதை மற்றும் குஷி இருக்கிறது. மதுபன்னில் எவ்வளவு தான் கஷ்டம் இருந்தாலும் இங்கு இருப்பதற்கு விருப்பம் கொள்வார்கள். அவரவரின் வீட்டில் டன்லப் மெத்தை இருந்தாலும் கூட இங்கு இருப்பது அவர்களுக்குப் பிடித்திருக்கிறது. ஏனென்றால் மதுபன்வாசி ஆவதினால் தானாகவே சகஜ மற்றும் நிரந்தர யோகி ஆகிவிடுகிறார்கள். மதுபன்னின் மகிமையும் இருக்கிறது. மதுபன் மற்றும் மதுபன்னின் முரளி மகத்துவம் நிறைந்தது, எனவே மதுபன்னில் வர அனைவரும் விருப்பம் வைக்கிறார்கள். எனவே எப்பொழுதும் தன்னை மதுபன்நிலாசி என்று புரிந்து நடந்து கொள்ள வேண்டும். பின்பு சகஜயோகியின் நிலை இருக்கும். மதுபன் நினைவு வருவதினால் மனநிலை எப்பொழுதும் குஷி ஆகிவிடும். மதுபன் நினைவு வந்தது என்றால் வீணான எண்ணம் முடிவடைந்து சக்தி நிறைந்த எண்ணத்தின் அனுபவம் ஏற்படுகிறது. நினைவு வருவதினால் சக்தி நிறைந்ததாக ஆகிவிடும். நீங்கள் இங்கிருந்து வீட்டிற்குச் செல்லவில்லை, சேவை ஸ்தானங்களுக்குச் செல்கிறீர்கள். வீட்டிற்குச் சென்ற பிறகும் கூட ஒருவேளை படிப்பு மற்றும் தந்தை, மற்றும் சேவை நினைவிருக்கிறது என்றால் குஷி மற்றும் போதை இருக்கும். எப்பொழுதும் தந்தையை துணைவனாக ஆக்குபவர் எப்பொழுதும் போதை மற்றும் குஷியில் திடமாக இருப்பார். எப்பொழுதும் தந்தை மற்றும் சேவை இதே நினைவில் இருந்தீர்கள் என்றால் சக்தி நிறைந்தவர்களாக இருப்பீர்கள். மனநிலை எப்பொழுதும் ஆடாமல் இருக்கும். நல்லது.

ஏதோ ஒருவிதத்தில் சோதனை வந்து கொண்டிருக்கிறது என்றால், பயப்படாதீர்கள். இது ஏன் வந்தது என்று கேள்விக்குறியில் வராதீர்கள். இந்த மாதிரி யோசிப்பதில் நேரத்தை வீணாக்காதீர்கள். கேள்விக்குறியை

அகற்றிவிட்டு முற்றுப்புள்ளியை வையுங்கள். அப்பொழுது தான் வகுப்பு மாற்றலாகும் அதாவது சோதனைத்தாளில் தேர்ச்சி பெறுவீர்கள். முற்றுப்புள்ளி வைப்பவர் முழுமையாக தேர்ச்சி பெறுவார். ஏனென்றால் முற்றுப்புள்ளி தான் புள்ளியின் (ஆத்மாவின்) நிலை ஆகும். பார்த்துக் கொண்டும் பார்க்காதீர்கள், கேட்டுக் கொண்டும் கேட்காதீர்கள். தந்தையால் சொல்லப்பட்டதைக் கேளுங்கள், தந்தை என்ன கொடுத்திருக்கிறாரோ அதைப் பாருங்கள். இந்தப் பயிற்சி மூலம் முழுமையாக தேர்ச்சி அடைவீர்கள். சோதனையில் தேர்ச்சி பெறுவதற்கான அடையாளம் முன்னேறிச் செல்வது அதாவது முன்னேறும் கலையை அனுபவம் செய்வது. அதீந்திரிய சுகத்தின் ஊஞ்சலில் ஆடிக்கொண்டே இருப்பார்கள். அனைத்து பிராப்தியின் அனுபவம் தானாக ஆகிக் கொண்டே இருக்கும். நல்லது.

2) அனைவரும் திருப்தி மணிகள் தான் இல்லையா? மணி எப்பொழுதும் நெற்றியின் நடுவில் இருக்கும். கிரீடத்தின் மத்தியில் அழகான மணிகள் இருக்கும். அப்படி யார் திருப்தி மணிகளாக இருக்கிறார்களோ அவர்கள் எப்பொழுதும் தந்தையின் நெற்றியில் இருக்கிறார்கள், அதாவது தந்தையின் நினைவில் இருக்கிறார்கள். தந்தையும் அவர்களை நினைவு செய்கிறார். எப்பொழுது குழந்தைகள் தந்தையை நினைவு செய்கிறார்கள் என்றால் தந்தையும் அதற்கான பிரதிபலன் கொடுக்கிறார். எப்பொழுதும் தந்தையின் நினைவில் இருப்பவர்கள் ஒவ்வொரு சூழ்நிலையிலும் திருப்தியாக இருக்கிறார்கள். சூழ்நிலை திருப்தியின்மைக்கானதாக இருந்தாலும், துக்கத்தின் நிகழ்வு நடந்திருந்தாலும் எப்பொழுதும் சுகமாக இருப்பார்கள். துக்கத்தின் சூழ்நிலையில் சுகத்தின் நிலை ஒரே சீராக இருக்க வேண்டும். ஞானத்தின் சக்தியின் ஆதாரத்தினால் மலை போன்ற சூழ்நிலையும் கடுகாக அனுபவம் ஆகும் அதாவது ஒன்றும் இல்லை என்று. ஏனென்றால் எதுவும் புதிதல்ல. அந்த மாதிரி நிலை இருக்கிறதா? என்ன நடந்தாலும் ஒன்றும் புதிதல்ல. இதைத் தான் மகாவீர நிலை என்று கூறுவது.

3) தன்னை பலமடங்கு பாக்கியம் நிறைந்தவர் என்று நினைக்கிறீர்களா? ஒவ்வொரு அடியிலும் பலமடங்கு வருமானம் சேமிப்பு ஆகிக் கொண்டிருக்கிறது. அந்த மாதிரி எண்ணிலடங்கா மடங்குகளுக்கு அதிபதி என்பதை அனுபவம் செய்கிறீர்களா? முழு உலகில் அந்த மாதிரி

தன்னுடைய உயர்ந்த பாக்கியத்தை உருவாக்குபவர்கள் கோடியில் சிலர் தான் இல்லையா? கோடியில் சிலர், அந்த சிலரிலும் சிலர் என்று என்ன மகிமை இருக்கிறதோ அது ஆத்மாக்களாகிய நம்முடைய மகிமை ஆகும். ஏனென்றால், சாதாரண ரூபத்தில் வந்திருக்கும் தந்தையை மற்றும் தந்தையின் காரியத்தைத் தெரிந்து கொள்வது என்ற இது கோடியில் சிலரினுடைய பங்காகும். ஞானம் கேட்டீர்கள், ஏற்றுக் கொண்டீர்கள் மற்றும் அடைந்து விட்டீர்கள், எப்பொழுது உலகின் எஜமானன் தன்னுடையவர் ஆகிவிட்டார் என்றால் உலகமே தன்னுடையது ஆகிவிடுகிறது இல்லையா? எப்படி விதை நம்முடைய கையில் இருக்கிறது என்றால் மரமும் இருக்கவே தான் செய்கிறது இல்லையா? யாரை தேடிக் கொண்டிருந்தோமோ அவரை அடைந்து விட்டோம். வீட்டில் அமர்ந்திருக்கும்போதே பகவான் கிடைத்தார் என்றால் எவ்வளவு குஷி இருக்க வேண்டும்? பகவான் என்னை தன்னுடையவராக ஆக்கியிருக்கிறார் என்ற இந்த குஷியிலேயே இருந்தீர்கள் என்றால் வேறு எங்கேயும் பார்வை மூழ்காது. எதிரில் பார்த்தும் பார்வை செல்லாது. தந்தை கிடைத்தார் என்றால் அனைத்தும் கிடைத்தது. இது தான் அனைத்தையும் விட மிகப் பெரிய குஷி ஆகும். இதே குஷியில் மனதால் நடனமாடிக்கொண்டே இருங்கள். இதைவிட பெரிய குஷிக்கான விஷயம் இருக்கிறதா என்ன? எனவே தான் அதீந்திரிய சுகத்தைப் பற்றிக் கேட்க வேண்டும் என்றால் கோப கோபியர்களிடம் கேளுங்கள் என்ற மகிமை இருக்கிறது.

4) எப்பொழுதும் தன்னை அதிர்ஷ்டம் நிறைந்தவர் என்று நினைக்கிறீர்களா? முழு உலகத்திற்குள் மிக உயர்ந்த அதிர்ஷ்டம் நம்முடையது என்று நிச்சயம் இருக்கிறதா? நம்மை மாதிரியான அதிர்ஷ்டம் நிறைந்தவர் வேறு யாரும் இருக்க முடியாது. தந்தை அவரே வந்து என்னை அவருடையவராக ஆக்கினார் என்ற இந்த பாக்கியத்தை வர்ணனை செய்து எப்பொழுதும் குஷியில் நடனமாடிக் கொண்டே இருங்கள். வெளியுலக மக்களின் அதிர்ஷ்டம் என்னவாக இருக்கும். இந்த நேரம் சுகமாக இருக்கும் அடுத்த நேரம் துக்கமாக இருக்கும் ஆனால் உங்களுடைய அதிர்ஷ்டம் அழியாதது. எப்பொழுதும் அந்த மாதிரி ஆனந்த சொரூபம் நிறைந்த அதிர்ஷ்டம் உள்ளவர்கள் நீங்கள். எது கனவில் கூட இல்லாமல் இருந்ததோ அது பிராப்தியாகி விட்டது, தந்தை

கிடைத்தார், அனைத்தும் கிடைத்தது. இதே குஷியில் இருந்தீர்கள் என்றால் எப்பொழுதும் சக்தி நிறைந்த சொரூபத்தில் இருப்பீர்கள்.

5) பிராமண வாழ்க்கை மிக உயர்ந்தது என்று மகிமை செய்யப்பட்டிருக்கிறது. பிராமணர்களின் பெயரும் உயர்ந்தது, காரியமும் உயர்ந்தது. மேலும் நிலையும் உயர்ந்தது. எப்படி பிராமணர்களின் மகிமை உயர்ந்ததாக இருக்கிறதோ அதே போல் தன்னை உண்மையான பிராமணன் அதாவது உயர்ந்த நிலை உள்ளவர் என்று அனுபவம் செய்கிறீர்களா? உயர்ந்ததிலும் உயர்ந்தவர் தந்தை, மேலும் உயர்ந்ததிலும் உயர்ந்தவர்கள் நீங்கள். தந்தை மற்றும் நான் இருவரும் உயர்ந்தவர்கள் என்ற இந்த நினைவில் இருந்தீர்கள் என்றால் செய்யும் காரியம் மற்றும் எண்ணம் தானாகவே உயர்ந்ததாக இருக்கும். யோக அக்னியினால் பழைய கணக்கை பஸ்பம் செய்யுங்கள். வீணானதின் பெயர், அடையாளமே அழிந்து விடும் அளவிற்கு அந்த மாதிரி அக்னி (யோக) சுடர் விட்டு எரியட்டும் சங்கமயுகத்தில் பழைய கணக்கை முடித்து புதியதைத் தொடங்க வேண்டும். ஒருவேளை பழைய கணக்கே இன்னும் இருந்து கொண்டிருக்கிறது என்றால் குஷியின் பலனாக என்ன இருக்க வேண்டுமோ அது இருக்காது. ஒரு நேரம் பலஹீனமானவராகவும் அடுத்த நேரம் சக்திசாலியானவராகவும் இருப்பார். தந்தை எப்பொழுதும் சக்திசாலியானவர் என்றால் குழந்தைகளும் எப்பொழுதும் சக்தி நிறைந்தவர்களாக ஆக வேண்டும். நல்லது.

6) இந்த நேரம் இரண்டு காரியம் சேர்ந்தே நடந்து கொண்டிருக்கிறது. ஒருபக்கம் பழைய கணக்கு வழக்கை முடித்து கொண்டிருக்கிறீர்கள் மற்றும் இன்னொரு பக்கம் எதிர்காலத்திற்கும் மற்றும் தற்சமயத்திற்கும் சேமித்துக் கொண்டும் இருக்கிறீர்கள். ஒன்றிற்கு லட்சம் மடங்கு சேமிப்பாவதற்கான நேரம் இது. எனவே எப்பொழுதும் ஒவ்வொரு நேரமும் சேமிப்பு ஆகிறது என்ற இந்த விஷயத்தில் கவனம் வேண்டும். முடித்துக் கொண்டிருக்கும் நேரத்திலும் சேமிப்பு செய்ய முடியும். ஏனென்றால் முடிப்பதற்கான சாதனம் நினைவு ஆகும். நினைவு மூலம் சேமிப்பும் ஆகிறது மற்றும் பழைய கணக்கு முடிக்கவும் படுகிறது. முடிப்பதிலேயே நேரம் சென்று விட்டது என்று அப்படி இருக்க வேண்டாம். ஒருவேளை டிரஸ்டி ஆகி முடித்தீர்கள் என்றால் கூட சேமிப்பாகும். விதிப்பூர்வமாக காரியம் செய்வதினால் முடிவதின் கூடவே சேமிப்பும் ஆகும். நல்லது.

**வரதானம்: நிமித்தம் (பொறுப்பாளர் / கருவி) மற்றும் நிர்மான் (பணிவு) உணர்வோடு சேவை செய்யக்கூடிய உயர்ந்த வெற்றி அடைபவர் ஆகுக!**

சேவாதாரி என்றால் எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக பொறுப்பாளராகவும் கூடவே பணிவாகவும் இருப்பவர். பணிவுத்தன்மை தான் உயர்ந்த வெற்றிக்கான சாதனம் ஆகும். எந்தவொரு சேவையிலும் வெற்றியை அடைவதற்காக பணிவுத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை தாரணை செய்யுங்கள். இதன் மூலம் சேவையில் எப்பொழுதும் மகிழ்ச்சியை அனுபவம் செய்வீர்கள். சேவையில் ஒருபொழுதும் களைப்பு இருக்காது. எந்த சேவை கிடைத்தாலும் இந்த இரண்டு விசேஷங்கள் மூலமாக வெற்றியை அடைந்து வெற்றி சொரூபமாகி விடுவீர்கள்.

**சுலோகன்: ஒரு நொடியில் உடலற்றவர் ஆவதற்கான பயிற்சி இருந்தது என்றால் சூரிய வம்சத்தில் வந்து விடுவீர்கள்!**
✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 25.06.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தூய்மையின் சம்பூர்ண நிலை!

பாப்தாதா விசேஷமாக அனைத்து குழந்தைகளின் இரண்டு விஷயங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு ஆத்மாவும் தனது யோகா மற்றும் சக்திக்கு ஏற்ப நேர்மையானவராக மற்றும் தூய்மையானவராக எவ்வளவு தூரம் ஆகியிருக்கிறார்? ஒவ்வொரு முயற்சி செய்யும் ஆத்மாவும் தந்தையின் உறவில் நேர்மையானவர் அதாவது தந்தையோடு நம்பிக்கைக்குரிய உண்மையான உள்ளம் உள்ளவராக லட்சியம் வைத்துக் கொண்டு நடந்து கொண்டிருக்கிறார்கள் ஆனால் நேர்மையானவர் ஆவதிலும் வரிசைக்கிரமம் இருக்கிறது.

(1) எவ்வளவு நேர்மையாக இருப்பாரோ அந்த அளவே தூய்மையாகவும் இருப்பார். தூய்மையாவதற் கான முக்கியமான விஷயம் தந்தையோடு உண்மையாக இருப்பவராக ஆவது. பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிப்பது மட்டும் தூய்மையின் உயர்ந்த நிலை அல்ல ஆனால் தூய்மை அதாவது உண்மையாக இருப்பது. அந்த மாதிரி உண்மையான உள்ளம் உள்ளவர் பரந்த இதயம் கொண்ட தந்தையின் இதய சிம்மாசனதாரியாக இருக்கிறார். மேலும் இதய சிம்மாசனதாரி குழந்தைகள் தான் இராஜ்ய சிம்மாசனதாரியாகவும் ஆகிறார்கள்.
2) நேர்மையானவர் என்று யாரை அழைக்கலாம் என்றால் யார் தந்தையிடமிருந்து கிடைத்திருக்கும் கஜானாக்களை (ஆன்மீக செல்வங்களை) தந்தையின் வழிகாட்டுதலின்றி எந்தவொரு காரியத்திலும் ஈடுபடுத்த மாட்டாரோ அவரைத் தான். ஒருவேளை மனம் சொல்லும் வழிப்படி மேலும் மற்றவர்கள் சொல்லும் வழிப்படி நேரத்தை, வார்த்தையை, காரியத்தை, மூச்சை மற்றும் எண்ணத்தை தீய சேர்க்கையால் வீணான பக்கம் இழக்கிறார்கள், சுயசிந்தனைக்குப் பதிலாக மற்றவை/மற்றவர்களின் சிந்தனை செய்கிறார்கள், சுவமானத்திற்குப் பதிலாக ஏதேனும் அபிமானத்தில் வந்து விடுகிறார்கள் என்றால். இந்த விதமாக ஸ்ரீமத்திற்கு விரோதமாக அதாவது ஸ்ரீமத்திற்கு

பதிலாக மனம் சொல்லும் வழியின் ஆதாரத்தில் நடக்கிறார்கள் என்றால், அவரை நேர்மையானவர் மற்றும் உண்மையானவர் என்று கூற முடியாது. இந்த அனைத்து பொக்கிஷங்களையும் பாப்தாதா உலக நன்மைக் காரியத்திற்காக கொடுத்திருக்கிறார். எனவே எந்தக் காரியத்திற்காகக் கொடுத்திருக்கிறாரோ அந்தக் காரியத்திற்குப் பதிலாக ஒருவேளை வேறு காரியத்தில் ஈடுபடுத்துகிறீர்கள் என்றால், இது சும்மா கொடுத்து வைக்கப்பட்டுள்ள சொத்தில் ஏமாற்றுக் காரியம் செய்வதாகும். எனவே அனைத்தையும் விட மிகப் பெரிய தூய்மையின் விதையாவது நேர்மையானவர் ஆவது, ஒவ்வொருவரும் தன்னைத் தானே நான் எந்த அளவு நேர்மையாக ஆகியிருக்கிறேன் என்று கேளுங்கள்.

3) நேர்மைக்கான மூன்றாவது லட்சணம் -எப்பொழுதும் அனைவருக்காகவும் சுப பாவனை மற்றும் உயர்ந்த விருப்பங்கள் இருக்கும்.

4) நேர்மை என்றால் எப்பொழுதும் எண்ணம், சொல் மற்றும் செயல் மூலமாக தன்னை கருவி என்று நினைத்து மற்றும் பணிவாக இருப்பது.

5) நேர்மை என்றால் ஒவ்வொரு அடியிலும் சக்திசாலியான நிலையின் அனுபவம் இருக்க வேண்டும். எப்பொழுதும் ஒவ்வொரு எண்ணத்திலும் தந்தையின் துணை மற்றும் சகயோகத்தின் கை அனுபவம் ஆக வேண்டும்.

6) நேர்மை என்றால் ஒவ்வொரு அடியிலும் ஏறும் கலையின் அனுபவம் இருக்க வேண்டும்.

7) நேர்மை என்றால் எப்படி தந்தை என்னவாக இருக்கிறார். எப்படி இருக்கிறாரோ அப்படி குழந்தைகளின் எதிரில் பிரத்யக்ஷமாக இருக்கிறார். அதே போல் குழந்தைகள் என்னவாக இருக்கிறார்கள் எப்படி இருக்கிறார்களோ அப்படியே தந்தையின் எதிரில் தன்னை பிரத்யக்ஷம் செய்ய வேண்டும். தந்தையோ அனைத்தையும் தெரிந்திருக்கிறார் என்று அப்படி வேண்டாம், ஆனால் தந்தையின் எதிரில் தன்னை பிரத்யக்ஷம் செய்வது அனைத்தையும் விட சுலபமாக ஏறும் கலைக்கான சாதனம் ஆகும். புத்தியின் மீதிருக்கும் அனேக விதமான சுமையை அகற்றுவதற்கான சரளமான யுக்தியாகும். தன்னை தெளிவுபடுத்துவது என்றால், முயற்சி செய்யும் விதத்தை தெளிவாக ஆக்குவது. தன்னுடைய தெளிவான நிலையினால் உயர்ந்தவர் ஆக்க வேண்டும் ஆனால் என்ன செய்கிறீர்கள்? கொஞ்சம் கூறுகிறீர்கள், கொஞ்சம் மறைக்கிறீர்கள். மேலும் கூறுகிறீர்கள் என்றாலும் ஏதாவது பிராப்தியின் சுயநலத்தின்

ஆதாரத்தில்தான் கூறுகிறீர்கள். சாதுர்யமாக தன்னுடைய வழக்கை ஜோடித்து, மனம் சொல்லும் வழி மற்றும் மற்றவர்கள் சொல்லும் வழியின் திட்டத்தை நல்ல முறையில் தந்தையின் எதிரில், பொறுப்பாளராக இருக்கும் ஆத்மாக்களின் முன் சமர்ப்பிக்கிறீர்கள். தந்தை கள்ளம் கபடமற்றவர் என்று நினைத்து மேலும் பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களையும் வெகுளியானவர் என்று நினைத்து சாதுர்யமாக தன்னைத் தானே உண்மையானவர் என்று நிரூபணம் செய்வதால் விளைவு என்ன? பாப்தாதா மற்றும் பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்கள், தெரிந்திருந்த போதிலும் குஷிப்படுத்துவதற்காக அற்ப காலத்திற்காக 'சரி, தான்' என்ற பாடத்தையோ படித்து விடுவார்கள். ஏனென்றால், ஒவ்வொரு ஆத்மாவின் சகித்துக் கொள்ளும் சக்தி, எதிர்கொள்ளும் சக்தி எவ்வளவு இருக்கிறது என்று தெரிந்திருக்கிறார்கள். இந்த ராஸ்-ஐத் (ரகசியத்தை) தெரிந்து கொண்டு நாராஸ் (கோபம்) ஆவதில்லை. அவருக்கு இன்னும் முன்னேறுவதற்கான வழி கூறுவார்கள். திருப்தியாகவும் ஆக்குவார்கள், ஆனால் ரகசியம் தெரிந்து திருப்தி படுத்துவது, உள்ளப்பூர்வமாக திருப்தி படுத்துவதில் வித்தியாசம் இருக்கும். சாதுர்யமானவராக ஆக விரும்புகிறார்கள் ஆனால் ஒன்றும் அறியாதவர்களாக ஆகிவிடுகிறார்கள், எப்படி? அவர்கள் கொஞ்சத்திலேயே திருப்தி அடைந்து விடுவார்கள். தோல்வியை வெற்றி என்று நினைத்துக் கொள்கிறார்கள். அது பல பிறவிகளின் தோல்வி ஆகும் ஆனால் அற்பகாலத்தின் பிராப்தியில் திருப்தியாகி தன்னைத் தானே புத்திசாலி, திறமை நிறைந்தவர் என்று கருதி, வெற்றி அடைந்தவர் என்று நினைத்து அமர்ந்து விடுகிறார்கள். தந்தைக்கு அந்த மாதிரியான குழந்தைகள் மேல் புத்திசாலித்தனத்தின் திரைக்குப் பின்னால் தன் மேல் நிரந்தரமாக நன்மையை இழக்க நேரிடக் காரணமானவர்கள் ஆகிறார்கள் என்று இரக்கமும் ஏற்படுகிறது. இருந்தாலும் பாப்தாதா என்ன கூறுவார்? உயர்ந்த முயற்சி செய்வதின் பாக்கியம் இல்லை என்று தான் கூறுவார்.

(8) நேர்மை என்றால், ஏதேனும் ஒரு விஷயத்தின் ஆதாரத்தில் அஸ்திவாரம் இருக்க லாகாது. ஒவ்வொரு விஷயத்தின் அனுபவத்தின் ஆதாரத்தில், பிராப்தியின் ஆதாரத்தில் அஸ்திவாரம் இருக்க வேண்டும். விஷயம் மாறியது மேலும் அஸ்திவாரமும் மாறியது, நிச்சயத்திலிருந்து சந்தேகத்தில் வந்து விட்டார். மேலும் ஏன், எப்படி என்ற கேள்வியில் வந்து விட்டார். இதை பிராப்தியின் ஆதாரத்தில் அனுபவம் என்று கூற முடியாது. அந்த மாதிரி பலஹீனமான அஸ்திவாரம் ஒரு சிறிய விஷயத்தில் கூட

குழப்பத்தை உருவாக்கி விடும். எப்படி இன்றைய நாட்களில் என்னவொரு ரமணீகரமான விஷயத்தை தந்தையின் எதிரில் வைக்கிறார்கள். 1977-வரை தூய்மையாக இருக்க வேண்டும், இப்பொழுதோ அதிக காலம் தூய்மையாக இருப்பது கடினமாகும். எனவே விஷயத்தை தந்தையின் மேல் போட்டு விட்டு தன்னை குற்றமற்றவராகக் காண்பித்து இறைவனைப்பழி கூறுகிறார்கள் ஆனால் தூய்மை பிராமணர்களின் இயற்கையான சம்ஸ்காரம் ஆகும். இது எல்லைக்குட்பட்டதின் சம்ஸ்காரம் இல்லை. எல்லைக்குட்பட்ட தூய்மை என்றால் ஒரு பிறவியின் தூய்மை ஆகும், எல்லைக்குட்பட்ட சன்னியாசம் ஆகும். எல்லைக்கப் பாற்பட்ட சன்னியாசிகள் பல பிறவிகளுக்கு தூய்மையின்மையை சன்னியாசம் செய்கிறார்கள். தந்தையிட மிருந்து நிரந்தரமான தூய்மை, சுகம், சாந்தியின் ஆஸ்தியை பெற்றுக் கொள்ளுங்கள் என்ற சுலோகனைத் தான் எழுதுகிறீர்கள். நேரத்தின் ஆதாரத்தில் தூய்மையாக இருப்பது என்ற இதை எந்தவிதமான தூய்மையின் நிலை என்று கூறலாம். இதிலிருந்து தன்னுடைய அனுபவம் மற்றும் பிராப்தியின் ஆதாரத்தில் அஸ்திவாரம் இல்லை என்பது நிரூபணம் ஆகிறது. அப்படி நேர்மையான குழந்தைகளின் லட்சணம் இதுவல்ல. நேர்மை என்றால் எப்பொழுதும் தூய்மை. நேர்மையானவர் என்று யாரைக் கூறுவது என்று புரிந்து கொண்டீர்களா? நல்லது.

அப்படி எப்பொழுதும் உண்மையாக உள்ளவர்களுக்கு, சத்தியத்தின் ஆதாரத்தினால் அனைவரின் ஆதாரமானவர் ஆகக்கூடிய, ஒவ்வொரு அடி மற்றும் பிராப்தியின் ஆதாரத்தில் தன்னுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்கக்கூடிய, எப்பொழுதும் உயர்ந்த வழி மற்றும் உயர்ந்த நிலையில் செல்லக்கூடிய, அந்த மாதிரி தீவிரமாக முயற்சி செய்பவர்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**அவ்யக்த பாப்தாதாவுடன் தனிப்பட்ட சந்திப்பு:** 1) தன்னை எப்பொழுதும் வெற்றி அடைபவராக அனுபவம் செய்கிறீர்களா? மாஸ்டர் சர்வ சக்திவான் என்றால் எப்பொழுதும் வெற்றி அடைபவர். உயர்ந்த பங்கேற்று செய்யும் ஆத்மாக்களின் நினைவுச்சின்னம் கூட வெற்றி மாலையின் ரூபத்தில் இருக்கிறது. மாலை என்று மட்டும் கூறுவதில்லை. வெற்றி மாலை (வைஜெயந்தி மாலை) என்று கூறுகிறார்கள். இதனால்

என்ன நிரூபணம் ஆகிறது, அதாவது உயர்ந்த ஆத்மாக்கள் தான் வெற்றி அடையும் ஆத்மாக்கள். எனவே வெற்றி மாலை என்று மகிமை செய்யப்பட்டிருக்கிறது. அந்த மாதிரி நீங்கள் வெற்றி அடைபவர்களா? அல்லது சில நேரம் மாலையில் உள்பவர்களாக இருக்கிறீர்கள் மற்றும் சில நேரம் அதிலிருந்து அகன்று விடுகிறீர்களா?

எந்த விஷயத்திலும் தோல்வி அடைவதற்கான காரணமாக என்ன இருக்கிறது என்ற அதைத் தெரிந்திருக்கிறீர்களா? தோல்வி அடைவதற்கான மூல காரணம் தன்னை அடிக்கடி சோதனை செய்வதில்லை. அவ்வப்பொழுது என்ன யுக்திகள் கிடைக்கின்றனவோ அவற்றை அந்தந்த நேரத்தில் உபயோகிப்பதில்லை. இதன் காரணமாக அந்த நேரத்தில் தோல்வி அடைந்து விடுகிறீர்கள். யுக்திகள் இருக்கின்றன ஆனால் காலம் கடந்து சென்ற பிறகு, வேதனை அடைவது அந்த மாதிரி இருந்திருந்தால், அந்த மாதிரி செய்திருப்பேன் என்று நினைவு வருகிறது. இம்மாதிரி சோதனை செய்யும் பலஹீனம் இருக்கும் காரணத்தினால் மாறவும் முடிவதில்லை. சோதனை செய்வதற்கான இயந்திரம் தெய்வீக புத்தி ஆகும் பொதுவாக சோதனை செய்வதற்கான முறையாக சார்ட் வைத்துக் கொள்வது இருக்கிறது ஆனால் சார்ட் கூட தெய்வீக புத்தி மூலமாகத் தான சரியாக வைக்க முடியும். தெய்வீக புத்தி இல்லை என்றால் தவறையும் சரி என்று புரிந்து கொள்வார்கள். ஒருவேளை எதாவது இயந்திரம் சரியில்லை என்றால், அந்த இயந்திரத்தின் செயல்பாட்டின் ரிசல்ட்டும் தவறாக வெளியாகும். தெய்வீக புத்தி மூலமாக சோதனை செய்வதினால் சரியான சோதனை இருக்கும். அப்படி தெய்வீக புத்தி மூலமாக சோதனை செய்தீர்கள் என்றால் மாறிவிடுவீர்கள். தோல்விக்குப் பதிலாக வெற்றி ஏற்பட்டு விடும்.

2) முழு நாளும் போகும் பொழுதும் வரும்பொழுதும் எப்பொழுதும் தன்னை ஒளி மண்டலத்திற்குள் இருக்கும் ஒளி வடிவமான உடல் உள்ள ஃபரிஷ்தா ரூபத்தில் அனுபவம் செய்கிறீர்களா? எப்படி பிரம்மாபாபா அவ்யக்த ஃபரிஷ்தாவின் ரூபத்தில் நாலாபுறங்களின் சேவைக்கு பொறுப்பாளர் ஆகியிருக்கிறார், அதே போல் தந்தைக்குச் சமமாக தன்னையும் ஒளி சொரூப ஆத்மா மற்றும் ஒளி வடிவமான உடல் சொரூப ஃபரிஷ்தா என்று அனுபவம் செய்கிறீர்களா? பாப்தாதா இருவர்களின்

சமமாக வேண்டும் இல்லையா? இருவர் மேலும் அன்பு இருக்கிறது தான் இல்லையா? அன்பு இருப்பதற் கான நிரூபணம் சமமாக ஆவது. யார் மேல் அன்பு இருக்கிறதோ, அவர் எப்படி பேசுவாரோ அதே போல் இவரும் பேசுவார், அன்பு என்றால் சம்ஸ்காரத்தை ஒருங்கிணைப்பது, மேலும் சம்ஸ்காரம் ஒருங்கிணைந்ததின் ஆதாரத்தில் அன்பும் ஏற்படுகிறது. சம்ஸ்காரம் ஒத்துப்போகவில்லை என்றால் எவ்வளவு தான் அன்பானவராக ஆவதற்கு முயற்சி செய்தாலும் ஆக மாட்டார்.

அப்படி இரண்டு தந்தையின் அன்பிற்குரியவரா நீங்கள்? தந்தைக்குச் (சிவபாபாவிற்கு) சமமாக ஆவது என்றால் ஒளி ரூப ஆத்மா சொரூபத்தில் நிலைத்திருப்பது மற்றும் தாதா (பிரம்மாபாபா) சமமாக ஆவது என்றால் ஃபரிஷ்தா ஆவது. இரண்டு தந்தைகளின் அன்பிற்குப் பிரதிபலன் கொடுக்க வேண்டும். அப்படி அன்பிற்கான பிரதிபலன் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? ஃபரிஷ்தாவாக ஆகி நடந்து கொள்கிறீர்களா அல்லது ஐந்து தத்துவங்களினால் அதாவது மண்ணால் உருவாகிய உடல் அதாவது நிலம் தன் பக்கம் கவருகிறதா? எப்பொழுது ஒளி வடிவமானவராகி விடுவீர்களோ அப்பொழுது இந்த உடல் என்ற நிலமும் கவர்ந்திழுக்காது. தந்தைக்குச் சமமாக ஆவது என்றால் டபுள் லைட் ஆவது. இரண்டு லைட்டும் இருக்கிறதா? அவர் ஆகாரி ரூபத்தில், இவர் நிராகார ரூபத்தில் இருக்கிறார். அப்படி இருவரின் சமமானவர்களாக இருக்கிறீர்கள் இல்லையா? சமமாக ஆனீர்கள் என்றால், எப்பொழுதும் சக்தி நிறைந்தவராக மற்றும் வெற்றி அடைபவராக இருப்பீர்கள். சமமாக இல்லை என்றால் சில நேரம் தோல்வி, சில நேரம் வெற்றி என்ற இந்தக்குழப்பத்திலேயே இருப்பீர்கள். உறுதியானவர் ஆவதற்கான வழி தந்தைக்குச் சமமாக ஆவது எப்பொழுதும் தன்னை உடலற்ற ஆத்மா அல்லது காரியம் செய்து கொண்டிருக்கும்பொழுது அவ்யக்த ஃபரிஷ்தா என்று புரிந்து கொள்ளுங்கள். அப்பொழுது நிரந்தரமாக மேலே இருப்பீர்கள். குஷியில் பறந்து கொண்டே இருப்பீர்கள். ஃபரிஷ்தாக்கள் எப்பொழுதும் பறந்து கொண்டிருப்பதாகக் காண்பிக்கிறார்கள். ஃபரிஷ்தாக்களின் உருவங்களையும் மலை மேல் நிற்பதாக காண்பிக்கிறார்கள். ஃபரிஷ்தா என்றால் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள். இந்த தின் உலகத்தில் என்னதான் நடந்து கொண்டிருந்தாலும், ஃபரிஷ்தா மேலே இருந்து சாட்சியாகி அனைத்து காட்சிகளையும் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும். சக்தி

கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். சக்தியும் கொடுக்க வேண்டும். ஏனென்றால் நன்மை செய்வதற்காக பொறுப்பாளராக இருக்கிறார். சாட்சியாக இருந்து பார்த்துக் கொண்டு, சக்தி அதாவது சகயோகம் கொடுக்க வேண்டும். இருக்கையில் இருந்து கீழே இறங்கி சக்தி கொடுக்கப்படுவதில்லை. சக்தி கொடுப்பதுதான் நிலைக்கு ஏற்றாற் போல் நடந்து கொள்வதாகும். அப்படி நடப்பது என்றால் நன்மைக்காக சக்தி கொடுப்பது ஆனால் உயர்ந்த நிலையில் நிலைத்திருந்து கொடுக்க வேண்டும் என்ற இந்த விசேஷ கவனம் இருக்க வேண்டும். அப்படி நடந்து கொள்வது என்றால் கலந்து விடக் கூடாது ஆனால் உள்உணர்வு, பார்வையினால் சகயோகத்தின் சக்தி கொடுப்பது. பின்பு எந்தவிதமான சூழ்நிலையிலும் பதற்றம் வராது. ஒருவேளை பதற்றம் வருகிறது என்றால் சாட்சி நிலையில் இல்லை என்று புரிந்து கொள்ளுங்கள். காரியத்தின் துணைவனாக ஆக வேண்டாம், தந்தையின் துணைவனாக ஆக வேண்டும். எங்கு சாட்சி ஆக வேண்டுமோ அங்கு துணைவனாகி விடுகிறீர்கள். எனவே ஆட்டம் காண்கிறது. அப்படி கடைபிடிப்பதைத் தெரிந்து கொண்டீர்கள் என்றால் உலகின் எதிரில் லைட் ஹவுஸாகி வெளிப்படுவீர்கள்.

இன்றைய நாட்களில் இருக்கும் அலை எந்த மாதிரியானது? எப்படி தொடக்கத்தில் மகாரதிகளிடம் நம் இனத்தினரை தூய்மையின்மையிலிருந்து தூய்மையில் கொண்டே வர வேண்டும் என்ற உத்வேகம் இருந்தது. முதலில் இருந்த உத்வேகம் நினைவிருக்கிறதா? எப்படி முழு ஈடுபாடு இருந்தது. அனைவரையும் விடுவிக்க வேண்டும் என்ற துடிப்பு இருந்தது, சக்தி நிரப்ப வேண்டும் என்ற ஈடுபாடு இருந்தது. தொடக்கத்தில் நம்மைப் போன்றவர்களை விடுவிக்க வேண்டும். காப்பாற்ற வேண்டும் என்ற வேகம் இருந்தது. இப்பொழுது அந்த மாதிரி அலை இருக்கிறதா? நடந்து கொண்டிருக்கும்போதே பலஹீனமானவர்களாக இருக்கிறார்கள், புது ஆத்மாக்களாக இருந்தாலும் அவர்கள் பந்தனத்தில் இருப்பவர்கள். அந்த மாதிரியானவர்களை பந்தனத்திலிருந்து விடுபடுத்த வேண்டும் என்று அந்த அளவு உத்வேகம் இருக்கிறதா? அல்லது டிராமா என்று விட்டு விடுகிறீர்களா? தற்சமயம் உங்களுடைய பங்கு என்னவாக இருக்கிறது? வரதானி, மகாதானி மற்றும் நன்மை செய்பவரினுடையது. நாடகமோ இருக்கிறது ஆனால் நாடகத்தில் உங்களுடைய பங்கு என்னவாக

இருக்கிறது. அப்படி இந்த அலை அவசியம் பரவ வேண்டும். எப்படி தீயணைப்பவர்களுக்கு வேகம் வருகிறது. தீப்பிடித்துக் கொண்டிருக் கிறது என்றால் யாரும் அவர்களை நிறுத்த முடியாது. அப்படிப்பட்ட அலை இருக்கிறது. உங்களுடைய அலை மூலம் அவர்களுடைய பாதுகாப்பு ஏற்பட வேண்டும். ஒருவேளை நீங்களே டிராமா என்று கூறி விட்டுவிட்டீர்கள் அல்லது இராஜ்யம் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது என்று யோசித்தீர்கள் என்றால் அவர்களுக்கு நன்மை எப்படி ஏற்பட முடியும்? ஞானம் நிறைந்தவராக ஆன காரணத்தினால் இது டிராமா என்ற இந்த ஞானம் இருக்கிறது, ஆனால் டிராமாவில் உங்களுடைய காரியம் என்னவாக இருக்கிறது? அப்படி மகாரதிகளின் அலையாக என்ன இருக்க வேண்டும். என்ன கேட்டாலும், நற்சிந்தனை ஓட வேண்டும். மற்ற சிந்தனை அல்ல. உங்களுடைய நற்சிந்தனை அவர்களின் புத்தியை சீதளம் ஆக்க முடியும். நீங்கள் விட்டு விட்டீர்கள் என்றால் அவரும் முடிந்தார், ஏனென்றால் நடை முறையில் சக்திகளின் பங்கு பொறுப்பாக இருக்கிறது. தந்தையோ முதுகெலும்பாக இருக்கிறார். சக்தி களுக்கு எந்த மனநிலையில் இருக்க வேண்டும். எப்படி தேவிகளின் சிலைகள், படங்களில் இரண்டு விசேஷங்களைக் காண்பிக்கிறார்கள். கண்களில் தாய்மையின் பாவனை மற்றும் கைகளில் ஆயுதம் ஏந்தியவர் அதாவது அசுரனை அழிப்பவள். தாய்மை பாவனை என்றால், இரக்கத்தின் பாவனை மற்றும் அழிக்கும் பாவனை இருக்கிறது. அழிப்பவர் என்றால், அவர்களின் அசுர சம்ஸ்காரத்தை அழிப்பதற்கான திட்டமும் இருக்க வேண்டும் மற்றும் இரக்கமும் இருக்க வேண்டும். சட்டம் மற்றும் அன்பு நிறைந்த நிலையின் சமநிலை இருக்க வேண்டும். இரண்டும் சேர்ந்தே இருக்க வேண்டும். பலஹீனத்தின் அலை என்னவாக இருக்கிறதோ அதுவே விநாஷத்தின் காரணமாக பிரத்யக்ஷம் ஆகி விட்டது என்று அப்படியில்லை. பலஹீனம் வெகு காலத்தின் உடையதாக இருக்கிறது, ஆனால் இப்பொழுது மறைந்திருக்க முடியாது. முதலில் உள்ளுக்குள்ளே மறைவாக பலஹீனம் இருந்து கொண்டே இருக்கிறது, இப்பொழுது நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது, எனவே பலஹீனம் மறைந்திருக்க முடியாது. இராஜா ஆகுபவர், பிரஜை பதவி அடைபவர், குறைந்த பதவி அடைபவர், சேவாதாரி ஆகுபவர் அனைவரும் இப்பொழுது பிரத்யக்ஷம் ஆவார்கள். கடைசியில் சாட்சாத்காரம் என்று என்ன கூறப் பட்டிருக்கிறதோ அது எப்படி ஏற்படும்? சாட்சாத்காரத்தை செய்வித்துக் கொண்டிருக்கிறார், மற்றபடி பலஹீனம் இருக்கவில்லை,

இப்பொழுது இருக்கிறது என்று அப்படி கிடையாது ஆனால் இப்பொழுது பிரசித்தி பெறுவதற்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. எப்படி முடிவின் நேரத்தில் அனைத்து நோய்களும் வெளிப்படுமோ, அதே போல் முடிவின் நேரம் ஆன காரணத்தினால் ஒவ்வொருவரின் விதவிதமான பலஹீனங்கள் பிரத்யக்ஷம் ஆகும். இப்பொழுதோ ஒரு அலை பார்த்தீர்கள், இன்னும் அனேக அலைகளை பார்ப்பீர்கள். மிக அதிகத்தில் அவசியம் செல்ல வேண்டும். அளவுக்கு அதிகமான நிலைக்குப் பிறகுதான் முடிவு ஏற்படும். உள்ளே என்னென்ன பலஹீனங்கள் இருக்கின்றனவோ அவை உள்ளே மறைந்திருக்க முடியாது, ஏதாவது ரூபத்தில் பிரத்யக்ஷ ரூபத்தில் வரும், ஆனால் உங்களுடைய பாவனை இந்த அனைவருக்கும் நன்மை ஏற்பட்டு விட வேண்டும் என்றிருக்க வேண்டும். நீங்கள் வரதானியாக இருக்கிறீர்கள் என்றால் உங்களுடைய ஒவ்வொரு எண்ணமும், ஒவ்வொரு ஆத்மாவிற்காக நன்மை பயப்பதாக இருக்க வேண்டும். அலைகளோ இன்னும் வரத்தான் செய்யும், ஒன்று முடிவடைந்து இன்னொன்று வரும். இவை அனைத்தும் மனமகிழ்ச்சிக்கான பொழுதுபோக்கின் சாலையோரக் காட்சிகளாகும். மேலும் பதவியும் தெளிவாகிக் கொண்டிருக்கிறது. இது நடந்து கொண்டே இருக்கும். ஆச்சரியப்படும்படியான காட்சிகள் இருக்க வேண்டும். ஒரு பக்கம் பந்தயத்தில் மிகப் புதியவர்கள் முன்னுக்குத் தென்படுவார்கள். இன்னொரு பக்கம் களைப்படைபவர்கள், நிற்பவர்களும் வெளியாவார்கள். மூன்றாவது பக்கம், வெகுகாலமாக எந்த பலஹீனங்கள் இன்னும் தங்கியிருந்து விட்டனவோ அவைகள் வெளிப்படும். ஒன்றும் புதிதல்ல ஆனால் இரக்கம் நிறைந்த பார்வை மற்றும் பாவனை இரண்டும் சேர்ந்தே இருக்கட்டும். ஓம் சாந்தி.

**வரதானம்: தந்தை மற்றும் வரமளிக்கும் வள்ளல் என்ற இந்த இரண்டு சம்மந்தம் மூலம் இரட்டை பிராப்தி செய்யக்கூடிய எப்பொழுதும் சக்திசாலியான ஆத்மா ஆகுக!**

அனைத்து சக்திகளும் தந்தையின் ஆஸ்தி மற்றும் வரமளிக்கும் வள்ளலின் வரதானம் ஆகும். தந்தை மற்றும் வரமளிக்கும் வள்ளல் இந்த இரண்டு சம்மந்தத்தினால் ஒவ்வொரு குழந்தைக்கும் இந்த உயர்ந்த பிராப்தி பிறந்ததிலிருந்தே ஏற்படுகிறது. பிறந்தவுடனேயே தந்தை குழந்தையாக இருப்பவரி லிருந்து அனைத்து சக்திகளின் அதிபதியாக

ஆக்கி விடுகிறார். கூடவே வரமளிக்கும் வள்ளல் என்ற காரணத்தினால் பிறவி ஏற்பட்டவுடனேயே மாஸ்டர் சர்வ சக்திவானாக ஆக்கினார். அனைத்து சக்திகளையும் உடையவராகுங்கள் என்ற வரதானத்தைக் கொடுத்து விடுகிறார். அப்படி ஒருவர் மூலமாக இந்த இரட்டை அதிகாரம் கிடைப்பதினால் எப்பொழுதும் சக்திசாலி கிவிடுகிறீர்கள்.

**சுலோகன்: உடல் மற்றும் உடலின் கூடவே பழைய சுபாவம், சம்ஸ்காரம் மற்றும் பலஹீனங்களிலிருந்து விலகுவது தான் விதேகி (தேகமற்றவர்) ஆவதாகும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 28.06.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வேஸ்ட் (வீணானவை) செய்யாதீர்கள் மற்றும் வெயிட் (எடையை) குறையுங்கள்!

சப்தத்திலிருந்து விலகிய தன்னுடைய உடலற்ற நிலை மற்றும் சூட்சும உடலின் நிலை, எங்கு சமிக்ஞைகளின் பாஷை அதிகம் இருக்கிறதோ அதாவது அசைவுகள் இருக்கிறதோ அங்கு இந்த, இரண்டு நிலைகளிலும் ஸ்தூல உலகத்திற்குச் சமமாக சப்தம் இருப்பதில்லை, அந்த மாதிரி சப்தத்திலிருந்து விலகிய நிலை பிடித்திருக்கிறதா? வாய் மூலமாக சொல்வது, கேட்பது இதற்கும் மேலே தன்னுடைய உள்உணர்வு மூலமாக, பார்வை மூலமாக, எண்ண அலைகள் மூலமாக மற்றும் தன்னுடைய உயர்ந்த அனுபவங்களின் பிரபாவம் மூலமாக எந்த ஆத்மாக்களுக்கும் சேவை செய்வது அதாவது சொல்வது, அறிமுகம் கொடுப்பது மற்றும் சம்மந்தத்தில் இணைப்பது என்ற இதன் அனுபவியாக இருக்கிறீர்களா? வார்த்தைகள் மூலமாக சம்மந்தத்தை இணைப்பது என்ற இந்த அனுபவம் உள்ளவராக இருக்கிறீர்களா? இந்த ஆத்மாக்களுக்கு உள்உணர்வு, பார்வை மற்றும் உயர்ந்த அனுபவங்களின் பிரபாவத்தினால் சேவை செய் என்று டைரக்ஷன் கிடைக்கிறது என்றால் செய்ய முடியுமா? அல்லது வார்த்தைகள் மூலமாக மட்டும் தான் செய்ய முடியுமா? எப்படி வார்த்தைகள் மூலமாக ஆத்மாக்களை தந்தையோடு சம்மந்தத்தை இணைப்பதில் வரிசைக்கிரமமான பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்களோ, அதே போல் தன்னுடைய சூட்சும மனநிலையின், மாஸ்டர் சர்வ சக்திவான், மாஸ்டர் ஞான சூரியனின் நிலை மூலமாக ஆத்மாக்களை தன்னுடைய மனநிலை, தந்தையின் சம்மந்தத்தின் அனுபவத்தின் சக்திசாலியான சூழல், எண்ண அலைகள் மற்றும் தன்னுடைய சக்தி சொரூபத்தின் நெருக்கத்தினால் அவர்களையும் அவ்வாறு செய்விக்க முடியுமா? ஏனென்றால், நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது. பாண்டவ சேனை (வெளிப்படுவதற்கான (பிரத்யக்ஷம்) சூழ்நிலை மறைமுகமாக பரவிக்

கொண்டே இருக்கிறது. சேவையின் முறையில் நேரத்திற்கு ஏற்றபடி மற்றும் சேவைக்கு ஏற்றபடி அவசியம் மாற்றம் ஏற்படும். எப்படி இன்றைய நாட்களின் விஞ்ஞானம் மூலமாக ஒவ்வொரு பொருளும் குவான்டிட்டிக்கு (அளவு) பதிலாக குவாலிட்டியில் (தரம்) கொண்டு வந்து கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி சிறிய, நுண்ணியதாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். ரூபம் சிறியது தான் ஆனால் சக்தி அதிகமாக நிரம்பியிருப்பதாக இருக்கும். எப்படி விஸ்தாரமான இனிப்பை சாக்ரீன் ரூபத்தில், அளவில் குறைவாகக் கொண்டு வருகிறார்கள். விஸ்தாரத்தை சாரத்தில் கொண்டு வருகிறார்கள், இதே போன்று பாண்டவ சேனை அதாவது அமைதி சக்தி உள்ள உயர்ந்த ஆத்மாக்களும் ஒரு மணி நேரத்தில் சொற்பொழிவு மூலமாக அறிமுகம் கொடுக்க முடிவதை ஒரு விநாடியில் சக்திசாலியான பார்வை மூலமாக, சக்திசாலியான மனநிலை மூலமாக,நன்மை பயக்கும் பாவனை (நல்லெண்ணம்) மூலமாக, ஆத்மீக உணர்வு மூலமாக நினைவூட்ட முடியுமா? மேலும் அந்த மாதிரி சாட்சாத்காரம் செய்விக்க முடியுமா? இப்பொழுது அந்த மாதிரி பயிற்சிக்கான அவசியம் தேவைப்படுகிறது. இதற்காக இரண்டு விஷயங்களின் தேவை இருக்கிறது. அதன் மூலம் அந்த மாதிரி உயர்ந்த சேவைக்கு பொறுப்பாளர் ஆக முடியும். அது எந்த இரண்டு விஷயங்கள்? அவைகளின் மீது விசேஷ கவனத்தைக் கொண்டு வருகிறோம். அது என்னவாக இருக்கும் என்று தெரிந்திருக்கிறீர்களா?

ஒன்றோ நாலாபுறங்களிலுமுள்ள அனைவருக்கும் எந்தவொரு பொருளையும் வீணாக்காதீர்கள் மற்றும் இன்னொரு விஷயம் எடையைக் குறையுங்கள் என்பதில் கவனத்தை ஈர்க்கிறோம். உலக மனிதர்களோ உடலின் எடையைக் குறைப்பதற்காகக் கூறுவார்கள், ஆனால் பாப்தாதா ஆத்மாவின் மேல் என்ன சுமை இருக்கிறதோ அந்த சுமையின் காரணத்தினால் உயர்ந்த நிலையின் அனுபவம் செய்ய முடிவதில்லை என்றால் அந்த எடையைக் குறையுங்கள். ஒன்று வீணாக்காதீர்கள் மற்றும் எடையைக் குறையுங்கள். இந்த இரண்டு விஷயங்கள் மேல் விசேஷ கவனம் வேண்டும். தன்னுடைய சக்திகள் மற்றும் நேரத்தை வீணாக்குவதினால் சேமிப்பு ஆவதில்லை, மேலும் சேமிப்பு ஆகாத காரணத்தினால் என்ன குஷி மற்றும் சக்திசாலியான நிலை அனுபவம் ஆக வேண்டுமோ அதை விரும்பினாலும் செய்ய முடிவதில்லை. உயர்ந்த ஆத்மாக்களாகிய உங்களுக்கு உலக நன்மை செய்யும் காரியம்

காத்திருக்கிறது, அதே மாதிரி நேரம் மற்றும் சக்திகளை தனக்காக மட்டுமின்றி அனேக் ஆத்மாக்களின் சேவைக்காக கையிருப்பு, சேமிப்பை அதிகரிக்க வேண்டும். ஒருவேளை வீணாகிக் கொண்டே இருக்கிறது என்றால். தானும் தன்னை நிரம்பியவராக அனுபவம் செய்ய மாட்டார்கள். எப்படி இன்றைய நாட்களின் அரசாங்கமும் சேமிப்பதற்கான திட்டங்களை உருவாக்குகிறார்கள். அதே போல் தன்பொருட்டு நேரம் மற்றும் சக்திகளை உபயோகிப்பதில் சிக்கனமாக இருக்க வேண்டும் என்ற லட்சியத்தை வைத்துக் கொண்டு சேமிக்க வேண்டும். ஏனென்றால் உலகின் அனைத்து ஆத்மாக்களும், உயர்ந்த ஆத்மாக்கள் உங்களின் குடும்பம் ஆகும். எவ்வளவு பெரிய குடும்பமாக இருக்குமோ அந்த அளவு சிக்கனத்தின் எண்ணமும் வைக்கப்படும்.

உங்களுடையது மாதிரி வேறு யாருக்காவது பெரிய பரிவாரம் இருக்கிறதா? அப்படி அனைத்து ஆத்மாக்களையும் எதிரில் வைத்துக் கொண்டு, தன்னை எல்லைக்கப்பாற்பட்ட சேவைக்காக பொறுப்பாளர் என்று புரிந்து கொண்டு, தன்னுடைய நேரம் மற்றும் சக்திகளை காரியத்தில் ஈடுபடுத்துகிறீர்களா? மாஸ்டர் படைப்பவரின் நிலை நினைவில் இருக்கிறதா அல்லது தனக்காக மட்டும் கொஞ்சம் சாம்பாதித்தீர்கள் மற்றும் சாப்பிட்டீர்கள் அல்லது கொஞ்சம் சாப்பிட்டீர்கள். கொஞ்சம் இழந்தீர்கள் அப்படியா? அந்த மாதிரி அலட்சியமானவராகி நடந்து கொள்கிறீர்களா? எனவே தன்னுடைய அனைத்து கஜானாக்களின் பட்ஜெட்டை உருவாக்குங்கள். இவ்வளவு பெரிய பொறுப்பான காரியத்தை எடுக்கக்கூடிய ஆத்மாக்கள் ஒருவேளை சேமிப்பு ஆகவில்லை என்றால், எப்படி காரியத்தை நிறைவேற்ற முடியும். நாடகப்படி நடக்கத்தான் வேண்டும் என்ற இது ஞானத்தின் விஷயம் ஆகும் ஆனால் நாடகத்தில் நானும் பொறுப்பாளன் ஆகி சேவை மூலமாக உயர்ந்த பிராப்தியை செய்ய வேண்டும் என்ற இந்த லட்சியத்தை வைத்து, ஒவ்வொரு கஜானாவும் பட்ஜெட்டை தயாரியுங்கள். பட்ஜட்டில் என்ன லட்சியம் வைக்க வேண்டும்? சுலோகன் நினைவிருக்கிறதா? குறைந்த செலவு, மிகுந்த நன்மை. ஒவ்வொரு கஜானாவை எவ்வளவு சேமிப்பாகியிருக்கிறது என்று சோதனை செய்ய வேண்டும். அந்த சேமிப்பு கணக்கிலிருந்து எல்லைக்குட்பட்ட ஆத்மாக்களின் சேவை நடக்குமா? அல்லது எல்லைக்கப்பாற்பட்ட சேவை நடக்குமா? ஒவ்வொரு பாடத்தையும் சோதனை செய்யுங்கள். ஒவ்வொரு பாடம் மூலமாக

எல்லைக்கப்பாற்பட்ட சேவையின் பொறுப்பாளர் ஆக முடியுமா? அல்லது ஞானம் மூலமாக மட்டும். செய்ய முடியுமா, தாரணை மூலமாக இல்லையா? முழுமையாக தேர்ச்சி பெற வேண்டும் என்றால், ஒவ்வொரு பாடத்திலும் மூலமாக சேவைக்கு பொறுப்பாளர் ஆவது அவசியம் ஆகும். ஒருவேளை ஒரு பாடத்தில் கூட குறைவு இருக்கிறது என்றால் முழுமையான தேர்ச்சி இல்லாமல் தேர்ச்சி அடைவீர்கள். ஒன்று மதிப்போடு தேர்ச்சி பெறுவது, இன்னொரு நிலை வெறும் தேர்ச்சி மட்டும் அடைவது. யார் தேர்ச்சி மட்டும் அடைகிறார்கள், மதிப்போடு தேர்ச்சி அடையவில்லை என்றால் அவர்கள் மதிப்போடு தர்மராஜின் தண்டனைகளைக் கடந்து செல்ல வேண்டியதாக இருக்கும். அதாவது கொஞ்சம் தண்டனைகளின் அனுபவத்தைக் கடந்து செல்வார்கள். மதிப்போடு தேர்ச்சி பெறுபவர்கள், மற்றவர்கள் கடந்து செல்வதைப் பார்ப்பார்கள். எனவே ஒவ்வொரு பாடத்திலும் முழுமையாக தேர்ச்சி பெற வேண்டும் என்றால், ஒவ்வொரு கஜானாவின் சேமிப்பையும் செய்யுங்கள், பட்ஜட்டைத் தயாரியுங்கள். அதாவது வீணாக்காதீர்கள். ஒவ்வொரு விநாடி, எண்ணத்தை தன்னை சக்திசாலி ஆக்குவதற்காகவும் அனைத்து ஆத்மாக்களின் சேவைக்கான காரியத்திலும் ஈடுபடுத்துங்கள்.

இரண்டாவது விஷயம் எடையைக் குறையுங்கள். ஒன்று முந்தைய பிறவிகளின் மீதமிருக்கும் கணக்கு வழக்கின் சுமையை அகற்றுவதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்கள், ஆனால் அந்த சுமை ஒன்றும் பெரிய விஷயமில்லை, பிராமணன் ஆகி மற்றும் பிரம்மா குமார் / பிரம்மா குமாரி என்று கூறிக்கொண்டு, உலக நன்மை செய்பவர் மற்றும் உலக சேவாதாரி என்று கூறிக் கொண்டு ஒருவேளை ஏதாவது தீய எண்ணம் அல்லது பாவ காரியம் செய்தீர்கள் என்றால், அந்த சுமை பழைய சுமையை விட 100 மடங்கு ஆகும். அந்த மாதிரி எத்தனை விதமான சுமை தன்னுடைய சம்ஸ்காரங்களின் வசமாகி சுபாவத்தின் வசமாகி, ஞானத்தின், புத்தியின் அபிமான வசமாகி, பெயர் மற்றும் புகழின் வசமாகி, தன்னுடைய வசதிகளை அதிகரித்துக் கொள்வதில் வசமாகி மற்றும் அலட்சியம் மற்றும் சோம்பலின் வசமாகி இதுவரை எவ்வளவு சுமையை அதிகரித்திருக்கிறீர்கள். ஞானம் நிறைந்த ஆத்மா என்று கூறிக்கொண்டு, சேவை செய்பவர் என்று கூறிக்கொண்டு, அந்த மாதிரி ஏதாவது ஒரு காரியம் மற்றும் சுற்றுப்புறத்தில் எதிர்மறை எண்ண அலைகள் பரப்புவதற்கு, உருவாக்குவதற்கு பொறுப்பாளர் ஆகிவிடக்கூடாது, அதன்

மூலம் சேவைக்குப் பதிலாக, சேவைக்கு புறம்பான காரியம் நடக்க வேண்டாம். ஏனென்றால் சேவையும் நடக்க வேண்டும் ஆனால் ஒரு தடவையின் சேவைக்கு புறம்பான செயல் 10-தடவையின் (மடங்கு) சேவையை அழித்து விடுகிறது. எப்படி ரப்பர் மூலம் அழிந்து விடுகிறது, அதே போல் ஒரு தடவை செய்த சேவைக்கு புறம்பான காரியம் தடவை செய்த சேவையின் 10-கணக்கை அழித்து விடும். மேலும் நான் மிகுந்த சேவை செய்கிறேன் என்று அவர் நினைத்துக் கொண்டிருக்கிறார் ஆனால் கணக்கு காலியாக இருக்கும் காரணத்தினால், தான் அடையப்போகும் அந்த விளைவு தென்படும், ஆனால் அபிமான வசமாகி வெளிப் பார்வைக்கு தான் அனைத்தையும் அறிந்தவர் போல் காண்பித்துக் கொள்கிறார். அந்த விளைவு, நிலை எப்படி இருக்கும்? ஒன்றோ நினைவின் சக்தி மற்றும் பிராப்தியின் அனுபவம் இருக்காது. உள்மனதின் திருப்தி இருக்காது. ஒவ்வொரு நேரமும் ஏதாவது ஒரு சூழ்நிலை, நபர் மற்றும் இயற்கையின் சாதனம் மனநிலையை குழப்பத்தில் கொண்டு வருவதற்கும் குஷியை, சக்தியை அழிப்பதற்கான காரணமாகவும் ஆகிவிடும். வெளிமுகமாக மிக அழகாகத் தென்படுவதாக அவருடைய ரூபம் தோன்றும் ஆனால் அனேக ஆத்மாக்கள் அவரைப்பற்றி பகுத்தறிந்து கொள்ளாத காரணத்தினால் அனைவரையும் விட நல்ல அதிர்ஷ்டம் நிறைந்தவர் மற்றும் முயற்சி செய்பவர் என்று நினைப்பார்கள் ஆனால் உள்ளே முற்றிலும் குழப்பத்தில் ஒன்றும் இல்லாதவராக (காலி) இருப்பார். பெயர், புகழிற்கான கணக்கு நிரம்பி இருக்கும் ஆனால் கஜானாக்களின் கணக்கு, அனுபவங்களின் கணக்கு காலியானதாகி இருக்கும். அதாவது பெயரளவில் இருக்கும். மேலும் விளைவு எப்படி இருக்கும்? அந்த மாதிரி ஆத்மா அவரே தடைகளின் வசமான காரணத்தினால் சேவை காரியத்தில் தடைக்குக் காரணமாகிவிடுகிறார். பெயரோ தடைகளை அழிப்பவர், ஆனால் தடையின் ரூபமாக ஆகிவிடுகிறார், அந்த மாதிரி ஆத்மாக்களின் மேல் அவ்வப்பொழுது சுமையின் எடை அதிகரிக்கும் காரணத்தினால் அனேக விதமான மனதின் வீணான சிந்தனை மற்றும் மன அமைதியின்மை போன்ற அனேக வியாதிகளை உருவாக்கிவிடும்.

இன்னொரு விஷயம், எடை இருக்கும் காரணத்தினால் முயற்சி செய்யும் வேகம் அதிகமாக இருக்க முடியாது. ஹை ஜம்ப்-பை (உயரே தாண்டுதல்), விடுங்கள், அவரால் ஓடக் கூட முடியாது. அதைச் செய்வோம், இதைச்

செய்வோம் என்று திட்டம் போடுவார்கள் ஆனால் நிறைவேற்ற முடியாது. மூன்றாவது ஆழமான விஷயம், அந்த மாதிரி எடை உள்ள ஆத்மாக்கள் யார் தடையாக இருந்து, சேவைக்குப் புறம்பான காரியத்திற்குப் பொறுப்பாளர் ஆகிறாரோ, தந்தைக்கு அர்ப்பணம் செய்திருக்கும் உடல், மனம் மற்றும் ஈஸ்வரிய சேவைக்காக கிடைத்திருக்கும் பணத்தை தன்னுடைய தவறான செயல்களின் காரணமாக வீணாக்குகிறார்களோ அதாவது வெற்றி அடைவதில்லையோ அவ்வாறு அதை வீணாக்குவதின் சுமையும் ஏறுகிறது. எனவே பாவங்களின் ஆழமான விளைவுகளையும் நல்ல முறையில் தெரிந்து கொள்ளுங்கள். இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? வீணாக்காதீர்கள், எடையைக் குறையுங்கள். தர்மராஜ்புரிக்கு செல்வதற்கு முன்பு சுயம் தனக்குத் தானே தர்மராஜ் ஆகுங்கள். தன்னுடைய முழுக் கணக்கையும் திறந்து பாருங்கள் பாவம் மற்றும் புண்ணியத்தின் கணக்கில் என்னென்ன மிச்சம் இருக்கிறது, என்ன சேமிக்க வேண்டும் என்று சோதனை செய்யுங்கள். மேலும் விசேஷமாக தனக்காக ஒரு நடைமுறைத் திட்டத்தை உருவாக்குங்கள். பாவக் கணக்கை பஸ்பம் செய்யுங்கள், புண்ணிய கணக்கை அதிகரியுங்கள். குழந்தைகளின் கணக்கைப் பார்த்து இவர்கள் எல்லாம் நிறைந்தவர்கள் ஆகி விட வேண்டும் என்று பாப்தாதா நினைக்கிறார் (மழை பெய்து கொண்டிருக்கிறது) இயற்கையும் பாடம் கற்பிக்கிறது. எப்படி இயற்கை தன்னுடைய பருவ காலத்தில் மற்றும் தன்னுடைய நேரத்திற்கு ஏற்றபடி அதிவேகமாக காரியம் செய்து கொண்டிருக்கிறதோ. அவ்வாறு பிராமணர்கள் சம்பாத்தியத்தை சேமிப்பதற்கான பருவ காலமிது. எனவே காலத்திற்கு ஏற்றபடி அதிவேகமாக சேமிப்பு செய்யுங்கள். நல்லது.

அனைத்து பரிஷ்தாக்களுக்கு, எடையற்ற அதாவது லைட் நிலையிலுள்ளவர்களுக்கு ஒவ்வொரு விநாடியிலும் மற்றும் எண்ணத்திலும் கடந்ததை பஸ்பமாக்கி எதிர்காலத்திற்குச் சேமிக்கக்கூடிய, எப்பொழுதும் விஷ்வ சேவாதாரி சொரூபத்தில் நிலைத்திருக்கும் ஆத்மாக்களுக்கு, அனைத்து கஜானாக்களையும் பெரும் வள்ளல் ஆகி தானம் செய்யக்கூடிய, தன்னுடைய சக்திகளின் கஜானாக்களில் நிரம்பியவராகி சக்திகள் மூலமாக வரம் அளிப்பவராக ஆகக்கூடிய, இரக்க மனமுடைய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் உலக நன்மை செய்யும் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன்**: எப்பொழுதும் சுயசிந்தனை மற்றும் நற்சிந்தனை செய்பவர் என்ற இரண்டு நிலையும் இருக்கிறதா? எப்பொழுது நற்சிந்தனை இருக்குமோ அப்பொழுது வீணானவை முடிந்து விடும். வீணானது இருக்கிறது என்றால் நற்சிந்தனையின் அனுபவம் குறைவாக இருக்கிறது. எப்படி ஒருவேளை ஒரு தடவை ஒரு மிக நல்ல பொருளை ஒருவர் சுவைத்து விட்டார் என்றால், தரம் கெட்ட பொருளை ஏற்பதற்கான எண்ணமே வராது. அதே போல் நற்சிந்தனையில் உள்ளவர் வீணான சிந்தனை செய்ய முடியாது. சிந்தனையை ஓட விடுவது என்றால், அதனுடைய சொரூபம் ஆகிவிடுவது எப்படி கடலின் உள்ளே இருக்கும் ஜீவஜந்துக்கள் கடலின் உள்ளேயே இருக்கும். வெளியே வர விரும்புவதில்லை. மீனும் தண்ணீருக்குள்ளேயே இருக்கிறது. வெளியில் வந்தால் இறந்து விடும். கடல் மற்றும் தண்ணீர் தான் அதனுடைய உலகம் ஆகும். வெளியில் இருக்கும் இவ்வளவு பெரிய உலகம் அதைப்பொறுத்தவரை ஒன்றுமே இல்லை. அதே போல் ஞானக்கடல் தந்தையில் மூழ்கியிருப்பவர்களுக்கு உலகமே தந்தை தான்! அதாவது கடல் தான். அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா அல்லது வெளியில் சுற்றுவதற்கு மனம் விரும்புகிறதா? எதுவரை சொரூபத்தில் மூழ்கியிருப்பதற்கான இந்த அனுபவத்தை செய்யவில்லையோ அதுவரை பிராமண வாழ்க்கையின் மகிமையாக இருக்கும் அதீந்திரிய சுகம் என்ற ஊஞ்சலில் ஆடுவது, மகிழ்ச்சி நிறைந்து இருப்பது என்ற இந்நிலை இருக்காது. அந்த மாதிரி அனுபவி தான் இந்த பிராமண வாழ்க்கையின் சுகத்தின் மகத்துவத்தை தெரிந்திருக்கிறார்கள், பிராமணர்களை உச்சந்தலை குடுமி என்று கூறுவர்கள். இந்த குடுமி என்றால் உயர்ந்த நிலை ஆகும். ஒருவேளை இதுவரை வந்தடையவில்லை என்றால் கொடியை எப்படிப் பறக்க விடுவீர்கள்? மலை உச்சியில் சென்று கொடியை பறக்க விட்டீர்கள் என்றால் வெற்றி அடைந்தவர் என்று கூறப்படும்.

தற்சமயத்தில் செய்ய வேண்டிய முயற்சி என்ன? கேட்பது மற்றும் கூறுவதோ நடந்து கொண்டே தான் இருக்கிறது ஆனால் அனுபவி ஆக வேண்டும். அனுபவியின் பிரபாவம் அதிகமாக இருக்கும். ஒரே விஷயத்தை அனுபவி கூறுவதிலும் மற்றும் அதே விஷயத்தைக் கேட்டு கூறுவதிலும் வித்தியாசம் இருக்கும் இல்லையா? மனிதர்களும்

இப்பொழுது அனுபவம் செய்ய விரும்புகிறார்கள். யோகப் பயிற்சி முகாமில் விசேஷமாக ஏன் அனுபவம் செய்விக்கிறோம். ஏனென்றால் அனுபவி ஆவதற்கான வழிமுறை, சொல்வதின் கூடவே அனுபவத்தையும் செய்விப்பது. இதன் மூலம் நல்ல ரிசல்ட் வெளியாகும். எப்பொழுது ஆத்மாக்கள் அனுபவம் விரும்புகிறார்கள் என்றால் நீங்களும் அனுபவியாகி அனுபவம் செய்வியுங்கள். அனுபவம் எப்படி ஏற்படும்? அதற்காக எந்த சாதனத்தை உபயோகிக்க வேண்டும். எப்படி ஏதாவது ஒரு கண்டுபிடிப்பாளர் ஒன்றை கண்டுபிடிப்பதற்காக முற்றிலும் ஏகாந்தத்தில் (தனிமை) இருப்பார். அப்படி இங்கேயும் ஏகாந்தம் அதாவது அந்த ஒருவரின் நினைவின் எல்லையிலேயே மூழ்கிவிடுவது. அப்படி வெளிக்கவர்ச்சியிலிருந்து ஏகாந்தம் வேண்டும். அறையில் அமருவதற்கான ஏகாந்தம் வேண்டும் என்று அப்படி மட்டும் இல்லை ஆனால் மனதின் முழுமையான ஏகாந்தம் இருக்க வேண்டும். மனதின் ஒருமுகப்பாடு என்றால் ஒருவரின் நினைவில் இருப்பது. ஒருமுகம் ஆவது என்ற இது தான் ஏகாந்தம் ஆகும். ஏகாந்தத்தில் சென்று புதிது புதிதாகக் கண்டுபிடிக்கிறார்கள் இல்லையா? நாலாபுறங் களின் எண்ண அலைகளிலிருந்து விலகிச் சென்று விடுகிறார்கள் என்றால் இங்கேயும் ஈர்ப்பிலிருந்து விலகிச் செல்ல வேண்டியதாக இருக்கும். அந்த மாதிரியும் சிலர் இருக்கிறார்கள். அதாவது, அவர்களுக்கு ஏகாந்தம் பிடிப்பதில்லை. பலருடன் சேர்ந்திருப்பது, சிரிப்பது, பேசுவதை அதிகம் விரும்புகிறார்கள் ஆனால் இது வெளிமுகத்தில் வருவது ஆகும். இப்பொழுது தன்னை ஏகாந்தவாசி ஆக்குங்கள். அதாவது அனைத்து ஈர்ப்புகளின் எண்ண அலைகளிலிருந்து உள்நோக்குமுகம் ஆகுங்கள். இப்பொழுது நேரம் அந்த மாதிரி வந்து கொண்டிருக்கிறது, அதில் இந்த பயிற்சி தான் உதவியாக இருக்கும். ஒருவேளை வெளியின் ஈர்ப்பின் வசமாகும் பயிற்சி இருந்தது என்றால் அந்த நேரம் ஏமாற்றம் கொடுத்து விடும். சூழ்நிலை அந்த மாதிரி வரும் அதில் இந்த பயிற்சியைத் தவிர வேறு எந்த ஆதாரமும் தென்படாது. ஏகாந்தவாசி என்றால் அனுபவி ஆவது. டில்லியைச் சேர்ந்தவர்கள் சேவையின் தொடக்கத்தில் பொறுப்பாளர் ஆனார்கள் என்றால் இந்த விசேஷத்திலும் பொறுப்பாளர் ஆகுங்கள். அப்படி இந்த நிலையின் அனுபவத்தை மற்றவர்களும் அதே போல் செய்வார்கள். இது அனைத்தையும் விட மிகப் பெரிய சேவை. கூட்டாகவும், தனிப்பட்ட ரூபத்திலும், இரண்டு ரூபத்திலும் அந்த மாதிரி பயிற்சியின் சூழலைப் பரப்புங்கள்.

**வரதானம்: சுயபரிவர்த்தனை (மாற்றம்) மூலம் உலக பரிவர்த்தனையின் காரியத்தில் மனம் விரும்பும் வெற்றியை அடையக்கூடிய சித்தி சொரூபமானவர் ஆகுக!**

ஒவ்வொருவரும் சுயபரிவர்த்தனை மூலமாக உலக பரிவர்த்தனை செய்யும் சேவையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அனைவரின் மனதிலும் இந்த உலகை மாற்றித்தான் ஆக வேண்டும் என்ற ஊக்கம் உற்சாகம் இருக்கிறது. மேலும் பரிவர்த்தனை கண்டிப்பாக ஆகும் என்ற நிச்சயமும் இருக்கிறது. எங்கு தைரியம் இருக்கிறதோ அங்கு ஊக்கம் உற்சாகம் இருக்கிறது. சுயமாற்றம் மூலமாகத் தான் உலக மாற்றத்தின் காரியத்தில் மனம் விரும்பும் வெற்றி பிராப்தி ஆகிறது ஆனால் இந்த வெற்றி எப்பொழுது ஒரே நேரத்தில் உள்உணர்வு, எண்ண அலைகள் மற்றும் வார்த்தை மூன்றும் சக்திசாலியாக இருக்கிறதோ அப்பொழுது தான் கிடைக்கும்.

**சுலோகன்: எப்பொழுது வார்த்தையில் அன்பு மற்றும் பண்பு இருக்கிறதோ அப்பொழுது தான் வார்த்தையின் சக்தி சேமிப்பாகிறது!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 30.06.1977 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஒவ்வொரு பிராமண ஆத்மாவிற்காகவும் பாப்தாதாவின் உயர்ந்த விருப்பங்கள்!

அனைத்து அதிர்ஷ்டம் நிறைந்த, அனைத்து உயர்ந்த ஆத்மாக்களின் நன்மைக்காக நிமித்தம் (பொறுப்பாளர்) ஆகியிருக்கும் மற்றும் பாப்தாதாவுடன் எப்பொழுதும் சகயோகியாக இருக்கும் பங்கைச் செய்யக்கூடிய அனைத்து ஆத்மாக்களையும் பார்த்து பாப்தாதாவும் மகிழ்ச்சி அடைகிறார். பாப்தாதா மேல் இருக்கும் அன்பு மற்றும் ஆழ்ந்த ஆர்வத்திலிருக்கக்கூடிய அன்பான ஆத்மாக்களிடம் இருக்கும் பாபாவைச் சந்திக்க வேண்டும் என்ற ஊக்கம் உற்சாகத்தைப் பார்த்து தந்தையும் குழந்தைகளின் அன்பு மற்றும் ஆர்வத்திற்குப் பிரதிபலனை கொடுக்கிறார். அனைத்து குழந்தைகளின் மனதில் அன்பு, சகயோகத்தின் பாவனை (உளப்பாங்கு) மற்றும் தந்தைக்குச் சமமாக ஆவதற்கான உயர்ந்த எண்ணமும் இருக்கிறது என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார். இவை அனைத்தையும் பார்த்து, பாப்தாதா குழந்தைகளை தன்னையும் விட மிக உயர்ந்த கிரீடம் மற்றும் ஆசனமுமான பரந்தாமத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களாக மற்றும் உலகின் அனைத்து ஆத்மாக்களின் இதயத்திற்கு ஆறுதல் அளிப்பவராக, உலகின் ஆத்மாக்களின் எதிரில் நிரந்தரமாக பூர்வஜ் அதாவது மூதாதையராகவும் மற்றும் பூஜைக்குரியவராக அந்த மாதிரி சிரேஷ்டமானவர்களாகப் (உயர்ந்தவர்களாக பார்க்க விரும்புகிறார். குழந்தைகளை உயர்ந்தவர்களாகப் பார்க்கையில் தந்தைக்கு அதிகம் குஷி ஏற்படுகிறது. ஒவ்வொரு பிராமண ஆத்மாவும் எப்பொழுதும் உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையுடன் உயர்ந்த நிலையில் நிலைத்திருக்க வேண்டும். எப்படி உயர்ந்த பெயரோ, அப்படியே செயலும் உயர்ந்ததாக இருக்கட்டும். எப்படி உலகின் எதிரே உயர்ந்த மரியாதை இருக்கிறது. அதே பாலவே கௌரவம்

மற்றும் மதிப்பும் எப்பொழுதும் நிலைத்திருக்கட்டும், இதுவே ஒவ்வொரு பிராமண ஆத்மாவின் மீதும் பாப்தாதா வைத்திருக்கும் உயர்ந்த விருப்பமாகும்.

குழந்தைகள் என்ன செய்ய வேண்டும்? பாப்தாதா மூலமாக ஞானத்தின், குணங்களின், சக்திகளின் அலங்காரம் என்னென்ன கிடைத்திருக்கிறதோ, அந்த அலங்காரங்களை தன்னில் தாரணை (நடைமுறை) செய்யுங்கள். எப்படி உங்களுடைய ஜடச்சிலைகள் (கோவில் விக்ரகங்கள்) எப்பொழுதும் அலங்கரிக்கப் பட்டிருக்கின்றன, அதேபோன்று சைத்தன்ய ரூபத்திலும் எப்பொழுதும் அலங்கரிக்கப்பட்ட பாப்தாதாவின் இதயசிம்மாசனதாரி, அதீந்திரிய சுகத்தில் ஆடிக்கொண்டே, எப்பொழுதும் பரிஷ்தா ரூபத்தின் போதையில் இருக்க வேண்டும். இதைத் தான் பாப்தாதாவிற்கு நன்றிக் கடனாகக் கொடுக்க வேண்டும். நன்றிக் கடன் கொடுக்கத் தெரியுமா? இதயத்தின் விருப்பமும் செயலும் சமமாக இருக்க வேண்டும். விரும்புகிறோம் ஆனால் செய்வதில்லை என்று அப்படி இருக்கலாகாது. தன்னுடைய அனைத்து உயர்ந்த அதிகார உரிமைகளை, அமல்படுத்தி உள்ளீர்களா? எந்த அதிகார உரிமைகளை? உடலின் கர்ம இந்திரியங்கள் அதாவது வேலைக்காரர்கள், கூடவே தன்னுடைய சூட்சும சக்திகளாகிய மனம், புத்தி, சம்ஸ்காரம் அதாவது காரியம் செய்விப்பவர்களை உண்மையான ரீதியில் செயல்பட வைக்கும் அதிகார நிலை. அந்த மாதிரி அதிகார உரிமை நிலையை தாரணை செய்திருக்கிறீர்களா? மாஸ்டர் சர்வ சக்திவான், மாஸ்டர் அனைத்து சக்திகளும் நிறைந்த அதிகார நிலை உள்ளவராக ஆகி, தன்னுடைய கர்ம இந்திரியங்களை செயலாக்குகிறீர்களா அல்லது பிராமண குடும்பத்திற்கு சகயோகி காரியம் செய்விப்பவர்கள் அதாவது உதவி செய்யும் ஆத்மாக்கள் மீது மற்றும் சேவையில் உடன் இருப்பவர்கள் மீது அதிகாரத்தைச் செலுத்துகிறீர்களா? பிராமண ஆத்மாக்களின் தொடர்பில் அன்பு மற்றும் சகயோகத்தின் பாவனை வைக்க வேண்டுமேயன்றி அதிகாரத்தை உபயோகிக்கக் கூடாது, ஆனால் கர்ம இந்திரியங்கள் மேல், சூட்சும சக்திகள் மேல் அதிகாரத்தைச் செலுத்த வேண்டும். அதில் ஒருபொழுதும் இது என்னுடைய சுபாவம் (மனோ நிலை), என்னுடைய சம்ஸ்காரம் (பழக்கம்) என்று அந்த மாதிரி ஒருபொழுதும் அடிமை ஆகக்கூடாது. இந்த மாதிரியான வார்த்தைகள் அனைத்து சக்திகளின் அதிகாரம் பெற்றிருப்பவரின் வார்த்தைகள்

இல்லை. யார் தன் மீது (கர்மேந்திரியங்கள்-உடல் அவையவங்கள்) அதிகாரத்தைச் செலுத்த முடியவில்லையோ அவர் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கிறார் என்பதாகும். ஆக அப்படி அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தாதீர்கள். பாப்தாதா அனைத்து குழந்தைகளின் சந்திப்பு-விழாக் கொண்டாட்டத்தில் குழந்தைகளின் ஊக்கம் உற்சாகத்தைப் பார்த்தார், உயர்ந்த பாவனையையும் பார்த்தார். மேலும் உலக நன்மை செய்வதற்கான மனவிருப்பத்தையும் பார்த்தார். கூடவே தந்தைக்குச் சமமாக ஆக வேண்டும் என்ற உன்னத ஆசையையும் பார்த்தார் ஆனால் இந்த அனைத்து விஷயங்களையும் எண்ணம் மற்றும் வார்த்தைகளின் அளவில் மட்டுமே பார்த்தோம். நடைமுறையில் எப்பொழுதும் "லட்சியத்திற்கு ஏற்றபடி லட்சணம்" தனக்கும் மற்றும் அனைவருக்கும் தென்பட வேண்டும் ஆனால் இவ்விரண்டிற்குமிடையே வித்தியாசம் இருப்பதைப் பார்த்தோம். சமநிலை ஆக்கும் கலையில் இப்பொழுது ஏறும் கலை தேவையாக இருக்கிறது. எண்ணம் இருக்கிறது ஆனால் எண்ணத்தின் சம்பூர்ண நிலை திட எண்ணமாகும். எண்ணம் இருக்கிறது ஆனால் அதில் திடத்தன்மையும் (மன உறுதி) வேண்டும். சுயதரிசனம் (சுய பரிசோதனை) இதன் மூலம் மாயாவிற்கு நிரந்தரமாக விடை கிடைத்து விடுகிறது ஆனால், அதன் கூடவே சுயதரிசனம் மற்றும் பரதர்ஷனம் (மற்றவர்களை / மற்றவைகளைப் பார்ப்பது) என்ற இரண்டு சக்கரங்களும் சுற்றிக் கொண்டே இருக்கின்றன. இந்த பிறரைப் (குறைகளை) பார்ப்பது (பரதர்ஷனம்) மாயாவை வரவழைக்கிறது. சுயதரிசனம் மாயாவிற்கு சவால் விடுகிறது. பரதர்ஷனத்தின் லீலையின் (விளைவுகள்) அலையும் மிக நன்றாகத் தென்படுகிறது. எல்லைக்கப்பாற்பட்ட நாடகத்தில் தான் நடிக்கும் ஒவ்வொரு பாகத்தினையும் மூன்று கால உணர்வோடு காணும் லட்சியத்தையும் பார்த்தோம் ஆனால் வீணான விஷயங்களை (திரிகாலதரிசியாகவும்) மூன்று கால உணர்வோடு பார்ப்பவர்களாகவே அதிகமாக ஆகிறார்கள். முன்பும் அந்த மாதிரி (தவறுகள்) நடந்தது. இப்பொழுதும் நடக்கிறது. மேலும் இது நடந்து கொண்டே இருக்கும் என்று அந்த மாதிரி திரிகாலதரிசி ஆகிவிட்டார்கள். மேலும் ஒரு சுவாரசியமான விஷயம் என்னவென்றால், இதை பக்தியிலும் உங்களைப் பின்பற்றியிருக்கிறார்கள். அது எந்த விஷயம்? போலியான கதைகள், கணேஷ் மற்றும் அனுமான் பற்றிய கதைகள் உண்மையானவையா என்ன? ஆனால் கதை எவ்வளவு சுவையாய் இருக்கிற. அந்த மாதிரி

சிறிய விஷயத்தின் உள்நோக்கத்தை மாற்றி, போலியான உணர்வை நிரப்பி முழுக் கதையையும் தயார் செய்து விடுகிறார்கள். மேலும் கேட்பவர்கள். கூறுபவர்கள் மிகுந்த ருசியோடு, நேரம் பார்த்து சொல்கிறார்கள், அதை பிறர் கேட்கிறார்கள். அந்த மாதிரி அலையையும் பார்த்தோம்.

உயர்ந்த பதவி அடைவதற்காக மற்றும் அனைவரின் அன்பிற்குரியவர் ஆவதற்காக தன்னை மாற்ற வேண்டும் என்ற இந்த அறிவுரையைத் தான் பாப்தாதா கொடுக்கிறார். எனவே தன்னை மாற்றமுற்பட வேண்டும், ஆனால் தன்னை மாற்றுவதற்குப் பதிலாக சூழ்நிலையையும், இவர் மாறினால் நான் சரியாவேன் என்று பிற ஆத்மாக்களை மாற்றுவதற்கு யோசிக்கிறார்கள். சூழ்நிலை மாறினால் நான் மாறுவேன். வசதிகள் கிடைத்தால் பரிவர்த்தனை ஆவேன். சகயோகம் மற்றும் ஆதரவு கிடைத்தது என்றால் பரிவர்த்தனை (மாறுவது) ஆவேன் என்று நினைக்கிறார்கள். இதனுடைய முடிவு என்னவாக இருக்கும்? யார் ஏதேனும் ஆதாரத்தின் மூலம் மாற்றம் ஆகிறாரோ அவருக்கு ஒவ்வொரு பிறவியின் பலனும் அந்த ஆதாரத்தின் அடிப்படையில் தான் இருக்கும். அவருடைய வருமானக் கணக்கின் லாபமானது, எந்த விஷயத்தில் யார் யாரது ஆதாரத்தை எடுக்கிறாரோ அந்த பங்கு அவர்களனைவருக்கும் விநியோகிக்கப்பட்டு விடுகிறது. அவருடைய கணக்கில் சேமிப்பாவதில்லை. எனவே சேமிப்பாவதின் சக்தி மற்றும் குஷியிலிருந்து நிரந்தரமாக விலக்கப்பட்டு விடுகிறார். எனவே நான் மாறி ஆக வேண்டும் என்ற லட்சியத்தை வையுங்கள். நான் உலகின் ஆதாரமூர்த்தி ஆவேன். தந்தையின் ஆதாரத்தைத் தவிர அற்பகாலத்தின் பிற ஆதாரம் தேவையான நேரத்தில் உங்களை கைவிட்டு விடும். அழியக்கூடிய, ஊசலாடும் ஆதாரம் உங்களை எப்பொழுதும் ஏதாவது குழப்பத்தில் கொண்டு வந்து கொண்டே இருக்கும். ஒன்று முடிவடையும் போதே இன்னொன்று பிறவி எடுக்கும். இதிலேயே நேரம் மற்றும் சக்திகள் வீணாகும். மேலும் இன்னொரு விஷயம், போகப் போக அலட்சியத்தின் காரணமாக பலஹீனமான வார்த்தைகளை சங்கோஜப்படாமல் மிகுந்த பெருமையோடு அடிக்கடி இந்த மாதிரி கூறுகிறார்கள். உண்மை, சத்தியத்தைப் புரிந்த பின்பும் சொல்கிறார்கள். என்ன சொல்கிறார்கள்? நான் தொந்தரவுக் குள்ளாகியிருக்கிறேன் (டிஸ்டர்ப்). நான் ஏதாவது செய்து காண்பிப்பேன். என்ன செய்வேன்

தெரியுமா? குழப்பமோ அல்லது என்னையே ஏதாவது செய்து கொள்வேன், சேவைக்கு குந்தகம் (டிஸ்சர்வீஸ்) ஆகிவிடும். அப்புறம் பார்த்துக் கொள்ளுங்கள்! நானோ பலஹீனமானவன், சம்ஸ்கார வசமாகியிருக்கிறேன். நான் மாற முடியாது. நீங்கள் இதற்காக ஏதாவது எனக்கு தீர்வு செய்து தான் ஆக வேண்டும். இந்த மாதிரியான வார்த்தைகளை மிக மிக சாதாரணமாக, தன்னை பலசாலி என்று காண்பிக்கும் வகையில், அழுத்தம் மற்றும் மிரட்டல் தொனியில் அதிகம் பேசுகிறார்கள். பாப்தாதாவிற்கு இரக்கம் வருகிறது.

இந்த மாதிரி பலஹீனமான ஆத்மாக்கள் முதலில் எண்ணத்தில் கொண்டு வந்து, வார்த்தை வரையிலும் பேசிவிடுகிறார்கள். பிறகு செயல் வரையிலும் கூட கொண்டு வருகிறார்கள். இதில் நஷ்டம் ஏற்படுவது யாருக்கு? தந்தை மற்றும் சேவைக்கு தீமை ஏற்படும் என்று அப்படி நினைக்கிறார்கள். தந்தைக்கு நஷ்டம் ஏற்படும் என்று நினைக்கிறார்கள் ஆனால் இந்த விஷயங்களை ஒரு பழக்கமாகவே ஆக்கிக் கொள்பவர்கள் தமக்கு தீமை செய்வதற்கு அவர்களே பொறுப்பாகிவிடுகிறார்கள். நாடகப்படி உலக சேவையின் காரியம் நிச்சயமாக வெற்றி அடையும் என்றே இருக்கிறது. அதை யாரும் அசைக்க. தடுக்க முடியாது.

ஒரு காரியத்திற்கு பல மடங்கு பலனை அளிப்பதற்கு பாப்தாதா பொறுப்பாளராக உள்ளார். குழந்தைகளை சேவைக்காக பொறுப்பாளர் ஆக்குகிறார். செய்தார்கள் என்றால் பல மடங்கு அடைவார்கள். அப்படி குழந்தைகள் தங்களது பாக்கியத்தை உருவாக்குவதற்காக பொறுப்பாளர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். மற்றபடி யாராவது அசைப்பதினால் சேவை ஒன்றும் நின்று போய்விடாது. ஒவ்வொரு கல்பத்திலும் நிச்சயிக்கப்பட்ட விதி அது. வெற்றி கிடைத்தே தீரும். எனவே இம்மாதிரியான பலஹீனமான வார்த்தைகள் பேசுவதை மாற்றிக் கொள்ளுங்கள், அதாவது தனக்கு நன்மை செய்யப் பாருங்கள். இது நன்மையே பயக்கும் நேரம் மற்றும் உலக நன்மை செய்யும் காரியத்தில் சக்தி நிறைந்தவராகி தன்னுடைய எதிர்காலத்தை உருவாக்குங்கள்.

குழந்தைகள் கடின உழைப்பும் அதிகம் செய்கிறார்கள், தியாகமும் செய்திருக்கிறார்கள், அதிகம் சகித்துக் கொள்ளவும் செய்கிறார்கள் என்று தந்தை தெரிந்திருக்கிறார் ஆனால் (பாபாவுக்கு) யார் மேல் அன்பு

இருக்கிறதோ, அவர்களுடைய சின்னஞ் சிறிய பலஹீனத்தைக் கூட அவர் பார்க்க விரும்புவதில்லை. எப்பொழுதும் உயர்ந்தவர்களாக ஆக்கும் சுபபாவனையே (நல்ல எண்ணமே) இருக்கிறது. எனவே இவை (பலஹீனங்கள்) அனைத்தையும் பார்த்தும், கேட்ட பிறகும் கூட சம்பன்னம் (முழுமை) ஆக்குவதற் காக சமிக்ஞையே கொடுத்துக் கொண்டிருக்கிறார். பாப்தாதா எப்பொழுதும் குழந்தைகளுடன் ஒவ்வொரு அடியிலும் சகயோகியாக இருக்கிறார். மேலும் கடைசி வரை இருப்பார். தந்தைக்கு யார் மீதும் வெறுப்பு ஏற்படுவதில்லை. அபகாரி மேலும் கூட எப்பொழுதும் நற்சிந்தனை வைப்பராகவே இருக்கிறார். எனவே எப்பொழுதும் (உதவியை) சகயோகத்தைப் பெற்றுக் கொண்டே இருங்கள். அமிர்தவேளையின் மகத்துவத்தைத் தெரிந்து, தந்தை மூலமாக வரதானத்தைப் பெற்றுக் கொண்டே இருங்கள். (தந்தையை சந்திப்பதின்) சீசனின் முடிவு என்றால், பாபாவின் உதவியும் முடிந்து போகும் என்பதல்ல. ஒவ்வொரு குழந்தையின் மீதும் அனைத்து சொரூபத்தின் மூலம், அனைத்து சம்மந்தங்களின் மூலம் பாப்தாதாவுடைய கை மற்றும் துணை எப்பொழுதும் இருக்கவே இருக்கிறது. இப்பொழுது நாடகப்படி நேரம் கிடைத்திருக்கிறது இதை தன்னுடைய அதிர்ஷ்டம் என்று புரிந்து கொண்டு, நேரத்தின் லாபத்தை எடுத்துக் கொள்ளுங்கள். விநாஷம் என்ற கடிகாரத்தின் முட்கள் நீங்கள் ஆவீர்கள். நீங்கள் (சம்பன்னம்) முழுமை ஆவது என்றால், நேரம் முடிவடைவது.

எனவே எப்பொழுதும் சுயசிந்தனையாளராக மற்றும் சுயதரிசன சக்கரதாரியாக ஆகுங்கள். நல்லது. அந்த மாதிரி எதிர்காலத்து அதிர்ஷ்டத்தை உருவாக்குவதற்குப் பொறுப்பாளராகியிருக்கும் ஆத்மாக்களுக்கு, தன் மூலமாக நாளையின் சித்திரத்தைக் (சத்தியுகத்தை) காண்பிக்கக்கூடிய, எப்பொழுதும் தந்தைக்கு நன்றிக் கடன் செலுத்தக்கூடிய, மாஸ்டர் அனைத்து வல்லமை நிறைந்த அதிகாரி குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன்**: மகாதானி குழந்தைகளின் அடையாளம் எவ்வாறு தென்படும்? மகாதானி ஆவதினால் என்னென்ன லாபம் இருக்கிறது? மகாதானி என்றால், தந்தை மற்றும் சேவையைத் தவிர வேறு எந்த விஷயமும் தன் பக்கம் ஈர்க்கக்கூடாது. எப்பொழுதும் அவரது அன்பின் ஆர்வத்திலேயே மூழ்கியிருத்தல் வேண்டும். மகாதானி என்றால்

ஒவ்வொரு நேரமும் கொடுத்துக் கொண்டே இருப்பது. எந்தவொரு ஆத்மாவும் வெறும் கையோடு திருப்பிச் செல்லக் கூடாது. ஒருவேளை மகாதானி ஆகவில்லை என்றால் வரதானியாக எப்படி ஆவீர்கள்? யார் மகாதானி மற்றும் வரதானியாக இருக்கிறாரோ அவர் தான் உலகத்திற்கு நன்மை செய்பவர். என்ன கிடைத்துக் கொண்டிருக்கிறதோ அதை எப்பொழுதும் பிறருக்கு வழங்குவதால் அதிகரித்துக் கொண்டே இருக்கும். மகாதானி குழந்தைகள் தானமே செய்யாத எந்த நேரமும், எந்த நாளும் இராது.

மகாதானி ஆவது என்றால் மற்றவர்களுக்கு சேவை செய்வது. மற்றவர்களுக்கு சேவை செய்வதினால் தனக்கு சேவை இயல்பாகவே நடந்து விடும். மகாதானி ஆவது என்றால், தன்னை அனைத்தும் நிறைந்தவராக ஆக்குவது. மற்றவர்களுக்குக் கொடுப்பதே, தான் பெறுவதாகும். எத்தனை ஆத்மாக்களுக்கு சுகம். சாந்தி, சக்தி மற்றும் ஞானம் கொடுக்கிறீர்களோ, அத்தனை ஆத்மாக்கள் (பிராப்தியின்) அடைந்த நன்மையின் வார்த்தைகள் அல்லது நன்றிகள் என்னென்ன வெளியாகிறதோ அது உங்களுக்கு ஆசீர்வாதமாகிவிடுகிறது. அவர்களுடைய ஆசீர்வாதம் உங்களை முன்னேற்றிக் கொண்டே இருக்கும். இப்படி பல ஆத்மாக்களின் ஆசீர்வாதம் கிடைப்பதினால் அளவில்லா குஷி இருக்கும். எனவே நான்கு பாடங்களிலுமே மகாதானி ஆவதற்காக அமிர்தவேளையில் தனது திட்டத்தை உருவாக்குங்கள். ஒரு பாடத்தில் கூட குறை இருக்கக் கூடாது.

மற்ற தொடர்பைத் துண்டித்து ஒரே ஒருவரின் தொடர்பில் இணைத்துக் கொள்ளுங்கள்' என்ற இந்த பழமொழி ஏன் பிரபலமாக இருக்கிறது? ஏனென்றால், ஒரு தந்தையின் அன்பிற்குரியவராக ஆவதற்காக மற்ற அனைவரிடமிருந்தும் விலகியவராக ஆக வேண்டியுள்ளது. எப்பொழுது ஒருவரிடமே அனைத்து உறவுகளின் (பிராப்தி) நன்மை கிடைத்துவிடுகிறது என்றால், சுலபமாகவே அவர் அனைவரிடமிருந்தும் விலகி விடுகிறார். அப்படி அனைவரிடமிருந்தும் துண்டிக்க வேண்டும். மேலும் ஒருவரோடு (தன்னை) இணைத்துக் கொள்ளவும் வேண்டும். இது உங்களைப் பொருத்தவரை சுலபம். ஏனென்றால் ஒருவர் மூலமாக அனைத்து பிராப்திகளும் கிடைப்பதால், நமது புத்தியை ஈர்க்கும் அப்படி அளவிற்கு நமக்குக் கிடைக்காத எந்த பொருளும் இவ்வுலகில் இல்லை.

முதலில் (பாபாவின் அன்பு கிடைக்கிறது, பிறகு விலகியவர் (பற்றற்று) ஆகிறீர்கள், எனவே தான் எளிதாகிறது. அனைவரிடமிருந்தும் விலகியவர் மற்றும் தந்தையின் அன்பிற்குரியவர் என்ற இந்த நிலை தான் தாமரை மலருக்குச் சமம் என்று கூறப்படுகிறது. எனவே தாமரை மலருக்குச் சமமாக இருக்கிறேனா என்று சோதனை செய்யுங்கள். சேற்றின் துளிகள் வந்து விழுவதில்லையே?

**தகுதியான ஆசிரியரின் அடையாளம் என்னவாக இருக்கும்?**

தகுதியான ஆசிரியர் என்றால், ஒவ்வொரு விநாடி மற்றும் ஒவ்வொரு எண்ணம் மூலமாக சேவை செய்பவர், ஒருவேளை ஒரு விநாடி மற்றும் எண்ணம் வீணாகச் செல்கிறது என்றால், ஆசிரியர் என்று மட்டுமே கூறுவோம், ஆனால் தகுதியான ஆசிரியர் என்று கூறமாட்டோம். தகுதியான ஆசிரியர் என்றால் யோகம் நிறைந்தவர் அதாவது யுக்தி நிறைந்தவர். யார் யோக சொரூபமானவராக இருப்பாரோ அவருடைய ஒவ்வொரு எண்ணமும் சக்திசாலியாக இருக்கும். எண்ணம் என்ற விதை சக்திசாலியாக இருக்கிறது என்றால் பழமும் (பலனும்) சக்திசாலியாக இருக்கும். பொறுப்பாளராக இருக்கிறார் என்றால், முன்உதாரணமாக இருக்கிறார், எப்படி உதாரணம் இருக்குமோ அப்படியே மற்றவைகளும் இருக்கும்.

எவ்வளவு கேட்டிருப்பீர்கள். இந்த சீசனில் கூட எவ்வளவோ கேட்டிருப்பீர்கள்? இப்பொழுது நாடகத்தின் விதி சப்தத்திலிருந்து விலகிச் செல்லுங்கள் என்று கூறுகிறது. இந்த உடலின் (குல்சார் தாதியின்) உபாதை கூட (கஷ்டம்) மிக பொறுப்புடன், ஞான அறிவுரையெல்லாம் ஏற்கனவே மிக அதிகமாகக் கொடுத்ததாகிவிட்டது என்று கூறுவது போல் கூறுகிறது. இப்பொழுது கேட்டவுடன் உள்ளடக்க வேண்டும், அதாவது அதன் சொரூபம் ஆக வேண்டும். அதற்கான சீசன் ஆகும் இது. கேட்பதற்கான சீசன் எத்தனை வருடம் இருந்தது. சாகார பாபா மூலமாகவும், ரிவைஸ் கோர்ஸ் மூலமாகவும் கேட்பதற்கான சீசன் மிக அதிகமாக இருந்தது. எனவே இப்பொழுது சொரூபம் மூலமாக சேவை செய்ய வேண்டும். இப்பொழுது கடைசியாக இந்த சீசன் மட்டுமே உள்ளது. இதன் மூலம் தான் பாபாவை வெளிப்படுத்தும் முரசு ஒலிக்கும். சப்தம் முடிந்து விடும். அமைதியே நிலவி இருக்கும் ஆனால் அந்த அமைதி மூலமாகத் தான் முரசு ஒலிக்கும். எதுவரை வாய் மூலம் முரசொலி

அதிகமாக இருக்கிறதோ அது வரை பாபாவை வெளிப்படுத்தும் ஒலி இருக்காது. எப்பொழுது பாபாவை வெளிப்படுத்தும் முரசு ஒலிக்குமோ அப்பொழுது வாயின் முரசொலி முடிவடைந்து விடும். "அறிவியலின் மேல் அமைதியின் வெற்றி" என்று வர்ணனை செய்யப்பட்டிருக்கிறதேயன்றி, வார்த்தைகளின் (சப்தத்தின்)வெற்றி என்று அல்ல. காலத்தின் முடிவின் அடையாளமாக என்ன இருக்கும்? சப்தத்தில் வருவதற்கான விருட் இருக்காது. இந்த (சப்தத்தைக் ந்த) நிலையானது சொல்லி வைத்து நடப்பது போலன்றி, இயற்கையானதாக இருக்கும். சாகார பாபாவைப் பார்த்தீர்கள் என்றால், சம்பூர்ண நிலையின் அடையாளமாக அவரிடம் என்ன தென்பட்டது? இரண்டு நிமிடங்களோ அல்லது ஒரு நிமிடத்திலோ, அதைத் தெரிந்து கொள்வது எப்படியென்றால், அதாவது அவரைக் கண்டவுடனேயே அதிகமாக சப்தத்தில் வரும் பழக்கத்திலிருந்து இயல்பாகவே நமக்கு வைராக்கிய உணர்வு வந்து விடும் ஆனால் தற்போதோ விரும்பாவிட்டாலும் பழக்கமானது (உங்களை) சப்தத்தில் வர வைத்துவிடுகிறது, அதே போல் (அவரது முன்) விரும்பாவிட்டாலும் சப்தத்திலிருந்து விலகி விடுவீர்கள். ஒரு வலுக்கட்டாயமாகத் தான் மீண்டும் சப்தத்தில் வருவீர்கள். எப்பொழுது இந்த மாற்றம் ஏற்படுமோ அப்பொழுது தான் வெற்றி முழக்கம் ஒலிக்கும் என்று புரிந்து கொள்ளுங்கள். இன்றைய நாட்களில் நாலாபுறங்களிலும் பெரும்பான்மையோரிடம் விசாரித்தீர்கள் என்றால், அனைவருக்குமே சுகத்தை விட அமைதியே அதிகமாக வேண்டும் என்பர். அவர்கள் ஒரு நொடியளவு சக்தியின் அனுபவத்தைக் கூட பகவானையே அடைந்துவிட்டது போன்று, அந்தளவு உயர்ந்ததாக நினைக்கிறார்கள். அப்படி ஒரு நொடியில் அமைதியின் அனுபவத்தை செய்விப்பவர்கள், முதலில் தாம் அமைதியின் சொரூபத்தில் நிலைத்திருப்பர் இல்லையா? விநாசம் எப்பொழுது ஏற்படும்? அதற்கு யார் காரண காரியமாக இருப்பர்? எது கடிகாரத்தின் முள்ளாக இருக்கும்? மணி அடிப்பதற்குக் காரணமாக முள் இருக்கிறது இல்லையா? ஆக, விநாசத்தின் மணி அடிப்பதற்கு அந்த முள்ளாக இருப்பது யார்? அனைத்து சக்திகளின் கையிருப்பை சேமித்திருக்கிறீர்களா? ஏனென்றால் ஒருவேளை கையிருப்பு சேமிப்பு ஆகவில்லை என்றால், அனேக பிறவிகளின் பிராப்தியை (பலாபலன்களை) அடைய முடியாது. இந்த ஒரு பிறவியில் அனேக பிறவிகளின் சேமிப்பை செய்கிறீர்கள். 21-பிறவிகள் அனுபவித்துக் கொண்டே இருக்கும். அந்த அளவு சேமிப்பை சேமித்திருக்கிறீர்களா?

ஒன்றுமில்லாத, யாசிக்கும் ஆத்மாக்களுக்கு மகாதானியாகி தானம் செய்யுமளவிற்கு சேமிப்பு செய்திருக்கிறீர்களா? எப்பொழுதும் கையிருப்பை சோதனை செய்யுங்கள். கையிருப்பில் சர்வ சக்திகளும் தேவையாக இருக்கிறது. உள்ளடக்கும் சக்தி இருக்கிறது, சகித்துக் கொள்ளும் சக்தி இல்லை என்றால் பாதகம் இல்லை என்று அப்படி வேண்டாம் ஆனால் இறுதி பரீட்சையில் எந்த சக்தியின் குறை இருக்கிறதோ அதில் தான் கேள்வி வரும். நான்கு இல்லை, ஆனால் இரண்டாவது இருக்கிறதே என்று அப்படி ஒருபொழுதும் நினைக்காதீர்கள். தாரணை இல்லை, ஆனால் சேவையோ இருக்கவே இருக்கிறது. சேவை இல்லை, ஆனால் யோகாவோ இருக்கவே இருக்கிறது என்று அப்படி நினைக்காதீர்கள் ஆனால் அனைத்தும் தேவையாக இருக்கிறது. எப்படி தந்தையிடம் ஞானம், சக்தி, குணம் என்று அனைத்தும் இருக்கிறது இல்லையா? அப்படியே தந்தையைப் பின்பற்றி வாருங்கள்.

எப்பொழுதும் சுயசிந்தனை மூலம் தன்னுடைய கையிருப்பை சேமிப்பதில் ஈடுபடுங்கள். இந்த நேரத்தை வரும் நாட்களில் அதிகம் நினைவு செய்ய வேண்டியதாக இருக்கும். அப்படி பின்னால் இந்த மாதிரி நினைக்க வேண்டி வந்து விடக்கூடாது. வருத்தமும் அடையக் கூடாது. அதற்காக இப்பொழுதிலிருந்தே சுயசிந்தனையில் ஈடுபடுங்கள். எப்பொழுதும் தன்னை ஒவ்வொரு பாடத்திலும் முன்னேற்றுவதிலேயே ஈடுபட்டிருக்கிறீர்களா? ஒவ்வொரு குணத்தின் அனுபவத்தை அதிகரித்துக் கொண்டே இருங்கள். எவ்வளவு அதிகரிப்பீர்களோ அந்த அளவு புதுமையை அனுபவம் செய்வீர்கள். அனுபவியானவராக ஆவதற்கான ஆராய்ச்சி செய்தீர்கள் என்றால் மிகவும் சுவாரசியமாக இருக்கும். எப்படி தந்தை கடலாக இருக்கிறாரோ அப்படி மாஸ்டர் கடல் ஆகுங்கள். இப்பொழுது அந்த மாதிரியான முயற்சி தேவையாக இருக்கிறது. நல்லது.

**வரதானம்: குழப்பத்தில் மனமுடைந்து போவதற்குப் பதிலாக பரந்த மனம் வைக்கும் தைரியமுள்ளவர் ஆகுக!**

உடல் நோயாக இருந்தாலும், மனதின் புயலாக இருந்தாலும், பணத்தில் அல்லது குடும்பத்தில் குழப்பம் இருந்தாலும், சேவையில் குழப்பம்

இருந்தாலும், ஒருபொழுதும் அந்தக் குழப்பத்தில் மனமுடைந்து போவோர் ஆகாதீர்கள். பரந்த மனமுள்ளவராக ஆகுங்கள். எதேனும் கணக்கு வழக்கு வந்து விட்டது, வலி வந்து விட்டது என்றால், அதை யோசித்து யோசித்து மனமுடைந்து போய் வேதனையை அதிகரிக்காதீர்கள். தைரியமுள்ளவராக ஆகுங்கள். ஐயோ, என்ன செய்வேன்! என்று அப்படி ஒருபொழுதும் நினைக்காதீர்கள். தைரியத்தை இழக்காதீர்கள், தைரியமுடையோராகுங்கள், அப்போது தந்தையின் உதவி தானாகவே கிடைக்கும்.

**சுலோகன்: பிறருடைய பலஹீனத்தைப் பார்க்கும் கண்ணை மூடி, மனதை அந்தர்முகி (உள்நோக்கு) பார்வையுடையதாக ஆக்குங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂